# திருகோணமலை
# கலை, இலக்கிய வரலாறு

## திருமலை நவம்

JPL
C10344

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை கலை, இலக்கிய வரலாறு

KOHA
JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை
# கலை, இலக்கிய வரலாறு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி
KOHA
JPL

திருமலை நவம்

10344 C.C
228511
228,511 CC

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2/954.93

திருகோணமலை கலை இலக்கிய வரலாறு
திருமலை நவம் எழுதியது

பதிப்புரிமை © 2012, திருமலை நவம்

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 011 2364550, மி. அஞ்சல்: kumbhlk @gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Tirukoṇamalai kalai Ilakkiya Varalāṟu
(Art and Literature History of Trincomallee)
by Thirumalai Navam

© 2012, Thirumalai Navam

Published by Kumaran Book House
39, 36th Lane, Colombo -6, Tel. - 011 2364550, E.mail : kumbhlk@gmail.com
3 Meigai vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Printed by Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo -6

வெளியீட்டு எண்: 000 507

ISBN 978-955-659-321-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOH
JPL

# நட்புரை

1974ஆம் ஆண்டு முற்பகுதியில், பேராதனைப் பல்கலைக்கழகத்தில், கற்கையின் முதலாம்ஆண்டில் எனக்கு அறிமுகமான திருமலை நவம் அவர்கள் இன்று வரையில் என்னுடன் நெருக்கமான நட்பைப் பேணி வருகின்ற, பன்முகத் திறமைகள் நிறைந்த, ஒரு இனிய பண்பாளர். இப்பல்கலைக்கழகத்தில் பிரவேசித்த வேளையிலேயே ஒரு சராசரி மாணவரை விடவும் மிகக் கூடுதலான வாசிப்புப் பழக்கமும், உலக அறிவும், நட்புப் பிற்புலமும் கொண்டிருந்த திருமலை நவம் அவர்கள், இங்கு கல்வி பயின்ற காலத்தில் தனக்குக் கிட்டிய வாய்ப்புக்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி, தனது அறிவினையும், ஆளுமையினையும் உச்ச அளவில் விருத்தி செய்துகொண்ட மிகச் சிலரில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒருவராவார்.

ஆழமான வாசிப்பின் காரணமாக எந்த ஒரு விடயத்திலும் தெளிவான பார்வை, தனக்குச் சரி என்றுபடுவதனை யாராக இருப்பினும், அவரின் பதவி நிலை எதுவாக இருப்பினும், எவ்வித தயக்கமும் இன்றி, ஆணித்தரமாகக் கணீரென்ற குரலில் வெளிப்படுத்தும் நேர்த்தி, முகஸ்துதி என்பதனை அறவே வெறுக்கின்ற, மிக அபூர்வமான ஒரு சுபாவம், அபாரமான பேச்சுவன்மை, ஒப்பற்ற சபை ஆளுமை, எல்லோருடனும் மிகச் சுமுகமாகப் பழகும் இனிய இயல்பு போன்ற அவரது பல் ஆற்றல்களும், பண்புகளும் அவருக்குப் பல்கலைக்கழகத்தினுள்ளும், அதற்கு வெளியேயும், குறிப்பாக இலக்கிய உலகிலும், மிகப் பரந்துபட்ட வீச்சிலான பெரும் நண்பர்கள் குழாமை உருவாக்கி யிருந்தன.

1976களின் நடுப்பகுதியில், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தின் தலைவராகத் திருமலை நவம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டமையானது, நவம் அவர்களின் சொந்த வாழ்வில் மட்டுமல்ல இப்பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தின் வரலாற்றிலும் ஒரு முக்கியமான திருப்பம் என துணிந்து கூற முடியும். நவம் அவர்களின் சொந்த வாழ்வில் இதனை ஒரு திருப்பமாகக் கொள்வதற்கான காரணம் யாதெனில், இதுவரையில் பெருமளவிற்குக் கலைப்பீட மட்டத்திலேயே நன்கு அறியப்பட்டிருந்த நவம் அவர்கள், கலைப்பீடம் கடந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனைப் பல்கலைக்கழத்தின் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த அக்கால கட்டத்தின் தமிழ் கூறும் சமூகம் முழுவதனாலும் அறியப்படக்கூடிய ஒரு அரிய வாய்ப்பினை, அப்பதவியே அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தமையேயாகும். பேராசிரியர் சு.வித்தியானந்தன் பேராதனைத் தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவராக இருந்தபோது, 1975இல் திருமலை நவம் அவர்களின் தலைமையின் கீழ், அவரின் வழி நடாத்தலின் கீழ் நடைபெற்ற பேராதனைத் தமிழ்ச் சங்கத்தின் வருடாந்தக் கலைவிழா, நானறிந்தவரையில் இதுவரை பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தின் கலை விழாக்களுக்கெல்லாம் மகுடம் போன்றது. சந்தேகமின்றித் தமிழ்த் தாய் பெருமைப்படக்கூடியது.

ஏனெனில், அக்காலகட்டத்தில் இலங்கையின் இலக்கிய வானில் பிரகாசித்துக் கொண்டிருந்த பெரும் பெரும் இலக்கிய நட்சத்திரங்களை, சொல்லப்போனால் இலக்கிய உலகின் மிகப்பெரிய ஜாம்பவான்களை எல்லாம் தனது தனிப்பட்ட பெரு முயற்சியினால் இங்கு வரவழைத்து அவர்களை எல்லாம் ஒருங்கே மேடையேற்றி; ஜொலிக்க வைத்து; மிக அற்புதமாக அக்கலைவிழாவினை நடாத்திக்காட்டிய பெருமை முழுவதும், நவம் அவர்களையே சாரும். அவர்களில் மறைந்த சில்லையூர் செல்வராஜன், வ.அ.இராசரத்தினம் மற்றும் புதுவை இரத்தினதுரை போன்றவர்களும் உள்ளடங்குகின்றனர்.

அக்கலை விழா மேடையில் பம்பரமாகச் சுழன்று, கலை நிகழ்ச்சிகளை நவம் அவர்கள் நெறிப்படுத்திய அழகும், அதே மேடையின் மற்றொரு ஓரத்தில் அதிரடியாக வந்திறங்கிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சித் தயாரிப்பாளருக்கு ஒத்திகை ஏதும் இல்லாமல் கையில் மைக்கினைப் பெற்றுக் கொண்ட உடனேயே, நவம் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் தோற்றம், வளர்ச்சி, அதன் பணிகள் பற்றி எவ்விதமான பரபரப்போ, தடுமாற்றமோ இன்றி தன் ஞாபகசக்தியினை மட்டும் துணைக்கொண்டு வழங்கிய மிக அற்புதமான செவ்வியும், அதனையடுத்து சில நிமிடங்களில், பல்கலைக் கழகத்தின் தமிழ்ச்சங்கம் முழுவதும் நிறைந்திருந்த பெரும் சபையில், கம்பீரமாக, நயமாக, மிக நிதானமாக நவம் நிகழ்த்திய தமிழ்ச் சங்கத்தின் தலைமையுரையும் இன்றும் என் மனக்கண்முன்னே படமாக விரிகின்றன.

பல்கலைக்கழகத்தின் சில நெழிவு சுழிவுகளை திருமலை நவம் அவர்கள் தமது பல்கலைக்கழகக் கல்வியின்போது அருவருக்கத்தக்க ஒன்றாகவே கருதிச் செயற்பட்டவர். அதனால் தானோ என்னவோ பல அசாதாரண ஆற்றல்களைக் கொண்டிருந்த நவம் அவர்களுக்குப் பல்கலைக்கழகத்தில் கற்பித்தல் பணியில் தன்னை இணைத்துக் கொள்ள இயலாது போயிற்று. எனினும், அவருடைய திறமை, ஆளுமை, நிர்வாகத்திறன் போன்ற பன்முக ஆற்றல்களை ஒருங்கே வெளிப்படுத்தக் கூடிய களம் ஒன்று, திருகோணமலையில் அவருக்கு வாய்த்தது. திருமலை நவம் அவர்கள் அதிபராகப் பதவியேற்ற வேளையில், மிகவும் பின் தங்கிய நிலையில் சொற்ப மாணவர்களுடன் பலரால் அறியப்படாத ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையாகவே இயங்கிக் கொண்டிருந்த உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியானது, அவரின் நிர்வாகத்தின் கீழ் கல்வி, ஒழுக்கக் கட்டுப்பாடு, கட்டடத் தொகுதி என அனைத்துப் பரப்புக்களிலும் வேகமாக முன்னேற்றம் கண்டு, திருகோணமலை மாவட்டத்தின் பாடசாலைகளுக்கெல்லாம் உதாரணம் காட்டப்படக் கூடிய ஒரு முன்மாதிரியான பாடசாலையாக உயர்ந்துள்ளது.

திருகோணமலை விவேகானந்தாக் கல்லூரியானது, திருமலை நவம் அவர்களின் நிர்வாகத் திறமையினாலும், அவரின் அயராத உழைப்பினாலும் உயர்வு பெற்று வந்தவேளை, காய்க்கின்ற மரம் கல்லடி படுமாற்போல் அப்பாட சாலையின் உயர்வுக்கு, முழு அளவில் பின்புலமாக இருந்து வந்த திருமலை நவம் அவர்களையும் சோதனைகளும், நெருக்கடிகளும் சூழ ஆரம்பித்தன. சவால்களுக்கூடாகவே சரித்திரம் படைத்துப் பழகிப்போன நவம் அவர்களும் அவற்றிற்கெல்லாம் முகங்கொடுத்து, மிகச் சாதுர்யமாக விவேகானந்தாக் கல் லூரியின் கல்வி நடவடிக்கைகளையும், அபிவிருத்திப் பணிகளையும், முழு மூச்சில் ஒருங்கே முன்னெடுத்து வந்தார். அக்கல்லூரியில் எதிர்பாராத வகையில் நிகழ்ந்த ஓர் அசம்பாவிதத்தினைத் தமக்குச் சாதாகமாகப் பயன்படுத்தி, விவே கானந்தாக் கல்லூரியின் உயர்ச்சியினையும், நவம் அவர்களின் வளர்ச்சியினையும் விரும்பாத சில சக்திகள், ஒரே கல்லில் இரு மாங்காய்கள் அடிக்க முயன்றனர். நவம் அவர்களுக்குப் பின்னடைவினையும், ஒருங்கே ஏற்படுத்துவதற்கு அந்த நிகழ்வினை ஒரு வாய்ப்பாக பயன்படுத்துவதற்கு அவை முயற்சிகளை மேற் கொண்டன. நவம் தவிர வேறு எவராக இருந்திருப்பினும், அவர்களின் முயற்சி யினால் சோர்வடைந்து, ஒதுங்கி, முகவரியினையும் கூட இழந்திருப்பர். ஆனால், பல்கலைக்கழக வாழ்வின்போதே எதிர் நீச்சல் போட ஆரம்பித்து விட்ட நவம், மீண்டும் சளைக்காமல் போராடிச் சமீபத்தில் நீதிமன்றத்தின் மூலம் தனது நேர்மையினையும், குற்றமின்மையினையும் நிரூபித்துள்ளார்.

2010 பெப்ரவரி 10 ஆந் திகதி வெளிவந்த 'சுடர் ஒளி' பத்திரிகையின் மூன்றாம் பக்கத்தில் திருமலை நவத்திற்கு இழைக்கப்பட்டிருந்த அநீதிக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற நீதிமன்றத் தீர்ப்பு ஒன்று பிரசுரமாகியுள்ளது. நவம் அவர்களது பாடசாலைச் சேவைக்கான பணிக்கொடையினையும், இளைப்பாற்றுச் சம்பளத்தினையும் தடுத்து வைத்துள்ளமைக்கு எதிராக நவம் அவர்கள் மேற் கொண்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனுவினைப் பரிசோதித்த உச்ச நீதிமன்றம், அவருக்குரிய அனைத்துக் கொடுப்பனவுகளையும் அடுத்த பதினைந்து நாட்களுக்குள் வழங்குமாறு உத்தரவிட்டுத் தீர்ப்பளித்துள்ளதினை அப்பத்திரிகைச் செய்திக் குறிப்பு விரிவாகக் குறிப்பிட்டுள்ளது. திருமலை நவம் அவர்கள் தொடர்பான வழக்கினை விசாரித்த நீதியரசர்கள் குழுவிற்குத் தலைமைதாங்கிய நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கா அவர்கள், நவம் அவர்களுக்குச் சார்பாகத் தீர்ப்பினை வழங்கி விட்டு, கருத்துத் தெரிவித்தபோது "இளைப்பாறும் அரச உத்தியோகத்தர்கள் நாட்டுக்காகத் தமது சேவையினையாற்றி அர்ப்பணிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக்களுக்குப் பின், ஓய்வுநிலையடைகின்றபோது தமக்கு வரவேண்டிய பணக் கொடுப்பனவுகளை இப்படிக் காலந்தாழ்த்துவதும் இடைநிறுத்துவதும் என்பது மனிதாபிமானத்திற்கு அற்பாற்பட்ட செயல்'' எனக் குறிப்பிட்டு, நவம் அவர் களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்த முயன்றவர்களுக்குத் தகுந்த சாட்டையடி கொடுத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. “தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும், தர்மமே, மறுபடியும் வெல்லும்'' என்ற பாரதியாரின் கூற்று என்பதும் நவம் அவர்களின் விடயத்தில் மீண்டும் நிரூபணமாகியுள்ளது.

வாழ்க்கையினை ஒரு போராட்டமாகவே வரித்துக்கொண்டு வாழ்ந்து வரும் திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியின் இன்றைய பொலிவுக்கும், எழிலுக்கும் பின்புலமாக இருந்துள்ளவருமான பெருமனிதர் திருமலை நவம் அவர்கள் இதுவரை தொடர் போராட்டங்கள் மூலம் பெற்றுள்ள பல வெற்றிகளில் நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்பு மகத்தான ஒன்றாகும். ஏனெனில், மேற்படி நீதிமன்றத் தீர்ப்பானது, திருமலை மண்ணில் அவரின் ஒப்பற்ற சீரிய சேவையினைக் களங்கப்படுத்த, அண்மைக்காலங்களில் எடுக்கப்பட்டு வந்த முயற்சிகள் அனைத்தையும் முறியடித்து, அவரின் களங்கமற்ற சேவையினை அங்கீகரித்துக் கௌரவிப்பதுடன், அவர் சேவையாற்றிய மண்ணில், அவரை மறுபடியும் தலை நிமிரச் செய்வதாகவும் உள்ளது. இத்தீர்ப்பினால், அவரும், அவரது குடும்பத்தினரும், அவரின் பரந்துபட்ட நண்பர்கள் வட்டமும் மிகுந்த மகிழ்ச்சியும், மன ஆறுதலும் பெற்றுள்ளனர்.

அதிபர் பதவியிலிருந்த நவம் அவர்கள், ஓய்வு பெற்று விட்டபோதும் அவருடைய இயல்பான உற்சாகமும், உழைப்பும், உதவும் மனப்பாங்கும் ஓய்வு பெறவில்லை என்பது வெளிப்படையானது. தற்காலிகமாகச் சற்று ஓய்ந்திருந்த அவருடைய இலக்கியப் பணிகள், இனித் தீவிரமடையும் என்பதில் சந்தேக மில்லை. இந்நூல் அதற்குக் கட்டியம் கூறுவதுபோல் இப்பொழுது வெளியா கின்றது. நவம் அவர்கள் நலமுடன் நீண்டகாலம் வாழ்ந்து, பொதுப்பணி களையும், இலக்கியப் பணிகளையும் தளர்வின்றித் தொடர்வதற்கு இவ் வேளையில், அவரை மனமார வாழ்த்துகின்றேன்.

*திரு. க.ஞானேஸ்வரன்*
முதுநிலை விரிவுரையாளர்
பொருளியற்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்
15.07.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துரை

# ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில் புதிய கதவு திறக்கப்படுகிறது

இலங்கையின் சிறந்த அதிபர்களில் ஒருவர், தி/ உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியின் பொற்காலத்திற்குச் சொந்தக்காரர், மிகச் சிறந்த நிர்வாகி என்ற பெருமைகளைப் பெற்றவர் எமது பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய அதிபர் சி. நவரெட்ணம் அவர்கள். இவர் ஆக்கியுள்ள முக்கியத்துவம் மிக்க இந்நூலில் எமது குரலையும் சேர்த்துக் கொண்டதில் அவரது பழையமாணவர் களாகிய நாங்கள் பேருவகையடைகிறோம். அவரது மாணவர்கள் என்று சொல்வதில் பெருமிதம் கொள்ளும் நாம், எமது அதிபரின் நூல் என்பதால் மட்டுமல்லாமல் இந்நூலின் இலக்கிய வரலாற்று முக்கியத்துவம், அதனுடைய விரிபரப்புக்கள், அது காட்டும் புதிய வெளிச்சங்கள், உணர்த்துகின்ற சமூக பண்பாட்டு கூறுகள், அதனை ஒட்டி எதிர்காலத்தில் விரிவடையப் போகும் ஆய்வுகள் ஆகியவற்றுக்காகவும் இந்நூலில் எமது குரலைப் பதிவுசெய்வதில் பெருமிதமும் கௌரவமும் அடைகிறோம்.

2000 வருடங்களுக்கு மேற்பட்ட தொன்மை வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை, தமிழரின் பாரம்பரிய பூமி என்பதற்கு இலக்கிய, தொல்லியல், வரலாற்றாவணச் சான்றுகள் அனைத்துமுண்டு. புவியியல் முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகத்தால் மிகக் கீர்த்திபெற்றது திருகோணமலை. சோழராட்சி, காலனித்துவ ஆட்சி ஆகிய காலங்களிற்கூடத் தனது புகழின் உச்சியில் இருந்தது.

தொடர்ச்சியாகத் தமிழர்களின் வாழ்விடமாக விளங்கிய திருகோண மலையின் இலக்கியங்களின் முக்கியத்துவம் கருத்திற் கொள்ளப்படாமையும் திருகோணமலையின் கலை இலக்கிய வரலாறு முறையாகத் தொகுக்கப்படாமல் இருந்தமையும் துரதிஸ்டத்தின் பாற்பட்டதாகக் கொள்வதா அன்றி ஒதுக்கல் மனப்பான்மைக்குரியதா என்ற கேள்வி இன்றும் தொக்கி நிற்கின்றது.

அந்த வகையில் 17ம் நூற்றாண்டு தொடக்கம் திருகோணமலையின் கலை இலக்கியங்கள் பற்றியதும் இலக்கியவாதிகள் பற்றியதுமான, வரலாற்று ஒழுங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைப்பட்ட முதற் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது என்பது இந்நூலின் சிறப்புக்களில் தலையாயது.

ஈழத்தமிழ் மன்னர்களின் காலத்திலிருந்துதான் ஈழத்தின் இலக்கிய வரலாறு செம்மையாகத் தொடங்குகிறது. அதனைத் தொடர்ந்து பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் கீழ் தமிழ் நவீனமாதலுக்கு உட்படத் தொடங்கிய 19ம் நூற்றாண்டைத் தமிழிலக்கிய வரலாற்றாளர்கள் ஈழத்திற்கு உரியதாகக் கூறுவார்கள். ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை ஆகியோர் மேற்கொண்ட உரைநடை மற்றும் புதிய இலக்கிய வடிவங்களும், பழைய தமிழ் நூல்களை அச்சேற்றி செய்த மிகச் சிறந்த தமிழ்ப் பதிப்பு பணிகளும் காரணமாகத் தமிழிலக்கியத்தில் 19ம் நூற்றாண்டு ஈழத்துக்குரியதாக கொள்ளப்படுகிறது.

இந்தக் கருத்தை மேலும் வலுப்படுத்துவதாக திருகோணமலையிலும் நவீன இலக்கிய வடிவங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் பதிப்பு முயற்சிகள் செய்யப்பட்டுள்ளதையும் இந்நூல் ஆதாரப்படுத்தியிருக்கிறது. ஈழத்தின் இரண்டாவது நாவலான 'ஊசோன் பாலந்தை' எழுதிய இன்னாசித்தம்பியும், தமிழின் முதல் வரலாற்று நாவலான 'மோகனாங்கியை' எழுதிய தி.த.சரவண முத்துப்பிள்ளையும் திருகோணமலையைச் சேர்ந்தவர்களே என்பதுவும், சி.வை. போன்றே தி.த. கனகசுந்தரம்பிள்ளை அவர்களும் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினாக்கினியார்), 'தொல்காப்பியம் சொல்லதிகாரம்' (நச்சினார்க்கினியம்) ஆகியவற்றை குறிப்புரைகளுடன் பதிப்பித்ததுடன் 'கம்பராமாயணம் பால காண்டம்', 'தமிழ் நாவலர் சரிதை', 'ஈழமண்டல தேவாரம்', 'ஈழமண்டல திருப்புகழ்' ஆகியவற்றைப் பதிப்பித்துள்ளமையும் பழந்தமிழ் நூல்களை எல்லாம் முறையாகப் பதிப்பித்தவரும் தமிழ்த் தாத்தா எனப் போற்றப் படுபவருமான மகாவித்துவான் உ.வே.சாமிநாதஐயரின் பதிப்புப் பணிகளில் உதவி செய்துள்ளமையும் 19ம் நூற்றாண்டு தமிழ் இலக்கியம் ஈழத்திற்குரியது என்பதற்கு மேலும் வலுச் சேர்பவையாகும்.

நவீனத்துவச் சிந்தனைகளில் ஒன்றாகப் பெண்ணுரிமை தொடர்பான முக்கியமான நூல் தி.த. சரவணமுத்துப்பிள்ளையின் 'தத்தைவிடு தூது' என்பதுவும், தமிழின் முதல் பெண்ணுரிமைப் பத்திரிகை திருகோணமலையிலிருந்து வெளியான 'மாதர் மதி மாலிகை' என்பதுவும் தமிழை நவீனப்படுத்துவதில் திருகோணமலையின் பங்களிப்பை நிராகரிக்க முடியாமையை காட்டி நிற்கும் சான்றுகளாகும். 'மாதர் மதி மாலிகை'யை வெளியிட்ட திருக்கோணமலை மாதர் ஐக்கிய சங்கம் 1919ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இச்சங்கம் 1930 ஆம் ஆண்டுவரை செயற்பட்டதாக ஊகிக்க முடிகின்றது. இதுவே ஈழத்தில் பெண் விடுதலைக்கும் விழிப்புணர்ச்சிக்கும் தோன்றிய முதற்சங்கம் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

மறுபக்கம் காலனித்துவவாதிகளால் கோணேசர் கோயில் அழிக்கப்பட்டதால் அவர்களை வெறுத்து எதிர்காலனித்துவ மனநிலையில் திருகோணமலை மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்ததும், காலனித்துவவாதிகளின் மதத்தை சாராது சைவமதத்தை உறுதியாகப் பேணியதும், அந்த உணர்வை மேலும் வலுப்படுத்துமுகமாக கோணேசர் மீதும் ஏனைய சைவ தலங்கள் மீதும் ஊஞ்சல்கள், அம்மானைகள், பிரபந்தங்கள் பாடியதும், 19ம் நூற்றாண்டிலேயே திருகோணமலைப் பிரதேச நூல்களை அறிஞர் வே. அகிலேசப்பிள்ளை பதிப்பித்தமையும் நவீனத்துவத்தில் மேலெழுந்த சுதேசிய சிந்தனை மரபைத் திருகோணமலை ஈழத்தில் காத்துநின்றமைக்குச் சான்றாகும். ஈழத்தின் ஏனையபகுதிகள் போல் கிறிஸ்தவமயமாக்கலுக்கு உட்பட்டுப் பின்னர் அதை எதிர்க்காமல் போர்த்துகேய காலத்திலிருந்து தொடர்ச்சியாக காலனித்துவ எதிர் மரபொன்று திருகோணமலையில் செயற்பட்டது என்பது இங்கு முக்கியமாக குறிக்கப்படவேண்டியதொன்றாகும். இவற்றை யெல்லாம் அறிந்துகொள்வதற்கும் இதனடிப்படையில் ஆராய்ச்சிகளையும் சிந்தனைகளையும் விரித்து செல்வதற்கும் இந்நூல் பேருதவி செய்யப்போகிறது என்பது இந்நூலின் மற்றொரு சிறப்பாகும்.

திருகோணமலையின் கலை இலக்கிய வரலாறாக அமைகிறது இந்நூல். திருகோணமலை தமிழ் இலக்கியம் எனும்போது அதில் இஸ்லாமிய இலக்கியங் களினது பங்களிப்பும் தவிர்க்க முடியாதது. அந்த வகையில் இந்நூலில் இஸ்லாமிய இலக்கியங்களினதும், இலக்கியவாதிகளினதும் பங்களிப்புக்கள் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது இந்நூலின் நேர்மையைப் பறைசாற்றுவதுடன், திருகோணமலை இலக்கியம் என்பதன் தனித்தன்மையையும் காட்டி நிற்கிறது. 19ம் நூற்றாண்டில் முஸ்லிம் புலவர்களால் பாடப்பட்டு வாய்மொழியில் பேணப்பட்ட 'குட்டிக் காவியம்', 'கங்கை காவியம்', 'குறிஞ்சாமுனைக் காவியம்' ஆகியவை பற்றிய தகவல்களும் அவற்றைப்பாடிய சம்பூர் குட்டிக்காளிப்புலவர், மூதூர் புலவர் சாலையர், மூதூர் உமறுநெய்னாப் புலவர் ஆகியோர் பற்றிய தகவல்களும் 19ம் நூற்றாண்டு ஈழத்து இலக்கிய வரலாற்றின் இடைவெளிகளை நிரப்பிச் செல்லும் என்பது இங்கு சுட்டவேண்டிய ஒன்று.

இந்நூல் தனியே இலக்கியம் பற்றிய செய்திகளை மட்டும் சொல்லாமல் நாடகம், தொலைக்காட்சி நாடகம், குறும்படம், மெல்லிசை, சிறுபத்திரிகை என கலை இலக்கியங்களின் அனைத்து கூறுகளையும் உள்ளடக்கி தொகுக்கப் பட்டுள்ளது. இலக்கியங்களின் வரலாறு 17ம் நூற்றாண்டு, 18ம் நூற்றாண்டு என காலங்களின் அடிப்படையிலும், கவிதை, சிறுகதை, நாவல் என்ற வகைப் பாட்டிலும் தொகுக்கப்பட்டுள்ளதுடன் அவை சுதந்திரத்திற்குப்பின், 80கள் 90ற்குப்பின் என குறித்த காலவரிசைக்கிரமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளமை இந்நூலைப் பயன்படுத்துவோர் இலகுவாகவும் தெளிவாகவும் புரிந்துகொள்ள உதவியாக உள்ளது.

நாடகம் மேடை நாடகவரலாறாகவும், நாடக இலக்கியமாகவும் பிரிக்கப் பட்டுள்ளதுடன், மரபார்ந்த இசை என்றும் மெல்லிசை என்றும் இசைவரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிக்கப்பட்டுள்ளமை இந்த விடயங்கள் பற்றிய நுட்பமான தகவல்களை அறிந்து கொள்ள வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகால திருகோணமலையின் கலை, இலக்கிய வாதிகள் அனைவரும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர். அதனூடாக மூன்று நூற்றாண்டுகால திருகோணமலையின் எழுத்துவடிவம் பெற்ற பண்பாடு பற்றிய தகவல்களும், காலனித்துவ காலத்துத் திருகோணமலையின் வரலாறும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நூல் ஈழத்தின் கலை இலக்கிய வரலாற்றில் புதிய கதவைத் திறந்து விடுகிறது. திருகோணமலையின் மீது பிரகாசமான ஒளியைப் பாய்ச்சி புலப்படாதிருந்த கலை இலக்கிய மரபை தமிழ் உலகின் கவனிப்புக்கு கொண்டுவருகின்றது. அந்தவகையில் இந்நூல் நம் ஒவ்வொருவரதும் வாசிப்புக்கும் கருத்தாடலுக்கும் உட்படுத்தப்பட வேண்டியது.

இந்நூலாக்கத்திற்கான கடும் உழைப்பையும் நூலின் நேர்த்தியையும் பற்றி நாம் குறிப்பிட்டுத்தான் தெரியவேண்டியதில்லை. எமது அதிபரான திருமலை நவம் அவர்களின் கடும் உழைப்பும் எடுத்துக் கொள்கின்ற பணிகளில் அவர் காட்டும் உறுதியும் அந்தப்பணிகளில் மிளிர்கின்ற நேர்த்தியும் பிரசித்தமானதே. அந்த வகையில் இந்நூலும் அமைந்திருக்கின்றது. இந்நூலை ஆக்கியதினூடாகத் தான் பங்கேற்ற சமூகத்தின், பிரதேசத்தின், இலக்கியத்தின் வரலாற்று தொகுப்பை அவர் தொடக்கிவைக்கிறார். அந்த பணியில் நாமும் எம்மை இணைத்துக் கொள்வோம்.

பெருமையுடன்
இலங்கை மற்றும் கனடா வாழ் பழைய மாணவர்கள்
தி/ உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை

# திருகோணமலை கலை இலக்கியம்

### ஆய்வும் எனது தேடலும்

இந்நூலை வெளியிடுவதன் மூலம் எனது 40 வருடக் கனவு நிறைவு பெறுகின்றது என்பதில் சந்தோஷம் அடைகிறேன். கடந்த மூன்று தசாப்த காலத்துக்கு மேலாக நான் அங்கொன்றும், இங்கொன்றுமாக பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் சேர்த்து வைத்திருந்த திருகோணமலை சம்மந்தமான தகவல்கள், செய்திகள், ஆவணங்கள், குறிப்புக்கள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு, இந்நூலை/ இந்த வரலாற்றை ஆக்கியுள்ளேன்.

திருகோணமலை சம்மந்தமான ஆவணங்கள் முறையாகப் பேணப்பட வில்லை; ஆய்வுகள் செய்யப்படவில்லையென்று நான் அடிக்கடி குறிப்பிடுகிற போதெல்லாம், சிலர், நாங்கள் பல நூல்களை வெளியிட்டிருக்கிறோம்; பிரசுரம் செய்துள்ளோம்; இதை விட வேறு என்ன தேவையென்று என்னுடன் வாக்கு வாதப்பட்டதுண்டு. எழுத்தாளர் ஒரு சிலரின் நூல்களை அச்சு வடிவில் வெளி யிட்டுவிட்டால், அது முழுமையான ஆவணப்படுத்தல் என்று தவறாக கணக்குப் போட்டு வைத்திருந்தமையே, அந்த அறியாமைக்கு காரணமாகும்.

ஈழத்து இலக்கியம் என்ற கரு, 1970ஆம் ஆண்டுக்குப்பின் வலுக்கொள்ளத் தொடங்கிய காலத்தில் இருந்து, எங்கள் நாட்டு பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், விமர்சகர்கள் திருகோணமலையை புறந்தள்ளி, தங்கள் ஆய்வுகளை செய்த போதெல்லாம் நான் அவர்களுடன் கடுமையாக தர்க்கித்துள்ளேன்.

இப்படி ஏன் புறந்தள்ளுகிறீர்கள் என்று அவர்களிடம் கேட்ட போதெல்லாம் பேராசிரியர்களும், ஆய்வாளர்களும், விமர்சகர்களும் சொல்லிய பதில் என்னை கவலைக்கொள்ள வைத்ததுண்டு.

திருகோணமலையின் கலை இலக்கியம் சம்மந்தமான முறையான ஆவணங் களை, பதிவுகளைக் காணமுடியவில்லை அல்லது பெற முடியவில்லை. அதனால், எங்கள் பார்வையில் அது விடுபட்டுப் போய் விட்டது என்று சொன்னதைக் கேட்டு நான் ஆத்திரப்பட்டதுண்டு. அவர்களின் கூற்றில் உண்மைக்கு மேலான ஞாயமும் இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய ஆய்வுகளை பலர் செய்துள்ளனர். நூல்களை வெளியிட்டுள்ளனர். அதிலெல்லாம் திருகோணமலையின் பங்களிப்பு சொல்லப்படவில்லை என்பதை இந்நூலின் பல இடங்களில் நான் எடுத்துக் காட்டியுள்ளேன்.

இருந்த போதிலும், திருகோணமலை சம்மந்தமான ஓர் முறையான வரலாற்று ஆய்வு இல்லை, அல்லது சொல்லப்படவில்லை, என்பதனை உண்மையாக ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

இப்பிரதேசத்தின் தனித்தன்மை வித்தியாசமானது. மூவின மக்கள் கலந்து வாழும் இப்பிரதேசத்தில், தமிழர்கள் வரலாற்றுக் காலந்தொட்டு வாழ்ந்துள் ளார்கள், வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பதற்கு இலக்கியங்களும், புராணங் களும் மிக வலுவான ஆதாரங்களாக இருக்கின்றன.

17ஆம் நூற்றாண்டிலிருந்து, எனது ஆய்வை மேற்கொண்ட போதும் கோணேசர் கோவிலை மையப்படுத்தி வளர்ந்த, ஓர் பாரம்பரிய கலாசாரம் இந்த மண்ணில் வேரூன்றி வளர்ந்துள்ளமையை, யாரும் மறுக்க முடியாது. இந்தக் கலாசாரத்தின் வித்திலிருந்துதான் திருகோணமலைப் பிரதேச கலை இலக்கிய பாரம்பரியம் வளர்ந்து வந்துள்ளது, என்பது உண்மையாகின்றது. அதற்கு ஆதாரமாக, 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புலவர்களான கவிராசர், பண்டிதராசர் ஆகியோர் திருகோணமலைப் பிரதேசத்தின் இலக்கிய பாரம் பரியத்தின் பிதாக்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு, அவர்கள் ஆக்கித்தந்த நூல்கள் ஆதாரங்களாகின்றன.

இந்தப் பிரதேசத்தில் சகோதர இனத்தவரின் சுவடுகளை நாம் எங்கும் காண முடியவில்லை. 20ஆம் நூற்றாண்டில் கூட, அவர்களின் ஆக்கங்களைக் காண முடியவில்லை.

இந்த மண்ணில் பாரம்பரியமாக, நூற்றாண்டுகளாக வாழ்ந்தவர்கள் தமிழர்கள். எங்கள் வரலாற்றுக் கிராமங்கள், இன்றும் கபளீகரம் செய்யப்படுகிறது என்பதற்கு, எனது ஆய்வில் சொல்லப்பட்ட இலக்கியங்களும், ஆதாரங்களும் உண்மை என்பதை நீங்கள் உணருவீர்கள். இந்த மண்மீது, யாரும் உரிமை பாராட்ட முடியாத அளவிற்கு கலை இலக்கியங்கள் ஆதாரமாக இருந்துள்ளது என்று கூறுவதுடன் இது போன்றதொரு ஆதாரக் காட்டிகளை யாருமே சவால் விட்டுச் சொல்ல முடியாத அளவிற்கு, இந்த மண் தமிழர்கள் பாரம்பரியப் பிரதேசம் என்பதை, எனது ஆய்வு சுட்டிக் காட்டுகின்றன.

இந்த நூலுக்கான தரவுகளை, செய்திகளை, ஆதாரங்களைத் தேடி பலரிடம் சென்றுள்ளேன். செல்கின்றபோதெல்லாம் அவர்கள் காட்டிய உதாசீனம், அக் கறையின்மை என்னைக் கோபப்படவைத்த சம்பவங்களும் உண்டு. எனக்கு சொல்லக்கூடாது, தரக்கூடாது என மறைத்தவர்கள், மறுத்தவர்களும் உண்டு.

இந்த நூலில், பிரசித்தி பெற்ற கிடைக்க முடியாதவர்களின் படங்களை வெளியிட்டால் நல்லது என, இந்தப் புத்தகத்தை வெளியிட உதவிய குமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு திருமலை நவம்

1. திருகோணமலை இலக்கிய வரலாறு எழுதுதல்.
2. திருகோணமலை எழுத்தாளர் சங்கத்தைப் புனரமைத்தல்.
3. தரமான இலக்கிய மாசிகை ஒன்று வெளியிடுதல்.

1993இல் திருகோணமலை காளிகோயில் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற நூல் அறிமுகவிழாவின் போது, மேற்படி மூன்று ஆலோசனைகளை முன் வைத்தேன். அதன் பின், இவ்விடயங்கள் தொடர்பாக சில எழுத்தாளர்களைத் தனித்தனியே சந்தித்து உரையாடினேன். எனக்குக் கிடைத்த தகவல்களின்படி வ.அ பாலேஸ்வரி, சுந்தா முதலியோர் இவ்விடயங்களை முன்னெடுத்துச் செல்லக் கூடிய நிலையில் இல்லை. எனவே, தாங்களே இவ்விடயத்தை/விடயங்களை முன்னின்று ஏற்பாடு செய்ய வேண்டுமென எண்ணுகிறேன்.

ஏற்கனவே, திருகோணமலை இலக்கிய வரலாறு ஒன்றைத் தாங்கள் ஆரம்பித்து விட்டதாகவும், அதிபர் வேலை காரணமாக இடையில் நிற்பதாகவும் அறிகிறேன். இதை நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும்.

ஏனைய இருவிடயங்களையும் நாம் இருவரும் கலந்தாலோசித்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வோம். அதிபர் வேலை காரணமாக உங்களுக்குப் போதிய அவகாசம் இல்லை என்பதை நான் அறிவேன். தங்கள் வழிகாட்டலில், தங்கள் சக்திக்கு உட்பட்டவர்களைக் கொண்டு இதை செய்யலாம். தயவு செய்து இது பற்றி சிந்திக்கவும். முடியுமானால் என்னை தொடர்பு கொள்ளவும்.

அன்பு இரா.நாகலிங்கம்
03.08.1993. (அன்புமணி)

குறிப்பிட்டபோது, எழுத்தாளர்களின் படங்களைத் தேடியலைந்த வேளையில், ஒரு சிலரைத்தவிர மற்றவர்கள் ஆர்வம் காட்டவில்லை. சிலர், வேண்டுமென்றே தர மறுத்தார்கள். அவையெல்லாம் எனக்கு வேதனை கலந்த கோபத்தை உண்டு பண்ணியதுண்டு.

இந்த நூலில், திருகோணமலைப்பிரதேசத்தின் நாவல், கவிதை, நாடகம், சிறுகதை, மெல்லிசை, சிறுவர் பாடல், ஒளிப்படம், கையெழுத்துப் பிரதி என பல பகுதிகளாக வகுத்து, தரவுகளைத் திரட்டி எழுதியுள்ளேன்.

உண்மையில், இந்த நூலை வெளியிட வேண்டுமென்று எனக்கு ஆரம்பத்தில் (1993ஆம் ஆண்டளவில்) விளங்கப்படுத்தி கடிதம் எழுதிய பிரபல எழுத்தாளர் அன்புமணியின் ஒரு கடிதத்தை இத்துடன் இணைத்துள்ளேன்.

இந்த நூலை வெளியிட முடியாமல், ஊறுகாய் போட்டு வைத்த நிலையில், தற்செயலாக எனது நண்பரும் ஈழத்து பிரபல எழுத்தாளருமான செ.கணேசலிங்கன் அவர்களின் மகன் குமரனை சந்தித்து உரையாடியபோது, இந்த நூலை வெளியிட உதவியை நான் செய்கின்றேன், என்று பிரதியை வாங்கி, சரிபார்த்து, உரிய ஆலோசனைகளை நல்கி, இந்நூலை உருவாக்கி தந்தார். குமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கும், அவர் நிறுவனம் சார்ந்த ஊழியர்களுக்கும் எனது நன்றியும், வாழ்த்தும் என்றும் உண்டு.

பல்கலைக்கழக வாழ்வில் என்னை நேசித்தும் என்னை புரிந்தும் எனது எழுத்திலும் பேச்சிலும் அன்புக் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் எனது நண்பருமான க.ஞானேஸ்வரன் தந்த நட்புரைக்கு எனது நன்றிகள்.

இந்தப் பிரதியை, கணினியில் உருவாக்கி தந்த கணினி இயக்குனர் கௌரிக்கும், இறுதியாக சரி பார்த்து உதவிய கணினி இயக்குனர் சிறிதரன் அவர்களுக்கும், மற்றும் கணினி பயிற்சியாளர் சிந்துஜா, மஞ்சு ஆகியோருக்கும், இந்த நூலை ஒப்பு பார்த்து, நல் ஆலோசனை வழங்கிய, பிரபல எழுத்தாளர் நண்பன் நந்தினி சேவியர் அவர்களுக்கும், மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்து ஆகட்டும்.

இந்த ஆய்வினை நான் ஆரம்பித்த வேளையில் இருந்து, எனக்கு பல தரவுகளையும் தகவல்களையும் தந்து, இந்நூலின் இறுதி வடிவத்தையும் செம்மை பார்த்து தந்த எனது மாணவனும், திருகோணமலை மண்ணின் கவிஞனுமான வி.மைக்கல் கொலின் அவர்களுக்கும் எனது நன்றிகளைக் கூற கடமைப் பட்டுள்ளேன்.

என்னை இந்த மண்ணுக்கு ஈந்த எனது பெற்றோர்களாகிய தந்தை கணபதிப் பிள்ளை சிதம்பரப்பிள்ளை, எனது தாய் பொன்னு, என்னை ஒரு பட்டதாரியாக்க தமது உதிரத்தை தீனியாக்கிய, எனது மாமா, சங்கரப்பிள்ளை வல்லிபுரம், எனது மாமி வல்லிபுரம் முத்துப்பிள்ளை ஆகியோரிற்கு இந்நூலைச் சமர்ப்பணம் செய்கிறேன்.

தொ.பேசி இல:
026 2226011
0773674875

**திருமலை நவம்**
சி.நவரத்தினம்
301/18 விகாரை வீதி
திருகோணமலை
12.08.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| நட்புரை | | v |
| வாழ்த்துரை | | ix |
| முன்னுரை | | xiii |
| 1. | முன்னோட்டம் | 1 |
| 2. | முன்னோடி இலக்கியங்கள் | 9 |
| 3. | கவிதை | 39 |
| 4. | சிறுகதை | 90 |
| 5. | நாவல் | 125 |
| 6. | நாடக வளர்ச்சி | 154 |
| 7. | இசை மரபு வளர்ச்சி | 214 |
| 8. | மெல்லிசை | 220 |
| பின்னிணைப்புகள் | | |
| I. | க. சரவணபவனின் அகராதி முயற்சிகள் | 231 |
| II. | திருகோணமலையில் வெளிவந்த சிற்றிதழ்கள் | 232 |
| III. | திருகோணமலைக் கவிஞர்கள் | 235 |
| IV. | திருகோணமலை சிறுகதை எழுத்தாளர்கள் | 238 |
| V. | திருகோணமலையில் வெளிவந்த சிறுகதைத் தொகுதிகள் | 239 |
| VI. | திருகோணமலையில் வெளிவந்த நாவல்கள் | 241 |
| VII. | திருகோணமலையில் வெளிவந்த சிறுவர் நாவல்கள் | 243 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# முன்னோட்டம்

இலங்கையின் கிழக்கு கரையில் அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை வனப்புடன் கூடிய நகரம், திருகோணமலை நகரமாகும். மிக நீண்ட வரலாற்றையும், வெளிநாட்டவர்கள் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட முக்கியம் வாய்ந்த பிரதேசமாகவும், வடக்கு கிழக்கு மக்களின் நடுநாயகமாகவும் விளங்கும் நகரம், திருகோணமலை.

கிழக்கு மக்களின் வாழ்க்கைக் கோலங்களையும், வடக்கு மக்களின் பண்பாட்டு அடையாளங்களையும் இணைத்து நிற்கும் பாலமாக விளங்கிவரும் திருகோணமலைப் பிரதேசம், பலநூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக அதன் பூகோள அமைப்புக்கள், கலாசாரங்கள், மக்களின் வாழ்வு முறைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தின் முக்கிய அடையாளங்களாக சுட்டிக்காட்டப்படும் கோணேசர் கோவில், இயற்கைத்துறைமுகம், கன்னியாவெந்நீரூற்று, கந்தளாய்க் குளம், வெருகலம்பதி, தம்பலகாமம் போன்ற இன்னோரன்ன புகழ்ச் சின்னங்களிலிருந்து உருவாகியதே, இப்பிரதேசத்தின் தொன்மை மிகு இலக்கியங்களும், கலைகளும், மரபுகளும், வரலாறுகளுமாகும்.

புராண காலத்திலிருந்து பேசப்படும் கோணேசர் ஆலயத் தொன்மங்களிலிருந்து இப்பிரதேசத்தின் கலை, இலக்கியம் முகிழ்விடத் தொடங்கியதை, இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எழுந்ததாகக் கருதப்படும் புராணங்களும், இதிகாசங்களும், கல்வெட்டுக்களும் சான்றுபகருகின்றன.

திருகோணமலைப்பிரதேசத்தின் கலை, இலக்கியங்களின் ஆரம்பம் கோணேசர் மரபை பின்பற்றி எழுந்து, வளர்ந்துள்ளமையை கோணேசர் கோவில் பற்றி புகழ்ந்துபேசும் 'கைலாசபுராணம்', 'கோணாசலபுராணம்', 'கோணேசர்கல்வெட்டு', 'திருக்கோணமலைப்புராணம்' போன்ற புராணங்கள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கை செகராஜசேகர மன்னன் காலத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும் பண்டிதராசர் எனும் புலவரால் இயற்றப்பெற்ற 'கோணாசல புராணம்', கவிராசர் எனும் புலவரால் இயற்றப்பெற்ற 'கோணேசர் கல்வெட்டு' ஆகிய மரபு வழி இலக்கியங்கள், 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்பதை பல ஆய்வாளர்களின் ஆய்வுகளில் இருந்து நிரூபணமாகிறது.

இதனை தொடர்ந்து, 18ஆம் நூற்றாண்டில் எழுந்ததாகக் கருதப்படும் 'திருக்கரசைபுராணம்', 'சித்திரவேலாயுதர்காதல்', 'கோணமலை அந்தாதி' என்பன முன்னைய காலப் புராணங்களின் தொடர் நிலைப்பாடுகளின் பிறப்புக்களாக, திருமலையின் கோவில்வரலாறு சார்ந்த முறைகளையும், சம்பவங்களையும், மரபுகளையும் சொல்பவையாக காணப்படுகின்றன.

புராண இலக்கியங்கள் தோன்றிய 17ஆம், 18ஆம் நூற்றாண்டை தொடர்ந்து, மறுமலர்ச்சி நூற்றாண்டென கூறப்படும் 19ஆம் நூற்றாண்டின் மாற்றங்கள், வளர்ச்சிகள், போக்குக்கள் இலங்கையின் ஏனைய பகுதிகளை அதிரவைத்ததைவிட, திருகோணமலையின் சமூக விழுமியங்களிலும், கலை இலக்கியங்களிலும் உடனடி மாற்றங்களை கொண்டு வந்துள்ளது என்பதனை, இப்பிரதேசத்தின் வரலாற்று ஆதாரங்கள் மூலமும், இலக்கியங்கள் மூலமும் அறியக் கூடியதாகவுள்ளது.

19ஆம் நூற்றாண்டின் நவீன வரவுகள் எனப்படும் சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், மெல்லிசை எனும் நவீன வடிவங்கள், தமிழகத்தில் கால் ஊன்றத் தொடங்கிய அதேகாலப்பகுதியில், திருகோணமலையிலும் வளரத் தொடங்கியதற்கு ஆதாரமாக, ஈழத்தின் மூத்த நாவல்களான 'ஊசோன்பாலந்தை' (1891), 'மோகனாங்கி' (1895) ஆகிய இரு நாவல்களும், திருகோணமலையைச் சேர்ந்த எஸ்.இன்னாசித்தம்பி, பண்டிதர் சரவண முத்துப்பிள்ளை ஆகியோரால் நாவல் என்னும் வடிவம் தமிழில் தோன்றிய காலத்திலேயே இதனைப் படைத்துள்ளனர் என்பதன் மூலம் நிரூபணமாகிறது.

தமிழின் மூத்த நாவல்களான 'பிரதாப முதலியார் சரித்திரம்' (1874) 'கமலாம்பாள் சரித்திரம்' (1896) ஆகிய நாவல்கள் எழுந்த அதே காலப்பகுதியில், இவ்விரு நாவல்களும் திருகோணமலை அறிஞர்களால் எழுதப்பட்டு இருப்பது, நான் மேலே சொன்ன கூற்றுக்கு ஆதாரமாகவுள்ளது.

தமிழில் எழுந்த மூத்த நாவல்களான 'பிரதாப முதலியார் சரித்திரம்', 'கமலாம்பாள் சரித்திரம்' ஆகிய நாவல்கள் போலவே, திருகோணமலையில் எழுந்த இவ்விரு நாவல்களும் சரித்திர சான்றுடைய பாத்திரங்களை, கதை மாந்தர்களாக கொண்டு எழுந்துள்ளமையை காணலாம். கல்கி, அகிலன், சாண்டிலியன் போன்ற வல்லுனர்கள், சரித்திர நாவல்கள் எழுதுவதற்கு முன்பே, திருகோணமலையை சேர்ந்த அறிஞர்கள் சரித்திர நாவல்களை எழுதியது, ஆச்சரியம் தருகின்ற விடயமாகும். இவ்விரு நாவல்களும் எழுந்த காலத்திலிருந்து, சுமார் அறுபது வருட காலம் திருகோணமலையில் நாவல் இலக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இந்த இடைவெளியை நிரப்பியவர் வ.அ.இராசரத்தினம் ஆகும். இவர், 1956ஆம் ஆண்டு எழுதிய ‘கொழுகொம்பு’ என்ற நாவலே, சுமார் அறுபது வருடங்களிற்குப்பின் திருமலையில் எழுந்ததாக கொள்ளப்படுகின்றது.

திருகோணமலையில், நவீன தமிழ்கவிதை மரபொன்று முளைகொள்ளத் தொடங்கியமையை, 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காணக் கூடியதாக வுள்ளது. இந்த முனைப்புக்கு காரணமாக இருந்தவர்கள் பலர். அவர்களில் வே.அகிலேசபிள்ளை, தி.த.கனகசுந்தரம்பிள்ளை, தம்பையாப்பிள்ளை, தி.த. சரவணமுத்துப்பிள்ளை, அ.அழகக்கோன், மா.முத்துக்குமாருப்புலவர், சட்டம்பி தம்பையா, சு.தம்பையாபிள்ளை போன்றோரைக் குறிப்பிடலாம்.

எனினும், நவமான கவிதைகளாக அவை இருக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். அவை மரபுகளை மடித்து வைத்துக் கொண்ட பாண்டித்தியம் மிக்க அறிஞர்களால் பாடப்பட்டவையாகவும், பழைய மரபுகள்மீது நம்பிக்கை கொண்டவர்களால் ஆக்கப்பட்டவையாகவும் அக்காலக்கவிதைகள் அமைந் திருந்தன.

மறுமலர்ச்சிக் கவிதை மரபொன்று சுதந்திரத்துக்குப்பின், குறிப்பாக, 1950ஆம் ஆண்டுக்குப்பின், கிண்ணியாவைச் சேர்ந்த ‘அண்ணல்’ என்ற கவிஞரின் வருகையுடன்தான் தலைநீட்டத் தொடங்கியதை காணலாம். வடக்கில், நாவற்குழியூர் நடராஜன், அ.ந.கந்தசாமி, சோ.நடராஜா, மஹாகவி போன்ற வர்களின் காலப்பகுதியின் சமச்சீர்த் தன்மை கொண்ட கவிதைகளை நவீன போக்குக்கு அமைவாக அண்ணல் எழுதத் தொடங்கினார். ஆனால், இவரது கவிதைகள் சமூகம் சார்ந்தவையாக இல்லாமல் வாலிப உணர்வுகளை சித்தரிப்ப வையாக அமைந்தன. அதேவேளை, தர்மு சிவராமு என்ற இளைஞர் அக் காலப்பகுதியில் சற்று மாறுபட்ட வகையில் ஒரு சில கவிதைகளை எழுதினார்.

கவிஞர் அண்ணலைத் தொடர்ந்தே, சற்றும் பிந்திய காலத்தின்பின் திருக் கோணமலைக்கவிராயர், தாமரைத்தீவான், கழகப்புலவர் பெ.பொ.சிவசேகரம், கவிஞர் ஈழவாணன் போன்றவர்களின் வருகை திருகோணமலையின் நவீன கவிதைக்கு வளம்சேர்க்க தொடங்கியது.

இதேவேளை, சிறுகதைத்துறையின் போக்கை நுண்ணுவோமாயின், தமிழ்ச் சிறுகதை வ.வே.சு ஐயர், புதுமைப்பித்தன் போன்ற மேதாவிகளின் வருகையினால் தமிழிற்கு அறிமுகமானவேளை வடக்கே சி.வைத்திலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன், சிவபாதசுந்தரம் போன்றோர் (1930ஆம் ஆண்டுக்குப் பின்) இவ் வடிவத்தை ஈழத்துக்கு அறிமுகம் செய்தபோதும், அத்தகைய முயற்சிகள், திருகோணமலையில் இதேகாலப்பகுதியில் மேற்கொள்ளப்படவில்லை. எனினும், 1950ஆம் ஆண்டுக்குப்பின், ஈழத்து சிறுகதை முன்னோடிகள் என்ற வகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ.கணேசலிங்கன், டொமினிக் ஜீவா, கே.டானியல், எஸ்.பொ, நீர்வை பொன்னையன் குழுவோடு இணைந்து, திருகோணமலையில் சிறுகதை முன்னோடியாக திகழ்கிறார் வ.அ.இராசரத்தினம் எனும் பிதாமகன். இவரை திருமலையின் புதுமைப்பித்தன் என்று சொல்லக் கூடிய அளவிற்கு, திருகோண மலையின் சிறுகதை வரலாறு இவரிடம் இருந்துதான் ஆரம்பமாகிறது.

இவருக்குப்பின்புதான், தர்மு சிவராமு, ந.பாலேஸ்வரி, க.சா.அரியநாயகம், தி.அரியநாயகம், த.பி.சுப்பிரமணியம் போன்றோர் இத்துறைக்கு வளம் சேர்க்க வந்தார்கள்.

நவீன நாடக மரபுகள், சிறுகதை போல் அல்லாமல் நாவல்துறை போல் சற்று மாறுபட்ட முறையில் திருகோணமலையில் 19ஆம் நூற்றாண்டிலிருந்து வளர்ச்சியடைய ஆரம்பிக்கின்றது.

மரபு வழித்தன்மை கொண்ட கூத்துக்களும், விலாசங்களும் மிக நீண்ட காலமாக திருகோணமலை பிரதேசத்தில் வளர்ந்து வந்துள்ளதை அவதானிக் கலாம். குறிப்பாக, 18ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலிருந்தே கிராமப் புறங்களிலும், நகர மையப்பகுதியிலும் ஆடப்பட்டு வந்துள்ளதை பல்வேறு ஆதாரங்களின்மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. மட்டக்களப்புக்கும், யாழ்ப் பாணத்திற்கும் மையமாகவும், வன்னிக்கு அயலாகவும், திருகோணமலை இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பிரதேசங்களிற்குரிய அரங்குகள் கலந்த வகையில், உதாரணமாக வடமோடி, தென்மோடி, யாழ்ப்பாண விலாசம் ஆகிய மரபுவழிகூத்து முறைகள், இப்பிரதேசத்தில் 18ஆம் நூற்றாண்டில் இருந்தே ஆடப்பட்டு வந்திருப்பதற்கு பல ஆதாரங்கள் சான்றாகவுள்ளன.

இத்தகையதொரு கூத்து முறைகளின் தொடர்ச்சியான வரலாறாகவே, நவீன நாடக மரபொன்று 19ஆம் நூற்றாண்டு முற்பகுதியில் திருகோணமலையில் அண்ணாவி தம்பிமுத்து காலத்திலிருந்து (1900-1960) ஆரம்பமாகின்றது. அவருக்குப்பின், சி.விசுவலிங்கம், எம்.சி.அந்தோனிப்பிள்ளை, அண்ணாவி சின்னையா போன்ற புதிய பரம்பரையின் வரவோடு, நவீன நாடக மரபு திருகோணமலையில் உருவாகியதோடு, பல்வேறு நாடக மன்றங்கள் உருவாகி, நவீன நாடக பாரம்பரியங்கள் ஈழத்தின் எந்த பகுதியிலும் இல்லாத அளவிற்கு வளர்ச்சிகண்டுள்ளதை, அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. அதற்குக்காரணம், நகரத்திலும், கிராமங்களிலும் பெருந்தொகையான நாடக மன்றங்களும், அரங்கு களும் தோன்றியமையே ஆகும்.

இராவண தரிசனம் கொண்ட திருகோணமலையில் கர்நாடகம், மெல்லிசை ஆகிய இரு துறைகளின் வளர்ச்சி இன்னொரு துறையாக வளர்ச்சி அடைந்த மையை 19ஆம் நூற்றாண்டிலிருந்து அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. புராண காலத்தில் இருந்தே 'கோணேசர் கல்வெட்டு' குறிப்பிடுவதுபோல், கோணேசர் கோயிலை மையப்படுத்தி ஓதுவார்கள், நடனமாதர்கள், சங்கீத விற்பன்னர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோர் இப்பிரதேசத்தில் பல்வகைக்கலைகளை வளர்த்து வந்துள்ளனர். 'கோணாசலபுராணம்' கூறும் காலம் தொடக்கம், 'திருக்கரசைபுராண'காலம்வரை, பல்வேறு கலைகள், இப்பிரதேசத்தில் வளர்ந்து வந்துள்ளமையை பிற்கால நூல்கள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

19ஆம் நூற்றாண்டின் கடைக்கால் பகுதியில், மரபுரீதியான இசைத் துறைக்கு பங்காற்றியவர்களாக வீரக்கோன்முதலியார், வே.அகிலேசபிள்ளை, கார்த்திகேசு குருக்கள், அப்பாத்துரைஐயர், சாம்பசிவ ஐயர் ஆகியோரையும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலப் பகுதியில் தொண்டாற்றியவர்களாக வே. தில்லை யம்பலம் மாஸ்ரர், சிவகாமசுந்தரி விஜயரட்ணம், இராஜராஜேஸ்வரி பால சுப்பிரமணியம் ஆகியோரையும் குறிப்பிடலாம்.

இதில், கர்நாடக சங்கீதம், நிறுவனமயப்படுத்தப்பட்ட வகையில், தட்ஷண கான சபா தோன்றிய காலத்திலிருந்து (1949ஆம்) ஆரம்பமாகிறது. செல்வி இராஜராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தட்ஷணகான சபா, அதை தொடர்ந்து பல்வேறு உதிரித்தனமான சங்கீத சபாக்கள் மரபு ரீதியான சங்கீத வளர்ச்சியை திருகோணமலையில் வளர்க்க காரணமாகின.

இதேவேளை, காலத்தின் தேவைகருதி மெல்லிசைத் துறை வளர்ச்சியும், திருகோணமலையில் வளர்ச்சியடைய ஆரம்பிக்கிறது. இத்துறையின் பிதா மகனாக திகழ்பவர், திருமலை பத்மநாதனாகும். அவரைத்தொடர்ந்து, இத் துறையை வளர்க்க பாடுபட்ட பரமேஸ்கோணேஸ், இம்மானுவல், பஞ்சரட்ணம், கெங்காதரன் போன்றோர் இசைத்துறைக்கு ஆற்றிய சேவை அளப்பரியதாக மதிப்பிடப்படுகிறது.

1950ஆம் ஆண்டுக்குப்பின், சிறுகதைத் துறையில் வ.அ.இராசரத்தினத்தை தொடர்ந்து ந.பாலேஸ்வரி, க.அருள்சுப்பிரமணியம், தி.அரியநாயகம், க.சா. அரியநாயகம் போன்றோர் அத்துறைக்கு வளம் சேர்த்தவர்களாகின்றனர். வ.அ.இராசரத்தினத்தின் கதைகளில் மண்வாசனைத்தன்மையும், அருளின் சிறுகதைகளில் தேசியத் தன்மையும், பாலேஸ்வரி, அரியநாயகம் போன்றோரின் கதைகளில் மெல்லியல் தன்மையும், க.சா.அரியநாயகத்தின் கதைகளில் முற் போக்குத்தன்மையும், உள்ளீடாக இருப்பதை காணலாம்.

1970ஆம் ஆண்டுக்குப்பின், கவிதைத் துறையில் ஓர் தேசிய விழிப்பு மிளிர்வதைக்காணலாம். 1971ஆம் ஆண்டின் புரட்சி வேகங்கள், இடது சாரிச வலுவூட்டல்கள், இந்திய கவித்துறை சஞ்சிகைகளின் வருகைகள் புதிய போக் குடைய கவிஞர்கள் இத்துறைக்கு வருவதற்கு காரணங்களாகின்றன. அதற்கு உறுதுணையாக, நிறுவனமயப்படுத்தப்பட்ட சமூக இயக்கங்கள், இலக்கிய மன்றங்கள், அரசியல் விழிப்புணர்வுகள் காரணமாகின. திருகோணமலையில் இயங்கிய முன்னோடிகள், கலை இலக்கிய விமர்சகர் குழுவைச்சேர்ந்த பல கவிஞர்கள், இக்காலப்பகுதியில் தமது பல்வேறு பரிமாணங்களை கவிதை துறையில் காட்டினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேநேரத்தில், மெல்லிய மனவயப்பட்ட கவிதைகளை எழுதிய இளைய தலைமுறையினர் இக்காலப்பகுதியில் காணப்பட்டார்கள். ஆலன், நிலா தமிழின்தாசன், திருமலை அ.சந்திரன் போன்றோரின் கவிதைகள் இதற்கு உதாரணமாகும்.

நாவல் இலக்கியப்படைப்பில் 70ஆம் ஆண்டுக்குமுன் வ.அ., ந.பாலேஸ்வரி ஆகியோரைத்தவிர வேறு எவரும் நாவல் படைப்பதில் ஆர்வம் காட்டவில்லை. 1970ஆம் ஆண்டுக்குப்பின், வ.அ. இராசரத்தினம் அவர்கள் ஐந்து நாவல்களையும், மூன்று குறுநாவல்களையும் படைத்திருந்தார். இவரது நாவல்களில் மூதூர் பிரதேசத்தின் கதாபாத்திரங்களும், மண்வாசனையும் கலந்து கிடந்தன.

சற்று பிந்திய காலப்பகுதியில், ந.பாலேஸ்வரி 'சுடர்விளக்கு', 'உறவுக்கப்பால்', 'பூஜைக்கு வந்தமலர்' ஆகிய நாவல்களை படைத்திருந்தார். மெல்லிய உறவுகளையும், இளமை துடிப்புக்களையும், எண்ணங்களையும் சொல்லும் நாவல்களாக அவை காணப்பட்டன. ஆனால், 1973ஆம் ஆண்டு க.அருள்சுப்பிரமணியத்தின் 'அவர்களுக்கு வயது வந்து விட்டது' என்ற நாவலுடன் ஓர் தேசிய தரத்தையும், புதிய பரிமாணத்தையும் நாவல் இலக்கியம் பெறத் தொடங்குகிறது.

இக்காலப்பகுதியின் சிறுகதை துறையின் போக்கை நோக்குவோமாயின் கவிதை துறைபோல் அதிக ஆர்வம் காட்டிய எழுத்தாளர்களை இக்காலப்பகுதியில் காண முடியாவிட்டாலும், இராஜ தருமராஜா, மு.இராஜ்கபூர், க. அருள் சுப்பிரமணியம், வ.அ. போன்றோரின் இருப்புக்கள் இத்துறையை தக்க வைத்திருந்தது.

மேடை நாடகத்துறையில் 1970ஆம் ஆண்டுகள் கணிசமான பதிவுகளை வாங்கிக்கொண்ட காலமாக திகழ்கிறது. பெருந்தொகையான நாடகமன்றங்கள் உருவாகிய காலம் இதுவாகும். இம்மன்றங்களின் பெருக்கத்தின் காரணமாக இயக்குனர்கள், நடிகர்கள், காட்சி அமைப்பு விற்பன்னர்கள் அதிகமாக உள் வரத்தொடங்கிய காலமாக இது காணப்படுகின்றது.

மரபுமுறைச் சங்கீதம், ஒரு புறம் ஆழமாக வளர்ந்த அதே நேரத்தில், மெல்லிசை எனும் துறை வளரத்தொடங்கிய காலம், 1970ஆம் ஆண்டாகும். திருமலை பத்மநாதன் ஆரம்பித்த திருகோணமலை இசைக்கழகம், அதனைத் தொடர்ந்து பரமேஸ் கோணேஸ் ஆரம்பித்த இசைக்கழகம், கலைவாணி இசைக் குழு, நீரோ இசைக்குழு போன்றன 1970ஆம் ஆண்டுக்குப்பின், மெல்லிசை துறையில் பாரிய பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டு வளர்ச்சியடைய, மேற்குறிப்பிட்ட இசைக்கழகங்கள் காரணமாகின.

1980ஆம் ஆண்டுக்கும் 1990ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலம், கலை இலக்கிய வளர்ச்சியில் ஒரு வரட்சி கொண்ட காலத்தன்மை நிலவியதை சகல துறைகளிலும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. யுத்த நெருக்கடிகள், இடப் பெயர்வுகள், அகதி வாழ்க்கைகள், கோரச்சம்பவங்கள், கொடிய இன நெருக்கடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிந்து போய் கிடந்த சூழ்நிலையில், இலக்கியம் பிறக்க வாய்ப்பில்லாமல் போன போதும் மெதுத்தன்மையான வளர்ச்சி, சகல துறைகளிலும் காணப்படுவது பொதுவான உண்மையாகும்.

இக்கால கவிதைகளில், பல்துறை சார்ந்த வளர்ச்சி ஏதோ ஒரு வகையில் காணப்படுவதற்கு அடையாளமாக சி.சிவசேகரம், மைக்கல் கொலின் போன்றோரின் வீச்சுக்கவிதைகளும், மறுபுறம், அஸ்ரப்பா நூர்டீன் போன்றவர்களின் நடுத்தன்மையான போக்கில் கவிதை வளர்ந்து வந்துள்ளமையும், இதே போன்றே சிறுகதை துறையின் தன்மையும் காணப்படுகின்றது. இருந்த போதிலும், இக்காலப்பகுதியில் எழுந்த யுத்த நெருக்கடிகள், இன நெருக்கடிகள், சித்திரா நாகநாதன் போன்ற தீவிர பெண் எழுத்தாளர்களை உருவாக்கிய காலமாகவும் கருத முடியும். இக்காலப்பகுதியில், வ.அ.இராசரத்தினத்தின் மூதூர் கிராமத்தின் செழுமைகளை வடித்த சிறுகதைகளையும் காணமுடிகின்றது.

நாவல் இலக்கிய துறையில், இக்காலத்தை சற்று வேறுபட்ட முறையில் தேசிய தரம் அல்லது சர்வதேச பார்வை கொண்ட நாவல்கள் எழுந்த காலமாகக் கொள்ளலாம். அதில், அ.அ. ஜெயராஜாவின் 'சேகுவரா', 'அப்பா', மற்றும் (சூ.நோபேட்) கோவிந்தனின் 'புதியதோர் உலகம்' என்பவை மிக முக்கியத்துவம் கொண்ட நாவல்களாக காணப்படுகின்றன. ஜெயராஜாவின் நாவல்கள் சேகுவரா போராட்டத்தை மையப்பொருளாகக் கொண்டு எழுந்த நாவல்களாக காணப்பட, கோவிந்தனின் நாவல் விடுதலைப்போராட்டத்தின் தார தம்மியங்களை சொல்லும் நாவலாக காணப்படுகிறது. இதேவேளை, ந.பாலேஸ்வரி, செல்வகுமார், வீ. என்.சந்திரகாந்தி போன்றவர்களின் நாவல்களும் பொது வாழ்வை சித்தரிக்கும் நாவல்களாக எழுந்துள்ளன.

2000ஆம் ஆண்டுக்குப்பின், போராட்ட வடிவங்கள், சர்வதேச முக்கியத்து வத்துடன் உலக வல்லரசுகளின் ஆலோசனைகள், பேச்சுவார்த்தைகள் போராட் டங்கள் மூலம் பெற்ற போதும் அவற்றின் தாக்கம் திருகோணமலையின் கலை இலக்கியத்தில் சொல்லக்கூடிய மாற்றங்களை கொண்டு வரவில்லை. இருந்த போதிலும், நீர் ஓட்டம் போன்ற ஒரு வளர்ச்சி மிக மெதுவாக ஊர்ந்து கொண்டு போவதை பொதுவாக அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அதிலும், கிண்ணியா, மூதூர் பிரதேசத்தின் கவிஞர்களின் பங்களிப்பு இக்காலப்பகுதியில் திருகோண மலையின் கவிதை துறையை சரியவிடாது காத்து நின்றது எனலாம்.

சிறுகதை துறையை நோக்குவோமாயின், திருமலை சுந்தா, ச.அருளானந்தம், வீ.என்.சந்திரகாந்தி, கிண்ணியா அமீரலி, கனகசபை தேவகடாட்சம், ராணி சீதரன் போன்றவர்கள் போதிய அளவில் எழுதி வந்தபோதும் தற்கால சூழ்நிலை நெருடல்களை, அனுபவ துருவல்களை இவர்களது கதைகளில் காணமுடிய வில்லை.

நாவல் துறையை நோக்கின் மீண்டும் வ.அ.இராசரத்தினத்தின் வருகை, புரட்சி பாலன், அன்வர்டீன் போன்றவர்களின் ஒரு சில நாவல்கள், பிராந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசியை போக்கியதே தவிர நிகழ்கால நிழல் வடிவங்களாக அவை அமைய வில்லை.

மேடை நாடகத் துறையிலும், நாடக இலக்கிய துறையிலும் இக்காலப்பகுதி குறிப்பாக 2000ஆம் ஆண்டுக்குப்பின், பாடசாலை நாடகங்கள் அதிசயத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளமையை, பாடசாலை தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக, இராணி ஜெகசோதி, ஆனந்தரமணன், நக்கீரன், தில்லை முகிலன், இரட்ணசிங்கம், பற்குணம், த.அமரசிங்கம், திருமலை நவம் போன்றோரின் உழைப்பினாலும், மன்றங்களான திருமலைக்கலாமன்றம், கீழைத் தென்றல் கலாமன்றம் போன்றவற்றின் பங்களிப்பினாலும், பாடசாலை நாடகங்கள் காத்திரமான வளர்ச்சியை கண்டன.

நாடக இலக்கியம் என்ற துறையில், 1887ஆம் ஆண்டு அகிலேசபிள்ளை என்பவரால் எழுதப்பட்ட கண்டி நாடகத்தில் இருந்து வளர்ச்சி ஒன்று கருக் கொள்கிறது. ஏனைய மாவட்டங்கள் போல், நாடக இலக்கியத்தின் செம்மை சான்ற வளர்ச்சி திருகோணமலையில் குறிப்பிடக்கூடியதாக இல்லாது இருந்தது. 1990ஆம் ஆண்டுக்குப் பின் பால குமார், த.அமரசிங்கம், த.பி. சுப்பிரமணியம், கா.சிவபாலன், திருமலை நவம் போன்றோர் ஆங்காங்கே எழுதிய நாடக இலக்கியங்கள் பற்றிய கட்டுரைகளை தவிர நாடக இலக்கியத்தின் நெறி சார்ந்த வளர்ச்சி, திருகோணமலை பிரதேசத்தில் குறைவாகவே இருந்துள்ளது.

2000ஆம் ஆண்டுக்குப்பின், திருகோணமலையின் கலை, இலக்கியத் துறையின் வளர்ச்சி, ஓர் மந்தத்தன்மை கொண்டதாக இருந்த போதிலும் நாவல், சிறுகதை, நாடகம், தொலைக்காட்சி, மெல்லிசை, சங்கீதம் என்ற தொகை வகைப் பட்ட கலை இலக்கியத்தின் கூட்டுமொத்த வளர்ச்சியையும் காணக்கூடிய தாகவுள்ளது. குறிப்பாக, கவிதை துறையில் மூதூர், கிண்ணியா போன்ற கிராமங்களில் இருந்து பெருந்தொகையான கவிஞர்கள் எழுத முற்பட்டதும், பல்வேறு கவிதை ஏடுகள் இக்காலப்பகுதியில் வெளிவந்தமையும், இதற்கு அடையாளங்களாகும்.

அதே வேளை, நாவலின் வரவு மிக அருந்தலாகவே இருந்துள்ளது. ஆனால் சிறுகதையில் தேவகடாட்சம், திருமலை சுந்தா, என்.சித்திரவேல், அ.ச.பாய்வா, வீ.என்.சந்திரகாந்தி போன்றோர் குறை நிரப்பும் தன்மையில் எழுதிவந்தமை, சிறுகதை இலக்கியத்தை தூக்கிப்பிடிக்கும் கைங்கரியமாக இருந்தது. ஏலவே குறிப்பிட்டது போல், நாடகத்துறை பள்ளி நாடகங்களில் தங்கியிருந்து வளர்ந் ததை அவதானிக்கலாம். தெரிந்தோ தெரியாமலோ நுலைந்து விட்ட தொலைக் காட்சி வடிவங்களின் உருவ அமைப்பும், மிக சிறிய அளவில் திருகோண மலையில் 2000ஆம் ஆண்டுக்குப்பின் வளர்ந்து வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# முன்னோடி இலக்கியங்கள்

திருகோணமலை பிரதேசத்தின் கலை, இலக்கியப் பாரம்பரியம் பற்றிய வரலாற்றுத் தேடல் என்பது, அண்மைக் காலமாக விரிவுபடுத்தப்பட்ட போதும், கனதியான ஆய்வுகளையோ, தேடல்களையோ செய்வதற்கு பல்கலைக்கழக ஆய்வாளர்களோ, புத்திஜீவிகளோ முன்வராததனாலேயே, சில வரலாற்று உண்மைகள் மூடி மறைக்கப்பட்டுவிட்டன. ஒரு சில உதிரித்தனமாக மேற் கொள்ளப்பட ஆய்வுகள் ஆழமற்றவையாகவும், குறும்பார்வை உடையன வாகவும் காணப்படுவதால், முழுமையற்ற, அதேவேளை ஆதாரமற்ற ஆய்வு களாக அவை இருக்கின்றன.

இப்பிரதேசத்தின் கலை, இலக்கியம் பற்றிய ஆய்வைச் செய்வதற்குரிய வரலாற்று ஆதாரங்களைத் திரட்டிக் கொள்வதற்குரிய இடர்பாடுகள் காரணமாக, ஒரு சிலரைத் தவிர ஏனையோர் இம்முயற்சியில் இறங்காமல் இருந்துவிட்டார் களோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

எனவே, இந்த ஆய்வை எல்லைப்படுத்த 19ஆம் நூற்றாண்டின் கடைக்கால் பகுதியில் எழுந்த இலக்கியங்களுடன் சுழிபோடுவது சுலபமாக இருக்கும் என்பதால் 19ஆம் நூற்றாண்டில் எழுந்த நவீன கலை, இலக்கிய வளர்ச்சியுடன் இவ் ஆய்வைத் தொடங்குகின்றேன்.

ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு, 19ஆம்நூற்றாண்டில் எத்தகைய காரணிகள் பின்னணியாக இருந்ததென இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறார்களோ, அத்தகைய பின்னணிகளே, திருகோணமலை பிரதேசத்தின், நவீன கலை, இலக்கிய மரபொன்று கருக்கொள்ள அடிபூண்ட காரணிகளாகவும் இருந்தன என்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இருந்தபோதிலும், அவற்றை முழுமையான காரணிகள் என்ற வகையில் சொல்லமுடியாவிட்டாலும் ஆங்கிலக் கல்வி விருத்தி, கிறிஸ்தவ மத தேவாலயங்கள், மிஷனரிமாரின் காலூன்றல், மிஷனரிப் பாடசாலைகள், சர்வதேச வர்த்தகத் தொடர்புகள், இந்துசமய அமைப்புக்கள் என்பவற்றுடன் சேர்ந்து, இம்மாவட்டத்தின் பூகோள அமைப்புக்களான, சர்வதேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தக நகரம், இயற்கைத் துறைமுகம், கோணேசர் ஆலயம், இராவணன் வெட்டு, கன்னியா வெந்நீரூற்று, கடற்படைத்தளம், பிரட்றிக் கோட்டை, கந்தளாய்க் குளம், முத்து விளையும் கிண்ணியா போன்ற இன்னோரன்ன காரணிகள், இப்பிரதேசத்தினை சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக ஆக்கித் தந்துள்ளது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருகோண மலையின் புகழை, அந்நியர் 16ஆம், 17ஆம் நூற்றாண்டிலேயே தெரிந்து வைத்துள்ளனர் என்பதனை பின்வரும் கூற்றிலிருந்து தெரிந்துகொள்ளலாம்:

ஜேம்ஸ் கோடினர் (James Cordiner) என்பவர் 'A Description of Ceylon' என்ற நூலில் பின்வருமாறு கூறுகிறார்:

> எமது இந்திய வியாபாரத்தை பாதுகாத்தற்கு திருகோணமலைத் துறைமுகம் ஒன்று மாத்திரமே, இத்தீவின் முக்கியத்துவத்தை நன்கு உணர்த்தும். எல்லாக் காலங்களிலும், உள்-வெளிச் செல்வதற்கு இலகுவான வசதிகளை உடைய திருகோணமலை, இந்தியாவிலுள்ள எமது எந்தக் கப்பற் தளத்திலும் பார்க்க, பிரித்தானிய கீழைத்தேய கடற்படையின் பொருட்சாலையாகவும், தங்கு நிலையமாகவும் இடம்பெற மிகவும் வாய்ப்பான அமைப்புக்களை உடையது. இங்கிலாந்தின் பிரதம மந்திரியான வில்லியம் பிற் (William Pitt) திருகோணமலை பற்றி கூறுகையில் 'உலகத்திலேயே அதிசிறந்த குடியேற்ற உடமை' என வர்ணித்துள்ளார். அத்துடன் 17ஆம் நூற்றாண்டுக்குரியவரான போர்த்துக்கீச பாதிரியார் குவைறோஸ், திருகோணமலை பற்றி குறிப்பிடுகையில் கீழைத் தேசத்தில் உள்ள கிறிஸ்தவர் அல்லாத மக்களின் 'ரோமபுரி' திருகோணமலை எனக் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய வரலாற்றுக் காரணிகளுடன் ஏனைய பாதிப்புக்களான மேலைத்தேச கலாசாரப் பாதிப்பு, தமிழகத்தின் வர்த்தக தொடர்பு ஆகியவையும் நேரடியாகவே வந்துசேர வழியாக அமைந்தமையினாலே தான், அவை கலை, இலக்கியத்திலும் சமச்சீரான தாக்கத்தைக் கொண்டுவந்தன. மிஷனரிமாரின் கல்விக்கூடங்கள், யாழ்ப்பாணத்தைப் போன்றோ, மட்டக்களப்பைப் போன்றோ அதிகளவில் திருகோணமலைப் பிரதேசத்தில் நிறுவப்படாமையினால், உயர்கல்வி ஆர்வம் கொண்ட மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, தமிழகம் போன்ற இடங்களுக்குச்சென்று உயர்கல்வியைப் பெற்றுக் கொண்டனர்.

இருந்தபோதிலும், மெதடிஷ்த மிஷன், கத்தோலிக்க மிஷன் ஆகிய மிஷனரிகள் தமது போதனைக்கு ஏற்றவகையிலும், தேவைக்கேற்பவும் ஆரம்ப பாடசாலைகளையும், இடைநிலைப் பாடசாலைகளையும் நிறுவினர். இவர்களைத் தொடர்ந்து, இந்து நிறுவனங்கள் ஒரு சில பாடசாலைகளை நிறுவியபோதும் அவை ஆரம்ப, இடை நிலை கல்விக்கு உதவியதே தவிர, உயர் கல்விக்கு ஏற்ற வசதிகள் கொண்டதாக அமையவில்லை. இதற்கு பின்வருவன காரணங்களாக அமையலாம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இப்பிரதேசம் வெளிநாட்டுத்தொடர்புடைய வர்த்தக நகரமாக இல்லாமை.

2. அப்போதைய சனத்தொகையில், திருகோணமலை மாவட்டத்தின் சனத்தொகை, ஏனைய தமிழ் மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாக இருந்தமை.

| ஆண்டு | மொத்த சனத்தொகை |
|---|---|
| 1834 | 19449 |
| 1881 | 22197 |
| 1891 | 25745 |
| 1901 | 28441 |
| 1911 | 29755 |
| 1921 | 34112 |
| 1931 | 37492 |
| 1953 | 83917 |

கல்வி கற்ற ஒரு மத்தியதர வர்க்கம் தலைநீட்டத் தொடங்கிய 19ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் மேற்கூறப்பட்ட காரணிகள் இம்மத்தியதர வர்க்கத்தை வெகுவாக பாதித்த நிலையில், கலை இலக்கியத்துடன் நெருங்கிய தொடர்புடைய பின்வரும் ஒரு அறிஞர் கூட்டம், இந்த நூற்றாண்டின் தமிழறிஞர்களாக திருகோணமலையில் மேற்கிளம்பினர்:

★ அறிஞர் வே.அகிலேசப்பிள்ளை (1853-1910)

★ த.கனகசுந்தரம்பிள்ளை (1863-1922)

★ த.சரவணமுத்துப்பிள்ளை

★ எஸ்.சின்னத்தம்பி

★ தம்பலகாமம் ஸ்ரீ.ஐ.வீரக்கோன் முதலியார்

★ புலவர் மா.முத்துக்குமாரு

★ அப்பாத்துரைக் குருக்கள்

★ ஸ்ரீ.இராமலிங்கப் பண்டிதர்

★ ஆசுகவி முருகையன்

★ ஆறுமுக முதலியார்

★ புலவர் சுப்பிரமணியனார்

★ இக்னேசியஸ் ஜோசப் (1899- 1980)

★ வித்துவான் சு.தம்பையாப்பிள்ளை

★ சட்டம்பி தம்பையர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கதிரித்தம்பிப் புலவர்

★ தையல்பாகர்

★ சரவணமுத்து குருக்கள்

இவ்வறிஞர்களில் ஒருசிலர் தமிழ்மொழி, வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் உடையவர்களாகக் காணப்பட்டதனால், இலக்கியத்துடன் நிறைந்த தொடர்பும், புலமையும் மிக்கவர்களாக விளங்கினார்கள். அதேவேளை, இவர்களில் சிலர் மரபுவழி வந்த கலை, இலக்கியங்களுடனேயே அதிக ஈடுபாடு உடையவர்களாகக் காணப்பட்டனர். இக்காலத்தில் வாழ்ந்த ஒருசில அறிஞர்கள், வடமொழி, தமிழ்மொழியாகிய இருமொழிகளிலும் பாண்டித்தியவாண்மைக் கொண்டிருந்தமை இப்பிரதேசத்தின் கலை, இலக்கிய மேன்மைக்குப் பங்களிப்புச் செய்தன. இவர்களின் தனித்துவமான தொண்டுகளை ஆராய்வதற்கு முன், முன்னைய மரபுவழி இலக்கியங்கள் பற்றி சிறிது நோக்குவோம்.

## I. 17ஆம் நூற்றாண்டு

திருகோணமலை, இலங்கையின் கிழக்குக்கரையில் அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இயற்கைத்துறைமுகத்துடன் கூடிய நகரமாகும். இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, திருகோணமலை புகழ் பெற்ற பிரதேசமாகவும், பல மன்னர்கள் ஆதிக்கம் செலுத்திய பகுதியாகவும் இருந்துள்ளது. பல புராணங்களால் புகழ்ந்துரைக்கப்பட்ட கோணேஸ்வரம், இப்பிரதேசத்தின் வரலாற்று மையமாக திகழ்ந்துள்ளது.

வரலாற்று ரீதியாக நோக்கின், மகாசேனன் காலத்தில் (கி.பி. 276 - 303 ) கிழக்குக் கரையில் இருந்த கோணேஸ்வரம் (கோகர்ணவிஹாரை) குறிப்பிடத்தக்க சிறப்புப் பெற்று இருக்கிறது, என்பதை 'சூளவம்ஷம்' மூலம் அறியக்கூடியதாக உள்ளது. மகாசேனன் காலத்திற்கு பிறகு, பல்லவர் காலத்தின் மூலம் திருகோண மலையின் பெருமையை அறியக் கூடியதாக உள்ளது. அதாவது, திருகோண மலைக்கு வருகைதராமலேயே ஞானசம்பந்தர் பாடிய தேவாரம் திருகோண மலையின் பெருமையை, பல்லவர்கள் அக்காலத்தில் அறிந்திருக்கிறார்கள் என்பதை தெளிவாக்குகிறது. இலங்கைக்கு ஒருபோதும் வராதவரான திருஞான சம்பந்தர், தென்னிந்தியாவில் இருந்தவாறே கோணேசர் கோயில் மகிமையை கேள்வியுற்று - இந்தியாவில் சிறப்புப் பெற்ற ஏனைய தலங்களின் வரிசையிலே வைத்து - இதன் மீது பதிகம் பாடியுள்ளார். இதிலிருந்தே பல்லவர் காலத்தில் கோணேஸ்வரர் கோயில் பெற்றிருந்த சிறப்புத் தன்மையை அறிய முடியும்.

இதன் பின்னே, சோழர்காலத்தில் திருகோணமலையின் புகழ் உச்ச நிலை பெற்றிருந்தது என்பதனை இங்கு கண்டெடுக்கப்பட்ட சோழர் கால கல்வெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

228511

டுகள் சான்றுபகர்கின்றன. சோழமன்னர்கள் அநுராதபுர இராச்சியத்தை வீழ்த்தி, பொலநறுவையை தலைநகராக கொண்டு ஆட்சி செய்தபோதும், பாதுகாப்பு நோக்கம் கருதி திருகோணமலையை தமது தலைமைப்பீடமாகக் கொண்டு, பிரதிநிதி ஒருவரை நியமித்து ஆட்சி செய்தமையை, பல்வேறு கல்வெட்டுகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. இதில் இருந்து, வரலாற்றுக்கு முன்னைய காலந்தொட்டு போர்த்துக்கீசர் காலம் வரை, திருகோணமலை பெற்றிருந்த முக்கியத்துவத்தை அறியக் கூடியதாக உள்ளது.

1529ஆம் வருடத்திற்கும் அப்பால், மிகநீண்ட வரலாற்றில் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரான்ஷியர், பிரித்தானியர் ஆகிய வெளிநாட்டு படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு, பின் சுதந்திர தேசத்தின் ஓர் முக்கியபிரதேசமாக விளங்கி வரும், இந்தப் பிரதேசத்தின் தொன்மைமிகு வரலாறு பல ஆச்சரியமான சம்பவங்களையும், மரபுகளையும், செய்திகளையும் கொண்டது.

திருகோணமலைக்கு, வரலாற்றுக்காலம் முதல் பலபெயர்கள் வழங்கி வந்துள்ளன. கோகண்ணம்,கோகர்ணம், திரிகோணமலை, திருக்குன்றாமலை, திருக்கோணமலை, கோணமலை, கோணாமலை, மச்சேந்திர பர்வதம், மச்சேஸ்வரம், தெக்கணகைலாஷம், தென்கைலாசம், முக்கோணதொடர் கடுக்கை, திருமலை என்பன அப்பெயர்களாகும்.

10344

இத்தகைய புகழ்பூத்த திருகோணமலைப் பிரதேசத்தின் கலை, இலக்கிய வளர்ச்சியின் ஆரம்பம், 17ஆம் நூற்றாண்டில் இருந்தே ஆரம்பமாகின்றது. இந்த நூற்றாண்டிலிருந்தே, மரபுவழி வந்த இலக்கியத்திற்கு வித்து இடப்பட்டுள்ளது என்பதற்கு ஆதாரமாக செகராசசேகர மன்னன் காலத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும், பண்டிதராசரால் இயற்றப்பெற்ற 'கோணாசல புராணம்', கவிராசர் என்னும் புலவரால் இ்யற்றப்பெற்ற 'கோணேசர் கல்வெட்டு', மற்றும் 'திருகோணமலைப் புராணம்', 'கரசைபுராணம்' ஆகிய மரபுவழிப் புராணங்கள் காணப்படுகின்றன. இவையே இம்மாவட்டத்தின் மூத்த, முன்னோடி இலக்கியங்களாக மதிக்கப்படுகின்றன.

இவைபோன்றே, 'குளக்கோட்டன் கம்ப சாத்திரம்', 'திருக்கோணாசல புராணம்', 'கைலாய மாலை', 'வையா பாடல்', 'கோணமலை அந்தாதி', 'திருக்கோணாசல வைபவம்', 'பெரியவளமைப் பத்தி', 'மட்டக்களப்பு மான்மியம்' ஆகியவையும் திருக்கோணேஸ்வரத்தின் மகிமையையும், மான்மியத்தையும், திருமலைச்சிறப்பையும், கூறும் நூல்களாக, கொள்ளப்படுவதுடன், இப்பிரதேசத்தின் மூத்த இலக்கியங்களாகவும் அடையாளம் காட்டப்படுகின்றன.

இப்புராணங்களில், மிகவும் பழமைவாய்ந்த வரலாற்றுப் பாடமாகவும், சான்றாகவும் விளங்கும் ஆதார நூல்கள் 'கைலாச புராணம்', 'கோணேசர் கல்வெட்டு' ஆகிய இரு நூல்களுமாகும்.

குளக்கோட்ட மன்னனுடைய காலத்திற்குப்பின், திருக்கோணேஸ்வரத்தின் சிறப்புக்களை உணர்ந்துகொண்ட சான்றோர் பலர், கோணேஸ்வரம் பற்றிய பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களை இயற்றித்தந்துள்ளனர். திருகோணமலையிலே காணப்பட்ட ஏனைய சாசனங்கள் பலவும், அவ்வாலயத்தின் புகழை எடுத்துக்கூறியிருக்கின்ற காரணத்தினால், 'கோணேசர் கல்வெட்டு' எழுந்த காலத்தில் இருந்து, அவ்வாலயத்தை பிரதிபலிக்கின்ற ஒரு தனியான இலக்கிய மரபொன்று விருத்தி பெற்றிருந்தது என்று கொள்வதற்கு 'கைலாச புராணம்', 'கோணேசர் கல்வெட்டு', 'திருகோண மலைப் புராணம்' ஆகிய மூன்று நூல்களும் சான்று பகருகின்றன.

இம்மூன்று நூல்களிலும், 'கைலாசபுராணம்' ஈழத்தில் எழுந்த புராண இலக்கியங்களில் மூத்த புராண இலக்கியமாக மதிக்கப்படுகிறது.

### தட்ஷிண கைலாச புராணம்

ஈழத்திலே 'தஷிண கைலாச புராணம்' முதல் 'திருக்கேதீச்சர புராணம்' ஈறாக சுமார் 40 புராணங்கள் வரை தோன்றியுள்ளன. இப்புராணங்களில், பெரும் பான்மையானவை தலமான்மியம் பற்றிக் கூறுவன. இதற்கு பின்வருவனவற்றை உதாரணமாகக் கூறலாம்: தஷிணகைலாச புராணம் - 1887, திருக்கரசை புராணம் - 1890, திரிகோணாசல புராணம் - 1909, கதிர்காம புராணம் - 1932.

இதுமாத்திரமன்றி, ஈழத்து அறிஞர்களால் விரத மகிமை கூறும் புராணங்கள், சமயப் பெரியோர் மீது பாடப்பட்ட புராணங்கள் எனப் பல்வேறு புராணங்கள் ஆக்கப்பட்டுள்ளன. அனைத்து ஈழத்துப் புராணங்களுக்கும், மூத்த புராணமாக 'தட்ஷிண கைலாச புராணம்' காணப்படுகிறது. இது திருக்கோணேஸ்வரம், உன்னதமான நிலையில் அமைந்திருந்த காலத்தில் எழுதப்பட்டது. திருக் கோணேஸ்வரத்தை களமாகக் கொண்டு, தலத்தின் தோற்றம், ஆதிவரலாறு பற்றிய இதிகாச கதைகளைக் கொண்டதாக இந்நூல் காணப்படுகின்றது. ஆல யத்தோடு தொடர்புடைய சமகால வாழ்க்கைகளையும், சென்றகால சிறப்பு நிலைகளையும், காட்சியாலும், கேள்வியாலும், ஏடுகள் வாயிலாகவும், பிற ஆவணங்கள் மூலமாகவும் அறிந்திருந்த மகாவித்துவான் ஒருவரால், இது பாடப்பட்டுள்ளது. இது, திருக்கோணேஸ்வரரையும், மாதுமையையும் போற்றி யெழுந்த தலபுராணமாகும்.

காப்பிய அம்சங்களைக்கொண்ட இத்தல புராணம், ஏழு சருக்கங்களையும், அந்தாதித்தொடையில் உள்ள 634 விருத்தப்பாக்களையும் கொண்டுள்ளது.

இதில் உள்ள ஈழமண்டல சருக்கம் முழுவதும் ஆசிரியரின் அறிவினையும், கற்பனை சக்தியினையும் ஆதாரமாகக் கொண்டது. ஈழ நாட்டு மலைவளம், நிலவளம் ஆதியன சுவைநயத்துடன் வர்ணிக்கப்பட்டுள்ளன.

இதில் உள்ள திருநகரச்சருக்கமானது, குளக்கோட்டன் மன்னன், கஜபாகு மன்னன் ஆகியோர் கோணேஸ்வரத்தில் ஆற்றிய திருப்பணிகளையும், கோயிலுக்குச் செய்த நிவந்தங்களையும், தானங்களையும், ஆலய ஏற்பாடுகளை யும் விரிவாக விவரிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கைலாசபுராணம்', 'கோணேசர் கல்வெட்டு'க்கு முற்பட்டது என்றும், அதன் மூலங்களில் ஒன்றாய் விளங்கியது என்றும் கருதுவதற்கு சான்றுகள் உள்ளன. இப்புராணத்தில் சொல்லப்பட்ட விடயங்களில் விளக்கமாகவும், தொடர்ச்சி யாகவும், 'கோணேசர் கல்வெட்டு' அமைகின்றது என்றும், இப்புராணம் சொல்லாத பல விடயங்கள் 'கோணேசர் கல்வெட்டில்' காணப்படுகின்றது என்றும் பேராசிரியர் சி.பத்மநாதன் கூறுகிறார்.

இந்நூல் எழுந்த காலம் பற்றியும், எழுதிய நூலாசிரியர் பற்றியும் மாறுபட்ட கருத்துக்களும், ஆய்வுகளும் காணப்படுகிறன.

திரு.கா.சிவசிதம்பரஐயர் அவர்களின் 'தஷிணகைலாச புராண'ப் பதிப்பில், இஃது யாழ்ப்பாணத்து மகாவித்துவான் சிங்கை செகராசசேகரன் இயற்றியது எனக்கூறப்பட்டுள்ளது. ஆரியச்சக்கரவர்த்தியான இவர் காலம் 1380-1414 ஆகும். இதன் பின்பு வெளிவந்த பு.பொ.வைத்திலிங்கதேசிகர் அவர்களின் பதிப்பில் (1916) பிரமஸ்ரீ.பண்டிதராசர் அருளிச்செய்தது என்று கூறப்பட்டுள்ளது. ச.கணேசையரும் பண்டிதராசர் என்றே கூறுவர்.

அகச்சான்றுகள் சிலவற்றைக் கொண்டு பார்க்கையில், பண்டிதராசர்தான் இந்நூலின் ஆசிரியர் எனத் தெரியவருகிறது.

இந்நூலை கா.சிவசிதம்பரஐயர் (1887) சென்னையில் முதன் முதலில் பதிப்பித்துள்ளார். அதன் பின்னர், 1916ஆம்ஆண்டு பு.பொ.வைத்திலிங்கதேசிகர் பருத்தித்துறை கலாநிதி இயந்திரசாலையில் பதிப்பித்துள்ளார்.

இவ்விரு பதிப்பாசிரியர்களின் கருத்துப்படி நோக்குகையில், இங்கு வரலாற்று மாறாட்டம் ஒன்று காணப்படுவதையும், அம்மாறாட்டம் நூலை இயற்றியவர் பற்றிய குழப்பத்தையும் எமக்குத் தருகிறது.

இரண்டாம் பதிப்பில் உள்ள கவிவீரராகவர் அருளிச் செய்த சிறப்புப் பாயிரத்தில் பின்வருமாறு கூறப்படுகிறது:

*இடப வான்கொடி எழுதிய பெருமான்*
*சிங்கை யாதிபன் சேது காவலன்*
*கங்கை நாயகன் கருங்கடற் சேர்ப்பன்*
*பௌவ மேற்றுயில் பராபரன் சூட்டிய*
*தெய்வ மாமுடிச் செகராச சேகரன்*
*அவனதுகாலத் தத்திரி கோணைச்*
*செப்பரும் பண்டிதராசசிகாமணி*
*என்னு நாமத் தெங்குரு பெருமான்*
*மன்னு நாற்கவியும் வல்ல நாவலனே*

கோணேசர்கல்வெட்டு பாடிய கவிராசர் இயற்றிய சிறப்புப் பாயிரத்தில் பின்வருமாறு கூறப்படுகின்றது:

*படிக்க நிகழ்த்தப் புராணா*
*கமஞ்சொல் பரம்பரையாய்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வடிக்கும் தமிழ் வல்ல*
*பண்டிதராசன் வரவித்தையே*

முதற் பதிப்பில், இந்நூலுக்கு யாழ் நல்லூர் அரசகேசரி அருளிய சிறப்புப் பாயிரம் சிறிது வேறுபட்டதாக பின்வருமாறு காணப்படுகிறது:

*செப்பருஞ் சைவ ராசபண்டிதன்*
*அந்தாதித் தொடை யடிகொடு தொடுத்து*
*நந்தா விருத்தி நவையறக் கூறின்*
*நன்னா டடைந்த நாரியார் கோமான்*

மேற்காட்டப்பட்ட எல்லாச் சிறப்புப் பாயிரங்களிலிருந்தும் இப்புராணத்தை பண்டிதராசர் என்பவரே பாடி அருளியுள்ளார் என்பது தெரியவருகிறது. பண்டித ராசர் குறித்த பேராசிரியர் ஆ.சதாசிவம் அவர்களுடைய கருத்துக்கள் மிக முக்கியமானவை. இவரது ஊர் திருகோணமலை. தென்மொழி, வடமொழி ஆகிய இரண்டையும் அறிந்த இவர், கோணேசர் ஆலயத்து அட்சகராக இருந்தார். சிங்கை செகராஜசேகர மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்கி இந்நூலை இயற்றினார்.

பண்டிதராசர், ஆரியச் சக்கரவர்த்தியான செகராசசேகரன் காலத்தவராக இருக்க வேண்டுமென மேற்காட்டிய ஆதாரங்களிலிருந்து ஊகிக்கமுடிகிறது.

இந்நூல், வடமொழியிலுள்ள 'மச்சேந்திய புராணத்தைத்' தழுவியே செய்யப் பட்டுள்ளது, என்பதனையே பாயிரச் செய்யுள் எடுத்துக்காட்டுகின்றது.

*'மாதுரிய மச்சேந்திய*
*வடபுராணத்தியல்பு மருவத்தானே'*

ஏழு சருக்கங்களைக் கொண்ட இந்நூலின் முதல் ஆறு சருக்கங்களும், ஏழாவது சருக்கமாகிய திருநகரச் சருக்கத்திலுள்ள, முதல் பதினேழு செய்யுள்களுமே வடமொழி தழுவியதாக அமைந்து காணப்படுகின்றன.

தலபுராணப்பண்பு கொண்ட இந்நூலின் முதலாவது சருக்கமாகிய இலங்கை மண்டலச் சருக்கம், வருணனை வளம் நிறைந்த நாட்டுப் பாடலாக அமைந்து காணப்படுகிறது. இருப்பினும், பெருங்காப்பிய பண்புகளான வாழ்த்து, வணக்கம், வருபொருளுரைத்தல், தன்னிகரில்லாத் தலைவன், மலை, கடல், நகர் வருண னைகள் என்பன காணப்படுவதுடன் ஏனைய பொன்முடி கவித்தல், பொழில் நுகர்தல், புனல் விளையாடல், புலவி, கலவு, தூது, செலவு ஆகிய காவிய இயல்புகளும் காணப்படுவதனால் இதனைத் தலபுராணம் என்று கூறுவதே பொருந்தும்.

இலங்கை மண்டலச் சருக்கமும், திருமலைச் சருக்கமும் காவியப் பண்பு கொண்டு அமைய, ஏனைய சருக்கங்கள் புராணப்பண்பு கொண்டு அமைந்து காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் காணப்படும் சருக்கங்களை இனி நோக்குவோம். முதல் சருக்க மாகிய இலங்கை மண்டலச் சருக்கம், வருணனை வளம் நிறைந்தது, என்பதற்கு பின்வருவதை உதாரணமாகப் பார்க்கலாம்:

*வரையெலாம் ஆரம் ஆரம்*
*வனமெலாம் நன்கார் நன்கார்*
*நிரையெலாம் சாலி சாலி*
*நிலையெலாம் கன்னல் கன்னல்*
*தரையெலாம் நீலம் நீலம்*
*தடமெலாம் நாறும் நாறும்*
*கரையெலாம் அன்னம் அன்னம்*
*கடலெலாம் ஈழம் ஈழம்*

*ஆரணம் முழக்கம் எங்கும்*
*அலைகடல் முழக்கம் எங்கும்*
*வாரணம் சொரியும் தானம்*
*மறையவர் அளிப்பார் தானம்*
*பூரணமாகும் ஞானம்*
*பொருந்திடாதது அஞ்ஞானம்*
*நாரணன் அனைய பூவை*
*நந்தன எங்கும் பூவை*

இந்நூலின் இரண்டாஞ் சருக்கம் திருமலைச் சருக்கம். நூலின் பிரதான நகராகிய திருமலை (தஷிணகைலாசம்) தோன்றிய வரலாற்றைக் கூறும். இப்படலம் கைலாசமலையில் திரிகூட சிகரமாக இருந்து வாயு தேவனால் கொண்டுவரப்பட்டு, வைக்கப்பட்ட, வரலாறு பகரும்.

இறுதி திருநகர்ச் சருக்கம் இராம இராவண யுத்தத்தின் பின், இராமபிரான் இலங்கையை விபீடணனுக்கு ஈந்து, இராவணனைக் கொன்ற பீடை நீங்க, தென்கயிலையை வணங்கி, அங்கே கோயில் அமைத்த கதையும், சோழ மன்னனான வரராமதேவன் என்பான் இத்தல வரலாறு கேட்டு, அங்கு பெரும் பொருளோடு சென்று, அதனைத் திருத்தியமைத்த வரலாறும், எஞ்சிய பொன்னை, கிணற்றில் இட்டு காவல் வைத்துச் செல்ல, அவன் புதல்வனான குளக்கோட்டன் அது கேட்டு, மேலும் பொருள் திரட்டி, கோயிலை பெருப்பித்துக் கட்டிய கதையும், அவன் மரபில் வந்த கயவாகு என்னும் அரசன், பௌத்தமத(ம்)த்தை தழுவிட, ஸ்ரீசங்கபோதி என்னும் பெயருடன் அனுராதபுரத்தில் அரசாட்சி செய்ததும், அதன்பின், ஆரியச் சக்கரவர்த்தி செகராசசேகரன், சைவம் வளர்த்த செய்தியையும் சொல்வதாக, அமைந்துள்ளது.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோணேசர் கல்வெட்டு

பண்டிதராசர் காலத்தில் வாழ்ந்தாகக் கருதப்படும் கவிராசர் எனும் புலவரால் இயற்றப்பட்டது, 'கோணேசர் கல்வெட்டு'. இது கவிராசவரோதயன் இயற்றிய 'கோணேசர் சாசனம்' எனவும் வழங்கப்படும். குளகோட்ட மன்னன், கோணேசர் ஆலயம் பற்றியும், அதனை நிர்வாகம் செய்யும் சட்டதிட்டங்கள் பற்றியும் விரிவாக கூறியுள்ள விடயங்களே, செப்பேட்டுப் பெரிய வளமைப் பத்தியிற் பொறித்து வைக்கப்பட்டிருந்தன. அந்தப் பத்தியிலுள்ள விடயங்களை தொகுத்தும், விரித்தும் கவிராசர் பாடியுள்ள பாடல்களும் உரைநடையுமே 'கோணேசர் கல்வெட்'டாகும்.

இதனை, பு.பொ.வைத்திலிங்க தேசிகர் என்பார், 1916ஆம் ஆண்டு 'தஷிணகைலாச'த்துடன் சேர்த்துப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இக்கல் வெட்டை, 'கோணேசர் சாசனம்' எனவும், 'திருகோணமலை கல்வெட்டுப் புராணம்' எனவும் குறிப்பிட்டபோதும், 'கோணேசர் கல்வெட்டு' என்பதே, நூலாசிரியரால் வழங்கப்பட்ட பெயராகும். ஏனெனில், சாசனங்களில் பொறிக் கப்பட்ட செய்திகளை பாடல்களாக எழுதும்முறையை, கல்வெட்டு என்றே சான்றோர் கூறுவர். திருக்கோணேஸ்வர பண்பாட்டுடன் வாழ்ந்த மக்களின் பண்பாட்டுக் கோலங்களையும், சமூகவழக்காறுகளையும் தன்னகத்தே கொண்டது இந்நூல். பாட்டாலும், உரையாலும் செய்யப்பட்ட இக்கல்வெட்டு இருவேறு பகுதிகளைக் கொண்டது. செய்யுள் நடையில் அமைந்துள்ள முதலாவது பகுதியும் இருபிரிவுகள் கொண்டது.

*முதலாவது பிரிவு*: திருக்கோணேஸ்வர ஆலயத்திற்கு, குளக்கோட்ட மன்னன் செய்த திருப்பணிகள்பற்றி விரிவாகக் கூறுவது.

*இரண்டாவது பிரிவு:* கயவாகு மன்னன் செய்த திருப்பணிகள் பற்றிக் கூறுவது. இரண்டாவது பகுதியான உரைநடைப் பகுதி 'மாணிக்கங்கள் வரவு' தொடக் கம், 'வரிப்பத்தார், திருச்சூசர வேட்டைத்தூது' வரை, 29 தலைப்புக்களில் உரைக்கப்பட்டுள்ளது.

செய்யுள்நடையில் அமைந்த பகுதியில் ஆலயத்தில் நிகழ்ந்த வழிபாட்டு முறைகள், கோவிற் தொழும்புகள், தொழும்பு செய்வோர் கடமைகள், அக் கால சமூக அமைப்புக்கள், பொருளாதார வாணிபத் தொடர்புகள் என்பன எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

*"கோணேசர் கல்வெட்டின் இரு பகுதிகளும் ஒரே காலத்தைக் குறிப் பவையா? ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டவையா?" என்னும் வினாக்களுக்கு விடை காண்பது அவசியமாகின்றது.

பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களால் எழுப்பப்படும். சந்தேகம் இந்நூலைப் படிக்கும் எல்லோருக்குமே இயற்கையாக ஏற்படும். இவ்வுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைப்பகுதியில் வரும் சொற்பிரயோகம், வசனநடை, செய்தித்தொகுப்பு அனைத்தும், பாடல் பகுதியின் போக்கிலிருந்து உரைநடைப் பகுதியை வேறு படுத்தி வைப்பதனை உணரக்கூடியதாகவுள்ளது.

இக்கல்வெட்டில் வரும் வாசகங்கள், திருகோணமலைப் பிரதேசத்திலுள்ள மக்கள் மத்தியில் வலுவான ஐதீகத்தை உண்டாக்கி வைத்திருப்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும்.

கோணேசர் கோட்டம், கோபுரம், மதில், மண்டபம், பாபநாசத் தீர்த்தம் ஆகியவற்றின் சிறப்புகள் இந்நூலின் காப்புச் செய்யுளுக்கு அடுத்து வரும் செய்யுள்களில் எடுத்துக் கூறப்படுகின்றன.

பிற்காலத்தில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றி ஆள்வார்கள் என்பதனை முன்பே கவி - ராஜவரோதயன் இக்கல் வெட்டில் தீர்க்கதரிசனமாகச் சொல்லி வைத்துள்ளார் என்பதனை பின்வரும் பாடல் வாயிலாக அறிந்து கொள்ளலாம்:

*சேர்ந்த பின்னர் மறையோர்கள் கோணைநாதர்*
*திருப்பூஜை வெகுகாலம் செய்யும் அந்நாள்*
*மாந்தளிர்போல் மேனியுடைய பறங்கிவந்து*
*மாகோணைப் பதியழிக்கவரும் அந்நாளில்*
*ஏய்ந்த தென்பாற் களனி மலை*
*என்றொன்று உண்டு ஆங்கு.......*

மேற்காட்டப்பட்ட பனுவலில் வரும் கருத்து, பல்வேறு பதிப்பாசிரியர்களால் பல்வேறு முரண்பட்ட கருத்து விளக்கத்துடன் கூறப்பட்டிருப்பதனை, அதனை எழுதியவர்களின் விளக்கத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். அதாவது வல்வை க.சின்னத்தம்பிப்பிள்ளை பதிப்பித்த (1887) பதிப்பினாலும், வைத்தியலிங்க தேசிகர் 1916இல் பதிப்பித்த பதிப்பினாலும், அகிலேசபிள்ளை அழகக்கோன் பதிப்பித்த(1950) பதிப்பினாலும் அறிந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு பதிப்பிலும் இடம்பெற்ற இடைசொருகல் பாடல்கள் ஒரே வகையான, ஆனால், வேறுபட்ட கால தீர்க்கதரிசனங்களைக் கொண்டவையாக இருக்கின்றன, என்பதை பின்வரும் பாடலைக் கொண்டு எடுத்துக் காட்டலாம்:

*போனபின்னர் இலங்கை*
*முற்றும் வடுகர் ஆள்வார்*
*............................*
*மாந்தளிர் போல் மேனியுடை*
*பறங்கி வந்து*
*மகாகோணைப் பதியழிக்க*
*வரும் அந்நாளில் ...........*

(பொ. வைத்தியலிங்க தேசிகர் பதிப்பு - 1916)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கோனான ராசசிங்கம்*
*வந்து தோன்றிக்*
*குவலயத்தோர் புகழ்ந்திடவே*
*ஈழ நாட்டில்*
*தானாக அரசு செய்யும்*
*பறங்கி தன்னைத்*
*தடிந்தாள்வான்.............*

(அ.அளகக்கோன் பதிப்பு - 1950)

*போன பின்னர் இங்கிலிசர்*
*இலங்கை யாள்வார்*
*புகழாகும்*
*கோணவரைநாதன் பூசைக்கு*
*ஆனவிதி தவறாமல் நடக்கும்*
*பின்னால் அணிசேரு*
*ஆலயமும் மழையும் பெய்யும்.*

(வல்வை.க.சின்னத்தம்பிப்பிள்ளை பதிப்பு - 1887)

இவ்வாறு இடைசொருகல், மாறாட்டம் நடைபெற்றிருப்பதனால் இவை சொல்லும் செய்திகள், வரலாறுகள் பற்றிய இயற்கையான சந்தேகங்களை எழவைத்த போதும், அக்கால சமுதாய நிலையைத் தெரிந்து கொள்ளக் கூடிய ஒரு பழமையான வரலாற்று நிழல் வடிவமாக, இந்நூல் மதிக்கப்படுகிறது. 17ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்த தமிழர் தம் உன்னதமான வாழ்வு முறையும், அவர்கள் போற்றிய பண்பாடுகளும், பாரம்பரியங்களும் விபரமாகச் சொல்லும் ஓர் ஆவணமாக, இந்நூல் ஆய்வாளர்களால் கருதப்படுகிறது.

இந்நூற்றாண்டுக்கு முன்னும் சரி பின்னும் சரி இத்தகையதொரு தொன்மை மிகு வரலாற்றுச் சான்றுகள் சொல்லப்படும் சான்றுடைய நூல் எதுவும், எம்மை வந்தடையவில்லை.

'கோணேசர் சாசன'த்தைக் கவிராசர் 'குளக்கோட்டு மகாராஜாவின் வேண்டுதற்படியே செய்துள்ளேன்' எனக் காப்புச்செய்யுளில் கூறியிருப்பதிலிருந்து இப்புலவர் குளக்கோட்டு மகாராஜா காலத்தவராக இருக்க வேண்டுமென்று ஊகிக்க முடிகிறது. ஆனால், பண்டிதராசர் இயற்றிய 'தஷிணகைலாச புராண'த்திற்குச் சிறப்புப்பாயிரம் அளித்தவர் இவர் என்றால் 'சிங்கைச் செகரராசசேகரரின் வேண்டுகோளுக்கிணங்க தஷிணகைலாச புராணத்தைப் பாடியுள்ளேன்' என்று பண்டிதராசர் கூறியிருப்பதிலிருந்து கவிராசர் வாழ்ந்த காலமும், செகராசன் வாழ்ந்த காலமும் ஒரே காலமாக இருப்பின், இங்கு வரலாற்றுக் குளறுபடியொன்று வருவதைக் காணலாம். ஏனெனில், பண்டிதராசர் செகராசசேகர மன்னன் வேண்டுதற்படி பாடியிருப்பதாகக் கூற, கவிராசர், 'நான் குளக்கோட்டு மகாராஜா வேண்டுதற்படி பாடியுள்ளேன்' என்று கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருப்பதனால், இவ்விருவரும் ஒரே காலத்தவராக இருக்க முடியாது என்றே, கொள்ள வேண்டும்.

இல்லையெனில், கவிராசர் என்ற பெயருடன் இரு வேறுபட்ட காலத்தில், இரு வேறுபட்ட புலவர்கள் வாழ்ந்திருக்கலாம். ஏனெனில், 'வையாபாடல்' எனும் நூலை, கவிராசர் எனும் புலவரே இயற்றியுள்ளார். "மேற்படி இரு நூல்களுக்கும் நெருக்கமான தொடர்பு காணப்படுகிறது" எனக் கலாநிதி. க.செ.நடராசா, 'தனது ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சி'யில் (பக்கம்-13) குறிப்பிட்டுள்ளார். அவரின் கருத்துப்படி, 'வையாபாடல்' இயற்றிய புலவரும், 'கோணேசர் கல்வெட்டை' இயற்றிய புலவரும் ஒருவராகவே இருக்க வேண்டும். வையாபுரி ஐயர் என்ற புலவருக்கே பிற்காலத்தில் (வையாபாடல் எழுதியதன் பின்) கவிராசர் என்ற விருதுப் பெயர் அளிக்கப்பட்டிருக்கலாமென்று, நடராசா கருதுகின்றார்.

எவ்வாறு இருப்பினும், திருகோணமலைமலையின் தொன்மைமிகு இலக்கிய ஆவணமாக விளங்குவது கோணேசர் கல்வெட்டு ஆகும். இந்நூலின் மூலம், வன்னிமையார் என்று அழைக்கப்படுகின்ற குலங்குடிகளின் கடமைகளும், தொழும்பார்களின் கடமைகளும், விதிமுறைகளும் மிக விரிவாகக் கூறப் படுவதுடன், திருமணம், இறப்புப் போன்ற நிகழ்வுகளின் போது தொழும்பர்கள் செய்ய வேண்டிய கடமைகள் வரையறை செய்யப்பட்டு இருக்கின்றன. இவை தவிர குளக்கோட்டன் இந்தியாவிலிருந்து குடிமக்களை கொண்டு வந்து குடியேற்றி, வயல்களையும், குளங்களையும் உண்டாக்கி, வேளாண்மையை விருத்தி செய்தான் என்றும் இக்கல்வெட்டின் மூலம் அறியக் கூடியதாக வுள்ளது.

## III. 18ஆம் நூற்றாண்டு

### திருகோணமலை புராணம்

18ஆம் நூற்றாண்டில் சைவசந்தானப் புலவர் ஒருவரால் பாடப்பெற்ற நூல் 'திருகோணமலைப் புராணம்'. இது, 'திரிகோணேசர் புராணம்' என்றும் அழைக் கப்படுகிறது. இந்நூலை யாழ் வண்ணை மாநகரைச் சேர்ந்த பரத்துவாசி ஆ.சண் முகரத்தினம் என்பார் 1909ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார். இருபது படலங் களையும் 1491 செய்யுள்களையும் கொண்டு அமைந்ததாக ஊகிக்கப்படும் இப்புராணம், யாரால் எந்தாண்டு எழுதப்பெற்றது என்பதனை திட்டவட்டமாக நிர்ணயிக்க முடியாதுள்ளது. இதனை, மாசிலாமணி முத்துக்குமாரு என்பவர், தமது கையெழுத்துடன் ஏட்டுப் பிரதியாக வைத்திருந்தார் என்று கூறப் படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் போலவே, 1845ஆம் ஆண்டு சரவணமுத்துப் புலவர் என்பார். 'திருகோணமலைக் குறவஞ்சி' என்னும் நூலை இயற்றியுள்ளார் என்ற குறிப்புக்கள் கிடைத்துள்ளபோதும், ஆதாரங்கள் அருமையாகவே உள்ளன.

**திருக்கரசை புராணம்**

18ஆம் நூற்றாண்டில், சந்தானப் புலவர் ஒருவரால் பாடப்பெற்றதாகக் குறிப்பிடப்படும் இப்புராணம், யாரால் பாடப்பெற்றது என்பதற்குத் தெளிவான ஆதாரங்கள் இல்லை. இப்புராணத்தை முதன் முதல் அச்சுவடிவுக்கு கொண்டு வந்த அறிஞர் வே.அகிலேசபிள்ளை என்பார், 'உமாபதி சிவாசாரியார் பரம்பரையில் வந்த ஒருவரால் பாடப்பட்டிருக்கலாம். ஆனால், இப்புராணம் செய்தவர் யார் என்பது புலப்படவில்லை", என 1891ஆம்ஆண்டு வைகாசி மாதம் இந்நூலை முதன் முதல் சுன்னாகம் அ.குமாரசாமி புலவரின் பொழிப்புரையோடு பதிப்பித்த போது குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அவர் குறிப்பின்படி, கொட்டியாபுர வன்னிமையான ஸ்ரீமான் த.முத்துக்குமாரபிள்ளையவர்கள் "இப்புராணம், ஏட்டுப் பிரதிகளில் இருந்தால் சிதைந்து போகும். ஆதலால் அதனைப் பரிசோதித்து உரையோடு அச்சிட்டுத் தரல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கமைய பதிப்பித்துள்ளேன்" என்று முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இதன் இரண்டாம் பதிப்பை, 1975ஆம் ஆண்டு மூதூர் கட்டைபறிச்சான் இந்து இளைஞர் மன்ற வெளியீடாக, எழுத்தாளர் வ.அ.இராசரத்தினம் அவர்கள் உரை எழுதிப் பதிப்பித்துள்ளார்.

இப்புராணத்தினை இயற்றியவர் பெயர் தெரியாத போதும், இயற்றியவர் நூற் பெயர் கொண்டு 'கரசைப்புலவர்' என்ற காரணப் பெயரில் அவர் அழைக்கப் படுகின்றார்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் பகுதியில் அமைந்துள்ள கரசைப் பகுதிக்கு ஓடிவரும் மகாவலிகங்கைக் கரையில், கரசை எனும் பகுதியில் எழுந்தருளி இருக்கும் சிவன் கோவிலின் வரலாற்றையும், மகாவலிகங்கைத் தீர்த்த மகிமையையும், அழகிய பாடல்களில் இந்நூல் கூறுகின்றது. கரசைப் பகுதியை, 'அகத்தியத் தாபனம்' என்றும் பெருமையாக அழைப்பர். இந்த அகத்திய தாபனம், அகத்தியரால் நிறுவப்பட்டதாக சமய வரலாறுகள் கூறுகின்றன.

கரசை சிவன், ஆடியமாவாசை தினத்தன்று தீர்த்தமாட மகாவலி கங்கைக் கரைக்கு எழுந்தருளுவார். தீர்த்த ஸ்நானம் செய்யும் பொருட்டு திருகோணமலைக் கிராமங்கள் பலவற்றிலிருந்து, பெருந்திரளான மக்கள் அங்கு கூடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடியமாவாசை தினத்தில் தீர்த்தம் ஆடவருவோர், சிவனின் அருள் வேண்டி, கூடும் மக்கள் முன், இப்புராணத்தைப் பாடவல்ல புலமைமிக்க சான்றோர், பாடல்களைப் பாடி பயன் கூற, பக்தர் கேட்டு, இன்புறும் நெடுநாள் வழக்கம், இங்கு காலங்காலமாக இருந்து வந்துள்ளமையினால், பல முதிய வர்களுக்கு இப்புராணம், மனப்பாடமாக இருந்துள்ளது என்பதை அறியக்கூடிய தாகவுள்ளது. 170 விருத்தப்பாக்களினால் பாடப்பெற்ற இப்புராணம் இலங்கைச் சருக்கம், கங்கைச் சருக்கம், தாபனச் சருக்கம், பூசைச்சருக்கம் என நான்கு சருக்கங்களைக் கொண்டதாக காணப்படுகிறது.

மகாவலி கங்கையின் தீர்த்த மகிமையைப் புகழ்ந்து பாடும் இப்புராணத்தில் வரும், பின்வரும் பாடல், மகாவலிகங்கை நதியின் மகிமையையும், அதன் பெருமையையும் அழகுற எடுத்துச் சொல்கிறது:

*மண்ணில் சிறந்த மகாவலி கங்கை*
*வளர்புனல் நிரந்தரம் ஆடினால்*
*கண்ணினிற் காணில் உலகிலன்றும்*
*உகைப்படு பாதகங்கழியும்*
*நண்ணுதற் கரிதாம் இப்பழந் தீர்த்தம்*
*நாவினால் நவிற்றலும் நன்றாம்*
*எண்ணினிற் கருதல் கண்டவர் தம்மை*
*கண்டிடல் கேட்டல் இனிதே*

“இப்புராணத்தில், ஈழநாட்டைப் பற்றியும், அதன் வளநதியான மகாவலிகங்கை பற்றியும் அமைந்துள்ள செய்யுள்களுக்கு ஈடாக, ஈழத்தமிழ் இலக்கியப் பரப்பிலே வேறெதுவும் இல்லை என்று சொல்லக் கூடிய அளவுக்கு, நேர்த்தியான பாடல்களைக் காணலாம்” என வ.அ. தனது முன்னுரையில் குறிப்பிட் டுள்ளார்.

*‘கடலெல்லாம் களி நல்யானை*
*கரையெலாம் பவளக் குப்பை*
*நாடெல்லாம் இரத்னராசி*
*நகரெல்லாம் நல்லோர் சங்கம்*
*வீடெல்லாம் செம்பொற் கூரை*
*வெளியெலாம் செந்நெற் குன்றம்*
*காடெல்லாம் மஞ்சையீட்டம்*
*கரையெலாம் கழுநீர்ப்போது’*

இந்நூலிலுள்ள இலங்கைச் சருக்கம் என்ற பகுதியில்வரும் செய்யுள்களுக்கும், திருத்தொண்டர் புராணத்திலுள்ள நாட்டு வருணனைச் செய்யுள்களுக்கும் இடையே, ஒத்ததன்மை காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை, ஓர் தலபுராணம் என்றே கொள்ள வேண்டும். ஏனெனில், இப்புராணம் சூதமுனி அருளிச் செய்த வடமொழிப் புராணத்தைத் தழுவிச் செய்யப்பட்டதென புராண வரலாறு கூறும் பகுதியில் கூறப்பட்ட போதும், தழுவப்பட்ட நூலின் பெயர் குறிப்பிடப்பட வில்லை. எவ்வாறு இருந்தபோதும், தலபுராணங்களின் பாதிப்பை, இந்நூலில் வரும் கதைப்பகுதி வாயிலாகவும், செய்யுள்கள் வாயிலாகவும் உணரக் கூடியதாகவுள்ளது.

### வெருகல் சித்திரவேலாயுதர் காதல்

வெருகல் சித்திரவேலாயுதர் காதல்' என்னும் நூலைத் திருகோணமலை தம்பல காமத்தைச் சேர்ந்த வேளாளமரபில் உதித்த ஐயப்பெருமாள் மகன் வீரக்கோன் முதலி என்பவர் (1886) இயற்றினார் என பாயிரக்கண்ணிகள் பகரும். இந்நூலை, திருகோணமலை ஸ்ரீலஸ்ரீ.ந.கதிர்காமத்தம்பி அவர்கள் கேட்டுக்கொண்டபடி திருகோணமலையைச் சேர்ந்த வே.அகிலேசபிள்ளை அவர்கள் பரிசோதித்து, 1906ஆம் ஆண்டு சென்னை அச்சு இயந்திரசாலையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

421 கண்ணிகளைக் கொண்ட இந்நூல், திருகோணமலைக்குத் தென்பாலுள்ள வெருகல் பகுதியில் எழுந்தருளியிருக்கும் சித்திரவேலாயுத சுவாமியின் மீது பாடப்பட்டதாகும். சித்திரவேலாயுதர், தெருவில் உலாச் செல்வதும், அப்போது அவரைக் கண்ட சேயிழை காதல் கொண்டதாகவும், அம்மங்கைக்குக் குறத்தி குறி சொல்லியதும், அவள் தன்வீடு சென்று கிளியைத் தூது அனுப்பியதும், வேலாயுதர் பூமாலை ஈந்ததும், பாவையவள் அதனை வாங்கியதும் ஆகியன இந்நூலில் கதையாகக் கூறப்படுகின்றது.

இந்நூல், உலாவகை பிரபந்தத்தையொத்த பண்புகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளதை, இதன் பாடல்கள் மூலம் கண்டு கொள்ளலாம்.

கண்டி நகராண்ட ராஜசிங்கன் புகழும், அவனின் சைவசமயப் பற்றும் கூறப்படுவதால் இந்நூல் கண்டி ராஜசிங்கன் காலத்தில் செய்யப்பட்டதென எண்ண வேண்டியுள்ளது. இரண்டாம் இராஜசிங்கனே இக்காலப் பகுதியில் (1635-1687) கண்டியிலிருந்து அரசாண்ட மன்னனாவான்.

1. *கண்டி நகராளுங் கனக முடி ராசசிங்கன்*
   *தெண்டவிடும் போதெனது சேதியை நீ*
   *சொல்லாததை............*

2. *இன்னோர் பாடலில் ................*
   *எண்டிசையும் ஏத்தும் இரவிகுலத்து உதித்தோன்*
   *கண்டிநகராளும் கவினுலவு ராஜசிங்கன்*
   *கூரிய கைவாளால் குவலயத்தில் ஒன்னலரை*
   *சீருடனே தானரிந்து செங்குருதி ஆற்றினிடை....*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
விசேட சேர்க்கைப் பகுதி



'ராஜசிங்கன் புகழ் பாடும் இப்பாடல்களால் குறிக்கப்படும் மன்னன் இரண்டாம் இராஜசிங்கன் எனக்கொண்டால், இவன் ஆட்சிக் காலத்தில் இவனோடு போர் புரிந்து கொண்டிருந்த போர்த்துக்கேயரைப் பற்றியோ, ஒல்லாந்தரைப் பற்றியோ குறிப்புக்கள் இந்நூலில் எங்குமே வராதது வரலாற்றுச் சிக்கலைத் தந்து நிற்கிறது. எனவே, இந்நூலில் புகழ்ந்து உரைக்கப்படும் ராஜசிங்கன், முதலாம் ராஜசிங்கனா? இரண்டாம் ராஜசிங்கனா? எனச் சந்தேகிக்க வேண்டியுள்ளது.'

ஏனெனில், ராஜசிங்கன் என்ற பெயரில் வேறு பலரும் பின்பு ஆட்சிக்கு வந்தபோதும், அவர்கள் ஆட்சிக் காலத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்கள் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் இருந்தமையால், வெருகல் பகுதிக்குச் சென்று வணங்கத்தக்க சூழ்நிலை அவர்களுக்கு இருக்க வில்லை என்பதே உண்மை. ஆகவேதான், இந்நூலில் புகழப்படும் ராஜசிங்கன் யாரென வினா எழுகின்றது.

228511
10344

## கோணமலை அந்தாதி

சு.ஆறுமுகம் என்னும் புலவரால் இயற்றப் பெற்றது(1806) 'கோணமலை அந்தாதி' என்பதனைக் கலாநிதி ஆ.சதாசிவம், பண்டிதர் இ.வடிவேலு, பண்டிதர் பீதாம்பரனார் போன்றோருடைய ஆய்விலிருந்து தெரியவருகிறது. ஆனால், இந்நூல் எக்காலத்தில் எழுதப்பெற்றது? இதனை எழுதிய புலவர் எக்காலத்தைச் சேர்ந்தவர் என்ற வரலாற்று ஆதாரங்களைத் தேடுவது கடினமாகவேயுள்ளது. பண்டிதர் இ.வடிவேலு அவர்கள், "திரு.அ.அழகக்கோன் என்பார் திரட்டி வைத்திருந்த ஏட்டுப் பிரதிகளில் இருந்து இதனைக் கண்டெடுத்தேன்" என்று கூறியுள்ளார். அவர், இன்னோர் இடத்தில் உப்புவெளி சின்னத்தொடுவாய் சித்திவிநாயகர் கோவில் வரலாற்றை அறிய உதவிய வி.சின்னப்பு ஐயா. 'தனது பரம்பரையில், ஆறு தலைமுறைக்கு முன் இருந்த புலவர் தான், மேற்படி நூலை இயற்றிய சுப்பிரமணியம் ஆறுமுகப் புலவர்' என்று கூறியுள்ளதாகக் குறிப்பிடு கின்றார்.

இச்செய்திகள் எல்லாம், ஐதீகம்போல் இருக்கிறதேயொழிய உண்மை வரலாற்றை அறிய உதவுவதாகவில்லை. பொதுவாகப் பார்க்கின்ற போது, 'திருக்கரசை புராணம்', 'வெருகல் சித்திரவேலாயுதர் காதல்', 'திருகோணமலைப் புராணம்', 'கங்கைக் காவியம்', 'குறுஞ்சாமுனைக் காவியம்' போன்ற நூல் களுக்கும், இதற்குமிடையில் செய்யுள் நடையிலும், கதைகூறும் பாங்கிலும் ஒத்ததன்மையொன்று காணப்படுவதால், மேற்படி நூல்கள் எழுந்ததாகக் கருதப்படும் 18ஆம் நூற்றாண்டில் தான் இந்நூலும் எழுந்திருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு.

1624ஆம் ஆண்டு கோணேசர் கோயில் போர்த்துக்கீசத் தளபதியால் இடிக்கப்பட்டதன் பின்னர், கோணேசர் பாரம்பரியத்தைத் தழுவிப் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீகோண... நூலகம்
... பிரதேச செயலகம்



புராணங்களும், நூல்களும் எழுந்தன. அதேபோலவே பழம் பெருமை கூறும் பாங்கில் இயற்றப்பெற்ற இவ்வந்தாதியும், கோணேர் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அகப்பொருள் மரபு தழுவி, கட்டளைக் கலிப்பாவில் (நூறு செய்யுள்கள் கொண்டு) பாடப்பட்டுள்ளது.

அந்தாதி எனும் பிரபந்த வடிவம், சங்கம்மருவிய காலத்தே தோற்றம் பெற்ற போதும், அது பூரண செல்வாக்குப் பெற்ற காலம் நாயக்கர் காலமாகும்.

அந்தாதிபாடுதல் என்பது, செய்யுள் ஒன்றின் இறுதியடியின் சீரோ, அசையோ, எழுத்தோ, சொல்லோ அடுத்த செய்யுளுக்கு முதல் அடியாக அமைவது.

தலைவி ஒருத்தி, பிரிவுத்துயர் ஆற்றாது வருந்தும் பாடலையொத்த இந்த அந்தாதியில், கோணைநாதனை நினைந்துருகும் பாங்கில் பாடப்பட்டிருக்கும் அழகைப் பின்வரும் பாடல்கள் வாயிலாக அறியலாம்:

*'இறைக்கா லமும் பிரிந்துய்யா*
*ணளினத் தெழிலைஞ்சே*
*ரறைக்கா லருஞ்சிறை யாற்றி*
*யணையுமகனதி வாய்க்*
*குறைக்கா லனவயற் கோணா*
*சலத்துக் குடிலமிசை*
*பிறைக்கால முண்ட தொத்தாளு*
*ணர் பேதைப் பெருஞ்சுடரே'*

*'சுடர் மூன்று எனும் விழி சூலம்*
*சிலைவசி தொல் படையூன்*
*விட மூனுடையுரி வெண்டலை*
*அம்புலி வெள்ளெருக்குப்*
*படமூன்று அரவம் பணி பிடி*
*அன்னமின் பாரியுறை*
*இடமூன்று கோணாமலை*
*யூர்தி யேறெமதீசனுக்கே.'*

மேலே காட்டப்பட்ட ஆதாரங்களிலிருந்து மரபுவழிவந்த தமிழ் இலக்கிய வளர்ச்சியொன்று, திருகோணமலையில் பண்டிதராசர் காலத்திலிருந்தே வளர்ந்து வந்துள்ளமையை அறியக் கூடியதாகவுள்ளது.

இந்த மரபுவழித்தன்மை, 19ஆம்நூற்றாண்டின் முற்பகுதி வரை செல்வாக்குக் கொண்டு காணப்பட்டதையும், இக்காலப் பகுதியில் வாழ்ந்த தமிழறிஞர்கள் பன்மொழிப் புலவர்களாகவும், மரபு வழிப்பட்ட இலக்கியங்களான அந்தாதி, புராணம், பிள்ளைத்தமிழ், உலா, தூது, ஊஞ்சல் போன்ற பிரபந்த வடிவங்களைப் பாடுவதில் தேர்ச்சியும், புலமையும் கொண்டு விளங்கினார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனையும் இக்காலப் பகுதியில் திருகோணமலைப் புலவர்களால் பாடப்பட்ட 'கோணவரைப் புராணம்', 'கரசை புராணம்', 'திருக்கோணமலை அந்தாதி', 'திருக் கோணமலை மும்மணிமாலை', 'திருமால் பதிகம்', 'விசாலாட்சிஅம்மன் கலி வெண்பா' ஆகிய நூல்களால் அறிந்து கொள்ளலாம். இப்பிரபந்தங்களில், நாயக்கர் கால இலக்கியங்களின் விசாலிப்பும், போக்கும் விரவி நிற்பதையும் காணலாம்.

நாயக்கர் கால இலக்கியங்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய பெருமை பேசுவது போலவே, திருகோணமலையிலுள்ள தொன்மை கொண்ட ஆலயங் களான திருக்கோணேஸ்வரம், தம்பலகாமம் ஆதி கோணேஸ்வரர், கந்தளாய் சோழீஸ்வரர் ஆலயம் ஆகியவற்றின் பெருமை பேசுவனவாக மேற்கூறிய பிரபந்தங்கள் விளங்கின என்பதற்கு உதாரணமாக, சுப்பிரமணியர் ஆறுமுகம் என்பார்(1806) இயற்றிய 'திருகோணமலை அந்தாதி'யில் வரும் பின்வரும் பாடலை உதாரணமாகத் தருகின்றேன்.

*பிடியன்ன மென்னடைப் பெண்ணர*
*சேயுணர் பேரரவின்*
*வடிவன்ன காந்தளலர்ந்த*
*வனமயி லாடியவாற்*
*கொடி மன்னு தென்கயிலாய*
*ரிறைபுரி கோலமொடே*
*நொடிதன்னி லெய்து வரஞ்சலை*
*வேழ்புரி நோவுமின்றே* (5)

*கருமந்தி வாயிற் கடுவனன்*
*மாங்கனி கையினிடுங்*
*கடுமந்தி கண்படு காக்கயி*
*லாயரைக் கண்டிறைஞ்சார்*
*கருமந்தி ரிபுசெயும் பானா*
*டலுயிர் கைக்கொளவுட்*
*கருமந்தி கணெதிர் காலையென்*
*சொல்வர் கருத்துரையே.* (6)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

## III. 19ஆம் நூற்றாண்டும் நவீன கலை இலக்கியமும்

திருகோணமலையை சேர்ந்த மரபுவழி தமிழ் அறிஞர்கள் இலக்கியத்துக்கு ஆற்றிய தொண்டு பற்றி இதுவரை நோக்கினோம். இனி 19ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலிருந்து ஏற்பட்ட நவீன கலை, இலக்கிய மலர்வு பற்றி நோக்க முனைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூற்றாண்டின் நவீன கலை இலக்கியத்தை, திருகோணமலையில் அறிமுகம் செய்த முன்னோடிகளாக அறிமுகமானவர்கள், மரபுவழிவந்த தமிழ் அறிஞர்களாக காணப்பட்டபோதும், அவர்கள் நவீனத்தை கைநீட்டி வரவேற்கும் புத்தி ஜீவிகளாகவும் விளங்கினார்கள். அந்தப் பரம்பரையில், பெயர் குறிப்பிடக் கூடிய அறிஞர்களாக, வே.அகிலேசபிள்ளை, தி.த.கனகசுந்தரம்பிள்ளை, தி.த. சரவணமுத்துப்பிள்ளை, எஸ்.இன்னாசித்தம்பி, அ.அழகக்கோன், மா. முத்துக் குமாருப் புலவர், தையல்பாகர், மா.பீதாம்பரனார் ஆகியோரும் இவர்களுக்கு சற்றும் முந்திய காலத்தவர்களான புலவர் வை.சோமாஸ்வித்துவான், சு.தம் பையாபிள்ளை, சட்டம்பி தம்பையா, சரவணமுத்துக்குருக்கள், கதிரித்தம்பிப் புலவர் போன்ற அறிஞர்களும் விளங்கினார்கள்.

தமிழ், வடமொழி ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் கொண்ட இவர்கள், இலக்கியப் பரீட்சயமும், நவீன கலை இலக்கியம் பற்றிய உணர்வும் கொண்டவர்களாக காணப்பட்டார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் திருகோண மலையின் நவீன கலை இலக்கியத்திற்கு ஆற்றிய தொண்டு எத்தகையது என்பதனை தனித்தனியாக நோக்குவோம்.

### வே.அகிலேசபிள்ளை (1853 - 1910)

பழந்தமிழ் இலக்கியங்களில் பாண்டித்தியமும், சைவத்தமிழில் ஆழ்புலமையும் நிரம்பப் பெற்ற அகிலேசபிள்ளை திருகோணமலையில் சைவ ஆசாரமுடைய கார்கார்த்த வேளாளர் மரபில், பெரிய இராசகோன் முதலியாரின் ஐந்தாவது வழித்தோன்றலாகிய வேலுப்பிள்ளை என்பவருக்கு ஏக புத்திரனாக 1853இல் பிறந்தார்.

குமாரவேலுப்பிள்ளை என்னும் நல்லாசிரியரிடம் இலக்கண இலக்கியங் களையும், தையல் பாகப்பிள்ளை என்பவரிடம் தமிழையும், ஆங்கிலத்தையும் கற்றுத் தேர்ந்து, ஆசிரியர் தொழிலை தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

தமிழ்ப்புலமையும், சமயஞானமும், சைவத்தொண்டும் நிரம்பப் பெற்று, ஸ்ரீமானாக விளங்கிய இவர், ஆசிரியராக இருந்து, அதிபராகப் பதவி உயர்வு பெற்று, 11 ஆண்டுகள் கடமையாற்றினார். சமயத் தொண்டை, மனங்கொண்டு, திருகோணமலையிலுள்ள வீரகத்திப்பிள்ளையார் கோவில், சிவன்கோவில் ஆகியவற்றுக்கு தர்மகர்த்தாவாகவும் இருந்த காலத்தில் பின்வரும் நூல்களை இயற்றியுள்ளார்: 'கோணை நாயகர் பதிகம்', 'கந்தசுவாமி கலிவெண்பா', 'சிறைவிடு பதிகம்', 'அடைக்கலமாலை', 'விசாலாட்சியம்மை பதிகம்', 'நெஞ் சாள் மாலை', 'வெருகல் தரிசனம் பத்து', 'கண்டி நாடகம்'.

இவ்வறிஞர் பல நூல்களையும் பதிப்பித்துள்ளார். திருகோணமலை பிரதேசத் தின் பழந்தமிழ் ஏடுகளை நூலாக்கும் பேரார்வத்துடன் இரவு பகலாக ஏடுகளை தேடிச் சேர்த்து, பதிப்பித்தமைக்கு மூலகாரணமாக அமைந்தது ஆறுமுகநாவலர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சி.வை.தாமோதரம்பிள்ளை போன்றவர்களின் சேவையாகும். இவர் பதிப்பித்த நூல்களாவன: 'கரசைபுராணம்', 'சித்திரவேலாயுதர் காதல்', 'நரேந்திரசிங்கன் பள்ளு', 'கோணேசர்கல்வெட்டு', 'திருகோணமலைபுராணம்'.

இவ்வறிஞர் இயற்றிய, பதிப்பித்த நூல்கள் வாயிலாக இவருக்கு பதிகம், வெண்பா, பள்ளு போன்ற பிரபந்தங்கள் மீதுள்ள ஈடுபாட்டையும், ஆற்றலையும் அறிந்து கொள்ளலாம்.

புலவர்.வை.சோமாஸ்கந்தர் கருத்துப்படி, இவர் 21 நூல்களை எழுதியுள்ளார் எனத் தெரியவருகிறது. மரபு வழிப்பட்ட இலக்கியச் செம்மலாக இவர் விளங்கிய போதும், நவீனகலை இலக்கிய வடிவங்களைக் காலத்தின் தேவைகருதி கைநீட்டி வரவேற்ற ஒரு முன்னோடியாக விளங்கினார் என்பதனை, இவர் இயற்றிய 'திருகோணாசல வைபவம்' (1889) என்னும் வசனநூல் மூலம் அறிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது.

அகிலேசபிள்ளை அவர்கள், 'கண்டிநாடகம்' என்னும் கூத்தை 1887இல் எழுதியுள்ளார். இதுவே, திருகோணமலையில் எழுதப்பெற்ற முதலாவது நவீன கூத்தாகும். இது நாடகம் எனத் தலைப்பிட்டிருந்த போதும் இதனை கூத்து எனக் குறிப்பிடுவதற்குக் காரணம், கூத்துக்குரிய மரபுவழித் தன்மையையும், பண்பையும் இது கொண்டிருப்பதனாலாகும்.

## தி.த.கனகசுந்தரம்பிள்ளை (1863 - 1922)


தி.த. கனகசுந்தரம்பிள்ளை

19ஆம் நூற்றாண்டின் மரபுவழி அறிஞர்களாகக் கருதப் படும் அறிஞர்களில் அகிலேசபிள்ளையுடன் சேர்த்து மதிக்கப்படவேண்டிய இன்னோர் அறிஞர் தி.த.கனக சுந்தரம்பிள்ளை அவர்கள். திருகோணமலை தம்பி முத்துப்பிள்ளையின் மகனாக 1863 ஆவணி 24ஆம் திகதி பிறந்த இவர், 17வயது வரை தனது ஆரம்பக் கல்வியை திருகோணமலையில் முடித்துக் கொண்டு, மரபுவழிப்பட்ட கல்வியை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அறிஞர்களான கதிரவேற்பிள்ளை, கணேச பண்டிதர் ஆகியோரிடம் பெற்றுக் கொண்டார். அதன்பின்னர், 1880ஆம் ஆண்டு சென்னை சென்ற இவர், உயர்கல்வியை செல்வநாயகர் மத்திய பாடசாலையிலும் அதன்பின்னர், பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்று பி.ஏ. பட்டத்தையும், பிரசிடன்சி கல்லூரியில் பி.எல். பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். தனது பட்டப் படிப்பில் தமிழ், தத்துவம் ஆகிய பாடங்களைக் கற்றுக் கொண்டதனால் தமிழ் இலக்கண, இலக்கியங்களில் ஆழ்ந்த புலமையும் சுவை நாட்டமும் உடையவராக விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலம், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் மிக்கவராக காணப்பட்டமையினால், இவருக்கு 'பல்கலைக்குரிசில்', 'ஆரிய திராவிட ஆங்கிலப்பண்டிதர்' என்ற சிறப்புப் பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கலைமாணிப் பட்டம் பெற்ற பின்பு, வேலையற்ற பட்டதாரியாக இருந்த போது சிற்றூர் என்னும் கிராமத்திலுள்ள பாடசாலையொன்றில் தலைமை யாசிரியராக கடமைபுரிந்து, அதன் பின்னர், நுங்கபாக்கம் என்னும் ஊரிலுள்ள செயலாளர் அலுவலகத்தில் கணக்காளராகக் கடமையாற்றியுள்ளார். மேற்படி உத்தியோகம், இவரின் இலட்சியத்துக்கோ, ஆசைக்கோ தீனிபோடாத காரணத் தினால் கவலைப்பட்டுக் கொண்டிருந்த வேளையில்தான், இவரின் ஆங்கிலப் புலமையை அறிந்துகொண்ட சென்னை சைதாப்பேட்டை பயிற்சிக் கல்லூரி, இவருக்கு ஆங்கில ஆசிரியர் பதவியைத் தந்தது.

இப்பதவிகூட அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. தானொரு தமிழ்ப் பேராசானாக வரவேண்டுமென்ற கனவு அவருக்கு நீண்ட நாட்களாக இருந்தது. சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பதவியை இவருக்கு வழங்கிய போதுதான், அவர் பெருமகிழ்ச்சி அடைந்தார். இக்கல்லூரியின் ஊடாக, இவரின் ஆற்றல் தெரியவரவே தமிழகத்தின் பிரபல்ய கல்லூரியான பச்சையப்பன் கல்லூரி, இவரை அழைத்து, தமிழ்ப்பேராசிரியர் பதவியை வழங்கி, கௌரவித்தது. தமிழ்ப்பேராசிரியர் பதவி கிடைத்த பின்பே, இவரின் உண்மையான ஆற்றல், புடம் போட்டுக் காட்டப்பட்டது.

போர்த்துக்கீச கலாசாரமாய் விரவிக் கிடந்த திருகோணமலை மண்ணில், கோணேச கலாசாரத்தின் அடியுறை தன்மையை வெளிக் கொண்டுவரவேண்டு மென்ற ஆதங்கம், இவருக்கு சென்னையில் உயர்கல்வி கற்கின்ற காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். இதனை இவர் இயற்றிய 'திருகோணமலை முத்துக் குமாரசுவாமி வெண்பா', 'குயிற்பத்து' ஆகிய இரு நூல்களிலிருந்தும் அறிய முடிகிறது.

வன்னிமைக் கலாசாரமும் கோணேச மரபுவழித் தன்மையும் உறைந்து கிடந்த திருகோணமலை மண்ணைச் சேர்ந்த தி.த.கனகசுந்தரம்பிள்ளை அவர்கள், கந்தபுராண கலாசாரம் குடிகொண்டு திகழ்ந்த யாழ்புலம் போலவே, ஒரு தனியான இலக்கிய மரபொன்று கோணேசர் கோவிலை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெறுவதற்கு அரும்பணியாற்றினார் என்று கூறலாம்.

இவருடைய புலமை அல்லது பல்துறை சார்ந்த ஆற்றலை பின்வரும் துறைகளாக வகுத்து ஆய்வதுதான், உண்மையான ஆய்வாக இருக்க முடியும்: தமிழ்ப்பேராசிரியர், பதிப்பாசிரியர் (வெளியீட்டாளர்), உரையாசிரியர், மொழி பெயர்ப்பாளர், மொழியியலாளர், ஆய்வாளர், சொற்களஞ்சிய ஆசான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பேராசிரியர்:* தலைமை ஆசிரியராக தமிழ்த் தொண்டுக்கு அறிமுகமாகி, தன் மொழிப் புலமையினால் பேராசிரியராக பச்சையப்பன் கல்லூரியின் தமிழ்ப் பீடத்தை அலங்கரித்த முதல் ஈழமண்டல ஆசிரியன், தி.த.க. ஆவார். இலங் கையைச் சேர்ந்த ஒருவருக்கு, தமிழ்ப்பேராசிரியர் பதவியை பச்சையப்பன் கல்லூரி வழங்கி கௌரவிக்குமளவிற்கு இவரின் தமிழ்ப் புலமை, தமிழக அறிஞர்களால் அங்கீகரிக்கப்பட்டதாக இருந்தது.

இவரின் ஆழ்ந்த புலமைக்கு மகுடம் வைத்தாற் போல், இவருக்கு, பெருங் கௌரவம் அளிக்கும் வகையில், மதுரைத் தமிழ்ச்சங்கம் தமது பரீட்சையாளர் குழுவில் இவரையும் ஓர் தேர்வாளராக நியமித்தமை, இவரின் பேராற்றலை மதுரை தமிழ்ச்சங்கமே அங்கீகரித்தமைக்குச் சான்றாகும்.

இவருடைய தமிழ்ப்புலமையை உணர்ந்து கொண்ட பலர், இவரிடம் மாணாக்கர்களாகச் சேர அவாப்பட்டமை, பச்சையப்பன் கல்லூரி ஏடுகள் வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது. உதாரணமாக சென்னையைச் சேர்ந்த சோமசுந்தர முதலியார், மணிதிருநாவுக்கரசர், கந்தசாமி முதலியார், வித்துவான் (பச்சையப்பன்கல்லூரி ஆசிரியர்), சுப்பிரமணிய ஆச்சாரியார், புலோலி நா.கதிர வேற்பிள்ளை போன்ற புகழ்பூத்த மாணவர்களுக்கு குருவாக இருந்த பெருமை, திருகோணமலையைச் சேர்ந்த தி.த.கவுக்கே உரித்தாகும். இதேவேளை, சுவாமி விபுலானந்தர் அவர்கள் 1931ஆம் ஆண்டளவில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர் பதவியை வகித்து ஈழத்திற்கு பெருமை சேர்த்த வராக மதிக்கப்படுகிறார். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தி.த.க அவர்கள், சென்னை பச்சையப்பன் கல்லூரியின் தமிழ்ப் பீடத்தை அலங்கரித்து, பேராசிரி யராக இருந்துள்ளார் என்பது, திருகோணமலைக்கு பெருமைதருகின்ற விடய மாகும்.

*பதிப்பாசிரியர்:* பதிப்பாசிரியர்கள் என்ற ஈழவர் பட்டியலில், சி.வை. தாமோதரம்பிள்ளை, ஆறுமுகநாவலர் ஆகியோரோடு ஒப்ப மதிக்கப்படும் அறிஞராக, தி.த.க. விளங்கியுள்ளார் என்பதனை, அவரின் பதிப்பாற்றல் பணிகள் தெரியப்படுத்துகின்றன.

இவரால் தொகுத்து பதிப்பிக்கப்பட்ட நூல்களாவன: 'தொல்காப்பியம் எழுத்ததிகாரம்' (நச்சினார்க்கினியர்), 'தொல்காப்பியம் சொல்லதிகாரம்' (சேனாவரையர்), 'கம்பராமாயண பாலகாண்டம்', 'தமிழ் நாவலர் சரிதை', 'ஈழ மண்டலத் தேவாரம்', 'ஈழமண்டலத் திருப்புகழ்'. இவை இவரின் குறிப்புரை யுடனும், முகவுரையுடனும் பதிக்கப்பட்ட நூல்களாகும்.

இதுதவிர, ஆங்காங்கே அறிஞர் கைகளிலும், பரண்களிலும் தேடுவாரற்றுக் கிடந்த ஏட்டுப்பிரதிகளைத் தேர்ந்தெடுத்து, பதிப்பிப்பதற்கு எஸ்.வையா புரிப்பிள்ளை, டாக்டர் உ.வே.சாமிநாத ஐய்யர், அ.நாராயணசாமி ஐயர், ரி. செல்வகேசவராய முதலியார் ஆகிய அறிஞர்கள் பழந்தமிழ் இலக்கண, இலக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யங்களை வகுத்து, தொகுத்து, பதிப்பித்தகாலத்தில், அந்த அறிஞர்களுக்கு உதவினார் என்பதனை மேற்படி நூல்களின் பதிப்புரைகளிலிருந்து அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

*அகராதித் தொண்டு:* தமிழில், நிகண்டு நூல் செல்வாக்குப் பெற்றிருந்த காலப் பகுதியில் மேலைத்தேசத்தவரின் வருகையையொட்டி, சொற்களஞ்சியப்படுத்தல் முறை அறிமுகமாகிய காலத்தே, சென்னை அரசாங்கம் வெளியிட்ட தமிழ் லெக்ஸிகன் என்ற பேரகராதியை உருவாக்குவதில் இவர் உதவி ஆசிரியராக அல்லது தொகுப்பாசிரியராக இருந்து தொண்டாற்றியுள்ளார் என்பதனை அறியக்கூடியதாகவுள்ளது. 1913ஆம் ஆண்டு, தமிழ் அகராதி முயற்சி வெற்றி கண்டமைக்கு இவரின் பங்களிப்பு காத்திரமானது. இந்த அனுபவத்தைப் பெறக்கூடிய வாய்ப்பை இவருக்கு தந்தது ஈழத்தில் தொகுக்கப்பெற்ற மானிப்பாய் அகராதியும் (1842), உவின்கலே அகராதியும் (1862), தமிழ்ச் சொல்லகராதியும் (1904) ஆகும்.

*மொழிபெயர்ப்புத் துறை:* மும்மொழிப் புலமையாளனாகிய இவரின் ஆற்றல், அக்ராதித் தொகுப்பிற்கு உதவியதுபோலவே, மொழிபெயர்ப்புத் துறைக்கு உரமாக அமைந்தது.

மொழிபெயர்ப்புத் திறனுக்கு இலக்கண, இலக்கிய பாடபேதங்களில் ஆழ்ந்த புலமை தேவையென்பது யாவரும் அறிந்தவுண்மை. இவரால் மொழிபெயர்க் கப்பட்ட கம்பராமாயணத்தின் கிட்கிந்தா காண்டத்திலுள்ள பாடல்களையும், சுந்தரகாண்டப் பாடல்களையும் மிக அழகாக ஆங்கில மொழியில் மொழி பெயர்த்தமைக்கு, இவரின் ஆங்கிலப் புலமையும், ஆசிரிய அனுபவமுமே காரணமாகும்.

*திருகோணமலைப்பற்று:* அந்நியமான மண்ணில் இவரின் தொண்டுகள் இருந்தபோதும், இவர் பாடியுள்ள குயிற்பத்து, முத்துக்குமாரசுவாமி வெண்பா ஆகிய நூல்கள் சொந்தமண்மீது இவர் கொண்ட பற்றைக் காட்டுவதாக அமைகிறது.

திருகோணமலையிலுள்ள திருஞானசம்பந்தர் வீதியில் குடிகொண்டிருக்கும் முத்துக்குமாரசுவாமி ஆலய முருகன் மீது, வெண்பாவில் இவர் பாடிய பிரபந்தமே முத்துக்குமாரசுவாமி வெண்பாவாகும்.

இப்பிரபந்தத்தின் 12 பாடல்கள் மாத்திரமே இன்று எமக்குக்கிடைத்துள்ளது. இப்பாடல்களில் மாணிக்கவாசகரின் திருவாசகத்தையொத்த ஆற்றுப் பெருக் கையும், பக்தி அனுபவத்தையும் காணலாம்.

*வாரியாய் மண்ணாய்*
*வளியாய் அசுவனலாய்*
*பாரில் எடுத்த பலவுருவம் - போரில்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமைப் பொழுதின் முன்னே
இறந்துபட வென்றோன்
சிமைக்கோணை
வெற்பானென்றே செப்பு.

இவ்வாறு பல்வேறுபட்ட ஆற்றல்களும், புலமையும் கொண்ட அறிஞரான தி.த.கவின் தமிழ்த்தொண்டை, தனியொரு ஆய்வாக மேற்கொள்ள வேண்டும். இவர் பற்றி ஒருசில நூல்கள் எழுந்த போதும் பூரணமாக ஆரயப்பட வேண்டியது அவசியமாகும்.

## ஏனைய அறிஞர்கள்

தி.த.க காலத்தில் வாழ்ந்ததாக கருதப்படும் ஏனைய அறிஞர்கள் பற்றியும் ஆங்காங்கே கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அறியக்கூடியதாகவுள்ளது. அந்தவகையில் பின்வருவோரைக் குறிப்பிடலாம்:

★ வித்துவான் சு.தம்பையாபிள்ளை

★ மாசிலாமணி முத்துக்குமாரு

★ சு.தம்பையா

★ பண்டிதர் மா.பீதாம்பரனார்

திருமலை வித்துவான் சு.தம்பையாபிள்ளை என்பார், யாழ்ப்பாணம் வரதபண்டிதர் எழுதிய ‘அமுதாகரம்’ என்னும் சோதிட நூலைப் பார்வையிட்டு, 1892இல் பதிப்பித்தார். இதன்மூலம் வரதபண்டிதரால் அங்கீகாரம் பெற்ற வித்துவானாக இவர் விளங்கினார். மாசிலாமணி முத்துக்குமாரு என்பார், ‘திருகோணாசல புராணம்’ என்னும் நூலை 1845ஆம் ஆண்டு பிரதி செய்தார். சட்டம்பி சு. தம்பையா என்பார், ‘குமார நாயகர் அலங்காரம்’ எனும் காவியத்தை இயற்றி வைத்துள்ளார். கவிநயம், புலமை அனைத்தையும் கொண்ட இந்தக் காவியம், பிற்காலப் புலவர்களால் நன்கு போற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரியில் பிறந்து, யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராகவும், இன்னும் பல கல்லூரிகளின் அதிபராகவும் இருந்த பீதாம்பரனார், திருகோணமலையில் உள்ள பொற்கொடி என்னும் பெண்ணை மணந்து, புகுந்த மண்ணிற் பல இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டு அரும் பெரும் தொண்டாற்றினார்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் தலைமாணவனாக விளங்கிய இவர், வித்யாதிகாரியாக கடமையாற்றியவர். கலைப்புலமை கொண்ட இவர், சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்ற விரும்பி, விவேகானந்த சபையால் நடாத்தப்பட்டு வந்த ‘விவேகானந்தன்’ என்னும் பத்திரிகையில் கல்வி, சமயம், தமிழ்மொழி ஆகியவற்றின் சிறப்புக்கள் பற்றி பல தொடர் கட்டுரைகளை எழுதி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பீதாம்பரம்

ஈழகேசரியில், விபுலானந்த அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றை 'அடிகள் வரலாறு' என்னும் தொடர் கட்டுரையாக எழுதினார். இந்தியப் பத்திரிகை ஒன்றினால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் பங்கு பற்றி முதலாவது பரிசைத் தட்டிக்கொண்டார்.

'அந்தமரம் ஆலமரம் அழகான நல்ல மரம்' என்ற சிறுவர் பாடலை எழுதி, பிள்ளைப்பாட்டுக் கவிஞர் என்ற பட்டத்தையும் பெற்றுக் கொண்டவர். இப்பாடல், பிற்காலத்தில் 'பாலபோதினி' என்னும் பாடப்புத்தகத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

முத்தமிழ் வித்தகரான இவர் கலைஞனாக, குழந்தைப்பாட்டுக் கவிஞனாக, கட்டுரையாளனாக, பேச்சாளனாக, கல்வியியலாளனாக தடம் பதித்து, திருகோணமலை மண்ணுக்கு அரும்பெரும் தொண்டாற்றியவர். இவரது பல ஆக்கங்கள், வன்செயலில் தீயிடப்பட்டமை கவலைதரும் ஓர் விடயமாகும்.

## IV. முஸ்லிம் புலவர்கள்

இதே காலப்பகுதியில், திருகோணமலை மாவட்டத்தில் பல முஸ்லிம் புலவர்களும் வாழ்ந்தார்கள். இந்த மாவட்டத்தில் உள்ள கிண்ணியா, மூதூர், தோப்பூர், புல்மோட்டை ஆகிய கிராமங்கள் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழ்கின்ற கிராமங்கள் ஆகும்.

அவர்களின் பாரம்பரியங்கள், வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள் தனித்தன்மை கொண்டவையாக, அதேவேளை, அயல் கிராமங்களில் வாழும் ஏனைய சமூகத்தவருடைய வாழ்வுமுறையோடு ஒன்றிப்போவதாகவும், அவை காணப்படுகின்றன. இந்த வாழ்வியற் கோலங்களின் நிழற்தன்மைகளாக பல காவியங்களும், தனிப்பாடல்களும், கலைகளும் எழுந்துள்ளன என்பதற்கு ஆதாரமாக, சில காவியங்களை மூதூர் கிராமத்தைச் சேர்ந்த முஸ்லிம் புலவர்கள் பாடி வைத்துள்ளார்கள்.

19ஆம் நூற்றாண்டில் எழுந்ததாகக் கருதப்படும் முஸ்லிம் புலவர்கள் இயற்றிய காவியங்களாக 'குட்டிக்காளி காவியம்', 'கங்கைக் காவியம்', 'புஹாரிக் காவியம்', 'குறிஞ்சாமுனைக் காவியம்' ஆகிய தொடர்நிலைச் செய்யுள்கள் எழுந்ததாகவும், பாடப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது. 'எமது முன்னோர்கள் இப் பாடல்களைப் பாடியதை நான் கேட்டிருக்கின்றேன். அவைகள் ஒன்றுமே அச்சில் வெளிவரவில்லை.' இவ்வாறு எழுத்தாளர் உபைத்துல்லா தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குட்டிக்காளி காவியம்

சம்பூர்வாசியான குட்டிக்காளி என்பவன், தனது இனபந்துக்கள் வாழும் ஊரான கிளிவெட்டியில் திருமணம் செய்கின்றான். தனது குடும்பத்துடன் ஏற்பட்ட தகராறு காரணமாக குடும்பத்திலுள்ள அனைவரையும் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிடுகிறான். அவனுக்கு மரணதண்டனை கிடைக்கிறது. இச்சம்பவமே இக்காப்பியத்தின் பிரதான கதை. 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் நடைபெற்ற இச்சம்பவத்தையே ஒருவர் மேற்படி காவியமாகப் பாடியுள்ளார். இதனைப் பாடியவர் கிளிவெட்டியில் ஆசிரியராகக் கடமையாற்றிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகிறது, இதற்கு முறையான ஆதாரம் கிடைக்க வில்லை.

ஆனால், சில முதியவர்களால் வாய்வழியாக இக்காவியத்தின் பாடல்கள், மூதூர்க்கிராமங்களில் இப்பொழுதும் பாடப்பட்டு வருகின்றன. உதாரணமாக, இக்காவியத்தின் பாடல்கள் சில கொட்டியாரபுரப்பற்றின் பிரதேச எல்லைகளைச் சொல்வதைக் காணலாம்..

*1.* *திருமருவு கோணமலை வட சார்பிலாக*
*செய்ய வொரு வாரி திரை கீழ் சார்பிலாக*
*வெருகல் எனும் அழகு நதி தென் சார்பிலாக*
*குருக்கள் எனும் வளநதியும் மேல் சார்பிலாக*

*2.* *ஆன இந்நான் கெல்லை அமைவாகவுள்ள*
*அகமிகவு மகிழ்வு தரும் செந்நெல்விளை கழனி*
*தேனொழுகு மலர்காவின் செழுமை மாறாத*
*திகழ கொட்டியார் என்னத் திருநிறையும் நாடு*

*3.* *இவ்வளமையுறுங் கொட்டியா புரப்பற்றில்*
*எழில் பெருகு வேளாளர் வதிகின்ற ஊராம்*
*செவ்வை செறு சம்பூர்க் குறிச்சியிற் பிறந்த*
*சித்திராவி பெருந்தகையுடையானின் மைந்தன்.*

இக்காவியம், இன்று கொட்டியாபுரப்பற்று மக்களிடையே வாய்மொழி இலக்கியமாக பயிலப்படுகிறது. துரதிஷ்டவசமாக இது அச்சு வாகனம் ஏற்றப்பட வில்லை.

## கங்கைக் காவியம்

மூதூரைச் சேர்ந்த முஸ்லிம் புலவர் சாலையர் என்பார் இதைப்பாடினார் என்பது வாய்வழிச் சான்று. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மூதூரில் பிறந்த இவரின் இயற்பெயர் முஹைதீன். இயற்கையாகவே கவிபாடும் ஆற்றல் உடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

இவரால் பாடப்பட்ட மேற்படி காவியத்தில், மகாவலி கங்கை நதி வந்து விழும் கொட்டியாரப்பற்றின் அழகும், வளமும் எடுத்துக் கூறப்படுகிறது.

நதி வளைந்து ஓடும் இடங்களில் வெண்மணல் மேடுகள் உண்டாகும். இந்த மேட்டை 'தெத்தி' என அழைப்பர். இவ்வழகான மணல் மேடுகளில் மக்கள் கூடிக் குலாவி, சமைத்து உண்டு மகிழுவது, ஒரு பழக்கமாக இருந்து வந்துள்ளது. அப்பழக்கத்தின் பிறப்பே, இக்காவியம் என்பர் இப்பிரதேச மக்கள்.

**காப்பு**

*சீராறு மகாவலி கங்கை வியப்பும்*
*தெத்திகள் அமைந்திடும் விஸ்தாரவிதமும்*
*நேரான காவியம் நாவாலிசைக்க*
*நித்தனே என் நாவிற் சித்தி தருவாயே!*

*மத்தகரி ஒத்த முஸ்லீம் - திடவான்கள்*
*மாடாடு கோழி பல பல காய்கறிகள் - சம்பா*
*உத்தமகுணத்தோடு விருந்தாடல் - செய்யும்*
*உயர் பெரிய வம்மியடி - மணல் மேடுதானே*
*தானவன் கிருபை உறுமானே - நீ, கேளாய்*
*சாந்தமுறு வெண்நாவல் - சேர்ந்திடும் தெத்தி*
*தேனொழுகு சோலை செறி - புளியடித் தெத்தி*
*தேவியே சேம்பையடி - தெரிகிறது பாராய்*

மேற்படி பாடல்களில் தலைவன், தன் காதலியை கங்கைக் கரையோரமாக அழைத்துச் செல்கின்ற வேளையில், அவளுக்கு அந்த மணல்மேடுகளின் அழகை காட்டிக்கொண்டு போவதாக இப்பாடல்கள் அமைக்கப்பட்டிருக் கின்றன.

### குறிஞ்சாமுனைக் காவியம்

குறுஞ்சாமுனைக் காவியத்தை தோப்பூரைச் சேர்ந்த குப்பைத்தம்பிப் புலவர் (1868 - 1922) என்பார் பாடிய்ுள்ளார். தோப்பூருக்குப் பக்கத்திலுள்ள அல்லைக் குளமும், அக்குளத்தருகே பரந்துகிடக்கும் மருதநிலமும் இக்காவியத்தில் வர்ணிக்கப்படுகின்றது.

40 பாடல்களைக் கொண்ட இக்காவியம், வாய்மொழி இலக்கியமாக வழங்கிவந்த காரணத்தினால், தொங்கி மறைந்துபோன நிலையில் சில முதியோரிடம் எஞ்சி நிற்கும் வரிகளை, மனப்பாடம் செய்து வைத்திருந்த வரிகளை இங்கு உதாரணமாகக் காட்டலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மலரழகு வனசமலர் இதழ்பிரிய*
*முசுவதனில் வருவதனை முடுகியே கண்டு*
*பலவிதமத தானவரி வண்டு மது உண்டு*
*பல நாளுமே சென்ற சிலராக மதுபாடும்*
*கட்டியே வெள்ளை இடை நல்ல விதமாக*
*காய் பாளை பூ இளனி வாணகுளவர்கள்*
*வெட்டியே தாள் ஜரிகை பித்தளைகள் ஒட்டும்*
*வெண்கமல மாமர்கள் எங்குமே தூக்கி*

**புகாரிக் காவியம்**

மூதூர் உமறுநெய்னாப் புலவர் (1907-1963) என்பவரால் பாடப்பட்ட பாடல்களே மேற்கூறப்பட்ட காவியமாகும். ஐயாவீதி என அழைக்கப்படும் குளத்தடித் தெருப்பகுதியில் மதார்சா ஆச்சுமா தம்பதிகளின் இரண்டாவது மகனாகப் பிறந்த இவர், தனது ஆரம்பக்கல்வியை அருளப்பு வாத்தியார் என்பவர் நாடாத்திய திண்ணைப்பள்ளியிலும், அதன் பின் சேனையூர் பத்தினியன் பரிகாரி என்பவரிடம் இலக்கணத்தையும், மூதூர் சவரிமுத்துப் பண்டிதரிடம் இலக்கண, இலக்கியங் களையும், அருளப்பு றோச் டி.வாஸ் அவர்கள் நடாத்திய திண்ணைப் பள்ளியில் இடைநிலைக்கல்வியை கற்றுத் தேர்ந்த பின், யாழ்ப்பாணம் சென்று இலக்கண, இலக்கியங்களை மேலும் கற்று, 'வித்துவான்' என்ற பட்டத்துடன் மூதூர் திரும் பினார்.

ஆசிரியராகப் பதவியேற்று கிண்ணியா, சம்பூர், தோப்பூர் ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றிக் கொண்டிருந்த காலத்தில் இஸ்லாமிய இலக்கியங்களை துறைபோகக் கற்று பொருள் கூறும் புலவராக இருந்ததுடன், 'இஸ்லாம் மதபோதினி' (1959) என்ற நூலையும் எழுதினார்.

அத்துடன், சீறாபுராணத்திற்கு பதவுரை, பொழிப்புரை, இலக்கண விளக்கம் கொண்ட உரைநூலை எழுதியதாகவும், 'நீதிக்கவிதை', 'பெண் கல்வி ஒழுக்க நெறிக்குறள்', 'தமிழ்க்கணை' ஆகிய நூல்களை எழுதியதாகவும், அவை கையெழுத்துப்பிரதிகளாகவே அழிந்துபோயின என்றும் கூறப்படுகின்றது.

எவ்வகையாப்பிலும் பாடவல்ல இவரால் பாடப்பட்ட காவியமே, புஹாரிக்காவியம். இது தவிர 'அராபிய நாட்டின் அன்றைய நிலை', 'இஸ்லாமிக் குறள்', 'சோபனம்', 'நபி மொழிகள்', 'பெண்கல்வி' ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். ஆனால், அவை அச்சுவடிவம் பெறவில்லை.

புகாரி என்பவரை பாட்டுடைத்தலைவராகக் கொண்டு, மூதூர் நற்றவத்தால் உலமா தோன்றிய சரித்திரத்தை இக்காவியம் சொல்கிறது. இக்காவியத்தில் புகாரிக் கந்தூரி நடைபெறும் மூதூரின் இயற்கை அழகை புலவர் தனது சொல் வளத்தாலும், புலமைத்திறனாலும் காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவலி கங்கை நதி மூதூருக்கு அருகாமையில் ஓடி கடலோடு சங்கம மாகிறது. ஒரு புறம் வங்கச்சமுத்திரமும், மறுபுறம் மகாவலிகங்கையும் சூழ்ந் திருக்கும் வளமும், வனப்புமுள்ள புண்ணிய பூமியான மூதூரின் சிறப்பை புலவர் இவ்வாறு விபரிக்கின்றார்.

*புவியினில் விளங்குமிம் மூதூரெனும்பதி*
*பொங்கு நதி பாய்வதாலெங்கு வளமாகி*
*கலினொழுகு செந்நெலொடு கன்னலுமலிந்து*
*காட்சி தருகின்ற மாட்சி பெறுநாடு*

இதன் கருத்து யாதெனில், மூதூர் எனப்படும் ஊரானது, பொங்கிவரும் நீரினைக் கொண்ட மகாவலி நதி பாய்ந்து ஓடுவதால் வளம்பெற்று, இனிமைதரு செந் நெல்லும், கரும்பும் அதிகம் காணப்படும் அழகும், பெருமையும் கொண்ட தாகும்.

இன்னோரிடத்தில் மூதூரின் சிறப்பை பின்வருமாறு எடுத்துக் கூறுகிறார்:

*நாட்டை-யான் மருத நிலமென்று சொல்வேனா*
*நற் கடற் சாரு மொரு நெய்த லென்பேனா*
*நீட்டிய மலைச்சாரற் குறிஞ்சி நிலமாமோ*
*நெடுங்கான முல்லை நிலமென்று பகர்வேனோ*

## நவரத்தின புராணம்

மூதூரின் முதற் புராணம் எனப்படும் இப்புராணத்தை, மூதூர் முகைதீன் பிச்சைப் புலவர் என்பவர் இயற்றியுள்ளார். இப்புராணம் சமயநெறி சார்ந்ததாக காணப் படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# கவிதை

## I. 1950 கள்

20ஆம் நூற்றாண்டின் நவீனகவிதை முன்வளர்ச்சிக் காலமான 1950ஆம் ஆண்டுகளைத் தொடர்ந்து, திருகோணமலையின் முன்னோடிக் கவிஞர்கள் என்ற முடியைச் சூடிக்கொண்டவர்கள், பின்வரும் கவிஞர்களாவர்: தருமுசிவராமு, அண்ணல், ஈழவாணன், தா.சி.வில்வராஜன் (திருகோணமலைக் கவிராயர்).

மகாகவிபாரதி, பாரதிதாசன், தேசியவிநாயகம் பிள்ளை ஆகியோரின் நவீன கவிதைகளைப் படித்த அருட்டுணர்வினால் எவ்வாறு ஈழத்துக் கவிதைக்கு (1940ஆம் ஆண்டுக்குப்பின்) நாவற்குழியூர் நடராசன், அ.ந.கந்தசாமி, சோ.நடராசா, மஹாகவி போன்றோர் அளப்பரிய சேவை செய்தார்களோ அதேபோல் அதே வீச்சுடன் அதேகாலப்பகுதியில், ஈழத்துக் கவிதைக்கு வளம் சேர்த்த திருகோணமலைக் கவிஞர்களாக, தருமு சிவராமு, அண்ணல் திருகோண மலைக் கவிராயர், ஈழவாணன் ஆகிய இளைஞர்கள், திருகோணமலை பிரதே சத்தின் கவிதைத்துறைக்கு மாத்திரமன்றி உலகத் தமிழ்க் கவிதைத்துறைக்கே வளம் சேர்த்த கவிஞர்களாக விளங்குகின்றார்கள்.

### தருமு சிவராமு (1939-1997)

திருகோணமலையில், 1939ஆம் ஆண்டு பிறந்த தர்மலிங்கம் சிவராமலிங்கம் என்ற தருமு சிவராமு, இ.கி.ச.இந்துக்கல்லூரியில் கல்வி பயிலும் காலத்தி லிருந்தே எழுத்துத் துறையிலும், கலைத்துறையிலும் அதிக நாட்டம் காட்டிய இளைஞனாக காணப்பட்டார்.

சிவராமு, தன் மாணவப் பருவத்திலிருந்து எழுதத் தொடங்கினாலும், அவரை இலக்கிய உலகுக்கு அறிமுகமாக்கிய பெருமை, சி.சு.செல்லப்பாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'எழுத்து' சஞ்சிகையையே சாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தர்முசிவராமு

தனது இருபதாவது வயதில், 'நான்' என்னும் தலைப்பில் இவர் எழுதிய கவிதை முதல்முதல் 'எழுத்து' சஞ்சிகையில் வெளிவந்தது, தொடர்ந்து, பிறேமிள், தரும், ஆரூப் சிவராம், பானுச்சந்திரன், பானு, அஜித்ராம் என்ற பல்வேறு புனைபெயர்களில் இவர் எழுதிய போதும், 'தருமு சிவராமு' என்ற பெயரே பிற்காலத்தில் பிரபல்யம் பெற்று நின்றது.

கவிதைத் துறையில் அதிக நாட்டம் கொண்ட சிவராமு, விமர்சனம், நாடகம், சிறுகதை, கட்டுரையெனப் பலதளங்களிலும் தனது ஆற்றல்களைக் காட்டிவந்தார். அதுமட்டுமன்றி, நுண்கலைகளான சிற்பம், ஓவியம் ஆகிய கலைகளிலும் தனது திறமையை வெளிக்காட்டி வந்துள்ளார். 1960ஆம் ஆண்டு அளவுகளில் எழுத்து, நடை, ஞானரதம், செய்தி, வீரகேசரி, தினகரன் ஆகியவற்றில் எழுதி தன்னை வெளிப்படுத்திக்கொண்டவர் சிவராமு.

திருகோணமலையைப் பிறந்த மண்ணாகக் கொண்ட சிவராமு, 1972ஆம் ஆண்டு புலம்பெயர்ந்து சென்னைக்குச் சென்றுவிட்டதனால், இவர் ஈழத்தைச் சேர்ந்தவரா? என்ற ஐயம் பலருக்கு இருந்து வந்துள்ளது. திரு கோணமலையில் பிறந்து தமிழக மண்ணில் கால் பதித்து இலக்கிய உலகின் ஜம்பவானாக திகழ்ந்தவர் சிவராமு.

இவரது பல்துறை சார்ந்த ஆற்றல்களை பின்வரும் தலைப்புக்களில் நோக்கலாம்: கவிஞர், விமர்சகர், நவீன நாடகத்தான், ஏனைய துறைகள்.

**படிமக்கவிஞர்:** முருகையன், சில்லையூர் செல்வராஜன், மு.பொன்னம்பலம் போன்ற கவிஞர்களின் ஆரம்பகால கவிதைகளுடன், தன்னையும் ஓர் கவிஞனாக ஆக்கிக் கொண்டவர், தருமுசிவராமு. தமிழ் இலக்கியத்திலும், மேல்நாட்டு இலக்கியங்களிலும் பரிச்சயம் உடையவரான இவர், ஓர் புதுக்கவிதைக் கவிஞனாக பரிணமித்தார். அதேவேளை, மரபுக் கவிதைகளிலும் ஆழ்ந்த பரிச்சயமுடைய வராகவும் காணப்பட்டார்.

புதுக்கவிதை என்னும் வடிவம் தலைநீட்டத் தொடங்கிய காலத்தில், மரபுவாதிகளின் நிந்தனைகளை எல்லாம் மீறி, புதுக்கவிதையை ந.பிச்சாமூர்த்தி, வைத்தீஸ்வரன் போன்றவர்களோடு எழுத ஆரம்பித்தவர், சிவராமு. இவர் எழுதிய முதலாவது கவிதை 'நான்' என்ற தலைப்பில், எழுத்து சஞ்சிகையில் 1960 ஜனவரி இதழில் வெளிவந்தது.

புதுக்கவிதைக்கு செழுமையும், அழுத்தமும் சேர்த்த இவர், இத்துறையில் படிமக்கவிஞராகப் புகழ்பெற்றவர். தனிமனித முறுகல்களும், உடைந்துபோன மனக் குமுறல்களும் இவர் கவிதைகளில் உராய்வதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கடலும் சுருங்கும்
நெருப்பும் தடுமாறும்
காற்றின் விரல்களும்
வெறும் வெளி வீணையில்
பேசாமல் மடங்கும்
வானத்தில் பரிதியே நின்று
கிணற்றுள் தன்பிம்பத்தை
பட்டம் விட்டாலும்'

படிமத்தை, மிகலாவகமாக இவர் மேற்காட்டிய கவிதையில் பயன்படுத்தி யுள்ளதைக் காண்கின்றோம். வரிக்குவரி இயற்கை விளையாட்டுக்களும், புதிர்வரிகளும் இவர் கவிதைகளை அலங்கரிக்கும்.

'கருகித்தான் விறகு தீயாகும்
உருகாமல் பனிநீராய் ஓடுமா?
ஆனாலும்
அதிர்கின்ற தந்தியில்
மௌனம் குந்தாது கொசு
நெருப்பில் மொய்க்காது.'

இவரின் புகழ்பெற்ற விஞ்ஞானக் கவிதையான E=Mc எனும் கவிதை 1972ம் ஆண்டு அஃகு, பத்திரிகையில் வெளியானபோது, வானம்பாடி கவிதா மண்டலத்தின் பரிசு, இக்கவிதைக்கு வழங்கப்பட்டது. இப்பரிசே பல சர்ச்சை களைத் தமிழ்நாட்டில் கிளப்பிவிட்டது.

E=Mc2

ஒற்றைக் குருட்டு
வெண் விழிப் பருதி
திசையெங்கும் கதிர்க்கோல்கள்
நீட்டி
வரட்டுவெளியில் வழிதேடி
காலம் காலமாய்
எங்கே போகிறது
எங்கே?
என்றார்கள் மாணவர்கள்
ஒன்பது கோடியே
முப்பது லட்சம் மைல்
தூரத்தில்
எங்கோ
ஒரு உலகத் துளியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இமாலயப் பிதுக்கத்தில்*
*இருந்து குரல் கொடுத்து*
*..................*

புதுக்கவிதையொன்றின் உச்சமாக, எல்லோராலும் காட்டப்படும் இவரது கவிதையிது.

*சிறகிலிருந்து பிரிந்த*
*இறகொன்று காற்றின்*
*தீராத பக்கங்களில்*
*ஒரு பறவையின் வாழ்வை*
*எழுதிச் செல்கிறது*

இவரது கவிதைகளில் ஆன்மீகம் உறைந்து கிடக்கும் காரணத்தினால், இவரை ஓர் 'ஆன்மீகக் கவிஞர்' என்றும் அழைப்பர். இதற்கு, இவரின் வழிகாட்டியாக விளங்கிய திருமலைசாது அப்பாத்துரைச் செட்டியாரின் வழிகாட்டலும், இந்தியத் தத்துவ மேதை ஜே.கிருஷ்ணமூர்த்தியின் நூல்களைப் படித்த அருட்டுணர்வும்தான் காரணம் என்று கூறப்படுகிறது. புதுக்கவிதை வரலாற்றில், தருமுவின் பங்கு அளவிடற்கரியது. இவரது கவிதைகளின் தரிசனநிலை மனப்பிரபஞ்ச உணர்வுல கத்தின் படிமரூபமாக நமக்கு காட்சியளிக்கிறது. கவிதைகள் இன்ன உலகின் இன்ன பரிமாண எல்லையில்தான் இயங்கும் என நாம் மொழிவழிச் சாதனா சிறுவட்டச் சிறைக்குள் இருந்து கொண்டு நிர்ணயிப்பதோ, எதிர்பார்ப்பதோ தவறாகவே முடியும்.

இவரைப்பற்றி சி.சு.செல்லப்பா, எழுத்து பத்திரிகையில் குறிப்பிடுகையில் "புதுக்கவிதை இலக்கியத்தில் தங்கள் தனிப்பார்வைகளால் பங்களிப்பவர்களாக தருமு சிவராமு, வேணுகோபாலன், எஸ்.வைத்தீஸ்வரன், டி.கே.துரைசுவாமி, சுந்தரம் ராமசாமி ஆகியோரைக் குறிப்பிடலாம்" என்று விபரித்துள்ளார். தர்மு சிவ ராமுவின் 'புதுக்கவிதைகள் ஒரு திறனாய்வு' என்ற தலைப்பில், திருப்பதி திருவேற்கடவன் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மேற்கொண்டு, கலா சுப்பிரமணியன் என்பவர் 1988ஆம் ஆண்டு கலாநிதிப்பட்டம் பெற்றார். தற்பொழுது, சிவ ராமுவின் அநேகமான ஆக்கங்களையும், அவர் பற்றியதுமான விடயங்களையும் வெளியிடும் பணியை கலா சுப்பிரமணியம் மேற்கொண்டு வருகிறார்.

***தலைசிறந்த விமர்சகர்:*** சிவராமு, மிகச் சிறந்த விமர்சகராக தமிழ் கூறும் நல்லுலகத்தால் மதிக்கப்படுபவர். சிறுகதையின் திருமூலரென வர்ணிக்கப்பட்ட மௌனியின் சிறுகதைத்தொகுதிக்கு, 1967ஆம் ஆண்டு முன்னுரை வழங்கிய ஓர் ஈழத்தவர் என்ற வகையில் இவர் மதிக்கப்பட்டது மாத்திரமன்றி, இவர் எழுதிய முன்னுரை, நவீன தமிழ் இலக்கியப் போக்கை, விமர்சன பூர்வமாக நிர்ணயிக்கும், சிறந்த கட்டுரையென குறிப்பிடப்படுகிறது. இவர் எழுதிய முன்னுரை, நகுலனின் 'குருஷேத்திரம்' என்னும் நூலின் தொகுப்பில் மறுபடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசுரிக்கப்பட்டது. இது, அவரின் முன்னுரைக்கு வழங்கப்பட்ட மகத்துவம் ஆகும். ஆனால், மௌனியின் சிறுகதை, மறுபதிப்பில் இந்த முன்னுரை நீக்கப் பட்டது. தமிழின் விமர்சனத்துறையில் முக்கியமானவராகவும், முதன்மை யானவராகவும் திகழ்ந்த சிவராமு, விமர்சனத்தை ஒரு கலை வடிவமாக அமைத்தவர். பட்சபாதகமற்ற அவரது விமர்சனம், அறிவுலக இயக்கமாகவே இன்றும் நிற்கின்றது.

விமர்சனத்துக்கென இவர் எழுதிய 'விமர்சன மீட்சிகள்', 'விமர்சன ஊழல்கள்', 'விமர்சனாஸ்ரமம்', 'தமிழின் நவீனத்துவம்' ஆகிய நூல்கள், தமிழ் விமர்சக வித்தகர்களால் பெரிதும் சிலாகித்துப் பேசப்படும் நூல்களாகும். பாரதி, புதுமைப்பித்தன் போன்றவர்களுக்குப் பிறகு, நவீன தமிழ் இலக்கியத் துறையில் தோன்றிய ஓர் மகத்தான ஆளுமைமிக்கவராகப் போற்றப்படுபவர், சிவராமு.

பக்கச்சார்பற்ற நக்கீரத்தனமான விமர்சனங்களாக அவை இருந்ததனால் அவ்விமர்சனங்கள் எழுத்தாளர் மத்தியில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வந்துள்ளது. முகம்பார்த்து விமர்சனம் செய்யாது, வெட்டொன்று துண்டிரண்டு என்ற வகையில் நறுக்குத்தனமாக சொல்வதை நேரே சொல்லிவிடும் தன்மையால் தனது நண்பர்களையே எதிரிகளாக்கிக் கொண்டு கஸ்டப்பட்டுள்ளார், சிவராமு. அவரின் இந்த விமர்சனங்கள், தமிழில் புதிய விமர்சனக் கலாசாரத்துக்கே வித் திட்டது.

இவரது விமர்சனப் போக்குப் பற்றி இந்தியாவின் பிரபல எழுத்தாளர் நகுலன், குறிப்பிடுகையில் 'இன்றைய தமிழ் இலக்கிய நிலைபற்றி விமர்சன பூர்வமாக நிர்ணயிக்கும் முதற்கட்டுரையை, மௌனியின் சிறுகதைக்கு, சிவராமு எழுதிய முன்னுரை தந்துள்ளது' என்று வர்ணித்துள்ளார்.

நகுலன், இன்னோர் இடத்தில் சிவராமைப் புகழ் பெற்ற மலையாள விமர் சகர் பி.கே.பாலகிருஷ்ணனுடன் ஒப்பிட்டுள்ளார்.

***நவீன நாடக ஆக்கி:*** 'நட்சத்திரவாஷி' என்னும் நாடகம், நவீன நாடக மேடை களில் சிறப்பாகப் பேசப்படும் ஓர் உத்திவகை நாடகமாகும். குறியீட்டு நுட்பம் நிறைந்த இந்த நாடகத்தை, இவர் 1972ஆம் ஆண்டு, டில்லியில் வைத்து எழுதியுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச்சங்கப் பொன்விழாவில் (1976) மேடையேற்றப்பட்ட இந்த நாடகம், பல பாராட்டுக்களைப் பெற்றது. இலண்டனில் உள்ள த.பாலேந்திரா குழுவினர் இதனை பல்வேறு மேடைகளில் மேடையேற்றி யுள்ளனர் எனத் தெரியவருகிறது. உலக நாடக இலக்கியங்களின் போக்கில் தமிழ் நாடகமும், குறிப்பாக மேடை நாடகம் வளர்க்கப்பட வேண்டும், என்ற இவரது ஆவலை 'நட்ஷத்திரவாஷி' என்னும் நாடகம் காட்டுகிறது.

***ஏனைய துறைகள்:*** கலை, எழுத்து, வாசிப்பு என்பதையே தன் வாழ்வாகக் கொண்ட சிவராமு, நவீன பெயின்டிங், சிற்பங்கள் செய்வதிலும் வல்லவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது நவீன பெயின்டிங், பலரைக் கவர்ந்ததுடன் வெளிநாட்டவர்களின் உயர்ந்த விலை கொடுப்புக்கும் காலாகியது. கண்டி பிரஞ்சு கலாசார நிலையத்தில் ஒரு காலத்தில் தனிமனித ஓவிய கண்காட்சியை நடாத்திய இவருக்கு, பிரஞ்சு மொழியிலும் ஓரளவு பரிச்சயமுண்டு. இவரது ஆங்கிலப் புலமையும், மேல்நாட்டு இலக்கியப் பரிச்சயமும், இவரை ஓர் மாபெரும் எழுத்தாளனாக மதிக்க வைத்த போதும், இவரது வாழ்வு, சிக்கலும் சோகமும் நிறைந்ததாகவே அமைந்து விட்டது,

இவர் எழுதிய நூல்களாவன: 'கைப்பிடியளவு கடல்' (கவிதை), 'மேல் நோக்கிப் பயணம்' (கவிதை), 'லங்காபுரி ராஜா' (குறுநாவல்), 'விமர்சன ஊழல்கள்' (விமர்சனம்), 'தமிழின் நவீனத்துவம்' (விமர்சனம்), 'விமர்சன மீட்சிகள்' (விமர்சனம்), 'ஆயி' (குறுநாவல்), 'படிமம்', 'தியனதாரா', 'நட்சத்திரவாஷி' (நவீன நாடகம்), 'கண்ணாடியுள்ளிருந்து', 'ஸ்ரீலங்காவின் தேசியத் தற்கொலை' (கட்டுரை).

தமிழகத்தின் புகழ்பூத்த எழுத்தாளர்களுக்கு மத்தியில், ஓர் இலக்கிய நட்சத்திரமாக விளங்கிய சிவராமு, திருகோணமலையிலிருந்து 1972ஆம் ஆண்டு தமிழ் நாட்டிற்குப் புலம்பெயர்ந்துவிட்டமையினால் இவர் ஈழத்தைச் சேர்ந்தவர் என்ற உண்மை மறைந்துவிட்டபோதும், சிவராமு என்னும் தலைசிறந்த கவிஞனையும், விமர்சகனையும், நாடக முன்னோடியையும் பெற்றெடுத்த பெருமை திருகோணமலையையே சாரும்.

வாசிப்பையும், எழுத்தையும் தவிர வேறெந்த வேலையையும் தன் வாழ்வில் செய்திராத, ஒரு நாளின் இருபத்திநான்கு மணி நேரத்தையும் கவியாகவே வாழ்ந்து கழித்த சிவராமுவின் கடைசி நாட்கள் பற்றிய தகவல்கள் திகிலூட்டுவதாக அமைந்துள்ளது. மூளையில் ரத்தக்கசிவு ஏற்பட்டு, தன்னுடைய அறையில் கவனிக்க யாருமின்றி கிடந்தபோது, அவரைச் சூழ, கவிந்திருக்கக் கூடிய தனிமையும், அமைதியும் நட்சத்திரங்களைவிட நிறையவே பேசும். அவற்றிடையேயுள்ள இருளைவிடப் பயங்கரமானதாக நிசப்தம் இருக்கும், என்று தோன்றுகிறது" என சேரன் குறிப்பிட்டிருப்பதை இங்கு கூற வேண்டியுள்ளது.

## கவிஞர் அண்ணல் (1930 - 1974)

திருகோணமலை நகரிலிருந்து 16கி.மீற்றர் தொலைவிலுள்ள முஸ்லிம் கிராமமான பெரிய கிண்ணியாவில், ஜனாப்.அ.முகம்மது சுல்தான் ஹயாத்தும்மா தம்பதிகளின் இளைய மகனாகப் பிறந்த இவரின் இயற்பெயர் எம்.எஸ்.எம்.சாலிஹ்.

பயிற்சிபெற்ற தமிழ் ஆசிரியராக, தலைமையாசிரியராக ஜீவனோபாயத்தை நடாத்திவந்த அண்ணல், 'அவள்' என்னும் கவிதையுடன் இலக்கிய உலகிற்குள் காலடி எடுத்து வைத்தவர். 1945ஆம்ஆண்டு முதல் எழுதிவந்த அண்ணலுக்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கவிஞர் அண்ணல்

ஈழத்து பிரபல்ய கவிஞரான புரட்சிக் கமால், வ. அ. இராசரத்தினம் ஆகியோருடைய நட்பு; இலக்கியச் செழுமைக்கும், வளர்ச்சிக்கும் உதவியாக அமைந்தது.

12 வருடங்களாக அவர் எழுதிய கவிதைகளில் சில நறும்பூக்களை மாலையாகத் தொடுத்து, கிண்ணியா முற்போக்கு மன்றத்தினர் 1964ஆம் ஆண்டு கிண்ணியாவில் நடாத்தப்பெற்ற இலங்கை இஸ்லாமியக் கலை விழாவில், பாராளுமன்ற உறுப்பினர் அமரர் ஏ.எல். ஏ.மஜீது உதவியுடன், 'அண்ணல் கவிதை' என்ற தலைப்புடன் வெளியிட்டனர்.

வாலிபத்தின் வயலில் விதைக்கப்படும் காதல் விதைகளைத் தன் கவிதைகளிலே அழகும், கற்பனை ஊற்றும், யாப்பு இசையும் கொண்டு வடித்திருக்கும் இவரது கவிதைகள், தங்குதடையின்றி ஓடும் ஓசை வளமும், நெழிவு சுழிவும் கொண்டது. சமகாலக் கவிதைகளைப் போலவே, காதலை மெத்தப் பாடியிருக்கும் அண்ணல் கவிதைகளில்,

*ஆடும் மயிலுன்னை அப்படியே என்னில்*
*ஆழப் பதித்து விடும் - இங்கு*
*சோடாய் மகிழ்ந்தின்பம் துய்க்கும் புறாவினம்*
*துன்பத்தைத் தூதுவிடும்*
*சேவற்பூச் செவ்விதழ்ச்*
*செந்தமிழ்ப் பேச்சினை*
*சோலைக்குயில் உரைக்கும் - அதில்*
*ஆவி வருந்துமோர் நோய்*
*புகுந்தே என்னை*
*ஆண்டியாய் ஆக்கிவிடும்.*

எனக் காதல் மலிந்து கிடக்கும் வரிகளைப் பார்க்கலாம்.

வாலிபக் கனவுகளை வடித்துக் காட்டும் கவிதைகளுடன், ஆங்காங்கே சமய நெறிகளும், சமூக வடுக்களும் சொல்லப்பட்டிருப்பது அவர்கால இலக்கியப் பார்வையைத் தெளிவுற எடுத்துக் காட்டுகிறது.

இவர் கவிதைகளில் தனிப்பாடல்களின் தாக்கம், சித்தர்களின் வரிகள், பாரதிதாசனின் உணர்ச்சிக் கோலங்கள் ஆகியவற்றையும் கண்டு கொள்ளலாம். மொத்தத்தில் இவரது கவிதைகளில் காணப்படும் வாலிபரசம், கிழப்பருவமுடையவர்களையும் கிள்ளிவிடக்கூடிய துள்ளல் தன்மை கொண்டதாக அமைந்து கிடப்பதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலத்தில், தனது சமகாலக் கவிஞர்களான மஹாகவி, புரட்சிக்கமால், வ.அ.இராசரத்தினம், எஸ். பொன்னுத்துரை போன்றோர்களின் நட்புக் கலப்பும், உறவும் இவருக்கு உரமிட்டுள்ளன.

ஈழத்தின் புகழ்பூத்த கவிஞரான மஹாகவி, அண்ணல் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

*அண்ணல் தமிழுக்கு அணி*
*செய்யவந்தவரே திண்ணம்*
*அவர் பாத்திரட்டு வெளிவருதல்*
*ஈழத்தவராம் எமக்கு மிகத் தேவை*

மரபுவழி நின்று கவிதைகளைப் படைத்த அண்ணல் பிறந்த கிண்ணியாக் கிராமத்தில், ஆங்காங்கே அடையாளங்களாக உள்ள நூலகங்கள், வீதிகள் ஆகியன இவரை நினைவுகொள்ள வைத்தாலும், இன்னும் பரந்தளவில் நினைவு கொள்ளப்பட வேண்டிய ஒரு கிழக்கின் தாரகை, அண்ணலாகும்.

## தா.சி. வில்வராஜன் (1930 - 1990)

'திருக்கோணமலைக் கவிராயர்' என்ற புனைமுடி சூடி, திருகோணமலை மாவட்ட கவிதைத்துறைக்கு அழகும், ஆவேசமும் சேர்த்த மற்றுமொரு கவிஞர் தா.சி.வில்வராஜன் என்ற கவிஞராகும். பெருந்தொகையான கவிதைகளைப் பாடி, எழுதியபோதும் முழுவதும் ஆவணப்படுத்தப்படாமையினால், அவர் பாடிய பல கவிதைகள் துர்ப்பாக்கியவசமாக அச்சுவடிவம் பெறாமை, கவலைக் குரிய விடயமாகும்.

பிறவிக் கவிஞர் என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஆற்றல் பெற்ற வில்வ ராஜன், ஆரம்பகாலத்தில் சுதந்திர வேட்கைமிக்க இளைஞனாக சுதந்திரன் பத்திரிகையிலும், ஏனைய ஈழத்துச் சஞ்சிகைகளிலும் எழுதி வந்தார். கவியரங்கக் கவிஞனாகத் தன்னை ஆக்கிக்கொண்டதன் பின், எதுகைமோனைச் செழுமை களினால் நையாண்டி, நகைச்சுவை மிளிர, பாடும் கவிஞராகக் காணப் பட்டார்.

புரட்சிகரமான இடதுசாரி அரசியலில் இருந்து தனது வாழ்வை ஆரம்பித்த வில்வராஜன், பல்வேறு அரசியல் சாயங்களினால் அவரது கவித்துவம் சாய்ந்த போதும், நிரம்பிய புலமையும், திறனுமுள்ள ஒரு கவிஞராக விளங்கியவர்; வாழ்ந்தவர்.

இவர் கவிதைகளில் தமிழ்ப்பற்றும், பண்பாடும், வீறுநடை போடும். இவரை, ஒரு ஏட்டுக் கவிஞர் என்பதனை விட, அரங்கக் கவிஞர் என்பதிலுள்ள பிரபல்யம் அதிகம். நையாண்டியும், நகைச்சுவையும், தமிழ்ச் சாறும் மிளிர கவியரங்கங்களில் பாடுவதில் வல்லவராகத் திகழ்ந்த இவர், அரசியல் சுலோகங்கள் எழுதுவதிலும் வல்லவராகத் திகழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் 1970ஆம்ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில், தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு.பா.நேமிநாதனுக்கு ஆதரவாகப் பாடிய வரிகளில் மிகப்பிரபல்யம் பெற்ற ஒரு வரியை தருவது, தற்கால ஓட்டத்துக்கு பொருத்தமானது என்று நினைக்கின்றேன்.

*கோணை நகரிலும் ஆமி - அதை*
*குனிய வைப்பான் எங்கள் நேமி*

இவரது கவியரங்குத் திறன்பற்றி இன்னுமொரு கவிஞர் பின்வருமாறு குறிப் பிடுகிறார்:

*எழுபதுகளில் எம்மவரோடு*
*எல்லா விழாக்களிலும்*
*பழுதில் கவியரங்கில்*
*பாங்காய்க் கவி பொழிந்தார்*
*நடிப்பார் எழுதிடுவார்*
*நற்கவர்ச்சியோடு அதனைப் படிப்பார்*
*சபையோரைப் பார்ப்பார் நிமிர்ந்திடுவார்*
*கற்றைப் புருவத்தால்*
*கனல்கக்கும் கூர்விழியால்*
*நெற்றிச் சுருக்கத்தால்*
*நீள்மூக்கால் கை காட்டிப்*
*பொழியும் புது முறையால்*
*பொதுமக்களைக் கவரும்*
*வழிகண்ட ஒரு கவிஞன்*

1968ஆம் ஆண்டு, யாழ் மாவட்டபுரத்தில் நடைபெற்ற ஆலய பிரவேச போராட்டத்தில் கலந்துகொண்ட கவிஞர் பாடியகவிதை பலராலும் பல மேடை களிலும் இசையமைத்துப் பாடப்பட்ட கவிதையாகும்.

*மாவட்டபுரத்திலோர் மந்தி - நின்று*
*மடைச்சேட்டை புரியிது வாசலில் குந்தி*
*ஆள்விட்டுத் தடுப்பதோ சிந்தி - இந்த*
*அடுக்காத செயல்கண்டு சிரிக்குது சந்தி*

இந்தச் சாதி எதிர்ப்பு போராட்டத்தில், ஒரு புறத்தில் சமத்துவத்தையும், தமது ஜனநாயக உரிமைகளையும் கோரிநின்ற தாழ்த்தப்பட்ட மக்களும் மறுபுறம் 'அடங்காத் தமிழன்' என்று அக்காலத்தில் பேசப்படும் பிரபல்ய அரசியல்வாதி ஸி.சுந்தரலிங்கம் தலைமையில் பலரும் நடாத்திய சாதிப் போராட்டமுமே, இவ்வாறு கவிஞரால் பாடப்பட்டுள்ளது.

இவரொரு நாடகப் பிரதியாக்க கவிஞர் மாத்திரமல்ல நடிகருங்கூட. நகைச் சுவைப் பாத்திரங்களை கால நிலைக்கேற்ப உருவாக்கி, அதில் நடித்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்பெற்ற கவிஞர். 'புது வாத்தியார் பட்டபாடு', 'கிரேக்க நாட்டுத் தமிழ் அறிஞர்', 'சைக்கிளோன்', 'பழங்கவிஞர் கைலாசம்' போன்ற பல்வேறு நாடகங்களில் நடித்துள்ள வில்வராஜன் பத்திரிகை சஞ்சிகைகளின் பதிப்பாளராகவும் திகழ்ந்துள்ளார். 'திருகோணமலைக் குரல்' (பத்திரிகை) 1962, 'மனிதம்' (சஞ்சிகை, 1965) போன்றவற்றின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

தென்னகத்தில் செல்வாக்குப் பெற்று நின்ற தி.மு.க.வின் சீர்திருத்தக் கொள்கைகளை உள்வாங்கிய இவர், தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாகப் பல போராட்டங்களை நடாத்தி, உள்ளபடி வாழ்ந்து காட்டிய போதும், கடுமையான விமர்சனங்களுக்கும் ஆளாக்கப்பட்ட கவிஞராக விளங்கினார்.

இவரது பெருந்தொகையான ஆக்கங்கள் சுதந்திரன், வீரகேசரி, தினகரன், தினபதி, சிந்தாமணி, உமா, குங்குமம் போன்ற தினப்பதிப்புக்களிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்த போதும், முறையாக ஆவணப்படுத்தப்படாமையினால் அவை மறைந்து போய்விட்டன.

இருந்தபோதும், பழந்தமிழ்ப் புலவர்களின் கவிதைகளை சான்றோர் தேடியெடுத்துத் தொகுத்துக் காத்ததைப் போன்று திரு.த.அமரசிங்கம் அவர்களின் முயற்சியின் வெற்றியாகத் திகழும் ஈழத்து இலக்கியச் சோலை வெளியீட்டகம், இவரது 'கயல்விழி' என்னும் கவிதை நாடகத்தை 1995ஆம் ஆண்டு அச்சுவாகனமேற்றி காப்பாற்றியுள்ளது.

இது ஒரு கவிதை நாடகமாக இருந்தபோதும், கவிராயரின் புலமைச் செழுமை, ஆற்றோட்டமான இசைத்திறன் ஆகியவற்றைக் கண்டு வியக்கக் கூடியதாகவுள்ளது. இவரது இந்த கவிதை நாடகம் பாரதிதாசனின் சில நாடகங்களின் சாயலை அல்லது கவிநிழலைக் கொண்டதாக காணப்படுவதாக உணரப்பட்டபோதும், இயல்பான திறன் வெளிப்படுத்தப்படுகிறது.

1990ஆம்ஆண்டு இடம்பெற்ற வன்செயலில் காத்தான்குடி என்னும் ஒரு கிராமத்தில் அகாலமரணமடைந்துவிட்ட கவிராயன், திருகோணமலையில் இன்றும் பேசப்படும் ஒரு கவிஞராக மக்கள் மனதில் வாழ்கின்றார்.

இந்தத் தலைமுறையினரைத் தொடர்ந்து திருமலையில் இன்னுமொரு புதிய தலைமுறையினர், நவீனகவிதை இலக்கியத்துறைக்குள் நுழைகின்றார்கள். அவர்களில் பெ.பொ.சிவசேகரம், புரட்சிபாலன், தாமரைத் தீவான், ஈழவாணன் போன்றோர் முக்கிய இடம்பெறுகின்றார்கள்.

### கழகப்புலவர் பெ.பொ.சிவசேகரம் (1919 - 1983)

கழகப்புலவர் பெ.பொ.சிவசேகரம் (1919-1983) என்ற பெயர்கொண்ட கவிஞர் சிவசேகரனார் திருகோணமலையில் 'திருவள்ளுவர் கழகம்' அமைக்கப்பட்ட காலத்தில் இருந்து புகழ்பெற்ற கவிஞராக விளங்கியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்றப்பட்ட கணித ஆசிரியராக இருந்தபோதும் ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் நிறைந்த பாண்டித்தியம் பெற்ற இவர், கவியரங்கக் கவிதை களுக்கு ஏற்ற தலைமைப் பண்பு நிறைந்த கவிஞராக மதிக்கப்பட்டவர். திரு கோணமலையில் நடைபெற்ற நூற்றுக்கணக்கான கவியரங்குகளுக்கு தலைமை தாங்கிய பெருமை இவரைச் சாரும்.

இவருடைய பிரக்ஞைபூர்வமான பார்வையில் எழுதப்பட்ட கவிதைகள் ஆவணப்படுத்தப்படாமல் தொலைக்கப்பட்டபோதும் இவர், காளி கவிமாலை (1983), தம்பலகாமம் கோணநாயகர் போற்றித்திருப்பதிகம், கந்தளாய்ப் பிள்ளையார் தோத்திரம், ஆலடிப் பிள்ளையார் மீது ஊஞ்சற் பதிகம் போன்ற கோயிற் பிரபந்தங்களைப் பாடியுள்ளார்.


திருகோணமலையில் எழுந்தருளியிருக்கும் காளியம்மன் மீதும், தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரர் மீதும், கந்தளாய் புராதன கிராமத்தில் குடிகொண்டிருக்கும் பிள்ளையார் மீதும் பாடப்பட்டவையே மேற்கூறப்பட்ட பிரபந்தங்களாகும்.

எவ்வகையாப்பிலும் பாட, எழுத வல்லவர். கோயிற் பதிகங்களை அதிக நாட்டத்துடன் பாடியுள்ள சிவசேகரனார் ‘ஒப்பில்லா கோணை அப்பா’, ‘திரு கோணமலை நாயகர் ஊஞ்சல்’, ‘கந்தளாய்ப் பிள்ளையார் தோத்திரம்’, ‘சம்பூர்த்தாயே’,‘வெருகலம்பதி சித்திரவேலாயுதர்சுவாமி திருப்பதிகம்’, ‘மண்டூரான் ஆலடியோன் கதிர்காமப்பெருமாள் திருவருட் பாமாலை’, ‘10ம் குறிச்சி சீராளம்மன் திருவூஞ்சல்’ ஆகிய பாடல்களை ஆலயங்கள் மீது பாடி யுள்ளார்.

மகாகவி பாரதி மீதுள்ள பற்றுக்கோட்டினால் ‘மகாகவியுள்ளம்’, ‘பாரதியைப் பாருங்கள்’, ‘பாரதி தரிசனம்’ ஆகிய பாடல்களை எழுதியுள்ளார்.

இவர் பாடிய பாடல்களை, ஈழத்து இலக்கியச் சோலை வெளியீட்டகம், ‘பெ.பொ.சிவசேகரன் கவிதை’ என்ற தலைப்பில் (1998) வெளியிட்டுள்ளது.

## தாமரைத்தீவான்


தாமரைத்தீவான்

கவிஞர் தாமரைத்தீவான் 1932இல் மூதூருக்கும், கிண்ணியாவுக்கும் இடையிலுள்ள ஒரு அழகான விவ சாயக் கிராமமான தாமரைக்கேணியில் பிறந்தார். தான் பிறந்த ஊரின் முற்பகுதியைச் சேர்த்து, புனைபெயராக்கிக் கொண்ட சோ. இராஜேந்திரம் என்னும் இயற்பெயரைக் கொண்ட இவர் ஒரு இளைப்பாறிய அதிபர், ஆவார்.

1956ஆம் ஆண்டு முதல் எழுதிவரும் இவர், இன்றும் எழுதியும், அரங்கு ஏறிய வண்ணமும் இருக் கின்றார். முதலாவது கவிதை சுதந்திரன் பத்திரிகையில் வெளிவரத் தொடங்கிய காலம்முதல் கவிதைத்துறைக்கு தன்னை அர்ப்பணித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட தாமரைத்தீவான், ஈழத்தில் உள்ள பல்வேறு வாரப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதி வருபவர். வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, வானொலி, சுதந்திரன் ஆகியவற்றில் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்த ஒரு கிராமத்தின் ஆத்மா ஆவார்.

1987ஆம் ஆண்டுக்குப் பின், இந்திய இராணுவத்தின் வருகையோடும், இலங்கை அரசியல் முறுகலுடனும் தனது சொந்தப் புலத்தில் இருந்து குடி பெயர்ந்துவிட்ட தாமரைத்தீவான், எத்தனையோ கவிதைகளை எழுதிய போதும் ஆவணப்படுத்தாமையால் அழியவிட்டவர். 1992ஆம் ஆண்டு, மைக்கல் கொலினின் தாகம் கலை இலக்கிய வட்டத்தின் அனுசரணையுடன் இவரது முதலாவது தொகுதி 'கீறல்கள்' என்ற பெயருடன் அச்சுவடிவம் பெற்றது. இதன் பின்னே இவரது, 'போரும்பெயர்வும்' (1999), 'ஐம்பாலைம்பது' (2001), 'பிள்ளைமொழி' (1992), 'உணர்ந்தேன் உரைத்தேன்' (2003), 'சிறுவிருந்து' (2004), 'சோமம்' (2005), 'என்பாநூறு' (2005), 'இணைப்பு' (2008), 'வள்ளுவரந்தாதி' (2002), 'நீத்தார் பெருமை' (2008), 'அன்பழைப்பு' (2009) ஆகிய கவிதை நூல்கள் வெளிவந்தன.

நையாண்டிக் கவிதைகளை நறுக்குத் தெறித்தாற்போல் எழுதும் ஆற்றல் பெற்ற தாமரைத் தீவானின் கவிதைகளில், மோனைத் தொடைகளுக்கு ஏற்ற சொற்கள் வந்துவிழும் அழகு, அபாரம்.

மரபுகளை, தமது கவிதையின் மூலமாகக் கொண்டு எழுதிவரும் இவர், சொல்லை வளைத்து, கருத்தை உள்நுழைத்து, நகைச்சுவை மிளிரச் சொல்வதில் வல்லவர்.

பாரதி, பாரதிதாசன், வள்ளுவன், கம்பன் போன்றோரின் திண்மிய கருத்துக்களை, தனது கவிதைகளில் புகுத்தி, சமூக முரண்பாடுகளை, வாழ்க்கைக் கோலங்களை, மனித நடிப்புக்களை படிப்போர் மனக்கண் முன்னே கொண்டு வருவது போல், கவிதைகளை வடிக்கும் இவரது ஆற்றல் அற்புதமானது.

நையாண்டியில், சமூக அனுபவங்களையும், சீர்திருத்தங்களையும் சொல்ல வல்ல ஒரு கவிஞர் ஈழத்தில் இவரென்று சொல்லலாம். இவர் எழுதிய சாதி என்ற தலைப்பிலான கவிதையின் பின்வரும் வரிகள், இதற்குச் சான்று:

*சாகப் பிறந்திட்ட சாதி - தமிழ்ச்*
*சாதியைப் போலொரு சாதியுண்டாமோ?*
*போகத்துணிந்திட்ட சாதி - தினம்*
*போராடி வானகம் போகின்ற சாதி*
*பறித்திட விடுகின்ற சாதி - எல்லாம்*
*பறிபோனபின்பே பதைக்கின்ற சாதி*
*மறித்திட நினையாத சாதி - எதிர்*
*மாற்றானை உறவாக மதிக்கின்ற சாதி.*
*பழமையில் மூழ்கிடும் சாதி - இந்தப்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பாரிலே யாவர்க்கும் முன் வந்த சாதி*
*பிழையான வழிபோன சாதி - பழம்*
*பெருமையை மட்டுமே பேசிடும் சாதி.*

கவியரங்கில் தலைமையுரையைச் செய்யும் திறன் பெற்ற இந்தக் கவிஞர், தனது வழிகாட்டலின் கீழ், தனது கிராமத்தில் பல்வேறு இளையதலைமுறைக் கவிஞர்களை உருவாக்கி விட்டவர். இதனால், இவர் பிறந்த ஈச்சந்தீவை, கவிக்கிராமம் என்று சொல்லலாம். இவரின் பாசறையிலே வளர்ந்த மு.வே.யோகேஸ்வரன், ஆலன் அ.கௌரி தாசன், தவராஜா ஆகியோர் இவர் வழிவந்த கவிஞர்கள் என்று சொல்வதில் பெருமைப்படுகிறார்கள்.

**கவிஞர் ஈழவாணன்**


ஈழவாணன்

எம்.தர்மராஜா என்ற இயற்பெயர் கொண்ட இவர், திருகோணமலை நகர் வாயிலிலுள்ள இலிங்கநகர் கிராமத்தில் வசித்து வந்தவர்.

கட்டுரை, கவிதை, இலக்கிய விமர்சனம் எனப் பல்வேறு துறைகளில் பிரபல்யம் பெற்று விளங்கிய தர்மராஜா, தினபதி ஆசிரிய பீடத்திலும் சிறிது காலம் கடமையாற்றியவர். மிகச் சிறிய வயதில் இவ்வுலகை விட்டு மறைந்துவிட்ட இந்தக் கவிஞரின் முதலாவது வெளியீடாக 'அக்கினிப் பூக்கள்' (1973) என்னும் கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது.

கலசம் பப்பிளிக்கேசனின் முதலாவது வெளியீடாக வந்துள்ள இந்நூலில், 'அக்கினிப்பூக்கள் பூக்கட்டும்', 'ஆத்மராகம்', 'சுந்தரக் கவிகள்', 'வேதனை போதும்', 'போர்' என முப்பது தலைப்புக்களில் கவிதை தொகுக்கப்பட்டுள்ளது. கவிஞர் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதியவையும் இத்தொகுப்புக்கென எழுதப்பட்டவையுமாக கோர்க்கப்பட்டு, ஈழத்தின் பிரபல்ய கவிஞர் இ. முருகையன் அவர்களின் அணிந்துரையுடன், வெளிவந்துள்ளது.

கவிஞர் ஈழவாணனின் இலக்கியப் பார்வை பரந்து விரிந்து செறிந்தவை. கவிதைகளில் உள்ள சொல்லாட்சித் திறனும், எண்ணச் சீர்மையும், அவரது ஆழ்ந்த அனுபவ வெளிப்பாடுகளும், ஆச்சரியத்தை ஊட்டுகின்றன.

இன்னல்களையும், ஏக்கங்களையும், தத்தளிப்புக்களையும், போராட்டங்களையும், அநீதிகளையும் கடிந்து நொறுக்கினாற்போல் தனது கவிதைகளில் சொல்லி வைத்திருப்பதே, இவரின் பலமாகக் காணப்படுகிறது.

வீறும், விறுவிறுப்பும் கொண்ட வரிகளையும் உணர்ச்சிகளையும், அனுபவங்களையும் பிழிந்து காட்டும் சொற்கோர்வைகளையும் கொண்ட கவிதைகளை இவர் படைத்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது இலக்கியப் பார்வை பற்றி இவரே தனது நூலின் முன்னுரையில் பின்வருமாறு சொல்லி இருக்கிறார்:

> இலக்கியத்தில் நமது கவிதைக்கு என்றும் ஒரு உன்னதமான ஸ்தானம் உருத்துடையது. ஆனால், அவை வெறும் ரூபலாவண்ணியத்தாலோ, அன்றி ஓசை நிரப்பிகளாலோ உருவாக்கப்படுபவை அல்ல. சமுதாயத்தை நிலைக் களனாகக் கொண்டு அதில் வேர்விட்டு எழும் விருட்சமாக உந்தி எழும்போது தான், இக்காலக் கவிதையின் நவீனத்துவம், மூச்சுவிட முடியும் என்ற நோக் குடையவன் நான்

நெருப்புத் தெறிக்கும் வரிகள், புயலக்கும் சொற்கள், உணர்ச்சியைக் கொட்டும் அசைகள், நறுக்குத் தெறித்தாற் போன்ற சொற்கோர்வைகள் இவை யாவும் இவரது கவிதைகளில் வரியப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு, 'போர்' என்ற தலைப்பில், சர்வதேசப் பார்வையில் கவிஞர் செலுத்தும் கவனத்தைக் காணலாம்.

*ஆதிக்க வெறிபடைத்தோர்
உலகத்தோரை
அழிக்கின்ற வெறிபடைத்தோர்
நெருப்புச் சீறி
மோதி அழிக்கின்ற வெடி
குண்டை வீசி
மூட்டுகிறார் செந்தீயை
மக்களெல்லாம்
நாதியற்று ஓலமிடும்
போதுமங்கே
நாயைப்போல்
அன்னவரைச்
சுட்டு வீழ்த்தி
சாதித்தோம் சாதனையென்று
ஆர்ப்பரிக்கும்
சண்டாளர் ரத்தவெறி
ஒழிவதெந்நாள்
கருக்கொண்ட மேகங்கள்
ஒன்றோடு ஒன்று
கனத்துப் பெருவெளியில்
மோதிமண்ணில்
பெருமழையைத் தரவில்லை
யுத்த மேகப்
பீரங்கி புகைகக்கி
எகிப்து நாட்டுத்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தெருக்களிலே சிரியாவில்*
*வீரம் சீறி*
*தெறிகின்ற வியட்நாமில்*
*மக்கள் கூட்டம்*
*உருக்குலைந்து பிணமாகும்*
*காட்சி கண்டும்*
*உறங்காத போர் வெறியர்*
*ஒழிவதெந்நாள்.*

முப்பது வருடங்களுக்கு முன்னர் கவிஞரால் எழுதப்பட்ட போதும், தீர்க்கப் பார்வை உடைய இன்றைய நிலையை, இக்கவிதையினூடாக கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

புதுக்கவிதையென்னும் வடிவம் தலைதூக்கிய 1973ஆம் ஆண்டுகளில் 'விடியல்', 'தாமரை', 'வானம்பாடி' என்ற புதுக்கவிதை ஏடுகள் தமிழகத்திலிருந்து வெளிவந்த காலத்தில் 'அக்னி' என்னும் சஞ்சிகையை நடாத்தி, புதுக்கவிதைக்கு அழுத்தமும், ஆர்வமும் கொடுத்தவர் ஈழவாணன். ஒருசில ஏடுகளுடன் அது நின்றுவிட்ட போதும், ஈழத்து இதழ்களில் அழியா வரலாற்றுப்பதிவு கொண்டது அக்னி.

தருமு சிவராமு, அண்ணல், கவிராயர், ஈழவாணன் போன்ற கவிஞர்களின் காலம், திருகோணமலை இலக்கிய வரலாற்றில் காத்திரமான முன்வளர்ச்சிக் காலமாகும். இவர்கள் இப்பிரதேசத்தின் ஆரம்பகால நவீனகவிதையின் முன்னோடிகளாகத் திகழ்ந்தார்கள். அதே வேளை ஈழத்து முன்னோடி கவிஞர் களுடன் இவர்களது கவிதைக் காலமும் ஆரம்பமாகியது.

இவர்களது காலத்துச் சிந்தனைகளில், மகாகவி பாரதி, பாரதிதாசன் போன்றவர்களின் சுதந்திர தாகத்தின் வீச்சும், வேகமும் தொற்றிக் கொண்ட தனால்தான், இவர்கள் நவீன கவிதையின் முன்னோடிகள் என்று கணிக்கப்பட வேண்டியவர்களாகின்றார்கள்.

## II. 1960 கள்

1965ஆம் ஆண்டுக்குப் பின்னே திருகோணமலையில் இளைய பரம்பரை யொன்று, கவிதைத்துறையில் தலைதூக்குவதைக் காணலாம். அந்தப் பரம்பரை வழிவந்தவர்கள் என்ற வகையில், புரட்சிபாலன், மலைமதி சந்திரசேகரம், வணங்கா முடி, தம்பி தில்லைமுகிலன், செல்வமணிவடிவேல், கே.கே. மதிவதனன், க.கோணேஸ்வரன், செ.நவசோதிராசா, திருமலை அ.சந்திரன், எஸ்.யோசப், புரட்சிவண்ணன், இளையசிவா, திருமலைக்கலைமாறன் ஆகியோரை குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புரட்சிபாலன்

புரட்சிபாலன் மிகச் சின்ன வயதிலிருந்தே எழுத்துத் துறையில் நுழைந்து அரும்பெரும் பணியாற்றி நாலு தசாப்த கால கவிஞராக விளங்குகின்றார்.

கவிதைத் துறையில் மட்டுமன்றி சிறுகதை, நாடகம், ஊடகத்துறை ஆகிய பல்வேறு துறைகளில் தனது முத்திரையைப் பதித்த புரட்சிபாலன் என்னும் க.சண்முகபாலன், சுகாதார அலுவலகத்தில் பணியாற்றி வெளிநாடுகள் சென்று பல தேச அனுபவங்களைப் பெற்று பின்னர் வீரகேசரி பத்திரிகையில் பணி யாற்றிவர். தொடர்ந்தும் பத்திரிகை, சஞ்சிகைகளில் எழுதி வரும் இவர் பல்வேறு போட்டி களில் பங்கு கொண்டு தேசிய விருதுகளையும் சர்வதேச விருதுகளையும் பெற்றவர்.

கவிதைத் துறையில் அதிக நாட்டங்காட்டி வரும் இவரது கவிதைகளில் திருகோணமலை மண்ணின் ஈர்ப்பும், இறுக்கமும் நிறைந்து கிடப்பதைக் காணலாம்.

ஆனந்தசாகரம், வீரகேசரி, மித்திரன், சுதந்திரன், சாவி, தினபதி, சங்கம், ஈழமணி, தினகரன், மலர் செய்தி, சிந்தாமணி, சுடர், தினமுரசு, ஞானம் ஆகிய பத்திரிகைகளில் 200க்கு மேற்பட்ட கவிதைகளை எழுதி வந்துள்ள புரட்சிபாலன், இன்றும் எழுதிக்கொண்டேயிருக்கின்றார்.

இவர் 1961ஆம் ஆண்டு காலத்தில் இருந்து கவிதை எழுதிவந்த போதும், அண்மைக்காலத்தில் எழுதிய, 'தோழிக்கு' (ஞானம்), 'கவிதையும் கவிஞனும்' (ஞானம்), 'சாதிப்பேயை விரட்டுவோம்' (வீரகேசரி), 'விடியலின் ஜனனம்' (வீரகேசரி), 'வயதுபோனதால்' (தினகரன்) ஆகிய கவிதைகள் மூலம் இவரது அனுபவ ஞானத்தையும், சமூகத்தை ஊடுருவிப் பார்க்கும் தீட்சண்யப் பார் வையையும் காணக் கிடைத்திருக்கின்றது. இவரது கவிதைகளின் ஆளுமையை விட சிறுகதைத் துறையில் இவரின் பாதிப்பு கனதியானது என்பதனை பின்னர் பார்ப்போம்.

### மலைமதி சந்திரசேகரம்

மலைமதி சந்திரசேகரம், கவிஞர் மட்டுமல்ல சிறுகதை, நாடகம் ஆகிய துறைகளிலும் அதிக ஈடுபாடு காட்டியவர். திருகோணமலைக் கவியரங்குகளில் ஜொலித்தவர். சிறந்த நாவன்மை படைத்த இக்கவிஞர், இலக்கியத் துறை யிலிருந்து விடுபட்டுப்போய்விட்டார். ஆரம்பகாலத்தில் வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, ராதா, ஜோதி ஆகிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகள் பலவற்றிலும் கவிதைகளை எழுதிக் குவித்த இவரது கவிதைகளும், இவர் ராதா பத்திரிகையில் எழுதிய சிறுகதைகளும் ஆவணம் பெறாத நிலையில் தேடிப்பிடிப்பது கஷ்டமாக வுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பி தில்லைமுகிலன்

துரைவீரசிங்கம் என்ற இயற்பெயர் கொண்ட தம்பி தில்லைமுகிலன், திருகோணமலையிலுள்ள கவியரங்கக் கவிஞர், சிறந்த நடிகர். இவரது கவியரங்க ஆளுமை பற்றி, திருகோணமலை முன்னோடிகள் கலை இலக்கிய அமைப்பின் அமைப்பாளரான கவிஞர் நல்லை அமிழ்தன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

*திருகோணமலை தன்னில்*
*கல்லில்லா அரிசியில்லை - கவிஞர்*
*தில்லைமுகிலன் - இல்லா*
*கவியரங்கு இல்லை*

தனது பள்ளிக் காலத்திலே நடிப்புத் துறையிலும், கலைத்துறையிலும் ஈடுபாடு கொண்ட தம்பி, 1961ஆம் ஆண்டு 'செவ்விதழ்', 'பூசலமலர்' ஆகிய கையெழுத்துப் பிரதிகளில் எழுத ஆரம்பித்தவர், 'ஜோதி' (1967), 'வானொலி' (1963), 'அம்மா' ஆகிய சஞ்சிகைகளிலும் 'தாகம்', 'கன்னித் தமிழ்', 'வசந்தம்' ஆகிய கையெழுத்து, தட்டச்சுப் பத்திரிகைகளிலும் கவிதைகளை எழுதியுள்ளார்.

திருமலையூரான், தம்பிமணியரசு, அக்கினிவண்ணன், பொலிகைதாஷன், திருகோணமலைப் புத்திரன் எனப் பல்வேறு புனைபெயர்களில் எழுதிவந்த இவர், 'செவ்விதழ்', 'பூசலமலர்' ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

தம்பி 1971 - 1986ஆம் ஆண்டுவரை, பலநூறு கவியரங்குகளில் நகைச்சுவைச் செழுமையும், சொற் சிலம்பங்களும் கொண்ட கவிதைகளைப் பாடிப் பாராட்டுதலைப் பெற்றது மாத்திரமல்ல, சில்லையூர் செல்வராஜன் தலைமையில், பல கவியரங்குகளில் மேடையேறியவர்.

கவிஞன், கவியரங்கப் புலவன், நாடகக் கலைஞன், சிறுகதை எழுத்தாளன், பத்திரிகையாளன், நெறியாளன், ஒப்பனையாளன் என்ற பல்வேறு துறைசார்ந்த ஆற்றல் கொண்ட இவர், பாட்டாளி மக்களின் பக்கமாக நின்று தனது கவிதைகளால் மட்டுமல்ல, ஏனைய இலக்கியத் துறைகளாலும் ஆழமான, உறுதிமிக்க பங்களிப்புச் செய்து வருபவர்.

## க.கோணேஸ்வரன்

தினபதி இளைஞர் கவியரங்கில் 'காந்தித் தாத்தா' என்ற கவிதையை எழுதியதன் மூலம், 1966இல் அறிமுகமான க.கோணேஸ்வரன், 1965இல் 'யாழ்நூல்' என்ற கையெழுத்துப் பிரதியின் இணையாசிரியராக இருந்து பல கவிதைகளை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1967ஆம் ஆண்டு சுதந்திரன் இவருக்கு களம் அமைத்துக் கொடுத்ததன் மூலம், பலநூறு கவிதைகளை எழுதிய இவர் தினகரன், வீரகேசரி, ராதா, தினபதி, தினக்குரல், மாணிக்கம், தினக்கதிர், தினமுரசு, சுதந்திரன் ஆகிய பல்வேறு சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் கவிதைகளை எழுதிவந்துள்ளார். 1967இல், 'கன்னித்தமிழ்' கையெழுத்துப் பிரதியின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

திருகோணமலையிலுள்ள கவிஞர்களிடம் காணப்பட்ட பொதுவான பண்பு, எல்லோரும் கவியரங்கில் பாடும் வல்லமை பெற்றவர்கள் என்பதற்கு அமைய, கவியரங்குகளில் இவர் பாடிய திறன், பல மேடைகளில் பாராட்டுப் பெற்றவை.

பாரதியார் நூற்றாண்டை முன்னிட்டு, திருகோணமலையில் நடைபெற்ற கவியரங்கு ஒன்றில் தமிழகத்தைச் சேர்ந்த பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன், இவரின் புலமையைப்பார்த்து 'தம்பி நீ பாரதி' என்று பாராட்டியது, அவரது கவிப்புலமைக்கு கிடைத்த பரிசாகும்.

கவியரங்கத் தலைமை, பட்டிமன்றத் தலைமை, வழக்காடுமன்றம் என பல்வேறு துறைகளில் கால்பதித்த கோணேஸ்வரன், கழகப்புலவர் பெ.பொ. சிவசேகரனார், தாமரைத்தீவான், திருக்கோணமலைக்கவிராயர் ஆகியோரின் தலைமையில் பல கவியரங்குகளில் பங்கு கொண்டு, பாராட்டுப் பெற்றவர்.

ஊடகவியலாளரான இவர், தினமுரசு, சுதந்திரன், முரசொலி பத்திரிகைகளின் நிருபராகவும், கனடிய உலகத்தமிழர் வானொலி சேவையின், இலங்கை செய்தியாளராகவும், கடமையாற்றினார்.

'கன்னித்தமிழ்' என்ற கையெழுத்துப் பிரதியை நடாத்தி வந்த இவர், 1988ஆம் ஆண்டளவில் சந்துரு என்பவரை இணை ஆசிரியராகக் கொண்டு, 'வசந்தம்' என்னும் திங்கள் ஏட்டை நடாத்தி வந்தார். அதுவும் ஒரு சில ஏடுகளுடன் நின்றுவிட்டது.

மரபுக் கவிதையில் அதிக நாட்டமுடைய இவர், புதுக்கவிதைகளையும் எழுத முடியும் என்று நிரூபிப்பது போல், பின்வரும் கவிதையை எழுதியுள்ளார்:

*ஓ.. அன்று வான் பறவைகள்*
*எச்சம் போட்டன.*
*தடவிப் பார்த்தேன் குளிர்ந்தது*
*ஆனால் இன்று*
*பறவை எச்சம் போடுகின்றன*
*தடவ முடியவில்லை*
*தகிக்கிறது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### செ.நவசோதிராசா


செ.நவசோதிராசா

கோணேஸ்வரனைப் போலவே, இவரது சகபாடியான செ.நவசோதிராசா 'கன்னித்தமிழ்' கையெழுத்துப் பத்திரிகையில் எழுத ஆரம்பித்தவர். இயல்பான கவியாற்றலும், சொல்லாற்றலும் மிக்க இவர், சுதந்திரன் பத்திரிகையில் பல்வேறு கவிதைகளை எழுதியுள்ளார். இவர் எழுதிய கவிதைகள், 'நெற்றிக் கண்' என்ற பெயரில் அம்மா பதிப்பகத்தின் வெளியீடாக வரவுள்ளது.

இவர்கள் இருவரதும் காலத்தைச் சேர்ந்தவர்கள், புரட்சி வண்ணன், திருமலைக்கலைமாறன், இளையசிவா ஆகியோர். இவர்களில் இளைய சிவா, 'மாலை நிலா' என்ற கையெழுத்துப் பிரதி நடாத்தியவர், சிறந்த நடிகரும், நாடக ஆசிரியருமாகத் திகழ்ந்தவர். 'வணங்காமுடி' என்ற பெயரில் 1965ஆம் -70ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில், கவியரங்குகளில் நிமிர்ந்து திரிந்த கவிஞர். மற்றும், வானொலியில் அடிக்கடி கவிதைகளால் திருகோணமலையை அடையாளப் படுத்திய, திருமலை. அ.சந்திரன், திரு.எஸ்.யோசப் (அதிபர்) ஆகியோரும் நினைவு வைத்திருக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

### செல்வமணி வடிவேலு

ஆங்கிலத்திலும், தமிழிலும் சிறந்த பாண்டித்தியம் பெற்ற இக்கவிஞர். 1965ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரியாக பட்டம் பெற்று, ஆசிரியராக, ஆங்கில வட்டாரக் கல்வியதிகாரியாக கடமையாற்றியவர். தற்போது, புலம் பெயர்ந்து அங்கும் சமூக சேவை செய்து வரும் இவர், பெண்ணுரிமைகளுக்காக மிக நீண்ட காலமாக போராடிவருபவர்.

பல்வேறு கவியரங்குகளில் பெண்விடுதலை, உரிமை, திறன் பற்றி பேசியவர், பாடியவர். இவரது கவியரங்கக் கவிதைகள், ஏட்டு வடிவில் இடம்பெறா விட்டாலும், இவர் எழுதிய பின்வரும் கவிதையொன்று இவரை அடையாளம் காட்டும் கவிதையாகும்:

*தென்றல் தவழும் திருக்கோணமலையோனே*
*தேனமுதத் தமிழனுக்கேன் தீராத வேதனைகள்*
*தெம்பு சொல்ல நீயன்றோ வரவேணும் ஐயா*

*தேடுகின்ற அமைதி வாழ்வு தரவேணும் ஐயா*
*தீராத்தமிழ்ப் பிரச்சனைக்குத் தீர்வு காணவேண்டும்*
*தீயவரின் கொட்டத்தை நீயடக்க வேண்டும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப்பற்றும், தேசப்பிடிப்பும் மிக்க இவர் தன்னை ஒரு எளிமை கொட்டும் பெண்ணாக நினைத்துக் கலகலப்பாகப் பழகும் சுபாவம் கொண்டவராக விளங்கினார். இவரைப் போலவே, அக்காலக் கட்டத்தில், கவியரங்குகளில் பிரபல்யம் பெற்ற ஓர் பெண்கவிஞராக விளங்கியவர், ரெஜினா வில்லியம்ஸ்.

## III. 1970 கள்

70க்குப் பின்னைய காலம், திருகோணமலை மண்ணில் பல்வேறு விதமாக கலை, இலக்கியப் புயல் வீசத் தொடங்கிய காலமென்று சொல்லலாம். இக்காலப் பகுதியில், 'முன்னோடிகள்' அதனைத் தொடர்ந்து 'சங்கப்பலகை' என்ற கலை இலக்கிய அமைப்புக்களும், சிறிய சிறிய இலக்கியக் குழுக்களின் கவி வடிப்புக்களும் மலிந்து காணப்பட்டதனால், இக்காலப்பகுதி திருகோணமலை இலக்கிய வளர்ச்சியில் முக்கிய காலகட்டமாக கருதப்படுகின்றது.

### முன்னோடிகள் (1970 - 1975)

'முன்னோடிகள்' என்னும் கலை, இலக்கிய விமர்சகர் குழு ஒன்று, திருகோணமலையின் கலை, இலக்கிய வளர்ச்சியில், விழிப்பையும் வேகத்தையும் தந்து நின்றது. நல்லைஅமிழ்தன், இராஜதர்மராஜா, புஸ்பா கோமஸ், திருமலைநவம், இரத்தினவிக்னேஸ்வரன், மு.ராஜ்கபூர், க.பவானந்தன், தங்க-சச்சியானந்தன், செல்லப்பா, சூ.நோபேட் ஆகிய ஆர்வமுடைய இளைஞர் குழு ஒன்று சேர்ந்து இதனை நடாத்தி வந்தனர். இந்த இளைஞர் குழாம், இடதுசாரி சிந்தனைகள் மீது ஈர்க்கப்பட்டவர்களாக, சமூக பிளவுகளுக்கும், ஏற்றத் தாழ்வுகளுக்கும் வர்க்க வேறுபாடுகளே காரணம்; எனவே ஒரு சமதர்ம சமூக அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதில், அதிக ஆர்வம் காட்டிய இவர்களுடைய கூட்டுச் சேர்ப்பின் ஓர் அமைப்பாகவே, இந்த 'முன்னோடிகள்' அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது.

இவ்வமைப்பில் பிரதி திங்கள்தோறும் பௌர்ணமி தினத்தில் நடாத்தப் பெற்ற விமர்சன அரங்கு, கவியரங்கு, நாடக அரங்கு ஆதியன புதிய தலைமுறைக் கலைஞர்களை ஊக்கப்படுத்திவிட்டதுடன் இலக்கிய ஆர்வத்தையும் தூண்டி விட்டன.

இவ்வமைப்பால் நடாத்தப்பெற்ற 'நான் ஏன் எழுதுகிறேன்' (1972) என்ற தலைப்பில் நடாத்தப்பெற்ற உரையரங்கில் நா.பாலேஸ்வரி, செங்கைஆழியான், வ.அ.இராசரத்தினம், செம்பியன்செல்வன் போன்ற ஈழத்தின் பிரபல்ய எழுத்தாளர்கள் கலந்துகொண்டு தெரிவித்த கருத்துக்கள் திருகோணமலை இலக்கிய வரலாற்றில் புதிய அத்தியாயத்தைத் தூண்டிவிட்டது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1974ஆம் ஆண்டு இவ்வமைப்பினால் நடாத்தப்பெற்ற முன்னோடிகள் எழுத்தாளர் மாநாடு இலங்கை வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒரு காலக் கட்டத்தை பிரதிபலித்து நின்றது.

திருகோணமலை, கல்முனை, மன்னார், யாழ்ப்பாணம், மட்டுநகர், அநுராதபுரம், கொழும்பு, மலையகம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மூத்த, இளைய எழுத்தாளர்கள், கலைஞர்கள் இரண்டு நாட்கள் திருகோணமலை இந்துக்கல்லூரியில் (யூன்22,23) கூடிய மகாநாடு திருகோணமலை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

இந்த இரண்டுநாள் மகாநாட்டில் கலந்து கொண்ட ஈழத்தின் புகழ் பெற்ற எழுத்தாளர்களான செ.கணேசலிங்கன், டானியல், அநுராதபுரம் பெ.மனோகரன், பாலமுனை பாறுக், பாண்டியூரான், ஷெல்லிதாஷன் ஆகிய பலநூறுபேர் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளை சிறப்பித்தனர். இம்மகாநாட்டில் செ.கணேசலிங்கன் அவர்களால் வாசிக்கப்பட்ட 'ஈழத்தின் பூர்சுவா இலக்கியம்' என்ற கட்டுரை பல்வேறு விமர்சனங்களுக்கு ஆளானது.

இவ்வமைப்பு, 'ஈழத்துச் சிறுகதைமணிகள்' (1973, செம்பியன்செல்வன்); 'செம்பருத்திகள்' (கவிதை-1974, நல்லைஅமிழ்தன்); 'ஒருதோழனின்காதற் கடிதம்' (கவிதை - 1974, புதுவை இரத்தினதுரை) ஆகிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளது.

இந்தப் பாசறையில் வளர்ந்த பலர் 'வானம்பாடி', 'தாமரை', 'விடியல்', 'குமரன்' போன்ற ஏடுகளின் வரவினாலும், அருட்டுணர்வினாலும் புதிய கவிஞர்களாக உருவாக்கப்பட்டார்கள். குறிப்பாக வானம்பாடிக் குழுவின் புதுக்கவிதைத் தாக்கம் அல்லது கவர்ச்சி காரணமாக பல கவிஞர்கள் திருகோணமலையில் சரமாரியாக எழுதினார்கள். 'தினகரன்', 'மல்லிகை', 'குமரன்' போன்ற பத்திரிகைகளில் இவை செறிவான இடம்பிடித்தன. உதாரணத்திற்கு ஒருசில கவிதைகளைத் தருகிறேன்.

*எங்கள் குளத்தின் தாமரைகள்*
*உங்கள் கோயில்களின்*
*அர்ச்சனைக்காய் மலரவில்லை*
*பொங்கி வெடித்திடும் புரட்சிப் படைக்கு*
*தங்கள் இதழ்களை தரையில் வீசத்தான்*
*குளத்தில் மலர்கின்றன'*

*உன் வசந்தப் படுக்கைக்கு*
*என்னை நீ அழைக்குமுன்*
*எனக் கொருபணியுண்டு*
*எம்வர்க்கப் போராட்டத்துக்கு*
*வார்த்து விட்டு வருகின்றேன் - உடலில்*
*ஓடும் இந்த இரத்தத்தை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70ஆம் ஆண்டைத் தொடர்ந்த காலப்பகுதியில் மேலே கூறப்பட்ட கவிஞர்களோடு, கே.கே.மதிவதனன், ஆலன், அசனார், சண்முகப் பிரியா, ஆலையூரான், ஜெயந்தி வைரமுத்து, நிலவின்தாசன், நிலாதமிழின்தாசன், திருமலை - ராசரத்தினம், பாலையூற்று அஸ்ரபாநூர்டீன், திருமலை அ.சந்திரன் போன்ற கவிஞர்களை தனியொரு பட்டியலாக நோக்கவேண்டியது அவசியம்.

### கே.கே.மதிவதனன்


கே.கே.மதிவதனன்

முன்னைய தலைமுறையைச் சேர்ந்தவரான கே.கே.மதிவதனன் மெல்லிசைப் பாடல் எழுதும் திறன் பெற்றவர். நடிகர், நாடக ஆசிரியருங்கூட. இவர் வானொலி, இசைக் குழு போன்றவற்றுக்கு எழுதிவந்த மெல்லிசைப் பாடல்கள் அகில இலங்கை ரீதியாகப் புகழ் பெற்றவை. இவை தவிர ஈழத்தின் பத்திரிகைகளான தினகரன், வீரகேசரி, சிந்தாமணி போன்றவற்றிலும் இவர் பல கவிதைகளை எழுதியுள்ளார்.

### சண்முகப்பிரியா

இவரைப் போலவே சண்முகப்பிரியா எனும் புனைபெயர் கொண்ட சண்முகராசா மெல்லிசைப்பாடல்கள் பலவற்றை எழுதியவர். இவரது பல பாடல்கள் திருகோணமலையில் (1970-1974) புகழ் பெற்றிருந்த இசைக் குழுக்களான பரமேஸ்கோணேஸ், கலைவாணி இசைக்குழு, நீரோ இசைக்குழுவினரால் இசையமைத்துப் பாடப்பெற்றன.

சண்முகப்பிரியா அவர்களால் எழுதப்பட்ட ஒரு சில பாடல்கள் திருகோணமலை இசைக்குழு திரு. பத்மநாதன் அவர்களால் இசையமைக்கப்பட்டு ஈழத்துத் திரைப்படமான நிர்மலாவில் சேர்க்கப்பட்டுள்ளது.

### எஸ். அருளானந்தம்


எஸ். அருளானந்தம்

ஆலன், கேணிப்பித்தன் என புனைபெயர்களில் எழுதிவரும் ச. அருளானந்தம் ஆலங்கேணி என்னும் அழகான கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். ஆசிரியராக, அதிபராக, கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியவர்.

நகைச்சுவையை நாக்கின் நுனியில் வைத்து இனிக்க இனிக்க உரையாடும், கவிபாடும் ஆலன் பிறப்பால் ஒரு கவிஞன்போல் கடாட்சம் பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் கவிதைகளில் நகைச்சுவையும் நல்ல தமிழும் கலந்து கிடக்கும். குமரன், வீரகேசரி, தினகரன், சுதந்திரன், தினக்குரல் போன்ற பத்திரிகைகளில் நிறைய எழுதியுள்ளார்.

*பாட்டாளி துயர் துடைக்க*
*பாய்ந்து வரும் ஒளியினைப் போல்*
*ஓட்டாண்டி நிலை மாற்ற*
*உழைப்பவரின் அணிவருது*
*விடுதுயர் எழும்பு*
*வேல் போல் புறப்படடா*
*எடு கொடி வெற்றி*
*ஏனோ தயக்கம் இன்னும்*
*நாளை நமது உலகு*
*நாடும் புது வாழ்வு* *(குமரன்)*

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

சிறுவர் பாடல்கள் பாடுவதிலும் வல்லவரான இவர், தனது ஆசிரிய அனுபவத்தை வைத்துப் பாடிய, 'இன்பக் கனிகள்', 'சிறுவர் பாடல்கள்' (90), 'காகமும் தம்பியும்' (96) ஆகிய பாடல்கள், பல பரிசில்களைப் பெற்ற நூல்களாகும்.

'சிறுவர் இலக்கிய வித்தகர்' என்னும் பட்டப்பெயரை, வவுனியா நண்பர்கள் கலை இலக்கிய வட்டம் அளித்தும், இலங்கை அரசு 'கலாபூஷணம்' என்னும் கௌரவ பட்டத்தை அளித்தும், தேசிய கௌரவத்தை இவருக்கு தந்துள்ளன.


25ற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள ஆலன், அநேகமாக சிறுவர் களுக்கென்றே கதைகளையும், பாடல்களையும், நாவல்களையும் எழுதி யுள்ளார்.

இவரது இரு சிறுவர் இலக்கிய நூல்கள், கிழக்கு மாகாண இக்கிய விருதையும், சாகித்திய விருதையும் பெற்றுள்ளன.

இவர் எழுதிய நூல்களாவன: இன்பக்கனிகள் (சிறுவர் பாடல்), பாட்டுப் பாடுவோம், சின்னச் சின்ன பாட்டு, மனதிற்கினிய பாட்டு, ஆனந்தமான பாட்டு, கடலும் காவிரியும், சகோதரராய் வாழ்வோம், பூஞ்சிட்டுக்கள் (சிறுவர் கதை), தங்க மாம்பழம் (சிறுவர் கதை), சின்ன தேவதைகள் (சிறுவர் கதை), கண்ணனும், இராமனும் (சிறுவர் கதை), சிறகு முளைத்த கதைகள் (சிறுவர் கதை), பளிங்குத் தீவு (சிறுவர் நாவல்), காட்டில் கலவரம் (சிறுவர் நாவல்), பயங் கொள்ளல் ஆகாது பாப்பா (சிறுவர் நாவல்), உல்லாச பயணம் (சிறுவர் நாவல்), மனதில் உறுதி வேண்டும் (சிறுவர் நாவல்), துணிச்சல் மிக்க சுந்தரி (சிறுவர் நாவல்), அந்த ஆவணி ஆறு (சிறுகதை), வம்மிப்பு (சிறுகதை), கேணிப்பித்தன் சிறுகதைகள் (சிறுகதை), கேணிப்பித்தன் கவிதைகள் (2002).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலா தமிழின்தாசன்



நிலா தமிழின்தாசன்

மிக்கேல் அருள்மொழிராசா என்ற இயற்பெயர் கொண்ட நிலாதமிழின்தாசன், இயற்கையான கவியோட்டமும், கற்பனை ஆற்றலும் வாய்ந்தவர். நிலாவெளிக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தினபதி கவிதாமண்டல பகுதியில் அறிமுகமாகி, நூற்றுக்கணக்காக கவிதைகளை தினபதி பத்திரிகையில் எழுதி வந்தவர்.

'மஞ்சுமணாளன்' என்னும் புனைபெயரிலும் எழுதி வரும் நிலாதமிழின் தாசனின், 'நெருப்புக்கிடையே நீந்தும் நிலாக்கள்', 'நாளை' (1993), 'புலர்வு' (1994), 'அம்மா' (2000), 'போர்' (2001) (மரபுக்கவிதை), 'இளைஞர்கள் ஏற்கவேண்டிய சபதம்' (2010) ஆகிய தொகுதிகள் வெளிவந்துள்ளன.

இவரின் கவிச்செழுமைக்கு இவர் எழுதிய இப்பாடல் ஒரு சிறந்த சான்று.

*கொடுமை கண்டே*
*குமுறியெழும் - இவன்*
*கூறும் கவிகள் தீயுமுழும்*
*அடிமைத் தளையை அறுத்திடுவான் - இவன்*
*ஆசை உலகில் சமத்து வந்தான்.*

அண்மையில் வெளிவந்த இவரது இளைஞர்கள் ஏற்கவேண்டிய 'சபதம்' கவிதை தொகுதி, சமூக சிதறல்களின் தொகுப்பாக வந்துள்ளது. 'நெருப்பிடையே நீந்தும் நிலாக்கள்' என்ற தொகுதி, காவியக் கவிதைகள் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இதில் புவியியல், வரலாறு, காதல், சமூகப்புரட்சி, அரசியல் போன்ற சமூக இயங்கியல் கூறுகளை முதன்மைப்படுத்தியுள்ளார், இதில், காதலையும் கூறி, அதேவேளை தியாக உணர்வுகளையும் சுட்டிக்காட்டி, நியாயப்படுத்தி, காதலுக்கு அப்பால் காவியத்தை நகர்த்தி, தியாகத்தை முதன்மைப்படுத்தி முடித்திருக் கிறார்.

சமூக பொருளாதார வர்க்க வேறுபாடுகளின் தாக்கமும், நெருப்பாறு போன்ற இனப்பிரச்சனைகளின் தாக்கங்களுமே கவிஞரை இன்நிலைக்கு உள்ளாக்கியுள்ளது, என்பதை கவிதை ஓட்டமும், பாத்திரங்களின் உணர்வு நிலைகளும் புலப்படுத்துகின்றன' என எழுத்தாளர் கே.ஆர். டேவிட் குறிப் பிட்டுள்ளார். வசதி படைத்த குடும்பத்தை சேர்ந்த ஜோதியினதும், வசதி குறைந்த குடும்பத்தைச்சேர்ந்த வேந்தனதும் காதல் மறுக்கப்படுகின்ற செய்தியை கூறுகின்ற கவிஞர், திட்டமிட்ட வகையில், தமிழர்கள் தாக்கப்பட்டதையும் இயல்பாக கூறி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி



சமூக முரண்பாட்டுடன், தேசிய முரண்பாட்டையும் ஒப்பீடு செய்து, தேசிய முரண்பாட்டை முன்னிலைப்படுத்தி, காவியத்தை நிறைவு செய்துள்ளமை, நுணுக்கமான உத்தி முறையென, டேவிட் மேலும் குறிப் பிட்டுள்ளார்.

### மா.வி.ஆனந்தன்

பிறமொழிக் கவிதைகளை மொழிபெயர்ப்பதில் வல்லவரான மா.வி. ஆனந்தன், சர்வதேச மொழியான ஆங்கிலத்தில் வெளிவந்த சில சிறந்த கவிதைகளை மொழிபெயர்த்து, வெற்றிகண்டவர். மொழிபெயர்ப்புத் துறையில் சிறந்த அனுபவம் உடைய ஆனந்தன், மூலத்தை தமிழில் தரும் வல்லமை உடையவர் என்பதற்கு பின்வரும் ஆங்கிலத்திலுள்ள சீனக்கவிதையின் தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்றே சாட்சி பகரும்:

*மலையோரம் நாம் பிரிந்தோம்*
*கதிரவன் புறப்பட்டதால் நான்*
*என் மரக்கதவுகளை மூடினேன்*
*புற்கள் மீண்டும் பசுமையாகிவிடும்*
*அடுத்த வசந்தத்தில்*
*ஆனால் என் அன்பு நண்பனே!*
*நீ திரும்பி வருவாயா?*

### மூதூர் முகைதீன்

திருகோணமலையின் 70க்குப் பின்னுள்ள கவிதை வளர்ச்சிப் போக்கில், புதுக் கவிதையை ஆராதித்த ஒரு கவிஞர், மூதூர் முகைதீன் என்னும் கவிஞர்.

முத்து என்ற தலைப்பில் இவரால் வெளியிடப்பட்ட புதுக்கவிதைத் தொகுதியில், திக்குவல்லை கமால் குறிப்பிட்ட கருத்தை அப்படியே தருகிறேன்:

> சமுதாயப் பரப்பில் நிகழும் போலித்தனங்கள், முரண்பாடுகள், வர்க்கவுணர் வுகள் முதலியனவே இன்றைய பெரும்பாலான கவிதைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன.' இத்தொகுப்பில் அடங்கியுள்ள கவிதைகளும் அதற்கு விதிவிலக்கல்ல.
>
> பிட்டும் தேங்காய்ப்பூவும்' 15 கவிதைகள் உள்ளடங்கிய இக்கவிதையில், சமகாலப் போராட்டங்கள், அவலங்கள் அடித்துக் கூறப்படுகிறது.
>
> புதுக்கவிதையின் அமைப்பும், மரபுக்கவிதையின் ஓட்டமும், நவீன சமூகப் பிரச்சனையும் உள்ளிட்டுக் கோர்க்கப்பட்டுள்ள இக்கவிதைகளைப் படிப்பதன் மூலம், நெஞ்சைக்கருக்கும் வரிகளாக, அவை தெரிவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகம் ...
யாழ்ப்பாணம்



*மனித நேயங்கள்*
*மரித்துப் போனதால்*
*மண்டை ஓடுகளைத் தேடும்*
*அகழ்வாராய்ச்சிகளுக்கு*
*மனுப் போடும் வேலைகளே*
*இப்பொழுது*
*மலிந்து விட்டன*
................................................
................................................
*எங்கள் தேசத்துப்*
*புதல்வர்களோ*
*புதை குழிகளில் கூட*
*உறங்க முடியாமல்*
*வதைக்கப்படுகையில்*
*இங்கே!*
*மானுட நாகரீகங்களும்*
*மரித்து விடுகின்றன.*

இயல்பான அனுபவ வெளிப்பாட்டுடன், உணர்வோடு சங்கமித்து, கவித்துவ வேகத்துடன் பிறக்கும் பொழுதே, கவிதை உயிர்த் துடிப்புடையனவாக இடம் பிடித்து விடுகின்றன என்பதற்கு, இவரின்

*உழைத்து எம்கரங்கள்*
*உரமேறி விட்டதனால்*
*பிழைக்க எங்களுக்கு*
*வலுவுண்டு ஆதலினால்*
*நீங்கள்*
*இனிமேலும் குறுக்கிட்டால்*
*அறுத் தெறியும்*
*வல்லமையும் எமக்குண்டு.*

என்ற வரிகளும் சான்று பகருகின்றன. இவர் கவிதைகளில் காதலின் துயரங் களும், வேதனைத்தீயும் சுடர்விடுவதைக் காணலாம்.

இவரது இன்னொரு கவிதைத் தொகுதி, 'இழந்து விட்ட இன்பங்கள்' (2003) மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தின் வெளியீடாக வந்துள்ளது. நான்காவது தொகுதியாக, 'ஒரு காலம் இருந்தது' (2010) மூதூர் கலை இலக்கிய ஒன்றிய வெளியீடாக, அண்மையில் வெளிவந்துள்ளது.

தற்காலத்தில் கொழுந்துவிட்டெரியும் தேசிய பிரச்சனைகளை உலுப்பிக் காட்டுவதாக அமைந்த இருபது தலைப்புக்களில் பாடப்பட்ட மரபுக் கவிதைகள் இவை. இலங்கையின் யுத்தகால பிரச்சனைகளை பகைப்புலமாக கொண்டு ஆக்கப்பெற்றதென, கவிஞர் தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்திற்கு எதிராகவும், சமாதானத்தை தேடி ஏங்கிய அவாவும் இக் கவிதைகளை உருவாக்கியுள்ளன. புதுக்கவிதை போலவே, மரபுக் கவிதை களையும் படைக்க வல்லவன் யான் என்ற அகங்காரத்துடன் பாடியுள்ள தனது சமாதான ஏக்கத்தை, இப்படிக் காட்டியுள்ளார்.

*கார்மேகம் சூழ்வதைப்போல்*
*போர்மேகம் இவ்வுலகில்*
*ஊர் ஊராய் அலைவதினால்*
*உதிர்கிறதோ குண்டு மழை*
*அடிபட்டும் வெடிபட்டும்*
*அழிகின்ற உடல் விட்டு*
*வழிந்தோடும் குருதியினால்*
*அருவிகளும் சிவந்ததுவோ*

இவரது நான்காவது கவிதைத் தொகுதியாக, 'ஒரு காலம் இருந்தது'. (2010) மூதூர் கலை இலக்கிய ஒன்றிய வெளியீடாக வந்துள்ளது. தனது உள்ளத்தில் பாதிப்பை ஏற்படுத்திய கடந்தகால வரலாற்று நிகழ்வுகளை கருப்பொருளாகக் கொண்டு, படைக்கப்பட்டது இக்கவிதை நூல் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## IV. 1980 கள்

1980ஆம் ஆண்டுக்குப் பின்னைய காலப்பகுதி தொடக்கம் இன்றுவரை, இரு தசாப்த கால அரசியல் நெருக்கடிகள், புலம்பெயர்வுகள், பொருளாதார உடைவுகள் திருகோணமலைக் கிராமங்களை பாரம்பரியமான பண்புகளிலிருந்து அதிர வைத்த சூழ்நிலையில், இம்மண்ணைவிட்டு இடம்பெயர்ந்தவர்கள் போக, பல கவிஞர்கள், தங்கள் பங்களிப்பைச் செய்தவர்களாகக் காணப்படுகிறார்கள். அவர்களுக்கென ஒரு நீண்ட பட்டியலைத் தயாரிக்க வேண்டியுள்ளது.

சி.சிவசேகரம், அ.கௌரிதாசன், நிலாதமிழின்தாசன், மைக்கல் கொலின், ராஜேந்திரன், ராஜசேகர், லிங்கேஸ்வரன், முகமட்சாலி, அஸ்ரப்பா நூர்டீன், சிவகுமார், ஜவ்பர்கான், சி.காண்டீபன், யூலியன் புஸ்பராஜன், ஷாஷகான், முகமட்சாலி, காந்தரூபி, தாரிணி, அக்கினிவண்ணன், கிண்ணியா ஏ.எம்.எம். அலி, ஏ.ஏ.அமீர்அலி, கெ.ஜெ.தர்மகுலராஜா, நியாஸ், முஸாதிக், சங்கமஷியாம், திருமலைராஜன், சிகண்டிதாசன்,அமீர்டீன்,கே.முகமட்,எம்.கே.எம்.ஷகீப், கேணிப்பித்தன், கிண்ணியா ஏ.நஸ்புள்ளா, திருமலைச்செல்வன், எஸ்.சுதாமதி, போஷ்யா, சேனையூர் இள. இரவீந்திரன், மகிபாதேவன், ஜபார், நிரஞ்சனி, சி.பற்குணம், எம்.எல்.ஏ.ஜவாத் ஆகியோர் இக்காலத்திற்குள் உள்ளடக்கப்பட வேண்டியவர்களாவர்.

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சி.சிவசேகரம்


சி.சிவசேகரம்

திருகோணமலை பெற்றெடுத்த ஒரு அறிஞன், கவிஞன் சி.சிவசேகரம். தருமு சிவராமு போலவே திருகோண மலை இந்துக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பெற்று, பல வருடங்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில், பொறியியல் துறைப் பேராசிரியராகக் கடமையாற் றியவர்.

கலாநிதி சிவசேகரம், கவிஞராக மட்டுமன்றி தலைசிறந்த விமர்சகராகவும், ஆய்வாளராகவும் அறியப்பட்டவர். மாக்ஸிஸ கண்ணோட்டத்துடன், சமூக ரீதியான ஆற்றல்களையும் வெளிப்படுத்தும் சிவசேகரத்தின் கவிதைகளில், அரசியல் உக்கிரம், சாதிப் போராட்டம், சர்வதேச நோக்கு என்பவை நிறைந்து கிடப்பதைக் காணலாம். 'நதிக்கரை மூங்கில்', 'செப்பனிட்டபடிமங்கள்', 'தேவி எழுந்தாள்' (1991), 'பாலை' (1999) (மொழிபெயர்ப்பு), 'போரின் முகங்கள்' (1996), 'கல்லெறி தூரம்', 'ஏகலைவ பூமி' (1998), 'வடலி' (1999) 'இன் னொன்றைப் பற்றி', 'மா.ஒ. சேதுங் கவிதைகள்' '(1976) (மொழிபெயர்ப்பு)', 'பணிதல் மறந்தவர்' (1993), 'மறப்பதற்கு அழைப்பு' (2003), 'முட் கம்பித்தீவு' (2010) ஆகியவை இவர் எழுதிய நூல்களாகும்.

முற்போக்கு இலக்கியம், சமுதாயத்தைப் புடம் போட்டுக் காட்டுவது மட்டுமன்றி, சமுதாயத்தை மாற்றியமைக்கும் கருவியாகவும் அமையவேண்டும் என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டவர், சிவசேகரம். இலங்கையின் சமுதாய அரசியலில், அவர் நேரடியான தொடர்பு கொண்டவர் என்பதற்கு இவர் எழுதிய,

*சற்றே வழிவிலகி*
*நந்தி வழிவிட்டாற்போல்*
*வெலிக்கடையின் சிறை கூட*
*இரும்பு நெடுங்கதவு*
*தானே திறக்கும்*
*அங்கு*
*காவலர்கள் அறியாமல்*
*கற்றவர்கள் சூழ்ந்திருக்கும்*
*அறைக்குள் கொலை நடக்கும்*

போன்ற கவிதைகள் உதாரணங்களாகும்.

இவர் கவிதைகள் சமூக, சமுதாய வாழ்வின் அவலங்கள், அழிப்புக்கள் நீக்கப்பட வேண்டும் என்று வேண்டுவதைக் காணலாம். இசை வேகமும், நதித்தாளமும், சொற்சிலம்பமும் இவர் கவிதைகளில் விளையாடுவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின், 'கல்லெறிதூரம்' எனும் கவிதைத் தொகுதியில் வரும் வரிகள், இன்றைய நாகரிக மனிதனின் அளவிட முடியாத வளர்ச்சியினை, எள்ளிநகைக்கும் விதமாக எழுதப்பட்டிருக்கின்றது.

மனிதனை நேசிக்க மறந்த மனித இயந்திரங்களின் சீரற்ற பொறி முறைகள், மிகவும் தெளிவாக அடையாளம் காட்டப்படுகின்றன. மனித நேயத்தினை ஆழமாகக் கொண்டு படைக்கப்பட்டிருக்கும் இக்கவிதைகளில் துயரத்தின் இடிபாடுகளில் நசுக்கப்பட்டிருந்த போதும், விடுதலையின் மீது அவன் கொண்டிருக்கக்கூடிய நம்பிக்கை, சொல்லப்படுகிறது.

"பாலஸ்தீனமும் இலங்கையும் இரண்டு நாடுகளாக இருந்தபோதும், உள்ளத்தில் பதிக்கப்பட்ட காயங்கள், யுத்தத்தால் சிதைக்கப்பட்ட காயங்கள், வாழ்வியல் என்பன ஒன்றாக இருப்பதனை, வாசகன் உணரும் வகையில் எழுதப்பட்டிருக்கின்றது" என இக்கவிதைத் தொகுதி பற்றி சை.கிங்ஸ்லி கோமஸ் குறிப்பிட்டுள்ளார்.

**பாலையூற்று அஸ்ரப்பாநூர்டீன்**

திருகோணமலை கலை, இலக்கிய வளர்ச்சிக்கு, பெண்களின் பங்களிப்பு ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இருந்து வந்திருக்கிறது. அந்த வகையில், கவிதைத் துறையில் இயல்பான ஆற்றலும், கவித்துவமும் கொண்ட பெண்ணாக விளங்குபவர், பாலையூற்று கிராமத்தைச் சேர்ந்த, அஸ்ரப்பாநூர்டீன். 1962இல் திருமலையில் பிறந்த இவர், கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம் ஆகிய துறைகளில் ஈடுபாடு காட்டி வருபவர். இவரது வானொலி நாடகங்கள், 12க்கு மேற்பட்டவை இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகி உள்ளன. சிந்தாமணி, சரிநிகர், தினகரன், சூடாமணி, வீரகேசரி, தாயகம், சுட்டுவிழி, முக்கனி, தூது ஆகிய பத்திரிக்கைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதி வரும் இவர், அனூரபா, ஆசா பாலையூற்று, அஸ்ரப்பா என்ற புனைபெயர்களில் எழுதிவருகிறார். 2007ம் ஆண்டு, திருகோணமலை மாவட்ட செயலாளர் காரியாலயத்தால் நடாத்தப்பட்ட சாகித்திய விழாவில் கௌரவிக்கப்பட்டார். இவரது கவிதைகள் நூலுருப் பெறாத போதும், ஆங்காங்கே ஏடுகளிலும், பத்திரிகையிலும் வெளியாகும் இவர் கவிதைகள் ஈழத்து இலக்கியத்துக்கு பெண்கள் ஆற்றிவரும் பங்கை நிரூபிப்பதுபோல், அமைந்தவை.

இவர் கவிதைகளில் சமூக சமுதாய வாழ்வில் பெண்களின் அவலங்களும், அழிப்புக்களும் நீக்கப்பட வேண்டும் என்று வேண்டுவதைக் காணலாம்.

*ஒளியிழந்த காலங்கள் ஓடிவிட வேண்டும்*
*உறுதியற்ற நெஞ்சங்கள் உரம்பெறவும் வேண்டும்*
*வழியினிலே பயமின்றி பாதம் செல்லவேண்டும்*
*வாழ்க்கையிலே நித்தம் வஸந்தம் வீச வேண்டும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நாளைவரும் நாட்களுக்காய் நன்மை தேடவேண்டும்*
*நம்பிக்கை கொண்டெதிலும் நடந்து விட வேண்டும்*
*ஏழைகளை செல்லரிக்கும்*
*எதனிலுமே வீணாசை அகற்றிடுதல் வேண்டும்.*

## அ. கௌரிதாசன்

ஆலங்கேணிக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அ.கௌரிதாசன், இக் கிராமத்தில் பிறந்த தாமரைத்தீவான், ஆலன் போன்று, ஆற்றொழுகப்பாடும் திறன் கொண்டவர்.

இவரின் மரபு வாண்மையும், கற்பனைத் திறனும், சந்தவோட்டமும், கவிதைக் குழந்தைக்கு பாலூட்டும் பாங்கு உடையது. இவரின் 'கௌரிதாசன் கவிதைகள்' (1996) சுமார் 25 கவிதைகள் உள்ளடக்கப்பெற்றது. இக்கவிதை களைப் படிக்கும்போது, புரட்சி பாடிய பாரதிதாசனின் ஆவேசத்தினையும், ஆற்றலையும் கண்டுகொள்ளலாம்.


*காலையின் வருகை தன்னைக்*
*கதிரவன் கிரணம் சொல்லும்*
*வாலையின் வயது தன்னை*
*வனப்புறு பருவம் சொல்லும்*
*காளையின் வாலிபத்தை*
*கருவெனும் மீசை சொல்லும்*
*ஏழையின் பசியைப் பற்றி*
*எவரது வயிறு(ம்) சொல்லும்?*

இதேவேளை, திருகோணமலையின் இளைஞர்கள் மரபுக் கவிதைகள் பாடுவது போலவே, புதுக்கவிதைகளையும் பாடவல்லவர்கள் என்பதனை எடுத்துக் காட்டும் ஏடாக, 1987ஆம் ஆண்டு 'சுவடுகள்' என்னும் புதுக்கவிதை ஏட்டைத் 'தாகம்' சஞ்சிகை வெளியிட்டது. இதில், நாம் முன்பு பெயர் குறிப்பிட்ட பல இளைய கவிஞர்கள் எழுதி அழகுபடுத்தினர். இதுபோலவே, 'நிர்வாணம்' புதுக்கவிதை ஏடு ஒன்று வெளியிடப்பட்டது. இவை, காதல் கனவுகளையும் ஏக்கங்களையும் சொல்லிக்காட்டுவனவாக இருந்தன.

## மைக்கல் கொலின்

மிகச்சின்ன வயதிலிருந்தே கவிதை நாட்டமுடைய கொலின் 'தாகம்' என்னும் தட்டச்சு ஏட்டுக்கு ஆசிரியராக இருந்து, திருமலைக் கலை, இலக்கிய வளர்ச்சிக்கு கனதியான பங்களிப்புச் செய்து வரும் இளைஞர். தாகம் ஏட்டின் மூலம் புதுக்கவிதை எழுதும் இளந் தலைமுறையினரையும், மரபுக் கவிதை எழுதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மைக்கல் கொலின்

முன்னைய கவிஞர்களையும் அடையாளங்கண்டு தனது ஏட்டின் மூலம் எழுத வைத்து வந்தவர்.

தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம், இன்னுமொரு தளத்தில் கால் பதித்த வேளை, இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் சமாதானத்தின் காவலர்களாக வந்த இந்திய அமைதி காக்கும் படையின் அநீதிகளை, பதிவு செய்த, இவரது 'ஆட்டாமா ரொட்டியும், ஆட்டிறைச்சிக் கறியும்' என்ற கவிதையில் வரும் வரிகள், ஓர் இனத்தின் மீதான சோகமான பாதிப்புக்களை, மிக அழகாக காட்டியுள்ளது.

தேசமெங்கும் பேசப்படும் எனது மண் திருகோணமலைக்கென 'என் பிரிய ராஜகுமாரிக்கு' என்ற தனது முதல் கவிதை தொகுதியை சமர்ப்பணம் செய்த கொலினின் கவிதை திருமலை மண்ணின் அன்றைய காலக்கட்டத்தின் அரசியல் பின்புலத்தையும், எரியும் சமகாலப்பிரச்சனையையும் இணைத்து சொல்லிய கவிதை தொகுதியாகும். உதாரணத்திற்கு,

*அன்று*
*ராமனின்*
*சந்தேகம் போக்க*
*இராமாயணச்சீதை*
*தீக்குளித்தாள்*
*இன்று*
*எந்த இராமனின்*
*சந்தேகம் போக்க*
*இந்த திருமலைச் சீதை*
*அடிக்கடி*
*தீக்குளிக்கின்றாள்*

கொலினின் கவிதைகளில், அரசியலும், காதலும், கலந்து கிடக்கும் அழகைக் காணலாம். இவை இரண்டும், தனது கவிதைகளின் பிரதான நாதம் என்பதனை கொலின் தனது 'என் பிரிய ராஜகுமாரிக்கு(92)' என்னும் நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளமை, இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

அழகான சொற்களைக் கோர்த்து, புதுக்கவிதையிலும் எண்ணங்களையும், இலட்சியங்களையும் விதைக்கலாம் என்பதை, இவர் கவிதைகள் கோடு காட்டுகிறது. இருந்தபோதிலும், இளமையில் இருந்து விலகமுடியாத காதல் வரிகள், இவரின் இதயத்துக்குள் மணக்கும் அக்கினி மலரைச் சூட்டுவதாக, அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அன்பே வா*
*நாம் நெருப்பைக் காதலிப்போம்*
*காதல் தீயில் நம்மை நாமே*
*கொழுத்திக் கொள்வோம்.*
*என் நினைவில் நீ எரிய*
*உன் நினைவில் நான் எரிய*
*எங்கள் நெருப்பு*
*இந்த உலகின்*
*ஜாதகக் கற்றைகளை*
*எரித்துப் போடட்டும்.*

கொலினின் இக்கவிதை நூலே, திருகோணமலையின் அச்சில் வெளிவந்த முதல் புதுக்கவிதை தொகுதியாக குறிப்பிட்டுள்ளார்,

கொலினை ஆசிரியராக கொண்டு 'பீனிர்ஸ்' என்ற நவீன கவிதா இதழ், 1995ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. பற்குணம், எம்.கே.எம். ஷகீப், அஸ்ரப்பா நூர்டீன், வாசு தேவன், மைதிலி இராகுணசீலன், ஓட்டமாவடி அறபாத், ஆரையம் பதி, மலர்ச்செல்வன், பிரபஞ்சபிரியன் ஆகியோரின் கவிதைகள் அடங்கிய நூலாக இது வெளியிடப்பட்டுள்ளது.

1980ஆம் ஆண்டுக்கு பின்னைய காலப்பகுதியில், ஈழப் போராட்டம், இந்திய இராணுவ வருகை, கிராமிய இடப்பெயர்வுகள், மக்களின் அன்றாட வாழ்வின் சீர்குலைவுகள் என்பன மக்களை இருள்மயமாக்கிவிட்ட காரணத்தினால், இக்காலப்பகுதியில் இலக்கிய நாட்டமுடையவர்களின் வருகை குறைவாகவே இருந்தது. இருந்தபோதிலும், ஆங்காங்கே சிற்றேடுகளிலும், வார வெளியீடு களிலும், கையெழுத்துப் பிரதிகளிலும் பலர் எழுதிவந்தபோதும், அவை திரு கோணமலை கவிதை இலக்கியத்திற்கு காத்திரமான பங்களிப்பாக அமைய முடியவில்லை.

இதற்கு மறுபக்கமாக, புலம்பெயர்ந்து சென்ற ஒரு சிலர் இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ், ஜேர்மன், அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்து கொண்டு எழுதிவந்திருப்பதையும், அறியக்கூடியதாகவுள்ளது.

## V. 1990 கள்

1990ஆம் ஆண்டுக்குப்பின், நாட்டின் யுத்தநிலை காரணமாக, கவிதை நாட்டங் கொண்ட இளந்தலைமுறையினரை காண்பது அரிதாக இருந்த போதும், அங் கொன்றும், இங்கொன்றுமாக ஒரு சில இளைஞர்கள் எழுதினாலும், சமூக ஆழம், சூழ்நிலைத் தேடல், சமூகப் பின்னணி கொண்ட கவிதைகளை ஆக்கியவர்களாக சொல்ல முடியாதிருந்தது.

ஜபார், மகிபாதேவன், எம்.எம்.அலி, ஏ.ஏ.அமீர்அலி, கெ.ஜெ.தர்மகுலராஜா, திருமலைச்செல்வன், எஸ்.சுதாமதி, சிகண்டிதாசன், சி.பற்குணம், நா.சீதரன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எல்.ஏ.ஜவாத் என்பவர்கள் சொந்தப் பெயரிலும், புனைபெயரிலும் வாரமஞ் சரிகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதிய கவிதைகள், ஓரளவிற்கு அந்த வெற்றி டத்தை நிரப்புவதாக இருந்தன.

### ஜபார்

இவர்களில் ஜபார், இளந்தலைமுறையின் கனதியும், சிந்தனை வீச்சும், சமூகத் தரிசனங்களும், தீர்க்கப் பார்வையும் கொண்ட கவிஞராக விளங்குகின்றார். இவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'ஆகவே' சஞ்சிகை, இவரின் ஆற்றலை வெளிக்காட்டும்.

விமர்சகராக, சிறுகதையாளனாக, நாடக ஆர்வலனாக விளங்கும் ஜபாரின் கவிச்செழுமையை, 'தரப்பட்டுள்ள அவகாசங்கள்' கவிதைத் தொகுதி மூலம் காணலாம். இந்நூலின் பிற்பகுதியில் தரப்பட்டுள்ள குறிப்பொன்றில், ஜபார் பின்வருமாறு கூறுகிறார்: "87களின் முற்பகுதியிலிருந்து 88 பிற்பகுதிவரை எழுதப்பட்ட இக் கவிதைகள், அக்காலத்தில் தமிழ் மண்ணில் வாழ்ந்த புத்திஜீவி ஒருவனின் கொதிநிலை அடைந்த மன வெளிக்காட்டலாகவும், அதே நேரத்தில், ஒவ்வொரு பொதுமகனும் தன்னால் புரிந்துகொள்ள முடியாது தனக்குள்ளேயே ஜீரணித்து விட்ட உணர்வுகளின் பொதுப் பதிவாகவும், நிற்கிறது" என்று கூறி யிருப்பதிலிருந்து, இக்கவிஞனின் சூழ்நிலை, மனப்புரட்சி என்பனவற்றை உணரலாம்.

*எனது நெருப்பு எரியத் தொடங்கி*
*வெகுகால மாயிற்று*
*அணைந்து எரிந்து அணைந்து*
*எரிந்து அணைந்து எரிந்து*
*எரிந்தபடி தான் இருக்கிறது*
*அணைந்தே போகாதபடி*

### சி. பற்குணம் (1944 - 1996)


சி. பற்குணம்

யாழ் சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்ட பற்குணம் அவர்கள், உத்தியோகம் காரணமாக திரு கோணமலையில் வாழ்ந்தாலும், இந்த மண்ணை நேசித்த ஒரு மனிதாபிமானம் மிக்க இலக்கிய ஆர்வலர்.

இலக்கிய சர்ச்சைகள், உரையாடல்கள், விமர் சனங்கள், அறிமுகங்கள் ஆகிய துறைகளில் அதிக ஆர்வம் காட்டியவர். 1996ஆம் ஆண்டு இறையடி சேர்ந்த போதும், அவர் அனுபவங்களின், ஆற்றலின் நெருடல்களாக, எழுதிச் சேமித்து வைத்த கவிதைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நெஞ்சின் நெருடல்கள்' என்ற தலைப்பில் 1996ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஆர்வமுள்ள அதிகாரிகளையும் இலக்கியம் விடுவதில்லை; அது ஆட்கொண்டு விடுகிறது என்பதனை, தோழர் பற்குணத்தின் இலக்கிய ஆர்வத்தில் இருந்து அறிய முடிகிறது.

தனது கவிதைகளை எடுத்து, ஆர்ப்பாட்டமாக வாசித்து ஆலோசனை, அபிப்பிராயம் கேட்கும் அவரது ஆர்வம் அற்புதமானது.

இந்த மண்ணையும், மக்களையும் அவர் நேசித்த விதம், பூசித்த ஆழம் மறக்கமுடியாது.

*எமது மக்கள் காண்பதெல்லாம் வதைகள்*
*கேட்பதெல்லாம் மரண ஓலங்கள்*
*நடப்பதுவோ செந்தணலில்*
*சுவாசிப்பதெல்லாம் நச்சுக்காற்று*
*சுமப்பது அவலங்களை அவர்கள் நடந்து*
*போகும் போதே இறந்து விடுகிறார்கள்'*
*என்னுரை நெஞ்சின் நெருடல்கள்*
*வேரிடும் இடமெல்லாம்*
*நல்லவரின் சவக்குழிகள்*
*உறிஞ்சிடும் நீரோ*
*உத்தமர்களின் கண்ணீர்கள்*
*பெற்றுவரும் காற்றோ*
*திக்கற்றவர்கள் பெருமூச்சு*

**ராணி சீதரன்**

ஆசிரியராகவும், சேவைக்கால ஆலோசகராகவும் கடமையாற்றிய ராணி சீதரன், திருகோணமலையில் அண்மைக் காலத்தில் எழுதிவரும் மிகத் தன்னடக்கமான ஒரு பெண் எழுத்தாளர். கவிதை, நாடகம், சிறுகதை ஆகிய பல்வேறு துறைகளில் தன்னை ஈடுபடுத்தி வளர்ந்து வரும் இவரது படைப்பாற்றலை, இவரது அண்மைக் கால வெளியீடுகளான, 'தேன்சிட்டு', சிறுவர் பாடல் நூல்கள் மூலம் அறிந்து, அடையாளங் காணக்கூடியதாகவுள்ளது. பெண்களின் மனத்தடியில் உறைந்து கிடக்கும் தைரியம், வேகம் இதில் வெளிக்காட்டப்படுகிறது. பல்வேறு ஏடு களிலும், வாரவெளியீடுகளிலும் கவிதை, சிறுகதை, கட்டுரை என எழுதிவரும் இவர் தொடர்ந்தும் இலக்கியத் துறைக்கு பங்காற்றி வருகிறார்.

**திருமலை சுந்தர்**

அம்மா பதிப்பக வெளியீடாக (1998), திருமலை சுந்தா அவர்கள் க.கோணேஸ் வரன், சு.வில்வரத்தினம், அ.கௌரிதாசன், நாகராணி சீதரன், புரட்சிபாலன், ப.தர்மலிங்கம், கா.இரத்தினசிங்கம், சிகண்டி தாசன், க.தேவகடாட்சம், செ.நவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிராசா, செஜதர்மா, மு.பொ., அ.சுப்பிரமணியம் ஆகியோர் அன்னைபற்றி எழுதிய கவிதைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

**ஷெல்லிதாசன்**

பே.கனகரத்தினம் என்ற இயற்பெயர் கொண்ட ஷெல்லிதாசன், 1945 ஆம் ஆண்டு யாழ் வண்ணார் பண்ணையில் பிறந்தார். இவர், 1974ஆம் ஆண்டு தொழில்நுட்பக்கல்லூரியில் படித்துக்கொண்டு இருந்த காலத்தில் 'தோழா புறப்படு' என்ற கவிதையை எழுதியதன் மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்தார். இடதுசாரிக் கொள்கையில் நாட்டம் கொண்ட இவரது கவிதைகள், வீரகேசரி, தினகரன், தினக்குரல், சுடர்ஒளி, கற்பகம், சிரித்திரன், இதயம், சாட்டை, அக்கினி, தாயகம் ஆகிய சஞ்சிகைகளில் பிரசுரமாகியுள்ளன.

மரபுக்கவிதை, புதுக் கவிதை, இசைப்பாடல், வில்லுப்பாட்டு எனப் பல்வேறு துறைகளில் வல்லவராகத் திகழ்பவர். ஈழத்தின் தேசியப் பத்திரிகைகள் பலவற்றில் எழுதிவரும் ஷெல்லி, கனகரத்தினம் என்ற இயற்பெயருக்கு மேலாக, ஷெல்லி தாசன் என்ற புனைபெயர் இட்டு கவிதை புனைந்து வருபவர். அற்புதமான சிந்தனை, அழகான சொல் வளம், நிதானமான பார்வை கொண்ட இவரது கவிதைகள், பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்து பாராட்டுப் பெற்றவை.

மரபும், புதுக்கவிதைப் பாணியும் கைவரப் பெற்ற ஷெல்லியின் கவிதைக்கு அடையாளமாக பின்வரும் கவிதையைக் குறிப்பிடலாம்:

**கூவாத குயில்கள்**

*எங்கோ*
*ஒரு தொலைவிலிருந்து*
*கூவிக் குதூகலிக்கும்*
*கருங் குயிலே*
*வருடம் ஒரு*
*வசந்தம் வரும்*
*உனக்கு*
*வாயாறப் பாட்டிசைக்க*
*எமக்கு*
*வாழ்வில் ஒரு வசந்தம் வருமா*
*நிம்மதியாய் மூச்செடுக்க!*
*இத்தனைக்கும்*
*நீயோ............*
*சிறு பறவை*
*நாமோ..........*
*மனித இனமாம்...............?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ★ ★

*நாம் -*
*முள்வேலி போட்ட*
*அகதி முகாமில்*
*சுதந்திர தேச*
*அடிமைகளாக*
*மௌனித்து நிற்க*
*உனது -*
*வசந்த கீதமோ*
*எல்லையில்லா*
*பெரு வெளியில் கலந்து*
*எம்மையெல்லாம்*
*ஏளனம் செய்கிறது!*
*இத்தனைக்கும்*
*நீயோ*
*சிறு பறவை*
*நாமோ*
*மனித இனமாம்...........!*

இவரது கவிதை தொகுப்பு 'செம்மாதுளம்பூ' என்ற தலைப்பில் அண்மையில் வெளிவந்துள்ளது.

40 வருட கவிதைக் கனவுகள், 'செம்மாதுளம்பூ' என்ற தொகுதியாக, 'நீங்களும் எழுதலாம்' எனும் கவிதை ஏட்டின் ஆசிரியர் தனபாலசிங்கத்தின் கடுமையான முயற்சியின் அறுவடையாக வெளிவந்துள்ளது.

அழகான அட்டைப்படம், நேர்த்தியான கவிதைக் கோர்ப்பு, நிரையான தலைப்புத் தெரிவுகள், கலாநிதி செ.யோகராஜாவின் கனதியான முன்னுரை, பிரபல எழுத்தாளர் நந்தினி சேவியரின் அறிமுகவுரை, நல்ல மனப்பதிவுகளை தனது உரையாக்கியிருக்கும் கவிஞரின் என்னுரை, கவிஞர் அண்ணல் காலத் திலிருந்து வெளியான கவிதை தொகுதிகளில் சுமார் 105 வது தொகுதியாக பூத்திருப்பது செம்மாதுளம் பூ. இத்தொகுதியில், கவிஞர் பல்வேறு ஏடுகளில் அண்மைக்காலத்தில் எழுதிய கவிதைகளின் கோர்ப்பும், இலங்கை வானொலியில் இசை அமைத்து ஒலிபரப்பப்பட்ட மெல்லிசை பாடல்களும் அடங்கும்.

ஷெல்லி, இடதுசாரி கொள்கை மீது அதிக நாட்டம் கொண்டவராய், அப் பாசறையில் வளர்ந்து, மு.கார்த்திகேசன் என்னும் ஆசானின் வழிகாட்டலில் நடந்து சென்று இந்த சமூகத்தினை தரிசித்தவர். சமூகக் கொடுமைகளையும், ஏற்றத்தாழ்வுகளையும், பொருளாதார இடுக் கண்களையும், அரசியல் அசுரத் தனங்களையும், சாதிக்குரோதங்களையும் கண்டு மனம் கொதித்து, அவற்றிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிராக தனது கவிதை வரிகளால் சாடியவர். அவரது சாடலில் சமூக நியாயா திக்கம் தெரியும். அதற்கு உதாரணமாய் பின்வரும் பாடல் காணப்படுகிறது:

*சீதன சர்வாதிகார இராணுவ ஆட்சியில்*
*மூலதனம் அற்றதால் முற்றிவிட்ட கன்னியை*
*கால்கட்டுக்காய் கன்னிகாதானம் செய்து*
*கை கழுவி கரை சேர்த்து விட்ட*
*திருப்தியில் ஒரு அப்பா.*

## செ. ஞானராசா


செ. ஞானராசா

திருகோணமலை நகருக்கு அண்டையிலுள்ள கிராமமான அன்புவழிபுரத்தைச் சேர்ந்த கவிஞர் ஞானராசா எழுதிய 'எதிர்பார்ப்பு' (2001) என்னும் கவிதைத் தொகுதியில் இவரால் 1989ஆம் ஆண்டு தொடக்கம் எழுதப் பெற்ற கவிதைகள், ஒரே தொகுதியாக வெளியிடப்பட்டுள்ளது. பல்வேறு பத்திரிகைகளில், போட்டிகளில் பரிசுபெற்று பல்வேறு நினைவுகளை அனுபவங்களை ஊறுகாய் போட்டு எழுதிய இவரது கவிதைகள் ஒருபுறம் மரபு தழுவியதாகவும் இன்னொருபுறம் புதுக்கவிதைச் சிந்தனையீடுகளைக் கொண்டதாகவும் இருக்கிறது.

இவரது கவிதைகளில் ஒருவித லயம் இளையிட்டு ஓடும் அழகு சிறப் பானதாகக் காணப்படுகிறது. தான் சந்தித்த அனுபவங்களின் அதட்டல்களில் இவர் நனைந்துபோய்ப்படும் அவஸ்தைகள் இவர் கவிதைகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக தெரிகிறது. இதற்கு உதாரணமாக பின்வரும் பாடலைக் குறிப் பிடலாம்:

*நீரை நெருப்பை வைத்தான்*
*அமுதை நஞ்சை வைத்தான்*
*கையை காலை வைத்தான்*
*கண்ணை காதை வைத்தான்*
*காதல் மோதல் வைத்தான்*
*கட்டில் தொட்டில் வைத்தான்*
*உண்மை பொய்யை வைத்தான்*
*உறவை பிரிவை வைத்தான்*
*ஆனால்*
*மூளையை ஒன்று வைத்தான்*
*இதயத்தை ஒன்று வைத்தான்!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வி.சிகண்டிதாசன்

மட்டக்களப்பு சித்தாண்டியை பிறப்பிடமாகவும், திருகோணமலையை வாழ் விடமாகவும் கொண்ட சோதிடத்தொழில் புரிந்து வரும் கவிஞர் சிகண்டிதாசன் கவிதை எழுதுவதே தனது கலைப்பணியாகும் என்ற இலட்சியத்துடன் எழுதி வருபவர். கவிஞரால் வெளியிடப்பட்ட கவிதை 'சிகண்டிதாசன் கவிதைகள்' (2002) என வெளியிடப்பட்டுள்ளது.

சமூக உள்ளரிப்புக்களின் வடுக்களையும் இன்றைய காலத் தேவைகளையும் தனது கவிதைகளில் அனுபவபூர்வமாகச் சொல்லியிருக்கும் கவிஞர் சிகண்டி தாசன் தனது கவிதை அனுபவத்தினூடாகப் பார்க்கும் தீட்சண்யமான பார்வை அவரது கவிதைகளில் மரபோடு குழைந்துவரும் வேதனைக் காலங்களைக் கொண்டவையாகக் காணப்படுகின்றது.

கவிஞனின் இலட்சியக் கனவின் எதிர்பார்ப்பைப் பின்வரும் கவிதை காட்டுகிறது:

*நீதிக்கும் நேர்மைக்கும் தலைவணங்கு*
*நெஞ்சத்தில் அன்போடு நிதம் விளங்கு*
*சாதிக்கும் சேவைகளால் உயர்வைத் தேடு*
*சாதிமத சனக்குகளை உணர்ந்து சாடு*

இவர் 'இன்னும் சமாதான வழி நோக்கி' (2002), 'அன்னை மீது' (2003), 'வெருகலம்பதி வேலவன் காவடிப்பாடல்களும், கீர்த்தனைகளும்' (1991), 'திருமலை அன்னை மீது' (2003), 'திருகோணமலை வில்லூண்றி கந்தன் கீர்த் தனைகளும், காவடிப்பாடல்களும்' (2009) ஆகிய தொகுதிகளையும் வெளி யிட்டுள்ளார். இதே காலப்பகுதியில் கே.எம்.எம். இக்பால் என்பவர் 'இதய ஒலி' எனும் தலைப்பில் கவிதைத் தொகுதி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

திருகோணமலை கவிதை துறைக்கு பங்காற்றிய இன்னும் இரு சாராரை நோக்க வேண்டியுள்ளது. புலம்பெயர்ந்தவர்கள், ஏனைய மாவட்டங்களை சேர்ந்தவர்கள் ஆகியோரே அச்சாரார் ஆவர்.

## புலம்பெயர்ந்தவர்கள்

திருகோணமலையை சேர்ந்த பலர் புலம்பெயர்ந்து, இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, டென்மார்க் போன்ற நாடுகளில் இருந்து கொண்டு, இலக்கியம்படைத்து வருவதை, அங்கிருந்து வரும் செய்திகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

இன்னும், சிலர் இணையதளத்தில் எழுதி வருகின்றனர். புலம் பெயர்ந்தவர்கள், அந்தந்த நாட்டு மொழிகளை துறைபோக கற்று, தமிழ் இலக்கியங்களை தாம் வாழும் நாட்டு மொழிகளில் மொழிபெயர்த்து வருவதையும், அதேவேளை அந்த நாட்டு இலக்கியங்களை தமிழில் மொழிபெயர்த்து வருவதையும், காணக் கூடியதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாரதிபாலன்

யாழ். நல்லூரில் பிறந்தாலும் திருகோணமலையில் வாழ்கைத்துணையை தேடிக் கொண்ட இவர் கவியரங்குகளில் நல்ல கவிஞனாக திகழ்ந்தவர். இவரது நெடும்பாடல் தன்மை கொண்ட கவியரங்க கவிதைகள், பலரது பாராட்டை பெற்றவையாகும்.

டென்மார்க் நாட்டுக்கு புலம்பெயர்ந்து சென்ற பின்பும், தமிழ் மீதுள்ள பற்றுக்கோட்டினால் பல்வேறு தமிழ் தொண்டுகள் செய்து வரும் ஜெயக்குமார் என்ற இயற்பெயர் கொண்ட பாரதிபாலன், 'கடற்கன்னி காவியம்' (2002) என்னும் ஓர் காவியத்தை தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். டெனிஸ் மொழியிலுள்ள சிறந்த காவியங்களில் ஒன்றான டென்மார்க் எழுத்தாளர் எச்.சி.அன்டர்சன் அவர்களது 'சின்ன கடற்பெண்' என்ற காவியமே, பாரதி பாலனால் தமிழில் காவியமாக்கித் தரப்பட்டிருக்கிறது. டென்மார்க் நாட்டின் தேசிய சின்னம் பற்றிக் கூறும் கதையிது. 192 பக்கங்களை கொண்ட இந்தக் காவியம், பாரதிபாலனுக்கு உலகளாவிய புகழையும், பெருமையையும் தேடித்தந் துள்ளது.

2005ஆம் ஆண்டு, 'சமரசபூமி' என்னும் நாவலை இவர் படைத்துள்ளார். தமிழில் அறிவியல், ஆன்மீகம், மொழி, ஒருமைப்பாடு ஆகியவற்றை மையப் பொருளாகக் கொண்டு, இந்த நாவல் படைக்கப்பட்டிருக்கிறது.

### ஆனந்தப்பிரசாத்

மிருதங்க கலைஞனாக வாழ்ந்து, கனடாவில் புலம்பெயர்ந்துள்ள பிரசாத், ஆரம்பகாலத்தில், திருகோணமலை 'முன்னோடிகள்', 'சங்கப் பலகை ஆகிய அமைப்புக்களில் கவிதை பாடிவந்தவர். புதுக்கவிதை வடிப்பதில் ஆர்வம் காட்டியவர். சிறந்த புலமையும், ஆளுமையும் கொண்ட இவர், ஐரோப்பிய தமிழ் சிற்றேடுகளில் ஆங்காங்கே எழுதிவருவதை காணக்கூடியதாகவுள்ளது.

## VI. 2000 கள்

2003ஆம் ஆண்டிற்குப்பின், சமாதான ஒப்பந்தம் காரணமாக ஏற்பட்ட அமைதிச் சூழ்நிலை, திருகோணமலை கவிதை, இலக்கியத்துறையில் சில ஆரோக்கியமான வரவை காட்டி நிற்கின்றது. அந்த வகையில், ஆலையூரன், கிண்ணியா ஏ. எம். எம். அலி, சம்பூர் எம்.வதனரூபன், திருமலை அஸ்ரப், கிண்ணியா ஏ.நஸ் புள்ளா, கவிஞர் யோகானந்தம், ஜெயாதமிழினி, ஜெ.மதிவதனி போன்றவர்களின் கவிதைகள், அழகும், ஆரோக்கியமும் உள்ள நிலையை எடுத்துக்காட்டு கிறன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
228511

## க. தங்கராஜா (1941-2006)


க. தங்கராஜா

ஆலங்கேணியை பிறப்பிடமாகக் கொண்ட 'அலையூரன்' என்ற புனைப் பெயரைக் கொண்ட க.தங்கராஜாவின், 'பொங்கினாள் மீனாட்சி' (2009) எனும் கவிதைத் தொகுப்பு அருள் வெளியீடாக வந்துள்ளது.

ஆசிரியராக, அதிபராக, கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய இக்கல்வியியலாளர், ஓர் நல்ல கவிஞர். பல்வேறு கவியரங்குகளில் தடம்பதித்த இவர், 'வந்தது வசந்தம்' எனும் முதல் கவிதையை, தினகரன் பத்திரி கையில் எழுதியதன் மூலம், கவிஞர் என்ற பெயரை பெற்றுக்கொண்டார். கவிஞர் அண்ணலின் வழிகாட்டலில், தன்னைப் பட்டை தீட்டிக் கொண்டவர். இவரது, முதலாவது கவிதைத் தொகுப்பு இதுவாகும்.

'பொங்கினால் மீனாட்சி', 'மெல்லத் தமிழ் இனிச் சாகாது' என்ற தலைப்புகள் உட்பட, 39 தலைப்புக்களில் இவர் படைத்துள்ள, கவிதைகள் மரபு மான்மியங்கள் மிளிரப் பாடப்பட்ட வரிகளைக் கொண்டவை. கவிஞருக்குரிய புலமையையும், கற்பனைச் செருக்கையும் எடுத்துக் காட்டுபவை. உதாரணமாக பின்வரும் பாடலைக் காண்க:

*இட்டஅடி நோவெடுக்க*
*இதமாக நடை பயின்று*
*கொட்டி எழில் முற்றத்தில்*
*குவித்தழகு மேடையிட்டாள்*

இளமைக் கனவுகளின் இழையோடிய ரசக்காய்ச்சல்களை, அழகழகான சொற்களில் நெய்து, கவிதைகளாக்கித் தந்துள்ளார். இவர் கவிதைகளில் யாப்பு வளைந்து, நெழிந்து ஓடுகிறது; சொற்கோவைகள், தாமே தம்மைப் பின்னிக் கொள்கின்றன.


ஆணாதிக்கத்திற்கு எதிராகவும், பெண் ஒடுக்குமுறைக்கு மாறாகவும், இவரது கவிதைகள் ஆங்காங்கே பேசுவது, ஓர் தனிச் சிறப்பாகும்.

## கிண்ணியா ஏ.எம்.எம். அலி

தினசரிப்பத்திரிகைகள், திங்கள் ஏடுகள் ஆகியவற்றில் எழுதிவரும் இவரது கவிதைப் பிரவேசம், 1978ஆம் ஆண்டில் தினபதியில் வெளியான முதற் கவிதையுடன் ஆரம்பமாகிறது.

2002ஆம் ஆண்டு, இஸ்லாமிய தமிழ் இலக்கிய சிறப்பு மாநாட்டு மலரில் இடம்பெற்ற கவிதை தொடக் கம், சிந்தாமணி, தினகரன், நவமணி, வீரகேசரி, தினக்குரல், சூடாமணி, தினபதி ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த பல்வேறு தலைப்புக்களில் உள்ள கவிதைகளைத் தொகுத்து, 'குடையும் அடைமழையும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏ.எம்.எம். அலி

(2005) என்ற தலைப்பில், கிண்ணியா ஹாஜரா வெளியீடாக வெளிவந்துள்ளது.

யாப்பு மரபில், நதியோட்டம் போல் தடையின்றி எழுதக்கூடிய அலி புதுக்கவிதை, சிறுகதை எழுதுவதிலும் அதிக நாட்டம் காட்டி வருபவர். கவிஞர் அலியின் கவிதைகள் ஒவ்வொன்றும், செதுக்கப்பட்ட சிற்பங்களைப்போல், உள்ளத்தில் ஊற்றெடுக்கக் கூடிய சொற்களால் அலங்காரம் பெற்றவையென, எச்.எம் ஹலால்தீன், தனது அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஊருக்குள் வாழும் வாழ்க்கை, எத்தனை சந்தோஷமானதும் நிம்மதியானதும் என்பதை கவிஞர் அலி, 'சவூதியும் சந்திப்பழக்கடையும்' என்னும் தலைப்பு அவரது கிண்ணியா சமூகத்தின் அனுபவங்களை, அப்படியே பறைசாற்றுகின்றது.

*எனைத் தடை செய்தும் - யானோ*
*பழக்கடை தன்னை விட்டுப்*
*பறந்து தான் வந்து மென்ன?*
*.......................................*
*சத்தியமாகச் சொல்வேன்*
*சந்தியில் நாம் போட்டிட்ட*
*முந்திரி ஆப்பில் தோடை*
*.......................................*
*நிழற்கரையில்லா ரோட்டில்*
*நின்று சாகுகின்றேன் மாமா*
*தீயென எதிரிக்கும் சூடு*
*தினமுமென் தேகங்காயும்*
*பனிக் குளிர் வெடவெடக்க*
*பண்ணிடும் சந்தோஷமாக*

கவிஞர் பழக்கடையை விட்டுவந்து, வெளிநாட்டில் படும் அவஸ்தையை நகைச்சுவை ததும்ப சொல்லிக் காட்டுகிறார்.

இது போலவே, வள்ளம் பிடித்து கிண்ணியாத்துறை கடக்கும் அவலத்தை, கவிஞர் சொல்லியிருக்கும் விதம் சிறப்பானது.

*திருமிகும் நகரம் திருமலை நோக்கி*
*பெருந்திரளாக ஒவ்வொரு தினமும்*
*பயணம் செய்பவர் படுகிறபாட்டை*
*நயனம் உள்ளவர் நன்கு கண்டிருப்பார்*
*பாதை என்றிடும் படகு தருகிறது*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உபாதை நின்றிட உத்திக்க வேண்டுமோர்*
*காலம் என்று தான் கனவு காண்கிறார்*
*பாலம் ஒன்றுதான் பன்னாட்தேவை யென்*
*றோலம் எப்போதும் ஒலித்த போதிலும்*
*காலந்தப்பாது கதை அளப்பதா*

கவிஞரின் இந்தக் கனவு, 2009ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு விட்டதென்பது, யாவரும் அறிந்த உண்மை.

**கிண்ணியா ஏ.நஸ்புள்ளா**

1990ஆம் ஆண்டு, கவிதை மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்த இவர், 'இளங்கவி', 'இற்றநேசன்', 'தமிழயான்' போன்ற புனைபெயர்களிலும் எழுதி வருகின்றார்.

கவிதை, சிறுகதை, ஆய்வு என நூற்றுக்கும் மேற்பட்ட ஆக்கங்களை படைத்துள்ள இவர், 2008ஆம் ஆண்டு திருகோணமலை நூலக அபிவிருத்திச் சங்கத்தின் சிறந்த எழுத்தாளருக்கான விருதையும், கிண்ணியா பிரதேச சாகித்திய விழாவில், இலக்கிய ஒளி பட்டமும் பெற்று கௌரவிரிக்கப்பட்டவர்.

இவரது முதல் கவிதை தொகுதி, 2003இல் 'துளியுண்டு புன்னகைத்து' என்னும் பெயரில் வெளிவந்தது.

'நதிகளைத் தேடும் சூரிய சவர்க்காரம்' (2009) என்னும் கவிதைத் தொகுதி, புன்னகை இலக்கியவட்ட வெளியீடாக வெளிவந்துள்ளது.

52 கவிதைகளை 124 பக்கங்களில் உள்ளடக்கி, நவீன மரபையும், புதிய மரபையும் இணைத்துப் பின்னப்பட்டுள்ள இத்தொகுப்பில் அடங்கும் கவிதை களில், கவிஞரின் அனுபவங்களுடன் அடங்காமல், துடித்தோட துடிக்கும் எண்ணக் குமுறல்களும், ஏக்கங்களும் பதியப்பட்டுள்ளன.

இவரது கவிதைகள், சமகால தேசத்தின் அரசியல் வீறுகளை, விடுதலை வேட்கையை, சுனாமி அனர்த்த தேடலை, மண்பற்றை, மனித அவலங்களை அப்படி அப்படியே சொல்லிக் காட்டுவதில், வார்த்தை ஜாலங்களும், அனுபவ முத்திரைகளும் வந்து வந்து விழுவதைக்காணலாம்.

*துப்பாக்கிகள் சமாதிகள்*
*மண்டை ஓடுகள்*
*அனைத்தையும் தாண்டிய*
*வாழ்தல், கொடு, அன்பாளனே*

என ஆன்மீகத் தாகத்துடன், அரசியல் அனுட்டானங்களை இவர் தனது கவிதை களில் எடுத்துக்காட்டுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னோரிடத்தில்
போர்களப் பாடல்கள்
மறந்து போனதா என்றேன் - நீ
ஒரு கள்ளியளவு சிரித்தாய்
பூத்த நிலவு
செத்துக்கொண்டிருந்தது.

பொதுவாகவே, நஸ்புள்ளாஹ் - கவிதைகள், நல்ல விதைகளில் உருவெடுத்த விருட்சக் கிளைகளாக இருந்த போதும், தேடலும் நாடலும் அனுபவச் சொருகல்களும் அவர் கவிதைக்கு இன்னும் தேவையென்றே சொல்ல வேண்டும்.

## கவிஞர் யோகானந்தம்

சம்பூர் கிராமத்தில் பிறந்த யோகானந்தம், ஒரு கலைப்பட்டதாரி. அதிபராக கடமையாற்றுபவர். இவரது முதற் படைப்பான 'உண்மை என்றும் உயர்வு பெறும்' (2006), என்னும் கவிதை நூல் இலங்கை சாஹித்திய மண்டல பரிசைப் பெற்று, தேசியத் தரத்திற்கு இவரை உயர்த்தியுள்ளது.

இவரது கவிதைகளில், இளமைக்கால நினைவுகளும், இழப்புக்களும், ஏக்கங்களும் பல்வேறு இடங்களில் அற்புதமாக, அதேவேளை ஆடம்பரமாக சொல்லப்பட்டிருக்கும் அழகை பார்க்கும்போது ஆச்சரியப்பட வேண்டியுள்ளது.

இழந்த இளமை நினைவுகள், கிராமப்புறழ்வுகள், அரசியல் பார்வைகள், உறவுக்கலப்புக்கள், உண்மை எதிர்பார்ப்புக்கள் ஆகிய படிமானங்களை, இவரது கவிதை வரிகளில் காணக்கூடியதாக உள்ளது.

'சத்தியப் புருஷனின் மனைவி நீ' என்ற தலைப்பில் வரும் பின்வரும் வரிகள் கவிஞரின் இளமைக்காலத்தை நினைவூட்டுகிறது:

*நினைவிருக்கிறதா உங்களுக்கு*
*நல்லவேளை அவள் பறந்துவந்திருந்தால்*
*தென்றலே கறுத்துப்போயிருக்கும்*
*இது போல இன்னோரிடத்தில்*
*காவோட்டத்தில் திருவிழாவில் அவள்*
*கைக்குழந்தையோடு நின்ற போது*
*சூனியப்பார்வை உதிர்கிறது*
*இது காதலா அனுதாபமா*

கொட்டியாரக்குடாக் கடலில், மகாவலி வந்து முத்தம் கொடுக்கும் மூதூர் குடாவின் புகழ் பெற்ற சம்பூர் கிராமத்திற்கு, அவர் கொடுக்கும் மதிப்பும், மரியாதையும் தொட்டில் நினைவுகளுக்கு தாலாட்டு பாடுவது போல் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சம்பூர் மண் இன்று மகுடம் சூடிவிட்டது*
*பச்சை வயல் வெளிகளில் பாவிசைக்கும்*
*பசுங்கிளிகள்.......*

*தென்னை தலையசைக்கும் பூவரசம் வேலியிலே*
*புல்லாங்குழல் இசை பிறக்கும்*
*கயல் மீன்கள் துள்ளியெழும்*
*சின்னத் தெருக்களெலாம்*
*பள்ளிவிட்ட சிறார்கள்*
*எண்ணித் தினம் மகிழ்வோம்*
*ஓடிவரும் மாவலியில் கைகோர்த்து நீராடினோம்*

பாரதியின் சுதந்திர கீதம், மயாக்கா வொஸ்கியின் மானிட நேயம், ஹோச்சு மீனின் அரசியல் சாட்டை அத்தனையிலும் காணும் வேகமும், ஆழமும், இவரின் கவிதைகளில் காணலாம்.

## சம்பூர் எம்.வதனரூபன்

மூதூரில் உள்ள பழமைவாய்ந்த சம்பூர்க் கிராமத்தில் பிறந்த இவர், ஆசிரியராக கடமைபுரிந்து வருகிறார்.

இவரின் முதலாவது கவிதைத் தொகுதியான 'குறைந்தபட்சக் கோரிக்கைகள்' (2006) என்னும் கவிதைத் தொகுப்பு சிராய்ப்பு வெளியீடாக வந்துள்ளது.

35க்கு மேற்பட்ட தலைப்புக்களில் எழுதப்பட்ட புதுக்கவிதைகளில், அவர் வாழும் சூழ்நிலைத் தரிசிப்புக்கள், போராட்டங்கள், அகதிகள், சுனாமி அனர்த் தங்கள், அனுபவங்கள் ஆகியன சொல்லப்படுகின்றன.

ஒரு பொருள் எவ்வாறு சொல்லப்பட வேண்டுமோ, அவ்வாறே, உணர்ச்சி பூர்வமாக கலையழகோடு சொல்லப்படுவதால், கவித்துவம் பளிச்சிடுகிறது. வதனரூபனின் கவிதைகளில், மழலை இயல்போடு கலந்த இன்றைய வாழ்க்கை அனுபவத்தின் பிரதிபலிப்புக்கள் காத்திரமாக பதிவாகியுள்ளன.

## ஜெயா தமிழினி

வேலணையை பிறப்பிடமாக கொண்ட ஜெயா தமிழினியின் இயற்பெயர் வசந்தி ஜெயராஜ். பட்டதாரியான இவர், கடமையின் நிமித்தம் திருமலைக்கு வந்தவர். இந்த மண்ணை, தனது புகுந்த வீடாகக் கொண்டு எழுதிவரும் இவரது 'வழி தேடும் விழிகள்' (2007), 40 கவிதைகள் கொண்ட ஓர் தொகுதியாக, வானவில் வெளியீட்டகத்தின் வெளியீடாக வந்துள்ளது.

கவிஞரின் பல்துறை அனுபவங்கள், மனப்பதிவுகள், சமூகப் பார்வைகள் சொந்த பிரஞ்ஞைகள் என்பன செறிந்த நல்ல பல கருத்துக்களை கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிந்த நீரோட்டம் போன்ற கவிதைகள், நுகர்ந்து இன்புறுவதோடு, நிறுத்தி நிறுத்தி படித்து, சிந்திக்க வேண்டிய கவிதைகளாகவும் இருக்கின்றன.

**திருமலை அஸ்ரப்**


திருமலை அஸ்ரப்

திருகோணமலை வேப்பங்குடா கிராமத்தினைப் பிறப்பிடமாக கொண்ட இவர், தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை விரிவுரையாளராக கடமையாற்றி வருகிறார். அஸ்ரப் அவர்களின் 21 கவிதைகள் அடங்கிய 'அறுவடைக்காலமும் கனவும்' (2007) என்னும் முதற் கவிதைத் தொகுதி, பெரு வெளிப்பதிப் பகத்தின் வெளியீடாக வந்துள்ளது.

வீரகேசரி, ஞானம், மல்லிகை, நிஷ்டை, படிகள், பெருவெளி ஆகிய இலக்கிய இதழ்களில் வெளி வந்துள்ள கவிதைகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன.

ஈழத்து நவீன கவிதை முன்னோடிகளான மஹாகவி, நீலாவாணன் ஆகிய வர்களின் கவிதைகளை படித்ததால் ஏற்பட்ட அருட்டுணர்வினால், தீவிரமான கவிவெளிப்பாட்டிற்கு, தான் உட்பட்டதாகச் சொல்லியிருக்கும் கவிஞரின் கவிதைகளில், பெரும்பாலானவை இன்றைய இலங்கையின் அரசியல் வினைகள் பற்றியும், போர்ச் சக்கரத்தால் அல்லல்படும் பாமர மக்களின் கொடுந்துயர் பற்றியும் எடுத்துக் காட்டும் வடிவங்களாக, திருகோணமலை மண்ணின் நிகழ்வு களின் பதிவுகளாக விளங்குகின்றன.

2006ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி, திருமலையில் நடந்த கோரப் படுகொலையை கண்டு அதிர்ச்சியுற்ற கவிஞனின் ஆத்ம கொதிப்பை, இந்த வரிகள் சொல்லுகின்றன.

*யார் கண்பட்டதோ*
*எவர் கண்பட்டதோ*
*ஜனவரி மாதம் இரண்டாந்திகதி - படு*
*கொலையின் பெயரால் சாபம் வந்தது*
*நம்மைப்போன்ற நண்பர்கள் ஐவர்*
*துடித்து மாண்டனர் களைப்பின் பெயரால்*
*காலங்கழிக்கும் பீச்சின் மன்னால்*
*அக்கோரம் நிகழ்ந்தது.*

இது போன்று, இன்னோரிடத்தில் கவிஞர் காட்டும் வரிகள் இதுவை:

*இப்போதெல்லாம் அடிக்கடி*
*அவர்களும் இவர்களும் நாங்களும்*
*இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்றோம் அகதிகளாக*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை நகரத்தில் வாழுகின்றவர்களுக்கு 'காத்தாய்' எனும் பிச்சைக்காரியின் கதை தெரியும். அவள் ஒரு நகர அலைச்சல் பாத்திரம். அவள் பற்றி கவிஞன் எழுதிய வரிகள் பின்வருமாறு:

*கால்வயிற்றுக் கஞ்சோ கூழோ*
*உள்ளதைக் கொண்டு உண்டுமகிழ்வாள்*
*தாவும் தடைகள் தாண்டி நின்று*
*நாளும் உலகை வென்று திகழ்வாள்*
*திருமலை நகரின் வெறுமைக் குரலாள்*
*அவள் தன் வாழ்வை எவர் வெல்வாரோ*

கவிஞரின் தலைப்புக் கவிதை 'அறுவடைக்காலமும் கனவும்' என்பதாகும். இந்தக் கவிதையில் பின்வரும் வரிகள் காணப்படுகின்றன:

*வரம்புகளால் எல்லை வகுத்து*
*இனவாத நீர்ப்பாய்ச்சி*
*துப்பாக்கிகளால் உழுது*
*தவிர்க்க முடியாமல்*
*விதைக்கப்பட்ட போர்*
*எதிர்ப்புக்களை களைபிடுங்கி*
*காவல் அரணமைத்து*
*விளைத்த வேளாண்மையாய்*
*இப்போது அழிவுகள்*
*அறுவடை செய்யப்படுகின்றன.*

### கலைமேகம் ஏ.எஸ்.இப்றாஹீம்

மூதூர் பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட இப்றாஹீம் நாடறிந்த கவிஞராவார். சுமார் 38 வருட காலமாக கலை இலக்கிய துறையில் கால் பதித்த இவர், ஆற்றி வரும் கலைப்பணி அளப்பரியது.

கவிதை துறையில் அதிக நாட்டம் கொண்ட, மரபு சார்ந்த கவிதை எழுது வதில் வல்லவரான இவர், ஆயிரத்திற்கு மேற்பட்ட கவிதைகளை யாத்துத் தந்துள்ளார். கவிதையுடன் சிறுகதைகளையும், கட்டுரைகளையும் எழுதி வரும் இப்றாஹீம், மூதூர் பிரதேச முஸ்லீம் இலக்கியங்கள் பற்றி ஆய்வு செய்து, பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவரது 'பைங்கிளியே' என்ற கவிதை 1967இல் தினபதி பத்திரிகையில் பிரசுரமான காலம் தொடக்கம் இன்றுவரை எழுதி வரும் இவர், சமகால பிரச்சனைகளை துள்ளியமாக நோக்கி அவற்றை கருவாக கொண்டு சீரிய கருத்துக்கள் சிந்தைக்கு விருந்தாய், சமூக நோய்க்கு மருந்தாய் அமைய எழுதி வந்துள்ளார். இவரது கவிதை தொகுதியாக 'மகரந்தம்' என்னும் கவிதை தொகுதி (2005) மூதூர் சமூக நல அபிவிருத்திக்கான ஒருங்கிணைப்பு நிலைய வெளியீடாக வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹாகவியை போன்று ஓசை நயத்துடன் பாடவல்லவர் என்பதற்கு இப் பாடல் சான்று.

*கடல் மீது பட கொன்று*
*கரை நாடி யோட*
*படகோட்டி துடுப்பாட்டி*
*பாய் விரித்து ஆட!*
*இளங் காற்று ஜில் லென்று*
*இசை கூட்டி மேவ*
*இளங்காளை இதயத்தில்*
*இன்ப நிலை தாவ*

## கிண்ணியா ஏ.எம்.அப்துல் கஹ்கார்

கிண்ணியா ஏ.எம்.அப்துல் கஹ்கார், இஸ்லாமிய மதநெறி முறைகளையும், போதனைகளையும், கலாசாரங்களையும் பாடும் ஓர் கவிஞராக விளங்குபவர். இவரின் கவிதை நூல்களாக பின்வருவன வெளிவந்துள்ளன: 'நற்பண்பும் நபி மொழியும்' (1992), 'அண்ணல் மாநபி பிறந்தனரே' (1931), 'அதிசயம்' (2001).

இவர், உலகத்தமிழ் கவிஞர் மகாநாட்டில் 'தமிழருவி' பட்டத்தையும், 1977ஆம் ஆண்டு 'கலாஜோதி' பட்டத்தையும், 2001ஆம் ஆண்டு வடகிழக்கு ஆளுனர் விருதையும் பெற்றுள்ளார்.

## சேனையூர் அச்சுதன்

சேனையூர் அச்சுதன், துடிப்புடன் வளர்ந்து வரும் ஒரு கவிஞராகக் காணப்படுகிறார் என்பதற்கு அடையாளமாக அவர் எழுதிய ஒரு கவிதையைத் தருகிறேன்.

*காலை எழுந்தவுடன்*
*வேட்டுச் சத்தம்*
*பின்பு கவலைதரும்*
*ஒப்பாரிச் சத்தம்*
*மாலை முழுவதும்*
*ஊரடங்குச் சட்டம்*
*நாட்டில் இவை தானே*
*அன்றாட வழக்கம் எம்நாட்டில்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிண்ணியா ஜே.பிரோஸ்கான்

கவிதைகள் தேசமான கிண்ணியாவில் மஹரூப் நகரை புனைதல் கொண்டுள்ள முஹம்மது ஹனீபா ஜமால்தீன், அப்துல் ஹமீது ரஹ்மா வீவி ஜோடிகளின் செல்வன் ஜே.பிரோஸ்கான் 1999இல் 'தாய்' பற்றிய கவிதையோடு எழுத்துலகில் முனைப் பானார்.

நூற்றுக்கு மேற்பட்ட கவிதைகளுக்கும், குறிப்பிடக்கூடிய சிறுகதைகளுக்கும் கட்டுரைகளுக்கும் சொந்தக்காரர். இவர் எழுத்துக்களில் புதினம் மெய் சிலிர்ப்பதை உணர்வுகளால் காணமுடிகிறது.

கிண்ணியா ஜே.பிரோஸ்கான் படைப்புக்கள் தேசிய நாளிதழ்களிலும், மாதாந்த வாராந்த இதழ்களிலும், வானொலிகளிலும் பிரசுரமாகியும், ஒலிபரப் பாகியும் உள்ளன. ஈற்றில், யாவும் 'இதுவும் பிந்திய இரவின் கனவுதான்' கவிதை தொகுப்பாய் வந்துள்ளது.

இவர் தேசிய மட்டத்திலும், மாகாணமட்டத்திலும், இன்னும் பிரதேச மட்டத்திலும் போட்டிகளில் பங்குபற்றி, சான்றிதழ்களும், பரிசில்களும் பெற் றுள்ளார்.

### ரா.ப.அரூஸ்

கிண்ணியாவைச் சேர்ந்த 21 வயது இளைஞர் அரூஸ், தனது 21 வயதில் 21 நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். உலக சாதனை இதுவென கவிஞர் மேத்தா வாழ்த்தியுள்ளார்.

இவரது 'தீப்பிடித்த பூக்கள்'(2009) என்னும் சிந்தனை கட்டுரைத் தொகுதியாக, வெளிவந்துள்ளது. பல்வேறு ஆற்றல் கொண்ட அரூஸ், கவிஞனாக, இதழ் ஆசிரியனாக, கவிதைக்கும், சிறுகதைக்கும் பல பதக்கங்களை வென்ற ஆற்றல் உள்ளவனாக விளங்குவது, பாராட்டுதற்குரியது.

### கிண்ணியா அப்துல் ஹசன்


கிண்ணியாவை சேர்ந்த ஐதுரூஸ் ஏ.ஹசன், 'கிண்ணியா ஹசன்ஜி', 'எழில்வாணன்', 'கலாவண்ணன்', 'சன்ஜி', 'நவரசகவி', 'மதியன்பன்', 'இளங்கவி', 'ஹாசன்', ஆகிய பெயர்களில் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள் போன்ற வற்றை எழுதிவருகிறார்.

'இரவு' என்னும் தலைப்பில், 1972இல் தினபதி கவிதா மண்டலப்பகுதியில் முதல்கவிதை பிரசுரமாகியது. அன்றிலிருந்து இன்றுவரை, 173 கவிதைகளையும், 38 சிறுகதைகளையும், பல கட்டுரைகளையும், நாடகங்களையும் எழுதியுள்ளார். தினபதி, சிந்தாமணி, தினகரன், வீரகேசரி, மித்திரன், சுந்தரி, சங்கமம், தினமுரசு, குருநகை, கண்ணி, அபியுக்தன், நேயம், தோணி ஆகிய சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் தொடர்ந்து எழுதி வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989ஆம் ஆண்டு இவரது 'நெஞ்சில் மலர்ந்த கவிதைகள்' எனும் புதுக் கவிதை தொகுப்பும், 1992இல் 'வைகறைப்பூக்கள்' என்னும் மரபுக் கவிதை தொகுப்பும் வெளிவந்துள்ளன. இவரது கவிதை தொகுப்பாக, 'கீதப்பரிவர்த் தனைகள்' என்னும் தொகுப்பு விரைவில் வரவுள்ளது.

**எஸ். ஆர். தனபாலசிங்கம்**


தனபாலசிங்கம்

ஆசிரியரான தனபாலசிங்கம், 2007ஆம் ஆண்டிலிருந்து 'நீங்களும் எழுதலாம்' என்ற பெயருடன் கவிதைக்கென ஓர் ஏட்டை நடாத்தி வருகிறார். கவிதையை அதன் வளர்ச்சியை உறவுகளைக் கட்டிவளர்க்க வேண்டுமென்ற அவாவுடன் இவ்வேட்டை நடாத்திவரும் இவர், ஓர் சிறந்த கவிஞன்.

பயில்களம், பரிசோதனைக்களம், காத்திரத்தின் களம், விமர்சனக் களம் என கவிதை சம்மந்தமான பல களங்களை ஏற்படுத்தி, கவிதையின் சமூகப் பயன் பாட்டினை உச்சப்படுத்தும் ஆரோக்கியமான நல்ல நோக்கத்துடன் இதனை நடாத்தி வருகிறார் தனபாலசிங்கம்.

**கேதீஸ்வரனின் காத்திருப்புக்கள்**

கிழக்குப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் வெளியீடாக வெளிவந்துள்ள 'காத்திருப்புக்கள்' என்னும் இக்கவிதை நூல், கேதீஸ்வரன் அவர்களால் யாத்து தரப்பட்டுள்ளது. யதார்த்த வாழ்வின் தடங்களை மீட்டிப்பார்ப்பது சுகமான அனுபவம். அந்த அனுபவங்களை உண்மை மாறாத நிலையில் தொகுத்திருப்பது, பாராட்டுக்குரியது. இக்கவிதைகள் யதார்த்த வாழ்வை தடவிச் செல்வது புதுமை யென, இதற்கு முன்னுரை வழங்கிய விவசாயபீட பீடாதிபதி கலாநிதி க.பிரேம குமார் குறிப்பிட்டுள்ளார்.

**76 கவிதைகள் (2010)**

திருகோணமலை நகரத்திலுள்ள கல்லூரிகளில் பயின்று கொண்டிருக்கும் மாணவர்கள் 76 பேரின் கவிதைகளை தொகுத்து, '6 கவிதைகள்' என்னும் தலைப்பில் அகில இலங்கை இளங்கோ கழகத்தின் திருகோணமலைக் கிளை வெளியிட்டுள்ளது.

இதன் வெளியீட்டு ஆசிரியராக, மாணவனான தில்லைநாதன் பவித்ரன் செயற்பட்டிருக்கிறார். இம்முயற்சி, ஓர் வளர்ந்து வரக்கூடிய இளந்தலை முறையினரை கைதூக்கிவிடும் முன்னெடுப்பாக அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதாலயம்

2000ஆம் ஆண்டில் த.சித்தி அமரசிங்கம் என்பவரால் 'கவிதாலயம்' என்னும் தலைப்பில் ஓர் கவிதைத் தொகுப்பு கூட்டுத் தொகுதியாக வெளியிடப்பட்டது. இக்கவிதை தொகுதியில் 50 கவிஞர்களின் கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. பழையவர், புதியவர், முன்னையவர், பின்னையவர் எனப் பலதரப்பட்டவர் களின் கவிதைகள் இதில் உள்ளடங்கியிருப்பது விசேட அம்சமாகும்.

இந்தக் கவிதை அத்தியாயத்தை முடிப்பதற்கு முன், இன்று புதிய தலைமுறையினர் என்ற வகையில் திருகோணமலையில் பல இளைய திலகங்கள் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதி வருவதை அவதானிக்க முடிகிறது. அவர்களோடு பின்வரும் பழையவர்கள் சிலரின் பெயர்களையும் தகவலுக்காகத் தர விரும்புகின்றேன்: சி.மதியழகன், கே.அன்ரனி, எம்.மிக்கேல், அப்தூன் சுபைர், எம்.ஸ்ரீவதனன், கிண்ணியா சுவீர், டிலானி, முழுநிலா முஸாதிக், வர்ணஇளஞ் செழியன், முஸாதிக், அ.வா.முகம்மது பாகி, அ.அச்சுதன், கவிக்குயிலன், ஏ.தாரிக், இளங்கீற்று எம்.ரீ.சஜாத், ஏ.கே.முஸாரக், சு.நரசிம்மன், எம்.எஸ்.நவாஹிர், ஸாஹிறா, இக்பால், யூட் நிர்மலன், பஸ்மியாஹனிபா, எம்.எம்.நௌபர், புவனேந்திரன், திருமலைச்சந்திரன், ஏ.ஏ.அப்துல்சலாம், எம்.கைஸ், கிண்ணித் தென்றல் எம்.யூ.ஏ.கரீம், சித்திமகீஸா அலிஅக்பர், எம்.முஹைஸ், வக்சலா சண்முகசுந்தரம், லீலாவதி, சிவலிங்கம், பி.வாம தேவன், ப.தேவேந்திரன், க.குணவதி, ப.தெய் வேந்திரன், மு.தானிஸ். கிண்ணியாவைச் சேர்ந்தவர்களான ஏ.எம். அப்துல் கஹ்கார், ஐ.அப்துல்ஹாசன், ஏ.நஸ்புள்ளா, எம்.ரி. சஷாத். வி.எம். அன்சார் சத்தார், பாலையுற்று உயதாமேரி.

மூதூரை சேர்ந்த ஏ.நஜிமுத்தீன், கலாபூசணம், ஏ.எம் முகாதீன், எம். ஜவாத்நஸ்மி, ஏ.எஸ்.அப்துல்லா, முகம்மது அலி ஜின்னா, கவிஞர் கே.சிராஜ், பெண் எழுத்தாளர்களான சுஹைதாகரீம், சுஸானா முனாஸ், எம்.எம் அனஸ், ஏ.ஜாபீர், கலீல் கண்டு, மூதூர், நளிம், அ.கா.மு. றிஸ்வின், இலக்கிய விமர் சகர்கள் அன்சார், மர்ஹூம் முது கவிஞர் வி.எம்.நஜிமுதீன், தோப்பூர் மரைக்காயர் ஆகியோரையும் குறிப்பிடவேண்டும்.

## VII. சிறுவர் பாடல்கள்

சிறுவர் இலக்கியம் என்பது, கதைகள், நொடிகள், பாடல்கள், நாடகங்கள், கட்டுரைகள் ஆகியவற்றை குறிப்பிடுகிறது. சிறுவர்களுக்காக, சிறுவர் உள்ளத் தோடு, சிறுவர் மொழியில், சிறுவர் உலகத்தை விளக்குபவை, சிறுவர் இலக்கிய மாகும்.

நமது முன்னைய சமூக அமைப்பில் தாயின் மடியிலும், தொட்டிலிலும், வளர்ந்து வந்த இந்த இலக்கியங்கள், பாட்டி கதைகள், தாத்தா கதைகள், பாடல்கள் என மரபு வழியாக வளர்ந்துவந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுக்கு வடிவம் கொடுக்க முற்பட்டவர்களாக ஔவையார், அதிவீர இராம பாண்டியர் ஆகிய இருவரையும் குறிப்பிடலாம். இவர்களுக்கு பின், 19ஆம் நூற்றாண்டில் மஹாகவிபாரதி, கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை, அழ.வள்ளியப்பா, வாண்டுமாமா, பெ.தூரான், பூவண்ணன், குழந்தை கதிரேசன், சிற்பி, மதியொளி, செல்வக்கணபதி, தென்னவன், பாலநடராஜன் போன்றோரும் இலங்கையில் சோமசுந்தரப் புலவர், புலவர் வேந்தனார், பண்டிதர் க.வீரகத்தி, பண்டிதர் பீதாம்பரனார், இ.நாகராஜன், கல்வயல் குமாரசாமி, பா. சத்தியசீலன், திமிலைத் துமிலன் போன்றோரும் சிறுவர் இலக்கியத்தின் முன்னோடிகளாக திகழ்கின்றார்கள்.

திருகோணமலையில், சிறுவர் இலக்கியத்தை தொடக்கிவைத்தவர் பண்டிதர் பீதாம்பரனார் ஆவார். இவரது 'அந்த மரம் ஆலமரம்' என்ற பாடல் திருகோணமலையில் எழுதப்பட்ட முதலாவது பாடலாகும்.

சிறுவர்களுக்கான இலக்கியம் படைப்பது கடினமான காரியம். சிறுவர்கள், குழந்தைகள் மகிழும் வண்ணம், அதேவேளை ஏதாவதொரு வகையான அறிவை அவர்களுக்கு ஊட்டும் வண்ணம், இலக்கியம் படைப்பதென்பது கடுமையான விடயம். அண்மைக்காலமாக திருகோணமலை மண்ணில் குழந்தைப் பாடல்கள் பற்றிய பார்வை வேர்விட்டு விழுதாவதற்கு ஆரம்பித்துள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது என்பதற்கு பின்வரும் நூல்களின் வெளியீடுகளை உதாரணமாகக் கொள்ளலாம்:

- ★ தேன்சிட்டு - ச. அருளானந்தம்
- ★ இன்பக்கனிகள் (1990) - ச. அருளானந்தம்
- ★ பாட்டுப் பாடுவோம் (1992) - ச. அருளானந்தம்
- ★ பாடி ஆடுவோம் (1997) - ச. அருளானந்தம்
- ★ சின்னச்சின்னப் பாட்டு (2000) - ச. அருளானந்தம்
- ★ கடலும் காவேரியும் - ச. அருளானந்தம்
- ★ மனதிற்கினிய பாட்டு - ச. அருளானந்தம்
- ★ ஆனந்தமான பாட்டு - ச. அருளானந்தம்
- ★ சகோதரராய் வாழ்வோம் - ச. அருளானந்தம்
- ★ காகமும், தம்பியும் - ச. அருளானந்தம்
- ★ மழலைக்கோர் பாட்டு (2006) - கவிஞர் க. யோகானந்தம்
- ★ மொட்டு (2001) - செல்வி.ச.சின்னத்தம்பி
- ★ பாலர் பாடல் (1991) - கிண்ணியா ஜெனீரா அமான்
- ★ சின்னக்குயில் (2009) - கிண்ணியா ஜெனீரா அமான்
- ★ சிகரம் தொடவா (2008) - கிண்ணியா எஸ்.பாயிஷா அலி
- ★ குழந்தைக் கவிதைகள் - கிண்ணியா ஜெனீராதௌபீக்
- ★ தாமரையின் ஆட்டம் (2009) - கலாநிதி.கே.எம்.எம்.இக்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# சிறுகதை

## I. ஆரம்ப காலம்

சிறுகதையென்னும் நவீனவடிவம் உருவாகத் தொடங்கிய காலம், 19ஆம் நூற்றாண்டு. மேலைத்தேசங்களில் தோன்றி வளர்ந்த இவ்வடிவம், ஆங்கிலேயரின் வருகையினாலும், தொடர்பினாலும் தமிழில் கைநீட்டி வரவேற்கப்பட்ட அதே காலப்பகுதியில், ஈழத்திலும் சமச்சீராக வரவேற்கப்பட்ட நவீன வடிவமாக இது காணப்படுகிறது.

தமிழில் இவ்வடிவத்தைக் கொண்டு வந்த முன்னோடிகளான வ.வே.சு.ஐயர், புதுமைப்பித்தன், கு.ப.ரா., பிச்சமூர்த்தி, மௌனி, மாதவையா ஆகியோர் வளர்த்த அதே காலப்பகுதியில், இலங்கையிலும் அத்தகையதொரு நவீன வடிவம் வளர்வதற்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள், சி.வைத்திலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தர், சிவபாதசுந்தரம் ஆகியோராவர்.

1930களின் பிற்பகுதிகளில், இவ்வடிவத்தை இலங்கையில் அறிமுகம் செய்த பிதாமக்களாக இவர்கள் இருக்க, இரண்டாவது காலக்கட்டமெனக் குறிப்பிடப்படுகின்ற 1940ஆம் ஆண்டுகளுக்குப்பின், இன்னுமொரு தலைமுறை யினர், ஈழத்து சிறுகதை இலக்கியத்துக்கு உரம் சேர்த்தவர்களாக விளங்கு கின்றார்கள். அவர்களில் அ.செ.முருகானந்தம், தி.ச.வரதராஜன், அ.ந.கந்தசாமி, கனக. செந்திநாதன், தாழையடி சபாரத்தினம், சொக்கன், சு.வே. ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மூன்றாம் காலகட்டமென குறிப்பிடப்படுகின்ற 1950ஆம் ஆண்டுக்குப் பின்னைய காலப்பகுதியில், இன்னும் சில இளைய தலைமுறையினர் சிறுகதைத் துறைக்குள் பிரவேசிக்கின்றார்கள். அவர்களில், வ.அ.இராசரத்தினம், செ.கணேச லிங்கன், டொமினிக் ஜீவா, கே.டானியல், எஸ்.பொ., காவலூர் ராஜதுரை, நீர்வைப் பொன்னையன், என்.கே, ரகுநாதன் போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்போந்த கால வகுப்புக்குள் உள்ளடங்கி வருகின்ற வ.அ.ராசரத்தினம் என்னும் பிதாமகரின் வருகையுடனேயே திருகோணமலையின் சிறுகதை வரலாறு ஆரம்பமாகின்றது.

முதலாம், இரண்டாங் காலக்கட்டங்களில் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் திருகோணமலையைச் சேர்ந்த எழுத்தாளர்களின் பங்களிப்பைத் தேடுவதிலுள்ள கஷ்டங்களை உணருவதற்காகவே மேற்போந்த காலக்கட்டங்கள் இங்கு குறி பிடப்பட்டனர்.

மூன்றாவது காலக்கட்டமான 1950ஆம் ஆண்டுகளுக்குப் பின்னுள்ள ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில், வ.அ.ராசரத்தினம் இடம் பிடித்துக் கொள் வதிலிருந்து திருகோணமலை சிறுகதை வளர்ச்சி ஆரம்பமாகின்றது.

இதே வேளை, வ.அ. அவர்களின் 'இலக்கிய நினைவுகள்' என்னும் நூலில், அவர் தனது சிறுகதை ஆரம்பத்தைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார். "நான் எதிர்பாராதிருக்கையில் 1948ஆம் ஆண்டு செப்டெம்பரில், அக்கதை தினகரனில் வெளியாயிற்று, அப்போது, எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் தினகரனில் உதவி ஆசிரியர். தினகரனில் பிரசுரமான 'மழையால் இழந்த காதல்' என்ற சிறுகதைதான் அச்சில் வெளிவந்த என் முதற்சிருஷ்டி. திரு.எஸ்.டி. எஸ். அவர்களை இன்றும் நன்றியோடு நினைவுகூருகிறேன்."

வ.அ.ராசரத்தினம் அவர்களுக்குமுன், திருகோணமலையில் சிறுகதைகளை எழுதிய எழுத்தாளர்கள் இருந்தார்களா? அச்சுவாகனம் ஏறிய சிறுகதைகள் உண்டா? என்ற தேடல், காலச்சீரழிவு காரணமாக கண்டுபிடிக்க முடியவில்லை, எனவே, எமது மூத்த முன்னோடி வ.அ. என்ற உறுதியுடன் மேலே செல்லுவது நியாயமானது.

இந்த இடத்தில், கலாநிதி செ.யோகராஜா கூறிய ஓர் கருத்து மனங்கொள்ளப்பட வேண்டியவொன்று.

> ஈழத்திலே தமிழ்ச் சிறுகதையின் தோற்றம், யாழ்ப்பாணப்பிரதேசத்திலே முப்பதுகளிலே ஆரம்பமாகின்றபோதும், திருகோணமலைப் பிரதேசத்தில், நாற்பதுகளின் இறுதியிலேயே கால் கொள்கிறது. இவ்விதத்திலே, முன்னோடியாக விளங்குபவர் வ. அ. ஆவர். மூதூர்ப் பிரதேசத்தினூடாக திருகோணமலைப் பிரதேசம் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியிலே நிரந்தர இடம்பெறுவது வ. அ. வின் சிறுகதைகளினூடாகவே என்பதில் தவறில்லை."

1950ஆம் ஆண்டுகளுக்குப் பின் ஏற்பட்ட அரசியல், சமூக மாற்றங்களின் வெளிப்பாடாக, இப்புதிய வடிவம், திருகோணமலையிலும் வளர்ச்சி அடையத் தொடங்கிய காலத்தில், வ. இ. வுடன் இன்னும் சிலரை, சிறுகதைத் துறையின் முன்னோடிகளாக நாம் கணிக்க வேண்டியுள்ளது. அவர்களில், வ.அ. இராயப்பு, தருமு.சிவராமு போன்றவர்கள், முதற்காலகட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்ற கால வகுப்புக்குள் வருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வ.அ.இராசரத்தினம்

திருகோணமலை மாவட்டத்தில் மகாவலி கங்கை கடலோடு கலக்கும் கொட்டியாரக் குடாவின், அழகான கிராமமான மூதூர்க் கிராமத்தில் பிறந்த இவர், ஆசிரியராக தன் வாழ்வை ஆரம்பித்து, அதிபராக கடமையாற்றி, ஓய்வு பெற்றவர், தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பாண்டித்தியம் மிக்கவராகத் திகழ்ந்தவர்.

1948ஆம் ஆண்டு, தினகரனில் வெளியான 'மழையால் இழந்த காதல்' என்னும் சிறுகதையினூடாக எழுத்துலகில் புகுந்து கொண்டார். 1950ஆம் ஆண்டு, ஈழகேசரியில் வெளிவந்த 'இதயதாகம்' என்னும் சிறுகதையினூடாகத் தன்னை, ஒரு சிறுகதை மன்னன் என வரலாற்றில் பதித்துக் கொண்டார்.

1950-1957 காலப்பகுதியில், சுமார் 29 சிறுகதைகளை எழுதியுள்ளேன், என்று குறிப்பிட்டுள்ள அவர். ஈழத்துச் சிறுகதை வரலாற்றுக்கு மாத்திரமல்லாமல், உலகத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றுக்கும் மாபெரும் பங்களிப்புச் செய்த ஈழத்துச் சிறுகதை மன்னனாகப் போற்றப்படுகின்றார்.

இவரது முதற் தொகுதியாக, 1962ஆம் ஆண்டு 'தோணி' என்னும் சிறுகதைத் தொகுதி வெளிவந்தது. சுதந்திரன், ஈழகேசரி, வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த 15 சிறுகதைகள், இதில் தொகுக்கப்பட்டுள்ளன.

'தோணி' சிறுகதைத் தொகுதிக்காக, சாகித்திய மண்டலப்பரிசைப் பெற்ற கிழக்கின் மூத்த எழுத்தாளரான வ.அ. இ. வின் சிறுகதைகளில் ஒன்றான தோணி என்னும் சிறுகதை, மஞ்சரியென்னும் இந்தியப் பத்திரிகையில் மறுபிரசுரம் செய்யப்பட்டு, லட்சக்கணக்கான வாசகர்களால் போற்றப்பட்ட ஓர் சிறுகதை யாகவும் விளங்குகின்றது.

ஏ.ஜே. கனகரத்தினா என்னும் எழுத்தாளர், இதை ஆங்கில மொழியிலும், த.கனகரத்தினம் சிங்கள மொழியிலும் மொழிபெயர்ப்புச் செய்தது மாத்திர மல்லாமல் சுமார் 18 உலக மொழிகளில் மறுபிறவி எடுத்த பெருமை, தோணி சிறுகதைக்குண்டு. 'அக்கரை இலக்கியம்' என்ற தொகுதியில் இடம்பிடித்த முதல் ஈழத்துச் சிறுகதை என்னும் பெருமையும் இதற்கேயுண்டு.

இந்தச் சிறுகதையை எழுதிய சூழ்நிலையை பிரஸ்தாபித்த வ.அ.இ. அவர்கள், 1951ஆம் ஆண்டளவில் ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவரான இலங்கையர்கோனை வ.அ.இ. மூதூரில் தற்செயலாகச் சந்திக்கிறார். மூதூர்க் கிராமத்தை வைத்து அவர் ஆங்கிலத்தில் எழுதிய 'சூதாடி' என்ற கதையைப் படித்த வ.அ. இ., சிறுகதை மரபுக்குப் புறம்பாக இரு கதைகளையும் இலங்கையர்கோன் எழுதியிருக்கின்றார் என்று அவரோடு வாக்குவாதப்பட்டதன் விளைவு, இலங்கையர்கோன் வ.அ. இ.விடம் 'உம்மூர் கதைதானே நீரே எழுதுமன்' என்று விட்ட சவாலின் பிறவிதான், 'தோணி', 'அறுவடை' ஆகிய சிறுகதைகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தோணி' ஒரு மீனவனின் கதை. சொந்தத் தோணி கிடையாது. முதலாளியிடம் வாடகைக்கு வாங்கிய தோணியில், அவன் தொழில் செய்தான். பிடிக்கும் மீனில் வள்ளப்பங்கு என்று ஒரு பகுதியை, முதலாளிக்குக் கொடுக்க வேண்டும், மீதியை முதலாளி கூறும் விலைக்கு விற்கவேண்டும்.

இவ்வரும்படி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தாது என்றுணரும் அம்மீன வனின் மகன், ஒரு தோணிக்குச் சொந்தக்காரனாக விரும்புகிறான். தன்னிடம் சொந்தத் தோணியில்லாதபடியால், தனக்குப் பேசிய பெண்ணைக் கைப்பிடிப் பதைக் கூட மறுக்கிறான். சொந்தத் தோணி இல்லாத தன்னுடன் சேர்ந்து அவள் கஸ்டப்படுவதைப் பார்க்கிலும் சொந்தத் தோணியுள்ள ஒருவனுடன் சேர்ந்து சந்தோஷமாக வாழட்டும் எனக் கூறுகிறான். ஆயினும், அவனுக்குச் சொந்தத் தோணி கனவாகவே இருக்கிறது.

இத்தொகுதியில் தோணி, அறுவடை, பிரிவுபசாரம், மனிதன், பாசம், பெண், ஒற்றைப்பனை, குடிமகன், ஏமாற்றம், கோகிலம், கலைஞனும் சிருஷ்டி யும், பாலன்வந்தான், தருமம், நம்பிக்கை. ஆகிய சிறுகதைகள் இடம்பெறு கின்றன.

இவரது சிறுகதைகள் பற்றி செங்கை ஆழியான் பின்வருமாறு குறிப் பிடுவார்:

> தான் வாழும் பிரதேசத்தின் மக்களது வாழ்க்கை, பிரதேச அழகு, அவர்கள் வாழ்க்கையின் பலமும் பலவீனமும் என்பவற்றை எழுத்தில் தந்துவிடும் ஆவலும், அவற்றின் ஊடாக தான் வாழ்கின்ற சமூகத்தின் மேம்பாட்டிற்கு, சிலகருத்துக்களை சொல்லிவிடும் ஆதங்கமும் அவரது படைப்புக்களில் காணப்படுகின்றன.

திரு.கே.எஸ்.சிவகுமாரன் வ.அ.இ. பற்றிக் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> அவர் ஈழம் பெருமைப்படக்கூடிய தலைசிறந்த சிறுகதை ஆசிரியர் என்பதும், ஈழத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஓரிரு நல்ல எழுத்தாளர்களுள் ஒருவர் என்பதும், ........... இதுவரை வெளிவந்த ஈழத்து சிறுகதைத் தொகுப்புக்களில் சிறப்பானது தோணிதான் என்பதும், எனது மதிப்பீடு' என்று எழுதி யிருக்கிறார்.

'ஒரு காவியம் நிறைவு பெறுகிறது' (1996), ஐம்பது சிறுகதைகள் உள்ளடங்கிய ஒரு தொகுப்பாகும். தனது 50 வருட இலக்கிய வாழ்க்கையில்,300க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ள வ.அ. (இ) இன், 'கடலோரக்கதைகள்', 'கொட்டியாரக்கதைகள்' (1999), 'ஐந்திணைக்கதைகள்' (2000) என்பவையும் சிறுகதைத் தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன.

'தோணி', 'ஒரு காவியம்நிறைவு பெறுகின்றது', 'கொட்டியாரக் கதைகள்', 'ஐந்திணைக் கதைகள்' ஆகியவற்றில் உள்ள கதைகளை நோக்குகின்றபோது அவற்றுக்கிடையே ஒரு பொதுவான குணம் இழையோடுவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர் கிராமங்களின் வாழ்க்கைத் தரவுகள், அக்கிராமங்களின் அழகு சுடர் விடும் கோலங்கள் ஆதியன இவர் கதைகளில் மிளிர்வதைக் காணலாம்.

இதற்கு உதாரணமாக கொட்டியாரக் கதைகள் கதை தொடங்குகிற போதே ஆசிரியர் பின்வருமாறு தெடங்குகிறார்:

> மகாவலிகங்கை கரைபுரண்டது; ஊரின் அயலிலுள்ள நீர்ப்பாய்ச்சற் குளங்கள் எல்லாமே அணைகளை உடைத்துக் கொண்டன; கொட்டியாபுரப்பற்று முழுவதுமே வெள்ளக் காடாகியது.
>
> கதிரும் குடலையுமாக காற்றில் அசைந்து கொண்டிருந்த நெற் பயிர்கள் வெள்ளத்தில் ஆழ்ந்தன. நெற்கழனிகளுக்கு அப்பால் திடர்களில் விம்மி விளைந்து சென்ற சேனைப்பயிர்களான சோளன், இராசவள்ளி, மரவள்ளி, கச்சான் என்ற எல்லா வான்பயிர்களும் வெள்ளத்தில் ஆழ்ந்தன.'

இவ்வாறு எதையும், தனது கிராமத்தின் மணம் கமழவும், வாசனைவீசவும் சொல்லுவதில் வ.அ.இ. க்கு நிகர் அவரே.

இதேபோலவே, அவர் கதைகளில் வரும் மண்ணின் மாந்தர்களின் உரை யாடல்களில், மூதூர் கிராமியச் செழுமை நிறைந்து காணப்படுவதை கண்டு வியக்கலாம். ஓர் ஆலமரத்தின் கதையில் வரும் பின்வரும் கிராமிய செய்தி இது:

> அந்தக் காலத்தில் வயலில் வெள்ளாம வெட்டேக்க வெட்டுக்காரர்களுக்கு வீட்டில் சமைச்சித்தான் வாப்பா சோறு கொண்டுபோவார். தமிழ் ஆக்கள் வெள்ளாம வெட்டினா மாட்டிறைச்சி ஆக்கமாட்டார். இப்ப எல்லாம் தமிழனும் மாடு தின்றான். வீட்டில் சமைக்கிறது கஸ்டமென்று சோத்துக் கடையில் தலைக் கொரு சோத்துப்பார்சல எடுத்திற்றுப் போறாங்க,

வ.அ.வின் கதை சொல்லும் உத்தி, அதை வளர்த்துச் செல்லும் லாவகம், தனித் தன்மையும் கட்டுமானமான போக்கும் கொண்டவை. மௌனியின் அழுத்தம், கு.பா.ர. வின் வேகம், பிச்சமூர்த்தியின் லாவகம், தகழியின் கதாபாத்திரத் தெரிவு, நீலபத்மநாதனுடைய தேடல் இவையெல்லாம் சேர்ந்தாற்போன்ற ஒரு வல்லமையும் அழகும் இவர் சிறுகதைகளுக்குண்டு.

சிறுகதை உத்தியில், இவர்படைத்த 'ஐந்திணைக் கதைகள்', இன்னும் ஒருவகையான பரிசோதனை முயற்சி என்று சொல்லலாம். சங்கச் செய்யுள்களின் வடிவழகுகளை, தற்கால நிழல் வடிவமாக்கி இதனைப் படைத்திருப்பது அவரின் மிகப்பெரிய சாகசம் என்று சொல்ல வேண்டும்.

**தருமு சிவராமு**

1950க்குப்பின் 70க்கு இடையில், திருகோணமலைச் சிறுகதை வரலாற்றில் மௌனியாக இருந்து, அற்புதம் செய்தவர் தருமு சிவராமு. இவர் பற்றி, ஏற்கனவே கவிதைத் துறையில் விரிவாகக் கூறியிருக்கிறேன். 1970ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குப் பின், திருகோணமலையை விட்டுப் புலம்பெயர்ந்து இந்தியாவுக்குச் சென்றுவிட்ட தருமு சிவராமு, தனது அந்திம காலம்வரை தமிழகத்தில் இருந்தே மரித்து விட்டார்.

இவர் பள்ளியில் படித்த காலத்தில் எழுதிய பல்வேறு சிறுகதைகள், அச்சு வாகனம் ஏறவில்லையாயினும், திருகோணமலை அமரசிங்கம் நடாத்திய 'யாழ்' (1959) என்னும் கையெழுத்துப் பிரதியில் பல்வேறு சிறுகதைகளை எழுதியுள்ளார் சிவராமு.

ஈழத்தின் சில சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் இவரது சில கதைகள் வெளிவந்த போதும், அதன் ஆவணத்தன்மை பேணப்படாமையினால், அவற்றை ஆய்வுக்கு உட்படுத்த முடியவில்லை. ['கதவைத் தொட்ட கை' (1959), 'ஒற்றைப் பனை' (1974) பக்கம் 9]

இவர் தமிழகத்துக்குப் புலம்பெயர்ந்தபின் சிறுகதையுடன் எவ்வித நாட்டம் கொண்டிருந்தார் என்பது பற்றி தமிழக விமர்சகர்கள் பலர் விபரமாக எழுதியவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

### இராயப்பு - அரியநாயகம்

தருமு சிவராமுவைப் போலவே இராயப்பு என்னும் ஒரு சிறுகதை வடிப்பாளன் திருகோணமலையில் இருந்துள்ளார். இவர், தினகரன் பத்திரிகையின் நிருபரா கவும் கடமைபுரிந்துள்ளார். இவர் எழுதிய சிறுகதைகள் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெறாமையினால் அவர் பற்றிய முழுமையான ஆய்வைச் செய்ய முடியாது உள்ளது. இரட்டையர்கள் என்று வர்ணிக்கப்பட்ட இராயப்பு, அரிய நாயகம் ஆகிய இருவரும் இக்கால கட்டத்தில் கோணமலையின் சிறுகதை வரலாற்றிற்கு கணிசமான பங்களிப்பை செய்துள்ளனர்.

## II. 1960 கள்

இரண்டாவது காலக்கட்டம் என்று குறிப்பிடப்படும் 1960ஆம் ஆண்டுக்கும் 1970ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலம், திருகோணமலையின் சிறுகதை வளர்ச்சிப் போக்கில் ஓர் வீச்சு அல்லது வேகமுடைய காலம் என்று கூறலாம். புதிய தலைமுறையொன்று, இக்காலக்கட்டத்தில் சிறுகதைத்துறைக்குள் பிரவே சிக்கிறார்கள். அவர்களில் மிகவும் குறிப்பிடக்கூடியவர்கள் ந.பாலேஸ்வரி, தி.அரியநாயகம், க.சா.அரியநாயகம், தா.பி. சுப்பிரமணியம், புரட்சி பாலன், ஆபிநயசிகாமணி சி.விஸ்வலிங்கம் ஆகியோர் ஆவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ந.பாலேஸ்வரி

பயிற்றப்பட்ட ஆசிரியராக பின், திருகோணமலை விக்னேஷ்வரா கல்லூரியின் உதவி அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்ற பாலேஸ்வரி, 1957ஆம் ஆண்டு 'வாழ்வளித்த தெய்வம்' எனும் சிறுகதையை தினகரன் பத்திரிகையில் எழுதிய தன் மூலம், எழுத்துத் துறையில் பிரவேசித்தார்.

இரண்டாம் காலக்கட்டத்துக்கு தலைமை தாங்குகிறவர் ந.பாலேஸ்வரி. இவரது முதலாவது சிறுகதைத் தொகுதியான 'சுமை தாங்கி' 1973ஆம் ஆண்டு வெளிவந்தது. வீரகேசரி, சிந்தாமணி, கல்கி, தமிழின்பம் போன்ற பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்த ஆறு கதைகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன.

'சுமைதாங்கி', 'இதுதான் உலகம்', 'டெரலின்ஷேட்', 'ஜெயந்தியின் தந்தி' ஆகிய ஆறுகதைகள் கொண்ட தொகுப்பு இது. இதில் உள்ள சுமைதாங்கி என்னும் சிறுகதை, மலேசியாவில் இருந்து வெளிவரும் 'தமிழ்மலர்' பத்திரிகையில் மறுபிரசுரம் செய்யப்பட்டு, பாராட்டுப்பெற்ற சிறுகதையாகும்.

200க்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியவர், பாலேஸ்வரி.

இவரது கதைகள் இலங்கை, இந்தியா, மலேசியா, பாரிஸ் முதலிய நாடுகளின் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. 'இதுதான் உலகம்' என்னும் சிறுகதை கல்கி நடாத்திய போட்டியில் பரிசுபெற்றது, 'எழுதவே மாட்டேன்', அமுதம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசும் பெற்றுள்ளது.

1992ஆம் ஆண்டு, இலங்கை சாகித்திய மண்டலம் இவருக்கு 'தமிழ்மணி' என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது. இதே போலவே, 1999ஆம் ஆண்டு வ.கி.மாகாண ஆளுநர் விருது இவருக்கு வழங்கி கௌரவிக்கப் பட்டார்.

முதற்தொகுதியான 'சுமைதாங்கி' காதல் மனச்சுமைகளைச் சொல்லும் கதைகளாகக் காணப்படுகின்றது. உதாரணமாக, சுமைதாங்கி என்னும் கதையில் தாரணி, ரமணி ஆகிய நண்பிகள் பல்கலைக்கழக சிநேகிதமும், உத்தியோகமும், ஒரே பாடசாலையில் ஆசிரியர்களாகவும் கிடைக்கிறபோது, ரமணி வீட்டில் தாரணி தங்கியிருந்து இருவரும் இணைபிரியாத நண்பிகளாக பழகுகிறார்கள்.

தாரணிக்கு தனது சகோதரன் முகுந்தனை மணம் முடித்துவைக்க ரமணி பிரியப்படுகிறாள். ஆனால், படிப்பில் குறைந்த அவனை, தாரணி விரும்பவில்லையென்பதனாலோ என்னவோ, அவள் முயற்சி தோல்வி அடைகிறது. ஆனால், தன்மனத்துக்குள் தாரணி மீது அவன் வளர்த்த ஆசையை ரமணியிடம் அவன் சொல்லும் போது, அவள் அதிர்ந்து போகிறாள்.

ஆனால், தான் முதல் கேட்டபோது உடன்படாத தாரணியை பலாத்காரப் படுத்த விரும்பாத ரமணி, அவள் வேறு ஒருவனை விரும்புகிறாள் எனப்பொய் சொல்லி தட்டிக்கழித்து, தானே தாரணிக்கு மணம்பேசி முடித்துவைக்கும் அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளில், முகுந்தன் நஞ்சருந்தி விடுகிறான். இதை மணப்பந்தலில் கேள்வியுற்ற ரமணி, தாரணியின் திருமணம் குழம்பிவிடக்கூடாது என்ற விரதத்துடன், மண மக்களை வாழ்த்து மட்டும் நின்று, விடை பெற்று, தனது சகோதரனிடம் ஓடுகிறாள். புதுமணத்தம்பதிகளாகிய தங்களை வரவேற்க ரமணி இல்லையென கவலைப் படுகிறாள் தாரணி. பிறகு உண்மையை உணர்ந்து வேதனைப்படுகிறாள்.

இக்கதையினுடைய களம், பாத்திர வார்ப்புக்கள் எல்லாம் நல்லதொரு ஓட்டத்துடன் சொல்லப்படுகிறது. ஆனால் கதையினுடைய உத்தி வழமையான மரபு கொண்டதாகவும்வுள்ளது.

'இதுதான்உலகம்' என்னும் சிறுகதையில், பாடசாலை ஆசிரியர் ஒருவர் கதாபாத்திரமாக வருகின்றார். களம் யாழ்ப்பாணமாக விரிக்கப்பட்டிருக்கிறது. 'மகா தியாகி' என்ற கதை, தனது நண்பன் ஜெகதீஸ் தன்னால் வெடிபட்டு ஊனமாகிவிட்டது கண்டு, சங்கர் அவனுக்கு வாழ்நாள் பூராவும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்ற சபதத்துடன் ஜெயந்தியின் காதலை மறந்து விடுகிறான். காதலை இழந்த ஜெயந்தி, விரக்தியுடன் வெளிநாடு செல்லப் புறப்படுகிறாள். அதேபோல், சங்கரும் அவள் வேறு திருமணம் செய்யாமல் தன்னையே எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பதனை உணர்ந்து, வெளிநாட்டுக்குப் புறப்படும் தறுவாயில் இவர்களை ஒன்று சேர்த்த ஜெகதீஸ், மறைந்துவிடுகிறான். இருவரும் ஒன்றாகிறார்கள்.

இவ்வாறு, எல்லாக் கதைகளிலும் ஓர் மெல்லியதனமான காதல், தியாகம், மனமுறிவு என்பவற்றைச் சொல்லும் இவரது கதைகளில், பாடசாலைகளும், ஆசிரியர்களும் வந்துபோவது தனது நீண்டகால ஆசிரியத் தொழிலின் அனுபவத்தின் ஊடாக பெறப்பட்ட கதாபாத்திரங்களின் வார்ப்புக்களாக, இக் கதைகள் அமைந்துள்ளது. இன்னுமொரு வகையில் கூறுவதானால், சொந்த அனுபவத்தின் வெளிப்பாடாகவும், படிப்பினையாகவும் காணப்படுகிறது.

இவரது இன்னொரு சிறுகதைத் தொகுதி, 'தெய்வம் பேசுவதில்லை' (2000). சென்னை காந்தளகம் பதிப்பாக வெளிவந்துள்ள இச்சிறுகதைத் தொகுதியில், 1960ஆம் ஆண்டு தொடக்கம் 1980ஆம் ஆண்டுவரை பாலேஸ்வரி எழுதிய 29 சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

'தொடுவானம்', 'தெய்வம் பேசுவதில்லை', 'வைராக்கியம்', 'நெஞ்சில் நிறைந்தவள்', 'போய்விடுங்கள்', 'எழுதவேமாட்டேன்' என்பன, மேற்கூறப்பட்ட தொகுதியில் அடங்கும் முக்கியமான சிறுகதைகளாகும். சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் வெளிவந்த கதைகளை, இதில் தொகுத்து வெளியிட் டுள்ளார்.

"சிறுகதை வெளியீடுகளைப் பொறுத்தவரை மிக மந்த அளவிலேயே எனது முயற்சி இருக்கிறது" என ஆசிரியரே சொல்லியிருப்பது இங்கு மனங்கொள்ளப் பட வேண்டியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தொடுவானம்' என்ற சிறுகதையில், எல்லா ஆண்களுடனும் கள்ளம் கபட மற்றுப் பழகும் சுபாவமுள்ள பெண்ணுக்கு, சமூகம் கட்டும் பட்டத்தை புட்டுக் காட்டியும், 'தெய்வம் பேசுவதில்லை' சிறுகதையில் ஒரு தோட்டக்காரனின் மகனாக உள்ளவனும் டாக்டராக வரமுடியும். அடிவாழ்க்கையில் இருந்துவரும் ஒவ்வொருவரும், தமது பழைய வாழ்வின் நிழலின் கீழ் வாழ்ந்து, சமூகத்திற்குத் தொண்டு செய்ய நினைக்கிறார்கள் என்ற படிமத்தை வலியுறுத்தி, இச்சிறுகதை எழுதப்பட்டிருக்கிறது.

இச்சிறுகதைத் தெகுதியில் வரும் அநேக கதைகளில், இவர் படைத்த ஏனைய சிறுகதைகளைவிட ஓர் சிறப்பு அம்சம் என்னவெனில், திருகோண மலைப் புலம் மிக அழகாகச் சொல்லப்பட்டிருப்பது தான்.

'ஆசியஜோதி' சிறுகதையில், திருகோணமலை நகரில் நடந்த இனப் படுகொலைகள், மிகச் சிறிதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசிரியர் தான்பட்ட அனுபவங்களின் வெளிப்பாடாக இக்கதையை வடித்திருக்கிறார். தனது மாண விக்காக ஆசியஜோதி என்ற நூலை வாங்கிச் செல்லும் ஆசிரியர், அந்த மாண வியும் குடும்பமும் இனப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று கேள்வியுற்று, அதிர்ந்து விடுகிறார். ஆசியஜோதியின் தர்மத்தை பின்பற்றும் இந்த நாட்டிலா இந்த அட்டூழியம்? எனக் கதை முடிகிறது.

பழுத்த அனுபவமும் ஆற்றலும் உடைய தமிழ்மணி பாலேஸ்வரியின் சிறுகதை உத்திகள், சொற்பின்னல்கள், கற்பனை ஆழம் நிறைவாகவும், அனுபவ ஆழம் குறைவாகவும் காணப்பட்டபோதும், ஈழத்துப்பெண் எழுத்தாளர்களில் மிகப்பெரிய பங்களிப்பைச் செய்த எழுத்தாளராக விளங்குவது, கிழக்கு மண்ணுக்கு, பெருமை தரும் விடயமாகும்.

## தி.அரியநாயகம்

திருகோணமலையின் சிறுகதை வளர்ச்சியில் கனதியான, அதேவேளை அமைதி யான பங்களிப்புச் செய்தவர் தி.அரியநாயகம். 1933ஆம் ஆண்டு புரட்டாதி திங்கள் 24 இல் பிறந்த இவர், காதல் மணம்புரிந்து ஏழு பிள்ளைகளுக்குத் தந்தையாகி, 1988ஆம் ஆண்டு சீருடைக்காரர்களினால் படுகொலை செய்யப்பட்ட ஓர் மூத்த எழுத்தாளர். திருகோணமலை நகராட்சிமன்ற நூலகத்தில் நூலகராக கடமையாற்றிய இவர், தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் புலமை மிக்கவர். இராயப்பு என்னும் நண்பரோடு கொண்ட தொடர்பினால் பேச்சுத்துறை, நடிப்புத்துறை, கவிதைத்துறை அனைத்திலும் பிரகாசித்தவர். தி.மு.க.வின் பகுத்தறிவுக் கொள்கையின்பால் ஈடுபாடு கொண்ட அரியநாயகம், மேடைகளில் பேசுவதிலும் நடிப்பதிலும் அதிகமாக ஆர்வம் காட்டி வந்தார்.

'சாவின் மடியில்' என்ற சிறுகதையை எழுதி, சுதந்திரன் பத்திரிகை மூலம் எழுத்துலகில் பிரவேசித்துக் கொண்ட இவர், வீரகேசரி, தினகரன் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் ஏனைய சஞ்சிகைகளிலும் எழுதி திருகோணமலை சிறுகதை வரலாற்றுக்கு அளப்பரிய பங்களிப்பை செய்துள்ளார்.

'ஊனம்' என்ற சிறுகதையை வீரகேசரியில் 63இல் எழுதிப் புகழ் கொண்ட இவருக்கு, உண்மையிலேயே ஒரு கை ஊனம் என்பது பலருக்குத் தெரியாது.

'பச்சைநோட்டு' (வீரகேசரி, 1965, மார்ச் 21.), 'இதயச்சுமை' (வீரகேசரி, 21.06.1964.), 'தெய்வத்தின்சுவடு' (25, ஒக்டோபர், 1964.), 'ஞானோதயம்' (சுதந்திரன், 20.01.1965.), 'ஊனம்' (வீரகேசரி, 10.06.1963.), 'பூஜைக்கு வந்தமலர்' (வீரகேசரி, 19.01.1964.), 'அவ்வளவுதான்' (ஒற்றைப்பனைத் தொகுதி, 1974.), 'ராதா நீ' (பிரசுரமாகாதவை.) ஆகிய சிறுகதைகளை இவர் எழுதியுள்ளார். இவை தொகுக்கப்படாமல் பத்திரிகைப் பிரசுரங்களாகவே இன்றும் இருந்து கொண்டிருக்கின்றன.

பொதுவாகவே, திருகோணமலை மண்ணின் வாசனைச் செழுமை கொண்ட கதைகளை எழுதுவதில் வல்லவரான இவரது சிறுகதைகள் தொகுக்கப் பெறாவிட்டாலும், மௌனியைப்போல் குறைவான சிறுகதைகள் மூலம் நிறைவான இலக்கியப்பணி செய்தவர் என்ற தகுதியைப் பெறுகின்றார்.

இவரது 'பூஜைக்குரிய மலர்' என்னும் சிறுகதை ஒரு காலத்தில் திருகோணமலைக் கடற்கரையில் இருந்த இலக்கிய கர்த்தாக்களுக்கு களம் அமைத்துக் கொடுத்த, அந்த 'ஒற்றைப்பனை' மரமே இக்கதையின் முக்கிய பாத்திரமாகும். (இந்த ஒற்றைப்பனை பற்றி தா.பி.சுப்பிரமணியம் 'ஒற்றைப்பனை' என்ற தலைப்பில் சிறுகதை ஒன்றை படைத்துள்ளார்.)

தாங்கிப்புட்டிக்கும், மனையாவெளிக்கும் இடையில் உள்ள கடற்கரையில், நடுமையமாக நின்ற அந்த ஒற்றைப் பனைக்கென்று ஒரு சரித்திரமே கிடையாது. அது எப்படி அங்கு உண்டாயிற்று? யார் அதை உண்டாக்கினார்? என்று எவருக்குமே தெரியாது. அது பூப்பதுமில்லை; காய்ப்பதுமில்லை. (இப்பனை மரம் இப்பொழுது பட்டுவிட்டது.)

காலநிர்ப்பந்தம் காரணமாகவோ என்னவோ தி.அரியநாயகம் எழுதிய சிறுகதைகள், காதல் நினைவுகளையும் மனச்சிதறல்களையும் சொல்லும் சிறுகதைகளாகவே இருக்கின்றன. அடுக்குமொழித் தேர்ச்சியுடைய இவரது தமிழ்ச் சொல்வாக்கு, இவரது சிறுகதைகளிலும் பிரவாகிக்கின்றது.

'பச்சை நோட்டு' என்னும் சிறுகதையில் வரும் மனோ என்னும் பெண், வறுமையின் காரணமாக பச்சை நோட்டுக்காக (பத்து ரூபா) ஒரு கணம் தனது காதலை மறக்க நினைப்பதும், பின், உண்மைக் காதல்முன் அது தோற்றுப் போவதுமான காதல் வறுமையை, மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்.

இவர் இறந்தபோது, எழுத்தாளர் ஜோன்-ராஜன் வீரகேசரியில் இவர்பற்றி எழுதிய குறிப்பை அப்படியே தருகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையின் முன்னோடி எழுத்தாளர்களில் ஒருவரான தி.அரியநாயகம், இராணுவத்தினரின் தாக்குதலுக்கு ஆளாகி அகால மரணமடைந்து விட்டார் என்ற செய்தி எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டது. அண்மையில் உப்புவெளியில் படுகொலை செய்யப்பட்டுக் கிடந்த ஆண்களும் பெண்களு மான ஒன்பது தமிழர்களில் இவரும் ஒருவர் என்று தெரியவந்துள்ளது.

### க.சா.அரியநாயகம்

அரியநாயகம் என்ற பெயரில், திருகோணமலை சிறுகதைத்துறைக்கு பங்களிப்புச் செய்த இன்னுமொருவர், க.சா.அரியநாயகம் என்பவர், இடதுசாரி இயக்கத்துடன் நிறைந்த தொடர்பு உடைய அரியநாயகம், பொதுவுடமைக் கருத்தைத் தாங்கிவந்த 'தேசாபிமானி'ப் பத்திரிகைக் குழுவில் ஒருவராக கடமையாற்றியவர். திரு கோணமலை துறைமுக கூட்டுத்தாபனத்தில் ஒப்புநோக்கு எழுதுவினைஞராகக் கடமையாற்றினார்.

தினகரன், வீரகேசரி, மல்லிகை போன்ற பத்திரிகைகளில் பல சிறுகதைகளை எழுதிய இவருடைய சிறுகதை ஆக்கங்கள், ஆவணப்படுத்தப்படாமல், தெரி யாமல் போய்விட்டன. 'கோடு' என்ற சிறுகதை, 'குங்குமம்' என்ற திருகோண மலை மாநில மஞ்சரியில் வெளியாகியுள்ளது.

தனது இறுதிக்காலத்தில் வன்னிப்பகுதியில் வாழ்ந்து இலக்கியப் பணிபுரிந்த அரியநாயகம், இன்று எம்மிடையே இல்லை. இவரது சிறுகதைகள் தொகுக்கப் படவில்லை.

### 'அபிநயசிகாமணி' சி.விஸ்வலிங்கம்

அன்புவழிபுர கிராமத்தைச் சேர்ந்த நாடக கலைஞரும், நடிகருமான விஸ்வ லிங்கம், திருகோணமலையின் ஆரம்பகால சிறுகதை வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்துள்ளார்.

1960 - 1963 ஆண்டு காலப்பகுதிகளில் ஒரு சில சிறுகதைகளை எழுதி யுள்ளார். அவர் எழுதிய சிறுகதைகளாவன: 'புதுத்திட்டம்' (சுதந்திரன்), 'ஏழை யின் செயல்' (சுதந்திரன்), 'சிதைந்த வாழ்வு' (சுதந்திரன்), 'உயிரோவியம்' (சுதந்திரன்).

### தா.பி.சுப்பிரமணியம்

நாடறிந்த எழுத்தாளர் தா.பி. சுப்பிரமணியம் ஆவார். பயிற்றப்பட்ட ஆசிரியராக, அதிபராக பணிபுரிந்து, திருகோணமலை நகராண்மைக் கழகத்தின் பிரதி நகர பிதாவாக கடமையாற்றி, புனிதவளனார் வித்தியாலயத்தின் அதிபராக இருந்து, ஓய்வு பெற்ற இவர், ஓர் சிறந்த நாடக ஆசிரியர், ஓவியர், நகைச்சுவைத் துணுக்காளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தா.பி.சுப்பிரமணியம்

பாடசாலையில் கல்வி கற்கின்ற காலத்திலேயே, தனது வாழ்வில் கண்ட உண்மைச்சம்பவமொன்றைக் கதையாக்கி, 'அறிவுச் சுடர்' என்ற கையெழுத்துப் பிரதியில் வெளியிட்ட தா.பி.யின் கதையைப்படித்த ஆசிரியர்கள், இக்கதையைப் பத்திரிகைக்கு அனுப்பு என்று தூண்டியதன் பேரில், இந்தியாவில் இருந்து வரும் 'கரும்பு' சிறுவர் சஞ்சிகைக்கு 'விடாமுயற்சி' என்ற இச்சிறுவர் கதையை அனுப்பினார். அது 1954ஆம் ஆண்டு பிரசுரமாகியதன் மூலம் எழுத்துலகில் பிரவேசித்த தா.பி; ஈழகேசரியில் 1955இல் 'சந்தனக்குச்சு' என்ற சிறுகதையை எழுதினார். இதுவும், சிறுவர்களுக்குரிய கதையாகவே இருந்தது.

1960ஆம் ஆண்டு சுதந்திரன் பத்திரிகையில் இவர் எழுதிய, 'கடித மன மாற்றம்' என்ற சிறுகதையே இவரது முதற் சிறுகதையென்று சொல்லலாம். கிளிவெட்டிக் கிராமத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்துகொண்டிருந்த வேளை, நண்பர் ஒருவருக்கு திருமணப்பேச்சு நடைபெற்றதாகவும் பெண்ணைப் பிடிக்காத மாப்பிள்ளை தனது பெற்றோருக்கும், பெண்ணுக்கும் ஏன் பிடிக்கவில்லையென்று விபரமாக கடிதம் ஒன்று எழுதி முகவரியிடும் போது, பெண்ணுக்குச் சேர வேண்டிய கடிதம் பெற்றோரிடமும், பெற்றோருக்கு சேரவேண்டிய கடிதம் பெண்ணிடமும் சேர்ந்து, ஏற்பட்ட குழப்பமும், பின் அப்பெண்ணையே நண்பர் மணம் முடித்த அந்த உண்மைச் சம்பவமே, 'கடித மனமாற்றம்' என்ற தலைப்பில் சிறுகதையாக வெளிவந்துள்ளது. 'மீண்டும் திருமணம்' (1964) ராதா, எண்ணும் எழுத்தும்' (1964) தினகரன், 'ஒற்றுமையின் பலம்', 'இதுதான் பயிற்சியா'?, 'இவர்களும் ஆசிரியர்களா?', 'இன்னும் எத்தனை நாளைக்கு', 'திறந்த கல்லறை' (1971) வீரகேசரி, 'திருத்தப்படும் தீர்மானங்கள்' (1973) கலைமகள் என 16 சிறுகதைகளை எழுதியுள்ளார்.

இவரது சிறுவர் சிறுகதைகள் 'விடாமுயற்சி' என்ற பெயரில் திருமலை புனிதவளனார் வித்தியாலய மாணவர் மன்றத்தினால் (1960) வெளியீடு செய்யப் பட்டுள்ளது. 'நீதி நிலைக்கட்டும்' (சிறுவர் கதை -1961), 'சந்தனக்குச்சு' (1965) சிறுகதைத் தொகுதி என்பன பிதாபதிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்ற கால, மாணவ ஆசிரிய அனுபவங்கள், பண்டாரவளை, கிளிவெட்டி போன்ற இடங்களில் ஆசிரியராகக் கடமையாற்றிய அனுபவங்களைத் தொகுத்து 'சந்தனக்குச்சு' என்னும் தொகுதியாக, வெளியிட்டுள்ளார்.

ராதா, கலைமகள், தினகரன், வீரகேசரி, விவேகி, சுதந்திரன் ஆகியவற்றில் சுமார் 16 சிறுகதைகளை எழுதிய இவருக்கு, நாடகத் துறையில் அதிக நாட்டம் இருந்தமையினால், சிறுகதைத்துறையின் மீது கவனம் செலுத்தவில்லை. இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிய 'ஒற்றைப்பனை' என்ற சிறுகதை மிகப்பிரபல்யமான சிறுகதை யாகும்.

திருகோணமலை கடற்கரையில், தனியொரு பனையாக நின்ற ஒற்றைப் பனையொன்றை கதாபாத்திரமாக வைத்து, இவர் எழுதிய மேற்படி கதைத் தலைப்பில், சிறுகதைத்தொப்பொன்று ஈழத்து இலக்கிய சோலையின் முதல் வெளியீடாக 1974ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

## 'வீணைவேந்தன்' சித்தி அமரசிங்கம் (1927 - 2007)

சித்தி அமரசிங்கம் என்றும், வீணைவேந்தன் என்றும் அழைக்கப்படும் த.அமரசிங்கம், 1954ஆம் ஆண்டு 'யாழ்' என்ற கையெழுத்துப் பிரதியை நடாத்தி, தருமு சிவராமு, சி.சிவசேகரம் போன்ற நட்புக் கூட்டுக்குள் நின்று, திருகோணமலை கலை இலக்கியங்களுக்கு பல்வேறு தொண்டுகளை ஆற்றியவர்.

நாடகத்துறையுடன் அதிக ஈடுபாடு கொண்ட அமரசிங்கம், ஈழத்து தமிழ்த் திரைப்படத்திலும் (தென்றலும் புயலும்) நடித்துப் பாராட்டுப் பெற்றவர். கவிதை, நாடகம், சிறுகதை, நடிப்பு, வில்லிசை எனப் பல்வேறு தடங்களிலும் கால்பதித்த அமரசிங்கம், தனது பள்ளி வாழ்க்கை தொடக்கம் இன்றுவரை திருகோணமலை இலக்கியத் துறைக்கு ஆற்றி வருகின்ற பங்களிப்பு அளப்பரியது.

ஈழத்து இலக்கியச் சோலை என்னும் ஓர் அமைப்பின் ஊடாக, திருகோணமலை எழுத்தாளர்களின் நூல்களைத் தேடி எடுத்து, பதிப்பித்து (ஆவணப் படுத்தி) வரும் இவர், பின்வரும் நூல்களை தனது அமைப்பின் மூலம் பதிப் பித்துத் தந்துள்ளார்: 'குத்துவிளக்கு நாடகமலர்' (1970), 'ஒற்றைப் பனை' (1974) சிறுகதைத் தொகுதி, 'இராவணதரிசனம்' (1996) நாடகநூல், 'கோயிலும் சுனையும்' (நாடகம்), 'கயல்விழி' (கவிதை நாடகம்), 'சாரணியம்: புதிய செயல்திட்டம்' (கட்டுரை), 'கலைஇலக்கிய ஆய்வு', (1993) கட்டுரைகள், 'கங்கைக்காவியம்' (1997), 'கவிதாலயம்' (1999) கவிதை, 'பொ.சி. கவிதைகள்', இரு நாடகங்கள், 'காந்தி ஐயா', 'ஞானசிரோன்மணி பண்டிதர் இ.வடிவேல்', 'கலாபூஷணம் வ.அ.'

'கலாவிநோதன்', 'கலாபூஷணம்' என்ற கௌரவப்பட்டங்களைப் பெற்றிருக்கும் அமரசிங்கம், அதிக சிறுகதைகளை எழுதாவிட்டாலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில சிறுகதைகளை எழுதியுள்ளார்.

இவர் பற்றி கலாநிதி க.குணராசா, தனது 'ஈழத்துச் சிறுகதை வரலாறு' என்னும் நூலில் தமிழ்த்தேசிய உணர்வுக்காலக் கட்டத்துக்கு முற்றுமுழுதாக உரிமையான சிறுகதைகளை ஆக்கியவர் வரிசையில் இவரைச் சேர்த்துள்ளார் (பக்கம் 247).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புரட்சிபாலன்**

கவிஞராகவும், நாவலாசிரியராகவும், சிறுகதை ஆசிரியராகவும் விளங்கும் புரட்சிபாலன், பல்வேறு சிறுகதைகளை எழுதி திருகோணமலை சிறுகதை வரலாற்றுக்கு பக்குவமான பங்களிப்பைச் செய்து வருகின்றவர்.

க.சண்முகபாலன் என்ற இயற்பெயர் கொண்ட இவர் பற்றி, ஏற்கனவே கவிதைத்துறை ஆய்வில் விரிவாகச் சொல்லியுள்ளேன். சிறுகதைகள் எழுதி, சர்வதேச அளவில் பல விருதுகளைப் பெற்றிருக்கும் புரட்சிபாலன், யாழ்ப் பாணத்திலிருந்து வெளிவந்த 'ஆனந்தசாகரம்' சஞ்சிகையில் 'நொண்டி' (1961) என்னும் சிறுகதையை எழுதியதன் மூலம் இத்துறைக்குள் காலடி எடுத்து வைத்தவர்.

75க்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ள பாலனின் சிறுகதைகள் தொகுதியாக்கப்பட்டுள்ளன (போரும் வேரும் -2002). ஈழத்தில் ராதா, வீரகேசரி, கலைமுரசு, ஈழநாடு, தினபதி, மித்திரன், சுதந்திரன், செய்தி, கலைச் செல்வி, கதம்பம், விவேகி, ஜோதி, தினகரன், தினக்குரல் போன்ற பல்வேறு சஞ்சி கைகளிலும் பத்திரிகைகளிலும் இவரது சிறுகதைகள் வெளிவந்துள்ளன. 'கண்ணீர்' (தேசியமுரசு, 1963.), 'ஊனம்' (வீரகேசரி, 1966.), 'இருள் நீங்கியது' (ராதா, 1967.), 'துரோகம்' (மித்திரன், 1970.), 'படிக்கல்' (சுதந்திரன், 1970.), 'சரடு' (கலைச் செல்வி), 'ஆறுதல்' (தினக்குரல், 1997.), 'ஒரு மனிதன் ஒரு மிருகம்' (வீரகேசரி, 2002.), 'பூ' (தினபதி, 1967.), 'பருவப் பெயர்ச்சி' (ஈழநாடு, 1968.) ஆகியன இவரது மிகச் சிறந்த சிறுகதைகளாகும்.

சமூகப் பிடிப்பின் ஆழங்கள் இவர் சிறுகதைகளில் மெல்லியதாகச் சொல்லப் பட்ட போதும், அனுபவ ஊடுருவல்களும், சமூகமாந்தர்களும் நிறைய வந்து போகும் கதைகளை எழுதியுள்ளார். திருகோணமலைக் கிராமங்கள், நகரவாசி களின் அன்றாட பிரச்சனைகள், படிப்பினைகள் இவரின் கதைகளில் படிமங்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன.

இதற்கு உதாரணமாக, தினபதி சிறுகதைத் திட்டத்தின் கீழ் முதலாவது சிறுகதையாக பிரசுரம் பெற்ற 'மன்னிப்பு' என்னும் சிறுகதை பற்றி கதைவளம் என்னும் மரபு நிலைய வெளியீட்டில் இடம் பெற்ற விமர்சனத்தை அப்படியே தருகிறேன்.

'வளர்ந்த எழுத்தாளர்களிலும் பார்க்க சற்றே துணிச்சலுடன் 'மன்னிப்பு', 'தாலி' ஆகிய கதைகளை இளம் எழுத்தாளர் இருவர் எழுதியுள்ளார்கள்'

சபாபதிக்கிழவர் என்ற அருமையான பாத்திரத்தைப் படைப்பதில் புரட்சி பாலன் நல்ல வெற்றிபெற்றுள்ளார். 'நீர் தொட்டுத் தாலிகட்டிய பெஞ்சாதி' என்று திரும்பத் திரும்ப ஞாபகமூட்டி, அந்த ஞாபகச் சாட்டிலே சபாபதிக் கிழவரின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் பின்னியிருப்பது நன்றாக இருக்கிறது. மன்னிப்பை எழுதிய புரட்சி பாலனுக்கு என் பாராட்டுக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சிபாலனின் ஆரம்ப காலச் சிறுகதைகளில் இருந்து பிற்காலச் சிறுகதைகள், அனுபவச் செழுமையும், ஆழமான நடையும் கொண்ட சிறுகதைகளாக இருக் கின்றன. இருந்த போதிலும், திருகோணமலை மண்வளத்தின் பதிவுகள், உணர் வுகள் குறைவாகவே காணப்படுகின்றன.

புரட்சிபாலன் சர்வதேச ரீதியாக, தமிழ் அமைப்புக்களால் நடாத்தப் பெற்ற பல சிறுகதைப் போட்டிகளில் பரிசு பெற்றுள்ளார். ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் (பூ), தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கம் (காத்திருக்கும் கண்கள் உண்டு), புதிய அலை, கலைவட்டம் போன்றவை அகில இலங்கை ரீதியில் நடாத்திய போட்டிகளிலிருந்தும் பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார்.

இனமுரண்பாடுகள் இறுக்கமடைந்த இக்காலக் கட்டத்தில் தேசியப்பிரச் சனைகள் பற்றிய தொட்டுக் காட்டல்கள் ஆங்காங்கே சின்ன அளவில் சொல்லப் பட்டிருக்கின்றன. இருந்தபோதிலும் பிற்காலப் படைப்புக்களில் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதற்கு ‘அம்மணிக்குஞ்சு’ (வீரகேசரி, 2002.) ‘ஒரு மனிதன் ஒருமிருகம்’ (வீரகேசரி, 2002.) ஆகிய சிறு கதைகளை எடுத்துக் கூறலாம்.

மொழிபெயர்ப்பு ஆற்றல் படைத்த புரட்சிபாலன் பல சிறுகதைகளை மொழி பெயர்த்தும் உள்ளார்.

## III. 1970க்குப் பின் சிறுகதைகள்

திருகோணமலையின் சிறுகதை வளர்ச்சியில் 1970ஆம் ஆண்டுக்குப் பின் பல இளைஞர்கள் சிறுகதைத் துறைக்குள் பிரவேசித்திருக்கிறார்கள். இக்காலக் கட்டத்தில் ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்வும் சமூக அக்கறையும் காரணமாக இவ்விளைஞர்களினால் பின்வரும் இலக்கிய இயக்கங்கள் அமைக்கப் பட்டன:

- ★ திருவள்ளுவர் கழகம் (1958)
- ★ முன்னோடிகள் (1970)
- ★ சங்கப்பலகை (19740
- ★ திருகோணமலை மறுமலர்ச்சித் தமிழ்மன்றம் (19565)
- ★ திருகோணமலை கலைவட்டம்
- ★ முத்தமிழ் வளர்கலை மன்றம்
- ★ ஈழத்து இலக்கிய சோலை
- ★ தாகம் கலை இலக்கிய வட்டம்

மேற்கண்ட அமைப்புக்களும், ஈழத்துச் சஞ்சிகைகளின் களமும், இளைஞர்களின் ஆர்வமும் நல்லதொரு இளைஞர் குழாமொன்று சிறுகதைத் துறைக்குள் காலடி எடுத்து வைக்க ஏணியாக அமைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.அருள்சுப்பிரமணியம், பத்மாசனி கணபதிப்பிள்ளை, சாண்டிக்கோ சுப்பிரமணியம், அல்லி ஜீவா, கா. இரத்தினலிங்கம், ந. திருச்செல்வம், வி.தில்லைநாதன், மு.வே.யோகேஸ்வரன், மலைமதி சந்திரசேகரம், மு.ராஜ்கபூர், இராஜ தர்மராஜா, தாரிணி, அசனார், திருமலைநவம், இ.ஏகாம்பரம், திருமலை சுந்தா ஆகியோர் இக்காலகட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

**க. அருள்சுப்பிரமணியம்**

இவர்களில் தனக்கென ஒரு தனியான காலக் கட்டத்தை அமைத்துக் கொண்டவர் க.அருள்சுப்பிரமணியம்.

எழுதுவினைஞராக மட்டுநகரில் கடமையாற்றிய காலத்தில், எழுத்தாளர் அன்புமணியின் ஊக்கம் காரணமாக 'தியாகங்கள் பாரமா'? என்ற முதலாவது சிறுகதையின் மூலம் எழுத்துலகில் பிரவேசித்த அருள், இலங்கையின் முன்னணிப் பத்திரிகைகளான வீரகேசரி, தினகரன், ஈழநாடு, மல்லிகை, அஞ்சலி, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் சுமார் 40ற்கு மேற்பட்ட சிறு கதைகளை எழுதியுள்ளார்.

'அம்மாச்சி' (2003) என்ற இவரது முதற் சிறுகதைத் தொகுதி மணிமேகலைப் பிரசுரமாக வெளிவந்துள்ளது. இத்தொகுதியில் ஈழத்து, இந்தியச் சஞ்சிகைகளில் 1994ஆம் ஆண்டு முதல் 1999ஆம் ஆண்டு வரை வெளிவந்த 39 சிறுகதைகள் தொகுக்கப்பெற்றுள்ளன.

'அம்மாச்சி' என்னும் தலைப்பிலான சிறுகதை, 'இந்தியா ருடே' என்னும் சஞ்சிகையில் பிரசுரமாகிய கதையாகும்.

பல நாவல்களை எழுதி அச்சுவாகனம் ஏற்றிய போதும், அருளின் முதலாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். நாவலைப் போலவே நல்ல கருத்துக்களை நறுக்குத் தெறித்தாற் போல் சொல்லி வைக்கும் அருள், இச்சிறுகதைத் தொகுதி யில் சமூகத்துக்கு இழைக்கப்பட்ட பல்வேறு கொடுமைகளை, தனக்கே உரிய பாணியில் அழகாகச் சொல்லி வைத்திருக்கிறார்.

அருளின் கதைசொல்லும் உத்தி, அலாதியானது. சொல் ஜாலங்களைத் தூக்கி எறிந்துவிட்டு, நேரடியாகவும், அனுபவபூர்வமாகவும் சொல்லவேண்டிய உத்தியில், சொல்ல வேண்டிய கருவைப் புதைத்து, பிரசவிக்கும் அவரது கதைகள் வாழ்க்கையின் ஓட்டங்களையும், உணர்வுகளையும் படம்பிடித்துக் காட்டும் சிறப்பு, பலராலும் பாராட்டுப் பெற்றவை.

இளமையின் வாசல்களைத் தாண்டி வாழ்க்கையின் உட்பகுதிக்குட் புகுந்து, பின் ஞானமுத்துப் பெற்று வரும் ஓர் துறவியைப் போல், தனது அனுபவங்களை, ஞான நிலையில் நின்று படைத்திருக்கிறார் அருள் என்பதற்கு, அம்மாச்சித் தொகுதியில் வரும் பலசிறுகதைகள் சான்றாக இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிறுகதைகளில் வருகின்ற பாத்திரங்கள் எல்லாவற்றினூடாகவும், இவரையோ அல்லது இவரோடு ஒட்டிய மனிதர்களையோ காணக்கூடிய தாகவுள்ளது. 'கண்ணீர்' கதையில் வரும் காருண்ய பார்வை - 'அம்மாச்சி' கதையில் சொல்லப்பட்ட வடகிழக்குப் பரிதாபங்கள், உண்மைக்குறியீடுகளாக சொல்லப்படுகின்றன.

அம்மாச்சியின் அப்பாச்சிக்கு நடந்த அநியாயங்களைப் போலவே, வட கிழக்கில் எத்தனையோ பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டு, அப்பாக்களை இழந்த ஆயிரக்கணக்கான அவலக் காவியங்களின் ஓர் பதிவாகவே, அருளின் அம்மாச்சி கதை அமைந்து காணப்படுகிறது.

இதைப்போலவே, 'தாகம்' சிறுகதையில் வரும் ஒப்பிலாமணி மாஸ்டரும், மாணவர்களும் உரையாடும் வேட்கைகள், தற்கால நிகழ் வடிவங்களைச் சொல்வனவாகவுள்ளன.

இக்கதையில் வரும் ஒப்பிலாமணி மாஸ்டரின் மாணவன் ஒருவனின் வேதனை, 'நித்திரைப் பாயில் சுற்றி, வளைப்புக்குத் தப்பியிருந்தால், காலையில் அறிமுக அட்டையைத் தேடி பத்திரமாகப் பையில் வைப்பதோடு, எங்கள் நாட்கள் கழிகின்றன' என்ற அந்த மாணவனின் ஆதங்கங்கள் எல்லாம் - அருளைச் சுற்றி நடந்தவை, அல்லது, அருள் வாழும் மண்ணில் நடப்பவை.

இவை கதைகளாகச் சொல்லப்பட்டிருந்தாலும் மண்ணில் நடந்த சம்ப வங்களின் குறிப்புக்களாக வரிக்கப்பட்டிருக்கின்றன.

எல்லாக் கதைகளிலும், அருளின் அனுபவம் வலுவூட்டப்பட்டாலும் ஞான நிலையில் சொல்லப்பட்ட புத்த போதனைகள், சில இடங்களில் கதைகளின் கருத்துகளுக்கு உண்மைத் தன்மையை இல்லாமல் செய்து விடுகிறதோ? என்று எண்ணத் தோன்றினாலும், நல்ல தொகுதியை அருள் ஆக்கித் தந்துள்ளார் என்ற மனநிறைவு கிடைக்கின்றது.

## பத்மாசினி கணபதிப்பிள்ளை (1937-1971)



பத்மாசினி
கணபதிப்பிள்ளை

பெண்ணெழுத்தாளராகக் காணப்பட்ட பத்மாசனி கணபதிப்பிள்ளை ('கைகூடியது') (குங்குமம் மாநில மஞ்சரி) ஒரு சில சிறுகதைகளை எழுதினாலும்கூட, நல்ல தொரு பெண்ணெழுத்தாளராகத் திகழ்ந்தவர். பல்வேறு கையெழுத்துச் சஞ்சி கைகளிலும் எழுதியுள்ள பத்மா, சிறந்த ஓவியராகவும் விளங்கினார். இவரது மறைவு, திருகோணமலை எழுத்துலகுக்கு ஏற்பட்ட பெரும் நட்டமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வி.தில்லைநாதன்

1966ஆம் ஆண்டு சுதந்திரன் பத்திரிகையில் 'அம்மாவுக்கு என்னவாக்கு' என்ற சிறுகதையை எழுதியதன் மூலம், இலக்கிய உலகுக்கு காலடி எடுத்து வைத்த வி.தில்லைநாதன், ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் இலக்கியம் படைக்கும் ஆற்றல் பெற்றவர். இவர், லீலாமணாளன் என்ற புனைபெயரில் ஆரம்பகாலத்தில் எழுதியவர்.

இவர், 'ஓர் ஆசிரியர் துருவாசகர் ஆகிறார்' (வீரகேசரி, 1979.), 'அம்மா என்னை மன்னித்துவிடு' (சுதந்திரன், 1968.), 'பூலோகத்தின் மரண வாக்குமூலம்' (சுதந்திரன், 1968 போராட்டம்.), 'மேற்தட்டு' (1967.), 'கமலி ஏன்அழுதாள்' (1967.) ஆகிய சிறுகதைகளை சுதந்திரன், சிரித்திரன், விவேகி, கலைச்செல்வி, சுடர், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் எழுதியுள்ளார். இவரது சிறுகதை, இந்திய சஞ்சிகையான ஆனந்தவிகடன் பத்திரிகையிலும் வெளிவந்துள்ளது. 'பிஞ்சுமனம்' (வீரகேசரி, 1991.), 'அழுகை ஏனோ' (வீரகேசரி, 1979.), 'ஊனம்' (வீரகேசரி, 1981.), 'உயர்ந்தவர்கள்' (சுடர், 1977.) போன்றவற்றுடன் பல நகைச்சுவைக் கதைகளையும் எழுதியுள்ளார். சுமார் 25 இற்கு மேற்பட்ட சிறுகதைகளை இவர் எழுதியுள்ளார்.

சமூகத்தின் மேற்கட்டுமானத்தினூடாக, அனுபவ உணர்வுகளையும், பிரச் சனைகளையும், குடும்பச் சிக்கல்களையும் தனது சிறுகதைகளில் இவர் படைத்து வந்துள்ளமை, ஓர் குறிப்பிடக் கூடிய அம்சமாகும். இவர் ஆங்கில ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும் இருந்து ஓய்வு பெற்றவர் என்பது குறிப்பிடக்கூடியது.

### மு.வே.யோகேஸ்வரன்

மு.வே.யோகேஸ்வரன் என்பவர், ஆலங்கேணி என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். தனது இளமைக்காலத்தில் சிறந்த கவிஞராகவும், சிறுகதை எழுத்தாளராகவும் விளங்கியவர். இவர், தினபதியின் சகோதரப்பத்திரிகையான 'ராதா' பத்திரிகையில் பல்வேறு சிறுகதைகளை எழுதிவந்துள்ளார். 'கொழுகொம்பு' (ராதா, 1970, பெப்ரவரி), 'மூன்று மலர்கள்' (ராதா, 1970, ஏப்ரல்), 'பயணம்', 'இருண்ட இதயம்', 'தாலி', 'காதுக்குச்சு', 'சங்கரன் வருகின்றான்' முதலான சிறுகதைகளை எழுதியிருக்கிறார். வாழ்க்கையின் இருண்ட பகுதிகளைக் காட்டுவனவாக இவரது சிறுகதைகள் உள்ளன.

இவர், ராதா பத்திரிகையில் 1970ஆம் ஆண்டு மே மாதம் முதல் சுமார் 20 அத்தியாயங்கள் கொண்ட 'கடலும், அலையும்' என்னும் தொடர் நவீனத்தை எழுதி வந்துள்ளார்.

இவரின் 'பயணம்', 'சங்கே முழங்கு', 'குறும்பா' ஆகியன நூல்களாக வெளிவந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மலைமதி சந்திரசேகரம்

'ராதா' என்ற பத்திரிகையில், பல சிறுகதைகளை அடுத்து அடுத்து எழுதிவந்தார் (1970 - 1974). ஆனால், இவரது சிறுகதைகளின் பிரதிகளைப் பெறுவதில் பல கஸ்டங்கள் காணப்பட்டதால், விமர்சனப் பாங்கில் சொல்ல முடியாவிட்டாலும், காதல் மனப்புறழ்வுகளை இவர் பல சிறுகதைகளில் எடுத்துக் காட்டி வந்துள்ளார் என்பதைக் குறிப்பிடலாம். இவர், ஒரு சிறந்த மேடைக் கவிஞராகவும், பேச்சாள ராகவும் திகழ்ந்தவர்.

### மு.ராஜ்கபூர்

மு.ராஜ்கபூர், முன்னோடிகள் கலை இலக்கிய விமர்சகர் குழுவினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட ஓர் எழுத்தாளர். அதிக கதைகளை எழுதாவிட்டாலும்கூட, ஒரு சில சிறுகதைகளை எழுதி தடம்பதித்தவர். அன்புவழிபுரக் கிராம மக்களின் குடிவாழ்வு சார்ந்த பாத்திரங்களைப் படைப்பதிலும், நல்நடை கொண்ட சிறு கதைகளை எழுதுவதிலும் வல்லவராகத் திகழ்ந்தவர். 'வானொலிப்பெட்டியும், மற்றும் சில சிறுகதைகளும்' (1996) என்னும் தொகுப்பு வெளிவந்துள்ளது. இத் தொகுப்பை வடகிழக்கு மாகாணம் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது. அதேபோல், கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள 'போட்டிக் கதைகள்', தொகுப்பிலும் இவரது 'மீன்கறி மணத்தது' என்னும் கதை இடம் பெற்றுள்ளது.

### இராஜ தர்மராஜா

இவர், முன்னோடிகள் கலை இலக்கிய விமர்சகர் குழுவின் பிரதான உறுப் பினராக அன்றைய காலக் கட்டத்தில் விளங்கியவர்.

1970ஆம் ஆண்டிலிருந்து வீரகேசரி, மல்லிகை, வெள்ளி, மித்திரன், கதம்பம், விடியல், அமிர்தகங்கை போன்ற ஈழத்து இந்திய சஞ்சிகைகளில் எழுதிவந்துள்ளார்.

வீரகேசரியில் எழுதிய 'வீதிவழிகளில் ஒருத்தி போகின்றாள் ' (1971), 'அவர் வருவாரா' (1974), 'வறண்ட நெஞ்சங்கள்' (1976), 'மனக்கோடுகள்', (1979), 'எரியிறவீட்டில்' (1989), 'இப்படியும் ஒரு வாழ்க்கை' (1983) ஆகிய சிறுகதைகள் நல்லதொரு முத்திரைபதித்த கதைகளாகும்.

இவரது முதலாவது சிறுகதையான 'வீதிவழியே ஒருத்தி போகின்றாள்' (1971), ஒரு இளைஞனின் மனக்கிளர்ச்சிகளையும், ஆசைகளையும் சொல்லிய போதும், பிற்கால சிறுகதைகளில் நல்லதொரு சமூகப்பார்வை, தேடல் அமைந் தமைக்கு, இவர் பெற்ற அனுபவங்களும் சார்ந்து நின்ற அரசியல் சித்தாந்தங் களும், காரணமாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியப்பத்திரிகையான 'விடியல்', இவரது கதையின் கனதியைக் கண்டு, தனது மே மாத இதழில் 'ஜனநாயகத்தின் மடியில்' என்ற சிறுகதையை பிரசுரித்து, இவரைக் கௌரவப்படுத்தியுள்ளது.

'மானுடம் என்பது' (அமிர்தகங்கை, 1986), 'அக்னி' (அமிர்தகங்கை, 1986), 'வாத்தியார் இல்லை' (மல்லிகை, 1971), 'நின்றுவிட்ட முகில்கள்' (வெள்ளி, 1972), 'கடவுள் ஊர்வலம் போகின்றார்' (கதம்பம், 1972), 'ஒரு வாலிபன் வேலை தேடுகிறான்' (மல்லிகை, 1973), 'அழகின் சிதைவு' (மித்திரன், 1973) ஆகிய சிறுகதைகளை எழுதியதன் மூலம், மௌனியைப் போல் நல்ல சில சிறுகதைகளை தர்மராஜா தந்துள்ளார். திருகோணமலையில் இருந்து தேசியத்தரம் வாய்ந்த பல சிறுகதைகளை ஆக்கிய பெருமை, இவரைச்சாரும். இவரது சிறுகதைகள் தொகுதியாக வராமை மிகப் பெரிய குறைபாடாகும்.

**திருமலை நவம்** 10344

1967ஆம் ஆண்டு வீரகேசரி, சகோதரப் பத்திரிகையான 'ராதா'வில் 'பாசவிளக்கு' என்னும் சிறுகதையை எழுதியதன் மூலம், எழுத்துலகுக்கு காலடி எடுத்துவைத்த நவம், பின் தினகரன் பத்திரிகையிலும், ஏனைய ஈழத்துச் சஞ்சிகைகளிலும் ஒரு சில சிறுகதைகளை எழுதியுள்ளார்.

'பாசவிளக்கு' - ஜோதி (1967), 'ஆட்டுமாமா' - தினகரன் (1971), 'ஏழுச் செவ்வாய்' - தினகரன் (1983), 'இளங்கன்று' - தினகரன் (1984), 'சொல்ல நினைத்தது என்ன?' - தினகரன் (1984), 'பிரபஞ்சமலர்' - ராதா (1970) ஆகிய சிறுகதைகளை படைத்துள்ளார்.

இவரது ஆரம்பகாலச் சிறுகதைகளில், மெல்லிய மனப்பிரச்சனைகளை மட்டும் சொல்லியவர், பிற்காலச் சிறுகதைகளில், சமூகவிழுக்காடுகளை புடம் போடுவதான சமூகப்பார்வைக்கு அழுத்தம் தருவதனைக் காணலாம்.

**திருமலை சுந்தா**

இக்காலக்கட்டத்தின் பிரபல்யம் பெற்ற சிறுகதை எழுத்தாளனாக விளங்கியவர் திருமலை சுந்தா. 1970ஆம் ஆண்டு முதல் எழுதி வருகிறார். சி.சுந்தரலிங்கம் இவரது இயற்பெயர்.

ஈழத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் சஞ்சிகைகள் பலவற்றில் எழுதியவர், திருமலை சுந்தா. சிரித்திரனில் பிரசுரமாக வெளிவந்த 'வேள்வி' (1975) இவரது முதற் சிறுகதைத் தொகுதியாகும். 10 சிறுகதைகள் உள்ளடங்கிய தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

இது தவிர, 'நாளையைத் தேடும் மனிதர்கள்' (அம்மா பதிப்பகம் , 1998), 'விழியோரத்துக் கனவுகள்' (கல்வி அமைச்சு வெளியீட்டுத் தொகுதி, 1995) ஆகிய தொகுப்புகளும் வெளிவந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது ஆரம்பகாலச் சிறுகதைகளான 'வேள்வி' சிறுகதைகள் இளைஞன் ஒருவனின் அனுபவங்களின் வெளிப்பாடாக இருந்த போதிலும், பிற்காலச் சிறு கதைகளில் அனுபவ முதிர்ச்சியும், சிறுகதைச் செம்மையும் தெரிகின்றது.

'விழியோரத்துக்கனவுகள்' தொகுதியில், 'பெண் ஒருத்தி', 'ஒரு வீடு திறந்து கிடக்கிறது', 'என் அக்காவுக்கு கல்யாணம்', 'அரசமரம்', 'தெரியாத சங்கதிகள்' ஆகிய 18 சிறுகதைகள் அடங்கியுள்ளன.

அன்றாடம் நிலவுகின்ற சின்னச்சின்னப் பிரச்சனைகளை, சுந்தா, தனது கதையின் உள்ளீடாக்கியுள்ளார். 'ஒருவீடு திறந்துகிடக்கிறது' சிறுகதையில் வரும் சாதிப் பிரச்சனை, 'ஆண்மக்கள்' என்ற சிறுகதையில் வரும் சீதனப் பிரச்சனை, 'விடியப்போகிறது' கதையில் வரும் வெளிநாட்டுப் பயணம், ஈடேற்றமுடியாத பொருளாதாரப் பிரச்சனைகள், நடுத்தர வர்க்கத்தின் நலிவுகள், ஆசைகள், எதிர்பார்ப்புக்கள் என்பன சொல்லப்பட்டுள்ளன.

சுந்தாவின் கதை சொல்லும் பாங்கு, சின்னச் சின்னதாய், பெரிய பெரிய அனுபவங்களைச் சொல்லும் சொற்கோவை ஜாலம், அவரை ஒரு நல்ல சிறுகதை ஆசிரியனாக அடையாளப்படுத்திக் காட்டுகிறது.

இவரது 'நாளையைத் தேடும் மனிதர்கள்' (1999) என்னும் சிவ நெறித் தொகுதியில் 11 சிறுகதைகள் அடங்குகின்றன. இச்சிறுகதைகள் சமய அனுட்டானங்களையும், ஆசாரங்களையும் சொல்வதற்காக எழுதப்பட்ட போதும், வாழ்க்கையினூடாகத் தேடப்படும் தர்மங்களையும், போராட்டங்களையும், விழுமியங்களையும் சொல்லும் சிறுகதைகளாக அமைந்துள்ளன.

அவரின் சில சிறுகதைகள், யுத்தகால வாழ்வை சித்தரிப்பன. அதற்கு உதாரணமாக, 'நீங்களும் நாங்களும்', 'ஆமிக்காரனும் அடையாள அட்டையும்' ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அதுபோலவே இந்திய ராணுவம் நிலை கொண்ட கால இடுக்கண்கள், இராணுவக் கெடுபிடிகள், சுற்றி வளைப்புக்களின் அலங் கோலங்கள் ஆங்காங்கே சொல்லப்பட்டிருப்பது ஓர் காலப்பதிவு ஆகும்.

**ஏ.எஸ்.உபைத்துல்லா**



ஏ.எஸ்.உபைத்துல்லா

மூதூரைச் சேர்ந்த இவர், ஆசிரியனாக இருந்து அதிபராகப் பதவி உயர்வு பெற்று கலைத் துறையினைத் தனது இன்னொரு கண்ணாக மதித்து வருகிறார். 1978ஆம் ஆண்டு முதல் ஈழத்தின் பல்வேறு பத்திரி கைகளில் எழுதிவருகின்றார்.

பல சிறுகதைகளை எழுதியுள்ள இவர், நாடகம், விமர்சனம் போன்ற ஏனைய துறைகளிலும் அதிக ஈடுபாடு காட்டி வருபவர். பத்திரிகையாளனாக அனுபவம் பெற்றுள்ள இவர், வ.அ.(இ) போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழம்பெரும் எழுத்தாளர்களுடன் பழகி, நல்ல அனுபவங்களைப் பெற்றிருப்ப துடன், தனது சிறுகதைகளில் மூதூர்க் கிராமத்தின் வாழ்வியல் முறைகளையும், அவற்றுக்கே உரித்தான தனித்துவமான போராட்டங்களையும், பிரச்சனை களையும் குறிப்பாக முஸ்லீம் சமூகத்தின் சமூக மாற்றங்களில் வேர்விடு தன்மைகளையும், மிக அழகாகவும், ஆழமாகவும் அனுபவத் துணையோடு ஆக்கித் தந்துள்ளார்.

இவரது சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு ஒன்று, 'ஜலசமாதி' (2008) என்ற தலைப்பில் வானவில் வெளியீட்டகம் ஊடாக வெளிவந்துள்ளது. 11 சிறு கதைகளை உள்ளடக்கிய இச்சிறுகதைத் தொகுதியின் கதைகளை வாசித்து முடித்தபோது, அனேகமான கதைகளில் உள்ளடங்கியிருக்கும் காத்திரமான பண்புக் கூறுகளின் செறிவு நிலை, அவரின் இலக்கிய வாண்மை பாற்றிய ஒரு தேடலை இயல்பாகவே ஏற்படுத்துகிறது.

இவரது கதைகளில் மூதூரையும், அதைச் சூழவுள்ள கடல் சார்ந்த, நிலம் சார்ந்த பகுதிகளையும், இவைகளின் புவியியல், வரலாறு போன்ற விளக்கப் பதிவுகளையும் இயல்பு நிலையில் காணக்கூடியதாகவுள்ளது. மூதூர் பிரதேசத் தின் புவியியல் தன்மை களையும் வரலாற்றுக் குறிப்புக்களையும் தந்திருப்பதோடு கடலை நம்பி வாழும் மக்களின் எதிர்பார்ப்புக்கள், ஏமாற்றங்கள், அவலங்கள் பற்றியும், கடற்றொழில் பற்றிய நுணுக்கங்களையும், கடல்வாழ் உயிரினங்களின் நடமாட்டங்களைப் பற்றியும் மிகவும் அற்புதமாக பதிவு செய்துள்ளார்.

இவரது சிறுகதைகளில் உள்ளத்தோடு தொடர்புபட்ட உணர்வுக் கூறு களையும், அது கலந்த சொல்லாடல்களுக்கு ஊடாக வெளிப்படுத்துகின்ற ஒரு முறைமையே பெருமளவில் அவதானிக்க முடிகிறது.

இத்தொகுதியில் உள்ள 'நிழலைத்தேடி' என்ற சிறுகதையில் எழுத்தாளர் இப்படி கூறுகின்றார், 'கால்மாக்ஷ்ஷும் அவரது தோழர்களும் தோழர் என்ற வார்த்தையை பிரயோகிக்கும் முன்னரே தம்பலகமம் பற்றைச் சேர்ந்த கிராம வாசிகள் தோழர் என்ற சொல்லை பிரயோகித்தனர் எனக்குறிப்பிடுகிறார்.

'வாயில்லாப் பூச்சிகள்', 'மீண்டும் வந்தாள்', 'மண்ணின் மகன்', 'சம்பிர தாயங்கள்' போன்ற சிறுகதைகள் சமூகச் செய்திகளை உள்ளடக்கி மூதூர் கிராமத்தின் கிராமிய மக்களின் வாழ்வை அப்படியே படம் பிடித்து காட்டு வனவாக அமைகின்றன.

## IV. 1980க்குப் பின் சிறுகதைகள்

இக்காலப் போக்கு ஓர் வரட்சி அல்லது செழுமையற்ற காலப்பகுதியாகக் காணப்பட்ட போதும், பெருந்தொகையான எழுத்தாளர்கள் வருகை தந்த காலமாகவும் இதனைக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் ஏற்பட்ட இன நெருக்கடி இடம் பெயர்வுகள், அகதி வாழ்க்கை அவலங்கள், கிராமப் புரழ்வுகள் நாட்டைப் பாதித்தது போலவே, திருகோண மலையையும் பாதித்த சூழ்நிலையில் நல்ல எழுத்தாளர் குழாம் உருவாகக் கூடிய வாய்ப்பு இல்லாத போதும் அதிகமான எழுத்தாளர்கள் இக்காலப்பகுதியில் சிறுகதைத் துறைக்கு வந்துள்ளனர். அவர்களில், புல்மூட்டை எம்.எஸ்.ஏ.காதர், எம்.ஐ.எம்.தாஹிர், முகமட்சாலி, சித்திராநாகநாதன், புனிதன், ஏ.எஸ். இப்ராகிம், அருள்வரதன், அமானுல்லா, செ.துரைநாயகம், ச.சச்சியானந்தம், கா.நடராஜா, மகாலிங்கம், ச.கவிதா என்போர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

**சித்திரா நாகநாதன்**


சித்திரா நாகநாதன்

அர்த்தமுள்ள போராட்டச் சிறுகதைகளைப் படைத்த பெண் எழுத்தாளர் சித்திரா நாகநாதன். இவர் எழுதிய 'கிராமத்து மண்கள் சிவக்கின்றன' (1990) 'தாகம்' வெளியீடாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

'ஒரு போராளியின் காதலி காத்துக் கிடக்கிறாள்', 'அலைக்கு எட்டிய கரைக்கோலம்', 'பெற்றமனம்', 'கூண்டுக் கிளியினைப்போல்', 'அடம்பன் கொடியும் புத்தாண்டு வெடியும்', 'மனிதம் இன்னும் மரணிக்க வில்லை' ஆகிய 15 சிறுகதைகள் இத்தொகுதியில் உள்ளடங்குகின்றன.

இத்தொகுதியில் வருகின்ற 'விடியாதஇரவுகள்', சிறுகதை, ஒரு நல்ல மையத்தைச் சுற்றிக் கட்டப்பட்ட கருவாகக் காணப்படுகிறது. இலங்கை இராணு வக் கொடுமைக்குள் எங்கள் இளைஞர்கள் பட்ட துன்பங்களை அது தொடரும் நிலையை, ஒரு தாயின் பெற்ற வயிறு கொதிக்கும் உணர்ச்சியை புட்டுக்காட்டும் யதார்த்தமாகக் காணப்படுகிறது.

எந்த நேரம் இந்த மண்ணில் பிறந்தமோ இன்றுவரை ஓடித்திரியும் விதி, விதியை நோகும் கையாலாகாத் தனத்தின் உண்மையை இக்கதையில் காணு கின்றோம்.

திருகோணமலை மண்ணில் எழுந்த சிறுகதைத் தொகுதிகளில் இவரின் சிறுகதைகள் ஈழப்போராட்டத்தின் இரத்தினப் பதிவுகளாய் விளங்குகின்றன, 'ஒரு போராளியின் காதலி காத்திருக்கிறாள்', 'மனிதம் இன்னும் மரணிக்க வில்லை' ஆகிய சிறுகதைகள் இதற்கு உதாரணங்களாகும்.

ஈழவிடுதலைப் போராட்டத்தை உச்சரிப்பதே உயிருக்கு உலையாகிவிடும் என்ற ஓர் கால நெருக்கடி சூழ்நிலையில் இளம்பெண்ணாக இருந்து இந்தப் போராட்ட சிறுகதைகளை சித்திரா படைத்திருப்பது அதிர்ச்சியையும் ஆச்சரி யத்தையும் தருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய கதை மாந்தர்கள் நம்மவர்கள்; எங்களோடு உறவாடி உயிர் கொடுத்தவர்கள்; உரிமைப் போராட்டத்துக்கு இரத்தம் சிந்தியவர்களை சித்திரா பாத்திரங்கள் ஆக்கியுள்ளார்.

இதேகாலப்பகுதியில் 'கோணைத் தென்றல் சிறுகதைகள்' என திருமலை கலை இலக்கிய வட்டத்தின் தொகுதியொன்று 12 சிறுகதைகளை உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ளது. இதில் பழம்பெரும் எழுத்தாளர்களுடன் யூலியன் புஸ்பராஜா, ரிஷிப் ரப்ஞன், பிரமன் தேஷ்விலோமன் ஆகியவர்களின் சிறு கதைகள் அடங்கியுள்ள நிவேதனம் என்னும் பெயரில் இத்தொகுதி வெளியிடப் பட்டுள்ளது.

**எம்.ஐ.எம்.தாஹிர்**

கிண்ணியாவைச் சேர்ந்த முதுபெரும் எழுத்தாளரான தாஹிர் தனது 45 வருடகால இலக்கியப் பிள்ளைகளாக 11 சிறுகதைகள் அடங்கிய 'பச்சைப்பாவாடை' எனும் சிறுகதைத் தொகுதியை புரவலர் புத்தக பூங்கா ஊடாக வெளியிட்டுள்ளார்.

ஆசிரியராக, அதிபராக கடமைபுரிந்த காலத்தில் தனது சமூகத்தின் வாழ்வியல் நிழல்களையும், கோலங்களையும், நுட்பங்களையும் சிறுகதைக்குரிய வரம்பு மீறாது தனது படைப்புக்களில் காட்டித் தந்துள்ளார்.

'பச்சைப்பாவாடை' எனும் தலைப்பில் அமைந்த சிறுகதையில் கிண்ணியாப் பிரதேசத்தின் அடிமட்டக் குடும்பங்களின் ஆசைகள், எதிர்பார்ப்புக்கள் என் பவற்றை யதார்த்தமாக காட்டியுள்ளார். இக்கதையில் வரும் குடும்பப் பின்னணி போல் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மீன்பிடி, விவசாயம், மாடுவளர்ப்பு போன்றவற்றில் அடிமட்ட வாழ்வு வாழ்வதை ஒரு படிவமாக எடுத்துக் காட்டி யுள்ளார்.

'இப்படியும் ஒரு வாழ்க்கையா?' எனும் கதையில் வெளிநாட்டு வேலை நாட்டமுள்ள ஓர் பெண் பாத்திரத்தின் வாழ்வு சொல்லப்பட்டிருப்பது கிண்ணியாப் பிரதேசத்தின் கலாச்சார தடிப்புக்கள் அவர்களது கிராமியத்தன்மை பிறழாத உண்மை முறைகளை தாஹிர் அழகாக எடுத்துக் காட்டியுள்ளார்.

கிண்ணியாவின் பொருளாதார போக்குவரத்து, கலாச்சார மாற்றங்களைக் கூட ஆசிரியர் வரலாற்று ஆதாரமாக தந்திருப்பது எம்மை ஆச்சரியப்பட வைக் கின்றது. பொதுவாகவே தாஹிர் கதைகள் சமூக மாற்றம், வளர்ச்சி என்பவற்றை கலாசார இலக்கணம் மாறாத வகையில் கிராமியச் சொல்லாடல்களில் தனது கதைகளை படைத்திருக்கின்றார் என்றே சொல்ல வேண்டும்.

தாஹிர் இரு நாவல்களையும் எழுதியுள்ளார் என குறிப்பொன்று கூறுகிறது. 'கறுப்பு ரோஜா', 'பூமி', இவை இரண்டும் இன்னும் கையெழுத்துப் பிரதியாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ச.அருளானந்தம் (ஆலன்)

அருள்வெளியீடாக வந்திருக்கும் 'அந்த ஆவணி ஆறு' (2000) எனும் சிறுகதைத் தொகுதி ஒன்பது சிறுகதைகள் அடங்கிய தொகுதியாக வெளிவந்துள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைப் பேராசிரியர் கலாநிதி செ.யோக ராஜா முன்னுரை எழுதி சிறப்பித்துள்ள இத்தொகுதியில் 'ஒரு பெண்ணின் குரல்', 'குதறல்', 'வாகைமரம்' ஆகிய சிறுகதைகள் பற்றி யோகராஜா அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுவர்:

> 'இத்தொகுப்பில் உள்ள ஒன்பது சிறுகதைகளுள் ஆறு சிறுகதைகள் இன்றைய சமூக யதார்த்தத்தை பிரதிபலிப்பன. இவற்றுள் மூன்று படைப்புக்கள் பொதுவாக இன்றைய எரிகின்ற சமூக அரசியல் பிரச்சனை பற்றியன.
>
> 'குதறல்' என்பது இராணுவத்தினரின் கொடூரச் செயல்களினால் உளப் பாதிப்புற்ற தாயொருத்தியின் மன உணர்வுகளை உளவியல் ரீதியில் வெகு இயல்பான முறையில் வெளிப்படுத்துகின்றது. அகதிகளின் நடுத்தெரு வாழ்வு பற்றி 'வாகைமரமும்' 'அந்த ஆவணி ஆறு' 1990ஆம் ஆண்டின் அடக்குமுறை கலவரம் பற்றிய நடுநிலை ரீதியான உண்மைப்படம் பிடிப்பாகின்றது.
>
> 'பரிமளம்' கதை நல்லவரான தனது கணவர் மனதை புண்படுத்திக் கொண்டு பெண்ணுரிமை பேசுகின்ற ஒரு பெண்ணின் செயற்பாடுகள் பற்றியது. கேணிப் பித்தனிடம் பொதுவாக இன்றைய எழுத்தாளர்களிடம் இல்லாத உண்மையான சமூக நோக்கு, கூரிய அவதானிப்பு, துணிவு, கடின உழைப்பு என்பன மிகுதியாக உள்ளன என்பதனை அறியமுடிகிறது'.

### நந்தினி சேவியர்

யாழ் வடமராட்சியை பிறப்பிடமாகக் கொண்ட நந்தினி திருமலையை தனது வாழ்விடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். கடந்த 40 வருடங்களுக்கு மேலாக இலக்கியமே மூச்சு வாசிப்பு, எழுத்து உரைப்பு கலந்துரையாடல் என்று நெறிப்படுத்தி வாழ்ந்து கொண்டிருப்பவர்.

இளமைக்காலத்திலிருந்து பொதுவுடமைக் கொள்கைகளையும் கருத்துக் களையும் காமித்து மானிட நேயம்மிக்க மார்க்ஸியவாதியாக வாழ்ந்து கொண டிருக்கும் நந்தினி சகல துறையிலும் பாண்டித்தியம் மிக்க பயன்பட்ட எழுத் தாளன்.

1967ஆம் ஆண்டு 'சுதந்திரன்' பத்திரிகையில் எழுதத் தொடங்கியவர் தொடர்ந்து 'மல்லிகை', 'அலை', 'பெயர் தூண்டி' எனப் பல்வேறு சஞ்சிகைகளில் எழுதிக்கொண்டிருப்பவர்.

இவரது சிறுகதைத் தொகுதியான 'அயற்கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' (1993) எட்டுச் சிறுகதைகள் அடங்கிய தொகுதியாக வெளிவந்துள்ளது. ஈழத்துச் சிறுகதை ஓட்டம் பற்றி ஆராயுமொருவர் நந்தினி சேவியரின் கதைகளைத் தவிர்த்து செல்ல முடியாத கலாபூர்வமான சிறுகதைகளைப் படைத்திருப்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சிறுகதை, நாவல், ஆய்வு, கவிதை, அறிமுகக் கட்டுரைகள், விமர்சனம் என பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வந்துள்ள போதும், நந்தினி சேவியர் என்றவுடன் அவரது சிறுகதைகளே எங்களது ஞாபகத்திற்கு வருகின்றன.

## V. 2000ஆம் ஆண்டுக்குப்பின் சிறுகதைகள்

தமிழ்த்தேசியப் போராட்டம் புதிய வடிவமும் சர்வதேச அந்தஸ்தும் பெற்றுக் கொண்ட இக்காலக் கட்டத்தில் திருகோணமலை மாவட்டச் சிறுகதை வளர்ச்சியில் காத்திரமான முன்னெடுப்புக்கள் இடம் பெற்றுள்ளதை அவதானிக்கலாம்.

இக்காலக்கட்டத்தில் அளவுரீதியான எழுத்தாளர்கள் உருப்பெறாத போதும் தரரீதியான பார்வையுள்ள சிறுகதைகள் பிறந்த ஓர் காலக் கட்டமாக இதனைக் கொள்ளமுடியும். இதற்கு காரணம் அமைதியை நோக்கி நகர்ந்த அரசியல் சூழ்நிலை, போராட்டத்தின் உச்ச வெடிப்புக்கள் நல்ல சில எழுத்தாளர்களை திருகோணமலையில் தோற்றுவித்தது என்று கூறலாம்.

இக்காலக்கட்டத்தில் பின்வருவோர் முக்கியம் பெறுகின்றார்கள்: தம்பல காமத்தைச் சேர்ந்த ச.கவிதா, லக்ஷிகாஹேமச்சந்திரா,வீ.என். சந்திரகாந்தி, இளையவன், கிண்ணியா அமீர்அலி, தாமரைமகன், என்.சித்திரவேல், கனகசபை தேவகடாட்சம், ராணிசீதரன், வி.கௌரி பாலன், எம்.ஐ.எம்.தாஹிர், மூதூர் எம்.எஸ்.அமானுல்லா, அபூபக்கர் முஹம்மது அனஸ், கலாநிதி கே.எம்.எம். இக்பால், உவர்மலை வீ.எஸ்.குமார், திருமலை சசி, ஜெனீரா அமான், பிரான்ஸிஸ் நோபேட். இதில் வளர்ந்து வரும் எழுத்தாளர்கள் என்ற வகையில் இருவர் முக்கியம் பெறுகின்றார்கள். ஒருவர் லக்ஷிகாஹேமச்சந்திரா மற்றவர் வீ.என். சந்திரகாந்தி, கிண்ணியா அமீர்அலி, திருமலை தாமரை மகன்.

### லக்ஷிகா ஹேமச்சந்திரா

மாணவியாக இருக்கும் காலத்திலிருந்தே எழுதி வரும் லக்ஷிகா தினமுரசு பத்திரிகையில் பல சிறுகதைகளை எழுதிவந்துள்ளார். இவரின் 'காதல் என்பது எதுவரை' (தினமுரசு, 2001), 'கொள்ளை போனதே' (தினமுரசு, 2001) ஆகிய கதைகள் இளைய தலைமுறையின் கனவுக்கோலங்களைப் படம் பிடித்துக் காட்டுவனவாகக் காணப்படுகின்றன.

### அபூபக்கர் முகமது அனஸ்

அரச ஊழியராகக் கடமையாற்றி வரும் அனஸ், 91ஆம் ஆண்டு வீரகேசரியில் எழுதிய 'கரைசேர யோகமில்லை' என்ற சிறுகதை மூலம் இத் துறையில் காலடி எடுத்து வைத்தார். 'சரிநிகர்', 'நவமணி', 'இடி' போன்ற பத்திரிகைகளில் 30இற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1998ஆம் ஆண்டு வடக்குகிழக்கு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சிறப்புச் சிறுகதைத் தொகுதியில் இவரது சிறுகதையும் அடங்கியுள்ளது. சிறுகதை போல கவிதைத்துறையிலும் ஈடுபாடு காட்டி வரும் இவர் தனது கவிதை ஆற்றலுக்காக பல பரிசுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வீ.என்.சந்திரகாந்தி**

வீ.என்.சந்திரகாந்தி என்ற பெயரில் எழுதும் காந்தி அண்மையில் வெளியிட்ட சிறுகதைத் தொகுதிகள் 'ஸ்திரி இலட்சணம்' (2002), 'தொடரும் தலைமுறைகள்' (2003) 'இந்திரர்கள் நாடும் அகலிகைகள்' (2006) என்பனவாகும்.

ஸ்திரிஇலட்சணம் சிறுகதைத் தொகுதியில் ஞானம், தினமுரசு ஆகியவற்றில் வெளியான 'கலாச்சாரபுயல்', 'இரகசியங்கள்', 'காதலே மௌனமானால்', 'மலரத்துடிக்கும்மொட்டு', 'பொருத்தம்', 'பிரசவவேதனை' ஆகிய 12 சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

இவரது சிறுகதைகள் பற்றி நான் சொல்வதை விட இவரது தொகுப்பின் முன்னுரையில் எழுத்தாளர் நா.பார்த்தீபன் கூறிய கருத்துக்களை அப்படியே தருகின்றேன்.

'நீண்டகால வாசிப்பு முதிர்ச்சியும் நிதானமான எழுத்து முயற்சியும் சேர்ந்து இவரது கதைகளினூடு பிரதிபலிப்பதைப் பார்க்கிறோம்.

சமூகத்தில் காணப்படும் புரையோடிப்போன பல விடயங்களை படிப் பினையூட்டும் வண்ணம் எழுதியிருக்கிறார். கற்பனை உலகில் சஞ்சரிக்காது நிஜவாழ்வில் கண்டவற்றை மனதை தொடும்படியும் மனதில் படியுமாறும் சொல்லியிருக்கிறார்.

பெரும்பாலான கதைகளில் பெண்களின் பிரச்சனைகள் பல்வேறுபட்ட கோணங்களில் அலசப்பட்டிருக்கின்றன. பெண்களின் பிரச்சனையே குடும்பத்தின் சிக்கலாகி, சமூகத்தைப் பாதிக்கின்றன என்ற மனப்பாங்கு எழுத்தாளரின் மனதில் வடிவம் கொள்கின்றது.

சிறுகதை ஒன்றை வாசகர்களுக்கு தரும் பணியில் தற்கால எழுத்துக் களிலிருந்து மாறுபட்டு தனக்கென தைரியத்துடன் ஒரு பாணி அமைத்துள்ள மையை அவரது கதைகளைப் படிக்கும் இலக்கிய கலைஞர்கள் உணர்ந்துகொள்ள முடியும்'.

பல்வேறு போட்டிகளில் பரிசுகள் பெற்றுள்ள சந்திரகாந்தி திருமலை மாவட்ட தமிழ் இலக்கிய விழா 2002க்கான போட்டிகளில் 'மலரத் துடிக்கும் மொட்டு' என்னும் சிறுகதைக்கு முதலாவது பரிசு கிடைத்துள்ளது. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஆய்வு மாணவியான செல்வி மா.ஷீலாவினால் மேற்கொள்ளப்படும் ஞானம் இதழில் வெளிவந்துள்ள சிறுகதை ஆய்வில் இவரது 5 சிறுகதைகள் பிரதான இடம் பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது இன்னொரு சிறுகதைத் தொகுதி 'இந்திரர்கள் நாடும் அகலிகைகள்' (2006) இது பன்னிரண்டு சிறுகதைகளைக் கொண்டது. இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள 'அரவாணிகள்' என்ற சிறுகதை வித்தியாசமான ஒரு கருப்பொருளை கொண்டதாக இதுவரை கைவைக்கத் தயங்கும் கருப்பொருளில் கதை புனையப் பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

இக்கதையில் வரும் மனோரஞ்சிதம் எனும் பாத்திரம் உறுதியாகக் கூறும் இந்த வார்த்தைகள் 'இப்படியானவங்களோட அல்லல்படுகிறதை காட்டிலும் என்னோடை வாழ வேணும் எண்டு நினைக்கிற அரவாணி ஒருவனுடைய பாதுகாப்பில இருக்கிறது மேல்' என்று மனோரஞ்சிதம் எனும் விரக்தியுற்ற பாத்திரத்தின் வார்ப்பு வித்தியாசமான ஒரு சமூகத்தரிப்பை படம்பிடித்து காட்டு வதாக அமைந்துள்ளது.

**கனகசபை தேவகடாட்சம்**

இக்காலப்பகுதியின் இளந்தலைமுறை-எழுத்தாளர்களில் கனதியும் காத்திரமும் மிக்க சிறுகதைகளைப் படைத்துவருபவர் இவர். தனது பள்ளிப் பருவகாலந் தொடக்கம் கலை இலக்கியத் துறையில் ஈடுபாடு கொண்ட தேவகடாட்சம் கிராம சேவையாளராகக் கடமையாற்றும் ஒரு அரச உத்தியோகத்தர்.

தனது நாளாந்த அனுபவங்கள் மூதூர் மல்லிகைத் தீவு கிராமப் பிரதேசத்தில் பிறந்த மண்ணின் அனுபவத் தோண்டல்களை மிக அற்புதமான சிறுகதைகளாகப் படைத்து வருகின்றார். 'மதில்மேல்' என்ற சிறுகதையை தினமுரசு பத்திரிகையில் 1995இல் எழுதியதன் மூலம் இவர் சிறுகதை உலகில் பிரவேசித்தார். மூன்று சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். அவையாவன: காலக் கீறல்கள் (1996), குமுறல்கள் (1998), குருதி மண் (2000).

'காலக்கீறல்கள்' தொகுதியில் சின்னச் சின்ன சிறுகதைகளான 25 சிறுகதைகள் அடங்குகின்றன. இத்தொகுதியில் நிகழ்கால உண்மைகள் சொல்லப்பட்டுள்ளன. தனது அனுபவ உணர்வுகளை ஊறுகாய் போட்டு வைத்திருந்த அவர் இராணுவக் கெடுபிடிகள், முகமூடித் தொல்லைகள், அகதி அவலங்கள், இடம்பெயர்வுகள், வறுமைகள் ஆகிய துயரங்களை இரத்தினச் சுருக்கமாகச் சொல்லியிருக் கிறார்.

கதைப்பதைப் போலவே கதைசொல்லும் திறனும் பெற்றிருக்கிறார் என்பதை இவர் கதைகளைப் படிக்கும்போது உணர்ந்துகொள்ள முடிகிறது.

இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுதியான 'குமுறல்கள்' (1998) தொகுதியில் பொங்கல் சிறுகதை தொடக்கம் 'கணதெய்யோ' வரை 31 சிறுகதை கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில்,

'கைது' சிறுகதையில் வரும் சுமணாவின் மனிதாபிமானம் நிறைந்த தியாகம், இனம் மொழி கடந்த பற்று, தன்னை இனக்காடையர்களிடம் இருந்து காப்பாற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளுக்கு அவள் கணவன் இனப்போரில் இறப்பதனால் ஏற்பட்ட மனிதாபிமான கழிவிரக்கம் மிகச்சிறந்த முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதுபோலவே 'சுதந்திரப்பொதி' என்னும் சிறுகதையில் தன்மான நெருடல்களும் சுதந்திர வேட்கையும் பேசப்படுகிறது.

'குருதி மண்' (2000) என்னும் தொகுதியில் 'உதயம்பொட்டு', 'கனவு மெய்ப்பட', 'ஊமைபலி' ஆகிய 20 சிறுகதைகள் உள்ளடங்குகின்றன. 'இம் மண்ணிலே மண்ணிற்காய் மரணித்த மானுடங்களுக்கு இந்நூல் படையலாகிறது' என சமர்ப்பணம் செய்துள்ளார்.

திருகோணமலையில் போராட்ட மணம் கலந்த இலக்கியங்களின் படைப்பு அல்லது பங்களிப்பு குறைவு என்ற நிலையை மாற்றியமைக்கும் வகையில் 'குருதிமண்' அர்ப்பணமாக்கப்பட்டிருக்கிறது.

தேவகடாட்சத்தின் சிறுகதைகள் குறளைப் போல் சுருங்கச் சொல்லி முதிர்ந்த நிறைந்த அனுபவங்களையும் சொல்வன. தான் கண்ட, ஊறிய, உறைந்த அனுபவங்களை அப்படியே சிறுகதைகளாக ஆக்கியிருக்கின்றார் என்பதற்கு குருதிமண் தொகுதியிலுள்ள 'உதயம்' சிறுகதையில் பட்டதாரி இளைஞர்களின் மறியல் போராட்டம், 'பங்காளி' சிறுகதையில் வரும் தியாக ஏற்பு, இப்படி எல்லாமே தமிழினத்தின் சீரழிவுகளின் சின்னங்களாய்ச் சொல்லப்பட்ட கதை களாக காணப்படுகின்றன.

இக்காலக்கட்டத்தில் வளர்ந்துவரும் இளைய எழுத்தாளர்களின் அடை யாளங்களாகப் பின்வருவோரையும் அவர்களது படைப்புக்களையும் குறிப் பிடலாம்: அவலங்கள் - (சுடர்ஒளி) (2002), ச.கவிதா தம்பலகாமம், மனிதன் - (தினமுரசு), அமீர் அலி, கிண்ணியா, அப்பா - (தினமுரசு), தாமரைமகன், வில்லங்கமானதொருஉறவு-(தினமுரசு), இளையவன்.

## என்.சித்திரவேல்

பாரதிபுரம் சித்திரவேல், படிக்கும் காலத்திலிருந்தே (1968) எழுத்துலகை நேசித்தவர். தினபதி பத்திரிகையின் சிறுகதைத் திட்டத்தின் கீழ் பரிச்சயப்பட்டு சிறுகதைகளை எழுதிவந்த சித்திரவேலின் முதலாவது சிறுகதைத் தொகுதி 'நெஞ்சில் ஒரு நிறைவு' (2000) ஈழத்து இலக்கியச் சோலையின் 13வது வெளியீடாக வந்துள்ளது.

11 சிறுகதைகள் அடங்கிய இத் தொகுப்பில் 'திருப்பம்', 'ஏமாற்றம்', 'வாழ்க்கை', 'பிராயச்சித்தம்' போன்ற பல சிறந்த சிறுகதைகள் உள்ளடங்கு கின்றன.

இவரது சிறுகதைகள் வ.அ.வின் கதைகள் போல் மூதூர்க் கிராமங்களான சம்பூர், மல்லிகைத்தீவு, ஜின்னா நகர், நல்லைக்குளம் ஆகிய கிராமங்களின் வாசனையையும், அங்கு பூத்துக்குலுங்கும் தாமரை மலர்கள் பரந்த வயல்வெளிகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசும் வாடைக்காற்று, மகாவலி கங்கையின் ஓட்டம், வாய்க்கால்களின் ஊடுருவல்கள் ஆகியவற் றையும், இக்கிராமங்களில் அலைந்துதிரியும் மாந்தர்களையும், அவர் தம் பிரச்சனைகள், போராட்டங்கள், மரபு முறைகள் எல்லாவற்றையும் அழகாக அவர் தனது ஒவ்வொரு சிறுகதையிலும் சொல்லி வைக்கிறார்.

தான் வாழ்ந்த மண்ணை அவர் வடித்துக் காட்டும் விதம், கதை உத்தி அலாதியானது. இருந்த போதிலும், சில இடங்களில் எட்டிப் பார்க்கும் சினிமாப் பாணி கதைகளின் நல்ல நெறியைக் கெடுத்துவிடுமோ என்று பயப்பட வேண்டியுள்ளது.

**ராணி சீதரன்**

யாழ் பண்ணாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டாலும் திருமலையை வாழ்விடமாகக் கொண்ட பெண் எழுத்தாளரான ராணி, மாங்கல்யம் தந்து நீயே, (1999), கன்னிகாதானம், நடுகல், நிலவும் சுவடும், 2010 ஆகிய நான்கு சிறுகதைத் தொகுதிகளைத் தந்துள்ளார்.

திருகோணமலையின் பெண் எழுத்தாளர் வரிசையில் மிகவும் பெயர் சொல்லி அழைக்கக் கூடிய ஒருவராக விளங்கும் இவர் தமிழ் மொழிச் சேவைக் கால ஆலோசகராக திருகோணமலை வலயக்கல்விப் பணிமனையில் கடமையாற்றி வருகிறார்.

சிறந்த முற்போக்கு எண்ணமும் இனிய சுபாவமும் புலமையும் மிக்க ராணியின் முதற் தொகுதியில் 10 சிறுகதைகள் அடங்குகின்றன. பெண்களோடு தொடர்புடைய பல்வேறு ஞாயம் சார்ந்த சிறுகதைகளை இவர் படைத்திருக்கிறார் என்பதற்கு 'மாங்கல்யம் தந்து நீயே' இல் வரும் துளசி ரீச்சர் - பெண்மையின் அடக்குத்தனங்களும் பாரம்பரியமாகப் பேணப்படும் பெண்மையின் அமைதிப் பண்புகளும் கொண்டு நின்ற காரணத்தினால் தன்முன்னே தனது கணவன் இன்னொருத்தியுடன் உலாவுவதைக் கேட்டும், தன்மன நிலையைச் சமாளித்ததும், தன்னெதிரே கணவனும் இன்னொருத்தியும் வரும்போது கூட சீற முடியாமல் ஆழ்ந்து போவதும் பெண்களின் மரபுவழிச் சுமைகளாகக் காட்டப்படுகிறது.

'இனி யார் எமக்கு' சிறுகதையில் வரும் அம்மாவின் துயரங்கள், யாத்திரை சிறுகதையில் வரும் நித்யா - தனது கண்முன்னே கொடுங் கோன்மையால் விதவையாக்கப்படுவது போன்ற அநியாயங்களின் அவலப் பாத்திரங்களாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

பொதுவாகவே ராணியின் சிறுகதைகள் பெண்களுக்கு ஏற்பட்ட நிகழ்கால வாழ்வியல் போராட்டங்கள், விதவைப்பீடைகள், மனப் போராட்டங்கள் என்பவற்றைக் கூறுபவை. இவர் தனது அனுபவ ஞானத்துக்கு ஏற்ப நல்ல சிறுகதைகளையாக்கித் தந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வி.கௌரிபாலன்

1994ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையில் இவரின் முதற்சிறுகதை பிரசுரமாகியது. நவீன இலக்கியவாதிகள் மத்தியில் பரவலாகப் பேசப்படும் கதைகளை இவர் சரிநிகர், நிகரி புலம்பெயர் சஞ்சிகையான 'அம்மா' எனும் சஞ்சிகை, எக்ஸில் (பிரான்ஸ்) 'புதியகளம்', 'களம்' ஆகிய சஞ்சிகைகளில் எழுதியுள்ளார். இவரது 10 சிறுகதைகள் 'ஒப்பனை நிழல்' எனும் பெயரில் ஒரு தொகுப்பாக கீழைத்தென்றல் கலாமன்ற வெளியீடாக 2003இல் வெளிவந்துள்ளது. நவீன இலக்கிய விமர்சகர்களின கவனத்தை ஈர்த்துள்ள இளம் தலைமுறைப் படைப்பாளிகளில் வி.கௌரிபாலன் குறிப்பிடத்தக்கவர். இவரது நாடகமொன்றும் நூலாகியுள்ளது.

### பிரான்ஸிஸ் (நோபேட்)

'புதியதோர் உலகம்' எனும் நாவலை 'கோவிந்தன்' எனும் பெயரில் எழுதிய நோபேட், பிரான்சிஸ் சேவியர் எனும் பெயரில் 'தீர்த்தக்கரை' சஞ்சிகையில் குறிப்பிடத்தக்க சில சிறுகதைகளை எழுதியுள்ளார். அக்கதைகள் 'தீர்த்தக்கரைக் கதைகள்' எனும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. திருகோணமலையின் மிகக் காத்திரமான படைப்பாளியாக அவரை அடையாளப்படுத்தும் கதைகள் அவை.

### க.ரமணீதரன் (சித்தார்த்த சேகுவேரா)

க.ரமணீதரன் அமெரிக்காவிலுள்ள துலேன் பல்கலைக்கழகத்தில் பொறயியற் துறையில் பட்டப்பின் படிப்பு மாணவனாக உள்ளார். திருகோணமலையில் இருந்து வெளிவந்த 'கோணைத்தென்ற'லில் இவரது சிறுகதைகள் வெளிவந் துள்ளன. 'நிவேதனம்' என்னும் தொகுப்பில் இவரது கதையும் இடம் பெற்றுள்ளது. 400கவிதைகள், 4 நாடகங்கள், சுமார் 25 சிறுகதைகள் எழுதியுள்ள இவரது சில சிறுகதைகள் இலண்டனிலுள்ள பத்மநாபஐயர் தொகுத்த 'கண்ணில் தெரியுது வானம்' தொகுப்பில் யமுனா ராஜேந்திரனின் ஆய்வுக் குறிப்புக்களுடன் பிரசுரமாகியுள்ளன. இவர் எழுதிய 'கமிகாஷே' என்ற தமிழ்ச்சிறுகதையின் ஆங்கில மொழி பெயர்ப்பு புதுடெல்லியிலிருந்து வெளியிடப்படும் 'த லிற்றில் மகசின்' இதழில் அண்மையில் வெளிவந்துள்ளது. (மொழி பெயர்த்தவர் - கோவர்தனன் இராமச் சந்திரன்) தற்காலச் சிறுகதைகளின் புதுத்தலைமுறையின் மற்றுமொருவராக திருகோணமலை இவரைப் பெற்றிருக்கிறது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாநிதி கே.எம்.எம்.இக்பால்


கே.எம்.எம்.இக்பால்

கிண்ணியாவைச் சேர்ந்த இக்பால் ஓர் ஆசிரியர். சேவைக்கால ஆலோசகராக கடமையாற்றிவரும் கல்வி யியலாளரான இக்பால் மாணவர் நலன் கருதி பல்வேறு நூல்களை எழுதி வெளியிட்டிருப்பதுடன் சிறுவர் பாடல், சிறுவர் நாவல், சிறுவர் கதை ஆகிய பல இலக்கியங் களை ஆக்கித்தந்திருப்பதுடன் நடுக்கடலில், தியாகி ஆகிய இரு சிறுகதைத் தொகுதிகளையும் வெளியிட் டுள்ளார்.

சுனாமி சிறுகதைத் தொகுதி என 'நடுக்கடலில்' (2005) எனும் தலைப்பில் 10 சிறுகதைகள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமிப் பேரலையினால் பேரழிவைக் கொண்ட பெருந்தொகை உயிரைப்பலி கொண்ட ஓர் பிரதேசமாக கிண்ணியாக் கிராமங்கள் காணப்பட்டன.

அந்த கோர நினைவுகளின் வரலாற்று பதிவுகள் போல் எழுதப்பட்டுள்ள இத்தொகுதியில் உள்ள 'ஆணவம்', 'மணக்கோலம்' போன்ற சிறுகதைகள் கிண்ணியா கடலோரக் கிராமங்களில் மக்கள் அனுபவித்த கோர அவலங் களையும், இழப்புக்களையும் கண்ணீர் வழிந்தோடும் அனுபவங்களாக இக்பால் படைத்திருப்பது சிறந்த ஆவணப்பதிவாக உள்ளது. அதேவேளை அவருடைய பதிவுகள் சிறுகதை இலக்கண வரம்பை மீறாமல் சொல்லப்பட்டுள்ளது.

இது போலவே முஸ்லிம் மக்களின் வாழ்க்கை அனுட்டானங்களையும் அவர்களின் அகத்துறை சார்ந்த விழுமியங்களையும், வாழ்க்கை வரன்முறைகள் கோடுகளையும் தனது இரண்டாவது தொகுதியான 'தியாகி' சிறுகதை தொகுதி யில் காட்டியுள்ளார். இவரது பாத்திரப்படைப்புக்கள் அவர்கள் சார்ந்த உரை யாடல்கள், உணர்ச்சிக் கோலங்கள் இலக்கண பிரமாணம் மாறாமல் சொல்லப் பட்டிருக்கிறது.

## அமானுல்லா

மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட பயிற்றப்பட்ட ஆசிரியராகவும், பின் அதிபராகவும் கடமையாற்றிய அமானுல்லா ஈழத்திலும் சர்வதேச மட்டத்திலும் நடாத்தப்பட்ட பல்வேறு தமிழ் சிறுகதைப் போட்டிகளில் பங்கு கொண்டு பரிசில்கள் பெற்றவர்.

வானவில் வெளியீட்டகம் இவரது பரிசுபெற்ற சிறுகதைகள் எட்டைத் தொகுத்து 'வரால் மீன்கள்' (2007) என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது. 'வரால் மீன்கள்', 'சுங்கான் மீன்', 'கல்யாண முருங்கை', 'செவ்வால்', 'அறணை',

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கருவேலங்காடுகள்' ஆகிய சிறுகதைகளை உள்ளடக்கிய இத்தொகுப்பில் உள்ள கதைகள் தேசிய இலக்கியத்தில் கோர்க்கப்பட வேண்டிய சிறந்த சிறுகதைகள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த 'உதயசூரியன்' பத்திரிகையில் தனது பதினைந்தாவது வயதில் 'இருதுளிக் கண்ணீர்' என்ற சிறுகதையை எழுதியதன் மூலம் சிறுகதைத் துறையில் அடியெடுத்து வைத்த அமானுல்லா கடந்த 45 வருடங்களுக்கு மேலாக எழுதி வருகிறார்.

மூதூர் கிராமத்தில் வ.அ. க்குப் பிறகு அந்த மண் வளத்தையும், சொல் வளத்தையும் இணைத்து கதையெழுதுவது அமானுல்லா அமானுஷ திறன் படைத்தவராக காணப்படுகின்றார்.

'கொய்யா மரத்தில் குருவிச்சைப் பூக்கள்' என்னும் சிறுகதை சுனாமி அனர்த்தத்தின் கொடுமையை விபரிக்கும் சிறுகதையாக இருந்தாலும், ராத்தா எனும் ஓர் ஏழை விதவைப் பெண்ணின் வாழ்க்கைப் போராட்டங்களையும் தனது ஒரே குழந்தையான பரினாவை சுனாமி அனர்த்தத்தில் தவறவிட்டுவிட்டு தேடும் தாய்க்குணாம்ஷமும் இறுதியில் தனது குழந்தைக்கு வேறொரு தாய் தந்தையர் உரிமை பாராட்ட வந்த போது பிள்ளையின் எதிர் காலம் கருதி வறுமை நிலை காரணமாக பிள்ளையை தாரைவார்த்துக் கொடுப்பது போல் தனது குழந்தையை இழந்து செல்வதும் மனதைத் தொடும் காட்சியாக ஆசிரியரால் விவரிக்கப்படுகிறது.

இத்தொகுதியில் வரும் பிரதான கதையான 'வரால் மீன்கள்' கதையில் வரும் தாவூது மாஸ்டரின் அர்ப்பணிப்பும், நேர்மைக் குணமும் எம்மை ஆச் சரியப்பட வைக்கின்றது.

அமானுல்லாவின் நடை தகழிசிவசங்கர பிள்ளையையும் தி.ஜானகி ராமனையும் நினைவூட்டுகின்றது. தனது கிராமத்தின் கதை மாந்தர்களையும் உரையாடல்களையும் வட்டம் போட்டுக் காட்டுவதில் ஆசிரியர் அடைந்திருக்கும் வெற்றி வாசகர்களை தூக்கி நிறுத்துகிறது.

**உவர்மலை வி.எஸ்.குமார்**

திருகோணமலையில் உள்ள உவர்மலையைச் சேர்ந்த குமார் எழுதிய 'அப்பா' (2008) எனும் சிறுகதைத் தொகுதி கற்பகம் இலக்கியச் சோலை வெளியீடாக வந்துள்ளது.

புதினம், வீரகேசரி, மித்திரன், முரசு ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த பதின்நான்கு சிறுகதைகள் இத்தொகுப்பில் அடங்குகின்றன. குமாரின் கதைகள் கூட்டுக்குடும்ப உறவுகளின் பாசங்களை, பரிதவிப்புக்களை, விரிசல்களை விளக்குபவையாக உள்ளன. இளமைக்கால கனவுகள், ஆசைகள், நிராசைகள் கதைகளின் கருப்பொருளாகவும் இன்னொருபுறம் ஆண் ஆதிக்கம், சந்தேகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பிரதாயங்கள், சாதி பிரிவுகள், மூடக்கொள்கைகள் என்பவற்றையும் சிறிய அளவில் சொல்ல முற்படுகின்றது.

மொத்தத்தில் குமாரின் கதைகளில் குடும்பங்களின் சின்னச்சின்ன உணர்வுகள் அழகாக வடிக்கப்பட்டுள்ளன.

## திருமலை சசி



திருமலை சசி

திருகோணமலை சின்னத்தம்பி சசிகலா தான் ஆசிரியையாக இருந்த காலத்தின் அனுபவங்களையும், செய்திகளையும் சிறுகதைகளாக்கி 'மொட்டு' (2001) என்ற தொகுதியாகத் தந்துள்ளார்.

'ஓர் இதயம் சிலுவை சுமக்கிறது' என்ற கதை தொடக்கம் 'ஒரு விடியலுக்காய் மொட்டொன்று' என்ற கதை வரை ஒன்பது சிறுகதைகள் இத்தொகுப்பில் அடங்குகின்றன.

பல்வேறு மாவட்டங்களில் ஆசிரியராக கடமையாற்றிய அனுபவப் பதிவுகள், சம்பவங்கள், மனஉணர்வுகள் இவர் கதைகளில் முக்கிய கருவாக்கப் பட்டிருக்கின்றன. கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் பெண்ணியம் சார்ந்த உரிமைகளின் கோஷங்களாக ஒடுக்கப்பட்ட சமூக வார்ப்புக்களின் ஓலங்களாக விளங்குவது இவரது கதைகளுக்குரிய சிறப்பு அம்சமாகும்.

## ஜெனீரா அமான்



ஜெனீரா அமான்

கிண்ணியாவைச் சேர்ந்த இளம் ஆசிரியை ஜெனீரா அமான் அவர்களின் 'பிரியமான சிநேகிதி' (2009) எனும் சிறுகதைத் தொகுதி கிண்ணியா அல்-அக்தாப் இலக்கிய மன்றத்தின் முதல் வெளியீடாக வந்துள்ளது.

வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, நவமணி, மித்திரன் மற்றும் ஜனனி, சங்கமம், சிகரம் போன்ற பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் 1992ஆம் ஆண்டு தொடக்கம் தான் எழுதி வந்த சிறுகதைகளை இத் தொகுப்பில் தொகுத்து தந்துள்ளார்.

ஆசிரிய கலாசாலையில் படித்த காலத்திலும் மிகக் கிட்டிய காலத்திலும் தான் பெற்ற அனுபவங்களையும், செய்திகளையும், மனதைத் தொட்ட சம்பவங்களையும் சிறிய சிறிய கதைகளாக்கித் தந்துள்ளார் ஜெனீரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக குவிப்பின் துல்லிய பண்பை கொண்ட கிராமங்களில் வாழும் மனிதர்கள், அவர்களது வாழ்க்கை முறைகள், அவர்கள் பேசும் உரையாடல்கள் அம்மண்ணுக்கே உரிய குறிகாட்டிகளாக இருக்கின்றன என்பதற்கு கிண்ணியாக் கிராமத்தின் உரையாடல்களை அதன் தனித்துவம் குறையாமல் ஆசிரியர் கையாண்டிருப்பது அற்புதமாக உள்ளது.

பொதுவாகவே இலக்கியம் படைப்பதில் முஸ்லிம் பெண்கள் குறைவாக காணப்படும் திருகோணமலை மாவட்டத்தில் ஜெனீரா ஒரு முன்னோடியாகத் திகழ்வது பாராட்டுக்குரியது மாத்திரமன்றி கடந்தகால இலக்கிய வரட்சிக்கு புதிய வரவாக மேற்போந்த கவிஞர்களின் வரவு காணப்படுகின்றது.

**கிண்ணியா றெலிகான் சதாத்**

ஆசிரியர் தொழில் புரிந்துவரும் கிண்ணியா முனைச்சேனையை சேர்ந்த சதாத் கவிதை, சிறுகதை, கட்டுரை என பல்துறையிலும் கால் பதித்து வருபவர். கிண்ணியா சாகித்திய விழாப்போட்டியில் இவரது சிறுகதை முதல் பரிசு பெற்றதன் மூலம் சிறுகதை துறைக்கு வருகை தந்தவர். பாடசாலை வலய மட்டங்களிலும் சிறுகதைக்காக பல பரிசுகளை பெற்றுள்ளார்.

**சூசை எட்வேட்**

திருகோணமலை நகரின் தலைவாசல் கிராமமான அன்புவழிக் கிராமத்தைச் சேர்ந்த சூசைப்பிள்ளை எட்வேட் திருகோணமலையின் பிரபல எழுத்தாளர் ந. பாலேஸ்வரியின் மாணவன். 2007ஆம் ஆண்டு முதல் சிறுகதைகளை எழுதிவரும் இவர் தினக்குரல், வீரகேசரி, ஜீவநதி, மல்லிகை ஆகியவற்றில் 17க்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். இவரது ‘கருத்துக் கலசம்’ (2000) வெளிவந்துள்ளது.

**இலங்கை எழுத்தாளர்களின் 26 சிறுகதைகள்**

எஸ். செல்வகுமார் என்பவர் 2002 ஆம் ஆண்டு இலங்கையை சேர்ந்த 26 சிறுகதைகளைத் தொகுத்து சென்னை மணிமேகலை பிரசுரமாக வெளியிட்டுள்ளார். இத்தொகுதியில் ஈழத்தின் பல பகுதிகளை சேர்ந்த பிரபல எழுத்தாளர்களின் சிறுகதைகள் தொகுக்கப்பட்டிருந்த போதும் திருகோணமலையைச் சேர்ந்த வ. அ. இராசரத்தினம், கிண்ணியா எம்.சி.எம் தாஹிர்,சேனையூர் அச்சுதன், எஸ். உதயகுமார், புரட்சிபாலன், திருமலைசுந்தா, செல்வி. மாதுமை ஆகியோரின் சிறுகதைகள் முக்கிய இடம் பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# நாவல்

## I. ஆரம்பம்

புராண, இதிகாச, காவியங்களைப் படித்துச் சுவைத்த தமிழ்மொழி அறிஞர்களுக்கு, ஆங்கிலமொழி விருத்தியுடன் அறிமுகமான 'நாவல்' எனும் வடிவம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது 19ஆம் நூற்றாண்டிலாகும். மேலைத்தேயக் கல்வியும், நாகரிகங்களும் நிலப்பிரபுத்துவ மாற்றமும், தொடர்புகளும் புனைகதை வடிவமான நாவல் தமிழில் பிறப்பெடுக்க அடிகோலி நின்றன.

தமிழில் முதலாவது நாவல் வேதநாயகம்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட 'பிரதாப முதலியார் சரித்திரம்' (1876) இருந்தாலுங் கூட இவர் தனது இந்த நாவலை வசன காவியம் PRO SAIL EPIC என்று குறிப்பிட்டுள்ளார். இது ஒரு நாவல் என்பதை விட, ஒரு சமூகவரலாறு என்ற வடிவில் எழுதப்பட்டிருப்பதனால் நாவலுக்குரிய தனிப்பண்புகள் இல்லாத சூழ்நிலையில் இதற்குப்பின் வந்த ராஜமய்யரின் 'கமலாம்பாள் சரித்திரம்' (1896) தமிழின் முதலாவது நாவல் என்ற பெருமையைப் பெறுகிறது.

அதேவேளை ஈழத்தில் எழுதப்பெற்ற முதலாவது தமிழ் நாவல் எது என்ற ஆய்வில் ஒவ்வொரு ஆய்வாளர்களும் தம், தம் கைக்கெட்டிய தரவுகளை அடிப்படையாகக் கொண்டு முதலாவது நாவல் இதுதான் என நிறுவுவதில் பல்வேறு இடர்பாடுகளும் வரலாற்றுக் குழப்பங்களும் காணப்படுவதைக் காணலாம்.

1856ஆம் ஆண்டு வெளிவந்த 'காவலப்பன் கதை'ஈழத்தில் வெளிவந்த முதல் நாவல் என மு.கணபதிப்பிள்ளை அவர்களும், வீரசாகசச் சம் பவங்கள் நிறைந்த அற்புத கதைப்பண்பு வாய்ந்த 'அசன் பேயுடைய கதை' (அறிஞர் சித்திலெப்பை, 1890) முதலாவது தமிழ் நாவல் என [1]நா.சுப்பிரமணியம் நிறுவுவதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில்லையூர் செல்வராஜன், கனக செந்திநாதன் ஆகியோர் கருத்துப்படி 1891ஆம்ஆண்டு வெளிவந்த திருகோணமலையைச் சேர்ந்த எஸ்.இன்னாசித்தம்பி எழுதிய 'ஊசோன் பாலந்தையே' ஈழத்தில் எழுந்த முதலாவது தமிழ் நாவல் என்று குறிப்பிடுவதும் இங்கு வரலாற்றுக் குழப்பங்களைத் தருகிறது.

பேராசிரியர் சி.பாலசுப்பிரமணியத்தின் கருத்துப்படி (தமிழ் இலக்கிய வரலாறு) அசன்பேயுடைய சரித்திரம் தமிழின் இரண்டாவது நாவலாகவும், இலங்கையின் முதலாவது நாவல் என்றும் குறிப்பிடுகிறார். ஆனால் பேராசிரியர் வி.செல்வநாயகம் கமலாம்பாள் சரித்திரம் என்னும் நாவலுக்குப்பின் திருகோண மலையில் எழுந்த 'மோகனாங்கி' என்ற நாவலையே குறிப்பிட்டுள்ளார்.

எஸ்.கமால்தீன் கருத்துப்படி அஸன்பேயுடைய சரித்திரம், 1890இல் தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டாலும் அது 1885ம் ஆண்டே ஈழத்தில் பிரசுரிக் கப்பட்டுவிட்டது என்றும் இதற்குரிய ஆதாரங்கள் சென்னையில் வெளியீடு செய்யப்பட்ட தமிழ் நூற்பட்டியலை ஆதாரமாகக் கொண்டு எடுத்துக் காட்டி யுள்ளர்.

மேற்படி அறிஞர்களின் வரலாற்று நிரூபிப்புகளை எடுத்துக்கொள்ளாமல் திருகோணமலையில் எழுந்த நாவல்களை எடுத்து நோக்குவதில் எனது கவனத்தைக் கொண்டு செல்வோம்.

ஈழத்தின் மூத்த தமிழ் நாவல்களான 'ஊசோன் பாலந்தை', 'மோகனாங்கி' ஆகியன திருகோணமலை மண்ணிலிருந்துதான் பிறப்பெடுத்துள்ளது என்பது ஒரு பெருமையான விடயமாகும்.

**ஊசோன் பாலந்தை - திருகோணமலை எஸ்.இன்னாசித்தம்பி (1891)**

ஈழத்தின் மூத்த நாவலான 'ஊசோன் பாலந்தை' எனும் நாவலை திருகோண மலையைச் சேர்ந்த எஸ்.இன்னாசித்தம்பி என்பார் 1891 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் எழுதி வெளியிட்டுள்ளார். இந்த நாவலை முதலில் பதிப்பித்தவர் 'மேகவர்ணன் தாமோதரன்', 'இரத்தின சிங்கம்' ஆகிய நாவல்களைப் பதிப்பித்த எஸ்.தம்பிமுத்துப்பிள்ளை என்பவராவர்.

அரைக்கிறவுன் அளவில் சிறிய எழுத்தில் தொண்ணூறு பக்கம் கொண்டதாய் 1500 கொப்பிகள் அச்சிடப்பட்டு, 50 சத விலைக்கு விலையாகின.

இதன் இரண்டாவது பதிப்பு 1924ம் ஆண்டில் யாழ் அச்சுவேலி, ஞானப் பிரகாச அச்சுயந்திரசாலையில் வண.பிதா சா.ஞானப்பிரகாச சுவாமி பரிசோதித்து பதிப்பித்துள்ளார்.

பிரதாபமுதலியார் சரித்திரம் எழுதிய வேதநாயகம் பிள்ளையைப்போலவே இன்னாசித்தம்பியும் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவர். அக்காலப்பகுதியில் பிரசித்தி பெற்றிருந்த அந்தோனிக்குட்டி அண்ணாவியாரின் 'கிறிஸ்தவ சமயக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீர்த்தனைகள்' என்ற நூலை தமது நாவல் வெளியான அதே 1891ஆம் ஆண்டு (டிசம்பர்) பதிப்பித்து வெளியிட்டுள்ளார் இன்னாசித்தம்பி அவர்கள்.

ஊசோன் பாலந்தை கதை, கிறிஸ்தவப் பின்னணி கொண்டது. கதை நிகழ்ச்சி களும் இலங்கையல்ல.

இந்நாவல் பற்றி கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள் டெயிலி நியூஸ் பத்திரி கையில் (03.01.1971) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> It all begain in 1891 when S.Innasithamby of Trincomalee adapted into Tamil a portuguese Novel called 'Orzon and Valentine'. This book becomes the First Tamil Novel of Ceylon written almost eighty years ago, this also the second Novel ever written in Tamil.

*இந்நாவலின் கதைச்சுருக்கம்:* பெப்பேஞ்சி ராச்சியத்திலுள்ள இராயரின் தங்கை தொன் வெலிச்சாந்து என்னும் இராக்கினியை அனுமான்ய இராட்சியிலிருக்கின்ற எம்பரதோரருக்கு திருமணம் முடிக்க வேண்டியிருந்ததனால் அதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்தார் இராயர். ஆனால் இராயரை விட குமாரத்தியின் மீது பேரன்பு கொண்ட மக்கள் இச்செய்தி கேட்டு வெகுண்டு எழுகின்றார்கள். 'எங்களை விட்டு இராசகுமாரியை அழைத்துப் போகவேண்டுமானால் எங்கள் எல்லோரையும் சுட்டுக் கொன்று போட்டு அழைத்துப் போமென்று' மிகுந்த பிரலாபத்தோடு விண்ணப்பம் செய்தார்கள்.

இராயர் இதுகேட்டு கிலேசப்பட்டு வேண்டிய திரவியங்களையும், வஸ் திரங்களையும் மக்களுக்கு வாரி வழங்கிச் சமாதானப்படுத்த முயன்றும் முடியாமல் போகவே தங்கையிடம் இச் செய்தியைச் சொல்கின்றார். அவள் சனங்களிடம் தன் விருப்பத்தைத் தெரிவிக்கிறாள். மக்கள் உடன்பட்டு கோலாகலத்துடன் அனுப்பி வைக்கிறார்கள். இதை விரும்பாத இராயரின் தளபதி பொறாமைப் படுகின்றான். மனத்துக்குள் அவன் இவள் மீது பற்றுள்ளவனாகக் காணப் பட்டான்.

அனுமான்ய தேசத்திலுள்ள சந்தமரியாயி கோயிலில் சத்தியவேத முறைப் படி அலெக்சாந்தர் எம்பதோராகிய மணவாளனுக்கும் தொன் வெலிச்சாந் துவுக்கும் திருமணம் நடைபெறுகிறது.

அலெக்சாந்தர் எம்பரதோரும், தொன்வெலிச்சாந்துவும் இன்பமாக வாழ்ந்து வரும் நாளில் மாநகரில் (ரோம்) இஸ்லாமியனான துர்க்குராயன் என்கிறவன் நாட்டில் நுழைந்து கிறிஸ்தவர்களை தனது மதத்துக்கு வரச் சொல்லி மக்களைத் துன்புறுத்தியது கண்டு பாப்பாண்டவர் மாவீரன் எம்பரதோரருக்கு ஓலை அனுப்ப ஆறுமாதக் கர்ப்பிணியாகிய தொன்வெலிச் சாந்துவை விட்டுவிட்டு, 55 கப்பல் களுடன் ரோமாபுரிக்கு வருகிறான். அலெக்சாந்தர் ராட்சியத்தை, தொன்வெலிச் சாந்து ஆண்டு வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளை எம்பரதோர் வளர்த்த வளர்ப்பு மகன் பாலசுரத்தான் என்னும் தனாதிபதி அவளுடன் தகாத முறையில் நடக்க முனைகின்றான். விதிவசத்தினால், கணவனைப் பிரிந்த தொன்வெலிச்சாந்து ஊசோன், பாலந்தை எனும் இரட்டைக் குழந்தைகளைப் பெறுகிறாள். ஊசோன் ஓர் கரடியால் வளர்க்கப்பட்டு பயங்கர காட்டுமனிதனாக மக்களைத் தொல்லைப்படுத்துவதும், பாலந்தை எனும் அவன் சகோதரன் வேற்று அரச மாளிகையில் வளர்ந்து வீரனாகி தன் சகோதரன் ஊசோனை வென்று நிற்பதும் பல சம்பவக் கோவைகளுக்குப் பின் இவர்கள் மணம் செய்து கொள்வதும் இறுதியில் ஊசோன் அறியாமல் தன் தந்தை எம்பர தோரரைப் போரில் கொல்வதும் உண்மை அறிந்த பின் மனம்வருந்தி தவமிருந்து மரிப்பதும் இக்கதையாகும்.

இன்னாசித்தம்பி தமது நாவல் மொழிபெயர்க்கப்பட்டதென்றோ தழுவ லென்றோ எங்கேனும் குறிப்பிடவில்லை. இருந்தாலும் இந் நாவல் ORSON AND VALANTINE எனும் போத்துக்கீச நெடுங்கதையை ஆதாரமாகக் கொண்டே எழுதியிருக்க வேண்டுமென்று எண்ண வேண்டியுள்ளது. அந்நியமான கதையாக இது எழுதப்பட்ட போதும் கதாபாத்திர நிகழ்ச்சியோட்டத்திலும் தமிழ்த் தன்மையை நிறையப் பெற்று நாவல் மரபு பிறழாமல் எழுதப்பட்டிருப்பது வியப்புக்குரிய விடயமாகும். இந்த நாவல் பிற்காலத்தில் திருகோணமலை நகரில் நாடகமாகவும் ஆடப்பட்டிருக்கிறது.

இந்த நாவலில் வரும் வீரசாகசக் கதையினால் ஈர்க்கப்பட்ட அதிபர் எம்.சி.அந்தோனிப்பிள்ளை 1932ஆம் ஆண்டளவில் ஊசோன் பாலந்தை எனும் இந்தக் கதையை நாடகமாக்கி நகரின் பலபகுதி களிலும் மேடையேற்றி யுள்ளார்.

**மோகனாங்கி - பண்டிதர்.த.சரவணமுத்துப்பிள்ளை (1867 - 1922)**

திருகோணமலையின் கலை இலக்கியக் கணக்கெடுப்பில் முக்கியம் பெறுபவர் த.சரவணமுத்துப் பிள்ளையாவார். த.கனகசுந்தரம்பிள்ளையின் சகோதரரான இவர் 'மோகனாங்கி' எனும் நாவலை (1895இல்) எழுதியதன் மூலம் ஈழத்து இலக்கியப் பரப்புக்கு அளப்பரிய சேவை செய்த ஒருவராக மதிக்கப் படுகிறார்.

இந்தியாவில் அச்சுவாகனமேறிய இந்த நாவல் வரலாற்றை அடிப் பைடயாகவும், தஞ்சை திருச்சி நாயக்கர் பரம்பரையை ஆதாரமாகவும் கொண்டு எழுதப்பெற்றது. மோகனாங்கி நாவல் தமிழின் முதலாவது சரித்திர நாவல் என்ற பெயரைப் பெற்று நிற்கின்றது என வித்துவான் FXC நடராசா குறிப் பிடுகிறார்.

சொக்கநாதன், மோகனாங்கி ஆகிய இரு பாத்திரங்களுமே இந்நாவலின் பிரதான கதாபாத்திரங்கள். நாயக்கர் பரம்பரையைச் சேர்ந்த 'மங்கம்மா' எனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திரப் பெயரை 'மோகனாங்கி' என ஆசிரியர் மாற்றி இந்நாவலைப் படைத்துள்ளார்.

மோகனாங்கி, சொக்கநாதன் ஆகிய காதலர்களின் காதல் வாழ்க்கையையும் குடும்ப வாழ்க்கையையும் சுற்றிப் பின்னப்பட்டிருக்கும் இந்த நாவலில் இடைக் கிடை கவிதைகள் புனையப்பட்டிருப்பதனால் மரபுவழித் தன்மையில் இருந்து விடுபடமுடியாத, ஆசிரியரின் பண்பையும் நாவல் இலக்கியத்தின் இலக்கண வரம்பு முறைகளில் இவரின் பிசகலும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாக வுள்ளது.

இவரின் சகோதரரான த.கனகசுந்தரம்பிள்ளை அவர்கள் இவரின் இலக்கிய முயற்சியில் அதிக செல்வாக்கைச் செலுத்தியதனால் அவரின் பாதிப்பு சரவண முத்துப்பிள்ளையிடம் நிறையப் போய்ச் சேர்ந்துவிட்டதனால் நாவலின் பெயரை மாற்றவேண்டுமென்ற கனகசுந்தரம் பிள்ளையின் அபிப்பிராயத்துக்கு அமைய இந்த நாவல் 1919ஆம் ஆண்டில் சுருக்கப் பதிப்பாக வெளியிட்டபோது மோகனாங்கி என்றிருந்த நாவலின் பெயரை 'சொக்கநாதநாயக்கர்' என்று மாற்றிப் பதிப்பித்தார். பள்ளிக்கூட மாணவர்கள் படிப்பதற்காகவே சுருக்கப் பட்டது எனக் கூறப்படுகிறது. மோகனாங்கி 372 பக்கங்கள் கொண்டது.

சென்னையில் கீழைத்தேச சுவடி நிலையத்தில் தலைவராகப் பணிபுரிந்த சரவணமுத்துப்பிள்ளை புராதன சரித்திர ஏடுகளையும் பதிவுகளையும் படித்த அருட்டுணர்வில் இத்தகையதொரு நாவலை அவர் எழுதியிருக்கலாமென்று எண்ணத் தோன்றுகின்றது. இதே வேளை பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்கள் இதுபற்றிக் கூறுகையில் 'ஆங்கில நாவலாசிரியர் சாள்ஸ் கிங்சிலி என்பவர் எழுதிய 'ஹைபாதியா' என்ற நூலைத் தழுவி இந்நாவல் எழுதப் பெற்றுள்ளது என்று குறிப்பிடுகிறார்.

தமிழில் முதல் வரலாற்று நாவல் என்ற வகையில் அவற்றைப் பிரபல்யப் படுத்தியவர்கள் கல்கி அகிலன் சாண்டிலியன் போன்றோரே.

கல்கியின் 'பொன்னியின் செல்வன்', 'சிவகாமியின் சபதம்', வெளிவரு வதற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே திருகோணமலையைச் சேர்ந்த சரவண முத்துப்பிள்ளை வரலாற்று நாவல் ஒன்றை படைத்திருக்கின்றார் என்பது ஆச்சரிய மான விடயமாகும்.

தமிழின் மூத்த நாவலான வேதநாயகம்பிள்ளையவர்களால் எழுதப்பெற்ற 'பிரதாபமுதலியார்சரித்திரம்' போலவே சரித்திரச் சம்பவங்களைச் சுற்றி இது பின்னப்பட்டுள்ளது. அதேவேளை இந்த நாவலாசிரியருக்கு இருந்த சமூக நோக்கும் சீர்திருத்த ஆவலும் காலத்தின் போக்குக்கு அமைய இருந்துள்ளது என்பதனை இந்நாவலில் வரும் விஜயராகவநாயக்கர் தோத்திரமாக அமைந்த கீழ்வரும் கவிதையில் வரும் சீர்திருத்தக் கருத்துக்கள் புலப்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நீதி தவறாத் தருமம்
சாதி குலம் பிறப்பென்றெண்ணித் தடுமாறும்
பேதையேம் எம்பால் இரங்குதியாற் பேரறிவின்
சோதியே நின்னைத் தொழுதேந் தொழுதேமால்'

ஊசோன் பாலந்தை நாவல் கிறிஸ்தவர் ஒருவரால் எழுதப்பெற்ற வீரசா கசக் கதையாக இருக்க, சரவணமுத்துப்பிள்ளையவர்களால் எழுதப்பெற்ற மோகனாங்கி, நாயக்கர் பரம்பரையையும் காதலையும் இயம்பும் நவீனமாக இருக்கின்றது.

சரவணமுத்துப்பிள்ளை பழந்தமிழ் இலக்கியத்தில் கொண்டிருந்த புலமை யாலும், தன் சகோதரன் கனகசுந்தரம்பிள்ளையால் வழிப்படுத்தப்பட்ட போக்கி னாலும் மரபுவழி இலக்கியங்களையும் படைக்கும் ஆற்றல் வாய்ந்தவராகத் திகழ்ந்தார் என்பது அவர் படைத்த பின்வரும் நூல்களினால் அறியக்கிடக் கின்றது: தத்தைவிடுதூது (1892), முத்துக்குமாரசுவாமி இரட்டைமணிமாலை, முத்துக்குமாரசுவாமி ஊஞ்சல், வாகைமாலை, பிரிவாற்றாமை, சரமகவி, காதலாற்றாமை, பச்சையப்பன் ஆகிய நூல்களை இவர் 1892ஆம் ஆண்டளவில் எழுதினாரென்றும் 1895 ஆம்ஆண்டு காலப்பகுதிகளில் இவை பதிப்பிக்கப் பட்டன வென்றும் அறியப்படுகிறது.

## II. 1950, 1960 களில் நாவல்

நாவல் என்னும் புதினம் தமிழில் நல்லதொரு வடிவமாக இந்தியாவிலும்சரி, இலங்கையிலும்சரி வளர்ச்சி அடையத் தொடங்கிய காலம் 1956ஆம் ஆண்டுக் குப்பின் என்றே சொல்ல வேண்டும். இன ரீதியான முறுகல்கள் மொழிரீதியான பற்றுக்கள் வலுக்கொள்ளத் தொடங்கிய இக்காலத்தில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்கள் அடிபூண்ட காரணங்களாயின. இடதுசாரி அரசியல் வேகங்கள் சொந்த கலை கலாச்சாரப் பிடிப்புக்கள் மொழி வெறிகள் எல்லாம் சேர்ந்து நாவல் இலக்கியத்தில் பெரும் வளர்ச்சிக்கு இக்காலத்தில் வித்திட்டது.

இந்தவகையில் திருகோணமலையின் ஆரம்பகால நாவலாசிரியர்களாக விளங்கியவர்கள் வ.அ.இராசரத்தினம், ந.பாலேஸ்வரி ஆகியோர். திருகோண மலையின் மூத்தமுன்னோடியான வ.அ.இராசரத்தினம் அவர்கள் எழுதிய 'கொழுகொம்பு' என்னும் நாவல் வெளிவந்த 1959ஆம் ஆண்டுக்கும் 'மோக னாங்கி' வெளிவந்த 1895ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட சுமார் 64 வருட கால இடைவெளியில் திருகோணமலை யில் எந்த ஒரு நாவலும் எழுதப்பட்ட தாகத் தகவல் பெறமுடியவில்லை. எனவே 1895ஆம் ஆண்டுக்குப் பின் முதல் முதல் வெளிவந்த நாவல் 1959ஆம் ஆண்டு வெளிவந்த கொழுகொம்பு நாவலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வ.அ.இராசரத்தினம்


வ.அ.இராசரத்தினம்

வ.அ.என்னும் இந்த மாமனிதன் மகாவலி கங்கை சங்கமமாகும் கொட்டியாரக் குடாவை அழகுபடுத்தும் மூதூர்க்கிராமத்தில் பிறந்து ஆசிரியனாக தன் வாழ்க்கையைத் தொடங்கிய இவர் நாவல் எனும் வடிவத்தை எழுதத் தொடங்கியது தற்செயல் நிகழ்ச்சியென்று 'இலக்கிய நினைவுகள்' என்னும் நூலில் அவரே இது பற்றி குறிப்பிட்டுள்ளார். திருகோணமலையில் ஆசிரியராக இருந்த காலத்தில் ஈழகேசரி ஆசிரியர் இராஜ அரியரத்தினம் அவர்கள் ஈழகேசரிக்கு நாவல் ஒன்று எழுதும்படி கடிதம் மூலம் கேட்டார். இதுவரை சிறுகதை தான் எழுதிய நான் கொழுகொம்பை எழுதத் தொடங்கினேன். மூதூரில் இருந்து தொடங்கி கதையை எழுத ஆரம்பித்து கதையை நகர்த்தினேன்.

கொழுகொம்பு: 'ஈழகேசரி' என்னும் பத்திரிகையில் தொடர்கதையாக (1955 - 1956) எழுதப்பட்ட இந்நாவல் 1959ஆம் ஆண்டு நூலுருப் பெற்றது.

பண்டாரநாயக்காவின் தேசியவாதக் கொள்கை, தாய்மொழிக்கல்வி கிராமியம் தழுவிய எழுச்சி இவை யெல்லாம் சேர்ந்து, கிராமிய மணங்கமழும் பாத்திரங்களை வார்க்க வேண்டுமென்ற முனைப்பு முளை கொள்ளத் தொடங்கிய காலம் வ.அ.வின் கொழுகொம்பு நாவல் பிறந்த காலம். இதை அவரே தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். 'என் கிராமத்து மாந்தர்கள் கதாபாத்திரமாகவரும் முதல் நாவல் அதுதான் அதுவே அதன் பெருமை'

இளங்கீரனின் நீதியே நீதிகேள், தினகரன், (1959), கனக செந்திநாதனின் விதியின் கதை (1953), வெறும் பானை (1956) ஆகிய தொடர் கதைகள் ஈழகேசரியில் தொடராக வெளிவந்த காலத்தில் இந்நாவலை எழுதியுள்ளமையினால் அக்காலத்துக்கேயுரிய தனிமனித வேண்டுதல்கள் தனிமனித வழிபாடுகள், உறவுகள் கொண்ட கதாபாத்திரங்களைச் சித்தரிப்பதில் வ.அ.வும் அக்கறை காட்டியுள்ளார். இருந்தபோதிலும் கிராமத்து மாந்தர்களையும் மரபுகளையும் தேடும் தன்மையில் இவரின் கதாபாத்திரங்களான நடராஜன், கனகம், பிலோமினா, அம்பலவாணன் ஆகிய பாத்திரங்கள் மூதூர்க் கிராமத்து மாந்தர்களாக உலாவ விட்டிருப்பது சிறப்பம்சம்.

இந்நாவலில் மூதூர், மட்டுநகர், மலையகம், கொழும்பு ஆகிய பிரதேசங்கள் புலமாக்கப்பட்டு அக்காலச் செல்வாக்குக்குட்பட்டு நின்ற கவிதைநடையில் எழுதப்பட்டிருக்கிறது. (அடுக்குமொழிச் செல்வாக்கென்றும் சொல்லலாம்.)

வ.அ.ஐந்து நாவல்களையும் மூன்று குறுநாவல்களையும் எழுதியுள்ளார். கொழுகொம்பு (1956), துறைக்காரன் (1959), கிரௌஞ்சப் பறவைகள் (1975), ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது (1993), மண்ணிற் சமைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் (1996), குறுநாவல்கள், தேய்பிறை (1968), சந்தானாள் புரவி (1973), ஒரு காவியம் நிறைவு பெறுகிறது (1975).

வ.அ.வின் நாவல்கள் பற்றிய கணிப்புக்கள் ஈழத்து ஆய்வாளர்கள் பார்வையில் பெரிதாகப்படவில்லையோ என்னவோ இளங்கீரனின் நீதியே நீகேள், செ.கணேசலிங்கனின் 'சடங்கு', 'நீண்ட பயணம்', டானியலின் 'பஞ்சமர்' போன்ற வற்றுக்குத் தந்த விமர்சன மதிப்பு கொழுகொம்புக்கு, ஆய்வாளர்களால் தரப் படவில்லை. இதற்குரிய காரணங்கள் தெரியவில்லை. பேராசிரியர் க.கைலாசபதியின் நாவல் இலக்கியம், கா.சிவத்தம்பியின் ஈழத்து தமிழ் நாவல் இலக்கியம் போன்றவற்றில் கூட சிறிதளவாயினும்-பிரஸ்தாபிக்கப்படவில்லை யென்றே கூறவேண்டும். (பொதுவாகவே கிழக்கு மாகாணத்தில் திருகோண மலையின் வளர்ச்சியை ஒரு பொருட்டாக மதிக்காத அல்லது கணக்கில் எடுக்காத விமர்சகர்களும் ஆய்வாளர்களும் அதிகம்.)

*கிரௌஞ்சப் பறவை:* வ.அ.வின் சரித்திரப் படைப்பான கிரௌஞ்சப் பறவை (1975), கல்கி, அரு.இராமநாதன், அகிலன், ஜெகசிற்பியன், சாண்டில்யன், விக்ரமன் போன்ற தென்னாட்டு சரித்திரப் பிரம்மாக்களின் நாவல்களைப் படித்த அருட்டுணர்விலோ அல்லது சரித்திர தேடலினாலோ எழுதியிருக்கலாம். வ.அ. அவர்கள் இந்நாவல் பற்றிக் குறிப்பிடுகையில் "தேவநம்பியதீசன் காலந் தொடக்கம் அசேலன் காலம் வரையும் நாட்டில் பல விகாரை களும், தாது கோபுரங்களும் கட்டப்பட்டன. அசேலன் காலத்தில் பஞ்சம் ஏற்பட்டது. சேனன், கூந்திகன் என்ற இரண்டு குதிரை வியாபாரிகள் அசேலனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினர். மகாவம்சம் தரும் இந்த உண்மைகளின் இடைவெளிகளைக் கற்பனை கொண்டு நிரப்பியதுதான் கிரௌஞ்சப் பறவைகள்."

வ.அ. இந்நாவலை எழுதிய காலம் ஈழத்து நாவல் இலக்கியத்தில் ஒரு செழுமையும் முற்போக்கும் முனைப்பும் பெற்றகாலமாகும். எஸ்.பொ, கே.டானியல், செ.கணேசலிங்கன், க.அருள்சுப்பிரமணியம், சுதந்திர ராஜா, செங்கையாழியான், அ.பாலமனோகரன் போன்ற ஜாம்பவான்கள் வர்க்கப் போராட்டத்தையும் சமூக அழிப்புக்களையும் நாவல்களாக்கி ஈழத்து நாவல் இலக்கியத்தை ஒரு உலகப் பார்வையில் இழுத்துச் சென்ற காலத்தே வ.அ. சரித்திர நாவலை படைத்தது ஆச்சரியமான விஷயமாக இருக்கின்றது.

'மகாவம்ஷம்', 'கோணேஸ்வரம்', ராகுல சங்கிருத்தியானின் 'வல்காவில் இருந்து கங்கைவரை' ஆகிய வரலாற்று ஆதாரங்கள் இந் நாவலை எழுதுவதற்கு இவருக்கு பெரிதாக உதவவில்லையென்றே சொல்ல வேண்டும்.

ஜெயகாந்தன் சிறுகதை, நாவல் என்ற இருதுறைகளில் ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்ததைப்போல இவ்விருதுறைகளிலும் தானும் திகழவேண்டு மென்ற வ.அ.வின் கனவு எந்தளவுக்கு வெற்றியளித்துள்ளது என்பதனை விமர்சகர்களே தீர்மானிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது:* 'ஒருவெண்மணற்கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது' (1993) என்ற நாவல் அவரின் 68வது வயதில் எழுதப்பட்ட 4வது நாவலாகும். ஆலங்கேணியென்னும் அழகான கிராமத்தை தனது கதைப்புலமாக்கி, தாமோதரம் என்னும் பள்ளி மாணவன், தனது புலமைப் பரிசில் பாட சாலைக்காக யாழ், நெல்லியடியிலுள்ள பிரபல்யமான பாட சாலைக்குச் சென்று, உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டி ருக்கும் காலத்தில் விடுமுறையில் வெண்மணற் கிராமமான தனது சொந்தக் கிராமத்திற்கு வந்து, தனது சொந்த மச்சாள் மீதுள்ள காதல் கனவுகளை எண்ணி ஏங்குவதை இந்த நாவலில் பின்னியிருக்கிறார் நாவலாசிரியர்.'

இக்கிராமத்தின் மாந்தர்களான கோணமலை, சௌந்தரம் தெய்வானை, நாகேந்திரம், தவராசா போன்ற பாத்திரப் பின்னல்கள் கதைக்கு மெருகூட்டுவ துடன் எருமைத்தயிர், கரச்சைவெளிகள், கண்டறற்காடு, உப்புவெளிகள் ஆகியன இவரின் வருணனையில் அட்டகாசமாக சொல்லப்பட்டிருக்கிறது.

கதையின் காலமும், கதை சொல்லப்பட்ட காலத்துக்கும் இடையே 33 வருட இடைவெளி காணப்படுகின்றது. மாக்ஸிம்கோர்க்கியின் 'தாயை'ப் போல, இந்திராபார்த்தசாரதியின் 'குருதிப்புனல்' போல, தகழியின் 'செம்மீனை'ப் போல படைக்க வேண்டுமென்ற ஆவலாலோ என்னவோ வ.அ. இந்த நாவலில் ஆலங்கேணிக் கிராமத்தில் வாழுகின்ற மனிதர்களின் தனிமனித உணர்வுகளை, உறவுகளை வடிப்பதில் காட்டிய நாட்டம் நாவலுக்கு பொருத்தமாக இல்லா விட்டாலும் கூட அந்தக் கிராமத்தின் அடிப்படைப் பிரச்சனைகள், போராட் டங்கள், வாழ்க்கை முறைகள் ஆகியவற்றை அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சொல்லியிருப்பது நாவலுக்கு அழகு தருகிறது.

பொதுவாகவே தனது நாவல் முழுவதிலுமே தனிமனித நெருடல்களுக்கு முக்கியம் கொடுக்கும் வ.அ. 'மண்ணிற் சமைந்த மனிதர்கள்' நாவலில் வரும் ஆசீர்வாதம், ஏனைய கதாபாத்திரங்களை தனிமனித வேரோடிகளாகவே பின்னி யிருக்கிறார்.

இந்நாவலுக்கு 1997ஆம் ஆண்டு சாஹித்திய மண்டலம் பரிசு வழங்கி கௌரவித்துள்ளது.

சுயபுராணமாக கதாபாத்திரங்களை உருவாக்கும் சில நாவலாசிரியர்கள் ஈழத்திலும் சரி, இந்தியாவிலும் சரி தமது வரலாறுகளை விளம்புவது இயல்பு. இந்த வகையில் வ.அ.வும் அதற்கு விதிவிலக்கல்லாமல் போய்விட்டார் என்றே சொல்ல வேண்டும்.

நாவல் என்னும் மேலைத்தேய வடிவத்தின் உருவ உள்ளடக்க பரிமாணங்களை நன்றாக விளங்கி வைத்திருந்த வ.அ., நாவல் வடிவத்தை தனக்குரிய வெற்றி வடிவமாக்கவில்லையென்பது ஏற்கப்படுகிறதோ என்னவோ மூதூர் புலத்தின் மாந்தர்களை, மண் குணத்தை தனது நாவல்களில் சொல்ல ஆசைப்பட்டிருப்பது போற்றக்கூடிய விடயமாக இருந்த போதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தேய்பிறை', 'சந்தானாள்புரவி', 'ஒரு காவியம் நிறைவு பெறுகிறது' ஆகிய குறுநாவல்களில் தன்னையும் தனது சொந்த அனுபவங்களையும் சொல்ல நினைக்கும் ஆசிரியரின் உணர்வுகள் ஒரு நல்ல வடிவத்தை பலவீனப்படுத்தி விட்டதோ என்று எண்ண வைக்கிறது. இருந்தபோதிலும் சுய உறவுகளின் இழப்புக்கள், நெருடல்கள் கதைகளில் சொல்லப்பட்டு, கதை வளர்த்துச் செல்லப் படுவதனால் நாவலுக்குரிய வடிவங்களில் அவை நலிவைத் தந்துவிடுகின்றதோ என்னவோ.

'நீ அதிபராக பணியாற்றும் புனித அந்தோனியார் வித்தியாலயத்தை தரமுயர்த்த கௌரவ கல்வி அமைச்சர் வரவிருந்தார்' ஒரு காவியம் நிறைவு பெறுகிறது.

மூதூர் புனித அந்தோனியார் வித்தியாலய அதிபரும் எழுத்தாளர் வ. அ.வின் அன்பு மனைவியுமான லில்லி.இ. காலமானார்.

அந்த செய்தியைக் கேட்டதும் 'நான் துரைரத்தினத்தின் கைகளைப் பிடித்துக் கொண்டே கதறுகிறேன்' போன்ற அவரின் வாழ்க்கைச் செய்திகள், நாவல்களில் இடைக்கிடை வருவது நாவலுக்குரிய தனித்துவத்தையும், பலத்தையும் குறைத்து விடுகின்றதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. இருந்தபோதும் உயிரோட்ட மான செய்திகளையும், மாந்தர்களையும், அனுபவங்களையும் தனது எல்லா நாவல்களிலும் வ.அ. படைத்திருப்பது அவரின் எழுத்துப்பலத்தை அடித்துச் சொல்வதாக உள்ளது.

## ந.பாலேஸ்வரி


ந.பாலேஸ்வரி

திருகோணமலை மாவட்டத்தின் இன்னுமொரு நாவல் நாயகி, ந.பாலேஸ்வரி என்னும் பெண்ணெழுத்தாளர்.

பெண்கள் கலை இலக்கியத்துறையில் அருந்தலாக இருந்த ஒரு காலகட்டத்தில் பெண்ணியம், அதன் சுதந்திரம், உரிமைகள் பற்றி அதிகம் எழுதிய பெண் எழுத்தாளர் ந.பாலேஸ்வரி. ஈழத்தின் பெண்ணெழுத் தாளர்களின் மூத்த எழுத்தாளியாக மதிக்கப்படுபவரும் இவரே.

திருகோணமலையில் பாரம்பரிய வளம்மிக்க ஒரு குடும்பத்தில் பிறந்த இவர் தனது சின்னவயதில் இருந்தே எழுத்துலகுக்கு காலடி எடுத்துவைத்து நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும் பல நாவல்களையும் எழுதியுள்ளார். திருகோணமலை ஸ்ரீசண்முக வித்தியாலயத்தில் படிக்கும்போதே எழுதத் தொடங்கிய பாலேஸ்வரி தி.த.கனக சுந்தரம்பிள்ளை, சரவணமுத்துப்பிள்ளை பரம்பரையில் வந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சுடர்விளக்கு' (1966) என்னும் நாவலை முதல் முதலில் வீரகேசரி யில் எழுதிய ந.பாலேஸ்வரி பன்னிரண்டு நாவல்களை எழுதி சாதனை புரிந் துள்ளார்.

சுடர்விளக்கு (1966), பூஜைக்கு வந்தமலர் (1972), உறவுக்கப்பால் (1975), கோவும் கோயிலும் (1980), உள்ளக்கோயில் (1983), பிராயச்சித்தம் (1984), உள்ளத்தினுள்ளே (1990), தத்தை விடுதூது (1992), மாது என்னை மன்னித்துவிடு (1993), எங்கே நீயோ நானும் அங்கே (1993), அகிலா உனக்காக (2002), நினைவு நீங்காதது (2003) ஆகியவை இவர் எழுதிய நாவல்களாகும்.

இவற்றில் அநேகமானவை பத்திரிகையில் தொடர் கதைகளாக வந்துள்ள மையினால் தொடர் வாசனையின்பின் இவை நூலுருப் பெற்றவையாகக் காணப்படுகின்றன.

தமிழக பெண் எழுத்தாளர்களான லக்சுமி, சிவசங்கரி போன்று, பெருந் தொகையான நாவல்களை எழுதிய ஈழத்துப் பெண்ணெழுத்தாளராக இவர் மதிக்கப்படுகின்றார்.

இவருடைய நாவல்கள் பெண்களின் மென்மையான குண உணர்வு களையும், உறவு விரிசல்களையும், போராட்டங்களையும், சமூக அங்கலாய்ப் புக்களையும் சித்தரிப்பனவாக காணப்படுகிறது.

இந்நாவல்கள் ஒவ்வொன்றும் ஒரு பொதுவான பண்புகளைக் கொண்டு ஒத்துக்காணப்படுபவை என்பதனை அவற்றின் பின்வரும் பொதுத் தன்மை களிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்:

அ) பாத்திரவார்ப்புக்களில் குணவேறுபாடுகள் ஒரே பண்பு கொண்டவை.

ஆ) மனவெளிப்பட்ட பெண்மைகளின் அபிலாசைகளைச் சித்தரிப்பவை.

இ) பிரதேச வாசனை, சமூக ஊடுருவல்கள் எட்டிப் பார்ப்பவை.

ஈ) உரையாடல்களில் அனுபவச்செறிவு, ஆழம், மெல்லியதாக உணரப் படுபவை.

உ) நாவலின் நுட்பங்கள், உத்திகள் எளிமையாக நிற்பவை.

ஊ) வாசகர் கனவுகள் அதிகமாக நோக்கப்படுபவை.

பத்திரிகைகளின் வாசக மனங்களை எதிர்பார்த்து எழுதப்பட்டமையினால் மேற்படி பொதுத் தன்மைகளை எல்லா நாவல்களும் கொண்டிருக்கிறது. ஏனெனில் இவரின் நாவல்களில் வரும் பாத்திர உடன்பாடுகள் அவற்றை நிரூபிப்பன வாகவுள்ளன.

இவருடைய கதாபாத்திரங்கள் எல்லாம் ஒரே விதையில் இருந்து வளர்ந்து வந்த விருட்சங்கள் போல் வந்து போகிறார்கள். இவர்களுக்குள்ளே ஒரு நேர்கோட்டு உறவு முடிந்துவிடப்பட்டிருப்பதனால் அனுபவமுறுக்கேறிய பல திசைகளில் இருந்து புறப்பட்ட கதாபாத்திரங்களாகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்டேகர், டாக்டர்.மு.வரதராஜன் போன்றோரின் நாவல்களில் வரும் பிரசங்கப்பாடு, தத்துவ விளக்கங்கள் இவர் கதாபாத்திரங்களில் சொல்லப் படுகிறது.

'உள்ளக்கோயிலி'ல் வரும் - அருணா ரஞ்சன் 'உள்ளத்தினுள்ளே' வரும் நாவலில் - காஞ்சனா 'மாது என்னை மன்னித்து விடு'வில் வரும் ....சந்திர சேகரன், மாதுமை, பார்த்தீபன் 'தத்தைவிடு தூது'வில் வரும்..... சரவணன், சிவகாமி ஆகிய கதாபாத்திரங்கள் கிட்டத்தட்ட ஒரே வாழ்க்கைக் கோட்டிலிருந்து புறப்பட்டுச் சந்திக்கின்ற மாந்தர்கள் என்பதனை,

'உள்ளக்கோயிலி'ல் வரும் அருணா என்னும் ஆசிரியை இளம் விதவையாக யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு வந்து பிரபல்ய கல்லூரியில் கடமையாற்றி ரஞ்சன் என்பவனை மணம் முடிக்கும் சீர்திருத்தவாதம்,

'உள்ளத்தினுள்ளே' நாவலில் காஞ்சனா என்னும் ஆசிரியை குமார் என் பவரைக் காதலித்து சீதனக் கொடுமையால் காதலை இழந்து குமாரை முடித்த மாதவி 90ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் காரணமாக விதவையாகிவிடுவதும், காஞ்சனா தன்னைச் சின்ன வயதிலிருந்து ஆசைப்பட்ட ஊனப்பிறவி விசுவைக் காத்திருப்பது

'மாது என்னை மன்னித்து விடு' நாவலில் மாதுமை சந்திரசேகரன் காதலும் முதலிரவில் உடைந்து போன உறவு - சந்திரசேகரன் தனது தாயார் மஞ்சுளா மாதிரி சமூக சேவை செய்பவளாகக் காட்டிக் கொண்டு தனது தாய் ஊர்சுற்றித் திரிவதனால் தானும் தனது தந்தையும் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் தாயார் போல் தனது மனைவியும் ஆகி விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையில் முதலிரவில் கண்டிப்புடன் நடந்து கொள்வது.

பார்த்தீபன் என்பவன் மீது மாதுமை கொண்ட ஆரம்ப காதல் தீய்ந்து போன நிலையில் சந்திரசேகரனைத் திருமணம் செய்வதும் மீண்டும் பார்த்திபனைச் சந்திக்கும் விதி நிர்ணயத்தால் ஏற்படும் குழப்பங்கள் கொண்டதாகவும் பின்னப் பட்டிருக்கின்றது.

'தத்தைவிடுதூது' என்னும் நாவல் தி.த.சரவணமுத்துப் பிள்ளை என்பார் எழுதிய தத்தை விடுதூது என்ற பாடற் தொகுதியின் செய்யுளை உள்ளடக்கிய புனைக்கதை என ஆசிரியரே குறிப்பிட்டுள்ளார்.

நாவல் ஆசிரியரின் கருத்துப்படி தி.த.சரவணமுத்துப்பிள்ளை திருகோண மலையைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் காதலித்து தோல்வியுற்றதால் மனம் உடைந்து போன நிலையில் தத்தையை(கிளி) தூது விடுவது போல் இப்பாடற் தொகுதியை இயற்றியுள்ளார். 'இவரது நெருங்கிய உறவினனான எனக்கு இந்தப் பாடல்களின் வரலாறு தெரிந்தபடியால் இக்கவிதைகளை ஆதாரமாக வைத்து ஒரு தொடர்கதை போல் இடையே அவரது பாடல்களை அமைத்து இந்நாவலை எழுதியுள்ளேன்' என்று குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை சொல்லும் உத்தி நாவலின் நுட்பங்கள் குறைவாக இருக்கும் இந்த நாவலில் ஒரு காவியத்தின் பண்பு அல்லது 1950ஆம் ஆண்டுக்கு முன் நாவல் எழுதிய பெருமக்கள் நாவலின் இடையிடையே பாடல்களைக் கையாண்டு எழுதியதைப் போல ஆசிரியர் இந்நாவலிலும் பாடல்களைக் கையாண்டு நாவலை எழுதியிருப்பதைக் காணக்கூடியதாயுள்ளது.

இவரது பன்னிரண்டு நாவல்களிலும் பொதுவாக ஒரு பண்பு விரித்துச் சொல்லப்படுகிறது. தற்போது பேசப்படும் பெண்ணியம் பற்றி இந்தியப் பெண் எழுத்தாளர் சொல்லுவதற்கு முன்பே ந.பாலேஸ்வரி அதிகமாகச் சொல்லி யிருப்பது வரலாற்றில் பதியப்பட வேண்டிய ஒரு விஷயம்.

அத்துடன் ஈழத்து பெண் எழுத்தாளர்களில் அதிகமான நாவல்களை எழுதிய பெருமையையும் ந.பாலேஸ்வரி பெறுகின்றார், ஆனால் ஈழத்து நாவல் இலக்கிய ஆய்வாளர்களான சில்லையூர் செல்வராஜன் (ஈழத்து தமிழ்நாவல் இலக்கிய வளர்ச்சி), நா.சுப்பிரமணிய ஐயர் (ஈழத்து தமிழ் நாவல் இலக்கியம்), பேராசிரியர் கா.சிவத்தம்பி (நாவலும் வாழ்க்கையும்), பேராசிரியர் எஸ்.மௌனகுரு (இரு பதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியம்), பேராசிரியர் க.கைலாசபதி (தமிழ் நாவல் இலக்கியம்) போன்றோர் மேற்படி நாவலாசிரியரின் நாவல்களுக்கு அவதானிப்புத் தரவில்லை என்பது ஒரு கேள்விக் குறியாகவே இருக் கின்றது.

## III. 1970 களில்

### க.அருள் சுப்பிரமணியம்


க.அருள் சுப்பிரமணியம்

க.அருள்சுப்பிரமணியம் எழுதுவினைஞராக தன்னை இணைத்துக் கொண்ட இவர் அன்புமணி என்னும் கிழக் கிலங்கை கோமானின் தொடர்பும் தொடர்ச்சியான ஊக்கத்தினாலும் இலக்கியத்துறைக்கு ஈர்க்கப்பட்டவர். க.அ.அவர்கள் 'தியாகங்கள் பாரமா?' என்ற சிறு கதையின் மூலம் இலக்கிய உலகுக்கு காலடி எடுத்து வைத்தார். 'சகோதரியின் வாழ்கையில் சூழ்ந்த துன் பங்களை துடைப்பதற்கு உறுதி பூண்ட ஒரு இளைஞனின் மன ஓட்டங்களை மையமாக வைத்து எழுதப்பட்ட கதை என் இளமைக் கால சொந்தக்கதை' என அவரே ஓர் இடத்தில் சொல்லி யுள்ளார்.[1]

1973ஆம் ஆண்டு இவரது முதலாவது நாவலான 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது' வெளிவந்தது சமூகத்தில் புரையோடிப் போன பாரிய பிரச் சினைகளை அதன் நீள அகல ஆழங்களை அப்படியே வெளிக் கொணர்வதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைகள் போதாதவை என்று நான் கருதிய போது நாவல் உருவாகியது என்று கூறும் இவர் மேற்படி நாவலை எழுதி 1973ஆம் ஆண்டின் நாவலுக் குரிய சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றார். இனப்பிரச்சினை உக்கிரமடைந்த ஓர் காலப் பகுதியில் இந்நாவல் அதனை மையமாக வைத்து தேசிய ஒருமையை வலியுறுத்தியிருந்தது.

க. அருள்சுப்பிரமணியம் அவர்கள் பின்வரும் ஐந்து நாவல்களை எழுதி யுள்ளார்: 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது' (1973), 'நான் கெடமாட்டேன்' (வீரகேசரிப் பிரசுரம், 1975), 'அக்கரைகள் பச்சையில்லை' (வீரகேசரிப் பிரசுரம், 1977), 'சூரசம்ஹாரம்' (1982), 'நான் நீதியின்பக்கம்' (1993). இவற்றில் மூன்று நாவல்களை சற்று விரிவாகப் பார்ப்போம்.

*அவர்களுக்கு வயது வந்துவிட்டது:* முதலாவது நாவலான 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது' (1973) கிழக் கிலங்கையின் புகழ் பூத்த நகரமான திருகோணமலை மண்ணைக் களமாகக் கொண்டு இங்கு வாழும் மாந்தர்களைப் பாத்திரங்களாகப் படைத்து 70ஆம் ஆண்டுக்குப் பின் நிறுவப்பட்ட தேசிய அரசாங்கத்தின் கனவுகளான தேசிய ஒருமைப்பாட்டை முன்மொழியும் கதையாக விவரிக்கப்பட்டு தேசிய இனங்களின் திருமண உறவுகள் மூலம் ஒருமைப்பாட்டை உண்டுபண்ண முடியும் என்ற கனவுகளைக் கொண்ட கதாபாத்திரங்கள் கதைமாந்தர்களாக வருவது குறிப்பிடக் கூடியது.

அரியரத்தினம் - மொனிக்கா ஆகிய இரு இனப்பாத்திரங்களின் உறவு முடிப்புக்கள் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முனையும் அக்கால மிதவாதச் சிந்தனையின் வெளிப்பாடாக அரியம் உத்தியோகம் கிடைத்து கொழும்புக்குச் செல்கின்றான். அங்கு குடியிருக்கும் வீட்டுக்கார அம்மாவின் மகளான மொனிக்காவைக் காதலித்து ரிஜிஸ்டர் திருமணம் செய்த நாலு மாதத் துக்குப் பிறகு தனது சொந்த ஊரான திருகோணமலைக்கு அழைத்து வந்து தாய் தந்தையருக்கு தெரியப்படுத்துகின்றான். அதனால் ஏற்படுகின்ற சராசரிப் பிரளயங்கள்,

1956ஆம் ஆண்டு தொட்டு இந்த நாட்டில் கூர்மைப்பட்டுக் கிடந்த இனவாதக் குரோதங்கள் பாரம்பரியமாகவே வளர்ந்து வந்த சராசரிக் குடும்ப பிணக்குகள், மரபுகளை மீறிய பிரச்சினைகள், போராட்டங்கள் அத்தனையையும் இந்த நாவலில் வரும் அரியமும் மொனிக்காவும் சந்திக்கின்றார்கள். எல்லாவற்றையும் தாண்டி தடித்த இனவாத உணர்வுகள் வெற்றிகொள்ளப்பட்டு மொனிக்காவையும் அரியத்தையும் தந்தை முத்தர் 'கவனமாகப் போயிற்று வாங்கோ பிள்ளைகள்' என வழியனுப்பி வைக்கும் வரையுள்ள பின்னல்கள், இழைப்புக்கள், கோர்ப்புக்கள் நாவலை வெற்றியடைய வைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாவலினூடாக திருகோணமலையென்னும் தமிழர்வாழ் பிரதேசம், கோணேசர் மரபுகள், அடியாழமாகவும் சுட்டிக் காட்டப்பட்டிருப்பது இந்த நாவலுக்குரிய வெற்றியென்று கொள்ளலாம்.

*நான் நீதியின் மறுபக்கம்:* அருளின் இன்னொரு நாவல் 'நான் நீதியின் பக்கம்' (1993). இந்நாவல் அன்னியமான மண்ணில் நடைபெறும் பகைப்புலம் இதன் மாந்தர்களை உலவ விட்டிருப்பது நாவலாசிரியரின் அனுபவமாகவே இருக்கிறது.

இந்நாவலில் வரும் கதாபாத்திரங்களான சரவணன் (விமான ஓட்டி), மாறன், குமரன், கார்த்திக், சாமியார், நிலா போன்ற கதாபாத்திரங்களைப் படைத்து 'தமிழ்ப் புனைகதை வாசகர்களுக்கு ஒரு புதிய களத்தை அதன் ஜீவிதத் துடிப்போடு முன்வைக்க முயன்று இருக்கின்றேன்', என்று கதாசிரியர் தனது முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

வில்லீஸ் என்ற (பல்தேசிய) விமானக்கம்பனியின் முதலாளிக்கும் அதில் கடமையாற்றும் சில விமான ஓட்டிகளுக்கும் ஏற்பட்ட பிணக்குக் காரணமாக வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. இப்போராட்டத்தை தோல்வி அடையச் செய்யும் உத்தியாக மேற்படி கம்பனியின் விமான ஓட்டிகள் சிலர் வேலைநீக்கம் செய்யப்படுகிறார்கள். ஆத்திரம் அடைந்த ஓட்டிகள் கடத்தல் நாடகம் ஒன்றை நடத்துகிறார்கள் -அதன் விளைவு. நீதியோடு சம்மந்தப்பட்ட போராட்டமாக இக்கதையை முடித்திருக்கிறார் கதாசிரியர்.

இந்நாவலில் வரும் குமரனின் தலைமைத்துவம், மாறனின் தெளிவற்ற திட்டம், கார்த்திக்கின் ஆழம், சாமியார் மூலம் சொல்லப்படும் நீதி, நிலா அதிகார வர்க்கத்துக்குரிய குணங்குறியாகக் காட்டப்படும் போக்கு ஆகியன கதாபாத்திரக் குறியீடுகளாக்கப்பட்டுள்ளன.

காதல், சாகசமான கடத்தல் நாடகம் இவையெல்லாம் அந்நியத்தனமான கதைப் போக்கை உள்ளீடாகக் கொண்டவையாகவே காணப்படுகிறது.

குடும்பப் பின்னணி, போராட்டக்களம், வாழ்க்கை முற்றம் இவையெல்லாம் எம்முன்னே விரிந்து கிடக்கும் போது அவர்களுக்கு வயது வந்து விட்டதைத் தந்த அருளா? நீதியின் பக்கம் போனார் என்று கேட்கத் தோன்றுமளவுக்கு சஸ் பென்ஸ்சுக்குள் நுழைந்துவிட்டது எம்மனதை இடித்தாலும் அருளின் ஆற்றலும் தேடலும் இந்நாவலில் நிறைந்து கிடக்கிறது.

*சூரசம்ஹாரம்:* மர்மத் தொடர்கதை 'சூரசம்ஹாரம்' (1979) தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் பத்திரிகையில் 23 வாரங்கள் தொடர்கதையாக வந்த இந்த புனைகதைக்கு முன் இவரின் மூன்றாவது நாவலாக 'அக்கரைகள் பச்சையில்லை' (1977), வீரகேசரிப் பிரசுரமாக வெளியிடப்பட்டது. 1981ஆம் ஆண்டு ஆனந்த விகடன் பொன்விழாப் போட்டிக்கு எழுத்துப் பிரதியாக 'தூரத்து ஓவியங்கள்' என்ற பெயரோடு அனுப்பிவைக்கப்பட்ட போது தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலுள்ள 250 நாவல்களோடு போட்டி போட்டு சிறந்த நாவலாகத் தெரிவு செய்யப்பட்டு ரூபா.20,000 பரிசையும் தட்டிக் கொண்டது. ஆனால் ஏற்கனவே இந்நாவல் 'அக்கரைகள் பச்சையில்லை' என்ற பெயருடன் இலங்கையில் புத்தகமாகப் பிரசுரிக்கப்பட்ட காரணத்தால் பரிசினை இழந்த நிலையில்தான் மேற்படி சூரசம்ஹார நாவலை (1982) அருள் ஆனந்த விகடனில் மர்மத் தொடர்கதையாக 23 வாரங்கள் எழுதினார்.

பொதுவாகவே சமூகத்தேடலும் வாழ்க்கை யதார்த்தங்களும் நிறைவாக இருக்க வேண்டும் என்று விரும்புகின்ற அருள் இரு சமூக நாவல்களையும் மூன்று மர்ம, சாகச நாவல்களையும் திருகோணமலை இலக்கிய வரலாற்றுக்குத் தந்துள்ளார்.

## வி.தில்லைநாதன்

திருகோணமலையில் வாழ்ந்துவரும் இன்னுமொரு நாவல் ஆசிரியர் வி.தில்லைநாதன். இவரின் நாவலான 'இதயத் தந்திகள் மீட்டப்படுகின்றன' (1978) என்ற நாவல் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்துள்ளது.

ஆங்கில ஆசானாகத் தனது வாழ்க்கையை நடத்தி வரும் திரு. தில்லைநாதன் 1966ஆம் ஆண்டு 'சுதந்திரன்' பத்திரிகையில் எழுதிய 'அம்மாவுக்கு என்ன வாக்கு' என்ற சிறுகதையின் மூலம் எழுத்து உலகில் பிரவேசித்தார். இரு குறுநாவல்களையும், ஒரு நாவலையும், பல சிறுகதைகளையும் படைத்துள்ளார். ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் ஆழ்ந்த புலமையுள்ள இவர் சிந்தாமணி பத்திரிகையில் 'அவளுக்கொரு கணவன் தேவை' (1983), மல்லிகையில் 'வெற்றுக்குளத்தில் வாடும் தாமரை' (1980) என்ற இரு குறுநாவல்களோடு மேற்படி நாவலையும் எழுதியுள்ளார்.

*இதயத் தந்திகள் மீட்டப்படுகின்றன:* இன் நாவலில் வரும் அதிபர் கமலநாதன், ஆசிரியர்களான அமுதா கண்மணி, ராகவன் முக்கிய நாடிகளாக விளங்குகின்றார்கள்.

தன்னை ஒரு சிறந்த அதிபராகப் பாவனை பண்ணி, சொந்த உயர்ச்சிக்கும், வசதிக்கும் ஒரு பாடசாலையைப் பயன்படுத்தும் அதிகார புருஷனாக கமலநாதன் சித்தரித்துக் காட்டப்படுகிறார். கண்மணி போன்ற அரை நூற்றாண்டு வாழ்வைத் தொலைத்துவிட்டு, போவோர் வருவோரை தனக்கு எதிரிகளாக்கி தனது சுய நலத்துக்காக இன்னொருவரை அண்டி பிறரை அண்டிவிட்டு தனது தேவைகளை நிறைவுசெய்து கொள்ளும் கதாபாத்திரங்களாகவும், ராகவன் போன்ற குடும்பச் சுமைகளினால் ஆசைகளைத் தாண்ட முடியாமலும், ஞாயத்தன்மைக்காக உணர்ச்சிவசப்படும் ஆசிரியர்களையும் கொண்ட ஒரு பாடசாலையையும் ஆசிரிய குழாத்தையும் தனது கதைக்களமாக்கி நாவலை நடத்திச் சென்றுள்ளார் தில்லைநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாவலின் இறுதிப் பகுதி துப்பறியும் தன்மை 'கிறைம்' கதையாக இதைக்காட்டினாலும், நாவல் ஓட்டத்தில் விறுவிறுப்பையும் வேகத்தையும் சொல்லும் நாவலாகக் காணப்படுகிறது.

தான் எடுத்துக் கொண்ட பாடசாலைக் களத்தை அழகாகச் சொல்லி யிருக்கலாம். ஆனால் அதில் நலிவு காணப்படுவதனால் நாவலுக்குரிய உயிர்த் துடிப்பு குறைந்துவிடுகிறது. இருந்தபோதிலும் களத்தில் நின்று கதைசொல்லும் கைங்கரியம் தில்லைநாதனிடம் நிறைய இருக்கின்றது. எதிர்காலத்தில் எத் தனையோ நாவல்களை ஆக்கியிருக்க வேண்டியவர் நீண்ட காலமாகவே எழுத்துலகை விட்டு ஒதுங்கிக் கொண்டிருப்பது திருகோணமலை இலக்கி யத்திற்கு ஓர் நட்டம் என்றே சொல்ல வேண்டும்.

### எழிலோன்

அன்வர்டீன் என்ற இயற்பெயர் கொண்ட எழிலோன் திருகோணமலை எழுத் தாளர்கள் பட்டியலில் இஸ்லாமிய சமூக நாவல்களையும், தமிழ் பேசும் மீனவக் குடும்பங்களின் பொருளாதார முரண்பாடுகளையும், உறவுகளையும், விரி சல்களையும் பல்வேறு தொடர்கதைகளாகப் படைத்த ஓர் சிறந்த நாவல் ஆசிரியர். ஆய்வாளர்.

திருகோணமலை இந்துக்கல்லூரியில் கல்விகற்று வித்தியலங்காரப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற அன்வர்டீன் அதிபராக கடமையாற்றியவர். எழிலோன் என்னும் புனைபெயரில் பின்வரும் தொடர்கதைகளையும், சிறுகதைகளையும் எழுதியுள்ளார்: 'சமுதாயப்பூக்கள்' (தினகரன் வாரமஞ்சரி, 1980), 'ஆரம்பமே ஒரு அஸ்தமனம்' (தினகரன் வாரமஞ்சரி, 1986), 'மன்னவனே மன்னவனே' (வீரகேசரி, 1986), 'நெருப்பில் நீந்தும் நிலாக்கள்' (1988), 'பாசத்தின் பிணைப்பு' (குறுநாவல்), 'மஞ்சம் தொடுவாய்' (வீரகேசரி, 1988), 'எழுதப்படாத கவிதைகள்' (தினக்குரல்).

திருகோணமலையிலுள்ள முஸ்லீம் குடிமக்கள் நெருக்கமாக வாழும் சோனக வாடி வட்டாரத்தில் வாழும் மீனவக் கூட்டுக்குடும்பங்களின் அன்றாட பிரச்ச னைகள், வாழ்க்கை நடைமுறைகள், சடங்கு சம்பிரதாய முறைகளை அன்வர்டீன் தனது 'சமுதாயப்பூக்கள்' என்னும் தொடர் கதையில் மிக அழகாகவும் அழுத்த மாகவும் சொல்லிப் படைத்திருக்கின்றார். இதுபோலவே இவரால் எழுதப்பட்ட 'ஆரம்பமே ஒரு அஸ்தமனம்' தொடர்கதையில் களனிப் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி மாணவனாக இருந்த காலத்தில் பல்கலைக்கழகத்தின் வாழ்க்கைச் சுவடுகள் அனுபவங்களைக் கனவுகள் கரைவுகள், காதல் மயக்கங்கள் ஆகிய வற்றை சொல்லி வைத்திருப்பது அவரின் அனுபவத்தின் ஊன்று கோல் என்று சொல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மன்னவனே மன்னவனே' என்னும் தொடர்கதையில் திருகோணமலைக் கல்வித் திணைக்களத்தைக் களமாகக் கொண்டு கோணேசர் கல்வெட்டு, அதன் புகழ் கூறப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும். இதைப் போலவே சமகாலப் பிரச் சனையை வைத்து 1988ஆம் ஆண்டு வீரகேசரியில் 28 அத்தியாயங்கள் கொண்ட 'மஞ்சம் தொடுவாய்' என்ற சிறுகதையை ஆக்கித் தந்துள்ளார். 'எழுதப்படாத கவிதைகள்' என்னும் தொடர்கதையை தினக்குரல் பத்திரிகையில் இரு பாகமாக எழுதியுள்ளார்.

பொதுவாகவே சமூகப்புரள்வுகளையும், வெளிநாட்டு மோகத்தையும், கலாசாரச் சீரழிவுகளையும் தனது கதைகளில் கருத்தோட்டங்களாக எடுத்துச் சொல்லியிருக்கும் எழிலோன் பின்னொரு சந்தர்ப்பத்தில் தினகரன் பத்திரிகையில் மீனவர் பிரச்சினையை மையமாக வைத்து 'கண்ணீரில் வளர்த்து வந்தோம்' என்னும் தொடர்கதையையும் ஆக்கித் தந்துள்ளார்.

**தா.பி.சுப்பிரமணியம்**

புனிதவளனார் வித்தியாலயத்தின் அதிபராக இருந்து ஓய்வுபெற்ற இவர் சுமார் 40 வருடங்களுக்கு மேலாக எழுதி வருகிறார். வானொலி நாடக ஆக்கம், ஓவியக் கலை, கவிபுனைதல் ஆகியவற்றிலும் அதிக ஈடுபாடு காட்டி வருபவர். 'இதயங்கள் அழுகின்றன' என்ற நாவல் வீரகேசரிப் பிரசுரமாக (1977) வெளிவந்துள்ளது.

திருகோணமலை களத்தைக் கொண்டு எழுந்த மிகக் குறைவான நாவல்களில் தா.பி.யின் 'இதயங்கள் அழுகின்றன' ஓர் அடையாள நாவலாகக் கொள்ளலாம். தனது ஆசிரிய அனுபவத்தையும், வாழ்க்கை அனுபவத்தையும் அதேவேளை பொதுவாழ்க்கை அனுபவங்களையும் கொண்டு இவரால் படைக்கப்பட்ட இந்த நாவலில் திருகோணமலை மண் மாந்தர்கள், பொருளாதாரத்தளம் இவற்றைப் படம்பிடித்துக் காட்டுவதில் நல்லதொரு படைப்பாளியாகக் காணப்படு கின்றார்.

தாமோதரம் என்னும் கதாபாத்திரத்தினூடாக தனது அனுபவங்களைச் சொல்ல வந்த தா.பி.யின் இந்த நாவலில் வரும் தாமோதரம் பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்ட காலக்கட்டத்தில் ஆசிரியரானார். தனியார் பாட சாலையொன்றில் கடமையாற்றி முதுமைக் காலத்து அவலங்கள், எதிர்பார்ப் புக்கள் கொண்டு வாழும் ஒரு குடும்பத்தையே இவர் நாவலாக்கியுள்ளார்.

இதில்வரும் தாமோதரம் வாத்தியாரின் மூத்தமகன் கிருஷ்ணன் ஐரோப்பிய கிப்பி வாழ்க்கைக் கலாச்சாரங்கள் பரவிக்கொண்டிருந்த ஒரு காலக்கட்டத்தில் அக்கலாச்சாரத்தின் குறியீடாக அவன் சித்திரிக்கப்பட்டிருப்பதுடன், பெற்றோரின் நம்பிக்கைக்கு ஆப்புவைத்து சமூகச் சீரழிவுடன் நடமாடும் ஒருவனாகவும் இந்நாவலில் காட்டப்பட்டிருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையின் கள மாந்தர்களைக் கதா பாத்திரங்களாகக் கொண்ட போதும் மண்ணுக்குரிய வாசனைகள், கோடுகள், வாழ்க்கை முறைகள், வர்ணிப்புகள் இந்நாவலில் நலிந்தே காணப்படுகிறது. தாபி-யின் குறுநாவலான நடையில் 'நாமூன்று நாட்கள்' என்ற குறு நாவல் ஈழத்துத் இலக்கியச் சோலையின் 2006ஆண்டில் வெளியீடாக வந்துள்ளது.

### கா.இரத்தினலிங்கம்

பழம்பெரும் பத்திரிகையாளரும், எழுத்தாளருமான கா.இரத்தினலிங்கம் சிறு கதை, கவிதை, கவிதையரங்கு, ஊடகத்துறை, நாடகத்துறை என்று பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்டவர்.

1972ஆம் ஆண்டு ஈழநாடு வாரமஞ்சரியில் ஓர் சிறுகதை எழுதி யதன் மூலம் எழுத்துலகுக்குள் பிரவேசித்தார். ஈழமணி, வீரகேசரி போன்ற பத்திரிகைகளில் எழுதிவரும் இவர் கவிதைபாடும் ஆற்றல் உடையவர். கவியரங்க கவிஞனுங்கூட, 1980இல் கலை இலக்கிய மன்றம் வைத்து நடாத்தி வந்த இரத்தினலிங்கம், 'கனவுகள் கற்பனைகள் நினைவுகள்' (மித்திரன், 21 அத்தியாயங்கள், 1988), 'அன்பைத் தேடும் இதயங்கள்' (மித்திரன், 26 அத்தியாயங்கள், 1988) ஆகிய தொடர்கதைகளோடு நான்கு மூத்த எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதிய 'உன் கண்ணில் நீர் வழிந்தால்' (1983) எனும் தட்டச்சுப் பிரதி நாவலிலும் இவரின் பங்களிப்பு முக்கியமானதாகக் காணப்பட்டது. (ஆனால் இத்தட்டச்சுப் பிரதி அச்சு வாகனமேறாதது கவலைக்குரிய விடயமாகும்.)

ஊடகவியலாளரான இவர் பல அரசியல் கண்ணோட்டக் கட்டுரைகளையும் உலகைக் கலக்கிய விமான விபத்துக்கள் (1980) தொடர் கட்டுரையையும் மித்திரன் தினசரியில் எழுதியுள்ளார்.

இவரது தொடர்கதைகள் மித்திரனில் வெளிவந்தபோதும் திருகோணமலை மண்ணின் சுவடுகளைச் செய்திபோல் சொல்லும் ஆற்றல் கொண்ட படைப்புக்களாக இருக்கின்றன.

### புரட்சிபாலன்

நாவல் என்னும் வடிவத்தில் கைவந்த கலைஞராக விளங்கியவர் புரட்சிபாலன். இவர் பின்வரும் இரு நாவல்களை எழுதியுள்ளார்: 'உமையாள்புரத்து உமா' (வீரகேசரிப் பிரசுரம், 1984), வசந்தகாலக் கோலங்கள் (மணிமேகலைப் பிரசுரம், 2001).

'வசந்தகாலக் கோலங்கள்' என்னும் இவரது நாவல் திருகோணமலையின் மீன்பிடிக் கிராமமான திருக்கடலூர், படுக்கை என்னும் கடலோரக் கிராமத்தின் வாழ்க்கை முறைகள் மீனவர்களின் வாழ்வியல் கோலங்கள் ஆகியவற்றை அழகாக 17 அத்தியாயங்களில் சித்தரித்துக் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கமலா' என்னும் ஒரு கடற்கரைவாழ் கன்னியை கதாபாத்திரமாகக் கொண்டு பின்னப்பட்டுள்ள இந்நாவலில் வரும் கமலா தனது குடும்பத்துக்கு தலைமை தாங்கி, சகோதரர்களை வளர்த்து ஆளாக்கப்படும் கஸ்டங்கள், அவள்மீது மெல்லியதாக குணராசா கொள்ளும் காதல், திருக்கடலூர் கிராமத்தின் மீனவர் சமூக அமைப்பின் அவலங்கள், அத்திவாரங்கள் சொல்லப்படும்விதம் நாவலின் உத்தியினை விட வாழ்க்கைக் கோலங்கள், அழகாகத் தொட்டுக்காட்டப்படு கின்றன.

நாவலில் வரும் கதாபாத்திரங்கள் இயல்பான வார்ப்புக்களாக இருந்த போதும் கதையை வளர்த்துச் செல்லும்முறையை இன்னும் திறம்படச் சொல்லி யிருக்கலாம் போல் எண்ணத் தோன்றுகின்றது.

அக்கிராம மக்களின் வாழ்வோட்டங்கள், ஒடுக்கப்பட்ட வாழ்க்கை முறைகள், போராட்டங்கள் ஆங்காங்கே சொல்லிவைக்கப்பட்டபோதும் கதை சொன்ன உத்திகள் சேரவில்லையென்றே சொல்ல வேண்டும். இருந்தபோதிலும், யாருமே சொல்லாத அளவுக்கு சொல்லியிருக்கிறார் என்பது மிகவும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

மேலே காட்டப்பட்ட நாவல்கள், தொடர்கதைகளுக்குப் புறம்பாக சில எழுத்தாளர்கள் கையெழுத்துப் பிரதிகளாகவும், தட்டச்சுப் பிரதிகளாகவும் ஒரு சில நாவல்களை எழுதியுள்ளனர். அவற்றைத் தகவல்களுக்காகத் தருகிறேன்.

- ★ எஸ். தாசன், 'தண்ணீரில் மீன் அழுதால்', தாகம், தட்டச்சுப் பிரதி, 1987.
- ★ 'பாசத்தின் பிணைப்பு', உதயம், தட்டச்சுப் பிரதி, 1988.
- ★ 'மாங்கனி', கையெழுத்துப் பிரதி, 1975.

## IV. 1980கள்

1980ஆம் ஆண்டுக்குப்பின் திருகோணமலைப் பிரதேசத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள், இனவாதப் போராட்டங்கள், சமூக எழுச்சிகள் நாவல் இலக்கியப் போக்கில் புதியதொரு திசைதிருப்பத்தைக் கொண்டு வந்தது. எக்காலத்திலும் இல்லாத வகையில் அரசியல் சித்தாந்தங்களை அடிப்படையாகக் கொண்டு ஒருசில நாவல்கள் பிறப்பதற்கு இக்காலப் பகுதி அத்திவாரமிடுகின்றது.

மண் விடுதலைப் போராட்டத்தில் இளைஞர் சக்தி மும்முரப்பட்டிருந்த இக்காலக்கட்டத்தில் பல்வேறு இயக்கநிலைப் போராட்டங்கள், சம்பவங்கள், கிராமஅழிவுகள், இடப்பெயர்வுகள் போன்ற அவலங்கள் அரசியல் முனைப்புப் பெற்ற நாவல்களைப் புதிய இளைஞர் குழாமால் எழுதக்கூடிய ஒரு சூழ் நிலையை உருவாக்கியது.

அந்த வகையில் அரசியல் சித்தாந்தம் கொண்ட பின்வரும் நாவல்கள் திருகோணமலையில் எழுந்துள்ளன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ★ சேகுவேரா (1979) - அ.ஜெயராஜா
- ★ அப்பா (1979) - அ.ஜெயராஜா
- ★ புதியதோர் உலகம் (1985) - கோவிந்தன் (சூ.நோபேட்)
- ★ போரும் மனிதனும் (1986) - அ.ஜெயராஜா
- ★ காதல் என்னைக் காதலிக்கவில்லை (1993) - எஸ்.செல்வகுமார்
- ★ மீண்டும் வசந்தம் (2005) - வீ.என்.சந்திரகாந்தி

இவை மாத்திரமே இக்கால அரசியல் முறுக்குக்கள், முரண்பாடுகள், விடுதலை சார்ந்த போராட்டங்களைக் கொண்டு எழுதப்பெற்ற நாவல்களாகும். அ.ஜெய ராசாவால் எழுதப்பெற்ற நாவல்களுக்கும் கோவிந்தன் எழுதிய 'புதியதோர் உலகம்' நாவலுக்கும் இடையே பல வருட இடைவெளியும் வேறுபாடுகளும் காணப்படுகின்றன.

**அ.அ.ஜெயராசா**



அ.அ.ஜெயராசா

முதலில் ஜெயராசாவின் நாவல்கள் பற்றிய பார்வையைச் செலுத்துவோம். ஒரு விசித்திரமான விவேகம் கொண்ட எழுத்தாளனாக விளங்கிய அ.அ.ஜெயராசா என்னும் இந்த இளைஞன் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவன். மூன்று மொழிகளிலும் தேர்ச்சியுள்ள இந்த இளைஞன் படைத்த மூன்று குறுநாவல்களாவன: 'சேகுவரா' (1979), 'போரும் மனிதனும்' (1986), 'அப்பா' (1979).

*'அப்பா':* 'அப்பா' (1979) என்னும் இந்த குறுநாவல் அரசியல் களத்தில் நனைந்து போன ஓர் இளைஞன் பயங்கரவாதியென முத்திரைகுத்தப்பட்டு விசாரிக்கப்படுகின்றான். அந்த விசாரணையில் அவனுடைய அப்பாவிடம் கேட்கப்படுகிறது "இதோ குற்றவாளிக் கூண்டில் நிற்பவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்; அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் எனச் சந்தேகிக்கப்படுபவர்; இவர் உங்கள் மகன்தானே?" அப்பா பதில் அளிக்கின்றார். "இந்த தேசத்தின் மனிதாபி மான கொடுமைகளுக்கெதிராகவும் ஜனநாயகத்தின் தனித்துவத்துக்காகவும் போரிட்ட ஒவ்வோர் பயங்கர வாதியும் எனக்கு மகன்தான். அந்த வகையில் இவன் மட்டும் எனக்கு எப்படி மகனா வான்?"

இந்த மண்ணில் வடக்கு-கிழக்கு யுத்தம் என்ற பயங்கரவாத முத்திரைகுத்தி கைது செய்யப்பட்டு கேள்வியற்றும், ஞாயமற்றும் விசாரணையின்றியும், பூசா முகாமிலும், வெலிக்கடையிலும், அநுராதபுரத்திலும் அடைக்கப்பட்ட அப்பாவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களின் ஒரு குறியீடாகவும், அப்பாக்களின் மறு உருவமாகவும் இவ்விரு கதாபாத்திரங்களும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இந்நாவல் பற்றி இதன் நுழைவுக்கு முன் முன்னுரையில் தெளிவத்தைஜோசப் பின்வருமாறு சொல்லிக்கொள்கிறார். 'உலகை அறிவுபூர்வமாகவும் அறம் சார்ந்த தாகவும் உருவம் அமைக்க இலக்கியம் செயற்படவேண்டும். பெரும்பாலான நமது எழுத்தாளர்களின் வாய்ப்பாடான கதைப்போக்கிலிருந்தும் சொல்லும் விதத்திலிருந்தும் வித்தியாசப்படுவதும் விலகி இருப்பதுமே இதை ஊர்ஜிதப் படுத்துகிறது.'

திருகோணமலையில் எழுந்த நாவல்களில் இந்த நாவல் பற்றிய அறிமுகம் விளம்பரம் இல்லாத ஓர் அமைதியான அரசியல் ஆழம் மிக்க நாவலாகக் காணப்படும். ஜெயராசாவின் நாவல் எல்லோராலும் படிக்கப்பட வேண்டிய, விமர்சிக்கப்படவேண்டிய நாவலாகும்.

*போரும் மனிதனும்:* அவரது இன்னுமொரு நாவல் அல்லது குறுநாவல் போரும் மனிதனும் - War And The Man (1991). 'போரும் மனிதனும் என்னும் இந்நாவல் மூலம் ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்துக்கு வளம் சேர்க்க ஒரு புதிய இளைஞர் வந்திருப்பதை புரிந்துகொள்ள முடிகிறது' என இதன் முன்னுரையில் தெளிவத்தை ஜோசப் எழுதியிருப்பது மிகவும் கவனத்துக்குரிய வார்த்தைகளும் வரிகளு மாகும்.

இந்நாவலில் இராணுவ வீரன் ஒருவன் கடமையின் நிமித்தம் யாழ்ப்பாணம் செல்கிறான். அங்கு தமிழ்ப்பெண்ணொருத்தியைக் காதலித்து அவளை ஒரு குழந்தைக்குத் தாயாக்கி கடமையின் நிமித்தம் மாற்றலாகி வந்துவிடுகின்றான். அந்தத் தமிழ்த்தாயின் மகனும் இந்த சிங்களப் போர்வீரனின் மகனும் வட கிழக்குப் போர்ச் சூழலில் ஒருவரையொருவர் கொல்ல முயற்சிக்கின்றனர்.

ஒருவன் இராணுவக் கடமையுடனும், மற்றவன் தேசவிடுதலைக் கன வுடனும் போராடும் குணம் கொண்டு சந்திக்கின்ற போர்முனைகள் இங்கு கற்பனை செய்துகாட்டப்படுகிறது. மகனின் கதையும் அப்பாவின் கதையும் மாறிமாறி வருகின்ற காரணங்களினால் ஏற்படும் நாவல் நுட்பங்கள் வாசகர் களுக்கு மாறாட்டத்தைத் தந்தபோதும் ஆழமும் நிதானமும் நிறைந்த நோக்குடன் வாசிக்கும் போது போர் என்னும் கொடுமையில் இருந்து விடுபடவேண்டும் என்ற தார்மீகத் தத்துவத்தைக் கதாசிரியர் சொல்லத் துடிக்கின்றார் என்பது புலனாகின்றது.

இக்கதையில் வரும் புலங்கள் இருவேறுபட்ட சூழ்நிலைகளையும், மாந்தர் களையும் கொண்டதாக இன்றைய யதார்த்தத்தின் நிழல்கள் படிந்திருப்பது நாவலுக்குரிய சிறப்பு அம்சமாகும். இனமுறுகல்கள், முரண்பாடுகள் மட்டுப் படுத்தப்பட்ட அளவில் கதையின் தேவை கருதி சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு நல்ல தேசநாவல் கடுகு வடிவம் கொண்டது குறைபாடுதான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சூசைப்பிள்ளை நோபேட் - 'புதியதோர் உலகம்'


சூசைப்பிள்ளை நோபேட்

'புதியதோர்உலகம்' (1985) என்னும் இந்த நாவலை எழுதிய கோவிந்தன் (சூசைப்பிள்ளை நோபேட்), அன்புவழிபுர கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் கொழும்பு பல்கலைக்கழக கலைப்பட்டதாரியாவார்.

தனது மாணவப் பருவக் காலத்திலேயே மாணவர் அமைப்புக்களிலும் மார்க்சியக் கருத்துக்களிலும் அதிக ஈடுபாடு காட்டிவந்த கோவிந்தன் பல இடதுசாரிக் குழுக்களுடன் இணைந்து செயற்பட்டவர். இவர் மலையகத்திலிருந்து வெளியான 'தீர்த்தக்கரை' காலாண்டு இதழின் ஆசிரியர் குழுவில் ஒருவராகக் கடமையாற்றியவர். திருகோணமலையில் 'சங்கப்பலகை' என்ற இலக்கிய அமைப்பின் அமைப்பாளராகவும், 'முன்னோடிகள்' வட்டத்தின் அங்கத்தவராகவும் விளங்கியவர்.

இவரால் படைக்கப்பட்ட இந்த நாவல் தமிழீழ விடுதலைப் போராட்டமானது 1983ஆம் ஆண்டின் பின் ஏற்பட்ட தீவிர வளர்ச்சியின் ஓர் அங்கமாக இவரும் புளட் இயக்கத்தின் முழுநேர உறுப்பினராக இணைந்து செயற்பட்ட முழு அனுபவங்களையும், விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஏற்பட்ட வளைவு, நெழிவுகள், முறிவுகளையும் இந்த நாவலில் வெகு சிறப்பாகச் சொல்லியிருக்கிறார்.

உலக இலக்கிய வரலாற்றில் ரசியப்புரட்சி, வியட்நாம் யுத்தம், சீனப்புரட்சி காலத்தில் ஏற்பட்ட ஓர் இலக்கிய வேகத்தை அல்லது மறுமலர்ச்சியைக் கண்டு நாம் ஆச்சரியப்படுவதுபோல் கோவிந்தனின் இந்த நாவல் மூலம் ஓர் அற்புதமான போராட்டப் புரட்சி சார்ந்த நாவல் இலக்கியத்தைப் பெற்று இருக்கிறோம் என்று பெருமைப்பட வேண்டும்.

இந்த நாவலில் வரும் புலம், மாந்தர்கள், நிகழ்ச்சிகள் அனைத் துமே உண்மையின் வரலாற்றில் கோர்க்கப்பட்டவை என்பதை 'இந்தக் கதையின் கதாபாத்திரங்களில் இறந்தவர்கள் உண்மையில் இறந்தவர்கள்தான். (புதியதோர் உலகம் முன்னுரை) உயிரோடு இருப்பவர்கள் இப்பொழுதும் உயிரோடுதான் இருக்கிறார்கள். புதியதோர் உலகம் ஒரு இலக்கியமாகக் கருதி மாத்திரம் படைக்கப்படவில்லை' என்ற ஆசிரியரின் முன்னுரையே இதற்குச் சான்று.

ஆரம்பகாலங்களில் ஈழ விடுதலைப்போருக்கு பயிற்சி எடுப்பதற்காக இந்தியாவுக்கு இளைஞர்கள் இரகசியமாக கடல் மார்க்கமாக அழைத்துச் செல்லப் படுவதன் மூலமாக அவர்களைப்போராளிகளாக மாற்றும் இயக்கங்களின் நடைமுறையுடன் இந்நாவல் ஆரம்பமாகிறது.

சங்கர் என்ற இளைஞன் ஆயுதப் பயிற்சிக்காக இந்தியா கொண்டு செல்லப் படுவதும், அவனது நண்பன் நாதன், காதலி நிர்மலா என்ற பாத்திரங்கள் யதார்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளப்பாத்திரங்களாகவும், அவற்றின் சம்பவங்கள், பிரச்சினைகள், விடுதலை இயக்க முரண்பாடுகள், பிளவுகள், வட கிழக்குப் பிரச்சனைகளின் ஆரம்பகால முரண்பாட்டு வடிவங்கள் ஆகியனவும் விபரிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கின் சுதந்திரப்போராட்ட வரலாறுகளின் ஆரம்பகால இயக்க முரண்பாடுகள், இந்திய அரசாங்கத்தின் அனுசரிப்புக்கள், தள அமைப்புக்கள், பயிற்சி முகாம்கள், இளைஞர் படையணி திரட்டல் என்ற இன்னோரன்ன போக்குக்களைச் சொல்லிவரும் இந்நாவலில், நாவலாசிரியரின் ஆதங்கம் தான் சார்ந்த இயக்கம் (புளட்) அதனது தேசியத் தன்மை அடிகொண்ட இலட்சியங்கள் இந்நாவலில் பல்வேறு இடங்களில் சொல்லப்பட்டும் பேசப்பட்டும் வரு கின்றது.

தமிழினத்தின் விடுதலையென்பதனை இவர் சார்ந்து இருந்த இயக்கம் கொண்ட இலட்சியத்தின் பருமனாக ஓரிடத்தில் சொல்லப்படுவதை இங்கு தொட்டுக் காட்ட வேண்டும். (புதியதோர் உலகம், பக்கம் 18)

“விடுதலை சிங்கள அரசிடமிருந்து மட்டும் காணும் விடுதலையாக முடியாது. அது இந்த முதலாளித்துவத்தின் சாபக்கேடுகளிலிருந்தும் கொடுமைகளிலிருந்தும் காணும் விடுதலையாக அமையவேண்டும். அதனால்தான் எமது அமைப்பை உருவாக்கும் பொழுது தமிழீழ விடுதலையினை மாத்திரம் குறியாக இல்லாமல் தொடர்ச்சியாக ஒரு சமதர்ம சமூகத்திற்கான போராட்டத்தினை முன்னெடுக்கும் சக்திகளை இனங்கண்டு உறுதியான அமைப்பை உருவாக்க உங்கள் பங்களிப் பைச் செய்ய வேண்டுகிறேன்.”

1983ஆம் ஆண்டுகளை அடுத்து சிங்கள அரசுகள் தமிழ் இளைஞர்களுக்கு எதிராக கொண்டு வந்த பயங்கரவாதச் சட்டங்கள், பூசாமுகாம்கள், சித்திர வதைகள், படுகொலைகள், இன அழிப்புக்கள் எல்லாம் ஒன்று கூடிய ஈழவிடுதலை யுணர்வின் உச்சநிலைக்கான காலக்கட்டத்தின் நிழலாக இந்நாவலில் வரும் கதா பாத்திரங்கள், சம்பவங்கள், ஓட்டங்கள் அமைகின்றன.

மெல்லியதான காதல் உணர்வுகளை ஆங்காங்கே நாவல் துல்லியப்படுத்தி னாலும், போராட்டக் கோர்வையில் இருந்து விலத்திச் செல்லாத இலட்சிய ஓட்டம் இந்நாவலில் அடிபூண்டு கிடக்கின்றது.

ஆசிரியருடைய பொதுப்பார்வை நியாயமான கண்ணோட்டம் தேசவிடு தலையின் நோக்கத்தை சீரழிக்கும் நடவடிக்கைகளை நாவலினூடாக எடுத்துக் காட்டி விமர்சிப்பதாக உள்ளது.

இந்நாவலின் வடிவ அமைப்பு ஓர் நேர்த்தியான அதேவேளை காத்திரமான வடிவமாக அமைத்துச் செல்லப்படுவதனால் அரசியல் நாவல்களுக்குரிய பிரச்சாரத் தன்மை, சொற்போர் இழிவு இல்லாமல் நாவலையும் கதாபாத்திரங் களையும் மிக அழகாகவும், அற்புதமாகவும் வளர்த்துச் செல்வதில் நாவலா சிரியரின் வெற்றி பாராட்டுதற்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிந்தன் இன்னும் பல நாவல்களை ஆக்கித் தரக்கூடிய திறன் இருந்தும் அவரை நாம் இழந்துவிட்டோம். இதேவேளை திருகோணமலை மண்ணின் அனுபவங்களைத் தொடராக தூரத்து ஓவியங்களாக இந்நாவல் ஆக்கப்பட்டிருந்த போதும் விடுதலையின் பங்களிப்புக்கு இந்நாவல் ஓர் எடுத்துக் காட்டு.

**எஸ்.செல்வகுமார் - 'காதல் என்னைக் காதலிக்கவில்லை'**

புரட்சிபாலன் என்னும் எழுத்தாளரின் வாரிசான எஸ்.செல்வகுமார் ஓர் இளம் எழுத்தாளர். தனது தந்தையைப்போல திருகோணமலையில் முத்திரை பதிக்க வேண்டும் என்ற ஆவலும் ஆர்வமும் உடைய இந்த இளைஞன் 'காதல் என்னைக் காதலிக்கவில்லை' (1993) என்னும் தொடர்கதையை மித்திரன் வாரமலரில் 36 அத்தியாயங்கள் எழுதி அறிமுகமானவர்.

இந்தத் தொடர்கதை லண்டன் மாநகரில் உள்ள குலேந்திரன் என்னும் ஊக்குவிப்பாளரின் இலங்கை எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு சென்னை மணிமேகலைப் பிரசுரமாக வெளிவந்துள்ளது. மிக ஆர்வமும், சர்வதேச அளவில் இலக்கியத்துக்குப் பணியாற்ற வேண்டும் என்ற துடிப்பும் உள்ள இந்த இளைஞர் பல சிறுகதைகளையும் எழுதி ஈழத்து இலக்கியத்தை அடையாளப்படுத்தியுள்ளார்.

1995ஆம் ஆண்டுக்குப்பின் திருகோணமலை நாவல் இலக்கிய வளர்வில் ஓர் தேக்க நிலை காணப்படுவதனை வரலாற்றுப்பூர்வமாக நாம் அறியக் கூடியதாக உள்ளது. நாவல் இலக்கியத்தில் நாட்டம் உடையவர்கள் குறைந் திருப்பதோடு, ஏலவே நாவல் இலக்கியத்தைப் படைப்பதில் வல்லவர்களாக விளங்கியவர்களும் நாட்டங்காட்டாமல் ஒதுங்கியிருப்பது தேசிய இலக்கியப் பங்களிப்புக்கு நட்டம் என்றே கூற வேண்டும்.

குறிப்பாக 2000ஆம் ஆண்டுக்குப்பின் புரட்சிபாலன், வீ.என்.சந்திர காந்தியின் நாவல்களைத் தவிர வேறு நாவல்கள் திருகோணமலையில் எழ வில்லை என்பது கவலை தருகின்ற விடயமாகும். இதற்குக் காரணம் அமுக்கம் நிறைந்த இந்த சூழ்நிலை, பொருளாதாரச் சிக்கல்கள், புலப்பெயர்வுகள் காரண மாக இருக்கலாம்.

**மைக்கல் கொலனின் - 'காதல் வெண்ணிலா கையில் சேருமா?'**

கவிதை, நாடகம், பத்திரிகைத்துறை, பிரதியாக்கத்துறை, குறுந்திரைப்படம், விமர்சனம், ஒலிக்காட்சி நாடகம், ஆகிய பல்வேறு துறைகளிலும் தடம்பதித்த கொலின் பிரதம ஆசிரியனாக இருந்து மட்டக்களப்பில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த 'தினக்கதிர்' பத்திரிகையில் எழுதிய தொடர்கதையே 'காதல் வெண்ணிலா கையில் சேருமா' என்ற தொடர் கதை ஆகும். இதனை இவர் 2003ஆம் ஆண்டு நாவலாக வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு பல்கலைக்கழகத்தை நாவலின் குவிமையமாக கொண்டு அங்கு நிகழும் பகிடிவதை, விரிவுரைகள், கருத்தரங்கு, சோஷல், பங்ஷன், சங்கத் தேர்தல்கள், மாணவர் கூட்டம், துக்கதின அனுஸ்டிப்புக்கள் போன்றவற்றை கதை பின்னல்களாக கொண்டு பல்கலைக்கழக வாழ்வின் இனிமையான கனவுகள், யதார்த்தங்கள், நாவலை வடிவமைத்துக்கொண்டுள்ளது. இந்த நாவலின் ஆரம்பம் திருகோணமலையின் கடற்கரையில் அமைந்துள்ள ஒற்றைப் பனை மரத்தில் இருந்து ஆரம்பமாகி அதே இடத்தில் முடியும் உத்தியை நாவல் ஆசிரியர் சிறப்பாக கையாண்டுள்ளார். நிவேதா ஜெயதரன் ஆகிய பிரதான பாத்திரங்களை படைத்து மட்டக்களப்பு பிரதேசம் சார்ந்த ஓரிரு சம்பவத்துடன் அக்காலத்தில் முனைப்பு பெற்றிருந்த அரசியல் நிலவரங்கள், போராட்டங்கள், இன முறுகல்கள், சொல்லப்பட்டிருப்பது சமகால நாவலுக்குரிய வாடையாக ஓரளவு வீசுவதையும் காணக் கூடியதாக உள்ளது என இந்நாவலுக்கு முன்னுரை வழங்கிய கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை தலைவர் கலாநிதி செ.யோகராஜா குறிப்பிட்டுள்ளார்.

அவர்மேலும் குறிப்பிடுகையில் ஈழத்தில் பல்கலைக்கழகங்களை களமாக கொண்டு வெளிவந்த நாவல்கள் அரிதாகவே உள்ளன. அந்த வகையில் கிழக்கு பல்கலைக்கழகத்தை களமாக கொண்டு வெளிவந்துள்ள இந்த நாவல் கிழக் கிலங்கை நாவல் இலக்கிய வரலாற்றை வளப்படுத்தி நீட்டுவதாக இருக்கிறது என குறிப்பிட்டுள்ளார்.

இந்த கதையில் வரும் நாயகன் கவிஞனாக சித்தரிக்கப்பட்டுள்ளான். திருகோணமலையின் புகழ் பெற்ற இடங்களான கடற்கரை, கல்லூரிகள் இங்கே சித்தரித்துக் காட்டப்பட்டிருப்பதுடன் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மறைமுக பாத்திரங்களாக உருவகிக்கப்பட்டிருப்பது சிறப்பாக காணப் படுகின்றது.

**வீ.என்.சந்திரகாந்தி - 'மீண்டும் வசந்தம்'**

2005ஆம் ஆண்டு மீண்டும் வசந்தம் என்னும் நாவலை எழுதியதன் மூலம் தன்னை ஒரு நாவலாசிரியராகவும் காட்டிக் கொண்டுள்ளார் வீ.என்.சந்திர காந்தி.

இந்த நாவலைப் படிப்போர் இதிகாச புராணங்களில் காணப்படும் ஒழுக்கம் தவறுதலும், தீயோர் சேர்க்கையும் தீமையே விளைவிக்கும் என்ற பொதுவுலகத் தத்துவங்களை தழுவிய போதனைக் கதையாக வளர்க்கப்பட்டுள்ளது.

வாசகர்களின் கவனத்தை நேர்கோட்டுப் பாதையில் அழைத்துச் செல்லும் திறன் பெற்ற இவரின் பாத்திர வார்ப்புக்களும், சம்பவத்தேவைகளும், உரைநடை முறையும், கதை சொல்லும் லாவகமும் நல்லதொரு இலட்சணமாக அமைகிறது. பாத்திரங்களின் வார்ப்புப் பேர்களைகள் தனது எதிர்பார்ப்பையும், இலட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தையும் எல்லா விடயங்களிலும் சொல்பவையாக சொல்லப்பட்டிருப்பது அவரின் ஆத்மார்த்த எதிர்பார்ப்பைக் காட்டுவனவாக அமைந்துள்ளது.

### ச. அருளானந்தம் - 'கனவு மெய்ப்பட வேண்டும்'

கலாபூசணம் கலாநிதி ச.அருளானந்தம் அவர்கள் கனவு மெய்ப்பட வேண்டும் என்னும் நாவலை அருள் வெளியீடாக 2009ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

இந்நாவலின் அணிந்துரையில் செங்கை ஆழியான் பின்வருமாறு கூறுகிறார்:

> பாத்திரங்கள் தம் பலத்தோடும், பலவீனத்தோடும் நாவலில் வலம்வரும் இந்தப் பாரம்பரிய வரண்முறையை அருளானந்தம் புனைகதையில் தகர்க்கிறார். உள்ளடக்க உருவ மரபுக்கட்டவிழ்ப்பு என்பது பின்நவீனத்துவத்தின் இன்றைய முக்கிய பண்பாகும். படைப் பனுபவத்தின் வெளிப்பாடான இந்தக் கட்ட விழ்ப்பை அவர் தெரிந்து செய்தாரா அல்லது தற்செயலான ஆழ்மன உந்து தலின் வித்தா? என்ற மனவுணர்வு எனக்கு ஏற்படுகிறது. எவ்வாறாயினும் புனைகதைத் துறையில் புதியதொரு அறுவடையை அவரது நாவல்கள் ஊடாக அருளானந்தம் அறிமுகப்படுத்தியுள்ளார்.

மக்களால் எதுவும் முடியும். சரியான வழிகாட்டல் அமையும் போது சமூகப்புரட்சி உருவாகும். ஒரு படைப்பு படிப்பவர்களுக்கு ஒரு சமூகப்பயனைச் சுட்டவேண்டும் என்ற ஆதங்கத்தை உடையவர்களுக்கு இந்த நாவல் சுவை தரும் மாங்கனி. இந்நாவல் நமது சமூகக் கட்டமைப்பின் தன்மையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

### கலாநிதி கே. எம். இக்பால் - 'கடலின் நடுவில்'

கிண்ணியாவைச் சேர்ந்த கலாநிதி கே.எம்.எம் இக்பால் அவர்களால் எழுதப்பட்ட 2009ஆம் ஆண்டு மித்திரனில் வெளிவந்த தொடர் கதையான மேற்படி கதை இலங்கை புத்தகசாலையால் 2009ஆம் ஆண்டு நாவலாக வெளிவந்துள்ளது.

இரண்டு முஸ்லீம் மீனவர்களும் ஒரு தமிழ் மீனவனும் சேர்ந்து மீன் பிடிக்க கடலுக்கு செல்கின்றார்கள். இயந்திர கோளாறு காரணமாக சில நாட்கள் கடலில் தத்தளிக்கின்றார்கள். இவர்களை சிங்கப்பூரில் இருந்து வெனிசுலாவுக்கு செல்லும் கப்பல் ஒன்று காப்பாற்றுகிறது. இந்தக் கப்பலில் இருக்கும் காலத்தில் ஏற்பட்ட போராட்டங்களைப் பற்றியும், மீனவர் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றியும் இந்நாவல் விறுவிறுப்பாக சொல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலாயுதம் - 'ரங்கநாயகியின் காதல்'**

தம்பலகாமம் க. வேலாயுதம் அவர்களின் 'ரங்கநாயகியின் காதல்' என்னும் சரித்திர நாவல் ஈழத்து இலக்கியச் சோலை வெளியீடாக வந்துள்ளது.

## V. சிறுவர் நாவல்

**ச.அருளானந்தம்**

சிறுவர் இலக்கியம் சர்வபூகோள ரீதியாக எல்லா மொழிகளிலும் கவனப்பட்டு வருகின்றது. சிறுவர்களுக்கான பிரச்சினைகளை முன் வைத்து இவரால் எழுதப் பெற்ற 'பயங்கொள்ளலாகாது பாப்பா' (2000) என்ற இந்த நாவல் திருகோண மலையினைப் பொறுத்தவரை ஒரு முதல் முயற்சியும் முன்னோடி முயற்சியும் என்று சொல்லலாம்.

இந்தநாவல் மூலம் திருகோணமலை மாவட்டத்தின் அழகு, வளம், வாழ்க்கை முறைகளையும் இவர் மிக அழகாக சிறுவரின் உளவியல் பாங்குக்கு ஏற்ற வகையில் சொல்லியிருக்கிறார்.

மகாவலி சங்கமிக்கும் காட்சிகள், இயற்கைத்துறைமுகத்தின் எழில், பிரதேச பழக்கவழக்கங்கள், வாழ்க்கைக் கோடுகள் இந்நாவலில் சொல்லப் பட்டுள்ளன.

தினக்குரல் என்னும் பத்திரிகையின் வாரவெளியீட்டில் தொடராக வெளி வந்த இந்தநாவல் அருள் வெளியீடாக வெளிவந்துள்ளது.

அவரது இன்னொரு நாவல் 'வாக்கினிலே இனிமை வேண்டும்' அருள் வெளியீடாக (2006) வெளிவந்துள்ளது.

அறிவழகன் ஆசிரிய நியமனம் கிடைத்து முதன் முதல் மூதூர் பிரதேசத்தில் உள்ள இலங்கைத் துறைமுகத்தில் உள்ள பாடசாலைக்கு செல்கிறான். அக் கிராமத்தின் இயற்கை அழகு, உப்பு ஏரிகள், வங்காளக்குடாக் கடல் கலக்கும் நீர் ஏரிகள், பறவைகளின் ஓசைகள் போன்ற இயற்கையோடு இணைந்த கிராமிய வாழ்க்கை இந்நாவலில் சித்தரிக்கப்படுகின்றது.

குக்கிராமம் ஒன்றின் அறிவியல், சமூக, பொருளாதார மாற்றங்களை காண வேண்டுமென்ற ஆசிரியரின் கற்பனை அறிவழகன் என்ற பாத்திரத்தின் ஊடாக ஊட்டப்பட்டுள்ளது. கதை சொல்லும் பாங்கில் கட்டுரைத் தன்மையும் பிரச்சாரத் தகவல்களும் மலினப்படுத்தப்பட்டுள்ளன. இருந்த போதிலும் ஆசிரியரின் எதிர்பார்ப்பு உயர்ந்த இலட்சியமாக காணப்படுகின்றது.

இவரின் சிறுவர் நாவல்களாவன: மனதிலே உறுதி வேண்டும் (2006), வாக்கினிலே இனிமை வேண்டும் (2006), பயங்கொள்ளலாகாது பாப்பா (2007), பளிங்கு தீவு, காட்டில் கலவரம், உல்லாசப் பயணம், துணிச்சல்மிக்க சுந்தரி, சுனாமி தந்த உறவு என்பனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### க.தங்கராஜா (ஆலையூரன்)

சிறுவர் நாவல் எழுதுவதில் ஆர்வம் காட்டிய இன்னொருவர், கல்வியியலாளரான க.தங்கராஜா. இவரின் 'சங்கீதன்' எனும் நாவல் 2006 ஆண்டு வெளி வந்துள்ளது.

'நிலாவெளிக் கிராமத்தின் இயற்கை அழகையும், மக்களின் வாழ்க்கை யையும், சிறுவர் தம்மன இயல்பையும், அவர்கள்தம் அனுபவங்களையும், சுனாமி என்னும் ஆழிப் பேரலையின் தாக்கத்தால் ஏற்பட்ட கோர அழிவுகளையும் வெகு லாவகமாக ஆசிரியர் வெளிக்கொணர்ந்துள்ளார்' என இந்நூலின் ஆசிரி யருக்கு அறிமுக உரை எழுதிய த.துரைசிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

### எம்.எம். இக்பால்

கிண்ணியா கோட்ட கல்வி அலுவலகத்தில் சேவைக்கால ஆலோசகராக கடமை யாற்றி வரும் இக்பால் சிறந்த கவிஞன், கலைஞன், சிறுகதை எழுத்தாளன், நாவலாசிரியர். இவரின் எழுத்துப் பணியை பாராட்டி ஜப்பான் அமெரிக்க கூட்டு சர்வதேச பல்கலைக்கழகம் இவருக்கு 2008ஆம் ஆண்டு கௌரவ கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

'விடிவெள்ளி', 'மரணத்தின் விளிம்பில்', 'காட்டுராஜா' ஆகிய மூன்று சிறுவர் நாவல்களை எழுதியுள்ளார். இதில் விடிவெள்ளி எனும் நாவல் சர் வோதயம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய சிறுவர் நாவல் போட்டியில் முதல் பரிசு பெற்ற நாவலாகும்.

இந்நாவல் குழந்தைகளின் உள்ளத்தில் சமாதானத்தை உருவாக்கி பிற இனத்தவரை மதிக்கின்ற மனிதர்களாக அவர்கள் வளர்க்கப்பட வேண்டுமென்ற கருப்பொருளை கொண்டதாகவும் அமைய, 'மரணத் தின் விளிம்பில்' என்ற நாவலில் குமார் என்ற சிறுவனை பிரதான கதாபாத்திரமாக அமைத்து அவனது தாய் மாமன் வில்லனாக சித்தரிக்கப்பட்டு பிறர் உடைமையை அபகரிக்க என்னும் ஏமாற்று பேர் வழிகளுக்கு முடிவு அபத்தமாக அமையும் என்ற நீதிப்பாங்கை இந்த நாவல் எடுத்துக் காட்டுகின்றது.

இக்பாலின் மூன்று நாவல்களும் பரிசுத்தமான குழந்தை உள்ளங் களில் அன்பு, கருணை, சமாதானம், வீரம் என்பவற்றை வளர்க்கும் உரங்களாக, ஊட்டிகளாக சித்தரித்துக் காட்டப்பட்டிருப்பது அற்புதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# நாடக வளர்ச்சி

## I. கூத்துக்களும் விலாசங்களும் (1850 -1940)

திருகோணமலையின் தமிழ் நாடக வளர்ச்சி பற்றி ஆராய முற்படுகின்ற போது அதற்கென ஒரு நூற்றாண்டு காலத்தை ஒதுக்கி ஆராய வேண்டியுள்ளது. ஆங்கிலேயருடைய படைத்தளமாகவும், சர்வதேச துறைமுகத் தொடர்பாகவும் விளங்கிய திருகோணமலையில் பல் தேசியக் கலாசாரத்தின் உள்நுழைவுகள் தேசியக் கலைகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்திய வேளையில் சொந்த மண்ணின் கலைகள் அழிந்து போய் விடக்கூடாது என்ற ஆவேசத்தில் சில தமிழ் அறிஞர் களின் அயராத முயற்சிகளின் விளைவாக பாரம்பரியக் கலைகள் மதிக்கப் படுவதற்கு அல்லது பேணுவதற்குரிய ஓர் சூழ்நிலையை உருவாக்கினார்கள்.

அவர்களின் காலத்தோடு ஏற்பட்ட புத்தூக்கத்தினால் தொன்மை மிக்க எமது பிரதேசத்தின் கலைகள் காப்பாற்றப்பெற்றன அல்லது ஆவண வடிவங் களைப் பெறத்தொடங்கின என்று கூறலாம்.

19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, வே.அகிலேசபிள்ளை (1853-1910), எஸ்.இன்னாசித்தம்பி (1900-1960), தம்பலகமம் அண்ணாவியார் வேலுப்பிள்ளை (1900-1955), வேலன் சின்னையா அண்ணாவியார் (1906-1956), சம்பூர் தம்பையா அண்ணாவியார், பேச்சிமுத்து அண்ணாவியார், கணபதிப்பிள்ளை அண்ணாவியார் போன்றோர்களே முன்னோடிகளாக எண்ணப்படுகின்றார்கள்.

திருகோணமலையின் நாடக வளர்ச்சி பற்றி ஆராய முற்படும் போது பின்வருமாறு நோக்குவது சுலபமெனக் கொள்ளலாம்:

1. மரபுவழிக் கூத்துக்கள்
2. நவீன நாடகங்கள்
3. நாடக இலக்கியங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வகைப்படுத்தி பல்வேறு காலக்கட்டங்களாகக் கொண்டு நோக்க முயலு கின்றேன்.

## மரபுவழிக் கூத்துக்கள்

திருகோணமலையின் ஆரம்ப கால வளர்ச்சிப் பின்னல் நாட்டுக் கூத்துக்கள் என்று சொல்லப்படுகின்ற மரபுவழி வடிவங்கள் ஊடாகவே வளர்ந்து நவீன வடிவம் அல்லது நவீன போக்கைப் பெறுவதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

பொதுவாகவே ஈழத்தின் நாடக வளர்ச்சிப் போக்கு என்பது மரபுவழி கலையினூடாகவே வளர்ந்து வந்துள்ளது என்பது ஒவ்வொரு பிரதேச வளர்ச்சி யையும் ஆராய்கின்றபோது தெரிகின்றது. திருகோணமலையின் நாடக வளர்ச்சியின் பூரண பரிமாணங்களை அறிந்துகொள்ள வேண்டுமாயின் முதலில் மரபுவழி நாடக வளர்ச்சியினைப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

மரபுவழி நாடகங்கள் என்கின்றபோது அவை கூத்துக்கள், விலாசங்கள், தென்மோடி, வடமோடி என்ற பல்வேறு வகைசான்ற பண்புகள் கொண்டவை களாக ஆராயப்பட்டு வந்துள்ளன. இவ்வாய்வுகளை மனங்கொண்டு திருகோண மலையின் கூத்து ஆட்டங்கள் 18ஆம் நூற்றாண்டிலிருந்தே கிராமங்கள் தோறும் ஆடப்பட்டு, அதனை ஓர் கிராமியச் சொத்தாகச் சிலர் தமது சொந்த வாழ்வூதிய மாகக் கொண்ட கலையாகவும் நடாத்தி வந்துள்ளார்கள் என்பதை அறியக் கூடியதாகவுள்ளது.

திருகோணமலைக் கிராமங்களான சம்பூர், கிளிவெட்டி, மல்லி கைத்தீவு, ஆலங்கேணி, கிண்ணியா, தம்பலகமம், நிலாவெளி, சாம்பல் தீவு, உப்புவெளி ஆகிய கிராமங்களில் பிரபல்யமான கூத்துக்களும், விலாசங்களும், நாடகங்களும் ஆடப்பட்டு வந்துள்ளன.

சத்தியவான்சாவித்திரி, ஞானசௌந்தரி, தூக்குத் தூக்கி, கோவலன் சரித்திரம், இராம நாடகம், நளதமையந்தி சரித்திரம், சாரங்கதாரா, பவளக்கொடி, நல்லதங்காள், வள்ளியம்மன், அல்லி அர்சுனா போன்ற பல்வேறு கூத்துக்களை இக்கிராம மக்கள் ஆடி வந்துள்ளனர்.

இந்தவிடத்தில், இக்கூத்துக்களின் பிரதேசப்பட்ட செல்வாக்கையும் பார்க்க வேண்டியுள்ளது. மேற்படி கிராமங்களில் தம்பலகமம், மல்லிகைத்தீவு, சம்பூர், கிண்ணியா, ஆலங்கேணி போன்ற கிராமங்கள் மட்டக்களப்புடன் பூகோள ரீதியான, தொடர்புகளையும், வாழ்வுமுறைகளையும் கொண்ட கிராமங்களாகவும், மறுபுறம் சல்லி, சாம்பல்தீவு, குச்சவெளி, உப்புவெளி, தென்னை மரவடி, திரியாய் போன்ற கிராமங்கள் யாழ்ப்பாண குடாநாட்டுடன் தொடர்புள்ள கிராமங்களாகவும் காணப்படுகின்ற தன்மையில், மேற்படி இரு பிரதேசங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்து முறைகளிலும், அண்ணாவிமாரின் செல்வாக்கு இடம்பெற்றிருப்பதை இங்கு கவனத்தில் எடுத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

இப்பிரதேசத்தின் கூத்து அரங்கு என்கின்ற பொழுது மட்டக்களப்பு பிரதேசத்திற்கோ, யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கோ சொந்தமில்லாத தனித்தன்மை கொண்ட மரபுவழித் தன்மையும், பிரசித்தமாகக் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இருப்பினும் யாழ்ப்பாண, மட்டக்களப்பு பிரதேசங்களுக்குரிய இரண்டு வகையான பிரசித்த அரங்குகளும் ஒன்றுகலந்த முறையில் பயிலப்பட்டு திருகோணமலைக் கிராமங்களில் ஆடப்பட்டு வந் துள்ளமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

மட்டக்களப்புக்குரிய வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் திருமலையின் தெற்குப் பிரதேசக் கிராமங்களில் இன்றும் பயில் நிலையில் உள்ளன. குறிப்பாக, வெருகல், பூமரத்தடிச்சேனை, ஈச்சிலம்பத்தை ஆகிய கிராமங்களில் ஆடப்படும் கூத்துக்கள் இதற்கு உதாரணமாகும்.

யாழ்ப்பாண, வன்னிப் பிரதேச கூத்து வகையான கோவலன் கூத்து, காத்தவராயன் கூத்து, பூதத்தம்பி நாடகம் என்பன திரியாய், சாம்பல்தீவு, நிலாவெளி கிராமங்களில் முன்பு ஆடப்பட்டதாக வாய்மொழி மூலமான தகவல்கள் மூலம் அறியமுடிகிறது.

திருகோணமலை நகருக்கு வடக்கேயுள்ள சாம்பல் தீவு, சல்லி, நிலாவெளி, கும்பிறுபிட்டி, திரியாய், தென்னைமரவாடி போன்ற கிராமங்கள் யாழ் மக்களது கலாசாரப் பாதிப்பினைப் பெற்றனவாகவும், தெற்கேயுள்ள சேனையூர், சம்பூர், மல்லிகைத்தீவு, பள்ளிக்குடியிருப்பு, ஈச்சிலம்பத்தை, மாவடிச்சேனை போன்ற கிராமங்களும் மேற்கேயுள்ள கிராமங்களான ஆலங்கேணி, தம்பலகாமம் போன்ற கிராமங்களும் மட்டக்களப்பு தமிழ் மக்களது மரபு வழிப்பட்ட கலாச்சாரப் பாதிப்பினைப் பெற்றவையாகவும் காணப்படுவது ஒரு விசேட அம்சமாகும்.

திருகோணமலையின் தென்கிழக்குக் கிராமங்களான சம்பூர், சேனையூர், கட்டைபறிச்சான், மல்லிகைத்தீவு, ஈச்சிலம்பற்றை, மேற்குக் கிராமங்களான ஆலங்கேணி, கிண்ணியா, தம்பலகமம் போன்ற கிராமங்களில் ஏலவே கூறியதைப் போல, பூதத்தம்பி விலாசம், தமையந்தி நாடகம், குலேபகாவலி, மார்க்கண்டேய விலாசம், நல்லதங்காள், வள்ளியம்மன், சூரமஞ்சன், அல்லி அர்ச்சுனா, பவளக்கொடி போன்ற விலாசங்களையும், கூத்துக்களையும் ஆடியுள்ளனர் என்பது வாய்மொழி மரபாக அறியக்கூடியதாக உள்ளது.

சுமார் 1926ஆம்ஆண்டளவில் மதன்சாய்பு, சின்னையாசாய்பு, சகோதரர்கள் வேலநாயக்கர்அண்ணாவி, சங்கரபாண்டியன் அண்ணாவி, துரைசுவாமி அண்ணாவி, மதார்ஷா, கரீம்பாய் ஆகிய கலைஞர்கள் இந்தியாவிலிருந்து வந்து சம்பூர், சேனையூர், நிலாவெளி போன்ற கிராமங்களில் தமது குடும்பங்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருந்து, உள்ளூர் கலைஞர்கள் பலரைப் பயிற்றுவித்து பூதத்தம்பி விலாசம், தமையந்தி நாடகம், குலேபகாவலி, அரிச்சந்திர விலாசம், மார்க்கண்டேய விலாசம் போன்றவற்றை ஆடியுள்ளனர்.

மேற்போந்த இந்திய அண்ணாவிமாரிடம் மாணவர்களாக இருந்த சம்பூரைச் சேர்ந்த பேச்சிமுத்து அண்ணாவி, சேனையூர் கணபதிப் பிள்ளை அண்ணாவி ஆகியோர் நாதஸ்வரம், தவில் போன்ற வாத்தியங்களையும் கற்று சிறந்த அண்ணாவிமாராக பிற்காலத்தில் விளங்கியுள்ளனர்.

இவர்களைப் போன்றே தம்பலகமத்தைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை அண்ணாவி (1912), கள்ளிமேட்டு சிவப்பிரகாசம் அண்ணாவி, தம்பலகமம் கந்தப்பு அண்ணாவி போன்றோர் சிறந்த அண்ணாவிமார்களாக மேற்படி கிராமங்களில் திகழ்ந்துள்ளனர்.

1934ஆம் ஆண்டளவில் சந்தனம் அண்ணாவி என்றும் சந்தனத்தார் என்றும் அழைக்கப்பட்ட அண்ணாவி 'ஞானசௌந்தரி' என்னும் கூத்தை ஆடியுள்ளார். இவர் விருத்தப்பாக்களைப் பெரிய தொனியில் பாடுவதிலும் உடனுக்குடன் பாட்டுக்கட்டுவதிலும் பெயர் பெற்றவர். இவரைப் போன்றே வீரக்குட்டி அண்ணாவியார் நல்லதங்காள், சுரமஞ்சன், வள்ளியம்மன், மாரிமுத்து அண்ணாவியார் சத்தியவான் சாவித்திரி முருகுப்பிள்ளை அண்ணாவியார் இராமாயணம் ஆகிய புகழ்வாய்ந்த கூத்துக்களைப் பழக்கி தமது கிராமங்களில் அரங்கேற்றியுள்ளனர்.

இவை தவிர 1932ஆம்ஆண்டளவில் தம்பலகமத்தில் 'தூக்குத் தூக்கி', 'பூதத்தம்பிவிலாசம்', 'லலிதாங்கி', 'சுபத்திரன்', 'இலங்காதகனம்', 'ஊசோன் பாலந்தை', 'சம்பூர்ண இராமாயணம்' போன்ற கூத்துக்களும் விலாசங்களும் கோயில்களிலும், பொதுமேடைகளிலும் ஆடப்பட்டு வந்துள்ளதாகக் அறியப் படுகின்றது.

இக்கூத்துக்கள் பெரும்பாலும் யாழ்ப்பாண அண்ணாவிமாராலும், இந்தியா விலிருந்து வந்த அண்ணாவிமாராலும் பழக்கி மேடையேற்றப்பட்ட புராண, இதிகாச வரலாற்றுக் கதைகளாகும்.

ஈச்சிலம்பற்றை என்னும் பழம்பெரும் கிராமத்தில் 'சாரங்கதாரா' போன்ற கூத்துக்கள் ஆடப்பட்டுள்ளது. இதற்குரிய ஆதாரங்களை இங்கு நோக்கலாம்.

சேனையூர் கணபதிப்பிள்ளை அண்ணாவியார் பழக்கிய நாடகத்தில் அவ் வூரைச் சேர்ந்த பலர் நடித்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| கணபதியர் | - | இராமர் |
| இளையதம்பி | - | இராவணன் |
| வடிவேல் | - | சீதை |
| நல்லையா | - | அனுமான் |

வீரக்குட்டி அண்ணாவி பழக்கிய நல்லதங்காள் கூத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வே.துரையப்பா | - | நல்லதங்காள் |
| இராசைய்யா | - | நல்லதம்பி |
| சி.கணபதிப்பிள்ளை | - | காசிராசா |
| ம.பரஞ்சோதி | - | மூழியலங்காரி |
| கா.விஜயசிங்கம் | - | வைத்தியர் |

இத்தகவல்கள் கிராமத்தவர்களின் வாய்வழித் தகவல்களாகப் பெறப்பட்ட வையாகும்.

இப்பிரதேசங்களில் பொதுவாக கூத்து, விலாசம், நாடகம் என்ற வடிவில் ஆடப்பட்ட அல்லது அரங்கேற்றப் பெற்ற மேற்படி கூத்துக்கள், பிரதி, அரங்கம், உடை, நடிப்பு என்பனவற்றில் சிறிய சிறிய வேறுபாடுகள் காணப்பட்டன.

கூத்து என்பது ஆட்டமுறை கொண்ட மரபுவழி வடிவமாகவும், கதா பாத்திரங்கள் புராணங்களோடும், காவியங்களோடும், இதிகாசங்களோடும் தொடர்புபட்டனவையாகக் காணப்பட்டன. எனவே கூத்து என்பது ஆட்டத்தை முதன்மைப்படுத்திய பல்வேறு அரங்க வடிவங்களைக் குறித்து நிற்கின்றது.

ஆனால் விலாசம் என்பது கலாநிதி சி.மௌனகுரு அவர்கள் குறிப்பிடுவது போல 18ஆம் நூற்றாண்டில் விலாசம் என்று ஒரு நாடக வடிவம் ஈழத்தில் வந்து புகுந்தது. கூத்துக்களிலிருந்த ஆட்டமுறை நீக்கப்பட்டமையும், கர்நாடக சங்கீத இசை இடம்பெற்றமையும் விலாசத்தைக் கூத்தினின்றும் வேறுபடுத்திக் காட்டுகின்ற அம்சங்களாகும்.

விலாசம் பற்றி ஈழத்து தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சியில் க.சொக்கலிங்கம் அவர்கள் குறிப்பிடுகையில் (பக்கம் 12) 'விலாச நாடகம் கதகளி போன்றதென்றும், இதற்கான மேடையமைப்பு வட்டவடிவமானது என்றும் ஆட்டமுறையில் பாத்திரங்கள் சுற்றி ஆடுகின்ற வழக்கம் இதில் உண்டு என்றும் அணியும் உடை, கரப்புப் போன்றிருக்கும் என்றும் விலாச நாடகத்திற்கும், பழைய முறை நாட கத்திற்கும் சிலர் வேறுபாடு கற்பிப்பர்.'

எனவேதான் விலாசம் என்ற வடிவம் மேற்படி கிராமங்களில் அநேகமாக ஆடப்பட்டுள்ளது. உதாரணம் 'பூதத்தம்பி விலாசம்', 'மார்க் கண்டேய விலாசம்'.

இதேவேளை மேலைத்தேயக் கோட்பாடுகளின் வருகையோடு இணைந்த நாடகம் என்ற வடிவங்களையும் ஆடிவந்துள்ளனர் என்பதற்கு 'தமையந்தி நாடகம்', 'குலேபகாவலி', 'பவளக்கொடி', 'நல்ல தங்காள்', 'ஞானசௌந்தரி', 'கோவலன் சரித்திரம்'என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

கிராம மக்கள் விலாசம், கூத்து, நாடகம் என்பவற்றுக்கு வேறுபாடு காண முடியாமல் நாடகங்களைக் கூத்து என்றும், விலாசம் என்றும், விலாசங்களைக் கூத்து, நாடகம் என்றும் சொல்லி வந்தமையினால் பல்வேறு மாறாட்டங்கள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலையின் வடகிராமங்களான திரியாய், குச்சவெளி, தென்ன மரவடி, உப்புவெளி, சல்லி, சாம்பல் தீவு போன்ற கிராமங்களில் ஆடப்பட்ட அல்லது அரங்கேற்றப்பட்ட கூத்துக்கள் முன்னைய கிராமங்களின் போக்குடன் ஒத்தும் விலகியும் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. அதற்குக் காரணம் முன்பு சொன்ன பௌதீக கலாச்சாரத் தொடர்புகள் ஆகும்.

1933ஆம் ஆண்டளவில் இந்தியாவிலிருந்து வருகை தந்த அண்ணாவியார் துரைச்சுவாமி நிலாவெளிக் கிராமத்தில் சத்தியவான் சாவித்திரி என்ற நாடகத்தைப் பழக்கி அரங்கேற்றியுள்ளார். இவரைப் போலவே நிலாவெளி தம்பிமுத்து அண்ணாவியார் ஞானசௌந்தரி நாடகத்தையும் இவரின் உதவி அண்ணாவி மாராக கணபதிப்பிள்ளை, சி.வேலுப்பிள்ளை ஆகியோர் மேற்கூறப்பட்ட நாடகத்தில் நடித்தும் பிற்காலத்தில் அண்ணாவிகளாகத் திகழ்ந்துள்ளனர். இப் பிரதேசங்களில், 'சிவலீலா', 'தசாவதாரம்', 'காத்தவராயன்', 'அழகேந்திர விலாசம்', 'வள்ளி முருகன்', 'பவளக்கொடி', 'வள்ளி திருமணம்', 'லலிதாங்கி', 'சுயம்வர வதனி', 'சத்தியவான் சாவித்திரி' போன்றவையும் ஆடப்பட்டுள்ளன.

திருகோணமலை நகரப்பிரதேசத்தை எடுத்துக் கொள்வோமானால் நகரிலும் அதற்கு அண்மிய கிராமங்களிலும் 1900-1940ற்கு இடைப்பட்ட காலப் பகுதி களில் கூத்துக்கள் அல்லது விலாசங்கள் ஆடப்பட்டன. இவை யாழ்ப்பாணப் பிரதேசம், இணுவில், சுன்னாகம், அச்சு வேலி ஆகிய இடங்களிலிருந்து அண்ணாவிமார் வரவழைக்கப்பட்டு, உள்ளூர் வெளியூர் கலைஞர்கள் சேர்ந்து வருடக்கணக்கில் பழகி ஆடியுள்ளனர்.

இணுவில் சுப்பையா அண்ணாவி என்பவர் 1910ஆம் ஆண்டளவில் நிலாவெளி, குச்சவெளிப் பிரதேசங்களில் பவளக்கொடி, வள்ளி திருமணம், அழகேந்திர விலாசம் போன்ற கூத்துக்களைப் பழக்கி ஆடியுள்ளார். இவர் போலவே 19ம்நூற்றாண்டு அளவில் கனகசுந்தரப் பெருமாள் என்பவரும் கூத்துப் பழக்கி ஆடியுள்ளார்.

சில அண்ணாவிமார் தாமே பிரதான பாத்திரம் ஏற்றும் நடித்தும் உள்ளனர். 'தென்னைமரவடியென்னும் கிராமத்தில் வேதாள ஆட்டம் என்னும் ஒரு வகை கூத்து ஆடப்பட்டு வந்துள்ளது. இலங்கையில் இவ்வகைக் கூத்து வேறு எங்கும் ஆடப்படவில்லையென்று குறிப்பிடப்படுகிறது. பெரிய பெரிய முகமூடிகள் பயன்படுத்தப்பட்டு, ஆடுபவர்கள் தங்களை மிகப்பெரிய உருவங்களாக உரு வாக்கிக் கொள்வார்கள். இதனைப் பூதஆட்டம் என்று அழைப்பர். பார்வை யாளர்கள் அண்ணார்ந்து பார்க்கும் அளவிற்கு, பிரமாண்டமான தோற்றம் உடையவர்களாக ஆட்டக்காரர் காட்சியளிப்பாராம். (துரதிஸ்ட வசமாக 1983ஆம் ஆண்டுக்குப் பின் இக்கிராமமே முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது.)

மேலே என்னால் எடுத்துக் கூறப்பட்ட கூத்து, விலாசம், நாடகம் என்ற வடிவங்களின் வளர்ச்சி பற்றிய வரலாற்று முறை சார்ந்த பதிவுகள் பெறப் படுவதிலுள்ள கஸ்டங்களை இதனைப் படிப்போர் உணருவீர்கள். இக்கஸ்டத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து என் ஆய்வை சுலபப்படுத்துவதற்காக ஒரு காலவரையறை கொடுக்க வேண்டும் என்ற கணக்கில் திருகோணமலை மரபுவழி நாடகவளர்ச்சியை (1850-1940) இடைப்பட்ட ஒரு காலப் பகுதியினை எடுத்து வைத்து மேலே ஆய்ந்துள்ளேன்.

## II. நவீன நாடக மரபு (1940-1960)

நவீன நாடக மரபு என்பது மேலைத்தேசக் கோட்பாடுகள் உள்வாங்கப்பட்ட புதியதொரு மரபு இங்கு நவீன நாடக மரபு என்று எடுத்துக் கூறப்படுகிறது. பம்பல் சம்பந்தமுதலியார் காட்டிய வழியைப் பின்பற்றி ஆங்கில மேலைத் தேசக் கோட்பாடுகளை அனுசரித்து நவீன நாடக முறையொன்றை திருகோண மலையில் தோற்றுவித்தவர் அண்ணாவி தம்பிமுத்துவாகும்.

இனி நவீன மேடை நாடகங்கள் பற்றிய பார்வையைச் செலுத்த லாமென்று நினைக்கின்றேன்.

நவீன நாடகங்கள் பற்றிய ஆய்வுக்காக பின்வரும் காலக்கட்டங்களை வரலாற்று எல்லைகளாகக் கொண்டு நோக்க முற்படுகின்றேன்:

1. முதலாவது காலக்கோடு 1900 - 1960
2. இரண்டாவது காலக்கோடு 1960 - 1970
3. மூன்றாவது காலக்கோடு 1970 - 1990
4. நாலாவது காலக்கோடு 1990 - 2002

### முதலாவது காலக்கோடு (1900 - 1960)

இந்த முதலாவது காலக்கட்டத்தில் - (அண்ணாவித் தலைமுறையினர்) பழைய மரபுவழிக் கூத்துக்களை ஆடிய பலர் வாழ்ந்திருக்கின்றார்கள். அவர்களில், அண்ணாவியார் வேலுப்பிள்ளை - (1900 - 1955), வேலன் சின்னையா அண்ணாவியார் - (1906 - 1956), மூதூர் அந்தோனிதுரம் (சந்தனம் அண்ணாவியார்), தம்பிஐயா தம்பிமுத்து - (1914) ஆகியோர் முக்கியம் பெறுகின்றனர்.

இவர்கள் மரபுவழிப்போக்கில் அதிக நாட்டங் காட்டியவர்களாக இருந்த காரணத்தினால் முன்னைய காலத்தோடு சேர்த்து கவனிக்கப்பட வேண்டியவர் களாக இருக்கின்றார்கள்.

#### அண்ணாவி தம்பிமுத்து

நவீன நாடக மேடையின் முதலாவது காலக் கோட்டை வரையத் தொடங்கியவர் திருகோணமலையின் நாடகப் பிதாமகன் அண்ணாவி தம்பிமுத்துவாகும் (1900-1960). தனது 15வது வயதில் இந்தியா சென்று மோடிக் கூத்துக்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகி, அதன் உத்தி நுட்பங்களையெல்லாம் கற்று, அத்துடன் தவில், நாதஸ்வரம் ஆகிய கலைகளைப் பயின்று வந்ததோடு, ஒப்பனைக்கலை, காட்சியமைப்பு, இயக்குநர் கலை, பிரதி ஆக்கத்திறன் என இன்னோரன்ன துறைகளில் பயிற்சி பெற்று வந்த தம்பிமுத்து நவீன நாடகக் கலைக்கு ஒப்பற்ற சேவை யாற்றினார்.

இந்தியாவிலிருந்து திரும்பி வந்ததும் பின்வரும் விதங்களில் நவீன நாடகக் கலை விருத்திக்கு பல்வேறு வகையில் உதவினார்:

1. உள்ளூர் கலைஞர்களுக்கு ஆர்வம் தந்தமை.
2. இந்திய நாடக எழுத்துக்களைத் தருவித்தமை.
3. நாடகக்கலை வளர்ச்சிக்காக ஒப்பனைக்கலை, சீன் வரைதல்.
4. கூத்து மாளிகையை (தியேட்டர்) நிரந்தரமாக நிறுவியமை.
5. தானே சகல துறைகளிலும் முன்னோடியாக விளங்கியமை.
6. உள்ளூர், வெளியூர் நாடகங்களை மேடை யேற்றியமை.

இந்தியாவிலிருந்து நவீன நாடகக்கலையைப் பயின்று வந்த தம்பிமுத்து தன்னை குருவாகக் கொள்ளக் கூடிய பல இளைஞர்களை இத்துறைக்குள் நுழையப் பண்ணி அல்லது சேர்த்து எடுத்துக் கொண்டு பல நாடகங்களைப் பழக்கி ஒரு புதிய விழிப்புணர்ச்சியைத் திருகோணமலையில் ஏற்படுத்தினார்.

தம்பிமுத்து தனது முதலாவது நவீன நாடகமாக கண்டிராசன் என்னும் நாடகத்தை (1930) தனது நண்பர்கள் குழாமோடு சேர்ந்து மேடையேற்றினார். அவர் தொடர்ந்து 'குலேபகாவலி', 'வள்ளி திருமணம்', 'தூக்குத் தூக்கி', 'அல்லி அர்ச்சுனா', 'கோவலன்சரித்திரம்', 'சுபத்திரா', 'லலிதாங்கி', 'கிருஷ்ணலீலா' போன்ற நாடகங்களைப் பல தடவைகள் நகரத்தில் கொட்டகை அமைத்து மேடையேற்றியது மல்லாமல் கிராமம் கிராமமாகச் சென்றும் மேடையேற்றி நிறைந்த ஆதரவைப் பெற்றார்.

தற்காலிக கொட்டகைகள் அமைத்து ஆடிவந்த தம்பிமுத்து, நாடக இரசிகர்களின் அளவிறந்த ஆதரவைக் கண்டு தனது சொந்த முயற்சியினால் நிரந்தரமான ஒரு கொட்டகை நிறுவ வேண்டும் என்ற ஆதங்கத்தால் தான் பிறந்த சுண்டங்காட்டுப் பிரதேசத்திலேயே 1942 ஆம் ஆண்டளவில் கணேசன் அரங்கு என்ற பெயருடன் ஓர் நாடக அரங்கை நிறுவினார். இது பிற்காலத்தில் லக்சுமி தியேட்டர் என வழங்கி தற்போது நவீன கடைத்தொகுதியாக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதிபலிப்பாகவே இன்னும் சில வருடங்களின் பின் பெரியகடைப் பகுதியில் நாடகத்துக்கென மணித்தியேட்டர் என்னும் பெயரில் அமரர்.ஞான சேகரன் அவர்களால் நிறுவப்பட்டு, பின்னர் இது ஜோதி தியேட்டர் என மாற்றப்பட்டு திரையரங்கு ஆகி, தற்போது சிஹாரா தியேட்டர் என்ற பெயருடன் சினிமாத் தியேட்டராக இயங்கி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்போந்த இரு அரங்குகளிலும் உள்ளூர் கலைஞர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட நாடகங்கள் மேடையேற்றப்பட்டதுடன் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட எஸ்.எஸ்.கொக்கோகுழு, பாலர்குழு, கோவிந்தன் குழு, காதர் பாச்சாகுழு, எஸ்.வி.துரைராஜாகுழு, மீனலோஜினிகுழு, பாலசற்குணசபா ஆகிய குழுக்களின் நாடகங்களும் பெருந்தொகைச் செலவில் மேடையேற்றப்பட்டு வந்துள்ளன.

தம்பிமுத்து என்ற தனிமனிதன் தானே நடிகனாய், ஒப்பனையாளனாய், பாடகனாய், இயக்குனராய், ஆர்மோனியக்காரனாய், இசைக்கலைஞனாய், சீன் வரைபவனாய் ஆற்றிய பங்களிப்புக்கள் திருகோணமலை நாடக வரலாற்றில் முக்கியமான பதிவாகும்.

இவரது இறுதிக்காலக்கட்டத்தில் எஸ்.இன்னாசித்தம்பி எழுதிய ஊசோன் பாலந்தை என்னும் நாவலை நாடகமாக்கி திருகோணமலை நகரிலுள்ள அரங் கங்களில் மேடையேற்றியதுடன் கிராமப்புறங்களுக்கும் கொண்டு சென்றுள்ளார். (ஊசோன்பாலந்தை என்பது திருகோணமலையில் எழுதப்பெற்ற முதலாவது நாவல். இது பற்றி நாவல் அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளேன்.)

இதுபோலவே அறிஞர் வே.அகிலேசபிள்ளை என்பவரால் எழுதப் பெற்ற கண்டிநாடகம் என்னும் கூத்தையும் தம்பிமுத்து தனது அரங்குகளில் ஆடி வந்துள்ளார் (1930).

இவரது பல்துறைசார்ந்த புலமையினாலோ என்னவோ இவரைப் பிற் காலத்தில் குருவாகக் கொண்ட பல கலைஞர்கள் இவரது முயற்சியைத் தொடர்ந்து வளர்த்து வந்தார்கள். இவரது அற்புத ஆற்றல் கண்டு தமிழ்நாட்டுக் கலைஞர்கள் பலர் இவரைத் தேடிவந்து கௌரவம் தந்து சென்றுள்ளமையும் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும்.

## III. இரண்டாவது காலக்கோடு (1960 - 1970)

இரண்டாவது காலக்கட்டமென்பது திருகோணமலை நாடக வரலாற்றில் நவீன நாடக வடிவங்கள் மேடை கொண்ட காலம் என்பதுடன் பெருந்தொகையான நாடக மன்றங்கள் உருவாகிய காலம் என்றும் கூறலாம்.

இக்காலக்கட்டத்தின் நவீன நாடக வளர்ச்சியின் பின்னணித் தளமாக அமைந்த விடயங்கள் மூன்று. அவையாவன:

1. அண்ணாவி தம்பிமுத்துவின் வழித்தோன்றல்கள்.
2. நவீன நாடக மரபுகள் பற்றிய பிரக்ஞை.
3. நாடக மன்றங்களின் தோற்றம்.

அண்ணாவி தம்பிமுத்து திருகோணமலை நகரில் பல அரங்குகளில் புராண, இதிகாச, வரலாற்று நாடகங்களை ஆடிய காலப்பகுதியில் அவரது பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றல்களால் ஆக்கிரமிக்கப்பட்ட இளைஞர்கள் பலர் பிற்கால நவீன நாடக வளர்ச்சிக்கு அளப்பரிய தொண்டாற்றினார்கள்.

எம்.சி.அந்தோனிப்பிள்ளை, அபிநயசிகாமணி சி.விசுவலிங்கம், அண்ணாவி சின்னையா, சங்கீத வாத்தியார் தில்லையம்பலத்தார், தம்பலகமம் அண்ணா வியார் வேலுப்பிள்ளை (1900 - 1955), வேலன் சின்னையா (1906 - 1956), கலாவிநோதன் த.அமரசிங்கம், தா.பி.சுப்பிரமணியம், பெரியகடை வி.சாந்த முத்து, கலைத்தாஸன் சின்னத்தம்பி, இராயப்பு (1923 - 1970), மோகன் எனப்பலரைக் குறிப்பிடலாம்.

1950இன் பின் இலங்கையின் சமூகத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் ஒருபுறம், இந்தியாவில் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகத்தின் நாடகப் புரட்சிகள் ஈழத்தின் நாடக வரலாற்றில் பல புதிய பரிணமிப்புக்களைக் கொண்டு வந்ததுபோலவே திருகோணமலை நாடகமேடை வரலாற்றில் புதிய வளர் வையும், பரிணாமத்தையும் கொண்டுவந்தது.

தி.மு.க.வைச் சேர்ந்த அண்ணா, மு.கருணாநிதி ஆகியோரின் நாடகங்களைப் பார்த்து, படித்த அருட்டுணர்வின் காரணம் ஒருபுறம். மறுபுறம் தென்னிந்தியத் திரைப்படங்களின் வருகையும் திருகோணமலை நாடக மேடைகளுக்குப் புதிய இளைஞர்களை வரவழைத்ததுடன் நாடக மன்றங்கள், அரங்கங்கள் பிறப்பதற்கு பின்னணியாகவும் அமைந்தது.

இக்காலப்பகுதியில் திருகோணமலையின் நகரத்திலும், கிராமங்களிலும் பெருந்தொகையான நாடக மன்றங்கள் உருவாகியதுடன் நாடகம் சார்ந்த நடிப்பு, மேடை உள்ளீடுகள், பிரதியாக்கம், இசைத்துறை என்பன வளர்ச்சியடையத் தொடங்கியமைக்கு இந்த நாடக மன்றங்களின் பிறப்பு காரணமாகியது.

**நாடக மன்றங்களின் தோற்றம்**

★ திருவள்ளுவர் கழகம்
★ மடத்தடி கலைவாணி நாடக மன்றம்
★ மகாகவி ரசிகர் கழகம்
★ முத்தமிழ் நாடக மன்றம்
★ திருமலைக் கலாமன்றம் (1958)
★ மதிவளர் நாடக மன்றம்(1967)
★ திருகோணமலை இளைஞர் கழகம்
★ மக்கள் நாடகமன்றம் (1956)
★ திருகோணமலை சரஸ்வதி நாடகமன்றம்
★ திருமலை நாடகசபா
★ உதயசூரியன் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ★ திருமலைக் கலைக்குழு
- ★ லியோ கலைக்குழு
- ★ வெண்ணிலா நாடகமன்றம்
- ★ வேம்படி வைரமுத்து குழு
- ★ புதுமலர்ச்சி நாடகமன்றம்
- ★ கலையரசி நாடகமன்றம்.
- ★ அமரன் ஸ்கிறீன்(70)

**கிராமப்புறங்களில்**

- ★ செல்வநாயகபுரம் காசிநாதன் கலாமன்றம்
- ★ செல்வநாயகபுரம் சரஸ்வதி நாடகமன்றம் (1963)
- ★ பட்டித்திடல் கலைமகள் நாடகமன்றம் (1978)
- ★ மூதூர் எங்கள் நாடகமன்றம்
- ★ மூதூர் முத்தமிழ் மன்றம்
- ★ மூதூர் பெண்கள் கலைவட்டம்
- ★ சேனையூர் விநாயகர் நாடகமன்றம்
- ★ சம்பூர் நாமகள் நாடகமன்றம்
- ★ முன்னம்போடிவெட்டை வாணி கலாமன்றம்
- ★ மதியரசி நாடகமன்றம்
- ★ நாவலர் நாடக மன்றம்
- ★ நாடோடி நாடகமன்றம்
- ★ கிண்ணியா அப்துல் மஜீது மன்றம்
- ★ நிலாவெளி ஜெயா நாடகமன்றம்(1973)
- ★ திருக்கடலூார் கலாவதி நாடகமன்றம்
- ★ திருக்கடலூார் முற்போக்கு கலாமன்றம்
- ★ எங்கள் நாடகமன்றம்

இந்த நாடகமன்றங்களின் அவதரிப்பினால் திருகோணமலை நாடக வரலாற்றில் பெருந்தொகையான நாடகங்கள் மேடையேறிய பொற்காலம் இதுவென்று கூறலாம். இதற்குக் காரணம்:

1. அதிகளவு நாடகங்கள் மேடையேறியமை.
2. புதிய நடிகர்களின் வரவுகள்.

இக்காலப்பகுதியில் மேடையேற்றிய நாடகங்களின் பட்டியல்களைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தித் தருகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பாவசங்கீர்த்தனா
★ சதி அனுசியா
★ கொள்ளைக்காரன் (51)
★ சிற்பியின் சிதைந்த உள்ளம்
★ வள்ளுவம் (1953)
★ சமாதி (58)
★ திருந்திய நாவேந்தன்
★ பரலோகத்தில் பாரதி (64)
★ இரத்தின சிம்மாசனம் (68)
★ காசியப்பன்
★ ஆடக சௌந்தரி (67)
★ தந்தையின் குழந்தை (67)
★ ஒளிமலர்
★ சாப்பாட்டு ராமன் (67)
★ நீராம்பல் (67)
★ ஊசோன்பாலந்தை
★ பொன்னூல் செபமாலை
★ இளைஞன்
★ தவறான பாதை (1953)
★ யார் குற்றம்? (57)
★ பழிக்குப்பழி (58)
★ நான்கு கடிதங்கள் (64)
★ பழங்கவிஞர் கைலாசம்
★ சொன்னது நீதானா? (68)
★ இருளும் ஒளியும் (68)
★ வாழ்வு எங்கே? (67)
★ அடங்கிய பிடாரி (69)
★ விதானையார் வீடு (62)
★ நாலுக்கு இரண்டு (87)

இந்த நாடகங்களில் நடித்த, இயக்கிய கலைஞர்களின் விபரங்களையும், பதிவு நோக்கம் கருதித் தருகின்றேன்.

நெறியாளர்கள் : சந்தனம் சுவாமி, இன்னாசிமுத்து, எம்.சி. அந்தோனிப்பிள்ளை, வ.சாந்தமுத்து, சி.விஸ்வலிங்கம்.

நடிகர்கள்: இ.சுப்பிரமணியம், நா.கணபதிப்பிள்ளை (புகைப்படக் கலைஞர்), அ.சச்சியானந்தம், து.குலவீரசிங்கம் (செயலர்), த.அமரசிங்கம், கே.எஸ்.துரைசிங்கம், பி.ரி.இராஜன், தமிழ் நாடு எம்.எஸ்.கமலாம்பாள், எம்.எஸ்.இராஜாம்பாள், தி.பி.ராமலட்சுமி, (1957இல் மக்கள் நாடக சபாவால் மேடையேற்றப்பட்ட ‘யார் குற்றம்’ என்ற இந்த நாடகத்தில் மேற்படி தமிழ் நாட்டுக்கலைஞர்களும் சேர்ந்து நடித்துள்ளனர். சென் அன்ரனி சிங்கள வித்தியாலயத்தில் இந்த நாடகம் 08.06.57இல் மேடையேற்றப்பட்டுள்ளது.) கருணையோசப், கே.யோன், ஏ.யோன்பிள்ளை, தா.பி.கே.ஸ்ரணிலோஸ், திருமலை சின்னையா, போல் யோசப், தயாநிதி, என். ஏலேலசிங்கம், வளர்மதிராஜன், எஸ்.மயில் வாகனம், ஆர்.சுந்தரலிங்கம், ஏ.சிதம்பரநாதன், இம்மானுவல், ஜோன் பிள்ளை, பியதாச.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் போல் இன்னும் பல கலைஞர்கள் இக்காலப் பகுதியில் நாடகத்துறையில் அதிக ஈடுபாடு காட்டியவர்களாகக் கூறப்படுகிறது. (எல்லோருடைய தக வல்களையும் பெறுவதில் உள்ள கஸ்டங்களை உணருவீர்கள் என்று நினைக் கின்றேன்.)

## எம்.சி.அந்தோணிப்பிள்ளை

மேலே குறிப்பிட்ட காலப்பகுதியின் மேடைநாடக வளர்ச்சியின் மூத்த முன்னோடி என்ற வகையில் மதிக்கப்பட வேண்டியவர் இவர். எஸ். இன்னாசித்தம்பியின் ஊசோன்பாலந்தை என்னும் கதையை நாடகப்பிரதியாக்கி 1922ஆம் ஆண்டு மேடையேற்றியதன் மூலம் நாடக உலகில் பிரவேசித்தவர்.

அண்ணாவி தம்பிமுத்துவைத் தனது மானசீகக் குருவாகக் கொண்ட பிள்ளை (பெரியகடையில் வாழ்ந்தவர்) நாடகத்தில் மீசைவேசம் போட்டு பிரபல்யம் பெற்றதால் மீசைக்கார அந்தோணிப்பிள்ளை என்று அழைக்கப்பட்டவர்.

நாடக நெறியாளானாய், நடிகனாய், ஒப்பனையாளனாய் விளங்கிய இவர் அண்ணாவி தம்பிமுத்துவின் நாடகங்களைப் பார்த்த அருட்டுணர்வினாலும் நாடகத்தின் மீது இருந்த அளப்பரிய பிரியத்தினாலும் இத்துறையில் அதிக ஈடுபாட்டுடன் பல நாடகங்களை எழுதியும், நடித்தும் மேடையேற்றியுள்ளார்.

'ஊசோன்பாலந்தை', 'இருதயராஜன்', 'காவலனை வென்ற கற்புக்கரசி', 'மனச்சாட்சி', 'ஞானசௌந்தரி' என்பன இவர் நடித்தும் மேடையேற்றிப் புகழ்பெற்ற நாடகங்களாகும். இவரது மகன் யோன்பிள்ளை என்பவர் பிற்காலத்தில் சிறந்த நடிகராக விளங்கியவர்.

'இவரது அக்கால நாடக உத்திக்கு ஓர் உதாரணத்தைக் கூறலாம். 1949ஆம் ஆண்டளவில் பெரியகடை மாதாங்கோயில் வளவுக்குள் மூன்று பெரிய மேடை களை அமைத்து ஒரே நேரத்தில் மூன்று வித்தியாசமான காட்சிகளை அமைத்து ரோமானிய உடையலங்காரங்களுடன் கிறிஸ்துவின் பிறப்பு உயிர்ப்பு விழா வினைக் குறித்து நிற்கும் 'பாஸ்கா காலத்தை' நாடகமாகக் காட்டி புதிய சாதனை படைத்து பிரமிக்க வைத்தவர் இந்த அந்தோணிப்பிள்ளை (ஆதாரம்: தா.பி.சுப்பிர மணியம் கட்டுரை).

இந்த நாடகத்தில் இந்தியாவில் பிரமிக்க வைத்த மனோகர் நாடகங்களின் நாடக உத்திகளை பெரிதும் பயன்படுத்தி அக்கால நாடகங்களை நிறைய மேடையேற்றியுள்ளார்.

இவர் ஒரு கிறிஸ்தவராக இருந்தமையினால் கிறிஸ்தவமத நாடகங்கள் மீது அதிக நாட்டமும், ஈடுபாடும் காட்டியவராகத் திகழ்ந்ததோடு இவரது நாடகங்கள் பல மன்னார் பிரதேசத்தில் மேடையேற்றப்பட்டுள்ளன. ஊசோன் பாலந்தை, ஞானசௌந்தரி என்பன புகழ்பெற்ற கிறிஸ்தவ நாடகங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிநயசிகாமணி விஸ்வலிங்கம் (1928-1993)



அபிநயசிகாமணி
விஸ்வலிங்கம்

திருகோணமலையின் நாடக வரலாறு அதாவது மேடை நாடகங்கள் என்கின்ற போது விஸ்வலிங்கம் என்னும் மாபெரும் கலைஞனை புறம்தள்ளிப் பார்க்க முடியாத அளவுக்கு பிரசித்த சாதனைகளைத் தனது காலம் வரை செய்தவர் நாடகத்தந்தை விஸ்வலிங்கமாகும்.

1928 - 1993 வரை வாழ்ந்த இவர் தனது 12 வயதில் அண்ணாவி தம்பி முத்துவைத் தனது மானசீகக் குருவாகக் கொண்டார். தம்பிமுத்து அண்ணாவியின் பவளக்கொடி நாடகத்தை கணேசன் அரங்கில் பார்த்த விஸ்வலிங்கம் அதே கூத்தை பௌர்ணமி விழாவில் ஆடினார். இதைக்கண்ட இவரது தந்தை 'நீ நடிக்கப் போகிறாயா? அல்லது படிக்கப் போகிறாயா?' என்று கேட்டு அதட்டி னார். தனது தந்தையாரின் வற்புறுத்தலுக்கு அமைய தம்பாங்கோட்டைக்குச் சென்றார்.

அங்கு சென்ற காரணத்தினால் சிங்களத்தை நன்றாகக் கற்கவும், பேசவும் பழகிக் கொண்டார். 1945ஆம் ஆண்டு மீண்டும் திருமலைக்கு வந்த கலைத்தந்தை, தந்தையாரின் வற்புறுத்தலுக்கு அமைய சுருட்டுக் கடை போட்டு வியாபாரம் நடாத்திப் பார்த்தார் சரிவரவில்லை. அதன் பின்னர் தையல் பழகினார். இது பிற்காலத்தில் இவரது நாடக வாழ்க்கைக்கு உதவியது.

தம்பிமுத்து அண்ணாவியார் நாடகத்தின் மீது கொண்ட அளவற்ற காதலால் திருமணம் செய்த அன்று முதலிரவே தனது மனைவியை அழைத்துக் கொண்டு பெற்றோருக்குத் தெரியாமல் தம்பிமுத்துவின் நாடகத்தில் நடிக்கச் சென்றுவிட்டார் இந்த நாடகப்பித்தன். தாய் தந்தையருக்கோ பொல்லாத அதிர்ச்சி.

தனது 12ஆவது வயதில் 'பவளக்கொடி' நாடகத்தைப் பார்க்கச் சென்ற மைக்காக பிரம்படி பட்டு, நாள் பூராவும் நட்டநடு வெய்யிலில் பப்பாசிமரத்தில் கட்டிவைக்கப்பட்டும் நாடகப்பசி மறக்காத இந்த இளைஞனின் வாழ்வில் திருகோணமலை திருவள்ளுவர் கழகமும், வைத்தியர் சின்னத்துரை, காந்தி ராஜகோபால், ஆர்மோனியம் சின்னையா, போன்றோர் ஆதார புருஷர்களாக அமைகின்றார்கள்.

திருவள்ளுவர் கழகத்துடன் தன்னை இணைத்துக் கொண்ட கலைத்தந்தை விஸ்வலிங்கம் 1951ஆம் ஆண்டு தனது முதல் நாடகமான கொள்ளைக்காரன் என்னும் நாடகத்தை இந்துக்கல்லூரியில் மேடையேற்றி பிரதான பாத்திரத்தில் நடிக்கவும் செய்தார்.

சுமார் 500 நாடகங்களுக்கு மேல் மேடையேற்றி, அபார சாதனை படைத்த கலைத்தந்தையின் நாடக சேவையைப் பாராட்டி கண்டி தென்னக்கும் புர சச்சி தானந்த ஜே.பி. 1965ஆம் ஆண்டு இவருக்கு, 'அபிநய சிகாமணி' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டத்தைச் சூட்டினார். அதுபோலவே 1980ஆம் ஆண்டளவில் வைத்தியர் சின்னத்துரை செல்வநாயகபுரம் ஆலடி விநாயகர் ஆலயத்தில் வைத்து 'பத்ம சிரோன்மணி' என்ற பட்டத்தைச் சூட்டினார்.

விஸ்வலிங்கம் அவர்கள் 1967ஆம் ஆண்டு, அன்புவழி புரத்தில் மதிவளர் நாடகமன்றம் என்ற ஒன்றை ஸ்தாபித்து 21 நாடகங்களை மேடை யேற்றினார். ஈழத்து நவீன மேடை நாடக வரலாற்றில் திரு. விஸ்வலிங்கம் ஆச்சரியப்படும் சாதனை படைத்த ஒரு கலைஞன், நெறியாளன், நடிப்பு மேதை எனலாம். இவர் மேடையேற்றிய எல்லா நாடகங்களையும் தர முடியாத போதும் காலக்கிரமத்தின்படி அவர் மேடை யேற்றிய நாடகங்களின் அட்டவணையை தருகின்றேன்.

**எஸ். விஸ்வலிங்கம் மேடையேற்றிய நாடகங்கள்**

| இல | ஆண்டு | நாடகத்தின் பெயர் | வகை | மன்றம் | மேடை யேற்றிய இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | 07.04.1951 | கொள்ளைக்காரன் | வரலாறு | முத்தமிழ் நாடக மன்றம் | தி/ இந்துக் கல்லூரி |
| 2 | 22.08.1951 | வெற்றியடா வெற்றி | வரலாறு | - | - |
| 3 | 01.03.1952 | சேரநாட்டு இளவரசி | வரலாறு | - | - |
| 4 | 14.11.1953 | உயிர் நண்பன் | வரலாறு | - | தி/ இந்துக் கல்லூரி |
| 5 | 18.03.1953 | பட்டுச்சட்டை | வரலாறு | - | - |
| 6 | 30.05.1953 | இளைஞர் | சமூக நாடகம் | - | தி/ இந்துக் கல்லூரி |
| 7 | 11.09.1953 | பாரதியார் | | சாந்தி சேவா சங்கம் | தி/ இந்துக் கல்லூரி |
| 8 | 19.09.1954 | ஏன் மறந்தோம்? | சமூக நாடகம் | திருவள் ளுவர் மன்றம் | தி/ இந்துக் கல்லூரி |
| 9 | 17.12.1955 | சிற்பியின் சிதைந்த உள்ளம் | வரலாறு | - | தி/ அன்ரனி பாடசாலை |
| 10 | 10.11.1956 | சமாதி | வரலாறு | (மடத்தடி) கலை வாணி நாடக சபா | தி/ வெலிங்டன் தியேட்டர் |
| 11 | 08.06.1957 | யார் குற்றம்? | துப்பு | மக்கள் நாடக மன்று | தி/ புனித சூசையப்பா கல்லூரி |
| 12 | (22/ 23). 11.1958 | தவறான பாதை | சமூக நாடகம் | மக்கள் நாடக மன்று | தி/ புனித சிங்களம் அந்தோனி |
| 13 | 22.02.1963 | சிவபக்தன் சித்திரபானு | புராணம் | மதிவளர் நாடக மன்றம் | தி/ இந்துக் கல்லூரி |
| 14 | 19.02.1966 | கணபங்கம் | விஞ்ஞானம் | தி/ மதிவளர் நாடக மன்று | செல்வநாயகபுரம் |
| 15 | 21.11.1967 | தந்தையின் குழந்தை | சமூக நாடகம் | தி/ மதிவளர் நாடக மன்று | செல்வநாயகபுரம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16 | 27.03.1968 | அடங்கிய பிடாரி | சமூக நாடகம் | மதிவளர் அன்புவழி புரம் நாடக மன்றம் | அ.த.க. பாடசாலை கஞ்சி மடம் |
| 17 | 29.08.1968 | காலம் மாறிப் போச்சு | சமூக நாடகம் | தி/ நாமகள் நாடக மன்று | - |
| 18 | 30.09.1968 | முற்றத்து வளர்க்காத முருங்கை | சமூகம் | தி/ மதிவளர் நாடக மன்று | அ.த.க. கஞ்சி மடம் |
| 19 | 1968 | ஆடக சௌந்தரி | - | - | தொடுவாய்ப் பிள்ளையார் கோவிலடி |
| 20 | 15.02.1969 | திருக்கோண லிங்கம் | புராணம் | தி/ மதிவளர் நாடக மன்று | லிங்கநாதர் |
| 21 | 1969 | தெய்வமே துணை | புராணம் | அ/ மதிவளர் நாடக மன்று | லிங்கநாதர் |
| 22 | 1969 | அன்பே சிவம் | புராணம் | அ/ மதிவளர் நாடக மன்று | கன்னியா மாதர் முன்னேற்றச் சங்கம் |
| 23 | 14.01.1970 | ஓடி வந்தவர்கள் | - | அ/ மதிவளர் நாடக மன்று | கன்னியா மாதர் முன்னேற்றச் சங்கம் |
| 24 | 14.02.1970 | இருண்ட நெஞ்சம் | சமூக நாடகம் | அ/ மதிவளர் நாடக மன்று | உப்புவெளி |
| 25 | 06.03.1970 | திருந்திய மனிதன் | சமூக நாடகம் | அ/ மதிவளர் நாடக மன்று | அன்புவழி புரம் |
| 26 | 06.03.1970 | மாமா விஜயம் | சமூக நாடகம் | அ/ மதிவளர் நாடக மன்று | சிவன் கோவிலடி |
| 27 | 25.06.1970 | நாடகத்தில் ஓர் நாடகம் | - | அ/ மதிவளர் நாடக மன்று | திருமலை இளைஞர் கழகம் |
| 28 | 09.03.1971 | மாமி விஜயம் | சமூக நாடகம் | அ/ மதிவளர் நாடக மன்று | - |
| 29 | 13.12.1971 | தமிழ்நந்தி | வரலாறு | அ/ மதிவளர் நாடக மன்று | செல்வநாயகபுரம் |
| 30 | 18.02.1971 | சோக்கல்லோ சோமு | நகைச் சுவை | அ/ மதிவளர் நாடக மன்று | சாம்பல் தீவு |
| 31 | 13.02.1972 | நெஞ்சிலோர் ஆலயம் | புராணம் | அ/ மதிவளர் நாடக மன்று | அன்புவழி புரம் |
| 32 | 03.03.1973 | பலிபீடம் | சமூக நாடகம் | அ/ மதிவளர் நாடக மன்று | அன்புவழி புரம் |
| 33 | 03.03.1973 | மோக்குபண்டா | நகைச்சுவை | அ/ மதிவளர் நாடக மன்று | பாலையூற்று |
| 34 | 11.08.1973 | எல்லாம் காசுக்காக | சமூக நாடகம் | அ/ மதிவளர் நாடக மன்று | கஞ்சிமடம் பாடசாலை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைக்காலத்தில் சிறைச்சாலைக் காவலனாகக் கடமையாற்றிய காலத்தில் சிங்களப் பிரதேசத்தில் பல இடங்களில் கடமையாற்றிய அனுபவத்தில் சிங்கள மொழியைச் சிறந்த முறையில் பேசக் கற்றுக் கொண்டதோடு, ஏலவே தம்பாங்கோட்டைக்குச் சென்று தங்கியிருந்த காலத்தில் சிங்களமொழியைச் சிறந்த முறையில் கற்றுக் கொண்டதனால் திருகோணமலைச் சிங்கள நாடகத் துறைக்கு மாத்திரமின்றி இன்றைய சிங்கள சினிமாத் துறையில் பிரபல்யம் பெற்று விளங்கிய பல சிங்கள நாடகக் கலைஞர்களை உருவாக்கி நெறிப்படுத்திய பெருமையும் இவரைச் சாரும்.

திரு.விஸ்வலிங்கம் அவர்கள் கட்டுரை ஒன்றில் சிங்கள நாடகங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"திருகோணமலையில் எவரும் முயற்சிக்காத சிங்கள நாடகக் கலையில் துணிந்து இறங்கி வெற்றி பெற்றமைக்கு, ஏற்கனவே கட்டுப்பாடற்ற முறையில் இயங்கி ஒரு நாடகத்துடன் கலைந்து போன நாடக மன்றங்களின் அவல நிலையே காரணம்.

சிங்கள நாடகம் ஒன்றை இயற்றிப்பழக்குவதற்கு முதல்முதல் சந்தர்ப்பம் கிடைத்தபோது சட்டதிட்டங்களோடு சென்றேன்.."

இவரால் மேடையேற்றப்பட்ட சிங்கள நாடகங்கள்: அசர்ணயா வெறதிமக, மகே நங்கி (59), துஷ்ட நந்தம்மா, மகேவேலி, சோயுகுறு பிரமய, மகேதுவ, மாரக அவசானய, அனாத தருணிய குருசுலங் மீகிய மிகாகே.

## எஸ்.இராயப்பு (1923 - 1970)

அண்ணாவி தம்பிமுத்துவின் நாடகமரபை ஆராதித்து தானும் ஓர் நாடகக் கலைஞனாக வேண்டுமென்ற ஆசையுடன் வந்த இன்னொரு கலைஞர் இராயப்பு (1923- 1970). 'விலைமகள்' என்ற நாடகத்தை எழுதி மேடையேற்றிய இராயப்பு தி.மு.க. கலைஞர்கள்பால் ஈர்க்கப்பட்ட ஒரு கலைஞனாகவும், அடுக்கு மொழியில் அழகான நாடகங்களை எழுதும் வல்லமை பெற்றவராகவும் விளங்கினார்.

பல நாடகங்களை எழுதி மேடையேற்றிய போதும் விபரங்கள் பெறுவது கஸ்டமாகவுள்ளது. தினகரன் பத்திரிகையின் திருகோணமலை நிருபராக இருந்த இராயப்பு தனது இறுதிக்காலத்தில் மங்களேஸ்வரி சோதிட நிலையத்தின் சோதிடக்கலாநிதி க.வேலுப்பிள்ளைக்கு எழுத்து உதவியவராக தனது அந்தி மகாலத்தைச் செலவு செய்துள்ளார்.

## த.அரியநாயகம்

அரியாநாயகம் இன்னுமொரு சிறந்த கலைஞனாவார். இராயப்பு, அரியநாயகம் இருவரையும் இரட்டையர்கள் என்று சொல்வார்கள். நடிப்பிலும் சரி ஏனைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களிலும் இவ்விருவரும் இரட்டையர்களாகத் தொழிற்பட்ட சிறந்த கலைஞர்களாவர்.

இவர்களின் கலைச்சேவையின் பதிவுகளைப் பெறுவது கஸ்டமாகவுள்ளதால் விபரங்களைத் தரமுடியவில்லை.

### என்.மோகன்

இக்காலத்தில் நாடக உலகோடு அதிக ஈடுபாடு கொண்ட இன்னொரு கலைஞர் என்.மோகன் 'நற்றமிழ் காத்த நல்லாள்' (1957) (புனித அந்தோனியார் பாட சாலை) இதுபோன்ற பல நாடகங்களை மேடை யேற்றிய மோகன் தி.மு.க. திருகோணமலைக் கிளையின் முக்கிய உறுப்பினராக இருந்து பல அரசியல் மேடைகளில் தனது சீர்தீருத்தக் கருத்துக்களை முன்வைத்தவர். பேச்சு ஆற்றல் நிறைந்த இவர் பல நாடகங்களை மேடையேற்றியும் நடித்தும் உள்ளார் என அறியக் கூடியதாகவுள்ளது.

### எஸ்.சி.ஜேசுதாஸன் (1933-2003)

கலால் திணைக்களம்,பொலிஸ் திணைக்களம், சிறைச்சாலை அதிகாரி, நீதிமன்ற முதலியாக, மரண விசாரணை அதிகாரியாக, சமாதான நீதவானாக சேவை செய்து வந்த ஜேசுதாஸன் பாரம்பரியம்மிக்க கலைக்குடும்பத்தில் பிறந்த ஒருவர். அண்ணாவி சின்னையா அந்தோணியாப்பிள்ளையின் மகன் தான் ஜேசு தாஸன்.

சின்னையா அந்தோணிப்பிள்ளை என்ற பெயர் கொண்ட இவரது தந்தை யாரும் சோடனைச்செல்லையா என்பவரும் இணைந்து 1935- 1939 ஆண்டு காலப்பகுதியில் திருகோணமலை நகரிலும், கிராமங்களிலும் பல கூத்துக்களை ஆடி வந்துள்ளனர். சுத்தியவான் சாவித்திரி, கண்டிதாஸன், மற்றும் கோவலன் சரித்திரம், நல்லதங்காள், ஞானசீலன், பங்கஷம், அல்லி அர்ச்சுனா, போன்ற பல்வேறு நாடகங்களையும் கூத்துக்களையும் அந்தோணிப்பிள்ளை நெறியாள்கை செய்து மேடையேற்றியுள்ளார்.

இரண்டாம் உலகப்போர் 1944ஆம் ஆண்டு முடிவடைந்ததன் பின் தனது தந்தை வழி மீன்குஞ்சை போன்று நாடக நடிகராக ஆகிக் கொண்டார் ஜேசுதாஸன். கண்டிச்சிறைச்சாலையில் அதிகாரியாக கடமையாற்றிய வேளையில் சிறைச் சாலை கைதிகளைக்கொண்டு 'திருந்திய கைதி' என்ற நாடகத்தை 1953ஆம் ஆண்டு மேடையேற்றி பலரது பாராட்டுக்களையும் பெற்றார்.

இவர், 'கடமை மறவாதே', 'மலர்ந்த வாழ்வு', 'திருந்திய மனிதன்' ஆகிய நாடகங்களை நெறியாள்கை செய்து மேடையேற்றியதோடு வசனம், இசை யமைப்பு ஆகிய துறைகளிலும் வல்லவராக திகழ்ந்தார். 1962ஆம் ஆண்டுகளில் கல்லூரி நாடகங்கள், சமய நாடகங்கள், தேவாலய நாடகங்கள் ஆகியவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரித்து மேடையேற்றியுள்ள இவர் சிறந்த பாடகனாக, ஆர்மோனிய கலைஞனாக, கதை வசன கர்த்தாவாக, இசை அமைப்பாளனாக திகழ்ந்துள்ளார்.

ஜேசுதாஸன் தனது ஆரம்பக்கல்வியை திருமலை புனிதமரியாள், புனித சூசையப்பர் கல்லூரிகளிலும் பெற்றுக்கொண்டதோடு 1987இல் சுவாமி நோபேட் ஒக்கஸ் அவர்களுடன் இணைந்து 'முழுநிலா' என்ற தொலைக்காட்சி நாடகத்தை தயாரித்து அளித்துள்ளார்.

இவர் நெறியாள்கை செய்த நாடகங்களாவன: திருந்திய மனிதன் (1962), இதுவா தண்டனை (1964), துணிந்த உள்ளம் (1964), எல்லாம் காசுக்காக (1973), சொர்ப்பன வாழ்வில் (1979), குரு தட்சனை (1979), ஜேசுவின் பாடுகள் (1993), நினைவுச்சின்னம், மலர்ந்த வாழ்வு, சிறைக்கைதி, சீதனம், எதிரொலி, கேளுங்கள் கொடுக்கப்படும், எஸ்தர், ஆபிரகாமின்பலி, கோவியாத், தாவீது (நாட்டிய நாடகம்).

## த.அமரசிங்கம் (1937 - 2006)


த.அமரசிங்கம்

1932ஆம் ஆண்டு திருமலையில் தம்பிமுத்துவுக்கு மகனாக பிறந்து 1957ஆம் ஆண்டு எஸ்.எஸ்.சி. பரீட்சை சித்தியெய்து 1959ஆம் ஆண்டு சென்னை மெற்றிகுலேசன் பரீட்சையில் சித்தியடைந்தார். ஐந்து வயதில் இருந்தே பாட சாலை நாடகங்களில் பங்கு கொண்டு தனது கலைத்துறையை வளர்க்க முற்பட்டவர் அமரசிங்கம்.

கலாவிநோதன் சித்திஅமரசிங்கம் என்று அழைக்கப்படும் கலாபூஷணம் அமரசிங்கம் திருகோணமலை மேடைநாடக வரலாற்றில் பல தசாப்தங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்ட கலைஞர். கல்வி கற்கும் காலத்தில் இருந்தே எழுத்துத் துறையிலும், நாடகத் துறையிலும் நிறைந்த ஈடுபாடு கொண்டவர்.

பல பரிமாணங்களைக் கொண்ட பல்துறை ஆற்றல் கொண்ட அமரசிங்கம் நாடக நடிகனாக தயாரிப்பாளராக, நாட்டுக்கூத்தனாக, வில்லுப்பாட்டு கலைஞனாக, வானொலி கலைஞனாக, இலக்கிய ஆர்வலனாக, சினிமா நடிகனாக, பரிணமித்தவர்.

நாடகத்தந்தை விஸ்வலிங்கத்தைத் தனது மானசீகக் குருவாகக் கொண்ட இவர் தனது பள்ளிப்பருவ காலத்தில் 'கப்பலோட்டியதமிழன்', 'ஔவையார்', 'வழிகாட்டி', 'மனமாற்றம்', 'வேடன்', 'கண்ணப்பா', 'நந்திவர்மன் காதலி' போன்ற நாடகங்களில் நடித்து புகழ் ஈட்டியவர்.

தனது மேற்படிப்புக்காக இந்தியா சென்ற (1958) அமரசிங்கம் நாடகத் துறையுடன் அதிக ஈடுபாடு கொண்டு அதன் நுட்பநெறிகளை ஆர்வத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றார், பல்வேறு நாடகங்களைத் தமிழகத்தில் பார்த்து அனுபவத்தைத் திரட்டிக் கொண்டது மாத்திரமன்றி திருச்சியில் 'அழியட்டும் அண்ணா', சென்னையில் 'பண்போடு பிறந்தது', 'மணிமகுடம்' போன்ற நாடகங்களில் நடித்து பாராட்டுக் களைப் பெற்றார்.

தமிழகத்தில் இருந்து திரும்பிய இவர் 1968ஆம் ஆண்டு தனது ஆரம்ப கால நண்பர்கள் நடத்திய கலைவாணி நாடக மன்றத்துடன் இணைந்து பல நாடகங்களில் நடித்து புகழ் ஈட்டிய காலத்தில் 1970ஆம் ஆண்டு, அமரன்ஸ்கிறீன் என்ற நாடக மன்றை நிறுவி தனது நண்பர்களின் துணை கொண்டு 'குத்துவிளக்கு' என்னும் பரிசோதனை முயற்சி நாடகம் ஒன்றை நெறியாள்கை செய்து மேடை யேற்றினார். இந்த நாடகம் மேடைக்கதை எழுதப்பட்டு, நெறியாள்கை செய்யப் பட்டதுடன் காட்சி அமைப்பையும் தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டு புதிய பரிசோதனை முயற்சிகளைச் செய்துகாட்டி நாடக உத்திகள், மேடை உள்ளீடு களில் அரிய அற்புதங்களைச் செய்தவர்.

ஆரம்பகாலத்தில் சச்சியானந்தம் என்ற கலைஞருடன் இணைந்து அமரன் ஆனந்தன் என்ற இணைப்பெயருடன் பல ஓரங்க நாடகங்களையும் மேடை யேற்றியுள்ளார்.

தன்னை ஒரு நாடக நெறியாளராக ஆக்கிய பெருமைக்குரியவர் தனது நண்பர் க.ஜோன் என்று, இவர் நன்றி உணர்வோடு கூறுவார்.

அக்காலத்தில் பிரபயல்யமாகப் பேசப்பட்ட கலைஞன், நெறியாளன் என் பதற்கு 12.10.1968 தினபதியில் இவர் பற்றி வந்த குறிப்பொன்றை அப்படியே தருகின்றேன்.

"தரகரின் பதில் கேட்டு, காதலன் தனது வீட்டில் மனச்சாட்சியுடன் போரிட்டுக் கொண்டிருக்கும் அதே வேளையில், அவன் காதலி வீணையில் 'சொன்னது நீதானா?' என்ற இசையைக் கவலையுடன் மீட்டுகிறாள். இந்த இரண்டு காட்சிகளையும் மேடையில் மாறி மாறிக் காட்டுவது ஏதோ திரைப்படம் பார்க்கின்றோமா? என்ற உணர்ச்சியைத்தான் ஏற்படுத்தியது. இந்நாடகத்தை டைரக்ட் செய்த அமரசிங்கத்திற்கு எமது பாராட்டுக்கள்."

'குத்துவிளக்கு' நாடக மேடையேற்றத்தைத் தொடர்ந்து 'குத்துவிளக்கு நாடகமலர்' ஒன்றையும் அமரசிங்கம் (23.08.1970) வெளியிட்டது மாத்திரமன்றி, பழம் பெரும் கலைஞன் எஸ்.இராயப்புக்கு இம்மலரைக் காணிக்கையாக்கி யுள்ளார்.

குத்துவிளக்கு நாடகத்தைத் தொடர்ந்து 'சொப்பன வாழ்வில்' (1971) என்ற நாடகத்தையும் அரங்கேற்றிப் புகழ் பெற்றவர். மட்டக்களப்பு, கேகாலை, கொழும்பு போன்ற ஏனைய இடங்களிலும் பல நாடகங்களை மேடையேற்றியும், நடித்தும் நவரசத்திலகம் என்ற பாராட்டைப் பெற்ற அமரசிங்கம் ஈழத்தின் திரைப்பட வரலாற்றிலும் முன்னோடிக்கலைஞனாக மதிக்கப்படுகிறார். டாக்டர்.வேதநாயகம் அவர்களின் இராஜராஜேஸ்வரி பிலிம்ஸ் தயாரித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தென்றலும் புயலும்' என்னும் திரைப்படத்தில் வினோதன் என்ற நகைச்சுவைப் பாத்திரம் ஏற்று நடித்து பாராட்டுப் பெற்றவர்.

வில்லிசை, பத்திரிகைத் துறை, வெளியீட்டுத் துறை போன்ற பல்வேறு தடங்களில் கால்பதித்து வெற்றி கண்டவர். தினபதி சிந்தாமணி பத்திரிகையின் கொழும்பு நிருபராகக் கடமையாற்றியவர். ஈழத்து இலக்கியச் சோலை என்னும் வெளியீட்டு அகத்தை திருமலை யில் ஸ்தாபித்து திருகே98ாணமலையைச் சேர்ந்த எழுத்தாளர்களின் 15இற்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டு, ஆவணப்பதிவு செய்து வந்தவர்.

இந்த இரண்டாவது காலக்கட்டத்தில் (1960 - 1970) திருகோணமலை நாடக வரலாற்றுக்கு தொண்டாற்றிய இன்னும் சில கலைஞர்களை இங்கு நினைவில் கொள்ள வேண்டியுள்ளது. அவர்கள் மிகவும் கவனம் செலுத்தப்பட வேண்டியவர்கள் வி.சாந்தமுத்து, தா.பி.சுப்பிரமணியம், கலைத்தாஸன் சின்னத்தம்பி, ஜே.கருணை யோசப், நிலாவெளி எஸ்.இராஜரட்ணம், நோபேட் ஒக்கல் சுவாமியார் ஆகியோர் முக்கியமானவர்கள்.

### நிலாவெளி இராஜரட்ணம்



நிலாவெளி
இராஜரட்ணம்

ஆசிர்வாதம் சிங்கராஜா என்ற இயற்பெயர் கொண்ட இராஜரெட்ணம் 1923ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கச்சேரி அடியில் பிறந்தார். தொழிலின் நிமித்தம் 1954 ஆம் ஆண்டு திருகோணமலைக்கு வந்து கடற்படை தளத்தில் வேலை செய்தார்.

தனது பத்தாவது வயதில் யாழ் அந்தோனியார் ஆலய கலாசாரப்பகுதியில் சேர்ந்து 'சத்தியசீலன்' என்னும் நாடகத்தில் அரசனாக நடித்ததன் மூலம் நாடக உலகத்துக்குள் பிரவேசித்தார். 1957ஆம் ஆண்டு வழக்கறிஞன் என்ற நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்து இயக்குனரான இவர் திருகோணமலையின் புகழ் பெற்ற நாடக ஆசிரியர், கலைத்தாசன் சின்னத்தம்பியுடன் சேர்ந்து இருபத்தினான்கிற்கு மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளார்.

ஈழத்திலுள்ள முன்னணி கலைஞர்கள், மூத்த கலைஞர்கள் யாருமே குறிப்பிட முடியாத அளவிற்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளார். இவர் நடித்த 'ஞானசௌந்தரி' நாடகம் முன்னூறிற்கு மேற்பட்ட தடவைகள் வடகிழக்கின் பல இடங்களில் மேடையேறியுள்ளது.

'சந்திரலேகா' என்ற படத்தை 'சகோதர விரோதி' என்று மேடை நாடகமாக எழுதி அதன் வில்லன் பாத்திரத்தை ஏற்று நடித்துள்ளார். இந்த நாடகத்தின் அனுசரணையாளராக இருந்து அதன் பின்னணி இசையை ஆக்கிக்கொடுத்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ் பெற்ற நடிகர் நடிகமணி வைரமுத்து ஆகும். திருகோணமலை சுண்டங் காட்டு பிள்ளையார் கோவிலடியில் வாழ்ந்து பல நாடகங்களை மேடையேற்றி சாதனை புரிந்த முல்லைக் கிருஸ்ணன் என்ற கலைஞருடனும் சேர்ந்து நடித் துள்ளார்.

'ஞான சௌந்தரி' நாடகத்தில் புலேந்திரனாக நடித்த சிறப்பைக் கண்ட கலையரசு சொர்ணலிங்கம் இவருக்கு 'கலை வேந்தன்' என்ற பட்டத்தை சூட்டி கௌரவித்துள்ளார்.

'ஜெயாமன்றம்' என்ற ஒன்றை ஸ்தாபித்து உள்ளூர் கலைஞர்கள் பலரை உருவாக்கி அவர்கள் உதவியுடன் 'சத்தியமுத்திரை', 'சந்திரமதி', 'எஸ் தாக்கியார்', 'மயான காண்டம்' போன்ற நாடகங்களை அக்கிராமத்தில் மேடையேற்றி சாதனை புரிந்தவர். பிரதி ஆக்கம், நடிப்பு, இசை, மேக்கப் போன்ற துறைகளில் திறனும், அனுபவமும் கொண்ட இராஜரட்ணம் தேவாலய திருவிழாக் காலங்களில் தனது நாடகங்களையும், கூத்துக்களையும் மேடையேற்றிய கலைஞனாவார்.

### நோபேட் ஒக்கல்

பெரியகடை மாதாங்கோவிலில் குருவாக தனது தேவகடமையுடன் கலைத் துறைக்கும் அற்புதப் பணியைப் புரிந்துள்ளார். இவர் மேடையேற்றிய 'உடை படாத முத்திரை' (1952), 'பாஸ்கர் நாடகம்' (1985) ஆகியவை நாடக உத்திகளில் சாதனை படைத்த நாடகங்களாகும்.

இவர் பற்றி தா.பி.சுப்பிரமணியம் ஒரு கட்டுரையில் பின்வருமாறு குறிப் பிட்டுள்ளார்: '1956இல் மேடையேற்றப்பட்ட இவரது நாடகமொன்றில் வரும் காட்சியில் கட்டிலில் உறங்கிக்கொண்டிருக்கும் அரசனை உயிரோடு எரிக்கும் காட்சியினைத் தத்ரூபமாக யுக்தி முறைகளைக் கையாண்டு இரசிகர்களைத் திணறடித்தவர். 1987இல் பாஸ்கா நாடகமொன்றை பிரமாண்டமான மேடை யமைப்பில் நான்கு நாட்கள் வரலாறாக புதிய புதிய யுக்தி முறைகளைக் கையாண்டு, மேடையேற்றியவர். நவீன நாடக உத்திகளைக் கையாள்வதில் வல்லவராகத் திகழ்ந்தார் என்பதற்கு மேற்படி நாடகத்தினை முற்று முழுதாக நாடாவில் ஒலிப்பதிவு செய்து இசையை, நூற்றுக்கு மேற்பட்ட இசைத் தட்டு களிலிருந்து பதிவு செய்து, நாடக மேடையில் நடிகர்கள் நடிக்கும் போது அவற்றைப் பயன்படுத்தி, சினிமா ஒன்றைப் பார்ப்பது போன்ற உணர்வையும், ஆச்சரியத்தையும் அந்த நாடகத்தில் ஏற்படுத்திக் காட்டினார்.

சிலுவை மரணக் காட்சியை அவர் அமைத்திருந்தவிதம் அற்புதமானதும், அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியதுமான காட்சியாகும்' எனப் புகழ்ந்து எழுதியுள்ளார். இந்த நாடகம் 1985ஆம் ஆண்டு தொலைக்காட்சி நாடகமாக தயாரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தா.பி.சுப்பிரமணியம்**

அருட்தந்தையும், நாடக நெறியாளருமான நோபேட் ஒக்கல் அவர்களால் அறிமுகம் செய்துவைக்கப்பட்ட கலைஞர்தான் தா.பி. என்று சுருக்கமாக அழைக் கப்படும் தா.பி. சுப்பிரமணியம்.

1952ஆம் ஆண்டளவில் உடைபடாத முத்திரை என்ற நாடகத்தில் நடித்ததன் மூலம் இக்கலைக்குள் பிரவேசித்து தா.பி. பல நாடகங்களில் பல்வேறு பாத்தி ரங்களில் நடித்தும், பிரதிகளை எழுதியும் புகழ்பெற்று இருக்கின்றார். 1958ஆம் ஆண்டு, திருகோணமலை கலைவாணி நாடகமன்றம் ஸ்தாபிக்கப்பட்ட போது அதன் செயலாளராகக் கடமையாற்றியவர் தா.பி.

உடைபடாத முத்திரை (1952), பழிக்குப் பழி (1958), சைக்கிளோன் (1964) போன்ற நாடகங்களில் நடித்ததோடு நாடகப்பிரதியொன்றையும் ('கோயிலும் சுனையும்' என்ற பெயரில்) எழுதியுள்ளார்.

இந்த இரண்டாங் காலக்கட்ட நாடக மேடைக் கலாச்சாரங்களை நாம் உற்று நோக்குவோமாயின் மேற்படி காலப்பகுதி நாடகங்கள் மூன்று வரன்முறைகள் கொண்டவையாக விளங்குகின்றன.

1. கிறிஸ்தவ செல்வாக்குக் கொண்டவை
2. சினிமாச் செல்வாக்குக்கு உட்பட்டவை
3. வரலாற்றுச் சுவடுகள் கொண்டவை

முதலாவது வகையாகக் காட்டப்பட்டவை கிறிஸ்தவச் செல்வாக்குடை யவர்கள் நெறிப்படுத்திய அல்லது கிறிஸ்தவ ஆன்மீகத் துறையோடு ஈடுபாடு கொண்ட கலைஞர்கள் தயாரித்து தேவையான அடிப்படையில் மேடையேற்றிய நாடகங்களைக் குறிப்பிடலாம்.

உதாரணமாக அந்தோனிப்பிள்ளையவர்களால் மேடையேற்றப் பட்ட 'ஊசோன்பாலந்தை', 'பாஸ்கா', நிலாவெளி இராஜரட்ணத்தின் 'எஸ்தாக்கியார்', 'சத்தியமுத்திரை', 'நோபேட் ஒக்கல்' அவர்களின் 'உடைபடாத முத்திரை', 'பாஸ்கா நாடகம்', மற்றும் 'ஞானசௌந்தரி நாடகம்', 'இருதயராஜன்' ஆகிய நாடகங்களையும் நெறியாள்கை செய்தவர்களான க.ஜோன், த.அரியநாயகம், யோன்பிள்ளை போன்றோர் கிறிஸ்தவ மதம் சார்ந்த நாடகங்களையே கூடியளவு மேடையேற்றியவர்களாக விளங்கினார்கள்.

இன்னும் ஒருவகையில் தயாரிக்கப்பட்ட பெருந்தொகையான நாடகங்கள் சினிமாப் பண்புகளை பின்வரும் வகையில் கொண்டிருந்தன: நடிப்புத்தன்மை, வசன அமைப்பு, காட்சி அமைப்பு, பாடற்காட்சிகள், இசையமைப்பு.

மேற்படி சினிமாப்பண்பை உள்வாங்கிய நாடகங்களாகக் காணப்பட்டன என்பதற்கு இதில் பங்கேற்று நடித்த நடிகர்கள் சினிமாவின் பிரபல்ய நடிகர்களின் நடிப்பை உள்வாங்கி நடித்தமையும், மு.கருணாநிதி, சக்தி கிருஷ்ணசாமி போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களின் வசன ஜீரணிப்புக்கள் சினிமாப்பாடல்களை மாற்றி அப்படியே வேறுபாங்கில் இசையமைத்துப் பாடியமை போன்ற பண்புகள் மலிந்து காணப் பட்டமை இக்கால நாடகத்தில் காணப்பட்ட சேர்வைகளாகும்.

இக்காலப்பகுதியில் இன்னொரு வகையில் வரலாற்று நாடகங்கள் அதிக செல்வாக்குப் பெற்று எல்லா மன்றங்களினாலும் மேடையேற்றப்பட்டமைக்கு உதாரணமாக, 'கட்டப்பொம்மன்', 'சிற்பியின் சிதைந்த உள்ளம்', 'இரத்தின சிம்மாசனம்', 'காசியப்பன்', 'ஆடகசௌந்தரி', 'பரலோகத்தில் பாரதி' போன்ற பல நாடகங்களைக் கூறலாம். இதே வேளை நகைச்சுவைப் பாங்கான நாட கங்களும் மேடையேற்றப்பட்டு பாராட்டுதல்களைப் பெற்றவையும் உள்ளன.

## III. மூன்றாவது காலக்கோடு (1970 - 1990)

இலங்கையின் கலை இலக்கியத் துறையில் இக்காலக்கட்டம் மிகவும் முக்கியமான தொரு காலக்கட்டமாகும். நவீன நாடகத்துறையில் பல்வேறு விதமான புதுமை களும், உத்திகளும் கையாளப்பட்டதுடன் சிங்கள நாடகத்துறையோடு போட்டி போடும் அளவுக்கு கொழும்பு, யாழ்ப்பாணம், பேராதனைப் பல்கலைக்கழகம் போன்றவற்றில் புதிய பரீட்சார்த்தமான முயற்சிகளின் சாதனைக்காலம் இது வென்று கூறலாம்.

ஈழத்தின் நாடகமேடை வரலாற்றில் நா.சுந்தரலிங்கம், அ.தாசீசியஸ், இ.சிவானந்தன், தெளிவத்தை யோசப், மாத்தளைக் கார்த்திகேசு, அந்தனிஜீவா, து.பாலேந்திரா, சிதம்பரநாதன், குழந்தை சண்முகலிங்கம் போன்றோரின் வருகை ஈழத்து நாடக வரலாற்றில் எத்தகைய புதுமையையும் வளர்ச்சியையும் தந்ததோ அதேபோன்ற மாற்ற நிகழ்வுகளும், வளர்ச்சியும் திருமலை நாடக மேடைகளில் ஏற்படாவிட்டாலும் கணிசமான மாற்றங்களையும் வளர்ச்சியையும் கொண்டு வந்தமைக்கு இக்காலப்பகுதியில் வந்த புதிய கலைஞர்களின் வருகை நாடகம் பற்றிய பிரக்ஞைபூர்வமான அறிவும் அனுபவமும் பெறக் காரணமாகியது என்று கூறலாம்.

இக்காலக்கட்டத்தின், நாடகப் போக்கைத் தெரிந்து கொள்வதற்கு பின்வரும் தலைப்பைக் கொண்டு நோக்குவது சுலபமென்று நினைக்கின்றேன்:நெறியாளர்கள், நடிகர்கள், நாடகமன்றங்கள், மேடையேறிய நாடகங்கள்.

### நெறியாளர்கள்

***1970-1990:*** இக்காலப்பகுதியில் பல நெறியாளர்கள் நாடகங்களை நெறி யாள்கை செய்தாலும், மிகவும் கவனத்துடன் சொல்லப்பட வேண்டியவர்களாக பின்வருவோரைக் குறிப்பிடலாம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.அமரசிங்கம், ஜே.எஸ்.மொகமட், எஸ்.விஸ்வலிங்கம், கே.கே.மதிவதனன், பி.ரோச் அருளப்பு, யோசப்மேரி, தம்பி தில்லைமுகிலன், கே.எஸ்.துரைசிங்கம், நல்லை அமிழ்தன், கா.சிவபாலன், சின்னத்துரை, யோன் செல்வராஜா, கனக மகேந்திரன், கலைத்தாஸன் சின்னத்தம்பி, ராஜேந்திரப் பிரசாத், கே.எம்,ஹனிபா, ஆலங்கேணி மு.வே.யோகேஸ்வரன், போதகர் அமல்ராஜ், சி.தங்கவடிவேல், தா.சீ.வில்வராஜா, சி.யேசுதாஸ், லியோ சகோதரர்கள் என்பவர்கள் திருமலை நாடக வரலாற்றுக்கு கூட்டு மொத்தமாக தொண்டாற்றிய வர்களாகக் காணப் படுகின்றனர்.

இவர்களில் பெரும்பாலோர் நெறியாளர்களாகவும், அதேவேளை நடிகர் களாகவும் தங்கள் பங்களிப்பைச் செய்தமையினால் இவர்கள் தவிர்ந்த சில நடிகர்களை இவ்விடத்தில் மனங்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

**நடிகர்கள்**

| | |
|---|---|
| 1. த.மயில்வாகனம் | 2. ஆர்.சுந்தரலிங்கம் |
| 3. மு.மு.மதிவதனன் | 4. ரோஜ் அருளப்பு |
| 5. என்.ஏலேலசிங்கம் | 6. ஏ.சிதம்பரநாதன் |
| 7. ஏ.சச்சியானந்தம் | 8. ஆர்.சுப்பிரமணியம் |
| 9. ஜோன்பிள்ளை | 10. பியதாஸ |
| 11. இம்மானுவல் | 12. கே.எஸ்.சந்தி |
| 13. லிங்கம் | 14. ஆஷா சம்சுதீன் |
| 15. எம்.என்.இராசரத்தினம் | 16. எஸ்.ஏ.கந்தசாமி |
| 17. வீ.இராஜேந்திரம் | 18. கௌரிவேதநாயகம் |
| 19. விமலாசின்னப்பு | 20. எஸ்.கே.பஞ்சரத்தினம் |
| 21. சக்கடத்தார் ராஜரட்ணம் | 22. சடாச்சரம் பரமேஸ் |
| 23. சே.ஸ்ரீஸ்கந்தராஜா | 24. மகேந்திரன் |
| 25. ஜோன்சன் | 26. த.பரராஜசிங்கம் |
| 27. சிவா.சிவலிங்கம் | 28. லக்சுமணப்பெருமாள் |
| 29. செபமாலை | 30. திரவியமலர் |
| 31. கபீரியல் | 32. சிவனடியார் |
| 33. கதிரமலை | 34. பி.பாலசுப்பிரமணியம் |

போன்ற நூற்றுக் கணக்கான கலைஞர்கள் திருமலை நாடக மேடைகளில் தங்கள் சாதனைகளையும், பதிவுகளையும் செய்தவர்களாகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடகமன்றங்கள்

இக்காலப்பகுதியில் பெருந்தொகையான நடிகர்களின் வரவுக்கும், நாடகங்களின் மேடையேற்றத்துக்கும் பின்னணியாக அமைந்த காரணி, புதிதாக அமைக்கப் பட்ட நாடக சபாக்கள் ஆகும். சில நாடக மன்றங்கள் ஏற்கனவே தொடர்ந்து இயங்கிய போதும், புதிய கலைஞர்களின் ஆர்வத்தினால் உருவாக்கப்பட்ட மன்றங்களினால் நூற்றுக்கணக்கான நாடகங்கள் மேடையேறின.

1966ஆம் ஆண்டு திரு.கே.கே.மதிவதனன், ரோஜ் அருளப்பு, த.மயில் வாகனம், ராஜரட்ணம், சடாச்சரம்துரை, துரைலிங்கம், போன்றவர்களால் நிறுவப்பட்ட நாமகள் நாடகமன்றத்தினால், திரு.கே.கே. மதிவதனன் நெறியாள் கையில் 'சாவே நீவா', 'காதலே நீ வாழி', 'என்னடி கோமளா', 'மாலா', 'ஒளிமலர்', 'உன் கண்ணில் நீர் வழிந்தால்', 'அடுத்த வீட்டைப் பார்' - ஆகிய நாடகங்கள் மேடையேறின.

பின்வரும் பட்டியல் மூலம் நாடகமன்றங்களையும், அவை மேடையேற்றிய நாடக விபரங்களையும் நோக்கலாம்:

### 1. மதிவளர் நாடகமன்றம்

- ★ தந்தையின் குழந்தை (1967)
- ★ அடங்கிய பிடாரி (1968)
- ★ காலம்மாறிப்போச்சு (1968)
- ★ முறித்து வளர்க்காத முருங்கை (1968)
- ★ மாமிவிஜயம் (1971)
- ★ ஏகலைவன் (1976)
- ★ மறுபடியும் மாமியார் வீடு (1976)
- ★ சிலைகள் (1976)
- ★ மூடநம்பிக்கையில்.
- ★ ஒரு முகமூடி மன்னர் (1977)
- ★ அடகடவுளே (1977)
- ★ மகாபலி (1978)
- ★ நாடா சுடுகாடா?
- ★ இறைசக்தி
- ★ மருமகள் விஜயம்
- ★ பலிபீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. மக்கள் நாடகமன்றம்**

- ★ சுடுகாட்டுக்காதலி
- ★ புதிய யமன்
- ★ நச்சுக்கோப்பை
- ★ சங்கிலியன் (1956)
- ★ கட்டபொம்மன் (1956)
- ★ சேரன் செங்குட்டுவன் (1956)

**3. எங்கள் நாடகமன்றம்**

- ★ பலவீனங்களின் பழி (1978)
- ★ காணிக்கை (1980)

**4. அன்புவழிபுரம் புதுமலர்ச்சி மன்றம்**

- ★ சோக்கரட்டீஸ் (1972)

முன்னோடிகள் கலை இலக்கிய விமர்சகர் குழு

- ★ அபிப்பிராயங்கள் (1973)
- ★ சீனத்துப்பொம்மை (1973)
- ★ கந்தையா மாஸ்டர்

**5. கலையரசி நாடகமன்றத்தின்**

- ★ பாசத்தின் கனி (1977)

**6. திருமலைக் கலைவட்டத்தின்**

- ★ காதலே வாழி (1977) - (கவிதை நாடகம்)

**7. முத்தமிழ்க் கலாமன்றத்தின்**

- ★ யார் குற்றவாளி? (1977)
- ★ புரோக்கர்கண்டபுதுமை (1977)
- ★ காசிய மன்னன் (1978)

**8. சரஸ்வதி நாடக மன்றத்தின்**

- ★ உழைப்பாளனே மனிதன்(1977)

**9. வானவில் புரடக்ஷனின்**

- ★ புதிய தலைமுறை (1977)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. தில்லைமுகிலன் குழுவினரின்

- ★ ஐயோ பாவம் (1969)
- ★ ஊழல் (1981)

மற்றும்

- ★ பட்டித்திடல் கலைமகள் நாடகமன்றம் (1978)
- ★ மூதூர் மதியரசி மன்றம்
- ★ கலாவதி நாடக சபா
- ★ முத்தமிழ் நாடகசபா
- ★ உதயசூரியன் நாடக சபா
- ★ காசிநாதன் கலா மன்றம்
- ★ திருமலைக்கலைக்குழு
- ★ லியோ கலைக்குழு
- ★ கலையரசி நாடகமன்றம்
- ★ திருமலை இளைஞர் இயக்கம்
- ★ மூதூர் கத்தோலிக்க இளைஞர் நாடகமன்றம்
- ★ மூதூர் எங்கள் நாடகமன்றம்
- ★ மூதூர் பெண்கள் கலைவட்டம்
- ★ மூதூர் முத்தமிழ் மன்றம்
- ★ கட்டைபறிச்சான் விநாயகர் நாடகமன்றம்
- ★ சம்பூர் நாமகள் நாடகமன்றம்
- ★ சரஸ்வதி நாடகமன்றம்

போன்றன இக்காலப்பகுதியின் நாடக வளர்ச்சிக்கு அளப்பரிய தொண்டு செய்த மன்றங்களாகும். இனி இக்காலப் பகுதியின் நாடகத்துறைக்கு கனதியான தொண்டு புரிந்தவர்கள் என்ற வகையில் ஒரு சிலரின் பணியையும் நோக்க வேண்டியது அவசியமாகின்றது.

கே.கே.மதிவதனன், ரோஜ் அருளப்பு, தம்பி தில்லைமுகிலன், த. மயில்வாகனம், கே.எஸ்.துரைசிங்கம், ஜோசப்மேரிசுவாமியார், கலைதாசன் சின்னத்தம்பி, போதகர் அமல்ராஜ், திருக்கோணமலைக் கவிராயர், கா.சிவபாலன் போன்றோரின் கலைச்சேவை பற்றி தனித்தனியாக நோக்குவோம்.

## கே.கே.மதிவதனன்

நாமகள் நாடகமன்றம் என்ற ஒன்றைத் தனது நண்பர்களோடு சேர்ந்து அமைத்து பல நாடகங்களைத் திருகோணமலை நகரிலும் மற்றும் குச்சவெளி, நிலாவெளி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்மோட்டை போன்ற கிராமங்களிலும், மேடையேற்றிய மதிவதனன் பல்வகை ஆற்றல் படைத்த ஒரு கலைஞன். நாடகப்பிரதியாக்கம், நெறியாள்கை, இசைப் பாடல்கள், நடிப்பு எனப் பல்வேறு துறைகளில் தனது ஆற்றல்களைக் காட்டி வந்தவர். இவர் நெறி யாள்கை செய்த 'சாவே நீ-வா', 'காதலே நீ வாழி', 'என்னடி கோமளா?', 'மாலா, உன் கண்ணில் நீர் வழிந்தால்' போன்ற நாடகங்கள் தேசிய ரீதியில் பாராட்டும் பரிசும் பெற்ற நாடகங்களாகும்.

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரியாகக் கடமையாற்றி வந்த மதிவதனன் பலநூறு இசைப்பாடல்களை, வானொலிக்கு எழுதிப்புகழ் பெற்றது மாத்திர மல்லாது, இன்றும் இவரது பலபாடல்கள் வானொலி ஈழத்துப் பாடல்களில் ஒலிபரப்புச் செய்யப்படுவதுண்டு.

தனது நாடகங்களுக்கு தானே பாடல்களை எழுதி, பிரதிகளையும் ஆக்கி மேடையேற்றி வந்தவர். இவர் தயாரித்து நெறியாள்கை செய்த இருநாடகங்கள் இலங்கை கலாச்சாரப் பேரவை நடாத்திய நாடகப் போட்டியில் பரிசுபெற்று தேசிய அளவில் பாராட்டும் பெற்றுள்ளன. 1978இல் 'காதலே நீ வாழி', 'உன் கண்ணில் நீர் வழிந்தால்' என்ற இரு நாடகங்களும் கலையுலகத்தின் அபிமான பாராட்டைப் பெற்ற நாடகங்களாகும்.

1970ஆம் ஆண்டளவில் நடிகர் மேஜர்சுந்தரராஜன் திருமலைக்கு விஜயம் செய்த வேளை இவரின் நடிப்பாற்றலையும், திறனையும் கண்டு சுந்தரராஜனே பாராட்டு வழங்கிச் சென்ற ஒரு கலைஞனாகும். தனது நாடகப் பிரதியாக்கத்துக்கு பல்வேறு பரிசுகளையும் பெற்றுள்ளார்.

## ரோச் அருளப்பு


ரோச் அருளப்பு

பீரீஸ் ரோச் அருளப்பு என்ற இயற்பெயர் கொண்ட ரோச் அவர்கள் யாழ் நெல்லியடி இருதயக்கல்லூரி, செந்தோமஸ் ஆண்கள் பாடசாலை ஆகியவற்றில் பயின்று, பாடசாலைக்காலத்தில் 1955ஆம் ஆண்டு 'வாழ்க்கைப்புயல்' என்ற நாடகத்தில் நடித்ததன் மூலம் கலையுலகிற்கு அறிமுகமானார்.

நாமகள் நாடக மன்றத்தின் முன்னோடிகளில் ஒருவரான இவர் நண்பர் கே.கே. மதிவதனனுடன் சேர்ந்து நாடகத்துறையில் பல்வேறு தடங்களைப் பதித்துள்ளார். திருகோணமலை நாமகள் நாடக மன்றத்தினூடாகவும், கலை வட்டத்தினூடாகவும் 20க்கு மேற்பட்ட நாடகங்களில் நடித்துப் பாராட்டுப் பெற்றவர். மதிவதனன் மேடையேற்றிய அநேக நாடகங்களில் நடித்ததோடு மட்டுமன்றி இணை இயக்குநராகவும் கடமையாற்றி அனுபவம் பெற்றவர். அருளப்பு தனது உத்தியோக கடமை காரணமாக கொழும்பில் இருந்த காலத்தில்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கை வானொலியில் 150க்கு மேற்பட்ட நாடகங்களில் நடித்து இலங்கை வானொலி நேயர்களின் அபிமான பாராட்டைப் பெற்றவர். வாரந் தோறும் இவர் நடித்த நாடகங்களை ஒலிபரப்புச் செய்வதிலேயே இலங்கை வானொலி பெருமைப்பட்டது.

வானொலி கதம்ப நிகழ்ச்சியில் 200 ற்கு மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ள இவர் ஈழத்தின் புகழ்பெற்ற கலைஞர்களான கமிலினி செல்வராஜன், மயில் வாகனம், ஜேசுரெட்ணம், ஜெகசோதி, போன்ற பிரபல கலைஞர்களுடன் சேர்ந்து நடித்ததுடன் நவாலியூர் நா.சுந்தரம் பிள்ளை, அப்துல்ஹமீத், ஜோர்ஜ் சந்திர சேகரன் போன்ற பிரபல்ய கலைஞர்களுடைய தயாரிப்பிலும் நடித்துள்ளார்.

கணக்காளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள அருளப்பு சமூக சேவையில் அதிக நாட்டமுடைய கலைஞன் மாத்திரமன்றி, தொலைக் காட்சி நாடகங்கள் பலவற்றிலும் நடித்து தனது கலைத்துறையில் பல்வேறு தடங்களைப் பதித்தவர் ஆவார்.

## தம்பி தில்லைமுகிலன்



தம்பி தில்லை முகிலன்

யாழ் பொலிகண்டி அண்ணாவியார், சுப்பிரமணியம் மேடையேற்றிய கூத்தில் (சிறுவனாக) நடன மாதாக அறிமுகமான த.துரைவீரசிங்கம் என்னும் தம்பிதில்லை முகிலன் திருகோணமலை மேடைநாடக வரலாற்றில் தனக்கென தனியான ஓர் இடத்தைப் பெற்றுக் கொண் டவர். 100க்கும் மேற்பட்ட நாடகங்களை நடித்தும், மேடையேற்றியும் இருக்கும் தம்பிதில்லைமுகிலன் நகைச்சுவை நாடகங்களில் நடிப்பதிலும், மேடை யேற்றுவதிலும் தனியானதொரு இடத்தைப் பிடித்துக் கொண்டவர்.

முற்போக்குச் சிந்தனையும், சமூக நாட்டமும் கொண்ட தில்லை முகிலன் பல நாடகமன்றங்களுடன் இணைந்து நடித்துள்ளார்.

கரையோரக் கலாமன்றத்தின்

- ★ என்னதான் முடிவு (1966)
- ★ சறுக்கி விழுந்தார் சங்கடத்தார் (1967)
- ★ ஊமை கண்ட கனவு (1967)
- ★ அப்பு உதுதப்பு (67)
- ★ சமூகத்துரோகி (1968)

தனது குழுவான தில்லைமுகிலன் குழுவினர் மன்றத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஐயோபாவம் (1969)
★ ஊழல் (1981)
★ மாமிக்கு மயக்கம் (1973)
★ வானவில்புரடக்ஷனின் புதிய தலைமுறைகள் (1977)

மக்கள் நாடகமன்றத்தின்

★ சங்கிலியன் (1973)

எங்கள் நாடகமன்றத்தின்

★ பலவீனங்களின் பலி (1978)
★ கேள்வி (1980)
★ கலையா கொலையா (1981)

ஆகியன இவர் நடித்துப் புகழ்பெற்ற நாடகங்களாகும்.

பாடசாலை மாணவர்களைக் கொண்டு பல நாடகங்களை நெறியாள்கை செய்து மேடையேற்றியுள்ளார்.

★ உயிர்ப்பு (1995) - ஆலங்கேணி விநாயகர் ம.வி.
★ கணையாழி (1996) - தி/விக்கேனஸ்வரா ம.வி.
★ இருமனம் - கந்தளாய் பேராறு பரமேஸ்வரா ம.வி.
★ தடை (2001) - மெதடிஸ்த பெண்கள் கல்லூரி
★ இதயம்மலரட்டும் (2001)- உவர்மலை விவேகானந்தா கல்லூரி

இன்னும் பல பாடசாலைகளின் நாடகங்களிலும் சிறுவர் நாட்கங்களிலும் இவரின் பங்களிப்பு உண்டு.

## கே.எஸ். துரைசிங்கம் (1936-2009)

நாடகம், சினிமா ஆகிய இரு துறைகளிலும் கொடி கட்டி பறந்த திருகோணமலை துரைசிங்கம் நூற்றுக் கணக்கான நாடகங்களில் நடித்து புகழ் பெற்றவர் கலைஞர் கே. சுவக்கீன் பிள்ளையின் மகனான கே.எஸ்.துரைசிங்கம் பல நாடகங்களை நெறியாள்கை செய்து மேடையேற்றியுள்ளார். இசைக் குடும்பத்தில் பிறந்த இவரது சகோதரர் பாலசிங்கமும் ஓர் இசைக்கலைஞர். இவரது தந்தை ஒரு கலைஞர், பூட்டன் நாகன் ஒரு மிருதங்க வித்துவான், பாட்டன் ஒரு நாடகக்காரர் (வல்லி) என்ற காரணத்தினால் ஒரு நாடக பாரம்பரியக் குடும்பத்தில் பிறந்தவராக இவர் காணப்படுகிறார்.

இவரது நடிப்பு திறனும் புகழும் கண்டு விநாயகர் பிலிம்ஸ் இயக்குனர் எம்.பி.பாலன் தயாரித்து வெளியிட்ட 'மஞ்சள் குங்குமம்' என்ற திரைப்படத்தில் வில்லனாக நடிக்கும் வாய்ப்பை இவருக்கு வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திரைப்படத்தில் சபாஸ்துரைசிங்கம் என்ற வில்லன் பாத் திரத்தை ஏற்று சிறப்பாக நடித்ததைக் கண்டு ஈழத்து தயாரிப்பான 'தென்றலும், புயலும்' என்ற திரைப்படத்தின் சண்டைப்பயிற்சி இயக்குனராக கடமையாற்றும் பொறுப்பை அதன் தயாரிப்பாளர் இவருக்கு வழங்கினார். அத்திரைப்படத்தில் சண்டைக் காட்சிகளை தத்துருவமாக அமைத்து புகழ் பெற்றார்.

பிரபல நகைச்சுவை நடிகர் S.S. சந்திரன் திருகோணமலைக்கு வருகை தந்தவேளை இவர் நெறியாள்கை செய்த 'கலிங்கத்தின் கைதி' என்னும் நாடகத்தில் இவரோடு நடித்துள்ளார். உதயகுமார், ஸ்ரீசங்கர், சந்திரகலா, இந்திராதேவி, ஜெயகௌரி, பரமேஸ்வரி, முத்துலட்சுமி போன்றோர் இந்த நாடகத்தில் நடித்துள்ளனர்.

ஸ்ரண்ட் மாஸ்டரான துரைசிங்கம் கம்படி, சிலம்படி, சுருள்வாள் ஆகிய வித்தைகளில் வல்லவர். இவர் 'ஆழிக்கரையின் அன்புக் காணிக்கை' போன்ற பல்வேறு நாடகங்களுக்கு சண்டைப் பயிற்சியாளராக விளங்கியதுடன், கெஞ்சிரா, டொல்கி, மிருதங்கம் போன்ற கருவிகளை வாசிக்கும் சிறந்த கலைஞனாகவும் விளங்கினார்.

இவர் 94 ற்கு மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளார். அவர் நடித்த நாடகங்களில் பின்வருவன புகழ்பெற்ற நாடகங்களாக திகழ்கின்றன: சங்கிலியன் (1963) - மக்கள் நாடகம், கொள்ளைக்காரன் - முத்தமிழ் நாடகமன்றம், சமாதி (56) - கலைவாணி நாடக சபா, மானம் தந்த பரிசு (1976) - கலைவாணி நாடக சபா, வீரபாண்டிய கட்டப்பொம்மன், மகாபராக்கிரமபாகு, சுடுகாட்டு காதலி, கலிங்கத்தின் கைதி, ஈழவேந்தன், திருமலை வேந்தன், யார் குற்றம்?, மறுமணம், சமாதி, சொர்ப்பனவாழ்வில்.

## ஜோசப்மேரி சுவாமியார்

திருமலை மேடை நாடக வளர்ச்சியில் கிறிஸ்தவ பாதிரிமாரின் தொண்டு அளப்பரியது. திருமலைக் கலைஞர்களில் மிகவும் பிரபல்யம் பெற்று விளங்கிய கலைஞர்கள் கிறிஸ்தவமத ஆன்மீகத் துறையோடு ஈடுபாடு கொண்டவர்களாக விளங்கினார்கள்.

அந்த வகையில் வணக்கத்துக்குரிய ஜோசப் மேரியவர்கள் ஒருசில அரங்குகளை அலங்கரித்தாலும் அவரது கலைப்பணி கனதியானதும் வரலாற்றுப் பெறுமதி கொண்டதுமாக அமைகின்றது. இவரது பிரமாண்டமான தயாரிப்பு 'நீ எதிர்கொண்டதேன்?' (1973).

வரலாற்று, புராண, நகைச்சுவை நாடகங்களை வசனரூபமாக மேடையேற்றிய ஒரு காலப்பகுதியில் நாட்டிய நாடகம் என்னும் புதிய (ஆனால் பழையது) வடிவத்தை திருகோணமலைக்கு அறிமுகம் செய்தவர் சுவாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிய நாடகங்களை கலாநிதி சி.மௌனகுரு நிருத்திய நாடகங்கள் என்று பெயரடைகொடுத்து அழைப்பார். இதன் பண்பு யாதெனில் பாடல், இசை, நடனம், நடிப்பு என்ற கலந்த தன்மைகள் கொண்ட இந்த வடிவத்தை திருமலையில் அறிமுகம் செய்து வைத்தவர்.

இவர் தொடர்ந்து 'மாறியது நெஞ்சம் மாற்றியது யாரோ?' என்னும் நாடகத்தை மேடையேற்றிச் சாதனை புரிந்தார். இந்நாடகம் பாடசாலை மாணவர்களிடையே பிரபல்யம் பெற்று விளங்கியது.

**அ.சச்சியானந்தம்**

திருமலை நாடக வளர்ச்சியிலும், மன்ற வளர்ச்சியிலும், சமூக சேவை யிலும் மறக்கப்பட முடியாத ஒரு கலைஞர் அ.சச்சியானந்தம் (சச்சி அண்ணா 1933 - 1988). இவருடைய கலைவாழ்க்கை, கழகசேவை, சமூகசேவையெனத் தனித்தனியாக ஆராய வேண்டியது அவசியமெனினும் இந்தக்கட்டுரையின் நோக்கம் கருதி கலைச்சேவை பற்றியே நோக்கப்படுகிறது.

தனது பாடசாலை வாழ்க்கைக் காலத்திலேயே நாடகத்துறையோடு ஈடுபாடு காட்டிவந்தவர் சச்சியானந்தம். திருமலை மடத்தடியில் தனது நண்பர்களோடு சேர்ந்து திருவள்ளுவர் கழகம் என்ற ஒரு கழகத்தை நிறுவி கல்விச்சேவையையும், கலைச்சேவையையும் ஒன்றாக இணைத்து ஆற்றிவந்தவர். இந்தக் கழகம் 1953ஆம் ஆண்டு திருக்குறள் மாநாடு என்ற ஓர் மாபெரிய மாநாட்டை நடாத்தி சாதனை புரிந்தது. இதன் பிதாமகராக விளங்கியவர் இவர்.

புலவர் சோமாஸ்கந்தஐயர் வழிகாட்டலுடன், கு.செந்தில்வேல், வ. குலவீரசிங்கம், ஆர்.சுப்பிரமணியம், சி.சின்னத்துரை, நா.கணபதிப்பிள்ளை போன்ற இளைஞர்கள் குழு ஒன்று சேர்ந்து இந்த திருக்குறள் மாநாட்டை நடாத்தினார்கள். வரலாறு காணாத இந்த மாநாட்டில், உள்நாட்டுப் பேறிஞர்களும் இந்தியப் பேறிஞர்களான ம.பொ. சிவஞானம், அ.ச.ஞானசம்பந்தம், மோ.லெ. இலக்குமணச் செட்டியார் போன்றோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

இந்த மாநாட்டில் அபிநயசிகாமணி விசுவலிங்கம் தயாரித்து, நெறிப்படுத்தி வழங்கிய, 'மகாகவி பாரதியார்', 'இளைஞன்', 'வள்ளுவம்' என்னும் நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இதில் அறிமுகமானவர்தான் இந்த சச்சியானந்தம். சிறந்த நகைச்சுவை நடிகனாகவும், சிந்தனையாளனாகவும் விளங்கியவர். அபிநயசிகாமணியை தனது மானசீகக் குருவாகக் கொண்டு, பிற்காலத்தில் அமரன் ஆனந்தன் என்ற அமைப்பின் ஊடாக, பல ஓரங்க நாடகங்களை மேடையேற்றினார்.


கப்பலோட்டிய தமிழன், ஔவையார், வழிகாட்டி, மனமாற்றம், வேடன், கண்ணப்பா, நந்திவர்மன் காதலி ஆகியவை அக்காலத்தில் பாராட்டுப் பெற்ற இவரது நாடகங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலைக்கு வெளியே மட்டக்களப்பு, கேகாலை போன்ற இடங்களிலும் இவர் நாடகங்கள் மேடையேற்றப்பட்டது. பல நாடகக் கலைஞர்களைச் சேர்த்து விதானையார்வீடு என்ற 40 பாகங்களைக் கொண்ட தொடர்நாடகத்தை மேடையேற்றிச் சாதனை புரிந்ததுடன் தனது நகைச்சுவையான நடிப்பினாலும், கருத்தினாலும் சிந்திக்க வைத்தவர்.

இந்த நாடகத்தினூடாக, அன்றைய காலக்கட்ட அரசியல் கிண்டல்கள், திணைக்களங்களில் நடக்கும் இலஞ்ச ஊழல்கள், அட்டூழியங்கள் ஆகியவற்றை நகைச்சுவையூடாக நாசூக்காக சொல்லிப் பாராட்டுப் பெற்றவர். இவரின் இந்த நாடகம், மாதக்கணக்கில் மேடைகளில் ஏறி பாராட்டுப் பெற்றது.

## த.மயில்வாகனம்


த. மயில் வாகனம்

சிவன்கோவிலடி சின்னத்துரை வைத்தியரின் தூண்டுதலால் அபிநய சிகாமணி சி.விஸ்வலிங்கம் மூலம் 'சாமியும் தம்பிரானும்' என்னும் நகைச்சுவை நாடகத்தின் மூலம் அறிமுகமாகி (1961) பின்னர், விதானையார் வீடு - திரு. சச்சியானந்தம், சக்கடத்தார் - என்.எம். ராஜரட்ணம், சாவேநீவா - கே.கே.மதிவனன், மாலா - கே.கே.மதிவனனின் போன்ற நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்றவர் தான் இந்த மயில் வாகனம்.

12க்கு மேற்பட்ட மேடை நாடகங்களிலும், 50க்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களிலும், பி.விக்னேஸ்வரன் தயாரித்து வழங்கிய தொலைக்காட்சி நாடகங்களான சிரித்தது சித்திரை, புதுவருடக்கனவு, பொண்ணுக்கு தங்கமனசு, அறிவில் ஆதவன் போன்ற தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்துப் புகழ்பெற்றவர். எஸ்.எஸ்.கணேசபிள்ளையின் 'புதுவருடக்கனவு', நாடகத்தில் ஏ.எம்.சி. ஜெகசோதி, ஸ்ரீதர் பிச்சையப்பா, திருமதி. மனோன் மணிசிதம்பரம், ம.சர்வானந்தா, யோகராஜன் ஆகியோருடன் இணைந்து நடித்த பெருமை இவருக்குண்டு.

வானொலி நாடகத் தயாரிப்பாளர்களான சானா, கே.எம்.வாசகர், பி.விக்னேஸ்வரன், ஜோர்ஜ் சந்திரசேகரன், பி.எச்.அப்துல்ஹமீட், வே.அ.சிவஞானம், விவியன்நமசிவாயம், இராஜபுத்திரன், யோகராஜன் ஆகிய தயாரிப்பாளர்களின் கதம்ப நாடகங்கள் பலவற்றிலும் நடித்துள்ளார்.

சில்லையூர் செல்வராஜன் எழுதி கே.எம்.வாசகர் அவர்களால் தயாரிக்கப்பட்ட 'தணியாத தாகம்', ராமதாஸின் 'கோமாளிகள் கும்மாளம்' ஆகிய நாடகங்களில் நடித்துப் பல்லாயிரக்கணக்கான நேயர்களின் பாராட்டுதல்களை பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவாத்தியார் பட்டபாடு (1963) - கவிராயர் தா.சீ. வில்வராஜா; கிரேக்க நாட்டு தமிழ் அறிஞன் (1967) - கவிராயர் தா.சீ. வில்வராஜா; பழங்கவிஞர் கைலாசம் (கலைஞர் அசனார்) ஆகிய நாடகங்களும் இக்காலப்பகுதியில் பிரபல்யம் பெற்றவை.

## IV. நாலாவது காலக்கோடு (1970 - 1990)

திருமலை நாடகமேடைகளில் வரட்சி நிலவிய காலம் இக்காலமாகும். 1983ம் ஆண்டின் கலவரங்கள் 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தின் வருகை போன்ற இன்னோரன்ன காரணங்களினால் முன்னைய கால மலர்ச்சியும், வளர்ச்சியும் இக்காலத்தில் இல்லாமல் போய்விட்டது.

குறிப்பாக, நாடகமன்றங்களின் மறைவு, கலைஞர்களின் இடம் பெயர்வுகள், ஊக்கம் குறைந்தமை, அகதிவாழ்க்கை ஆகியன எல்லாம் சேர்ந்து 1983ஆம் ஆண்டுக்குப்பின் திருமலை மேடை நாடக வரலாற்றில் பாரிய வரட்சி நிலையைக் கொண்டுவந்தது.

நாடக மன்றங்களின் மறைவு ஒருவித வரட்சியையும், கலைஞர்களின் இல்லாமையையும், தேக்கத்தனத்தையும் உண்டுபண்ணிய காலமாக மேலே குறிப்பிட்ட காலப்பகுதி காணப்படுகின்றது. இந்த நிலையில் 1990ஆம் ஆண்டுக்குப்பின் மேடைநாடகங்கள் புதியதொரு வழியைத் தேடி நடக்கத் தொடங்கின; அதுதான் பாடசாலை நாடகங்களாகும்.

1990ஆம் ஆண்டுக்குப்பின் பின்வரும் எதிரெதிரான இருவிடயங்கள் நடந்தேறின:1. பழம்பெரும் நாடகமன்றங்களின் இயக்கம் குறைந்தமை. 2. பாடசாலை நாடகங்களின் வளர்ச்சி.

நாடகமன்றங்களின் இயக்கம் என்று குறிப்பிடப்பட்ட விடயம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக இருந்தது:

1. பெருந்தொகையான நாடகமன்றங்களின் இயக்கம் நின்றமை.
2. பழம்பெரும்கலைஞர்களின் ஊக்கம் குறைந்தமை.
3. நாடகத்தின் மீது இருந்த கலைஞர் செல்வாக்கு குறைந்தமை.
4. நவீன நாடகத் தேவைகள் பற்றிய தேடல் இல்லாமை.
5. நாடகங்களில் பயிற்றுவிக்கும் கலைஞர்களின் ஆக்கங்கள் நின்றமை.
6. சினிமாவின் திடீர் தாக்கம் அதிகரித்தமை.
7. தொலைக்காட்சியின் செல்வாக்கு பிரபல்யம் கொண்டமை.

இருந்தபோதிலும், 1990ஆம் ஆண்டுக்குப்பின் காலத்தின் தேவை கருதி, திருமறைக்கலாமன்றம் (1994), கீழைத்தென்றல் கலாமன்றம் (1996) ஆகிய மன்றுகள் நாடக வளர்ச்சிக்கென உருவாக்கப்பட்டன என்று கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமறைக்கலாமன்றம்

யாழ் திருமறைக்கலாமன்றத்தின் கிளை அமைப்பாக உருவாக்கப்பட்ட இந்த மன்று 1994ஆம் ஆண்டு திரு.கைடிபொன்கலன், இளைஞர் என்.ரீ.ரகுராம் ஆகியோருடன் 15 நிர்வாக உறுப்பினர்களின் கூட்டாக நிறுவப்பட்டது.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல கிளைகளைக் கொண்ட இந்த நிறுவனம் பல்பார்வை கொண்ட கலைவீச்சுடன் செயற்பட்டு வந்தபோதும் திருகோணமலையில் கிளையாக அமைக்கப்பட்டு அண்மைக் காலத்தில் பல சிறந்த மேடைநாடகங்களை மேடையேற்றியதுடன் பல இளைய தலைமுறைக் கலைஞர்களை உருவாக்கியும், உற்சாகப்படுத்தியும் வருகின்றது. இந்த மன்று அண்மைக்காலத்தில் மேடையேற்றிய நாடகங்கள்:

| | |
|---|---|
| 1994 | ஞானசவுந்தரி (இசைநாடகம்) |
| 1995 | பலிக்களம் |
| 1997 | ஜெனோவா (இசைநாடகம்) |
| 2000 | இருதுயரங்கள் |
| 2000 | எரிமலை (நவீன நாடகம்) |
| | புயலான பூவை |
| | எங்கட பிள்ளைகள் |
| 2001 | இலக்கியம் இட்ட தீ |
| | பொறி (நவீன நாடகம்) |
| | தரிசனா |
| | அசோகா |

இவை தவிர்ந்த ஏனைய நாடக மன்றுகளின் இயக்கங்கள் பற்றி அறிய முடியவில்லை.

பழம்பெரும் கலைஞர்கள் திருமலையில் வாழ்ந்த போதிலும் 90ஆம் ஆண்டுக்குப்பின் நாடகமன்றுகளுடன் கூடிய அவர்களின் செயற்பாடு இல்லையென்றே கூற வேண்டும். உதாரணம் : த.அமரசிங்கம், ரோஜ்அருளப்பு, தம்பி தில்லைமுகிலன், சுப்பிரமணியம், த.மயில்வாகனம், ஏலேலசிங்கம், சக்கடத்தார் புகழ் ராஜரட்டினம், அசனார், தா.பி.சுப்பிரமணியம், ஏ.சிதம்பரநாதன் போன்ற மூத்த கலைஞர்கள் இன்றும் நம்மத்தியில் வாழ்ந்து கொண் டிருக்கும் இக்காலக் கட்டத்தில் இத்துறையின் தேய்வு மனம் வருந்தக் கூடிய விடயமாகும்.

இதற்கு ஆதாரமாக நாடகத் தேக்க நிலைபற்றி எஸ்.தெய்வநாயகம், ம.சண் முகநாதன் ஆகியோர் பதிப்பித்த தமிழ் அரங்கியல் மரபும், மாற்றங்களும் என்ற கட்டுரையில் தந்த கருத்தை அப்படியே தருகின்றேன்.

நூலகம்
பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'திருகோணமலை 90களில் நாடகங்கள் புதிய பரிமாணத்தைப் பெறுகின்றது. திரு.பற்குணத்தின் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற பல நாடகப்பட்டறைகள் புதிய உத்வேகத்தை ஏற்படுத்தின. பாடசாலைத் தயாரிப்புக்களாக சில நல்ல நாடகங்கள் வெளிவந்தன.


திருமலைநவம், எஸ்.இரத்தினசிங்கம், எஸ்.பற்குணம், பாலசுகுமார் ஆகியோர் முயற்சிகள் இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும். இக்காலக்கட்டத்தில் விபுலானந்தா வித்தியாலயம், புனித சூசையப்பர் கல்லூரி, சண்முக வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் சில நல்ல தயாரிப்புக்களைத் தந்தன. ஆனாலும் இன்றைய நிலையில் திருகோணமலையினுடைய அரங்க முயற்சிகள் பாடசாலை மட்டத்தினுடனேயே அடைபட்டு நிற்கின்றது. தனிப்பட்ட குழுக்களின் முயற்சிகள் இல்லையென்றே கூறலாம்.'

இருந்தபோதிலும் ஒருசிலருடைய ஆக்கபூர்வமான முயற்சிகளும் உழைப்பும் திருகோணமலை நாடக வரலாற்றுக்கு உந்துசக்தியாக இருந்தது என்பதனை திரு.கா.சிவபாலன் போன்ற நாடகவிற்பன்னர் களின் படைப்புக்களும் முயற்சிகளும் இக்காலக்கட்டத்தின் அடையாளங்களாக விளங்குகின்றது.

**எஸ்.அந்தோணிப்பிள்ளை (1918 - 1986)**

மட்டக்களப்பு, புளியந்தீவை பிறப்பிடமாக் கொண்ட இவர் 1959ஆம் ஆண்டு கடமையின் நிமித்தம் திருகோணமலைக்கு வந்தார். திருமலை ஜமாலியா பாடசாலை, புனிதவளனார், ஆகிய பாடசாலைகளில் அதிபராக கடமையாற்றி 1973ஆம் ஆண்டு இளைப்பாறிய அந்தோணிப்பிள்ளை அவர்கள் திருகோணமலையின் நாடகத்துறைக்கு அளப்பரிய சேவைகளை செய்த ஒருவராக காணப்படுகிறார்.

**கா.சிவபாலன்**


கா. சிவபாலன்

பள்ளிக்குடியிருப்பு என்னும் கிராமத்தில் காசிநாதர் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்த சிவபாலன், தனது ஆரம்பக் கல்வியை பெரிய கிண்ணியா முஸ்லீம் ஆண்கள் பாடசாலையிலும் பின் யாழ் இந்துக் கல்லூரியிலும் பெற்றபின் 1970ஆம் ஆண்டு சட்டக் கல்லூரியில் பயின்று வெளியேறினார்.

மாணவப்பருவத்திலேயே கலைமீது நாட்டங் கொண்ட இவர் ஈழகேசரியில் எழுதிய காலந்தொட்டு தனது இலக்கிய நாட்டத்தைக் கூட்டிக்கொள்கிறார். சட்டக் கல்லூரியில் பயின்ற காலத்தில் நாடகத் துறைமீது அதிக ஈடுபாடு ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சட்டக்கல்லூரியில் படிக்கின்ற காலத்தில் பிரசித்தி பெற்ற நாடக ஆசிரியர், இயக்குநர் ஏர்னஸ்ட் மெக்கின்டயஸ் பேராசிரியர், ஆன்லி ஹல்பே, ஐராங்கனி சேரசிங்க, வஜிர சித்திரசேன, ஹென்றி ஜயசேன, பேர்சி கொலின், கோமே, மஹிந்த டயஸ் லெஸ்டர், ஜேம்ஸ் பீரிஸ் ஆகியோரிடம் நடிப்பு, மேடைநகர்வு, ஒளியமைப்பு, திரைப்பட இரசனை போன்ற பல்வேறு நாடக நுட்பங்களைக் கற்றுத் தேர்ந்தார்.

சட்டக்கல்லூரியில் பயின்ற காலத்தில் தமிழ் மன்றத் தயாரிப்பான ருஸ்ய எழுத்தாளர் அன்ரன் செக்கோவின் கரடி (The Beer) என்ற நாடகத்தை மொழி பெயர்த்து நெறியாள்கை செய்ததுடன், பிரபல சிங்கள நெறியாளரான மார்டின் விக்கிரமசிங்காவின் 'மாமா' நாடகத்தின் தயாரிப்பு, ஒளியமைப்பு ஆகிய துறைகளில் அ.தசீசியஸ், சச்சியானந்தன் ஆகியோருடன் பங்கெடுத்துக் கொண்டார்.

இவரது இத்தகைய அனுபவங்கள் ஈழத்து நவீன நாடகத்துறைக்கு பங் களிப்புச் செய்த அ.தாஸீஸியசின் தொடர்பும் மற்றும் ஏர்னஸ்ட் மக்கின்ட யருடனான தொடர்பினால் நவீன நாடகப்பயிற்சியை மேம்படுத்திக் கொண்டார் சிவபாலன்.

இக்காலக்கட்டத்தில்தான் சிங்கள நாடகமேதை ஹென்றி ஜெயசேனாவின் கைவண்ணத்திலும், நடிப்பிலும் 1000 தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்ட 'விறுணு வட்டய கதாவ' நாடகத்தை தமிழ் மொழிபெயர்ப்பில் நவாலியூர் சோ. நடராஜாவைக் கொண்டு பெயர்த்து லடீஸ் வீரமணியை முக்கிய கதா பாத்திரமாகக் கொண்டு 'சுண்ணாம்பு வட்டத்தின் கதை' என்ற பெயரில் தமிழில் மேடையேற்றினார்.

1972ஆம் ஆண்டளவில் கொழும்பில் நாடோடிகள் கலை இலக் கியக் குழு அமைக்கப்பட்டபோது சிவபாலன் அதன் செயலாளராகப் பொறுப்பேற்று, சட்டக்கல்லூாரி மாணவர்களான சச்சியானந்தன், க.முத்துலிங்கம், சி.சுந்தரலிங்கம் மற்றும் சிங்காரவேலன், த.நமசி வாயம், ஜெயகாந்தன் (குத்துவிளக்கு), சித்தி ராராம், ஈஸ்வரா, ஈஸ் வரநிதி இராஜரட்ணம் ஆகியோரை இணைத்து இவ் வமைப்பை நிறுவி நாடகமேடைகளில் பல பரிசோதனைமுயற்சி நாடகங்களை மேடையேற்றியுள்ளார்.

மஹாகவியின் 'கோடை நாடகம்', கா.சிவபாலனின் 'இவர்களுக்கு வேடிக்கை' என்னும் இருநாடகங்களும் 1969ஆம் ஆண்டளவில் கொழும்பு லும்பினி அரங்கில் மேடையேற்றப்பட்டதுடன், மேற்படி கோடை நாடகம் நாடோடிகள் குழுவினால் திருகோணமலை(1971), மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் மேடையேற்றப்பட்டது.

இந்த நாடகத்தின் வெற்றித்தன்மையினால் மஹாகவியின் இன்னொரு கவிதை நாடகமான புதியதொருவீடு நாடகத்தை, கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற பல்வேறு பிரதேசங்களில் நாடோடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவின் உதவியுடன் மேடையேற்றி தமிழ் நவீன நாடக வளர்ச்சிக்கு காத்திர மான பங்களிப்பைச் செய்தார்.

1994ஆம் ஆண்டளவில் சிவபாலன் 'பாட்டுக்கொரு புலவன்' விவரண நாடகத்தை நெறியாள்கை செய்து கொழும்பு, திருகோணமலை போன்ற இடங்களில் மேடையேற்றினார்.

தனது நாடக அனுபவத்தை வைத்துக்கொண்டு சின்னத்திரைக்கான குறுந் திரைப்படமான 'இனி எனினும்' படத்தை தயாரித்து வெளியிட்டார். இத் திரைப்படம் ஜப்பான் தேசத்தில் நடந்த குறுந்திரைப்படப் போட்டியில் பாராட்டுப் பெற்றது.

கேரளத்தைச் சேர்ந்த பிரவி புகழ் ஜனாதிபதி விருது பெற்றவரான சனி ஜோசப்பிடம் பயின்று பெற்ற அனுபவத்தைக் கொண்டு மேற்படி குறுந்திரைப் படத்தை இவர் தயாரித்து அளித்துள்ளார்.

1999- 2000 ஆண்டுகளில் இலங்கை கலைக்கழக நாடகக்குழுத் தலைவராகச் செயற்பட்டு, பல்வேறு பிரதேசங்களில் நாடகப்பட்டறைகளையும், செயல் அமர்வுகளையும் நடாத்தி தமிழ் நாடகத்துறைக்கு தேசிய ரீதியில் புத்துயிர் அளித்ததோடு, தேசிய நாடக விழாவொன்றை நடாத்தி தமிழ் நாடக வரலாற்றுக்கு காத்திரமான வரலாற்றுப்பதிவை உண்டு பண்ணியவர்.

மேடைநாடகங்கள் மாத்திரமன்றி நாடக, இலக்கியம், விமர்சனம், திரைப்பட விமர்சனம் ஆகிய துறையிலும் ஈடுபாடு காட்டிவரும் சிவபாலன் டெல்லி சர்வதேச திரைப்படவிழா தொடர்கட்டுரைகள் (தினகரன்), திரைப்பட விழா ஈரானிய பட விமர்சனம் (மல்லிகை), திருகோணமலைப் பிரதேச நாடக அரங்கப் பாரம்பரியங்கள் ஆகிய கட்டுரைகளையும், இதேபோல் ஆங்கிலத்திலும் நாடகம், திரைப்படம் சார்ந்த விமர்சனங்களையும் நிறைய எழுதிவரும் ஓர் நாடக நெறியாளர், தயாரிப்பாளர், விமர்சகர், கலைஞர் ஆவார்.

## V. 1990க்குப் பின் பாடசாலை நாடகங்கள்

திருகோணமலைப் பாடசாலை நாடகங்களின் வளர்ச்சியும், மூத்த கலைஞர்களின் மடியிலிருந்துதான் ஆரம்பிக்கின்றது என்பது ஒரு பெருமைக்குரிய விடயமாகும். நாடகத்தந்தை அபிநயசிகாமணி எஸ்.விஸ்வலிங்கம் அவர்கள் உவர்மலை விவேகானந்தா கல்லூரி (உவர்மலை த.வி) மாணவர்களைக் கொண்டு பழக்கி தமிழ்த்தின விழா மேடையில் மேடையேற்றிய (த.சீ.வில்வராஜன் கதை எழுதி) 'சத்தியமுத்திரை' என்னும் நாடகம் 1982ஆம் ஆண்டு தேசிய விருதைப் பெற்றதுடன் திருகோணமலைப் பாடசாலை வரலாறு ஆரம்பமாகின்றது என்று கூறலாம்.

பாடசாலை பரிசளிப்பு விழாக்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக மேடையேற்றப்பட்ட நாடகங்கள் காலத்தொகுக்குள் மறைந்து விட்ட போதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த கலைஞர்களான தம்பி தில்லைமுகிலன், வ.அ.இராசரத்தினம், த.அமர சிங்கம், ச.அருளானந்தம், திருமலை நவம் போன்றோரின் பங்களிப்பு 1990ஆம் ஆண்டுக்குப் பின் காத்திரமாக இருந்த காரணத்தினால் பாடசாலை நாடகங்கள் முனைப்புடன் தொடங்கிய காலம் 1990ஆம் ஆண்டுக்குப் பின்னாகும்.

இவற்றுக்கு முன்னெடுப்பாக ச.அருளானந்தம் ஆசிரியராக இருந்த காலத்தில் சேனையூர் மஹாவித்தியாலயத்திலும், பல்வேறு சமூக வரலாற்று நாடகங்களை மேடையேற்றியது போலவே எழுத்தாளர் வ.அ.இராசரத்தினம் ஆசிரியராக, அதிபராக இருந்த காலத்தில் பல பாடசாலை நாடகங்களை மேடையேற்றி யுள்ளார். ஈழத்தின் வானொலி நாடக கலைஞரும், மேடை நாடக விற்பன்னருமான ஆசிரியர் வேதநாயகம் அவர்கள் திருகோணமலை பெருந்தெரு மெதடிஷ்த மிஷன் பாடசாலை மாணவர்களைக் கொண்டு மேடையேற்றிய 'துரோகி', 'குரங்குகள்' ஆகிய நாடகங்கள் 1970ஆம் ஆண்டளவில் மேடையேற்றப் பட்டவையாகும்.

இதேபோல் 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவம் வடகிழக்கில் நிலை கொண்டிருந்த காலத்தில் மேற்படி இராணுவ கெடுபிடிகளை கருவாகக் கொண்டு புதுவை இரத்தினதுரை பிரதி எழுதிய, தம்பிதில்லைமுகிலனின் 'விடியும் வரைகாத்திரு' (தி/கோணேஸ்வர் வித்தியாலயம், 1985), திருமலை நவத்தின் 'பூக்காத நட்சத்திரங்கள்' (தி/இந்துக்கல்லூரி, 1988), 'புதியதொரு வீடு' (தி/ மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, 1989), 'பிச்சாபாத்திரம்' (தி/உவர்மலை விவேகானந்தா, 1991), 'சிலுவைகள்' (தி/ புனித சூசையப்பர் கல்லூரி, 1989) போன்ற நாடகங்கள் அடையாளம் சொல்லக் கூடியதாக இருந்த போதிலும், 1991ஆம் ஆண்டுக்குப் பின் பாடசாலை நாடகங்களில் புதியதொரு பரிணாமம் ஏற்பட்டமை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பாடசாலை நாடகங்களின் புதிய வீச்சுக்கும், மாற்றத்துக்கும் காரணமாக இருந்தவர்கள் என்ற வகையில் 1991ஆம் ஆண்டுக்குப்பின் பெயர் சொல்லக் கூடியவர்களாக பாலசுகுமார், சி.பற்குணம், ராணி ஜெகசோதி, கவிஞர். சு.வில்வரத்தினம், நக்கீரன், புஸ்பராஜா, ஆனந்த ரமணன், பிலிப்முருகையா, மூதூரைச் சேர்ந்த ஆசிரியர் இரட்ணசிங்கம், தா.ஜெயவீரசிங்கம், தம்பி தில்லை முகிலன், ஆகியோர் காணப்படுகின்றனர்.

## சி.பற்குணம்

திருகோணமலை பாடசாலை நாடகங்கள் ஆரோக்கியமான அதே வேளை தரப்பாடுடன் வளர்க்கப்பட வேண்டும். சிங்கள ஆங்கில நாடகங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் மேடை உள்ளீடு, நடிப்பு, காட்சியமைப்பு, பாத்திர வார்ப்பு போன்ற சகல துறைகளிலும் நுட்ப ரீதியாக வளர்க்கப்பட வேண்டுமாயின் இவற்றுக்கான பல்வேறு பயிற்சிகளை வல்லுனர்களைக் கொண்டு மாணவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு பயிற்றுவிக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டு அதற்குரிய ஏற்பாடுகளாக நாடகத்துறை சார்ந்த வல்லுனர்களான பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர்.மௌனகுரு, ஏ.ரி.பொன்னுத்துரை, கிழக்குப்பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்.ஜெயசங்கர், பாலசுகுமார் ஆகியோரை பல்வேறு காலங் களில் திருகோணமலைக்கு அழைத்து வந்து பட்டறைகளையும், பயிற்சிகளையும் 1993 - 1994ஆம் ஆண்டுகளில் சி.பற்குணம் அவர்கள் நடாத்தியதன் பேரில் பாடசாலை நாடக வரலாறு புதிய வேகத்தை தொடங்கிய காலம் இதுவாகும்.

அமரர் சி.பற்குணம் நிர்வாக கடமைகளோடு கலை இலக்கியத்துறையில் காட்டிவந்த ஆர்வம் ஆச்சரியப்படக்கூடியது. திருகோணமலைப் பாடசாலை நாடகங்களில் ஒருவித காத்திரப்பிறப்பும், நுட்பத்திறனும் வளர்வதற்கு மிகப் பெரிய பங்களிப்புச் செய்தவர் இவர்.

இவரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் விளைவால் ஆரோக்கியமான பள்ளி நாடகங்கள் திருகோணமலையில் மேடையேறின. அமரர் பற்குணம் பற்றி கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் நண்பன் பாலசுகுமார் அவர்கள் தனது உலக அரங்க வரலாறு என்ற நூலில் குறிப்பிட்டுள்ள கருத்தை அப்படியே தரு கின்றேன்.

“தோழர் பற்குணம் தன் வாழ்நாளில் இறுதிவரை ஒரு மாக்சிய வாதியாகவே வாழ்ந்தவர்...... பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற இவர் விரிவுரையாளராகக் கடமையாற்றி அதன்பின் இலங்கை நிர்வாகசேவை அதிகாரியாக பதவியேற்று வ.கி.மா. அரசின் அமைச்சர்களின் செயலாளராகப் பணியாற்றியவர்.

தோழர் பற்குணத்தின் கடைசி ஐந்து வருடச் செயற்பாடுகள் கலைத்துவ ஈடுபாடு கொண்டதாக அமைந்தது. நாடகவளர்ச்சியில் மிகுந்த அக்கறை செலுத்தினார். திருகோணமலையில் இவரது ஏற்பாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்ட நாடகப்பட்டறைகள் திருகோணமலை அரங்க வரலாற்றில் பல புதிய மாற்றங் களை ஏற்படுத்தின. திருமலையில் உள்ள பாடசாலை மாணவர்களைக் கொண்டு உருவாக்கிய நாடகங்கள் பல அகில இலங்கைப் பரிசுகளைத் தட்டிச் சென்றன.[1]

### ராணி ஜெகசோதி

இலிகிதராக, ஆசிரியராக தன்வாழ்வைத் தொடங்கிய ராணி ஜெகசோதியின் (1949-1998) கலைத்துறையின் நுழைவுக்கு, கல்லூரி ஆசிரியத் தொழில் காரண மாகியது. ஓர் ஆரம்பக்கல்வி ஆசிரியையாக தனது பணியைத் தொடங்கிய இவரது சேவை, கலைத்துறையில் நுழைந்தபோது பாடசாலை நாடகங்களில் வீறும் வீரியமும் தேசியப் பெரு மையும் கொள்ள வைத்தது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ராணி ஜெகசோதி

நாடகக்கலையினை நேசிக்கும் பெண்கள் இலங்கையில் குறைவாக இருக்கும் இக்காலக்கட்டத்திலும் அத்துறையினைத் தன் ஆத்மார்த்த துறையாக எடுத்துக் கொண்டு, பள்ளி மாணவர்களைப் பட்டை தீட்டி பல நாடகங்களை மேடையேற்றி பல தேசிய விருதுகளை ராணி வென்றெடுத்தார்.

இவரின் முதலாவது நாடகம் ஏகலைவன் (1991) மற்றும், குளக்கோட்டன் (1992), கனவுமெய்ப்பட வேண்டும் (1993), சத்தியவான் சாவித்திரி (1993), நந்திவர்மன் (1994), ஆக்கிரமிப்பு (1995), வேள்வி (1996), உலகுக்கோர் நீதி (1997), கவிராஜன் கதை (1998), ஏகலைவன் (1991) என்பவை

திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மாணவர்களைக்கொண்டு இவர் தயாரித்து நெறிப்படுத்தி மேடையேற்றிய நாடகங்களாகும். ‘வேள்வி’ நாடகம் 1996ஆம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டியில் தேசிய விருதையும், அதேபோல் ‘கவிராஜன் கதை’ 1998ஆம்ஆண்டு தமிழ்மொழித் தினப் போட்டியில் தேசிய விருதையும் பெற்று திருகோணமலைக்குப் பெருமை தேடித்தந்த நாடகங்களாகும்.

இவர் மரணத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த வேளையிலும் 1998ஆம் ஆண்டு, நாடகக்கலையினை நேசித்ததன் பேரில் ‘கவிராஜன் கதை’ என்னும் தேசிய விருது பெற்ற நாடகத்தை இந்த மண்ணுக்குத் தந்துவிட்டே அமரத்துவ மானார் என்பது கண்களைக் கரைய வைக்கும் விடயமாகும்.

இவரது இழப்பு இந்த மண்ணுக்கு மட்டுமல்ல தேசியக்கலைக்கும் ஏற்பட்ட பெருநட்டமாகும்.

## வி.ஜெகநாதன் (நக்கீரன்)

வி.ஜெகநாதன் என்ற இயற்பெயர் கொண்ட நக்கீரன் திருகோணமலைப் பாட சாலை நாடகங்களுக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது, திருமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி, ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி, புனித சவேரியார் மகாவித்தியாலயம் போன்ற கல்லூரிகளின் மாணவர்களைப் பயிற்றுவித்து பல நாடகங்களை மேடையேற்றி ஆரோக்கியமான சேவை செய்தவர் நக்கீரன்.

‘கீழைத்தென்றல் கலாமன்றம்’ என்ற ஒரு மன்றை ஸ்தாபித்து பல இளைய தலைமுறைக் கலைஞர்களைப் பயிற்றுவித்து பல நாடகங்களை மேடையேற்றி யுள்ளார். ‘பௌர்ணமி’ (1997), ‘கோலங்கள்’ (1997), ‘உயர்ந்த மனிதர்கள்’ (1998) ஆகியவை தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி மாணவர்களைக் கொண்டு இவரால் நெறிப்படுத்தப்பட்ட நாடகங்களாகும். இவரால் தயாரித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கப்பட்ட 'உயர்ந்த மனிதர்கள்' என்ற நாடகம் உவர்மலை விவேகானந்தா கல்லூரிக்கு தேசிய விருதைப் பெற்றுத் தந்தது.

**ஆனந்த ரமணன்**

பாடசாலை நாடகங்களின் வளர்ச்சியில் கவனிக்கப்பட வேண்டிய இன்னொருவர் ஜே.பி.ஜே. ஆனந்தரமணன் திருமலை. புனித சூசையப்பர் கல்லூரியில் கல்வி கற்கின்ற காலத்திலிருந்தே நவீன நாடகத்துறையோடு அதிக ஆர்வம் காட்டிவந்த ஒரு கலைஞர். 1989ஆம் ஆண்டு திருமலை நவம் புனித சூசையப்பர் கல்லூரி மாணவர்களுக்காக தயாரித்து நெறியாள்கை செய்த சிலுவை என்னும் நாடகத்தின் மூலம் இத்துறையில் ஆர்வம் காட்ட முற்பட்ட ரமணன்- 1995ஆம் ஆண்டு ஆலங்கேணி விநாயகர் மகாவித்தியாலய மாணவர்களுக்காக தயாரித்து நெறியாள்கை செய்த 'ஏணிப்படிகள்' நாடகம் தமிழ்த்தினப் போட்டியில் தேசிய விருதைப் பெற்றதுடன் சிறந்த நெறியாளருக்கான விருதை ஆனந்தரமணன் பெற்றார்.

ஏணிப்படிகள் நாடகம், கொழும்பு ரவர் மண்டபம் உட்பட 05 முறைகள் மேடையேற்றப்பட்டது. இது போன்று திருகோணமலை கீழைத்தென்றல் கலா மன்றத்தினால் நடாத்தப்பட்ட கலை நிலா 95 நிகழ்ச்சியில் ஜெகநாதன் (நக்கீரன்) நெறியாள்கை செய்த 'அஸ்திரம்' என்ற புராண நாடகத்தில் அருச்சுனனாக நடித்து பல பாராட்டுக்களைப் பெற்றவர். இந்த நாடகம் 14 முறை மேடையேறி சாதனை படைத்த நாடகமாகும்.

1996ஆம் ஆண்டு கீழைத்தென்றல் கலாமன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு திருமலைநவத்தின் வழிகாட்டலில் வணக்கத்துக்குரிய லம்பேட்அடிகளார் கிழக்குப்பல்கலைக்கழக நுண்துறை விரிவுரையாளர் ஜெய்சங்கர் ஆகியோர் தொடர்ந்து ஐந்து நாட்கள் நடாத்திய நாடகப்பட்டறை இவரைப் பட்டதீட்டியதன் பயனாக ரமணன் நாடகப் பிரதியாக்கம், நெறியாள்கை போன்ற துறைகளில் சிறந்த அறிவைப் பெற்றார்.

இதன் நேர்விளைவு உடன் நிகழ்வது போல் 1996ஆம் ஆண்டு 'புகலிடம்' என்னும் நாடகம் நாடகப் பிரதியாக்கப்போட்டியில் வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விருதைப் பெற்றுக்கொண்டது.

இப்பிரதியை நெறியாள்கை செய்த ரமணன் பேராதனைப் பல்கலைக்கழகம் நடாத்திய தேசத்தின் எழுச்சிக்காக என்ற நிகழ்வில் நடாத்தப்பெற்ற நாடகப் போட்டியில் இந்த நாடகம் இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது. இதேயாண்டு சுவாமி ஸ்சுவஸ்தானந்தா பிரதியாக்கம் செய்து அனற்மிதுனா நெறியாள்கை செய்த 'லலிதாம்பிகா' என்னும் நாட்டிய நாடகத்தில் இராமனாக, ருத்திரனாக, சிவனாகமூன்று வேடங்களில் நடித்துப் பாராட்டுப் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமணன் பிரதியாக்கம், நெறியாள்கை செய்த நாடகங்களின் விபரங்களை ஆவணப்படுத்தல் அடிப்படையில் பின்வருமாறு அட்டவணைப்படுத்த முடியும்:

| இல | நாடக வகை | பிரதியாக்கம் | நெறியாள்கை மேடையேற்றம் |
|---|---|---|---|
| 1 | கோலங்கள் (சமூகம்) | ஆனந்தரமணன் | உவர்மலை விவேகானந்தா கல்லூரி |
| 2. | பௌர்ணமி பூசை, இலக்கியம் | ஜெகநாதன், ஜெகநாதன் ஆனந்தரமணன் | உவர்மலை விவேகானந்தா கல்லூரி |
| 3. | கிருஷ்ணன் தூது, புராணம் | ஆனந்தரமணன், ஆனந்தரமணன் | புனிதசவேரியார் மகாவித்தி யாலயம் |
| 4. | கைதிகள் சமூகம் | ஜெகநாதன் ஆனந்தரமணன் | புனிதசவேரியார் மகாவித்தி யாலயம் |
| 5. | நளவெண்பா இலக்கியம் | ஆனந்தரமணன் ஆனந்தரமணன் | மாத்தளை கலைமகள் வித்தியாலயம் |

ஆனந்த ரமணன் பல்வேறுபட்ட கலைகள் மீது நாட்டம் கொண்டவர் என்பதற்கு 'தாண்டவம்', 'காதல்பாட்டு', 'கொழுந்து', 'ஒயில்', 'மீனவநடனம்', 'செம்பாட்டு', 'சிலம்பு', போன்ற நடன வனங்கள் மீது இவருக்கு அதிக நாட்டமும் பரிச்சயமும் உள்ள காரணத்தினால் திருமலை, கொழும்பு போன்ற இடங்களின் கலை நிகழ்ச்சிகளில் கலந்து பலரது பாராட்டைப் பெற்ற பல்துறைக்கலைஞராவார்.

**பாலசுகுமார்**

திருகோணமலையைச் சேர்ந்த பாடசாலை நாடகங்கள் பல தேசிய விருதுகளைப் பெற்று தேசியக் கலைக்கும், திருகோணமலைக் கலைக்கும் பெருமை தேடித் தந்துள்ளன. அந்தவகையில் தி/விபுலானந்தா கல்லூரியில் உதவி அதிபராக இருந்து பின் கிழக்குப் பல்கலைக்கழக, கவின்கலைத் துறைத் தலைவராக இருந்த பாலசுகுமார் தயாரித்து நெறிப்படுத்திய 'மாதர்தம்மை இழிவுசெய்யும் மடமை யைக்கொளுத்திடுவோம்' என்னும் நாடகம் தமிழ்மொழித்தினப் போட்டியில் 1991ஆம் ஆண்டு தேசிய விருதையும், உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு 1992ஆம் ஆண்டு தயாரித்து அளித்த 'எங்களை வாழ விடுங்கள்' என்னும் நாடகம் தேசிய விருதையும் பெற்றது.

கிராமியக் கலைகளுடனும் நாடகக் கலையுடனும் அதிக ஈடுபாடு கொண்ட சுகுமார்கவின் கலைத்துறைத் தலைவராக இருந்த காலத்தில் கிழக்கிலங்கை நாடகத் துறைக்கு அளப்பெரிய சேவையாற்றியதுடன் நாடகத்துறை சார்ந்த பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களையும் ஆய்வுகளையும் செய்து மரபுவழி நாடகக் கலையின் தேசியத் தன்மையை உலகறிய செய்தார்.

இதுபோலவே தி/புனிதமரியாள் கல்லூரி மாணவர்களைக் கொண்டு ஆசிரியை வயலட் சரோஜா சந்திரசேகரம் தயாரித்து அளித்த 'அம்பிகாபதி அமராவதி' என்னும் இலக்கிய நாடகம் தமிழ்மொழித் தினப் போட்டியில் தேசிய விருதையும், பிலிப் முருகையா என்னும் ஆசிரியர் தி/ஆலங்கேணி விநாயகர் மகாவித்தியாலய மாணவர்களைக் கொண்டு தயாரித்து அளித்த 'ஏணிப்படிகள்' என்னும் நாடகம் 1995ஆம் ஆண்டு தமிழ் மொழித்தினப் போட்டியில் தேசிய விருதையும், அதே போல் 2001ஆம் ஆண்டு தயாரித்து அளிக்கப்பட்ட 'சருகு மொழி', என்னும் நாடகமும் தேசிய விருதைப் பெற்றன.

## VI. நாடக இலக்கியம்

இதுவரை மேடைநாடகங்களின் வளர்ச்சியையும், அதன் வரலாற்றுப் பதிவு களையும் பற்றி நோக்கினோம். இவ்வத்தியாயத்தில் திருகோணமலையின் நாடக இலக்கியம் பற்றி நோக்குவோம். நாடக இலக்கியம் என்பது ஒரு தனி வடிவம்.

நம்முன்னோர் இயல், இசை, நாடகம் என்ற மூவகைச் செல்வங் களையும் முத்தமிழ் எனப் பெருமையோடு, பேணிவளர்த்து வந்துள்ளமையைப் பண்டைய இலக்கியங்கள் தொடக்கம் இக்கால நவீன இலக்கியங்கள் வரை அறிவோம். மரபு வழியாயினும், நவீன நாடகமாயினும் வாசகன் படித்துச் சுவைப்பதற்கேற்ற பிரதி வடிவம் பெறுகின்றபோது அது நாடக இலக்கியம் என்று கொள்ளப் படுகிறது.

மேடைநாடகங்கள் தயாரிப்பு, மேடை, கலைஞர், நெறியாள்கை என்ற உள்ளீடுகள் பெறுவதும் நாடக இலக்கியம் படிப்போர் மனங் கருதி எழுதப் படுவதும் சிறிய வேறுபாடாக இருந்தபோதும் கலைப் பெறுமதியில் இரண்டும் ஒன்றே.

### கண்டிநாடகம்

திருகோணமலையில் முதல் முதல் நாடக இலக்கியம் என்ற வகையில் எழுதப் பட்ட கலையின் பிறப்பு அறிஞர் வே.அகிலேசப்பிள்ளை (1853 - 1910) காலத்திலிருந்தே ஆரம்பமாகின்றது என்று கூற முடிகிறது. ஏனெனில், அதற்கு முன்னைய காலங்களில் கூத்துக்கள் எழுதப்பட்டனவா? இல்லையா? என்பதற் குரிய வரலாற்றுச் சான்றுகளைப் பெறுவதற்குரிய இடர்பாடுகளை மனதில் கொண்டே இம் முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

திரு.அகிலேசபிள்ளை எழுதிய 'கண்டி நாடகம்' எனும் கூத்தே திருகோண மலையில் எழுதப்பட்டதும், அச்சுப்பட்டதுமான முதலாவது கூத்து இலக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம் என்ற தலைப்பில் இது எழுதப் பெற்றிருந் தும் இதனை நான் கூத்து என விளிப்பதற்குக் காரணம் இது கூத்துக் குரிய பண்புகளையே கொண்டிருப்பதனாலேயாகும்.

'கண்டி நாடகம்' எனும் இக்கூத்துப் பிரதியை அகிலேசபிள்ளை 1887இல் எழுதி முடித்துள்ளார். திருகோணமலை பண்டிதர் ம.பீதாம் பரனாரின் கருத்துப்படி இக்கூத்து 1889ஆம் ஆண்டு எழுதப்பெற்றுள்ளதென அவர்[1] குறிப்பிட்டுள்ளார். ஆனால் மூலப்பிரதியைப் பார்வையிட்ட போது இந்நாடகம் சர்வசித்து வருடம் 1889இல் எழுதப்பட்டுள்ளது. அச்சு வாகனம் ஏறாமல் இப்பிரதி இன்னும் அகிலேசபிள்ளையின் பேரன் திரு.அ.கணேசலிங்கம் கையில் இருப்பதை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

இந்த நாடகத்தை அகிலேசபிள்ளை அரங்கில் கூத்தாக ஆடுவதற்கு எழுதினாரா? அல்லது நூல் வடிவாக்கவேண்டுமென்று எழுதினாரா? என்பதனை அறிய முடியாவிட்டாலும், இவருடைய காலத்திலேயே நாடக இலக்கியம் என்னும் பிரக்ஞை திருகோணமலையில் நிலைகொள்ளத் தொடங்கிவிட்டது என அறிய முடிகின்றது.

ஈழத்தின் கிராமங்களிலே ஆடப்பட்டு வந்த ஏனைய கூத்து வடிவங்களைப் போலவே இதிலும் விநாயகர், திருமால் போன்ற தெய்வங்களுக்கு துதி பாடப்பட்டு அவையடக்கம் தொடங்குகின்றது. திருகோணமலையில் எழுந்தருளியிருக்கும் கோணநாதனுக்கு துதி பாடும்போது பின்வருமாறு பாடுகிறார்:

*'........................*
*கண்டி நகரரசாண்ட கீர்த்தி சிங்கன்*
*கதையை நாடகத்தமிழில் கவியாய்ப்பாட*
*அண்ட சராசரமும் அனைத்த மீன்ற முக்கண்*
*.........................................*
*கொண்டல்படி திரிகோணநாதன் பாத*
*கோகனக மலர்தலைமேற் கொள்ளுவர்.'*

எனத் துதிபாடித் தொழும் நாடக ஆசிரியர் அவையடக்கம் கூறவந்த போது,

*'பொன்னகரமென விளங்குங் கண்டியாண்ட*
*புகணிருபன் சரித்திரத்தைப் புலவோர் முன்யான்*
*இன்னிசை நாடகமாக வியம்பியுள்ளத்*
*திருங்களிப்புக் கொண்ட விதமெவ்வாறென்னில்*
*................................*
*கண்டி நகர் தன்னையரசாண்ட மன்னன் கதையை*
*காசினியிற் செந்தமிழினாடக மாயுரைக்க ஆ..ஆ...*
*விண்டலத்து மண்டலத்து முள்ள புலவர்களின்*
*மென்கமல பாதமதை விரைந்து தொழுவேனே.. ஜெய'*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்கள் வருதல், கட்டியக்காரன் வருதல், மன்னன் சபை வருதல், மந்திரி ஏலப்பனை அழைத்தல், கொலு விசாரணை, உலாப்போதல், ரஞ்சித பூஷணி எனும் அழகியை சோலையில் கண்டு இராசன் மையல் கொள்ளல் போன்ற காட்சிகளைக் கொண்ட இந்த நாடகத்தில் ஆங்காங்கே வடமோடி, தென்மோடிக் கூத்துக்களைப் போலவே வசனங்கள் விரவி வருகின்றன.

இராசன் சோலையில் ரஞ்சித பூஷணி எனும் அழகியைக் கண்டு, மையல் கொண்டு தன் திக்பிரமையை வெளிப்படுத்தும் பாங்கில் அமைந்த இவ்வசனம் கிரந்த மணம் வீசுவதைக் காணலாம்.

*'ஆ!ஆ! இந்தப் பூங்காவனத்திலே*
*நிற்பவள் ரதிதேவியா? சரஸ்வதியா?*
*'..ஆ ரென்று தெரியவில்லையே*
*மன்மதன் கணைமேவுதே வந்திளந்*
*தென்றல் தாவுதே் மாமரக்குயில்*
*கூவுதே ஆ..... ஆ.... எனக்கொரு*
*முத்தந் தாராளோ'*

நாடகத்தில் முதலியார், சக்கிடுத்தார், ஜெனரல், கொழும்பு ராசன் போன்ற நாடக மாந்தர் வரும் காட்சிகளில் ஆங்கில வசன உரையாடல் எழுதப்பட்டிருப்பதனை காணக்கூடியதாகவுள்ளது. இந்த ஆங்கில வசனங்கள் அப்படியே தமிழில் எழுதப்பட்டு அதன் கீழ் ஆங்கில அரிச்சுவடியில் எழுதப்பட்டிருக்கின்றது.

இனி இந்த நாடகத்தின் யாப்பு அமைப்பினை சுருக்கமாகப் பார்ப்போம். கீர்த்தனை, விருத்தம், கட்டளைக் கலிப்பா, கலித்துறை, கண்ணி, வெண்பா ஆகிய பல்வகை யாப்புக்களில், பாடப்பட்டிருக்கும் இந்த நாடகத்தில் வடமொழிப் பாட்டு வகையைச் சேர்ந்த தோடயம், அத்துடன் கூத்துக்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் ஓசைக் கட்டான தருவையும் ஆசிரியர் கையாண்டு பாடியுள்ளதைக் காண முடிகிறது. பாத்திரம், அப்பாத்திரத்தின் உணர்ச்சி வெளியீடு ஆகியவற்றினை மனதில் கொண்டு பொருத்தமான இடத்தில் பொருத்தமான பாவினத்தை நாடக ஆசிரியர் பயன்படுத்தியுள்ள சிறப்பையும் காணலாம்.

இக்கூத்து திருகோணமலைப் பகுதியில் ஆடப்பட்டதற்குரிய ஆதாரங் களைத் தேடிப்பிடிப்பது கஸ்டமாக இருந்தபோதும், பிற்காலத்தில் 1930ஆம் ஆண்டுகளுக்குப் பின் இக்கூத்து தம்பிமுத்து அண்ணாவி அவர்களால் ஆடப் பட்டது. ஆனால் திருகோணமலைப் பிரதேசத்தில் ஆடப்பட்டு வந்த 'கண்டி நாடகமும்', யாழ்ப்பாணம், மன்னார் பிரதேசங்களில் ஆடப்பட்டு வந்த 'கண்டியர சன்' கூத்தும் ஒரே கூத்துக்களா? ஒரே மூலப் பிரதியைச் சேர்ந்தவையா? என்பது ஆராய்வுக்குரியது.

அகிலேசபிள்ளையவர்களால் எழுதப்பெற்ற 'கண்டி நாடகம்' என்னும் இக்கூத்து ஈழத்தில் எழுதப்பெற்ற முதலாவது கூத்தா? அல்லது கண்டியரசன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வரலாற்றைப் பலர் பாடியுள்ளனரா? என்ற ஐயப்பாடு ஒன்று இந்த இடத்தில் தர்க்கபூர்வமாக எழுகிறது. காரணம் தம்பிமுத்து அண்ணாவி (1900-1960) என்பவர் 1930ஆம் ஆண்டளவில் கண்டி நாடகத்தை திருகோணமலைப் பகுதியில் ஆடிவந்த ஏறத்தாழ அதேகாலப் பகுதியில் யாழ்ப்பாணம், மன்னார்ப் பிரதேசங்களிலும் கண்டியரசன் என்ற பெயருடன் ஓர் கூத்து ஆடப்பட்டு வந்துள்ளது. ஆகவேதான் அகிலேசபிள்ளை பாடிய கண்டி நாடகத்தைத்தான் அண்ணாவி தம்பிமுத்து கூத்தாக ஆடினார் என்று சொல்லுவதற்கும் போதிய சான்றுகளைப் பெறமுடியாமல் இருக்கிறது. அதேவேளை மன்னார், யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஆட்டப்பட்டு வந்த கூத்தைத்தான் அண்ணாவி தம்பிமுத்து பின்பற்றி ஆடினார் என்று சொல்லவும் முடியாது. காரணம் அகிலேசபிள்ளை எழுதிய கண்டி நாடகம் 1887ஆம் ஆண்டே எழுதப்பட்டுள்ளது. இக்கூத்தை ஏன் அவர் ஆடியிருக்கக் கூடாது என்றும் கேட்கத் தோன்றுகிறது.

இதேவேளை சில வரலாற்றுப் பதிவுகளைப் பார்ப்போமாயின் சொக்கன் தனது 'ஈழத்து தமிழ் நாடக வளர்ச்சி' என்னும் நூலில் பாஷையூர் மிக்கோர் சிங்கம் (1910) கண்டியரசன் என்னும் கூத்தைப் பாடியுள்ளார் என்றும் அதே போன்றே புலவர் மிக்கேல் சிங்கம் (1947) கண்டியரசன் கூத்தைப் பாடியுள்ளார் என்றும் மரியதாசன் நாட்டுக் கூத்துப் பட்டியலை ஆதாரங்காட்டி எடுத்துக் கூறியுள்ளார். இவரைப் போலவே கலாநிதி ஆ.சதாசிவம் அவர்கள் ஈழத்து தமிழ்க் கவிதைக் களஞ்சியம் என்னும் தனது நூலில் திரு.கந்தப்பிள்ளை (1766 - 1842) என்பவர் கண்டி நாடகம் என்னும் கூத்தைப் பாடியுள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார். கூட்டுமொத்தமாகப் பார்க்கின்றபோது கண்டி மன்னன் கதையை நான்குபேர் கூத்தாகப் பாடியுள்ளனர் என்பதனை அறிய முடிந்தபோதும் இவற்றில் எது காலத்தால் முந்தியது?, எல்லோரும் ஒரே சரித்திரத்தையா பாடி யுள்ளனர்? அல்லது ஒருவரைத் தழுவி ஒருவர் பாடியுள்ளனரா? என்பது ஆய்வுக்குரிய ஓர் விடய மாகையால் அதைத் தவிர்த்து திரு கோணமலையில் நாடக இலக்கியம் என்ற வகையில் மேற்படி கண்டி நாடகம் என்னும் பிரதியே மூத்த முன்னோடி நாடக இலக்கியமாகக் கொள்ள வேண்டியுள்ளது. இதனை மூத்த இலக்கியமாகக் கொண்டு இனி பிற்கால நாடக இலக்கிய வளர்ச்சியை நோக்க முனைகின்றேன்.

கண்டியரசன் நாடகத்துக்குப் பின் 1925ஆம் ஆண்டளவில் திரு. ச. வேலாயுத பிள்ளை என்பவரால் எழுதி வெளியிடப்பட்ட, 'இசபெல் அல்லது ஈஸ்வரி' என்ற கவிதை நாடகம் வெளியிடப்பட்டுள்ளது. இந்நாடகம் 'MEASURER FOR MEASURE' என்ற சேக்ஸ்பியரின் நாடகத்தை தமிழில் கவிதை நாடகமாக, இங்கிலாந்திலிருந்த பரமேஸ்வரி பிரிண்டிங் வேர்க்ஸ், ஸ்தாபனத்தில் அச்சடித்து அந்த நாட்டிலேயே விற்பனைக்குவிட்டிருந்தார். இந்நூல் இவர் தந்தை ச.விஸ்வநாதன் ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்டது. அதேவேளை த.அமர சிங்கம் அவர்கள் 'இராவண தரிசனம்' நாடக நூலின் வெளியீட்டாளர் உரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வருமாறு கூறுவார்: 'Measurer For Measure' என்ற நாடகத்தைத் தமிழில் 'இஸபெல் அல்லது ஈஸ்வரி' என்ற பெயரில் கவிதை நாடகமாக்கினார். இந்த நாடகத்தை வித்தியாலயம் வீதியில் இருந்த அவரது சொந்த அச்சகமான பரமேஸ்வரி பிரிண்டிங் வேர்க்ஸ் என்ற அச்சகத்தினால் அவரே வெளியிட்டு அங்கேயே, விற்பனைக்கும் விட்டிருந்தார்.

இதன்பின் வெளிவந்த நாடகநூல் தா.பி.சுப்பிரமணியம் அவர் களின் 'கோயிலும் சுனையும்' என்னும் நூலாகும். இது ஈழத்து இலக்கியச் சோலையின் (1989) வெளியீடாக வந்துள்ளது. 'பணத்தை யல்ல, 'கோயிலும் சுனையும்', 'மகாஜோதி', 'மூன்றில் இரண்டு', 'பட்டகாலிலே', 'சத்தியவானும் சாவித்திரியும்' ஆகிய ஆறு குறுநாடகங்கள் இத்தொகுதியில் இடம்பெறுகின்றன.

இந்நாடகங்களில் கோயிலும் சுனையும் நாடகம் குளக்கோட்ட மன்னர் குளம் அமைத்தமையை கற்பனையில் நாடகமாக வடித்துத் தந்திருக்கிறார் தா.பி. இதுபோலவே மகாஜோதி என்னும் நாடகம் புத்தர் வாழ்வை அடியொற்றி எழுதப்பட்டுள்ளது. மூன்றில் இரண்டு என்னும் நாடகம் விறகுவெட்டியைக் கதாபாத்திரமாகக் கொண்ட நகைச்சுவை நாடகம். ஏனைய மூன்றும் சமூக நாடகங்கள் ஆகும்.

இவை மேடை கருதி எழுதப்பட்டதா? அல்லது வாசனை கருதி எழுதப் பட்டதா? என்பது கேள்வியாக இருந்தாலும், மரபுவழிப்பட்ட போக்கில் எழுதப் பட்ட சின்ன நாடகங்களாகும்.

இதனைத் தொடர்ந்து 1993ஆம் ஆண்டளவில் 'பிரேமின்' என்ற பெயரில் தர்மு சிவராமு எழுதிய 'நஷத்ரவாஷி' என்னும் நவீன நாடகம் சென்னையில் வெளியிடப்பட்டுள்ளது. மரபுவழி நாடகப் போக்கி லிருந்து நவீன நாடக உத்திகளை உள்வாங்கி தனது நல்ல அனுபவங்களையும், வாசனைத் திறனையும் வைத்து சிவராமு இந்த நாடகத்தை ஆக்கியுள்ளார்.

ந.முத்துச்சாமி, இந்திராபார்த்தசாரதி, சே.இராமானுஜம், எம்.டி. முத்துக்குமார சாமி, பிரேதாபிரேதன், ச.முருகபூபதி, வேணுசரவணன் போன்றோர் 'இந்திய நவீன நாடக மரபின் மன்னர்கள்' என்று சொல்லப்படக் கூடியவர்களின் வரிசை யில் தர்மு சிவராமுவின் இந்த நாடகமும் பெயர் பெற்ற நாடகமாகும்.

பன்முகப் படிநிலைகளைக் கொண்ட தமிழின் இன்றைய நவீன நாடக அரங்கில் சோதனை நாடகங்கள், உக்கிரமான உண்மைகளைப் படிமங்களின் வழியும் குறியீடுகளின் வழியுமே உணர்த்துகின்றன. சிதைக்கப்பட்ட வார்த்தைகள், வாழ்வின் அபத்தத்தை உணர்த்தும் காட்சிப்படுத்தல்கள், மரபை நீக்கிப் புதியன படைத்தல் ஆகியன நவீன நாடகங்களின் வீச்சு எனில் அதனை இந்த நாடகம் சுமந்து கொண்டு வந்துள்ளது.

1970க்குப் பின் ஈழத்து நவீன நாடக மேடைகளில் அ.தாஸீஸியஸ், நா.சுந்தரலிங்கம், இ.சிவானந்தன், து.பாலேந்திரா போன்றவர்கள் நவீன நாடக மரபு ஒன்றின் மேடையேற்றத்துக்குக் காத்திரமான பங்களிப்பைச் செய்தவர்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்ற இக்காலத்தில் திருகோணமலையைச் சேர்ந்த தர்மு சிவராமு இந்தியாவில் இந்நவீன நாடகத்தை உருவாக்கித் தந்துள்ளார்.

இந்த நாடகம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச்சங்கத்தின் பொன் விழா நிகழ்வின் போது (1977) மேடையேற்றப்பட்டு அமோக ஆதரவைப் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

புதுடில்லியினைக் களமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த நாடகத்தின் பாத்திர வார்ப்புக்கள், உத்தி முறைகள், நாடக மேடை, உள்ளீட்டு நுட்பங்கள் அனைத்தும் நவீன தன்மையின் மேலைத்தேய சொரூபமாய் விளங்குகின்றது எனலாம்.

**பாலசுகுமார்**



பாலசுகுமார்

திருகோணமலை நவீன நாடக இலக்கியத்துக்கு வளமும் வேகமும் தந்த ஒருவர் பாலசுகுமார். வ.அ. போன்ற முதுபெரும் எழுத்தாளனின் தளத்திலிருந்தும், வழி காட்டலிலிருந்தும் வளர்ந்த சுகுமார் தான் ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்த காலத்தில் சேனையூர் மகா வித்தியாலயம், திருகோணமலை விபுலாநந்தா கல்லூரி, ஆகியவற்றில் மாணவர்களைக் கொண்டு மேடையேற்றிய நவீன(6) நாடகங்களின் தொகுப்பாக பாலசுகுமார் நாடகங்கள் (1993) என்ற நூல் வெளிவந்துள்ளது. இத்தொகுப்பில், எவடம் எவடம் புங்கடி புளியடி, மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்திடுவோம், சூழலைக் காப்போம், மானுடம் வென்றதம்மா, முன்னொரு காலத்திலே, வானம் நமக்கொரு வரையறையா? ஆகிய நவீன நாடகங்கள் கோர்க்கப்பட்டுள்ளன. திருகோணமலை நவீன நாடக வரலாற்றின் தத்துவார்த்த வித்தகனும், நெறியாளனும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு சுகுமாரின் இந்த நாடகங்கள் தேசிய உயர்நிலை பெற்ற நாடகங்களாகும்.

பள்ளி மாணவர்களைக் கொண்டு சமூகத்தின் பிரச்சனைகளை நாடகங்கள் மூலம் நாடிபிடித்துக் காட்டியிருக்கும் சுகுமார் நவீன நாடகங்களின் உத்தி முறைகளையும், குறியீட்டு முறைகளையும், படிமங்களையும் பழைய மரபுடன் குழைத்து இந்த நாடகங்களை ஆக்கித் தந்துள்ளமை பெரியதொரு சாதனையாகும்.

எமது பாரம்பரிய கூத்துக்கள், விலாசங்கள், ஆட்டங்கள், இசைகள், கருவிகள், உடைகள், ஒப்பனைகள் என்ற மரபுகள் மூலம் நவீன நாடக மரபு ஒன்றைக் காத்திரமாகவும், ஆழமாகவும் அதேவேளை நுட்பத்துடனும் வளர்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்க முடியும் என்ற பரிசோதனைக் களத்தை உருவாக்கி அதில் வெற்றியும் கண்டுள்ளார்.

வெறுமனே மேலைத்தேச வடிவங்களை அப்படியே உள்வாங்கி அவையே புதுமைகள் என்று தம்பட்டம் அடிப்பது பெருமையல்ல என்பது போல் வடிவங்கள் சொந்தமானவையாகவும், அதேவேளை மரபு வழிப்பட்டவையாகவும் இருக்கவேண்டும். நவீன கருத்துக்கள் உள்ளீடுகளாக்கப்பட்டு மேலைத் தேசத்துக்குச் சமமாக எமது நாடக மரபையும் வளர்த்துச் செல்ல முடியும் என்ற உண்மையைச் சுகுமார் தனது நாடகங்கள் மூலம் காட்டியுள்ளார் அல்லது நிறுவியுள்ளார் என்பதே பெரிய விடயமாகும்.

அவரின் சூழலைக் காப்போம் என்னும் நாடகத்தில் பரதநாட்டியம் என்னும் எமது நாட்டியக் கலையின் மூலம் நவீன கருத்துக்களைப் பிழிந்து காட்ட முடியும். அதனைப் பழமைபாடிகளையும், புதுமை விரும்பிகளையும் ஒன்று சேர்ந்து சுவைக்க வைக்க முடியும் என்பதனை நிரூபித்துள்ளார்.

'மானிடம் வென்றதம்மா', என்ற நாடகத்தில் பழைய தென்மோடி, வட மோடிக் கூத்து மரபுகளையும், ஆட்ட நுட்பங்களையும் நவீன தேவைகளுக்கும், பார்வைகளுக்கும் ஏற்ற முறையில் நவீன வடிவமாக்கி புதிய பரிசோதனை முயற்சியொன்றைச் செய்து காட்டியுள்ளார்.

இன்னொரு நாடகமான 'மாதர்தம்மை இழிவுபடுத்தும் மடமையைக் கொளுத்திடுவோம்', நாடகத்தில் புதிய பரிசோதனை முயற்சியின் உச்சதளத் துக்குச் சென்றுள்ளார், என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஓவியங்களை மேடையினூடாகப் பயன்படுத்தி நாடக நுட்பங்களில் ஓவியங்கள் எந்தளவுக்கு கருத்துத் தெறிப்புக்கு உதவ முடியும் என்ற அற்புத சாதனையை சுகுமார் செய்து காட்டியுள்ளார். இதற்கெல்லாம் காரணம்:

அவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பிரிவு விரிவுரையாள ராகக் கடமையாற்றலாலும், தனது மாணவர்களின் உறுதுணைப் பயிற்சியினாலும் நல்ல நாடகங்களை உருவாக்கித் தந்திருக்கும் சுகுமாரின் ஏனைய நாடகம்சார் இலக்கியங்களாவன: திருகோணமலைப் பிரதேச நாடக அரங்கப் பாரம்பரியம் (1994), தமிழில் நாடகம் (1995), உலக நாடக அரங்கு(1996), சூர்ப்பனகை இடத்து கைவாங்கிய இராவண தனுசு (1998) அவரின் நாடக நூல்களில் ஒருபுறம் நாடக வடிவமும், நாடகத்தின் மீதுள்ள பார்வையும், ஆழ அகலமாக வளர்வதற்கு அவை துணை நிற்கின்றன.

### கயல்விழி

திருக்கோணமலைக் கவிராயர் என்று அழைக்கப்படும், தா.சீ. வில்வரா சாவின் கவிதை நாடகமாக, 'கயல்விழி' என்னும் நாடகநூல் ஈழத்து இலக்கியச் சோலை வெளியீடாக (1995)ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையின் பிரபல்யமான கவிஞரான வில்வராசா இந்த நாடகத்தை வரலாற்று நாடகமாக ஆக்கித் தந்துள்ளார். 'மகாஅலக் சாந்தர்' என்னும் நாடகத்தின் கருவாகப் பின்னப்பட்டிருக்கும் இந்த நாடகத்தில் கம்பச் சக்கரவர்த்தி போல் தமிழ்ப்பண்பாடு குறையாத முறையில் பாத்திரங்களையும், உரையாடல்களையும், சம்பவங்களையும் உருவாக்கி இந்த நாடகத்தை ஆக்கித் தந்துள்ளார் கவிராயர்.

**காதலே நீ வாழி**

1994ஆம் ஆண்டில் கே.கே.மதிவதனின் 'காதலே நீவாழி' என்ற சமூக நாடகம் மட்டுநகர் உதயம் 14வது வெளியீடாக வந்துள்ளது. ஏலவே இவர் கதை எழுதி தயாரித்து மேடையேற்றிய இந்த நாடகத்தை நூல்வடிவில் ஆக்கித் தந்துள்ளார்.

**இராவண தரிசனம்**

இதுபோலவே வீணைவேந்தன் சித்தி அமரசிங்கம் 'இராவண தரிசனம்' என்னும் இலக்கிய நாடகத்தை ஈழத்து இலக்கியச் சோலையின் 1997ஆம் ஆண்டு வெளியீடாகத் தந்துள்ளார்.

இராவணன் இறுதி நாள் யுத்தத்திற்கு புறப்படுவதற்கு முன்பு மனைவி மண்டோதரிக்கு தனது உண்மை நிலையை, வெளிப்படுத்துவதாகக் கற்பனை செய்து இந்த நாடகம் எழுதப்பட்டுள்ளது. வீண்பழிக்கு இராவ்ணன் உள்ளாகி தனது தெய்வீக பலத்தையும், வீர புருஷ இலக்கணத்தையும் இழந்துள்ளமையை புதிய பார்வையில் இந்த நாடகம் சொல்லித் தருகிறது.

நாடக மாந்தர்களான இராவணன், மண்டோதரி, இந்திரசித்தன், மாவீரன் போன்ற அளவான பாத்திரங்கள் கொண்டு இந்த இலக்கிய நாடகம் ஆக்கப்பட்டுள்ளது. காட்சி ஒன்றில் தாய் மண்டோதரியுடன் மேகநாதன் தனது சித்தப்பன் செய்த ஞாயத்தைச் சொல்லும் வகை சித்தரிக்கப்பட்டு, இரண்டாம் காட்சியில் மேகநாதன் போரில் மாழப்பட்ட சூழ்ச்சி விபூடனின் உதவி, மூன்றாம் காட்சியில் தனது அழிவுக்கு தனது தங்கை சூர்ப்பனகைதான் காரணமென விதியின் கதையை மண்டோதரிக்கு சொல்லும் இராவணன் நிலை போன்ற நான்கு காட்சிகள் அடங்கிய நாடகமாக இது பின்னப்பட்டுள்ளது.

**ஸ்ரீ அபிநயசிகாமணியின் இரு நாடகங்கள்**

சி.விஸ்வலிங்கம் அவர்களின் இருநாடகங்கள் (1999) ஈழத்து இலக்கியச் சோலையின் வெளியீடாக வந்துள்ளது. இதில் 'எல்லாம் காசுக்காக' என்னும் சமூக நாடகமும், 'சிவபக்தன் இராவணன்' என்ற இலக்கிய நாடகமும் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 பாத்திரங்கள் கொண்ட எல்லாம் காசுக்காக நாடகத்தில் நாடக ஆசிரியர் 10-06-1973ஆம் ஆண்டு மேடையேற்றிய நாடக்தை நூல் வடிவில் கொண்டு வந்துள்ளனர். அக்காலச் சமூகச் சூழ்நிலைகளின் தாக்கங்களையும், புரையோடிப் போன சமூகச் சீர்கேடுகளையும் சொல்லுவதற்கு ஏற்ற வடிவம் நாடகமென்ற கலையென்பதை நன்றாக உணர்த்திருந்த விஸ்வலிங்கம் அதற்கேற்ற முறையில் பாத்திர வார்ப்புக்களைச் செய்திருக்கின்றார். யதார்த்தமாக நிலவுகின்ற வேலை யில்லாப் பிரச்சினை, ஏற்றத்தாழ்வுப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினைகள் பாத்திரங்களின் வசனங்களினூடாக கோடிட்டுக் காட்டப்படுகிறது.

இளமையின மெல்லிய உணர்வுகளின் நளினங்களும், நப்பாசைகளும் காலச்செல்வாக்குக்கு ஏற்ப சொல்லப்படுகிறது. இந்நாடகத்தில் வார்க்கப்பட்டி ருக்கும் பாத்திரங்களிலும், வசனங்களிலும் அக்காலத் திரைப்படங்களின் செல் வாக்கு ஏதோ ஒரு வகையில் ஊடுருவியிருக் கின்றது.

**சபதங்கள்**

த.சிதம்பரப்பிள்ளை, வி.ஜெகநாதன் ஆகிய இருவரும் இணைந்து 'கீழைத் தென்றல் கலாமன்றத்தின்' வெளியீடாக 'பாஞ்சாலி சபதம்' (கூத்து) காதல் நெஞ்சங்கள் கவிதை நாடகம் 'சபதங்கள்' என்ற தலைப்பில் 2000ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

இந்நாடக நூலில் வரும் சிதம்பரப்பிள்ளையின் பாஞ்சாலிசபதம் ஒரு மோடிக்கூத்துஆகும். கூத்து ஆடுவதிலும், நெறிப்படுத்துவதிலும், ஆக்கம் செய்வதிலும் நிறைந்த அனுபவம் உள்ள இந்தக் கிராமத்துக் கலைஞனின் ஆற்றலும், அனுபவமும் கூத்தினைப் படிக்கும்போது தெரியவருகின்றது. அதிபராக இருந்து மாணவர்க்காய்த் தயாரித்து அளித்த போதும் கூத்து இலக் கணங்கள் நிரம்பப் பெற்ற வடிவமாகக் காணப்படுகிறது.

இந்நூலில் வரும் வி.ஜெகநாதனின் கவிதை நாடகமான 'காதல் நெஞ்சங்கள்' என்ற இலக்கியம் பொருள் கொண்ட பண்பில், பொருளில் பிரிதல் என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டதாக, பொருள் தேடலின் பொருட்டு, தன்னைவிட்டுத் தன் கணவன் பிரிந்து போகப் போகிறானே என்று மனங்குமுறும் ஒரு மனைவியின் துயரமாக நாடகம் வடிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி அந்நூலில் உள்ள விமர்சனத் தொகுப்பொன்றை அப்படியே தருகின்றேன்.

'காதல் நெஞ்சங்கள் என்னும் இலக்கிய கவிதை நாடகம் சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளக்கூடிய விதத்தில் தெளிவாக நிற்கின்றது. நாடகப்பாத்திரங்கள் அவற்றை உள்வாங்கி, வெளிப்படுத்தும் போது சொற்கள் தெளிவாக விளங்காத நிலை தோன்றியதை அவதானிக்க முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி அமைப்பைப் பொறுத்தவரை மிகவும் மதிநுட்பத்துடன் மேடையில் அமைத்துக் காட்டியமை உண்மையிலேயே பாராட்ட வேண்டிய விடயம். நேரிலே காணாத ஒரு காட்சியை சிந்தனையிலே தவழவிட்டு, பார்வையாளர்கள் இப்படித்தான் இருக்கும் என்று உணர்ந்து கொள்ளும் விதத்தில் திணைப் பறணிலே நின்று பாடும் காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

1999ஆம் ஆண்டு திருகோணமலை, மனிதவள பண்பாட்டு நிலையம் அமரர் சி.பற்குணம் நினைவாக, 'அரங்கு ஓர் அறிமுகம்', நாடக அரங்கு ஆய்வு நூல் ஒன்றை வெளியீடு செய்துள்ளது.

பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் சி.மௌனகுரு, க.திலக நாதன் ஆகியோர் எழுதிய கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

இந்நூலில் நாடகக்கலையின் இயல்புகள், தோற்றம், தமிழ்நாட்டு நாடகப் பாரம்பரியம், இலங்கை தமிழ் நாடகப் பாரம்பரியம், நாடகத்தயாரிப்பு என்ற பல்வேறு பரிமாணங்கள் கொண்ட கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதனை ஒரு விமர்சன அல்லது கோட்பாடு சார்ந்த நூல் என்ற வகையில் கொள்ளலாம்.

2003ஆம் ஆண்டளவில் வி.கௌரிபாலன் என்பவரால் எழுதப்பெற்ற 'வானுறையும் தெய்வத்தினுள்' என்னும் நாடக நூல் வெளிவந்துள்ளது.

**சாம்பல் மேடு**

அன்னை சாரதாதேவியின் வாழ்க்கை வரலாற்றை மையப்பொருளாகக் கொண்டு ஆன்மீக சிந்தனைகளை வெளிப்படுத்தும் பாங்கில் மேற்படி நாடக நூல் ஆக்கப் பட்டுள்ளது.

திருமலை கனக. மகேந்திரா என்பவர் தான் மேடையாற்றிய நாடகங்களான 'புட்டிப்பால்', 'இரத்தம் இரத்தம்', 'சாம்பல்மேடு' ஆகிய மூன்று நாடகங்களை இணைத்து 'சாம்பல் மேடு' (2010) என்ற தலைப்பில் நாடக நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நாடக இலக்கிய நூல்கள் என்ற வகையில் இல்லாமல் நாடகச் சான்றுகள் பற்றியும், நாடகம் சம்மந்தமாக காலந்தோறும் பல்வேறு அறிஞர்கள் எழுதிய பார்வைகள், பதிவுகள், கட்டுரைகள் பற்றி சற்று பார்ப்போம்.

முதலில் நாடகப்பிரதிகள் என்ற வகையில் திருமலை நவம் எழுதிய 'பிச் சாபாத்திரம்' என்னும் குறியீட்டு நாடகம் நோர்வே தமிழ்ச் சங்கம் நடாத்திய நாடகப் போட்டியில் 1990ஆம்ஆண்டு 3ஆம்பரிசைப் பெற்றுக்கொண்டது. அதுபோலவே உலகத்தமிழர் இயக்கம் (கனடா) நடாத்திய (92ஆம் ஆண்டு) நாடகப் போட்டியில் 'விடிபொழுதுக் கனவுகள்' எனும் நாடகம் பரிசுபெற்றது.

காலத்துக்குக் காலம் திருகோணமலை நாடக இலக்கியம் பற்றிப் பின்வரு வோரால் கட்டுரைகளை பல எழுதப்பட்டன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை நவம்

★ 'ஈழத்தின் நவீன நாடக இலக்கியம்' (தினகரன், 07.07.77)

★ 'திருகோணமலை நாடக முன்னோடிகள்' (தினகரன், 19.04.92)

★ 'திருகோணமலைப் பிரதேச நாடக அரங்கப் பாரம்பரியங்கள்' (நூல்), 1994.

★ 'திருகோணமலையின் பண்பாட்டியற் தொன்மங்கள்', (தினகரன், 14 - 15.8.99.)

த.அமரசிங்கம்

★ 'நாடகத் தந்தை தம்பிமுத்து' (குத்துவிளக்கு மலர், 1970)

★ 'நினைவில் நிலைக்கும் கலைஞர் வரிசையில்' (தினகரன்)

★ 'நினைத்துப் பார்க்கின்றேன்' (கலைமுகம், 2001)

★ 'நானும் நாடகமும்'

★ 'இராவண தரிசனம்' (1997)

அபிநயசிகாமணி சி.விஸ்வலிங்கம்

★ 'இருமொழி நாடகத்தில் இருபது வருடங்கள்' (குத்துவிளக்கு மலர், 1970)

★ 'கலையும் கட்டுப்பாடும்' (குங்குமம், 1970)

ஏ.சி.போல் யோசப்

★ 'ஈழத்தில் தமிழ் நாடகக்கலை' (குத்துவிளக்கு மலர், 1970)

தா.பி.சுப்பிரமணியம்

★ திருமலை நாடக வரலாற்றில் சில துளிகள்' (குத்துவிளக்கு மலர், 1970)

★ 'திருகோணமலைப் பிரதேச நாடக ஆய்வு' (1993)

★ 'கலை இலக்கிய ஆய்வு' (1996)

சட்டத்தரணி கா.சிவபாலன்

★ 'திருகோணமலைப் பிரதேச அரங்கப் பாரம்பரியம்' (1994)

மேலும், 'புரட்சிபாலன்' என்னும் கவிஞர் நோர்வே தமிழ்ச்சங்க நாடகப் போட்டிக்கு எழுதி ஆறுதற்பரிசு பெற்ற 'மண்ணின் மைந்தன்' (1978), போட்டி நாடகப் பிரதியில் பரிசுபெற்ற 'தரையைத் தொடாத அலைகள்' என்னும் நாடகப்பிரதி என்பன திருகோணமலை நாடக இலக்கியத்தின் வரலாற்றுப் பதிவுகளாகக் காணப்படுகின்றன.

திருகோணமலை நாடக அரங்கப் பாரம்பரியம் பழமையும், புதுமையும், மரபும், நவீனமும், தொன்மையும் கலந்து வளர்ந்து வந்துள்ள போதும் ஏனைய பிரதேசங்கள் போல் பதிவுகளையும், சான்றுகளையும் இழந்தவைகள் போக எஞ்சியவற்றின் உண்மைச் சுவடுகள் அனைத்தும் இதில் அடங்கப் பெற் றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VII. தொலைக்காட்சி நாடகங்கள்

1990ஆம் ஆண்டுக்குப் பின் மின்னியல் ஊடகங்களின் வரவு இலங்கை கலை இலக்கிய பரப்பில் புதிய பரிமாணத்தை கொண்டு வந்த நிலை யில் திருகோண மலையில் நாடக வளர்ச்சிக்கு ஒரு புதிய பாய்ச்சலை இந்த ஊடகங்கள் கொண்டு வந்ததை அவதானிக்க முடிகிறது. தெரிந்தோ தெரியாமலோ இன்று எமது வீடுகளில் புகுந்துவிட்ட புதிய விருந்தாளியான தொலைக்காட்சிகளின் வரவு இதில் ஒளிபரப்பப்படும் நாடகங்களின் தாக்கம் வெகுசன தொடர்பு துறையின் அபரீதமான வளர்ச்சி திருமலையையும் விட்டு வைக்கவில்லை.

1993ஆம் ஆண்டு கண்டி சத்தியோதயா நிறுவனத்தினர் நடாத்திய தொலைக் காட்சி நாடக டிப்ளோமா பயிற்சியில் திருகோணமலையை சேர்ந்த பல இளை ஞர்கள் கலந்து கொண்டு நெறியாள்கை, பிரதியாக்கம், போன்ற துறைகளில் பிரபல சிங்கள தொலைக்காட்சி நாடக நெறியாளர்களிடம் பயிற்சியைப் பெற்றுக் கொண்டார்கள். பயிற்சி பெற்றவர்களில் ஒருவரான கவிஞர் வி.மைக்கல் கொலின் எழுதிய 'மரபை மீறும் மானுடம்' என்ற தொலைக்காட்சி நாடக பிரதி, இளைஞர் சேவை மன்றம் அகில இலங்கை ரீதியாக நடாத்திய நாடக பிரதி போட்டியில் பரிசைப்பெற்றது. இந்தநாடக பிரதியை தொலைக்காட்சி நாடகமாக மைக்கல் கொலின் தயாரித்துள்ளார்.

அன்றைய விடுதலை போராட்ட காலகட்டத்தில் தனது கணவரை இழந்த விதவைப்பெண்ணின் கதை வட்டத்தை சுற்றி தயாரிக்கப்பட்ட இந்த நாடகத்தில் திருமலையைச் சேர்ந்த பிரபல நாடக நடிகரும், நெறியாளருமான சித்தி அமர சிங்கம் உட்பட பலர் நடித்துள்ளனர்.

திருகோணமலையின் இயற்கை செழுமைமிக்க பகுதிகளில் படமாக்கப் பட்ட இந்த நாடகமே திருமலையில் முதல் தொலைக்காட்சி நாடகமாக அமைகிறது. இதைப்போன்றே உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் 1999 ஆம் ஆண்டளவில் பிரபல வானொலி கலைஞரும், தொலைக்காட்சி அறிவிப் பாளருமான அருணா செல்லத்துரை அவர்கள் விவேகானந்தா கல்லூரி மாண வர்களுக்கும், திருகோணமலை நாடக கலைஞர்களுக்கும் தொலைக்காட்சி நாடக தயாரிப்பு பற்றிய நிறைவான பயிற்சி ஒன்றை வழங்கியமை இங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

இதே வேளை 1997ஆம் ஆண்டளவில் சுவாமி நோபேட் ஒக்கல் என்பவரும் எஸ்.ஜேசுதாஸன் என்பவரும் இணைந்து முழுநிலா என்னும் தொலைக்காட்சி நாடகத்தை தயாரித்து அளித்துள்ளதாக குறிப்பொன்று கூறுகின்றது.

### குறுந்திரைப்படமும் திருகோணமலையும்

உலக மயமாக்கலின் நவீன வரவு குறுந்திரைப்படமென்பது அண்மையில் கலை உலகில் அல்லது திரைப்படத்துறையில் பேசப்படுகிற புதிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் நவீன புறப்பாடு என்று கூறப்படும் இத் துறையில் எம்மவர் காட்டி வருகின்ற ஆர்வமும் அக்கறையும் புதிய் கலைகளில் நுட்ப நாட்டத்தில் திரு மலைக் கலைஞர்கள் காட்டும் ஆர்வமும் பிரசன்னமும் எம்மை ஆச்சரியப் படவைக்கிறது. குறிப்பாக திருகோணமலையைச் சேர்ந்த இளம் கலைஞர்கள். சர்வதேச தரத்திலான படைப்புக்களை உருவாக்கும் இத்துறையின் மீது மிகுந்த நாட்டம் கொண்டிருப்பது எமக்கு புதிய செய்தியாகிறது.

குறுந்திரைப்படமும் திருமலையும் என்ற தலைப்பின் கீழ் சொல்லப்பட விருக்கின்ற விடயக்கோர்வை அல்லது தரவு நிகழ்வுகளைத் தருவதற்கு முன் குறுந்திரைப்படம் பற்றிய சிறிய விளக்கத்தை பெற்று செல்வது பின்னோட்டத் துக்கு வசதியாக இருக்கும்.

நாவல் வடிவத்துக்கும் சிறுகதை வடிவத்துக்குமிடையேயுள்ள வேறு பாட்டைப்போன்று திரைப்படத்தையும் குறுந்திரைப்படத்தையும் கால அளவு இலக்கண அளவுகருதிப் பிரித்துக் கொள்ள முடியும். அதாவது நாவலை ஒரு வீடென்றால் அவ்வீட்டிலுள்ள சாளரம் போன்றது குறுந்திரைப்படம்.

கால அளவில் திரைப்படங்கள் 120 நிமிடங்களுக்கு மேல் செல்லுகிறபோது குறுந்திரைப்படங்கள் 03 நிமிடம் , 05 நிமிடம், 08 நிமிடம் என்ற குறுகிய கால அளவைக் கொண்டதாக தயாரிக்கப்படுகிறது. இது 20 நிமிடம் வரை நீளமுடியும் என்றும் சொல்லப்படுகிறது.

இலக்கண வரையறுப்பைப் பொறுத்தவரை உரையாடல் குறைத்தன்மை கொண்டதாய், தேவையற்ற விடயங்கள் தவிர்க்கப்பட்டு, கட்புலனுக்கு கச்சிதமாக இருக்கக் கூடிய காட்சிக்கோணங்கள் கொண்டதாய் தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப இதன் தன்மை மாறுபடக்கூடியதாய் இருக்கும் தற்கால இயந்திரமயமான உலகில் பெருந்திரைப்படங்கள் மீது கொண்ட நாட்டங்கள் குறைந்து சிறிய அனுபவங்களை உணர்வுகளை காட்சிகளை, செய்திகளை இந்த வடிவத்தின் மூலம் சொல்லக் கூடிய புதிய வரவு என இதன்மீது நாட்டமுடையவர்கள் விதந்துரைக்கிறார்கள்.

திருகோணமலைக்கும் குறுந்திரைப்படத்துக்குமுரிய தோற்றப் பரிமாணங்கள் 2004ஆம் ஆண்டளவில் வடக்கு கிழக்கு கல்வி அமைச் சினால் மேற்கொள்ளப் பட்ட போதும் அதனது துரிதமான வரவு 2007ஆம் ஆண்டிலிருந்துதான் ஆரம்பமாகிறது. இதற்கு கால்கோள் இட்டவர்கள் ஆனந்தரமணன், கிருஷ்சாந்த், கோணேஷ், மதன், பிலிப், சாம் போன்றவர்களைக் குறிப்பிடலாம். இவர்களின் வரவு உலகளாவிய பதிவுகளுக்கான அடித்தளமாக அமைந்திருக்கிறது.

இருந்தபோதிலும் 2004ஆம் ஆண்டளவில் க. சிவபாலன் என்பவர் தனது நீண்ட நாள் நாடக அனுபவத்தை கொண்டு ஜனாதிபதி விருது பெற்றவரான கேரளத்தைச் சேர்ந்த சனாஜோசப்பிடம் பெற்ற பயிற்சியை துணையாகக் கொண்டு 'இனி' என்னும் குறுந்திரைப்படத்தை தயாரித்து வெளியிட்டார். இக்குறும்படம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பானில் நடந்த போட்டியில் பல பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டது. இதுவே திருமலையின் ஆரம்பமாகும்.

**ஆனந்த ரமணன்**

J.P.J ஆனந்தரமணன் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்திலிருந்து நவீன நாடகத்துறையில் ஈடுபாடு காட்டி வந்த இவர் குறுந்திரைப்படத்தின் மீது இருந்த ஆர்வம் காரணமாக இத்துறைமீது அதிக நாட்டம் காட்டத்தொடங்கினார். 2009ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு தொழில்நுட்பப் பயிற்சிகளையும், இத்துறை சார் நுட்பங்களையும் கற்றுத்தேர்ந்த ரமணன் 2009ஆம் ஆண்டு இவரே பிரதியாக்கம் செய்து நெறியாள்கை செய்த 'கத்திகள்' (KNIVES) என்னும் குறுந்திரைப்படம் பிரான்ஸ் தொலைக்காட்சி நிறுவனமொன்று 25வது வருடாந்த போட்டியாக இலங்கையில் நடாத்திய குறுந்திரைப் படப் போட்டியில் 108 படங்களில் சிறந்த படமாக தெரிவு செய்யப் பட்டு 'BONSOIR' விருதைப்பெற்றுக்கொண்டது.

மொழி என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட ஊடகம். மனிதனுக்கும், மனிதனுக்குமிடையே மொழி தேவையில்லை. மனிதநேயமே மொழியை விடச்சிறந்த தொடர்பாடல் என்பதை ஊடுபொருளாகக் கொண்டு இக்குறுந் திரைப்படம் தயாரிக்கப்பட்டிருந்தது.

இது போன்றே ரமணனால் 2010ஆம் ஆண்டு TRINCO CREATIONS சார்பில் தயாரித்தளித்த 'தேவைகள்' (NEEDS) குறுந்திரைப்படம் AAA மூவீஸ் இன்டர் நாஷனல் நிறுவனம் இலங்கையின் தமிழ்த்திரைப் படத்துறையை வளர்த்தெடுப் பதற்கான முனைப்பில் 2010ஆம் ஆண்டு நடாத்திய குறுந்திரைப்படப் போட்டியில் 05 விருதுகளை பெற்றுக் கொண்டது.

58 படங்கள் கலந்து கொண்ட இப்போட்டியில் ரமணன் தயாரித்து நெறி யாள்கை செய்த தேவைகள் படம் சிறந்த நெறியாள்கை சிறந்த நடிப்பு, ஒளிப்பதிவு, ஒலியமைப்பு, தொகுப்பாளர் ஆகியவற்றுக்கான ஐந்து விருதுகளை தட்டிக் கொண்டமை திருகோணமலையின் கலைத் துறை வளர்ச்சியில் பதிவு செய்யப்பட வேண்டிய விடயமாகும்.

இலங்கையர்கள் விருந்தோம்பலில் இனம்,ஜாதி,மதம்,பேதமின்றி சிறந்த வர்களாகவும் மனிதநேயமிக்கவர்களாகவும் விளங்குபவர்கள் என்ற கரு மையத்தை வைத்துக்கொண்டு தயாரிக்கப்பட்ட இத்திரைப் படத்தில் நடித்த பிலிப் முருகையா, அபய புரத்தைச் சேர்ந்த அமாலி ரங்கா மிக நுண்ணியமாக இயல்புச் செருக்குடன் நடித்திருப்பது மனதை தொடும் பதிவுகளாகும்.

ரமணன் தயாரித்த 'கத்தி', 'அவசியம்' ஆகிய இரு திரைப்படங்களும் பிரான்ஸில் நடைபெறவுள்ள உலக நாடக விழாவுக்கு செல்கிறது. என்பது சர்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேச அளவில் நமது இளைஞர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்கள் என்ற நல்ல செய்தியாகவுள்ளது.

இது தவிர ரமணன் SCRIPT NET,SL தயாரித்தளித்த 'SIX MILE' மற்றும் 'BODY' ஆகிய குறுந்திரைப்படங்கில் நடித்தும் இணைத்தயாரிப்பாளராக செயற் பட்டும், யாழ் கபிலன் தயாரிப்பில் உருவான 'உறவுகளைத்தேடி' எனும் 60 நிமிட முழு நீளத்திரைப்படத்தில் பிரதான பாத்திரமேற்று நடித்தும் தனது ஆற்றலை வெளியீடு செய்ததுடன் ரிங்கோ கிரியேஷன் 2010 தயாரித்த 'சிலு வைகள் சிறகுகள்', 'அவன் பேசமாட்டான்' 'MONEY PURSE' ஆகிய குறுந்திரைப் படங்களை தயாரித்தும் நெறியாள்கை செய்தும் நடித்தும் தனது குறுந்திரைப்பட துறைசார் சாதனையை நிலைநாட்டி வருகிறார்.

திருமலை மதன் நெறியாள்கை செய்த 'அவன் பேசமாட்டான்' (2009) குறுந்திரைப்படத்தில் கையடக்க தொலைபேசியால் (HAND PHONE) இளந்தலை முறை எவ்வளவு இன்னலுக்கும், இடருக்கும் ஆளாகின்றார்கள் என்ற நிகழ்கால தொழில்நுட்ப தொந்தரவுகளின் செய்திகளை அழகாக சொல்லியிருக்கிறார் மதன்.

அண்மைக்காலமாக குறுந்திரைப்படம் சார் நாட்டம் திருகோணமலையில் வளர்ந்து வருகின்றமைக்கு அடையாளமாக 2011ஆம் ஆண்டின் முதற் கிழமையில் உலகத்தில் முதல் முதல் இவ்வாண்டு வெளிவரும் படமென்ற பதிவைப்பெறும் திருகோணமலை எம்.ரி. கிரியேஷன் (MT CREATION) திரு மலை சாய் தயாரித்து வழங்கியிருக்கும் 'பயம்' என்னும் குறுந்திரைப்படம் தி/அனோஜன் கதை,திரைக்கதை வசனம், படத்தொகுப்பு, இயக்கம் ஆகிய அத்தனை பணிகளையும் கூட்டுமொத்தமாக மேற்கொண்டிருக்கிறார். மாண வனாகிய தி.அனோஜன். நெறியாள்கை செய்த ஆறு நிமிடங்கள் கொண்ட இத் திரைப்படம் நல்லதொரு சிறுகதையை படிப்பதைப்போன்ற உணர்வு ஊட்டி நிற்கின்றது.

இளமையில் பேய், பிசாசு என்ற பயப்பாட்டில் உறைந்து வளர்ந்தவர்கள் உள்ளம் முதிர்ந்த காலத்திலும் உண்மையற்ற அவ்வகைப் பயப்பாடுகளில் உறைந்து போகிறார்கள் என்ற அடிப்படை மனப்பதிவுகளை செய்துள்ள இத்திரைப்படத்தில் நடித்திருக்கும் எஸ்.ஜெகன் தனது பாத்திரத்தை உணர்ந்து செய்துள்ளார். அவருடன் இணைந்து நடிக்கும் திருமலை சாய், எஸ்.சத்தியன் ஆகியோரும் தமது பங்கு நடிப்பை திறம்பட செய்திருப்பது பாராட்டுக் குரியது.

இக்குறுந்திரைப்படத்தின் ஒளிப்பதிவு, நெறியாள்கை படத்தொகுப்பு ஆகியவற்றை கூட்டாக செய்திருக்கும் தி.அனோஜன் சின்ன வயதில் பெரிய அனுபவங்களை கமராவுக்குள் காட்ட வெளிக்கிட்ட விதமும் பாத்திர வார்ப் புக்களை கச்சிதமாக பின்னி நடத்திச்சென்று வெளியீடு செய்யும் காட்சித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெறிப்புக்களும் பார்ப்பவர் மனதில் அழியாத மனப்பதிவுகளை உண்டாக்கி விடக்கூடியனவாக உள்ளது.

சுருக்கமாக சொல்லப்போனால் 21ஆம் நூற்றாண்டின் கால அளவுகளையும் புதிய பரிமாணங்களையும் உள்வாங்கிக்கொண்டு காலத்தின் தேவையோடு புதிய சினிமாவொன்று வளர்ந்துவருவதற்கு இந்த குறுந்திரைப்படங்கள் குறி காட்டிகளாக காணப்படுகின்றன.

இன்று இத்துறையில் ஆர்வம் காட்டிவரும் திருமலை இளைய தலமுறை யினர் என்ற வகையில் பின்வருவோரை குறிப்பிட வேண்டும். ஆனந்த ரமணன், தி/அனோஜன், சாய் சங்கர், கிருசாந்த், அமாலி ரங்க, மதன், பிலிப் முருகையா சாம், தினேஷ்பாபு, எஸ்.கோணேஷ், பிரதீபன், ஆகியோரைக் குறிப்பிடலாம்.

**ந.ஸ்ரீஸ்கந்தராஜா**

திருகோணமலையை சேர்ந்த 'சிறி அண்ணன்' என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் சிறிஸ்கந்தராஜா என்னும் நெல்சன், நிர்மலகாந் திரை அரங்கு களின் உரிமையாளரான சிறி ஒளிப்பதிவு துறையில் ஆர்வம் கொண்டவராக இந்தியா சென்று (1970) தமிழ் நாட்டு சத்தியா மூவீஸ் என்னும் திரைப்பட நிறுவனத்துடன் இணைந்து ஒளிப்பதிவாளராக பயிற்சிபெற்று அத்துறையில் இருந்த ஆர்வம் காரணமாக தனது திறமைகளை வெளிச்சம் போட்டு காட்டி யிருக்கிறார்.

ஒளிப்பதிவு துறையில் நிறைவான பயிற்சி பெற்றதன் பின் புகழ் பெற்ற இந்திய திரைப்படங்களான பின்வரும் திரைப்படங்களுக்கு உதவி ஒளிப் பதிவாளராக கடமையாற்றியுள்ளார் என்ற செய்தி பலராலும் அறியப்படாத செய்தியாகவே உள்ளது.

ஒரு தாய் மக்கள், மாட்டுக்கார வேலன், ரிக்ஷாக்காரன், என் அண்ணன், எங்கிருந்தோ வந்தாள், தில்லானா மோகனாம்பாள் போன்ற திரைப்படங்களுக்கு உதவி ஒளிப்பதிவாளராக கடமையாற்றிய இவரது திறன் கண்டு 'நீரும் நெருப்பும்' என்ற படத்தை தயாரித்த தயாரிப்பாளர் இவருக்கு ஒளிப்பதிவு செய்யக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தும் இலங்கை வந்த சிறியவர்கள் இலங்கையின் அரசியல் சமூக நெருக்கடிகள் காரணமாக மீளவும் இந்தியா செல்ல முடியாத சூழலில் அவருக்கு கொடுக்கப்பட்ட அருமையான வாய்ப்பு துரதிஸ்டவசமாக இல்லாமல் போய்விட்டது. மட்டுநகரில் இருந்து சென்ற இயக்குனர் பாலுமகேந்திரா இந்திய மண்ணில் எவ்வாறு புகழ் பெற்றாரோ அதே போன்று உருவாகக்கூடிய ஒருவருக்கு வழங்கப்பட்ட வாய்ப்பு தவறியது எமக்கெல்லாம் கவலை தருகின்ற விடயந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# இசை மரபு வளர்ச்சி

இசையினால் ஈசன் மனதை உருக்கி வரம்பெற்ற இராவணன் பூஜித்த திருக்கோணேஸ்வரம் என்னும் பெருமைமிகு தலம் விளங்கும் திருகோணமலை, இதிகாச காலந்தொட்டு இன்றுவரை இசைக்கு தொண்டாற்றிய இசைவல்லுனர்கள் வாழ்ந்த பூமியாக மதிக்கப்படுகிறது.

12ஆம் நூற்றாண்டில் கோணேசர்கோயில் அர்ச்சகராக இருந்து சிங்கை செகராஜசேகர மன்னனுடைய வேண்டுகோளுக்கு அமைய தஷிண கைலாச புராணம் என்னும் நூலை இயற்றிய பண்டிதராசர் காலத்தவரான கவிராஜன் என்னும் புலவரால் பாட்டாலும் உரையாலும் இயற்றப்பட்ட 'கோணேசர் கல்வெட்டு' என்னும் சாசனம் பாடப்பட்ட காலத்திலிருந்தே இசைமரபொன்று திருகோண மலையில் வளர்ந்து வந்துள்ளதை பல்வேறு சாசனங்களும், கல் வெட்டுக்களும், புராண இதிகாசங்களும் எடுத்துக் கூறுகின்றன.

இசைநூல்கள் என்று சொல்லப்படுகின்ற 'தாளசமுத்திரம்', 'பெருநாரை', 'பெருங்குருகு', 'பஞ்சபாரதீயம்', 'இசைநுணுக்கம்', 'பஞ்சமரபு', 'சச்சபுடவெண்பா', 'இந்திரகாளியம்', 'பதினாறுபடலம்', 'தாளவகையோத்து', 'இசைத்தமிழ்ச் செய்யுட்டுறைக்கோவை' ஆகிய இசைக்கு இலக்கணங் கூறும் சங்க நூல்களைக் கற்றுத்தேர்ந்து இசைவளர்த்த பெரியார்கள் பலர் திருகோணமலைப் பிரதேசத்தில் வாழ்ந்துள்ளனர்.

இசை ஒருபுதிய பரிமாணம் பெறத்தொடங்கிய காலம் இருபதாம் நூற்றாண்டு என்பர். இந்த நூற்றாண்டில் இசை மேதாவிகள் கீழைத்தேச இசை, மேலைத் தேச இசையென வகுத்து அதன் தார தம்மியங்களுக்கேற்ப வளர்க்க முற் பட்டனர்.

கீழைத்தேச இசையில் கர்நாடக சங்கீதமென்பது, தென்னிந்திய பாரம் பரியத்தில் வளர்ந்தவோர் கலையாகும். தென்னிந்திய இசைக்கு கர்நாடக சங்கீதமென்றும் வடஇந்திய இசைக்கு ஹிந்துஸ்தானியென்றும் இலக்கணம் வகுத்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரந்தரதாஷர் என்பவர் (1484 - 1564) கர்நாடக இசையின் தந்தையென்று அழைக்கப்படுகிறார். இராகம், தாளம், பாவம் என்பன இதன் உயர் நாடியாகும். புரந்தரதாஷருக்குப் பின் 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் 'சங்கீத மும்மூர்த்திகள்' என்று அழைக்கப்படுகின்ற தியாகராஜ சுவாமிகள், முத்துச்சாமி தீட்சிதர், சியாமா சாத்திரிகள் ஆகிய மூன்று இசைமேதைகளும் இதற்கு இலக்கணம் வகுத்தார்கள். அத்தகையதொரு இசைமரபு திருகோணமலையில் கோணேசர் பாரம்பரியத்தில் வளர்ந்து இன்றுவரை விருத்தி பெற்று வந்துள்ளதை நாம் அறியக்கூடிய தாகவுள்ளது.

திருகோணமலையின் கர்நாடக இசை குளக்கோட்ட மகாராஜா காலத்தி லிருந்து வளர்ந்து வந்துள்ளது என்பதை (இந்த மகாராஜன் காலத்தில் இசைச் செல்விகள் இருந்து இசையை வளர்த்தார்கள்) புராணங்களும், கல்வெட்டுக்களும் கூறும் செய்திகளிலிருந்து அறிகின்றோம்.

குளக்கோட்ட மகாராஜன் காலத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும் கவிராஜ வரோதயரால் இயற்றப் பெற்ற 'கோணேசர் கல்வெட்டு' என்னும் நூலில் (சாச னத்தில்) வரும் ஒன்பதாவது பாடல் பின்வருமாறு:

*செய்ய நடன ஸ்திரிக்கு முட்டுவகை*
*கொட்டலொடு சிறக்கப் பாடல்*
*ஐயமற நற்மலிக்குப் பாவாடை*
*இடுவதும் அதுவேயன்றித்*
*துய்ய எண்ணம் கொடியேற்றல்*
*இறக்கலோடு சுமத்தலும் சாந்தரைத்தேய்தல்*
*மெய்யெனவே ஆலயத்துட் பணிகளைத்*
*துப்பரவாக விளங்கச் செய்வீர்.*

இப்பாடலில் வரும் 'கொட்டலொடு சிறக்கப் பாடல்' என்ற வரிகள் இறை வனுடைய சந்நிதியிலே சிறப்பாக நடமாடும் நடனத்திற்கு இசைக் கருவிகளை வாசித்தல், ஏற்றவகையில் பாடுதல் என்ற பொருள் கூறப்பட்ட விளக்கத்தின் பிரகாரம் கோணேசர் கோவில் பாரம்பரியத்திலிருந்து கர்நாடக இசை முறையாக வளர்க்கப்பட்டு வந்திருப்பதை அறிகிறோம்.

இந்தப் பரம்பரையில் தோன்றிய ஒருவராக மாசிலாமணிமுத்துக்குமாரு என்பார் இசைத்துறையின் வித்தகராக விளங்கி பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் (1845) கர்நாடக இசைத்துறைக்கு அருந் தொண்டாற்றியவராக விளங்கினார்.

இவர் இசையுடன் திருமுறைகளைப்பாடும் கவிவாணனாக விளங்கியுள்ளார். இவரைப்போலவே வித்துவான் சுப்பிரமணியம் தம்பையாபிள்ளை என்பார் 19ஆம் நூற்றாண்டின் இடைக்காலப் பகுதியில் (1892) வெண்பா, தோத்திரம் என்பவற்றை ஆலயங்கள் தோறும் சென்று பாடியதோடு, இசை மேடைகளில் தனது வித்துவத்தால் கவர்ந்தார் என்று அறியக்கிடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறப்பட்ட இருவருக்குப் பின்னே, வீரக்கோன் முதலியார், அகிலேச பிள்ளை, நவரத்தினம், கார்த்திகேசுக்குருக்கள், அப்பாத்துரை ஐயர், சாம்பசிவ ஐயர் போன்றோர் தமது இசைப் புலமையால் ஆலய விழாக்களிலும் பொது மேடைகளிலும் இசைமழை பெய்து இசைத்துறையின் விருத்தியை திருகோண மலையில் வளர்த்த இசை வல்லுனர்களாக திகழ்ந்துள்ளனர்.

மேலே கூறப்பட்ட இசை வளர்ச்சி என்பது கோணேசர் கோயில் சார்ந்த ஆலய வழிபாட்டு முறை வளர்ச்சியாக அல்லது ஆலயம்சார் மேடை வளர்ச்சியாக வளர்ந்து வந்துள்ளமை ஓர் பொதுத் தன்மையாகக் காணப்படுகிறது. இந்தப் போக்கை வேறு ஓர் திசைக்கு திருப்பி முறைசார் கர்நாடக இசையை 20ஆம் நூற்றாண்டில் வளர்த்தவர்களாக பின்வருவோர் காணப்படுகின்றனர்:

1. வே. தில்லையம்பலம் மாஸ்டர்
2. சிவகாமசுந்தரி விஜயரட்ணம்
3. இராஜராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

## வே. தில்லையம்பலம் மாஸ்டர்

20ஆம் நூற்றாண்டின் தலைவாசலில் வாழ்ந்த இவர்களில் மூத்த முன்னோடி யாகக் காணப்படுபவர் மாஸ்டர் வே. தில்லையம்பலம்.

திருகோணமலை சண்முக வித்தியாலயத்தில் கடமையாற்றிய இவர் கர்நாடக இசையை மேன்மையுறக் கற்று கர்நாடக இசை, பண்ணிசை, கிராமிய இசை, வயலின், ஹார்மோனியம் போன்ற துறைகளையும், கலைகளையும் திருகோண மலையில் கற்பித்து கர்நாடக இசைப் பரம்பரையொன்றை உருவாக்கிய பிதா மகராக விளங்கினார்.

தனது ஒப்பற்ற ஆற்றலால் இசைத்துறையை மேம்படுத்தியதுடன் மாணவர் பரம்பரையொன்றையும் உருவாக்கியவர் இவரே. இவரிடம் கற்ற பல மாண வர்கள் பிற்காலத்தில் ஊரும், நாடும் போற்றும் இசைத் திலகங்களாக விளங்கி னார்கள்.

## சிவகாமசுந்தரி விஜயரட்ணம்

தில்லையம்பல மாஸ்டரின் தலையாய மாணவியும் மகளுமாகிய ‘சங்கீத பூசணம்’ திருமதி. சிவகாமசுந்தரி விஜயரட்ணம் தமிழக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைப்பட்டம் பெற்று தந்தை வழி ஸ்ரீசண்முக வித்தி யாலயத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றி பலநூறு மாணவிகளை உருவாக்கிய பெருமை இவரைச்சாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்



இராஜராஜேஸ்வரி

தில்லையம்பல மாஸ்டரின் இன்னொரு மாணவியான செல்வி இராஜராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் (1920-1972) திருகோணமலையின் இசைவளர்ச்சியில் முக்கிய இடம்பெறும் தட்ஷணகானசபா என்னும் ஸ்தாபனத்தின் ஸ்தாபகராக 1947ஆம் ஆண்டு திரு கோணமலையில் இச்சபையை ஆரம்பித்து இசைத் துறைக்கும் கர்நாடக சங்கீதத்துக்கும் அளப்பரிய தொண்டையாற்றினார்.

தில்லையம்பல மாஸ்டரிடம் இசை பயின்று இசை யின்பால் இருந்த காதலால் சென்னைப் பல்கலைக்கழகம் சென்று வாய்ப்பாட்டு, வீணை ஆகிய இரு துறைகளிலும் பட்டம் பெற்று (1942) நாடு திரும்பிய இசையரசி 1947ஆம் ஆண்டு இச்சபையை ஆரம்பித்தார். ஆரம்ப கல்வியை திருகோணமலை ஸ்ரீ சண்முகவித்தியாலயத்திலும் மற்றும் புனித மரியாள் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகளிலும் பயின்று தனது மேற் படிப்புக்காக சென்னை சென்று வந்தார்.

திருமலை திரும்பிய இராஜராஜேஸ்வரி இச்சபாவை ஆரம்பித்து வாய்ப் பாட்டு, வயலின், வீணை, புல்லாங்குழல், ஜலதரங்கம், சித்தார், மிருதங்கம் போன்ற பல்வேறு கலைகளை பயிற்றுவித்து வந்தார்.

'சிறுகக்கட்டி பெருக வாழ்' என்ற வாழ்த்துரைக்கு அமைய மிகக் குறைந்தளவு மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இச்சபா காலவோட்டத்தில் ஆயிரக்கணக் கான மாணவர்களை உள்வாங்கி ஒவ்வொரு துறையிலும் விற்பன்னர்களையும், மேதைகளையும், வல்லுனர்களையும் உருவாக்க காலாக இருந்தது எனலாம். அன்னாரது அயராத உழைப்பு, தியாகம், தாகம் பிற்காலத்தில் தேசியப் புகழ் கொண்ட இசைவல்லுனர்களையும் சங்கீத ஆசிரியர்களையும் உருவாக்கித் தந்தது.

அந்தவகையில் இவரது மாணவிகளான, கமலாதேவி பொன்னையா, ராஜராஜேஸ்வரி சந்திரசேகரம், விஜயசௌந்தரி தாமோதரம்பிள்ளை, தேவிகாராணி முருகுப்பிள்ளை, செல்வமகள் அருணகிரிராஜா, இராஜகுமாரி சின்னையா, மணிமேகலாதேவி கார்த்திகேசு, இராஜேஸ்வரி தெட்சணாமூர்த்தி போன்ற எண்ணற்ற மாணவிகள் இவரது பாசறையிலிருந்து வளர்க்கப்பட்டு, பிற்கால இசையரசிகளாகத் திகழ்ந்தார்கள்.

இலங்கை வானொலியில் தனது முதற்குரலை வழங்கி, வானொலி குரல் பரம்பரையொன்றை வளர்த்துவிட்டவரும் இவரேயாவார்.

இவர் காலத்திற்கு பின்னே இசைத்துறைக்கு தொண்டாற்றிய முன்னால் மட்டக்களப்பு விபுலானந்தா இசைக்கல்லூரி அதிபராக கடமையாற்றிய திருமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜேஸ்வரி தெட்சணாமூர்த்தி, சங்கீத கலாவித்தகர் தேவிகாராணி முருகுப் பிள்ளை, சந்திரவதனா மகேந்திரஜோதி, திருமதி சுலோஜனா தேவராஜன், ரேணுகா இராமச்சந்திரன், சரோஜினி கணேசமூர்த்தி போன்றோர் திருகோண மலையின் இசைத்துறை விருத்திக்கும் மேன்மைக்கும் அளப்பரிய பங்களிப்பு செய்தவர்களாக விளங்கினார்கள்.

## தேவிகாராணி முருகுப்பிள்ளை

திருமதி தேவிகாராணி முருகுப்பிள்ளையின் இசைத்தொண்டு திருகோணமலை கர்நாடக இசைத்துறையில் பதிவுசெய்யப்பட வேண்டிய பணியாகவுள்ளது. 1961ஆம் ஆண்டு சங்கீதத்தில் ஆசிரியதராதரம் பெற்று வாய்ப்பாட்டில் சங்கீத கலாவித்தகர் என்ற பட்டத்தையும், 1966ஆம் ஆண்டு வயலின் வித்தகியாகவும் பட்டம்பெற்ற இவர் கல்வி நிர்வாக சேவை அதிகாரியாக கடமையாற்றிய காலத்தில் திருகோணமலை பிரதேசத்தின் இசைத்துறை வளர்ச்சிக்கு பாட சாலை ரீதியாக ஆற்றிய தொண்டுகள் காரணமாக கிராமிய இசை, சிறுவர் பாடல், நாட்டிய நாடகம், தனிப்பாட்டு ஆகிய பல்வேறு துறைகள் அளப்பரிய வளர்ச்சியை கண்டது. 'செவ்வியல் மரபில் தமிழ் இசை' என்ற இவரது ஆய்வுக் கட்டுரை இசைவித்தகர்களாலும், சங்கீத பேராசிரியர்களாலும் குறித்துச் சொல்லப் பட்ட ஆய்வாக காணப்படுகிறது.

1980 ஆண்டுக்குப்பின் இசைத்துறைக்கு தொண்டாற்ற சில நிறுவனரீதியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாகவும், ஒருசில சங்கீத அமைப் புக்கள் உருவாக்கப்பட்டதன் காரணமாகவும், ஆசிரியர்களின், தனிப்பட்ட முயற்சிகளின் காரணமாகவும் கர்நாடக சங்கீதத்துறை பல்வேறுபட்ட கிளை வளர்ச்சியை அடைய ஆரம்பித்தது,

இதன்காரணமாக வாய்ப்பாட்டு, பண்ணிசை, மேடைக்கச்சேரி, மிருதங்கக் கலை, வயலின், வீணை, புல்லாங்குழல், மோர்சிங், கஞ்சிரா, தவில் என்ற கிளைகொள் வளர்ச்சியின் காரணமாக ஓர் இசைப் பாரம்பரியம் திருகோண மலையில் வளர வழிகோலிய நிறுவனமாக தட்சணகான சபா அமைந்தது.

பிற்காலத்தில் இந்த சபாவின் விழுதுகளாக ஊன்றி நின்று உரம் கொடுத்த வர்கள், ஒவ்வொரு துறையிலும் தங்கள் முத்திரைகளைப் பதித்து நின்றார்கள். அந்தவகையில், சிறந்து விளங்கியவர்கள் பின்வருவோராவர்:

வாய்ப்பாடு:

- ★ சங்கீதவித்துவான் திருமதி விஜயகுமாரி தவசிலிங்கம்
- ★ சங்கீதகலாவித்தகர் மணிமேகலாதேவி
- ★ சங்கீதவித்துவான் இராஜேஸ்வரி பாலகிருஸ்ணன்
- ★ இசைக்கலைமணி சத்தியாராணி ஆனந்தபிரசாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ★ சங்கீதவித்துவான் இராஜேஸ்வரி கணேசபிள்ளை
- ★ பத்மலோஜினி குணராஜசிங்கம்
- ★ அருளானந்தன் விக்கினேஸ்வரன்
- ★ பா.பிரணவன்

மிருதங்கம்:

- ★ ப.ஆனந்தபிரசாத்
- ★ சி.காண்டீபன்
- ★ ஆறுமுகம்பிள்ளை

வயலின்

- ★ வே.சங்கரலிங்கம்
- ★ சித்திவிநாயகம்
- ★ இசைக்கலைமாமணி ச.திருமாறன்
- ★ மோ.பத்மகௌரி

மோர்சிங்

- ★ வித்துவான் பொ.விபுலாநந்தன்

புல்லாங்குழல்

- ★ வித்தகி கிரிஷா விக்னேஸ்வரன்

தபேலா

- ★ எஸ்.சசிக்குமார்

இவர்கள் தவிர ரேணுகாராமபாலன் பண்ணிசைத்துறையில் தமது அளப்பரிய ஆற்றலை வெளிக்காட்டினார். அதனை ஓர் அருள்நிறை துறையாக வளர்த்து வந்தவர்கள் சுவாமி ஸ்வஸ்தானந்தா. இவர் தில்லையம்பல மாஸ்டரின் மகன் தில்லைக்குமரன் ஆவார், இவர் போலவே பண்டிதர் சைவப்புலவர் இ.வடிவேலு சிவஞானம் போன்றோரின் இசைத் தொண்டு திருகோணமலையை ஓர் அருள் நகரம் என்று கூறும் அதேவேளை இசைநகரமும் என்று புகழும் அளவுக்கு இசைத்துறை உன்னத நிலையை அடைந்தது.

இப்பணியின் தொடர்நிலையாக இன்று அருள்மிகு முத்துக்குமாரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இசை, நடன கலாலயம், வாய்ப்பாட்டு, பண்ணிசை, வீணை, வயலின், புல்லாங்குழல், மிருதங்கம், நடனம் ஆகிய பல்வேறு கலைகளையும் சொல்லிக்கொடுத்து வளர்ந்துவரும் முன்னணி சபாவாக விளங்குகிறது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# மெல்லிசை

தென்னிந்திய திரைப்பட இசை மெல்லிசை என்றபேரில் தமிழ்கூறும் நல்லுக மெல்லாம் கோலோச்சி இருந்த காலத்தில் ஈழத்தின் மெல்லிசை, பொப்பிசை, ஈழத்துப்பாடல் என்ற தனித்துவத்தை உருவாக்கி 1970 ஆம் ஆண்டுகளில் ஈழத்தில் இசைப்புரட்சி செய்தவர்கள் என்ற வகையில் பொப்பிசை சக்கரவர்த்தி ஏ.ஈ.மனோகரன்,கே.எஸ்.பாலச்சந்திரன், நித்தி கனகரத்தினம், முத்தழகு, எம்.பி.பரமேஷ், முல்லைச் சகோதரிகள், ரோபல்ராகல், பொன்.சுந்தரலிங்கம், மு. பரராஜசிங்கம், கலாவதி பொன்னுச்சாமி, குலசீலநாதன் போன்ற பாடகர்கள் விளங்கினர். அதேபோல் யாழ்ப்பாணம் கண்ணன் நேசன் குழு, திருமலை இசைக்குழு, இரட்டையர்குழு போன்றவற்றின் இசைமேடைகளும் ஈழத்தின் மெல்லிசைக்கு முன்னோடியாகவும், அதேவேளை அடிநாதமாகவும் விளங்கின. அந்த வழியில் ஈழத்தின் இசைக்கு வளம் சேர்த்த பிரதேசக் கலைஞர்கள் என்ற வகையில் திருகோணமலை இசைக்கலைஞர்கள் பற்றி நோக்குவோம்.

திருகோணமலை மெல்லிசை மேதைகளை வளர்த்த ஓர் பிரதேசமாகக் காணப்படுகிறது. இப்பிரதேசத்தில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக மெல்லிசை யென்னும் கலை வளர்ந்து உருப்பெறுவதற்கு பல கலைஞர்களும் விற்பன்னர் களும் அரும்பெருந் தொண்டாற்றி வந்திருப்பதை இப்பிரதேசத்தின் மெல்லிசை வளர்ச்சிப்போக்கின் மூலம் காணலாம்.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து மேலைத்தேசத் தொடர்பு காரணமாக மெல்லிசையென்னும் கலை வளர்ச்சியடையத் தொடங்கியதன் காரணமாக இசைத்துறையில் பாரிய வளர்ச்சியும் புரட்சியும் ஏற்படத் தொடங் கியது என்பர். தென்னிந்தியக்கலையான கர்நாடக சங்கீதத்துடன் சமச்சீராகப் போட்டி போட்டுக்கொண்டு மெல்லிசைத் துறை வளர்ச்சி யடையத் தொடங்கியது.

மெல்லிசையென்பது என்ன என்பதை நோக்கின் கர்நாடக சங்கீதத்தில் இராகம், தாளம், பல்லவி, லயம் ஆகியன முக்கியம் பெறுகின்றது. அதேவேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருதியும் முக்கியம் பெறும். கர்நாடக சங்கீதத்தில் இராகம் கற்பனைவளமுடையது. வித்துவான்கள் மணித்தியாலக் கணக்காக ஆலாபரணை செய்யும் வித்துவம் கொண்டவர்கள். ஆனால் மெல்லிசையில் இந்த ஆலாபரணை செய்வது என்பது முடியாது. மெல்லிசையில் கற்பனை வளமுண்டு ஆனால் கர்நாடக சங்கீதத்தைப் போல் அது விரிவுபடுத்தப்படுவதில்லை என்பர் வித்தகர்கள்.

இன்னும் சொல்லப்போனால் மரபுவழி வாத்தியங்களான, மிருதங்கம், வீணை, வயலின், புல்லாங்குழல், தபேலா போன்றவை முக்கியம் பெறுவது கர்நாடக சங்கீதத்தில். இவ்வாத்தியங்கள் வரையறைக்கு உட்பட்டது. ஆனால் மெல்லிசையில் மேலைத்தேச வாத்தியங்களின் இணைவு கால இசைவளர்ச்சிக்கு ஏற்ப மாறுபட்டுக் கொண்டேபோகும்.

## திருகோணமலை இசைக்குழுவும் த. பத்மநாதனும்

மெல்லிசையென்னும் கலை திருகோணமலையில் நிறுவனரீதியாக வளர்க்க முற்பட்ட முன்னோடி என்ற வகையில் திருகோணமலை தாமோதரம்பிள்ளை பத்மநாதன் என்பவரைக் குறிப்பிடவேண்டும். இற்றைக்கு 48வருடங்களுக்கு முன் பத்மநாதன் என்பவர் தனது நண்பர்களான திரு.இம்மானுவல், லோப்பஸ், பிறேமதாஷ், லோகநாதன், துரை-துரைலிங்கம் என்பர்களோடு சேர்ந்து திரு கோணமலை இசைக் கழகம் (1964) ஒன்றை தாபித்தார். இதுவே திருகோண மலையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது இசைக் கழகம் ஆகும்.

திருமலை இந்துக்கல்லூரி, சண்முகவித்தியாலயம், யாழ் சென் பற்றிக்ஸ் ஆகிய பாடசாலைகளில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்று கொழும்பு அக் குனாஸ் கல்லூரியில் உயர்தரம் பயின்று, திருகோணமலை திரும்பிய பத்மநாதன் பல்வேறு வாத்தியங்களை முறையாகக் கற்றதோடு கர்நாடக சங்கீதம், மேலைத் தேச இசைக்கருவிகள் என்பவற்றை பயின்றிருந்தார். இசையின்மேல் இருந்த அளப்பரிய நாட்டத்தினால் திருகோணமலை இசைக்கழகத்தை ஆரம்பித்தார்.

ஆரம்ப காலத்தில் திருகோணமலை நகரத்தில் இடம்பெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கிராமங்களின் திருவிழாக்களிலும் மெல்லிசை நிகழ்ச்சிகளை நடாத்திவந்த பத்மநாதன் புகழ் ஊரெல்லாம் பரவிய நிலையில் யாழ்ப்பாணம், மானிப்பாய், பருத்தித்துறை போன்ற இடங்களிலும் தமது இனிமையான இசையால் புகழ்பெற்று வந்தார்.

இக்குழுவினரின் தனிச்சிறப்பு யாதெனில் தாமே பாடல் இயற்றி, தாமே இசையமைத்து அப்பாடல்களை மேடைகளில் பாடியமையே. தென்னிந்திய திரைப்பாடல்கள் வானொலியிலும், மேடைகளிலும், விழாக்களிலும் பிரபல்யம் பெற்று விளங்கிய அக்காலத்தில் ஈழத்தின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் இவரது பாடல்கள் எல்லோராலும் வரவேற்கப்பட்டு பல கலைஞர்களால் பாராட்டப்பட்ட மெல்லிசை நிகழ்ச்சிகளாக ஒலித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1967ஆம் ஆண்டு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடந்த ஓர் இன்னிசை நிகழ்ச்சியில் யாழ்ப்பாணத்திலிருந்து இரட்டையர் குழுவும், திருகோணமலையிலிருந்து பத்மநாதனின் திருகோணமலை இசைக்குழுவும் அழைக்கப்பட்டிருந்தன.

மேடைமுழுவதும் சினிமாப்பாடல் ஆக்கிரமித்து இருந்த அந்த நிகழ்ச்சியில் பத்மநாதன் அவர்கள் கவிஞர் தா.சி. வில்வராஜன் (திருகோணமலை கவிராயர்) இயற்றிய பாடல்களை இசையமைத்துப் பாடினர். அன்றைய மேடையில் சகலரையும் கவர்ந்த பாடல்களாக அவை ஒலித்தன. அந் நிகழ்ச்சி வந்திருந்த பலராலும் பாராட்டப்பட்ட நிகழ்ச்சியாக அமைந் ததற்கு காரணம் தாமே எழுதி இசையமைத்த பாடல்களை அவர்கள் மேடையில் பாடியதே.

இந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த 'கடமையின் எல்லை' என்ற ஈழத்து திரைப் படத்தை தயாரித்து வெளியிட்ட யாழ்ப்பாணம் லேடன் கம்பனி உரிமையாளர் யோசப் அவர்களும், நவாலியூர் ரகுநாதனும் இந்த நிகழ்ச்சியினால் ஈர்க்கப் பட்டு தாம் தயாரித்துக் கொண்டிருந்த 'நிர்மலா' திரைப்படத்துக்கு (1966-1967) இசையமைக்கும் பொறுப்பை பத்மநாதனுக்கு வழங்கியிருந்தார்கள். நிர்மலா படத்திற்கு இசையமைத்த பத்மநாதன் அவர்கள் சில்லையூர் செல்வராஜன், கவிஞர் முருகையன் ஆகியோர் எழுதிய ஐந்து பாடல்களுக்கு இசையமைத்து மாபெரும் சாதனையை புரிந்தார்.

நிர்மலா படத்தில் வந்த 'வா என் காதல் நிலவே', 'கண்மணி ஆடவா', 'நுரை பெருகும்' ஆகிய பாடல்களை சாந்தி காராளாசிங்கம், பேர்டினன் லோப்பஸ், துரை துரைலிங்கம் ஆகியோர் பாடியிருந்தார்கள். இப்பாடல்கள் அனைத்தும் இலங்கையிலும் இந்தியாவிலும் பிரபல்யம் பெற்றன. 'கண்மணி ஆடவா' என்ற பாடல் இலங்கை வானொலியில் பிரபல்யம் பெற்றதோடு பட்டி தொட்டி யெல்லாம் புகழ்பெற்ற பாடலாக விளங்கியதற்கு சென்னையில் நடைபெற்ற ஓர் சம்பவத்தை நினைவு கூருவது பொருத்தமாக இருக்கும்.

நிர்மலா படத்தைத் தயாரித்த திரு.ரகுநாதன் திரைப்படத்துறையில் பயிற்சி பெறுவதற்காக 1968ஆம் ஆண்டளவில் சென்னை சென்று பிரபல இயக்குநர் ஸ்ரீதர் அவர்களின் கீழ் உதவியாளராக போயிருந்த வேளை தென்னக இயக்குநர் சங்க ஒன்றுகூடலுக்கு இயக்குநர் ஸ்ரீதர் ரகுநாதனையும் அழைத்துச் சென்றி ருந்தார்.

அந்த ஒன்றுகூடலுக்கு வந்திருந்திருந்த பிரபல தென்னிந்திய இயக்கு நர்களுக்கு ஸ்ரீதர் ஈழத்து இரகுநாதனை அறிமுகம் செய்து வைத்தபோது ஓர் இயக்குநர் எழுந்து இரகுநாதனிடம் 'தாங்கள் தயாரித்த இலங்கைப் படத்திலா கண்மணி ஆடவா என்ற பாடல் வந்தது' என்று கேட்டு அந்தப்பாடலை புகழ்ந் தாராம்.

ஈழத்தில் ஓர் படம் உருவாக்கப்படவேண்டுமென்ற ஆதங்கத்துடன் தனது சொத்து சுகங்களை இழந்து நிர்மலா படத்தை தயாரித்த இரகுநாதன் அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்குனர் புகழ்ந்ததைக் கேட்டு இசையில் கொடிகட்டிப் பறக்கும் இந்திய இயக்குநர்களாலேயே தனது படத்தில் வந்த பாடல் புகழப்பட்டதையிட்டு எல்லையற்ற சந்தோஷமும், கர்வமும் அடைந்தாராம். அந்தளவுக்கு 'கண்மணி ஆடவா' பாடல் இந்தியாவிலும் பிரபல்யம் பெற்றிருந்தது.

இப்பாடல் வந்த பின்பே ஈழத்தில் பொப்பிசை என்பது பிரபல்யம் பெறத் தொடங்கின, ஈழத்துப் பாடல்கள் கணிக்கப்பட தொடங்கியன. இலங்கையில் ஓர் தமிழ்ப்படம் உருவாக்கப்பட வேண்டுமென்ற ஆர்வம், இலட்சியம் காரணமாக ஒரு சதமேனும் ஊதியம் பெறாமல் நிர்மலா படத்துக்கு திரு பத்மநாதன் இசையமைத்துக் கொடுத்திருந்தார்.

இருபத்தியெட்டு வயது கொண்ட பத்மநாதனதும் அவரது இசைக்குழு வினரினதும் திறன்கண்டு திருகோணமலையைச் சேர்ந்த டாக்டர் வேதநாயகம் அவர்கள் தான் தயாரித்து நடித்த படமான 'தென்றலும் புயலும்' படத்துக்கு இசையமைக்கும் பொறுப்பை பத்மநாதனுக்கு வழங்கினார். இப் படத்தில் வரும் ஐந்து பாடல்களுக்கு பத்மநாதன் குழுவினர் இசையமைத்து கொடுத்தனர்.

இப்படத்தில் வரும் பாடல்களை திருகோணமலையைச் சேர்ந்த கவிஞர் சண்முகப்பிரியா எழுதியிருந்தார். இப்படத்திற்கென இசையமைக்கப்பட்ட 'துணைதேடிவந்தபறவை', 'சந்திரவதனத்தில் இந்திர நீலப்பூ', 'அரும்பான காதல்', 'இயற்கை மகள்' ஆகிய பாடல்களை சிங்களச் சினிமாவின் புகழ்பெற்ற பாடகி சுஜாத்தா அத்தநாயக்கா, முத்தழகு, கலாவதி பொன்னுச்சாமி, பேர்டின் லோப்பஸ் ஆகிய மெல்லிசைப் பாடகர்கள் பாடியிருந்தார்கள். இத்திரைப் படத்தில் வந்த 'சந்திரவதனத்தில் இந்திர நீலப்பூ' என்னும் பாடல் 'கண்மணி ஆடவா' பாடல்போல் எல்லையற்ற புகழை திருகோணமலை இசைக்குழுவுக்கு தேடித்தந்தது.

இலங்கை வானொலிக்கென 30க்குமேற்பட்ட பாடல்களுக்கு பத்மநாதன் இசையமைத்து சாதனை புரிந்துள்ளார். திருகோணமலைக் கவிஞரான மதிவதனன் பாட்டெழுதி கிருஷ்ணனும் கலாவதியும் பாடிய 'சொல்லத்தான்' என்னும் பாடல் இலங்கை, இந்தியா, மலேசியா போன்ற நாடுகளின் வானொலிகளில் தினம் தினம் ஒலித்த புகழ் பெற்ற தனிப்பாடலாகும். கானடா இராகத்தில் அமைந்த இப்பாடல் சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவரால் புகழப்பட்ட பெருமைக்குரிய பாடலாகவும் அமைந்தது.

பாலசுந்தரம் பிரணவன் பாடிய பல பாடல்களுக்கும் இசையமைத்த பத்மநாதன் அவர்கள் கர்நாடக சங்கீதத்தையும் துறைபோகக் கற்ற ஓர் கலைஞனாக விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோணேஸ்வரா இசைக்குழு - துரை இசைக்குழு

திருகோணமலை இசைக்கழகம் 1964ஆம் ஆண்டு தொடக்கம் 1968ஆம் ஆண்டு வரை இயங்கியதன்பின் ஏதோ காரணங்களினால் ஸ்தம்பித நிலை அடைந்த வேளையில் இக்குழுவில் பங்கேற்றிருந்த திரு. இமானுவல் 1968ஆம் ஆண்டு 'கோணேஸ்வரா இசைக்குழு' என்ற பெயரில் இசைக்கழகம் ஒன்றை ஆரம் பித்தார்.

இதேபோல் துரை துரைலிங்கம் என்னும் பாடகர் 'துரை இசைக் குழு' எனும் இசைக் கழகத்தை 1969ஆம் ஆண்டு ஆரம்பித்தார். இக்குழுவில் ஜோன் பொஸ்கோ, அன்புவழிபுரத்தைச் சேர்ந்த லியோதாஷ் (பேஸ்கிற்றார்), தாஷன் (கொங்கோரம்), சுந்தரலிங்கம் (ரம்செட்) மற்றும் பாடகர்களாக, லியோ, பிறேமா, மேரியோ இணைந்து இவ் இசைக்குழுவை நடாத்தி வந்தார்கள். திருகோணமலை கும்புறுபிட்டி, திரியாய், சம்பூர், யாழ்ப்பாணம், அச்சுவேலி, உடுப்பிட்டி, நெல்லியடி போன்ற இடங்களுக்குச் சென்று பல்வேறு இசை நிகழ்ச்சிகளை நடாத்தி புகழ் பெற்றார்கள் இந்த இசைக்குழுவினர்.

## பரமேஷ், கோணேஷ் இசைக்குழு

திருகோணமலை மெல்லிசை மன்னர்களான பரமேஷ் கோணேஷ் சகோதரர் களின் வருகை பாரிய திருப்பத்தை ஈழத்திருநாட்டில் ஏற்படுத்தியது எனலாம். 1968ஆம் ஆண்டு பரமேஷ், கோணேஷ் என்னும் சகோதரர்கள், இளைஞர்களான பஞ்சரட்ணம், ஜே.ஆர். அலெக்சாண்டர், பாலச்சந்திரன், எம். பாக்கியராஜா, எம்.சி மகேஸ், செல்லா எமிலி, கிறவுதர் செல்வா, கமலா ராஜதுரை, பமலா, விமலா, நு.சு.பிரேமா, முகுந்தன், மோகன் கெங்காதரன், சிவானந்தன், ஜீவா னந்தன், என்ற இந்த இளைஞர் குழாமால் ஸ்தாபிக்கப்பட்டது.

'பரமேஷ் கோணேஷ் இசைத் தென்றல்' என்னும் பெயர்கொண்ட மெல்லி சைக்குழுவின் பிரதான வாத்தியக் கலைஞர்களாக பரமேஸ் அவர்களின் சகோதரர் கோணேஷ் மற்றும் எஸ்.சி மகேஸ், போன்றோர் திகழ்ந்தார்கள். இதில் பரமேஷ் பாடகராகவும், பாடல் ஆசியரியராகவும், இயக்குனராகவும் இருந்து இவ் விசைக்கழகத்தை (1966-1977) இயக்கிய முன்னோடியாகத் திகழ்ந்தார்.

பள்ளிப் பருவகாலத்தில் 'ஒளிமயமான எதிர்காலம்' என்னும் டி.எம். சௌந்தரராஜனின் பாடலைப்பாடி இசைத்துறைக்குள் நுழைந்த பரமேஷ் தன் வாழ்வில் பெருமையாக நினைப்பது 'திருக்கோணமலை எங்கள் நாடு' என்று தான் எழுதிய பாடலை சுவாமி விபுலானந்தரின் முதல் மாணவனும், பிள்ளைப் பாட்டுக் கவிஞரும், தமிழ் அறிஞரும், வித்தியாதிகாரியுமான தனது தந்தையான மா.பீதாம்பரனரால் வியந்துபோய் தன்னைக் கட்டித் தழுவி பாராட்டிய சம்பவமே என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து மெல்லிசை வரலாற்றில் பரமேஷ், கோணேஷ்செய்த சாதனைகள் முக்கிய மைல்கல்லாக அமைகின்றது. இக்குழுவில் ஏனைய வாத்திய கலைஞர் களாக விளங்கிய முகுந்தன், மோகன்ராவ், ஜீவானந்தம், பாலச்சந்திரன், கங்காதரன், சிவானந்தம், பஞ்சரட்ணம் போன்ற கவிஞர்களினதும் பின்னணிப் பாடகர்களாக, விளங்கிய செல்வி.எமிலி, கிறவுத்தர், துரைதுரைசிங்கம், கமலா ராஜதுரை, கே.எஸ்.பாலசந்திரன், பமலா, விமலா, ஜே.ஆர்.அலஸ்சாண்டர், எம்.பாக்கியராஜா, மாலினி பரமேஸ், இ.ஆர்.பிரேமா போன்ற கலைஞர்களினதும் கூட்டுமுயற்சியினால் உருவாக்கப்பட்டதே (1968) பரமேஷ், கோணேஷ் இசைக்குழுவாகும்.

ஈழத்து தமிழ் கலைஞர்களாலும் அற்புதமான இசை தரமுடியும் என்பதற்கு பிள்ளையார் சுழிபோட்டு, திரைப்பாடல்கள் வானொலியிலும் மேடையிலும் மலிந்து கிடந்த காலத்தில் ஈழத்தின் முதலாவது இசைத்தட்டை (45 RPM) (1970) உருவாக்கி மெல்லிசை உலகில் வரலாறு படைத்தவர்கள் பரமேஷ் கோணேஷ் இசைக்குழுவினர்.

ஈழத்தில் உருவாக்கப்பட்ட இந்த முதலாவது இசைத்தட்டில், "உனக்குத் தெரியுமா நான் உன்னை அழைப்பது", "நீ வாழும் இடமெங்கே?", "நீயின்றி நிலவு என் வந்ததிங்கு", "போகாதே தூரப் போகாதே" ஆகிய நான்கு பாடல்களை தாமே எழுதி இசையமைத்து மெல்லிசைப் புரட்சியை இவர் செய்தனர்.

மட்டுப்படுத்தப்பட்ட தொழில் நுட்பம் நிலவிய அக்காலத்தில் இந்திய திரை இசைப்பாடல்களுக்கு நிகராக இவர்கள் உருவாக்கிய 'உனக்குத் தெரியுமா நான் உன்னை அழைப்பது' என்ற பாடல் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய சகல நாட்டு வானொலிகளிலும் ஒலிபரப்பப்பட்டு ஈழத்து மெல்லிசைக்கு மகுடம் சூட வைத்தது.

இலங்கை வானொலியில் தமிழர்கள் மட்டுமன்றி சிங்களப் பிரியர்களும் வரவேற்கும் அளவுக்கு 'நேயர் விருப்பம், 'பூவும்பொட்டும்', 'மகளிர்கேட்டவை', ஆசிய சேவை, 'இன்றய நேயர்', போன்ற நிகழ்ச்சிகளில் அடிக்கடி ஒலிபரப்பப் பட்டு ஈழத்து மெல்லிசையை உலக தரத்துக்கு உயர்த்தியன இவர்களது இந்தப் பாடல்கள்.

இப்பாடலின் புகழ்கண்ட சிங்களக் கலைஞர்கள் இப்பாடலை சிங்களத்தில் மொழிபெயர்த்தனர். இப்பாடல் 'திகு நீல அஸ்தெக்கல்' எனப் பரமேஷ் பாடி சிங்கள இரசிகர் மத்தியிலும் பெரும் வரவேற்பை பெற்றதுடன் இசைத்தட்டிலுள்ள ஏனைய பாடல்களும் சிங்களத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்டன.

இப்பாடல்கள் பெற்ற புகழாலும், வரவேற்பினாலும் இதுவரை காலமும் தென்னிந்திய திரைப்பாடல்களின் செல்வாக்கு மலிந்து கிடந்த காலத்தில் ஈழத்துப் பாடல்கள் என்ற புதிய வடிவமொன்று இசைத்துறையில் உருவாக பரமேஸின் இசைத்தட்டே காரணமாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லிசைத்துறையின் மன்னர்களாக வளர்ந்து கொண்டிருந்த இவர்களின் புகழ்கண்டு 1972ஆம் ஆண்டு தினகரன் விழாவை முன்னிட்டு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பரமேஷ், கோணேஷ் இசைத் தென்றல் நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்த ஈழத்தின் நாடகத் தந்தை கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் பரமேஷ், கோணேஷ், மகேஷ் ஆகிய மூவருக்கும் 'ஈழத்து மெல்லிசை மன்னர் கள்' என்ற பட்டத்தை வழங்கி கௌரவப்படுத்தினார். அன்று தொட்டு இவர்கள் 'ஈழத்து மெல்லிசை மன்னர்கள் பரமேஷ் கோணேஷ்' என்று அழைக்கப் பட்டார்கள்.

யாழ்பாடி யாழ்ப்பாணம் பெயர் கொண்டது என யாழ்ப்பாணப் புகழ் கொண்ட பாடலை எழுதி, இசையமைத்து, பாடியதற்காக பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் பரமேஷ், கோணேஷ் அவர்களுக்கு 'இயல் இசைக் கலைஞர்கள்' (1972) என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தார். இது ஈழத்து மெல்லிசைக்கு கிடைத்த உன்னதமான கௌரவமாக மதிக்கப்படுகின்றது.

பரமேஷின் இன்னொரு சிறப்புயாதெனில் ஈழத்தின் புகழ்பெற்ற சிங்கள மொழிப்பாடகரான ஜோதிபாலா பாடிய 'கொலுசுமகே, பகளவாகே' என்ற பாடலை தமிழில் மொழிமாற்றம் செய்து பாடியதே. இப்பாடலைக் கேட்ட பாடகர் ஜோதிபாலா உணர்ச்சிவசப்பட்டு பரமேஷ் அவர்களை கட்டியணைத்து பாராட்டினார்.

இது போலவே பிரபல்ய சிங்களப்பாடகி சுஜாத்தா அத்தநாயக்கா அவர் களுடன் திரைப்படமொன்றுக்கு 'மனம்' என்னும் பாடலைப்பாடி பாராட்டைப் பெற்றதுடன் இன்னும் பல சிங்களப் பாடல்களைப் பாடி ஆச்சரியப்படதக்க சாதனையை செய்து வைத்தவர் பரமேஷ்.

பரமேஷ் இயற்றி இசையமைத்து பாடிய 'மணமாளிகை ரோஜா', 'அழைக்கும் ஓசை கேட்கலையா' ஆகிய இருபாடல்களையும் சிங்களத்தில் மொழிமாற்றம் செய்து பிரபல சிங்களப்பாடகரான விக்ரர் ரட்ணாயக்கா சிங்களத்தில் பாடி பரமேசுக்கு புகழ்சேர்த்தார்.

இலங்கையில் தமிழ் இசையுடன் சிங்கள இசையும் ஒருசேர வலம்வருகிறது என்பதை நிரூபிக்கும் விதத்தில் தனது இரண்டாவது இசைத்தட்டை (45 RPM) வெளியிட்டார். அந்த இசைத்தட்டில் பின்வரும் பாடல்கள் அடங்கியிருந்தன: "பொப்பிசைப்பாடல் கேட்டு ........", "மஞ்சள் பட்டாடை ........", "கோணேஷ்வரம் அருள் ........", "நானுன்னைத் தேடும் நேரம் ........"

தனது துணைவியார் சங்கீதபூஷணம் மாலினி மகள் பிரபாலினி ஆகியோருடன் சேர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளை 1981ஆம் ஆண்டு வரை நடாத்தி வந்தார் பரமேஷ். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதம் கற்று 'பத்மபூஷணம்' என்னும் பட்டத்துடன் மெல்லிசைக் கலைஞராக இவரது மனைவி மாலினி ஈழத்தின் பல மேடைகளில் ஏறி மெல்லிசை மழை பொழிந்து வந்த காலத்தில் தாயகத்தை விட்டு வெளிச்செல்ல வேண்டிய காலச்சூழ்நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மன் தேசம் சென்று குடியேறினார்கள். அங்கும் இவர்களது கலைப்பயணம் தொடர்ந்தது.

ஜேர்மன் நாட்டிற்கு 1984ஆம் ஆண்டு குடிபோன பரமேஷ் தனது இசைப் பயணத்தின் இரண்டாவது சகாப்தத்தை அங்கு உருவாக்கினார். நவீன தொழில் நுட்ப வசதி கொண்ட ஐரோப்பாவில் தனது மனைவி மாலினி மகள் பிர பாலினியுடன் ஐரோப்பிய நாடெல்லாம்சென்று இசைநிகழ்ச்சிகளை நடாத்திவந்த பரமேஷ் 1995ஆம் ஆண்டு தனது மனைவி மகள் ஆகியோருடன் சேர்ந்து இசையமைத்த 'சங்கீத சாம்ராஜ்ஜியம்' என்னும் இசைப்பேழையை (CD) வெளி யிட்டு ஐரோப்பிய வாழ் மக்கள் மத்தியிலும் அளப்பரிய புகழைப்பெற்றார்.

ஜேர்மனியில் உள்ள எசன் மாநகரில் நடைபெற்ற தமிழருவி விழாவில் இந்த இசைப்பேழை வெளியிடப்பட்டு புலம்பெயர்ந்த ஈழவாழ் மக்களிடம் அளவற்ற வரவேற்பைப் பெற்றது. பரமேஷின் மூத்த மகளான பிரபாலினி தானே இயற்றி இசையமைத்து தந்தையையும் தாயையும் பாடவைத்து இசைத் தட்டாக்கி வெளியிட்ட இந்த இசைத்தட்டே இலங்கைத் தமிழ்பெண் இசை யமைத்து வெளியிட்ட முதல் இசைத்தட்டு பாடலாகும்.

## கோணேஸ்வரா இசைக்குழு – துரை இசைக்குழு

பரமேஷ் திருகோணமலையில் இருந்து மெல்லிசைத்துறையை வளர்த்து வந்த வேளையில் அவருடன் இணைந்து உழைத்த கலைஞர்கள் பலர் பிரிந்து சென்று தனித்தனியாக இசைக்குழுக்களை அமைத்து இன்னொருகிளை வளர்ச்சியை மெல்லிசைத்துறையில் ஏற்படுத்தினார்கள். அந்தவகையில் திரு. இம்மானுவல் என்பவர் திரு.நெல்சன் ஏரம்பு சரவணபவனுடன் சேர்ந்து 'கோணேஷ்வரா இசைக்குழு' என்ற பெயரில் ஓர் இசைக்குழுவை ஆரம்பித்தார்.

சிறந்த வாத்தியக்கலைஞரும் பாடகருமான இம்மானுவல் ஆரம்ப காலத்தில் பத்மநாதன் நடத்திய திருகோணமலை இசைக்குழுவில் ஓர் பாடகராகவும் வாத்தியக் கலைஞராகவும் இருந்துள்ளார். இவரைப் போலவே திருகோணமலை இசைக்குழுவிலும், பரமேஷ், கோணேஷ் இசைக்குழுவிலும் பிரதான பாடகராக இருந்த துரை துரைலிங்கம் அவர்கள் ஜோன் பொஸ்கோ, அன்புவழிபுரம் லியோதாஷ், கொங்கோரம் சுந்தரலிங்கம், பிறேமாமேரி ஆகிய கலைஞர்களுடன் இணைந்து 'துரை இசைக்குழு' என்பதை 1979ம் ஆண்டளவில் ஆரம் பித்தார்.

கிராமங்களில் நடக்கும் திருவிழாக்களிலும் மணவீடுகளிலும் அது போல், யாழ்ப்பாணம், அச்சுவேலி, நெல்லியடி, உடுப்பிட்டி போன்ற பிற இடங்களுக்கும் சென்று மெல்லிசைக் கச்சேரிகளை நடாத்தி புகழ்பெற்று விளங்கிய குழுவாகத் துரை இசைக்குழு விளங்கியது. பக்திப்பாடல்களையும் சினிமாப் பாடல்களையும் சொந்தமாக இயற்றி இசையமைத்துப் பாடிவந்துள்ளனர் இந்த இசைக்குழுவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை பக்திப்பாடல்களைப்பாடுவதற்கென்றே சில கிராமங்களில் இசைக்குழுவை ஆரம்பித்து கோயில் திருவிழாக்களுக்குச் சென்று பாடிவந்த தம்பலகமம் 'சண்முகலிங்கம் இசைக்குழு' (1970) திருகோணமலை 'கலைவாணி இசைக்குழு' (1971), 'நீரோ இசைக்குழு' (1972) என பல்வேறு இசைக்குழுக்கள் பிற்காலத்தில் மெல்லிசைத்துறை நிகழ்ச்சிகளை நடாத்திய இசைக்குழுக்களாக இருந்தன.

## நீரோ இசைக்குழு

நீரோ இசைக்குழு கெங்காதரன் தலைமையில் சு. முகுந்தராஜா, மோகன்ராவ், பாலு, சுந்தரேஸ்வரன் போன்ற வாத்திய கலைஞர்களுடன் திரு.மு.பாலச்சந்திரன், ரோபல்ராகல், து.சு. அலெக்சாண்டர், பிறேமா ஆகிய பாடகர்கள் சேர்ந்து இந்த இசைக் குழுவை ஆரம்பித்தனர்.

திருகோணமலை சமூகசேவை நிலையத்தின் இளைஞர் கழகத்தால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த இசைக்குழு திருகோணமலை, யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற இடங்களிலெல்லாம் பொப்பாடல்களையும், சினிமாப்பாடல்களையும் பாடி பல பாராட்டுக்களையும் புகழையும் பெற்றது. இவர்களில் பலர் முன்னர் பரமேஷ், கோணேஷ் குழுவின் வாத்திய கலைஞர்களாக இருந்தவர்கள். இக்குழுவின் பாடகரான மு. பாலச்சந்திரன், வி.பி.கணேசன் தயாரித்து நடித்த 'நான் உங்கள் தோழன்' ஈழத்து திரைப்படத்தில் இருபாடல்களை இந்தியப் பின்னணிப் பாடகர்களுக்கு நிகராகப் பாடி ஈழத்திலும், இந்தியாவிலும் புகழ் பெற்றார்.

## கலைவாணி இசைக்குழு



எஸ்.கே. பஞ்சரட்ணம்

இதே காலப்பகுதியில் (1972) இயங்கிய இன்னொரு பிரபல்ய இசைக்குழு கலைவாணி இசைக்குழுவாகும். எஸ்.கே. பஞ்சரட்ணம் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட இக்குழு பல ஊர்களிலும் மெல்லிசை கச்சேரி நடாத்தி ஈழப்புகழ் கொண்ட ஒரு இசைக்குழுவாக விளங்கியது. எஸ். கே. பஞ்சரட்ணம் பின்னாளில் இலண்டன் சென்று அங்கும் தனது இசைப் பயணத்தை தொடர்ந்து அண்மையில் அமரராகி விட்டார்:

வேறெந்த மாவட்டங்களிலும் இல்லாத அளவுக்கு பல மெல்லிசைக் குழுக்கள் இயங்கி இசைத்துறையையும், பொப்பிசைத்துறையையும், ஈழத்துப் பாடல்களையும் வளர்த்த வரலாறு துரதிஷ்டவசமாக 1983 ஆண்டுக்கு பின் தொடராமை கவலை தருகின்ற விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## I. க. சரவணபவனின் அகராதி முயற்சிகள்



க. சரவணபவன்

திருகோணமலை அன்புவழிபுரத்தைச் சேர்ந்த கலாநிதி கனகசபாபதி சரவணபவன் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் புவியியல் சிறப்புப்பட்டதாரி ஆவார். இவர் 1978 ஆம் ஆண்டளவில் ஜேர்மன் நாட்டுக்கு புலம் பெயர்ந்து சென்று, ஜேர்மன் மொழியை துறை போகக் கற்று, அங்கு வாழும் புலம் பெயர்ந்தவர்களின் தேவையை ஈடுசெய்ய வேண்டுமென்ற உயர்ந்த நோக்குடன் பல அகராதிகளை வெளியிட்டு சாதனைப் புரிந்தவர். 'ஜேர்மன் - தமிழ் அகராதி' (1992), 'தமிழ் - தமிழ் - ஜேர்மன் அகராதி' (1994), 'இலகுவில் தமிழ் மூலம் ஜேர்மன்' (1996), 'டச்சு (நெதர்லாந்து) - தமிழ், தமிழ் - டச்சு அகராதி' (1997), 'ஐ.பி.சி தமிழ் மூலம் ஜேர்மன்' (1998), 'ஜேர்மன் - தமிழ் அகராதி' (2000), 2303 பக்கங்களைக் கொண்ட 'ஜேர்மன் அகராதி' (தமிழ் - ஜேர்மன், ஜேர்மன் - தமிழ்) ஆகியவை இவரால் வெளியிடப் பட்ட அகராதிகளாகும்.

அகராதிகளை ஆக்கும் பணியென்பது பேரறிவின் உச்ச நிலையென்பது, அகராதித் தொண்டு புரிந்த அறிஞர்களின் திறனால் உணரப்பட்டவை. தமிழ் மகன் ஒருவர், ஜேர்மன் என்ற அன்னிய மொழியைக் கற்றுத் தேர்ந்து, அந்த மொழியின் ஆழ அகலத்தைத் தெரிந்து கொண்டு, சொல்லாட்சிக்கு விளக்கந் தருவதற்கு எவ்வளவு புலமையும் அறிவும் வேண்டுமென்பதை நினைக்கும் போது, சரவணபவனின் மொழித் திறனைக் கண்டு பெருமைப்பட வேண்டிய வர்கள் நாம்.

அகராதி முயற்சி மட்டுமன்றி திருகோணமலை பிரதேச வரலாற்றிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர் பின்வரும் நூல்களையும் எழுதி வெளி யிட்டுள்ளார்: 'வரலாற்றுத் திருகோணமலை' (2003), 'History of Tringomalee' (2005), (பதிப்பாசிரியர்), 'காலனித்துவ திருகோணமலை' (2010).

மேற்கண்ட நூல்கள் திருகோணமலை பிரதேச வரலாற்றினை அறிவதற்கான அடிப்படை நூல்களாக இன்று விளங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II. திருகோணமலையில் வெளிவந்த சிற்றிதழ்கள்

திருகோணமலையின் இலக்கிய வரலாற்றில் காலத்திற்குகாலம் வெளிவந்த சிற்றிதழ்களின் பங்களிப்பு கனதியானதாகவும், அக்காலக்கட்டத்தின் வளர்ச்சிக்கு துணை புரிந்ததாகவும் இருக்கிறது. இம்மாவட்டத்தில் வெளிவந்த சிற்றிதழ்களை, பின்வரும் வகையில் வகைப்படுத்தி நோக்க முடியும்: 1. கையெழுத்துப் பிரதிகள், 2. தட்டச்சுப் பிரதிகள், 3. அச்சுப்பிரதிகள்.

### 1. கையெழுத்துப் பிரதிகள்

அச்சு இயந்திர வசதியில்லாத காலக்கட்டத்தில் இருந்து இன்றுவரை, ஆங்காங்கே பல்வேறு கையெழுத்துப்பிரதிகள் வெளிவந்து, இலக்கிய வாசகர்களுக்கு தீனியாகவும், அதேவேளை படைப்பாளிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட களமாகவும் இருந்து வந்துள்ளதை, அறியக்கூடியதாகவுள்ளது. இக்கையெழுத்துப் பிரதிகளில், தமது எழுத்துக்களை ஆரம்பித்தவர்களே பிற்காலத்தில் சிறந்த கவிஞர்களாகவும், விமர்சகர்களாகவும், சிறுகதை நாவல் படைப்பாளிகளாகவும் இருந்துள்ளனர். உதாரணமாக, தர்மு சிவராமு என்ற படைப்பாளியை, ஆக்கித்தந்த பெருமை, யாழ், 'இளங்கோ' என்ற கையெழுத்துப்பத்திரிகையை சாரும்.

திருகோணமலையில் அச்சு இயந்திர வசதியோ, வெளியீட்டு வசதியோ இல்லாத காலத்தில், பல்வேறு கையெழுத்துப் பிரதிகள் வெளிவந்துள்ளன.

| | | | |
|---|---|---|---|
| ★ | அல்லி | 1950 - 1955 | |
| ★ | கமலை | 1953 | திருகோணமலை, திருவள்ளுவர் கழக வெளியேடு |
| ★ | அறிவுச்சுடர் | 1954 | தா.பி.எஸ்.ரமணி |
| ★ | இளங்கதிர் | 1954 | ஆறுமுகம் |
| ★ | தாமரை | 1954 | ஜெகதீசன் |
| ★ | இளங்கோ | 1955 | சிவராமலிங்கம் |
| ★ | யாழ் | 1956 -1960 | த.அமரசிங்கம், தா.பி.சுப்பிரமணியம், சிவலிங்கம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ★ நிலா | 1958 | த.அமரசிங்கம் |
| ★ நீதி சிரித்தது | 1960 | தா.பி.சுப்பிரமணியம், எஸ்.ரமணி |
| ★ அல்லி | 1966 | ஜீவா |
| ★ ஆனந்தி | 1966 - 68 | சாண்டிக்கோ - சுப்ரமணியம் |
| ★ கன்னித்தமிழ் | 1968 | க.கோணேஸ்வரன் |
| ★ திங்கள் | 1970 | இராதி மாதவன் |
| ★ திருமலைத் தீபம் | 1991 | |

2. தட்டச்சுப் பிரதிகள்

| | |
|---|---|
| ★ கோணைத் தென்றல் | 1987 -1991 |
| ★ திருமலைத்தீபம் | 1991 |
| ★ யதார்த்தம் | 1989 - 1990 |
| ★ சங்கப்பலகை | 1988 |
| ★ தாகம் | 1985-1998 |
| ★ ஈச்சம்பழம் | 1988 |
| ★ கமலை | |
| ★ சிறகுகள் | 2003 |
| ★ சங்கமம் | 1988 |
| ★ கீழைத்தென்றல் | 1992 |
| ★ மலைத்தேன் | 1978 (திருகோணமலை கவிஞர்களின் கவிதைகள்) |
| ★ நிர்வாணம் | 1987 (ஈழத்து புக்கவிஞர்களின் தொகுப்பு) |
| ★ சுவடுகள் | 1988 (மூன்று புதுக்கவிஞர்களின் தொகுப்பு) |

*தாகம் (1985-1998):* திருகோணமலையின் இளைஞன் வி.மைக்கல் கொலின் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 1986ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இதன் முதலாவது இதழ் வெளிவந்துள்ளது. ‘இலக்கியம் வளர்ப்போம் இலட்சியத்தோடு’ என்ற கோஷத்தினை முன்வைத்து இருமாத இதழாக, ரோணியோ பதிப்பாக இதனை அவர் வெளியிட்டு வந்துள்ளார்.

தாகத்தின் ஆறாவது இதழ், முதலாவது ஆண்டுமலராக கொழும்பில் அச்சுவடிவில் வெளியிடப்பட்டது. தாகத்தின் வெளியீடாக, ‘நிர்வாணம்’ எனும் புதுக்கவிதைத் தொகுதி வெளிவந்தது. இதில், ஈழத்தின் பல புதுக்கவிஞர்கள் பங்களிப்புச் செய்திருந்தனர்.

தாகத்தின் இரண்டாவது ஆண்டுமலர், திருமலை நகராட்சி மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. 1987ஆம் ஆண்டுக்குப்பின் தாகத்தின் வரவில் ஓர் புதுப்பொலிவு மிளிரத்தொடங்கியது. புரட்சிகர முற்போக்கு இதழாக, பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திரமான அரசியல் விமர்சகர்களையும், படைப்புக்களையும் தாங்கி வரத் தொடங்கியது.

'தாகம்', தனக்கென ஓர் கலை இலக்கியவட்டத்தை, 1990ஆம் ஆண்டு நிறுவி, மாபெரும் கலை இலக்கிய விழாவினை நடாத்தி, இருமலர்களை வெளியிட்டது. இப்பெருவிழாவில் திருமலையின் மூத்த எழுத்தாளர்களான வ.அ.இராசத்தினம், திரு.க.அருள்சுப்பிரமணியம், கவிஞர் தாமரைத்தீவான், திருமலை நவம் ஆகியோரை, தாகம் கௌரவித்தது.

1990ஆம் ஆண்டளவில் தாகம், வெளியீட்டுப்பிரிவு ஒன்றை ஆரம்பித்து பின்வரும் ஐந்து நூல்களை வெளியிட்டு வைத்துள்ளது: 1. கிராமத்து மண்கள் சிவக்கின்றன (சிறுகதைத் தொகுதி) - சித்ரா நாகநாதன், 2. ராத்ரி (புதுக்கவிதைத் தொகுதி) - இப்னு அஸூமத், 3. நிர்வாணம் (சிறுகதைத் தொகுதி) - உடுவை எஸ்.தில்லை நடராஜா, 4. கீறல்கள் (மரபுக்கவிதைத் தொகுதி) - கவிஞர் தாமரைத் தீவான், 5. என் பிரியராஜகுமாரிக்கு (புதுகவிதைத் தொகுதி ) - கவிஞர் வி.மைக்கல் கொலின்.

திருமலை மண்ணின் இலக்கியம் வரட்சியுற்றிருந்த காலத்தில் இலக்கிய விடியலுக்கு பூபாளமாக அமைந்தது 'தாகம்' சஞ்சிகையாகும். தொடர்ந்து பத்து வருடங்களாக, தனிமனிதனாக நின்று கலை இலக்கிய இதழினை வெளியிட்ட தன்மூலம், திருமலை மண்ணுக்கும் ஈழத்து இலக்கிய உலகுக்கும் பணி செய்தவர், தாகம் ஆசிரியர் மைக்கல் கொலின்.

### 3. அச்சுப் பிரதியாக வெளிவந்தவை

| | | |
|---|---|---|
| ★ எரிமலை | 1953 | |
| ★ மலைத்தேன் | 1978 | (மரபுக் கவிதை) |
| ★ வசந்தம் | 1988 | (க.கோணேஸ்வரன், ப.சந்திரமௌலீஸ்வரன்) |
| ★ சுவடுகள் | 1987 | (புதுக்கவிதை ஏடு) |
| ★ தாகம் | 1986 | (ஆண்டு மலர்) |
| ★ அறிவு | 1988 | (வைத்திய கலாநிதி இராமச்சந்திரன்) |
| ★ ஆகவே | 1988 | (ஏ.எம்.ஐ.எம்.ஜபார்) |
| ★ நீங்களும் எழுதலாம். | | எஸ். ஆர். தனபாலசிங்கம் |

போன்றவற்றில் புதுக்கவிதைக்குரிய சிந்தனைக் கனதி, படிமம், உள்ளீட்டுத்தர்க்கம் நிறைந்தனவாகவும் சில, அவை அற்றவையாகவும் எழுதப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## III. திருகோணமலைக் கவிஞர்கள்

1. அண்ணல்
2. தருமு சிவராமு
3. ராயப்பு
4. அரியநாயகம்
5. ஸ்ரனிசிலஸ்
6. தா.சி.வில்வராஜன்
7. பெ.பொ.சிவசேகரம்
8. தாமரைத்தீவான்
9. புரட்சிபாலன்
10. புரட்சிவண்ணன்
11. மலைமதிசந்திரசேகரம்
12. வணங்காமுடி
13. தம்பிதில்லைமுகிலன்
14. செல்வமணி வடிவேலு
15. கே.கே.மதிவதனன்
16. க.கோணேஸ்வரன்
17. செ.நவசோதிராசா
18. திருமலை.அ.சந்திரன்
19. திருமலை நவம்
20. எஸ்.யோசப்
21. இரத்தினவிக்னேஸ்வரன்
22. மு.ராஜ்கபூர்
23. தங்க சச்சிதானந்தம்
24. ஆனந்தபிரசாத்
25. ஆலன்
26. சண்முகப்பிரியா
27. ஆலையூரான்
28. நிலவின்தாசன்
29. நிலா தமிழின்தாசன்
30. திருமலை ராசரத்தினம்
31. மூதூர் முகைதீன்
32. அஸ்ரப்பாநூர்டீன்
33. சி.சிவசேகரம்
34. அ.கௌரிதாசன்
35. மைக்கல்கொலின்
36. ராஜேந்திரன்
37. ராஜசேகர்.
38. சிவகுமார்.
39. நவ்பர்கான்.
40. சி.காண்டீபன்.
41. ஷாஷகான்.
42. முகமட்சாலி
43. காந்தரூபி
44. தாரிணி
45. அக்கினிவண்ணன்
46. ஏ.ஏ.அமீர்அலி
47. ஜெ.தருமகுலராஜா
48. எஸ்.சுதாமதி
49. போஷ்யா
50. சேனையூர் இளஇரவீந்திரன்
51. ஜபார்
52. ஜவாத் எம்.எல்.ஏ
53. கா.இரட்ணசிங்கம்
54. நிரஞ்சனி
55. சி.பற்குணம்
56. ஸ்ரீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. சிகண்டிதாசன்
58. யோகானந்தம்
59. கிண்ணியா ஏ.எம்.எம்.அலி
60. சம்பூர் எம்.வதனரூபன்
61. திருமலை அஸ்ரப்
62. கிண்ணியா ஏ.நஸ்புள்ளா
63. ஜெயாதமிழினி
64. ஜெனீரா அமான்
65. ஜெ.மதிவதனி
66. சி.மதியழகன்
67. கே.அன்ரனி
68. எம்.மிக்கேல்
69. அப்துான் சுபைர்
70. எம்.ஸ்ரீவதனன்
71. கிண்ணியா சுவீர்
72. டிலானி
73. முழுநிலா முஸாதிக்
74. வர்ண இளஞ்செழியன்
75. அ.வா.முகம்மது பாகி
76. அ.அச்சுதன்
77. கவிக்குயிலன்
78. ஏ.தாரிக்
79. இளங்கீற்று எம்.ரீ.சஜாத்
80. ஏ.கே.முஸாரக்
81. சு.நரசிம்மன்
82. எம்.எஸ்.நவாஹிர்
83. ஸாஹிறா
84. யூட் நிர்மலன்,
85. பஸ்மியா ஹனிபா
86. எம்.எம்.நௌபர்
87. புவனேந்திரன்
88. திருமலைச்சந்திரன்
89. ஏ.ஏ.அப்துல்சலாம்
90. எம்.கைஸ்
91. கிண்ணித்தென்றல் எம்.யூ.ஏ.கரீம்
92. சித்திமகீஸா அலிஅக்பர்
93. எம்.முஹைஸ்
94. வக்சலா சண்முகசுந்தரம்
95. லீலாவதி
96. சிவலிங்கம்
97. பி.வாமதேவன்
98. ப.தேவேந்திரன்
99. க.குணவதி
100. ப.தெய்வேந்திரன்
101. மு.தானிஸ்
102. ஏ.எம்.அப்துல் கஹ்கார்
103. ஐ.அப்துல்ஹாசன்
104. ஏ.நஸ்புள்ளா
105. எம்.ரி.சஷாத்
106. வி.எம்.அன்சார்சத்தார்
107. ஏ.நஜிமுத்தீன்
108. கலாபூசணம் - ஏ.எம் முகாதீன்
109. எம்.ஜவாத் நஸ்மி,
110. ஏ.எஸ்.அப்துல்லா
111. முகம்மது அலி ஜின்னா
112. கவிஞர் கே.சிராஜ்
113. சுஹைதாகரீம்
114. சுஸானா முனாஸ்
115. எம்.எம் அனஸ்
116. ஏ.ஜாபீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

117. கலீல் கண்டு
118. நளிம்
119. அ.கா.மு.றிஸ்வின்
120. அன்சார்
121. மர்ஹூம் முது கவிஞர் வி.எம்.நஜிமுதீன்
122. தோப்பூர் மரைக்காயர்
123. M.C சபருள்ளா
124. M.L.M சஹீது
125. D.A ஜப்பார்
126. M.S.M மதார்
127. MIM முத்தலிப்பு
128. K.M மஃறூர்
129. M.E.H.M தௌபீக்
130. N.M ஜமீல்
131. J.M ஹனிபா
132. M.Y.M அலி
133. A.A அப்துல்சலாம்
134. H.M கலால்தீன்
135. S.M சரீப்
136. எஸ்.பாயிஷா அலி
137. மு.ம.தஹீகா இல்யாஸ்
138. அலி.நிஹாரா நௌசாத்
139. சசிகலா செல்லத்தம்பி
140. சசிகலா சின்னத்தம்பி
141. முகமட் அஸ்மின்
142. M.H முகமட் நளீர்
143. K.M.M இக்பால்
144. திருமலை ராஜன்
145. லிங்கேஸ்வரன்
146. ஏ.எம்.எம்.அலி
147. மாதுமை சிவசுப்பிரமணியம்
148. க.அன்பழகன்
149. சி.தர்மினி
150. அமீர்டீன்
151. கெ.தர்மகுலராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV. திருகோணமலை சிறுகதை எழுத்தாளர்கள்

1. வ.அ.ராசரத்தினம்
2. ந.பாலேஸ்வரி
3. தி.அரியநாயகம்
4. க.சா.அரியநாயகம்
5. தா.பி.சுப்பிரமணியம்
6. புரட்சி பாலன்
7. அபிநய சிகாமணி சி.விஸ்வலிங்கம்
8. க.அருள்சுப்பிரமணியம்
9. பத்மாசனிகணபதிப்பிள்ளை
10. சாண்டிக்கோ சுப்பிரமணியம்
11. அல்லி ஜீவா
12. கா.இரத்தினலிங்கம்
13. ந.திருச்செல்வம்
14. வி.தில்லைநாதன்
15. மு.வே.யோகேஸ்வரன்
16. மலைமதி சந்திரசேகரம்
17. மு.ராஜ்கபூர்
18. இராஜதர்மராஜா
19. தாரிணி
20. அசனார்
21. திருமலைநவம்
22. இ.ஏகாம்பரம்
23. திருமலைசுந்தா
24. புல்மூட்டை எம்.எஸ்.ஏ.காதர்
25. எம்.ஐ.எம்.தாஹிர்
26. முகமட்சாலி
27. சித்திராநாகநாதன்
28. புனிதன்
29. ஏ.எஸ்.இப்ராகிம்
30. அருள்வரதன்
31. அமானுல்லா
32. செ.துரைநாயகம்
33. ச.சச்சியானந்தம்
34. கா.நடராஜா
35. மகாலிங்கம்
36. தம்பலகாம் ச.கவிதா
37. ச.அருளானந்தம் (ஆலன்)
38. லக்ஷிகாஹேமச்சந்திரா
39. வீ.என்.சந்திரகாந்தி
40. இளையவன்
41. கிண்ணியா அமீர்அலி
42. தாமரைமகன்
43. என்.சித்திரவேல்
44. கனகசபை தேவகடாட்சம்
45. ராணிசீதரன்
46. வி.கௌரிபாலன்
47. எம்.ஐ.எம்.தாஹிர்
48. மூதூர் எம்.எஸ்.அமானுல்லா
49. அபூபக்கர் முஹம்மது அனஸ்
50. கலாநிதி கே.எம்.எம்.இக்பால்
51. உவர்மலை வீ.எஸ்.குமார்
52. திருமலை சசி
53. ஜெனீரா அமான்
54. பிரான்ஸிஸ் நோபேட்
55. றெலிகான் சதாத்
56. ஓஷோ யசீந்திரா
57. சூசை எட்வேட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V. திருகோணமலையில் வெளிவந்த சிறுகதைத் தொகுதிகள்

1. தோணி வ.சு. இராசரத்தினம் 1962,
2. கடலோரக்கதைகள் வ.சு
3. கொட்டியாரக்கதைகள் 1999 வ.சு
4. ஐந்திணைக்கதைகள் 2000 வ.சு
5. சுமைதாங்கி 1973 ந. பாலேஸ்வரி
6. தெய்வம்பேசுவதில்லை 2000 ர.பா
7. விடா முயற்சி 1960 தா.பி. சுப்பிரமணியம்
8. சந்தனக்குச்சு 1965 தா.பி சுப்பிரமணியம்
9. போரும் வேரும் 2002 புரட்சிபாலன்
10. அம்மாச்சி (2003) க. அருள்சுப்பிரமணியம்
11. வேள்வி (1975) திருமலை சுந்தா
12. நாளையைத் தேடும் மனிதர்கள் (1996) தி.சு.
13. விழியோரத்து கனவுகள் 1995 திருமலைசுந்தா
14. ஜலசமாதி 2008 ஏ.எஸ் உபைத்துல்லா
15. கிராமத்துமண்கள் சிவக்கின்றன (1990) சித்தரா நாகநாதன்
16. பச்சைப்பாவாடை (2009) எம்.ஐ.எம். தாஹிர்
17. அந்த ஆவணி ஆறு (2000) ஆலன்
18. அயற்கிராமத்தை சேர்ந்தவர்கள் (1993) நந்தினி சேவியர்
19. நெல்லிமரத்துபள்ளிக்கூடம் (2011 நந்தினி சேவியர்
20. இலங்கை எழுத்தாளரின் சிறுகதைகள் (2202) எஸ். செல்வக்குமார்
21. ஸ்திரி இலட்சணம் (2002) வீ.என்.சந்திரகாந்தி
22. தொடரும் தலைமுறைகள் (2003) சந்திரகாந்தி
23. இந்திரர்கள் நாடும் அகலிகைகள் (2006) சந்திரகாந்தி
24. காலக்கீறல்கள் (1996) கனக சபை தேவ கடாட்சம்
25. குமறல்கள் (1998) கனக சபை தேவ கடாட்சம்
26. குருதிமண் (2000) கனக சபை தேவ கடாட்சம்
27. நெஞ்சில் ஒரு நினைவு (2000) என்.சித்திரவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. மாங்கல்யம் தந்து நீயே (1999) ராணி சீதரன்
29. கன்னிகாதானம் (1999) ராணி சீதரன்
30. நடுகல் ராணி சீதரன்
31. நிலவு சுடும் 2010 ராணி சீதரன்
32. ஒப்பனை நிழல் 2003 வீ கௌரிபாலன்
33. நடுக்கடலில் 2005 கே.எம்.எம்.இக்பால்
34. தியாகி கே.எம்.எம்.இக்பால்
35. விரால் மீன்கள் 2007 அமானுல்லா
36. அப்பா (2008) வி.எஸ்.குமார்
37. மொட்டு 2001 திருமலை சசி
38. பிரியமான சிநேகிதி (2009) ஜெனீரா அமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VI. திருகோணமலையில் வெளிவந்த நாவல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஊசோன் பாலந்தை | 1891 | எஸ்.இன்னாசித்தம்பி |
| 2. | மோகனாங்கி | 1895 | த.சரவணமுத்துப்பிள்ளை |
| 3. | கொழுகொம்பு | 1956 | வ.அ. இராசரத்தினம் |
| 4. | துறைக்காரன் | 1956 | வ.அ. இராசரத்தினம் |
| 5. | சுடர்விளக்கு | 1966 | ந.பாலேஸ்வரி. |
| 6. | தேய்பிறை | 1968 | வ.அ. இராசரத்தினம் |
| 7. | பூஜைக்கு வந்தமலர் | 1972 | ந.பாலேஸ்வரி |
| 8. | சந்தான புரவி | 1973 | வ.அ. இராசரத்தினம் |
| 9. | அவர்களுக்கு வயது வந்துவிட்டது | 1973 | க.அருள்சுப்பிரமணியம் |
| 10. | நான் கெடமாட்டேன் | 1975 | க.அருள்சுப்பிரமணியம் |
| 11. | கிரௌஞ்சப்பறவைகள் | 1975 | வ.அ. இராசரத்தினம் |
| 12. | ஒரு காவியம் நிறைவு பெறுகிறது | 1975 | வ.அ. இராசரத்தினம் |
| 13. | உறவுக்கப்பால் | 1975 | ந.பாலேஸ்வரி |
| 14. | அக்கரைகள் பச்சையில்லை | 1977 | க.அருள்சுப்பிரமணியம் |
| 15. | இதயங்கள் அழுகின்றன | 1977 | தா.பி.சுப்ரமணியம் |
| 16. | சேகுவரா | 1979 | அ.அ.ஜெயராசா |
| 17. | அப்பா | 1979 | அ.அ.ஜெயராசா |
| 18. | கோவும் கோயிலும் | 1980. | ந.பாலேஸ்வரி |
| 19. | வெற்றுக்குளத்தில் வாடும் தாமரை | 1980 | வி.தில்லைநாதன் |
| 20. | சமுதாயப்பூக்கள் | 1980 | அன்வர்டீன் |
| 21. | சூரசம்ஹாரம் | 1982 | க.அருள்சுப்பிரமணியம் |
| 22. | உன்கண்ணில் நீர்வழிந்தால் | 1983 | கா.இரத்தினலிங்கம் |
| 23. | உள்ளக்கோயில் | 1983 | ந.பாலேஸ்வரி |
| 24. | பிராயச்சித்தம் | 1984 | ந.பாலேஸ்வரி |
| 25. | உமையாள்புரத்து உமா | 1984 | புரட்சிபாலன் |
| 26. | புதியதோர் உலகம் | 1985 | கோவிந்தன் (நோபேட்) |
| 27. | போரும் மனிதனும் | 1986 | அ.அ.ஜெயராசா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 28. | ஆரம்பமே ஒரு அஸ்தமனம் | 1986. | அன்வர்டீன் |
| 29. | மன்னவனே மன்னவனே | 1986. | அன்வர்டீன் |
| 30. | நெருப்பில் நீந்தும் நிலாக்கள் | 1988. | அன்வர்டீன் |
| 31. | கனவுகள் கற்பனைகள் நினைவுகள் | 1988 | கா. இரத்தினலிங்கம் |
| 32. | அன்பைத்தேடும் இதயங்கள் | 1988 | கா. இரத்தினலிங்கம் |
| 33. | உள்ளத்தினுள்ளே | 1990 | ந.பாலேஸ்வரி |
| 34. | தத்தைவிடுதூது | 1992 | ந.பாலேஸ்வரி |
| 35. | ஒருவெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கின்றது | 1993 | வ.அ.இராசரத்தினம் |
| 36. | மாது என்னை மன்னித்துவிடு | 1993 | ந.பாலேஸ்வரி |
| 37. | நான் நீதியின் பக்கம் | 1993 | க.அருள்சுப்பிரமணியம் |
| 38. | மண்ணிற் சமைந்த மனிதர்கள் | 1996. | வ.அ.இராசரத்தினம் |
| 39. | வசந்தகாலக்கோலங்கள் | 2001 | புரட்சிபாலன். |
| 40. | நினைவு நீங்காதது | | ந.பாலேஸ்வரி |
| 41. | உறவுக்கப்பால் | (2003) | ந.பாலேஸ்வரி. |
| 42. | உள்ளக்கோயில் | | ந.பாலேஸ்வரி |
| 43. | எங்கே நீயோ அங்கே நானும் | | ந.பாலேஸ்வரி |
| 44. | பிராயச்சித்தம் | | ந.பாலேஸ்வரி |
| 45. | அகிலா உனக்காக | | ந.பாலேஸ்வரி |
| 46. | இதயத்தந்திகள் மீட்டப்படுகின்றன | | வி.தில்லைநாதன் |
| 47. | அவளுக்கு ஒரு கணவன் தேவை | | வி.தில்லைநாதன் |
| 48. | பாசத்தின் பிணைப்பு | | அன்வர்டீன் |
| 49. | மீண்டும் வசந்தம் | | வீ.என்.சந்திரகாந்தி |
| 50. | நடுக்கடலில் | | கே.எம்.எம் இக்பால் |
| 51. | கனவு மெய்ப்பட வேண்டும் | 2009 | ச.அருளானந்தம் |
| 52. | மஞ்சம்தொடுவாய் | | அன்வர்பீன் |
| 53. | எழுதப்படாத கவிதைகள் | | அன்வர்பீன் |
| 54. | காதல் வெண்ணிலா கையில் சேருமா | | மைக்கல் கொலின் |
| 55. | காதல் என்னைக் காதலிக்கவில்லை | | எஸ். செல்வக்குமார் |
| 56. | நடையில் நாமூன்று நாட்கள் (கு.நாவல்) | | தா.பி. சுப்பிரமணியம் |
| 57. | ரங்கநாயிகியின் காதல் (2005) | | தம்பலகாமம் க. வேலாயுதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VII. திருகோணமலையில் வெளிவந்த சிறுவர் நாவல்கள்

1. பயங்கொள்ளலாகாது பாப்பா
2. வாக்கினிலே இனிமை வேண்டும் (இளைஞர் நாவல்)
3. மனதினிலே உறுதி வேண்டும்
4. பளிங்கு தீவு — ச.அருளானந்தம்
5. காட்டில் கலவரம்
6. உல்லாசப்பயணம்..
7. துணிச்சல் மிக்க சுந்தரி
8. சுனாமி தந்த உறவு
9. சங்கீதன் — க.தங்கராஜா
10. விடிவெள்ளி
11. காட்டுராஜா — கே.எம்.எம்.இக்பால்
12. மரணத்தின் விளிம்பில்

10344

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

228511

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை கலை, இலக்கிய வரலாறு — திருமலை நவம்

திருகோணமலைப் பிரதேசத்தின் கலை இலக்கிய வரலாற்றினைப் பற்றியும் அதனுடன் ஊடாடிய ஆளுமைகளைப் பற்றியும் இந்நூல் கூறுகின்றது. கவிதை, சிறுகதை, நாவல் ஆகியவற்றை மட்டுமல்லாது இப்பிரதேசத்தில் இடம்பெற்ற நாடகம், தொலைக்காட்சி நாடகம், குறும்படம், இசை, மெல்லிசை, சிறுபத்திரிகை போன்ற ஏனைய கலை, இலக்கிய முயற்சி களையும் பதிவு செய்கின்றது.

ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகால திருகோணமலையின் கலை, இலக்கியவாதிகள் அனைவரும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டிருக்கின் றனர். அதனூடாக மூன்று நூற்றாண்டுகால திருகோணமலையின் எழுத்து வடிவம் பெற்ற பண்பாடு பற்றிய தகவல்களும், காலனித்துவ காலத்துத் திருகோணமலையின் வரலாறும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நூல் ஈழத்தின் கலை இலக்கிய வரலாற்றில் புதிய கதவைத் திறந்து விடுகிறது. திருகோணமலையின் மீது பிரகாசமான ஒளியைப் பாய்ச்சி புலப்படாதிருந்த கலை இலக்கிய மரபை தமிழ் உலகின் கவனிப்புக்கு கொண்டுவருகின்றது. அந்தவகையில் இந்நூல் நம் ஒவ்வொருவரதும் வாசிப்புக்கும் கருத்தாடலுக்கும் உட்படுத்தப்படவேண்டியது.

- இலங்கை மற்றும் கனடாவாழ் பழைய மாணவர்கள்,
திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி

இந்நூலின் மூலம் ஓர் இலக்கியத் தவம் நிறைவு பெறுகிறது. 40 வருட காலமாக தனிமனிதனாக நின்று நவம் அவர்கள் வளர்த்த 'தேடல்' என்ற வேள்வித் தீயின் பயனாக திருகோணமலை மண்ணின் இலக்கியம் ஈழத்து இலக்கிய சரித்திரத்தில் தன்னையும் ஓர் அத்தியாயமாக இணைத்துக் கொள்கிறது...... இந்நூல் வெறுமனே ஒரு மண்ணின் இலக்கிய வரலாறாக மட்டுமல்ல; ஒரு இனத்தின் வரலாறே மாற்றப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் எமது தமிழ் மக்களின் வரலாற்று ஆவணங்களை உறுதிப் படுத்தும் ஆவணமாகவும், திருகோணமலை மண்ணின் வரலாறாகவும் திகழ்கிறது.

- கவிஞர் தாகம் - வி. மைக்கல் கொலின்



திருமலை நவம் (சிதம்பரப்பிள்ளை நவரத்தினம்): கவிஞர், சிறுகதையாளர், விமர்சகர், நாடகநெறியாளர், ஊடகவியலாளர் என பன்முக ஆளுமைகொண்ட இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றவர். திருகோணமலை உவர்மலை விவேகானந்தக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர் திருகோணமலை மண்ணின் கலை, இலக்கிய வளர்ச்சியிலும் ஈழத்து இலக்கிய பரப்பில் அதன் பங்களிப்பை முன்னிறுத்தி செயற்படுவதிலும் நீண்டகாலமாக உழைத்து வருபவர்.

குமரன் புத்தக இல்லம்

விடயம்: தமிழ் இலக்கியம்

ISBN 978-955-659-321-1

9 789556 593211

விலை ரூபா 650.00

#507

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org